டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிதம்பரபுராணம்.

இஃது,

**சைவ. பரஞ்சோதிமாமுனிவர்**

அருளிச்செய்த மூலமும்,

துறைமங்கலம்

VIII. D. 15 (2)

சிவப்பிரகாசஐயரவர்களாற்செய்த

பொழிப்புரையும்.

---

திருவிடைமருதூர்

**சிவபாதம்பிள்ளையவர்கள்**

வேண்டுகோளின்படி

ம-ா-ா-ஸ்ரீ மருத்துக்குடி

இரத்தினசேகரம்பிள்ளையவர்கள்

முன்னிலையில்

கோகுலாபுரம்

மலையானந்தசுவாமிகளின மாணாக்கருளொருவராகியும்

வேங்கடராமமுதலியார் குமாரருமாகிய

**அருணாசலமுதலியாரால்**

பார்வையிடப்பட்டு,

கொண்ணூர்

**மாணிக்கமுதலியார்**

கம்பேனியாரவர்களது

மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

---

பிரமாதி௵ ஆடி௴.

இரண்டாம்பதிப்பு காப்பி. ௲00.

---

ரிஜிஸ்டர் காப்பிரயிட்.

SWAMINATHA IYER LIBRARY
MADRAS

கடவுள் துணை.

# அறிவிப்பு.

கட்டளைக்கலித்துறை.

சென்னையிலேயச்சுக் கூடங்கள்வைத்துச் சிறந்ததமிழ்
நன்னூல்களச்சி லிட்டேதொழிற்செயும் நாவலர்க்குந்
தன்னேரிலாத யாபாரிகட்கும்யான் சாற்றலென்னே
இந்நூலையச்சி லிடமுயலாம லிருப்பதுவே.

விருத்தம்.

கற்றவர்முதலா யாவருங்களிக்கக் கருத்தினி லவாமிகக்கொண்டு
நற்றமிழதனுற் சிதம்பரபுராணம்நன்குற வச்சினிலிட்டேன் [மூட
பெற்றதாயதனைப் பெண்டிரென்றெண்ணிப் பிரியமாய்ப் புணர்ந்தி
சிற்றறிவுடையோ ரச்சினிலிடுவர் சிதம்பரபுராணமா மிதையே.

இச் சென்னைமாநகரத்திலே அச்சுக்கூடங்கள் வைத்துச் சிறட
பாகிய தமிழ்க் காவியபுராணம் நன்னூல்முதலிய மற்றென்னூலுட
அச்சிலிட்டுத் தொழிற்செய்யும் நாவில் வல்லவர்கட்கும் தனக்கு நி
ரில்லாத புத்தகவியாபாரிகட்கும் யான் சொல்லுவது யாதெனில்

இச் சிதம்பரபுராணத்தை இயலிசைநாடகமென்னு முத்தமிழி
சிறந்த கல்விமான்களும் மற்ற யாவர்களும் வாசித்து மனக்களிப்டை
யடையும்படியாய் அச்சிட்டிருக்கின்றனன். ஆகையால் மேற்கூறிய
பாட்டின் கருத்தையுணர்ந்து ஷை சிதம்பரபுராணத்தை அச்சிடாம
லிருக்கும்படி கோருகின்றனன் இதைமறுத்து என்மனது
பாருத்
மில்லாமற்செய் தச்சிட்டவர்கள் பெற்றதாயைப் புணர்ந்தவர்களெ
றியாவரும் அறியக்கடவது.

இங்ஙனம்,

சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# விளம்பரம்.

இதனால் யாவருக்குந் தெரிவிப்பது யாதெனில், சென்னை பெத்துநாயக்கன்பேட்டை செங்கான்கடைக்கடுத்த காட்டுப்பிள்ளையார்கோயிலுக்கருகில் சிரங்கப்பட்டணம் சுப்பிரமணியமுதலியார் தெருவில் கீழண்டைவாடை - உஅ - வது கதவிலக்கமுள்ளவீட்டில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மனோன்மணிவிலாசமென்னும் அச்சுக்கூடத்தில் பதித்திருக்கின்ற புத்தகங்களில்

## சிதம்பரபுராணம் மூலமும் உரையும்

சிதம்பரத்திலிருக்கும் பெ. அருணாசலபிள்ளையவர்களிடத்திலும் சிதம்பரத்தைச்சார்ந்ததில்லைவடங்கயிலிருக்கும், பொன்னுசாமிபிள்ளையவர்களிடத்திலும், பண்ணுருட்டியில் கற்பூரமளிகைவைத்திருக்கும் புதுவை - நாராயணசாமிநாயுடு அவர்களிடத்திலும், மேற்படி மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்திலும், தூரதேசங்களிலிருந்து வேண்டுபவர்கள் புத்தகம்ஒன்றுக்கு இதனடியிற்கண்டவிலையும், தபாற்சிலவு அணா - ௪ - ம், அநுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டியது.

கித்தான் பவுண்டுசெய்த புத்தகம்-க-க்கு-ரூபா-கவ.
காயித பவுண்டுசெய்த புத்தகம்-க-க்கு-ரூபா-க.

பன்னிரண்டுபுத்தகம் மொத்தமாகவாங்குகிறவர்களுக்குஒருபுத்தகம் அதிகமாகக் கொடுக்கப்படும்

இப்போதுபதிப்பித்திருக்கும் புத்தகங்களின்விபரம்.

அகஸ்தியர்தேவாரத்திரட்டு-திருவாசகம்-திருவிசைப்பா-திருப்பல்லாண்டு பெரியபுராணச்செயுட்டிரட்டு இவைகளடங்கிய,

அருட்பா
சானந்தகணேசர்புராணம்
சஉ-ஸ்கந்தமாகிய பாகவதவசனம்
ஞானவாசிஷ்டவசனம்
கந்தரந்தாதியுரை
இரங்கேசவெண்பாஉரை
குசலவநாடகம்
ஜோகிநாடகம்
சாரங்கதரன்கதை
சகஸ்திரமுகராவணன்கதை [னைகள்
சின்னசாமிசாஸ்திரியாராலியற்றிய பவநாமசங்கீத
இராமதாஸ்கீர்த்தனை

இன்னும் பலவித தமிழ் தெலுங்குமுதலிய வயித்திய சாஸ்திரங்களும் விலைசரசமாய விற்பனைசெய்துவருவதால் வேண்டுபவர்கள் மேற்கண்டவீட்டில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சருக்க அட்டவணை.


| பக்கம். | சருக்கம். | பாட்டின்றொகை |
|---|---|---|
| க | பாயிரம் | உ0 |
| கக | மான்மியச்சருக்கம் | எசா |
| ஙஅ | துன்மதச்சருக்கம் | கஙஅ |
| அரு | துச்சகச்சருக்கம் | கஉஉ |
| கஉச | நியமச்சருக்கம் | ருஅ |
| கசரு | சோமநாதச்சருக்கம் | சா0 |
| கசாச | தீர்த்தச்சருக்கம் | ருக |
| கஅக | திருச்சிற்றம்பலச்சருக்கம் | கச0 |
| உஉசா | சமாதிச்சருக்கம் | ரு0 |
| உசச | தற்றெரிசனச்சருக்கம் | கூகூ |

ஆக கூடிய சருக்கம்-க0-க்கு-திருவிருத்தம்-அகச.


சருக்க அட்டவணை முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிதம்பரபுராணம்

## மூலமும் உரையும்.

———*———

### பாயிரம் காப்பு.

கணபதி துதி.

கலிவிருத்தம்.

வானநாடர்கள் மாதவர்நாட்ரு
மோனஞான முழுதுமுணர்ந்திடத்
தானமேவுந் தட்விகடாசலத்
தானைமாமுகத் தண்ணலையேத்துவாம்.

இதன்பொருள்.

ஆகாயசம்பந்தமாகிய மேலுலகங்களில் வாசமாயிருக்கும் அரி பிரமாதி தேவர்களும், முனிவர்களும், மாட்சிமையுற்ற தவங்களிழைத்ததினாலும் அறிதற்கரிதாகிய மவுனமுத்திரையாய் சுருதி குரு உபதேச சுபானுபவங்களினாலும் அறியத்தக்க சிவஞானத்தைப் பரிபூரணானுபவமாகத் தெரியும்பொருட்டாய்க் கருணையென்னு மததாரைபொழியும் விசாலமான கபோலங்களுடைய மலைபோன்ற கஜமுகக்கடவுளைத் தோத்திரஞ்செய்வாம்—என்றவாறு.

இதன்கருத்து.

பிள்ளைகள் இருவருட் பிரணவத்தை யுணர்ந்தவனையறிவோமென்றும் ஆணவங்கொண்ட முருககடவுள் நாணவும், பக்தி ஞான வயிராக்கிய சொரூபமான விநாயகன் சிவஞானத்தை விளங்கச்செய்யவும், பரசிவனினைந்து தமதுகரத்திலோர் மாங்கனியைக்காட்டிச் சராசரமனைத்து மிருவருளெவன் முன்னர் வலம்வருகின்றானோ அவனுக்கிக்கனியை நல்குவோமெனப்புகன்றபோது சர்வலோகசரண்யனிவனென்றுணராது மயின்மீதேறி யுலகத்தை வலம்வரச்சென்ற ஆறுமுகனுக்குமுன் லோகநாயகன் சிவனென்றுணர்ந்து அச்சிவத்தையே வலம்வந்து மாங்கனியைப்பெற்ற சிவஞான சொரூபனான கற்பகவிநாயகனைத் தோத்திரஞ்செய்வாம்—என்பதாம்.

உ

# சிதம்பரபுராணம்.

## சபாநாயகர் துதி.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீர்தாங்கும் பார்தாங்கு நெடுமாலு மலரயனு நிரந்துபோற்ற
வார்தாங்கு புளகமிகு களபமுலை மலைவனிதை மகிழ்ந்துகாணத்
தார்தாங்குசடாமவுலி நிலவெறிப்பப்பொதுவினடந்தயங்காநிற்குஞ்
சீர்தாங்கு வேதாந்த நாதாந்தப் பரஞ்சுடரைச் சிந்தைசெய்வாம்.

இ-ள். சமுத்திரத்தின்மீது மிதக்கும்படி ஆமை உருவாய் பூமியைச்சுமக்கும் பெருமையையுடைய விஷ்ணுவும், அவன் உந்திகமலத்தில் உதித்த பிரமனும் வரிசையாய் நின்றுபுகழவும், சிவபெருமானைப் பதியாக அடைந்ததினால் அண்டாண்ட சராசரங்களை எல்லாம் படைத்த மலையரையன்மகளாகிய சிவகாமசவுந்தரி களபமணிந்து கச்சுக்குளடங்காத் தனகலசங்கள் பூரித்து ஆனந்தபரவசமாகித் தரிசனஞ்செய்யக் கொன்றைமாலையணிந்த சிவபெருமானது ஜடாமகுடத்திலே அமிர்தகலசமான சந்திரன் நிலவு பொழியத்தக்கதாகவுந் திருச்சிற்றம்பலத்தில் எப்போதும் ஆனந்த நிருத்தஞ்செய்யுஞ்சிறப்புற்ற வேதங்களின் சிரசான உபநிடதங்களின் பொருண்முடிவாகியும, நாத விந்துகளாதீதமான பரஞ்சோதிசொரூபத்தை இதயாரவிந்தங்களால் தியானஞ்செய்வாம்—எ-று.

இதன்-கருத்து· ஞானாகாச உருவமாயிருப்பதைக் கண்களினாற் கண்டு தொழக்கூடாமையினாலும் வேதாகமங்களால் அளவிடப்படாததை வாக்கினால் துதிக்கப்படாமையினாலும், குருஉபதேசப்படிக்குத் தியானம் செய்வாம்—எ-ம். (க)

உருவமொரு நாலாகி யுருவருவத் திருவுருவ மொன்றேயாகி,யருவமொரு நாலாகி யப்பாலாயப்பாலு மளவிடாத, பொருவிகந்தவுயிர்கடொறும் புணராமற் புணர்ந்தருளே பொழிந்தெல் லோர்க்குங், கருத்ரிய திருச்சிற்றம் பலத்திலகும் பேரொளியைக் கருத்துள் வைப்பாம்.

இ-ள். பிரமன்-விஷ்ணு-உருத்திரன்-மயேஸ்வரன் என நான்கு உருவமாகியும், சகலநிஷ்கள சொரூபமான பூகயிலாச மேருகயிலாசத்திற்கும் பிரமாண்டத்திற்குமேலாகிய வெளியில் அப்பிராகிருதகயிலாசத்தில் எழுந்தருளியிருக்குஞ் சதாசிவமூர்த்தியாகியும், நிஷ்களரூபமான பரவிந்து, பரநாத, பராசத்தி, பரசிவம் என்னும் நவதத்துவங்களுமாகியும், அதற்கு மேலுமாகியும், அதற்குமேலும் எந்தவிதத்திலும் எண்ணிக்கைப்படாத இப்படி அப்படியென்று உவமை சொல்லப்படாத சராசர ஜீவகோடிகளெல்லாம் கலவாமல் கலந்தி

ருந்து கருணையென்னும் அமிர்தத்தையே சொரிந்துக்கொண்டு யாவரும் நினைத்தற்கரிதாகிய ஞானசபையிலே ஓங்கார உருவமாய்ப் பிரகாசிக்கும் பரஞ்சோதியை இதயாரவிந்தத்தில் நிறுத்துவாம்—எ-று.

இதன்-கருத்து. பிண்டபிரமாண்டங்களில் ஏக உருவமாய் விளங்கியுள்ள சிருட்டி-திதி-சங்காரம்-திரோபவம் - அனுக்கிரகம் என்னும் ஐந்துதொழிலும் நடக்கத்தக்கதாக எப்போதும ஆனந்தநடனஞ்செய்யுஞ் சபாபதியை நினைவிலே நிறுததுவாம்—எ-ம். (௨)

அருமறையின் சிரத்தொளியா யனந்தமாய்ப் பூரணமா யசலமாகி
யொருமுதலா யுண்மையா யுணர்வாகி யானந்த வுருவமாகி
யிருமலமற் றிருப்போர்கள் விருப்பாகி மணிமன்று ளென்று ஞானத்
திருமகிழ நின்றாடுஞ் சிதம்பரத்தை யெந்நாளுஞ் சிந்தை செய்வாம்.

இ-ள். வேதங்களின் சிரசாகிய உபநிடதங்களின் பிரகாசமாய், இறுதியில்லாததாய், எங்கும் பரிபூரணமாய், அசைவில்லாததாய் ஏகரூபமாய், இரகசியப்பொருளாய, ஞானரூபமாய, ஆனந்தமயமாகிவிளங்கியும பெரிய அஞ்ஞானமயமாகிய நான் என்னும ஆணவமலமும் என்திரவியம என்னும் மாயாமலமும், நான் நல்லநடத்தையுடையவன என்னுங் காமியமலமும ஆகிய இந்த மும்மலங்களும் நீங்கினபதஞ்சலி வியாக்கிரமபாதா முதலாகிய சிவபக்தஜனங்க ளர்சசித்தத்தக்கதாகி நவரத்தினங்களினால அலங்கரித்த திருச்சிற்றமபலத்தில் எபபோதும ஞானசத்தியாகிய சிவகாமசவுந்தரி ஆனந்தபரவசமாகித் தரிசிக்கநின்று நடனஞ்செய்யும ஞானாகாசசொரூபமானசிதம்பரத்தை எந்நாளிலும தியானஞ்செய்வாம—எ-று. (௩)

சிவகாமிஅம்மன் றுதி.

இருபதமுந் துடியிடையுந் திகழுடையுந் தனதடமு மியற்பொற்பூணுங், கருவிழியுஞ் செவ்வாயும வெண்ணகையும பசுந்தோளுங்கழுநீக்கையும், பொருவருமங் கலநாணுங் கந்தரமும புரிகுழலும்புனிதன் கண்ணுந், திருவருளு முலாவுமெழிற் சிவகாம சுந்தரிதாள் சென்னி சேர்ப்பாம்.

இ-ள உபைய பாதாரவிந்தங்களும உடுக்கைக்கு ஒப்பாகியசிறறிடையும அவ்விடையில்விளங்கும் பட்டாடையும், மேகலாபரணமும, பெரியதனங்களும, அதின்மேல் நவரததினமயமாகிய கசசும, இசைந்த பொன்னினாற்செய்த ஆபரணங்களும்,உத்தரீகமும,நீலோற்பலமலர்கள்போன்ற இருகணகளும செவ்வாமபல் மலருக்குஇணையாகிய பவளவாயும், வெணணிலவுபொழியும் புன்சிரிப்பும,பசுமூங்கிலுக்கிணையாகிய புயங்களும,செங்கழுநீாமலரை ஏந்திய கரமும,ஒருகாலத்திலும்நீங்காமல ஒப்புவமையில்லாத திருமங்கலநாணும், சங

குக்கு ஒப்பாகிய கழுத்தும், சுட்டிமுதலாகிய சிரோபூஷணங்களணிந்த அளகபாரமும், பாதாதிகேச வவயவங்களிலெல்லாம் அம்பலவாணசுவாமியின் திருநயனநோக்கமும், கருணாரசமும், பக்தியும், வீணையினிடத்து விரல்கள்சஞ்சரிப்பதுபோல உலாவிக்கொண்டிருக்கிறதிருவழகுநிறைந்த சிவகாமசவுந்தரியின் சரணாரவிந்தங்களை என் இதய கமலத்திலுஞ் சிரசிலும் அணிந்துகொளவாம—எ-று. (௪)

### தில்லைக் கற்பகவிநாயகர் துதி.

நெடியவெழு பவக்கடலை யுழக்கிவினைக் கிரிநூறி நீங்காதோங்குங்
கொடியகுணம்புலன்கரணமுதலான பகைப்படையைக்குலையமோதி
யடியவர்தங் கருத்தளிசூழ் தாலீக்கக் கருணைமத வாறு பாயும்
படிபுகழுந்தில்லைவனக்கற்பகக்குஞ் சரத்திருதாளபணிதல்செயவாம.

இ-ள். உத்தமமான மதயானையின் நடையைப்போல் இவ்வளவென்றளவிடப்படாத விசாலமாகிய எழுவகைத்தோற்றம் நாலவகைபிறவியாகியஎண்பத்துநான்குலக்ஷம்ஜீவராசிபேதமெனனும்பவசமுத்திரத்தைக்கலக்கித் துதிக்கையினால பானஞ்செயதும் திவலைபாகத தூவியும் தீவினையென்னும மலையைத் தூளியாக்கி கிரிபாஞ்சுமொழியாமல் அதிக தீமைகளைவிளைத்து உயர்கின்ற அந்தரங்க சத்துருக்களென்னும் காமக்குரோதாதிகளின் சேனைகளாகிய கொடிய ராஜச, தாமஸ, ஸாத்விககுணங்களையும், ஐம்புலன்களையும், அந்தக்கரணங்களநான்கினையும், சின்னாபின்னமாக்கி அடியார்கள்மனமென்னும்வண்டுகள் சுற்றிக்கொணடு கீதஙகளபாடிக் களிகக, அருளென்கிற மதநாரையைப் பொழியும் உலகங்களெல்லாந்துதிக்குஞ் சிதம்பர மேலைக் கோபுரத்திலெழுந்தருளிய அழகையுடைய கற்பகததருப்போல் அடியார்கள் வேணடின வரஙகளைககொடுககும கற்பகக கணபதியினுடைய பெருமைபொருந்திய உபய பாதாரவிந்தஙகளை வணங்கித் தோத்திரஞ்செயவோம—எ-று. (௫)

### சுப்பிரமணியர் துதி.

விடலரிய பெருந்தெய்வச் சிறைமீள மறைமுனிவர் விண்ணோர்
வாழ, மடலவிழ்கற் பகநிழலு மரசிருப்பு மமருலகு மகவானெய்தக்,
கடலுத்தி யோலமிட்க் கிரிவீழச் சூரனுரங் கலங்கச் செங்கை,யடல
யில்வேற் பணிகொண்ட வொருகுமரனிருசரண மகத்துளவைப்பாம்.

இ-ள். பிரமன்-விஷ்ணுமுதலாகிய தேவர்க்களாலும் விடுவிக்கப்படாத சூரன்-காவலிலேவைத்திருந்த தேவேந்திரன்புத்திரனாகிய சயந்தன்முதலிய தேவர்களுக்கு சிறைநீங்கவும், வேதாகமபுராணங்களும், தபோதனர்களும, அமரர்களும, வாழ்ந்திருக்கவும, முறுக்கவிழ்ந்தமலர்களையுடைய கற்பக விருக்ஷஙகளின்நிழலும, சுதனமமென,

னும் வசந்தமண்டபத்தில் சிந்தாமணிபீடமும், சகலலோகாதிபத்திய மும், தேவேந்திரன்பெறவும், சூரன் ஒளித்திருக்க இடங்கொடுத்தசமுத்திரஞ் சுவறிமுறையிடவும், தாருகாசூரனுக் கிடமான கிரவுஞ்சகிரியைத் துளைக்கவும், சூரபத்மாசூரன் இதயத்தைப்பேதிக்கவும், சிவந்த கையிற்பிடித்தவெற்றிபெற்ற வேலாயுதத்தையேவித்தொழில்செய்வித்தஒப்புவமையில்லாத தேவபெருமானாகியமுருகக்கடவுளது உபயசரணகமலங்களை இதயாரவிந்தத்தி லிருத்துவாம்—எ-று. (௬)

## நந்திதேவர் துதி.

புரிசடையெம் பரனருளாற் சடைமுடியு நுதல்விழியும் புயங்களுன்குஞ், கரிகைபிரம் புழைமழுவும் படைத்துரிய கணாதிபர்க டொழுதுபோற்ற, வரியபர மானந்தச் சிவஞான போதமெனு மருநூறன்னைத், தெரியவிரித் தருணந்திதேவனரு ணினைந்துவினைதீர்துமன்றே.

இ-ள். சுருண்ட சடையினையுடைய பரமசிவன் அநுக்கிரகத்தினால் சடாமகுடமும், நெற்றிக்கண்ணும், நான்குதோளும், உடைவாளும், பிரம்பும், மானும், மழுவுந்தரித்து சேனாதிபதிகளாகிய பிருங்கி, காலாக்கினி, உருத்திரன் முதலிய சிவகணங்கள் வணங்கித்தோத்திரஞ்செய்ய மேலாகிய பேரின்பத்தைத் தந்தருளுஞ் சிவஞான போதமென்னும் அருமையையுடைய சாஸ்திரத்தை சிவபக்தர்கள் அறியும்படி திருவுளம்பற்றி அநுக்கிரகிக்கின்ற சிவஞான நந்திகேசுவரர்கருணையைத் தியானஞ்செய்து பாவத்தை நீக்கிக்கொள்வோம்—எ-று.

இதன்-கருத்து. சிலாதமகாமுனி செய்த தபோபலத்தினால் சிவபக்தியே பிள்ளையாகத் திருவுருக்கொண்டு கயிலாச கோபுரவாயிலதிகாரியாகவும் கட்டியக்காரனாகவும் ரிஷபவாகனமாகவும் ரிஷபக்கொடியாகவும் தாம்பூலம் கொடுக்கிற அடைப்பக்காரனாகவும் இவ்வைந்துவிதரூபமாகியுஞ் சிவபணிவிடை செய்துகொண்டு சிவஞானமுஞ் சிவபக்தியும் அடியார்களுக்குக் கொடுக்கும் கருணையும் உடைய நந்திகேசுவரரது அருள்பெற்று எம்மை அடைந்தவினையை நீக்கிக்கொள்வோம்—எ-ம். (எ)

## நால்வர் துதி.

அருமறையின் நெறிவிளங்குந் திருஞானசம்பந்த ராழிமீது
மருவுமொரு கனம்தபயின் வந்தநாவுக் கரையர் மங்கைபாகத்
தொருவனம தடிமையென வனையாண்ட வாரூர ருலவா தோங்குந்
திருவருள்கூர் திருவாத வூரரிவர் பதமலர்கள் சிரத்தின்வைப்பாம்.

இ-ள். வேதத்தின் பொருளாகிய விபூதி ருத்திராக்ஷ பஞசாக்ஷரத்தினால் புத்தரை வாதில்வென்று கழுவி[illegible]

MAHAMAHOPADHYAYA
SWAMINATHA IYER LIBRARY
MADRAS-41

தை நிலை நிறுத்திய திருஞானசம்பந்தசுவாமிகள், பஞ்சாக்ஷரமகிமையினல் கற்றூணைத் தெப்பமாக்கிக் கடலைக்கடந்த அப்பர்சுவாமிகள், பரமசிவன் வலியனாகவந்து வழக்கேறித் தன்னடிமையென்று ஆண்டுகொண்ட சுந்தரமூர்த்திசுவாமிகள், ஆகியமூவரும் தேவாரங்களோதியும் திருப்பெருந்துறையிற் சிவனுபதேசம் பெற்ற மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகமோதியும் பேறும்பெற்ற, இந்த நால்வர் பாதாரவிந்தங்களைச சிரசில் அணிந்துக்கொள்வாம்—எ-று. (அ)

### தில்லைமூவாயிரவர் துதி.

எல்லைகாண் டற்கரிய விறைவனிவர் தம்மில்யா னொருவனென்னுந தொல்லைமா மரபுடையோர் மன்றுடையானருச்சனையாற் றூய்மைபூண்டோர், மல்லலா கமவிதியு மகச்சடங்கு மாமறையும் வரம்புகண்டோர், தில்லைமூ வாயிரமா முனிவரருட் பதங்கருதிச் சிறந்து வாழ்வாம்.

இ-ள். அடியையும் முடியையும் நாராயணனும,நான்முகனுங்காணுதற்கரிய சபாநாயகர் இந்த மூவாயிரவருள் நானும்ஒருவனென்றுராகையினல் தில்லைமூவாயிரத் தொருவனென்று மகிமைபெற்று விளங்கிய திருசசிற்றம்பல முடையானென்னும் பெயர்பெற்றசபாபதியினது ஆத்மார்த்தலிங்கத்தை ஆறுகாலமும் பூசைசெயவதினல் பரிசுத்தமாயிருக்கப்பட்டவர்கள பரமசிவன் திருவாக்கினல் மொழிந்த இருபத்தெட்டாகமங்களிற் சொல்லும சைவசித்தாந்தமும் ஆகமங்களும் வேதாந்த சாத்திரமுங்களைகண்ட தில்லைமூவாயிரவரான பிரமரிஷிகள் பாதாரவிந்தங்களைத் தியானஞ்செய்து சகல அயிசுவரியமும் பொருந்தி சுகமாயிருப்போம்—எ-று. (கூ)

### சிவனடியார்கள் துதி.

மோதுபிற விளைபகலத் தாதையிரு தாளெறிந்து முடிவிலாத,வாதியிரு தாளடைந்த வண்டர்புகழ் தண்டீச ரகிலமேத்தும், வேதநெறிசைவநெறி வழுவாது சிவஞானம் விளங்கா நிற்கும், போதமுடையுருத்திரபல் கணத்தவர்தந் திருப்பதங்கள் போற்றி செய்வாம்.

இ-ள். வருத்தங்களைச்செய்யும் நல்வினை தீவினைகள் விட்டோடத்தக்கதாக சிவபூசைக் கமைத்திருந்த பத்திர புட்பங்களையும் பாற்குடங்களையும் காலினலுதைத்துத்தள்ளின தகப்பனைசிவத்துரோகி இவனென்று இரண்டு காலையும் வெட்டின உடன் பரமசிவன பிரசன்னமாய் நித்தியமான பதவியைக் கொடுக்கப்பெற்ற தண்டீசர்முதலான வேதாந்த சித்தாந்த முறைமையான சிவபக்தியும் சிவஞான முடைய சிவகணங்களது சரணாரவிந்தங்களைத் தோத்திரஞ்செய்வாம்—எ-று

# பாயிரம்.

திருநீற்றுச்சோழர் துதி.

பரிதிகுலந் தனிலுதித்துப் பரசமய விருளகற்றிப் பரமனுடும், பொருவருபே ரம்பலமுங் கோபுரமு மாலயமும் பொன்மேய்ந்தண் மைச், சுருதியுடன் சைவநெறி தழைத்தோங்கத் திருநீற்றுச் சோழ னென்று,குருமணிமா முடிபுனைந்த குலோத்துங்க வளவனருள்குறி த்து வாழ்வாம்.

இ-ள். சூரியகுலத்தில் பிறந்து சிவசமயமல்லாத மற்றைச்சம யங்களென்னு மிருட்டையுலகத்தில் இராமலோட்டி அம்பலவாணசு வாமி நடனஞ்செய்யும் சபைகளும் கோபுரங்களும், கோயிலும், சிவ கங்கைத் தீர்த்தபடிகளும், நவரதநினங்களிலு லலங்கரித்து வேதாக மங்களில் சொலலு முறைமையாக வுலகமெல்லாஞ் சைவசமயமென் றும் விளங்க உலகங் கடைத்தேறத்தக்கதாக செங்கோல் செலுத்தி யாவரும் விபூதிதரிக்கச் சொன்னதினால் திருநீற்றுசசோழனென்னும் பெயர்பெற்றுக் கிரீடாதிபதியாகிய குலோத்துங்க சோழமகாராசாவி ன் கருணையை நினைந்து வாழ்ந்திருப்போம்—எ-று. (கக)

கனகநெடு வரைச்சிகரத் திலகியசிற் றம்பலத்துக் காதல்கூற,வண வரத முமைகாண வானந்தத் தாண்டவஞ்செய் யமலற் கன்பாய், ம னமொழிமெய் யொருமைபெறப் பணியளவில் கிளைஞருடன் மகிழ் ந்து செய்யுந்,தினமுநெறி வளர்த்ததிரு வகம்படிமைப் பரிசனர்தாள் சிரமேற் கொள்வாம்.

இ-ள். பிரமாண்டத் தடியிலிருந்து முளைத்தெழுந்து கீழ்மேழுல குமூடுருவிவந்த பொன்மலைச் சிகரத்தில் பிரகாசிக்குந திருச்சிற்றம் பலத்திலே சிவகாமசௌந்தரி கண்டுமகிழ வெப்போது மானந்தத்தா ண்டவஞ்செய்யும் சபாபதி பாதாரவிந்தத்தில் பக்தியுண்டாகி மனோ வாக்கு காயங்கள் பேதிக்காமல் ஒருமையுடனே உரிமையாக புத்திர பௌத்திர பந்துசனங்களுடனே பராபரியமாகச் சிவபணிவிடைக ள் சந்தோஷமாகச் செய்யும் அனந்தக் கொத்து பரிசனங்களின் பா தங்களைச் சிரசின்மே லணிந்துக்கொள்வாம்—எ-று. (கஉ)

நூல்செய்தோன் பெயர்.

முற்றுமுணர் மெய்கண்ட சந்ததிக்கோர் தீபமென முதன்மைகொ ண்ட,கொற்றவன்றன் குடிமருவு குலவுமுமாபதிசிவன்பொற் கோயி லுண்மை, சொற்றபுரா ணமுமிருக்கப் பின்னுமொரு வகையானுஞ் சொல்வான் புக்கேன்,மற்றவன்றன் றிருவடியின் வழிவந்தோர்க் கடி யனெனும் வழக்கான் மன்னோ.

இ-ள். சிவஞான முழுதுமுணர்ந்த மெய்கண்ட சுவாமிகள் சந்ததியில் ஞானவிளக்காகப் பிரகாசிக்கும் மூர்த்தியாகிய சோழராஜாவிருந்த அரண்மனையான கொற்றவன் குடிமடத்தி லெழுந்தருளியிருந்த உமாபதிசிவன் தமிழினாற்பாடின கோயிற்புராணமுமிருக்க வேறொருமுறைமையாகச் சொல்லத்தொடங்கின தேதென்றால் இரணியவர்மமகாராசன் முதலானபேர்கள் கோயிற்றிருக்குளங்கள் முதலான திருப்பணிகள் கட்டிவைத்த மகிமை சொல்லப்பட்ட கோயிற்புராணஞ்சொன்னஉமாபதிசிவன் பதாரவிந்தந்தொழு மடியார்களுக்கு அடிமையாகி ஞானவாளந்தப் படியினால் பரஞ்சோதிமுனியென்னு மடியன் சிதம்பரப்புராணஞ் சொல்லத்தொடங்கினேன்—எ-று. (கங)

தேவாதி தேவனரு ணந்திபாற் சனற்குமரன் றெளிந்து வேத
மோவாத வியாசற்குப் புகலவவன் சூதமுனிக் குரைத்த தெய்வ
மூவாறுபுராணத்துட் சிதம்பரத்தின் பெருமைபலமுறைமைத்தாகுந்
தாவாத பெருஞ்சைவ புராணத்தின் வந்துளது சாற்றுமீதால்.

இ-ள். தேவாதிதேவனான பரமசிவன் கருணைபெற்று உபதேசங்கேட்ட நந்திகேசுரரிடத்தில் சனற்குமாரர்கேட்டு வியாசருக்குரைக்க வேதவியாசர் சூதமுனிவருக்குச்சொன்ன பதினெண் புராணத்திலேயும் சிதம்பரத்தின் மகிமை யனேகமுண்டு மேலான சைவபுராணத்திலே சொல்லியிருக்கும் இந்தச் சிதம்பரத் தலமகிமையைச் சொல்லுகிறேன்—எ-று. (கச)

ஐஞ்சீரடியாசிரியவிருத்தம்.

ஆற்றல் சான்றமூ வாயிர மறையவ ரானுக்
கேற்ற தொண்டர்கண் மறைநெறி யெதிகளா யுள்ளோர்
போற்றருஞ் சிதம் பரத்திடைப் புகழினைத் திகழச்
சாற்று வாயவட மொழிவழி தமிழின லென்றார்.

இ-ள். வேதாகம விதிப்படிக்குச் சிவபூசை சிவத்தியானம் செய்வதினாலே மகா மகிமைபெற்ற தில்லைமூவாயிரந் தீக்ஷிதாளும் சிவனுக்குப் பிரியமாக பணிவிடைகள் செய்யும் சிவனடியார்களும் வேதவிதிப்படி நடக்கும் முனிவர்களும் சைவபுராணத்தில் வடமொழியிலிருக்கிறபடி சிதம்பரத்தலமகிமையைத் தமிழ் விருத்தப்பாவினங்களினால் விரிவாய் கற்றோர் மற்றோர் யாவருக்கும் விளக்கமாகச்சொல்லென் றுரைத்தவர்களுக்குப் பரஞ்சோதிமுனிவர் அவர்களைப்பார்த்துச் சொல்லுகிறார்—எ-று. (கரு)

களங்க மற்றபொற் பொதுவின்முன் காதலா லோங்க
வுளந் திகழ்ந்தபே ரறிஞர்தான் மாசொழித் தன்பா

ளம் பரிந்திடச் சருக்கமு மொன்பதா வகுத்து
விளங்குமா றுரை செய்தனன் விருத்தையாய் பதனால்.

இ-ள். குற்றமற்ற மேன்மைபொருந்திய தங்கமயமாகிய கனகசபைக்கு முன்பாகவிருந்து ஆசையுடன் விரிவாய் யான்சொல்லும் தமிழில் சொற்குற்றம் பொருட்குற்றங்களை வேதாகமமுணர்ந்த சிவஞானமுடைய பெரியோர்கள் நீக்கி அவர்கள்விருப்புடன் உட்கொண்டு மகிழத்தக்கதாக விருத்தப்பாவினங்களினால் ஒன்பது சருக்கமாகவகுத்துப் பிரகாசிக்கும்படியாக விந்தப்புராணஞ் சொல்லத்தொடங்கினேன்—எ-று. (௰௬)

மறு விலிங்கிது கூறயான் வல்லனோ புலத்தைச்
செறுநர் கேட்டிடச் சிதம்பர புராணமென் றருட்பேர்
சிறுவி யிப்பவ நீத்தற்கு நிமித்தமெய்ஞ் ஞானம்
பெறுது மென்பதோர் கருத்தினாற் றுணிந்தனன் பெரிதும்.

இ-ள். களங்கமில்லாத விந்தச் சிதம்பர தலமகிமைமுதலிய அதிசயத்தைச்சொல்ல அடியேனுக்கு வல்லமை இல்லாதிருந்தாலும் ஆசையாய் ஐம்புலன்களைவென்ற பெரியோர்கள்கேட்கச் சிதம்பரபுராணமென்று மனதில்நினைத்து வாக்கினால்சொல்லி இந்த சனனமாணத்தை ஒழித்து மேன்மையாகிய சிவஞானம் பெறும்பொருட்டு நினைவில் மிகவுந் துணிந்துசொல்வேன்—எ-று.

இதன்-கருத்து. வேதாகமசாஸ்திரங்களினால் அளவிடப்படாமலும் மனதினாலும் தியானிக்க வரிதான ஞானகாச உருவமாகி மகாமகிமையையுடையதாகிய சிவசிதம்பரமென்னும் பெயரையொருதரம்சொல்லினால் சகலமந்திரங்களுக்கும் தலைமையாகிய பஞ்சாக்ஷரமந்திரத்தை பலதரமும்செபஞ்செய்த பலனைக்கொடுக்கும் மகிமைபெற்றதாகையினால் சிதம்பரபுராண மென்றுசொல்லிச் சனனமரணத்தைப் போக்கி மெய்ம்மையான சிவஞானம் பெறும்பொருட்டுச் சொல்லத்தொடங்கினேன்—என்பதாம். (௧௭)

சூழுமாகடற் புடவியான் சுடர்முடிச் சகற்கீ
ரேழு நூறுடன் முப்பஃதி யைந்தவாண் டெல்லைத்
தாழு மாமதிச் சடைமுடித் தனிமுத லென்றும்
வாழு மம்பலப் பெருமையை வழுத்தலுற் றனன்யான்.

இ-ள். சமுத்திரஞ்சூழ்ந்த பூமண்டலமெல்லாம் ஒரு குடைநிழற்கீழ் கிரீடாதிபதியாய் அரசாண்ட மகாராஜாவாகிய சாலிவாகனசகாப்தம் ஆயிரத்து நானூற்று முப்பது வருடத்திற்குமேல் இளஞ்சந்

திரிசைச் சடையில்தரித்த வொப்பற்ற தலைமையையுடைய சபாபதி எப்போதும் ஆனந்தநடனம்புரியுந் திருச்சிற்றம்பலத்தின் மகிமையைத் தமிழினால் நான் சொல்லத்தொடங்கினேன்—எ-று. (கஅ)

மொய்த வங்களான் முதிர்தவர் மொழிப்படி யாய்ந்து
செய்த செய்யுள்சேர் சிதம்பர புராணமென் றொருக்காற்
கைத வங்களைந் தோதிய கணக்கிலா நலத்தோ
ரெய்து கின்றபேற் றெல்லையை யிசைக்குமா றெளிதோ.

இ-ள். முடிவில்லா தவங்களினாலே மேன்மையையுடைய சூதமகாமுனிவர் சௌனகாதிமுனிவர்களுக்கு வடமொழியினால் முறைமையாகச்சொல்லிய சைவபுராணத்தை நன்றாகச்சோதித்து விருத்தச்செய்யுளில் யான்கூறிய இந்தச் சிதம்பரப்புராணத்தை ஒருதரஞ் சொல்லியவளவில் மாயாசம்பந்தமான பவமொழிந்து எண்ணிக்கையில்லாத சிவஞானம்பெற்றவர்களை இவ்வளவென்று யாவராலுமளவிடப்படாது—எ-று. (கக)

அவையடக்கம்.

தீர்த்த ராமுதற் கடவுளர் செய்தகா ரியம்போற்
கூர்த்த ராடல்கண் டிகழ்ந்ததோ குவலைய மெவரு
மேத்து சூதரா லிசைத்தவிப் புராணத்தி னியல்பைப்
பார்த்தி யான்புகல் கின்றவிப் பரிசுமப் படியால்.

இ-ள். யாவரையும் பரிசுத்தராகச்செய்யும் சிவன்முதலான தேவர்கள் முன்னடந்தகதைகளை நாடகமாகப் பாடிக்கொண்டு அந்தந்த தேவர்களைப்போல வேடங்கள்பூண்டு கூத்தாடும் கூத்தாடிகளையுலகத்தார் இகழாமல் பார்ப்பதுபோல் சௌனகாதிமுனிவர்கள் தோத்திரஞ்செய்துகேட்க உலகத்திலுள்ள யாவரும் துதிக்கும் சூதமகாமுனிவராலே வடமொழியில்சொன்னபடி ஞானத்தமிழினால் யான்சொல்லும் சிதம்பரபுராணத்தை யாவரும்நிந்திக்காமல் உகந்துகொள்ளுவார்கள்—எ-று. (உ0)

பாயிரம் - முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முதலாவது

# மான்மியச் சருக்கம்.

ஐஞ்சீரடியாசிரியவிருத்தம்.

சிவ பரம்பரன் றிருவடித் தாமரை மறவாத்
தவ மிகுந்தருள் சூதனைத் தகவுற நோக்கி
நவ மிலங்கிய நலங்கிளர் நைமிசா ரணியத்
துவமை யொன்றிலா மாதவ ருரைத்தன்மே யினரால்.

இ-ள். எல்லாவளங்களும் நிறைந்திருக்கின்ற நைமிசாரணியவாசிகளாகிய சௌனகாதி மஹாதபோதனர்கள் மிகுந்த சிவபத்தியுடனே ஆதிகாரணனாகிய பரமசிவன் பாதாரவிந்தங்களை நொடிப்பொழுது மறவாமல் தியானஞ்செய்துகொண்டிருக்கும் சிவயோகியான சூத மஹாமுனிவரைவணங்கித் தோத்திரஞ்செய்து தங்கள் மனதிலிருக்கும் ஆசையைச் சொல்லத்தொடங்கினார்கள்—எ-று. (௧)

தெள்ளு மாமறை முதற்கலை தேர்ந்துநற் பொருள்க
ளுள்ள தன்மையீ தெனவுண ருணர்வினா லுயர்ந்தோய்
கள்ள வல்வினை கடந்தருள் கருணையங் கடலே
யெள்ள லொன்றிலா யாமுனக் கியம்புவ துண்டால்.

இ-ள். தெளிவாகப் பரமசிவன் திருவருளினால் உண்டாகிய வேதாகம சாஸ்திரங்களிலுள்ளபொருளை யின்னதென்று நன்றாகவறிந்த வறிவினாலே மேன்மைபெற்ற ஞானவானே கபடமாகிய தீவினைகளைப்போக்கி சிவக்கியானத்தை யநுக்கிரகஞ்செயயும் தயாசமுத்திரமே தேவரீரிடத்திலே நாங்கள் கேட்கவேண்டிய மேன்மையையுடையதொன்றுண்டென்று தபோதனர்கள் சொன்னார்கள்—எ-று. (௨)

பொன்னலந்திகழ் புண்டரீ கப்புரப் பெருமை
முன்னருந் தொகை பெறத்தவ முயற்சியாற் கேட்டோ
மின்ன மும்மதன் பெருமைகள் விரிவுற வின்பந்
துன்னு மாறுகேட் குதுமெனு மாசையோ தொலையா.

இ-ள். சொர்ணமயமாய்விளங்கும் விராட்புருடன் இதயாரவிந்தஸ்தலமாகிய சிதம்பரத்தின்மகிமையை யாங்கள் முன்செய்ததபோபலத்தினால் சுருக்கமாகத் தேவரீர்முன் திருவுளம்பற்றினதினால் அறி

ந்தோம் இன்னமுமந்தச் சிதம்பரதலமகிமை யதிசயத்தை விஸ்தார மாக நாங்கள் பேரின்பம் பெறும்படிக்குக் கேட்கவேணுமென்கிற வாசை தீராமலிருக்கின்றது—எ-று. (௩)

தான மெண்ணில வவற்றினுட் டலைமைமீக் கொண்ட
தேன லம்புதண் பொழிலணி தில்லையின் பெருமை
ஞான தேசிக நவிற்றிறு னயர்ந்துடன் கேட்டற்
கான பக்குவ ராகினி யருளிறு லருள்வாய்.

இ-ள். எண்ணிக்கையில்லாத வநேக சிவஸ்தலங்களுண்டு அந்த த் தலங்களுக்குள்ளாக மேன்மைபெற்ற தேன்பொழியும்மலர்களுங் கனிகளுமுடைய குளிர்ச்சிபொருந்திய சோலைகளிறு லழகுற்ற தில் லைவனமான சிதம்பர தலமகிமையை ஞானகுருவே தேவரீரருளிச் செய்ய ஆசையுடனே நாங்கள்கேட்பதற்கு நல்லபக்குவம் பெற்றவ ர்க ளிவர்களென்று தேவரீர் சித்தத்தில் தோற்றிறுல் கருணையோடு திருவாய்மலர்ந் துரைக்கவேண்டும்—எ-று. (௪)

உட் லழிந்திடா வகைகட லமுதத்தை யுண்டு
தொடரு மாசையோ ரெமதி துளக்கறச் சோதி
விடல ருந்திரு முகத்துரை யமுதினை மேன்மே
லடரு மன்பிறு லயின்றுநெஞ் சமைதிகொண் டிலதால்.

இ-ள். நரைதிரை மூப்பிறப்பில்லாம லிருக்கும் பொருட்டாகத் திருப்பாற்கடலைக்கடைந்து அமிர்தபானஞ்செய்த தேவர்கள் மேன் மேலும் அமிர்தபானஞ்செய்ய விச்சிப்பதுபோல தேவரீர் குற்றமற நன்றாகச்சோதித்து உறுதியாய திருவாய்மலர்ந்த வசனமாகிய தே வாமிர்தத்தை எங்கள் செவியென்னும் வாயினுல் பலதரம் பானஞ் செய்தும் அதிலிருக்கு மிகுந்த சிவபக்தியென்னும் மதுரமானது எ ங்கள்மனதில் மேன்மேலு மிகுதியும் வளர்ந்தோங்குகின்றது என்றூர் கள்—எ-று. (௫)

என்று கூறலுஞ் சூதரு மெதிர்முக மலர்ந்து
நன்று சொல்லினி ரிறைபத நளினமே லன்பு
துன்று நற்றவர்க் கவனருட் டெளிலாப் புகழமே
னின்ற காதலோ ரென்பது புதுமையோ நிகழ்த்தின்.

இ-ள். இவ்விதமாக நைமிசாரணியவாசிகள் வணங்கி விருப்ப மாகக் கேட்டவுடனே சூதமகாமுனிவர்கேட்டு மிகுதியும் அவர்களை ப்பார்த்து சந்தோஷித்து நல்லவசனஞ்சொன்னீர்கள். அம்பலவாண ர்திருவருள்பெற்று அவர் பாதாரவிந்தத்தில் மிகுதியும் பக்தியுண்டா யிருக்கு முங்களுக்கு களங்கமற்றஇந்தச சிதம்பரத்தலமகிமையைஇ

ன்னமுங் கேட்கவேண்டுமென்று மனதில் ஆசைகொண்டிருப்பது ஆச்சரியமோவென்று சூதர்சொன்னார்—எ-று. (சு)

வேத நான்முக னாதியாம் விண்ணவர்க் கமலன்
காதை கேட்குமால் கிடைக்குமோ கனகமன் றகச்சீ
ரோதல கேட்பவ ரருமைநீர் விரும்பினீ ருமைப்போன்
மாத வப்பெரி யோரெவர் வகுத்துரைக் குங்கால்.

இ-ள். பிரமதேவன் நாராயணன்முதலாகிய தேவர்களுஞ் சிவபெருமானது சுகானுபவங்களைக்கேட்டு ஆநந்திப்பது மிக அருமை அப்படி மகிமைபெற்ற கனகசபையின் புகழைச் சொல்லுவோர்களும் கேட்போர்களும் அரிதாகையினால் நீங்கள் ஞானசபையின்மகிமையை கேட்பதற்கு ஆசையுடையவர்களாயிருக்கிறீர்கள் உலகத்தில் விசாரிக்குமிடத்து உங்களைப்போல எவர்கள் மகாதவப்பயனை அடைந்தவர்களென்று மிகுதியும் சௌனகாதியரைச சூதபுராணிகர் கொண்டாடினார்—எ-று. (எ)

உரக வேந்தனு மிந்தலத் துண்மையை விரித்துப்
பரவ வல்லனோ வரிதநின் பரிசினைத் தொகுத்து
விரத மாதவப் பெருமையீர் விளம்புவன் மிகவும்
வர மிகுந்தவா தரவுடன் மகிழ்ந்துகேட் டிடுவீர்.

இ-ள். ஆயிரமுகத்தி லிரண்டாயிரநாவுடைய ஆதிசேடனாகிய நாகாதிபதியும இநதச சிதம்பர தலமகிமையை விசாலமாகச்சொல்லச சமர்த்த னலல அப்படிக்கொதத அரிதான வநதத் தலத்தின்மகிமையைக் குருவான வியாசருடைய அநுக்கிரகத்தினால் சுருக்கமாகச் சொல்லுகிறேன் நீங்கள்செயத தவமகிமையினால் உங்களுக்குக்கேட்கப் பாக்கியங்கிடைத்தது மிகுதியும் மேன்மைபெற்ற வன்புடன் சந்தோஷமாய்க்கேளுங்களென்று சூதமாமுனிசொல்லினார்—எ-று. (அ)

தரும தேசிகன் வாதரா யணனன்றனித் தெனக்கீ
தருளி யின்னது கேட்குநீ ளன்பிலோர்க் கினபம்
பெருகு மாறுவெண் பிறைநறுங் கண்ணியோற் பேணு
மொருமை யில்லவர்க் கியம்பலே யென்றுமுன் னுரைததான்

இ-ள். புண்ணிய சொரூப குருவாகிய வேதவியாசர் ஏகாந்தமான சிதம்பர தலமகிமையை எலலாஞ் சைமினிபகவானுக்கும் அடியேனுக்கும் உபதேசித்தபின்பு இநதச சிதம்பரமகிமையை மேனமேலும கேட்கவேணடுமென்றும ஆசை மிகுதியில்லாதவர்களுக்கும பேரின்பம் பெறும்படி வெணமையான சநதிரனையும், வாசனைபொருநதிய கொன்றைமாலையையும அணிநத சடாமகுடத்தையுடைய

சிவபெருமானைப் பூசிக்கு மனதொருமை யில்லாதவர்களுக்கும் சொல்லவேணுமென்று முன்னமே யுபதேசித்தார்—எ-று. (௯)

அன்ன வாறுகொண் டருமறைக் கொழுந்திலா னந்தந்
துன்னு பேரவைப் பெருமையைச் சொற்றில னெவர்க்கு
மன்னு மீங்கிதி லாதர மறைமறை முதல்வ
னென்று மெய்வழக் கிசைநதுளீர்க் கிசைத்திடத் தருமால்

இ-ள். அவ்விதத்தை மேற்கொண்டு அரிதான வேதாந்தத்தின் முடிவில் விளங்கு மானந்தமயமான ஞான சபையின் மகிமை இந்நேரம வரைக்கும் எவர்களுக்குஞ் சொன்னதில்லை நீங்க ளாசையுடனே வேதாந்த முடிவான பராபரவஸ்துவே பரமசிவனென்று தெளிந்த சித்தமுடையவர்க ளாகையா லுங்களுக்கு இந்தச சிதம்பர மகாமகிமையைச் சொல்லத் தருமென்றா—எ-று. (௧0)

வாத ராயணன் சயிமினி மாமுனிக் குரைக்கும்
போது பெற்றன னீவிருங் கேண்மெனப் புகல
வேது காலமீ தெவ்விடத் திசைத்ததவ் வடைவே
சூத மாதவ வோதெனச சொற்றனா முனிவா.

இ-ள். வேதவியாசர் சயிமினிபகவானுக்கு உபதேசிக்கும்போது யானுங் கேட்கப் பாக்கியம்பெற்றேன் நீங்களு மந்தச் சிதம்பர மகிமையைக் கேளுங்களென்று சொன்னபோது நயிமிசாரண்ணிய முனிவர்கள் சூதனைப்பார்த்து ஒருவசனஞ் சொல்லுகிறார் இந்தச்சரித்திரத்தை எந்தக்காலத்தி லெவ்விடத்தில வியாசர் உபதேசித்தார் அந்தவிதமெல்லாந் தேவரீர் எங்களுக்குந் தெரியச்சொல்ல வேணுமென்று கேட்டார்கள்—எ-று. (௧௧)

தனது தேசிகன் றன்னையுந் தக்கவாக் கினையு
மன னிடைக்கொளா மதிநதி வனைநதவள் ளலையுங்
கனக மன்றையு நினைந்துகட் கமலநீர் பொழிய
வனக மெய்ப்புள கத்துடன் பரவசத் தடைந்தான்.

இ-ள். தன் ஞசிரியராகிய வியாசரையும் அவரருளினால் திருவாய்மலர்ந்து உபதேசித்த மேன்மைபொருந்திய சொற்களையும் மனதிலே தியானஞ்செய்து பிறைத்தி சந்திரனையுங் கங்கையையுஞ் சடாமகுடத்திற்றரித்த சபாபதியையும் அவரெப்போதும் நடனஞ்செய்யுந் திருச்சிற்றம்பலத்தையும அந்தரங்கத்திலே யிருத்திக் கண்களிலே ஆனந்தநீர் சொரிய மெய்யெல்லா மயிர்க்கூச்செறிந்து ஆனந்தபரவசத்திற் பொருந்தினார் சூதமகாமுனிவர்—எ-று. (௧௨)

ஒரு முகூர்த்தமா மிடைவிடா தன்மையா னந்தம்
பருகி யின்புற விழித்துமெய் முனிவரைப் பாரா
வருள சுரந்துல களித்தரு ளரிவைபா கனையுந்
தரும தேசிகன் றன்னையுந் தகவுட னினையா.

இ-ள். இரண்டு நாழிகைவரைக்கும் ஏகாந்த நீங்காமல் சிவயோகத்திலிருந்து பேரின்பமென்னுந் தேவாமிர்தத்தைப் பானஞ்செய்து கண்மலர்திறந்து மேன்மைபெற்ற சவுனகாதியரைப்பார்த்து கிருபையினால் சகங்களையெல்லாம் இரட்சிக்கும் சிவகாமசவுந்தரியை வாமபாகத்தில் வைத்து விளங்கும் சபாபதியையுங் குருவாகிய வேதவியாசரையும் மனதில் தியானித்து தெண்டனிட்டார் சூதமகாமுனிவர்.)

நன்று நல்லறி வுடையநீர் நசைமிக வளர
வின்று கேட்டலாற் கனகமன் றிடத்துள பெருமை
யொன்று காதலி னினைந்திடப் பெற்றன னுண்மை
துன்று தேசிகன் மொழிப்படி சொலவனென் றறைவான.

இ-ள். மிகுந்த நன்மையைத்தரும் சிதம்பரமகிமையை நீங்கள் நல்ல சிவஞானமுடைய எங்களுக்கு ஆசை பெருகும்படி இன்றைக்குச் சொல்லவேண்டுமென்று கேட்டபடியினால் திருச்சிற்றம்பலத்தின் மகிமையை விருப்பமுடன் தியானஞ்செய்ய நான் பாக்கியம் பெற்றேன் இந்த மகிமையையும் அதிசயத்தையும் என்னாசாரியராகிய வேதவியாசர் சொல்லியபடி உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சூதமகாமுனிவர் சொல்லினார்—எ-று. (கச)

உளங் குவிந்தரு மறைச்சிகை யுணர்ந்தமெய்த் தவர்கள்
வளங் குலாவிய தவத்தினால் வாழ்வதங் கடைந்தோர்
களங்க வல்வினை நீக்கிய கங்கையங் கரைமேல்
விளங்கு கின்றது தனிநிகர் வெதிரிகாச் சிரமம.

இ-ள். மனதைப் பஞ்சேந்திரியங்கள் வழியிலேசெல்லாமல் நிறுத்தி அந்தரங்கத்திலே வேதமுடிவின் பொருளையறிந்த தபோதனர்கள் நினைத்த பலன்களைக்கொடுக்கும் வண்மைபெற்று தபோதனர்கள் வாசஞ்செய்வதனாற் பிரகாசித்துக்கொண்டிருக்கும வந்துமூழ்கித் தரிசித்திருப்போர்களை யிறப்பிறப்பு முதலான துயரங்களைப் போக்கிச் சிவபதவியைக் கொடுக்கு மகிமையையுடைய சிவ கங்காநதிக் கரைமேல் தனக்குத்தானே ஒப்பாகி விளங்கும் வெதிரிகாசிரமம.)

விரி பசுந்தழை விளங்கிய வெதிரியென் றுரைத்தற்
குரிய செங்கனி யிரந்தையங் கானகின் றொளிர

வரி யிலங்கிய கற்பக மளவில்பன் மரங்க
டெரி வரும்பல பறவைமாக் திகழ்ந்திடா நிற்கும்.

இ-ள். (வடமொழியில் வெதிரிகாசிரமமென்பது-தமிழில் இலங்கையங்காடென்பது.) பச்சைநிறமாகப் பிரகாசிக்கும் விரிந்தயிலைகளுஞ் சிவந்தகனிகளுங் குளிர்ந்த நிழலுடனே விளங்கு மிலந்தை மரங்களும் பாரிசாதமுதலிய கற்பகவிருக்ஷங்களும் எண்ணிக்கையில்லாத வொளிபெற்ற பலவித மரங்களு மனேகங் குயில் கிளி நாகணைவாய் மயில் அன்னம் முதலிய பட்சிகளுஞ் சிங்கமுதலிய மிருகங்களும் ஒன்றுக்கொன்று பகையில்லாமல் வாழ்ந்துக்கொண்டு அந்த வெதிரிகாசிரமத்திலிருக்கும்—எ-று. (கசு)

கங்கையா னறுங் கொன்றைபாற் காமரு வல்லி
தங்கலா லுழை விளங்கலாற் றவக்குழூஉச செறிவாற்
பொங்கு மாமறை யாகமப் பொலிவினு னெற்றிச்
செங்கணு னெனத் திகழ்வுறுஞ் சிறந்தவாச சிரமம்.

இ-ள். கங்காநதி பெருக்கினலும், வாசனையோடுங்கூடிய சரக்கொன்றை மரங்களாலும், அழகுபொருந்திய கொடிகள்படர்ந்திருப பதினலும், மான்கூட்டங்கள் சேர்ந்திருப்பதினலும்,முனிவர்கள் நெருங்கிய கூட்டத்திலும் வேதாகம கோஷ்டங்கள் முழங்குகின்ற யாகசாலைகளில் மூன்றக்கினிகள் பிரகாசிப்பதினலும் கஙகாநதியையுங் கொன்றைமாலையுஞ் சிரசிலணிந்து அழகுபொருநதிய வல்லிக்கொடிபோன்ற பார்வதி யிடப்பாகத்தில் மருவகரத்தில்மானைத்தரித்துத் தபோதனர் கூட்டங்கள்சூழ்ந்திருக்க வளர்சசிபெற்ற வேதாகம முழக்கத்தினல் பிரகாசிக்கும் நெற்றிக்கண்ணையுடைய சிவனைப்போலிலங்கைவனம் விளங்கியிருக்கும்—எ-று. (கஎ)

மலர்நத செம்மலாப் பலாசமு மருவிவீழ் தருபுட்
குலங்களும் மவை விழுவெழுங் குணாயளித் தொகையு
மலர்ந்த மாமறை யங்கியு மதன்றிற வியமுங்
கலநத போதெழுங் கருங்கொடித் தூமமுங் காட்டும்.

இ-ள். மலர்ந்திருக்கும் பாதிரிபுட்பங்களும் வாசனைபொருந்திய மலரினிதழ்களும் மரங்களின் கொம்புகளாகிய சமித்துகளும் பறவைக்கூட்டங்களும் ஓடையிலிருக்குஞ் செந்தாமரையெனனுந தீயினிடத்தில் வீழும்போது தாமரையிலிருக்கும் வண்டினங்களெழுந்துபறக்கிற தெப்படி யிருக்கிறதென்றல் ஓமத்திரவியங்களை யோமகுண்டத்திலாகுதி பண்ணும்போது ஹோமப்புகை யெழுந்ததுபோலேவிளங்கிற்று—எ-று. (கஅ)

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20

அங்கி வேட்பவர்க் [illegible] யகற்றுமா போலப்
பொங்கு பன்மலர் வாசமுந் தாதுமுன் பொதிந்து
கங்கை யந்துறைத் தரங்கநீ கரங்களுங் கலந்து
தங்கு மென்னடை மாருதந் தநதுலா வருமால்.

இ-ள். யாகங்கள்செய்யுந தபோதனர்களுக்கு வெப்பத்தை நீக்கிவருவதுபோல் அனேகவகை புஷ்பங்களினுடைய வாசனையுமேற்றுக்கொண்டு அம்மலர்களிலிருந்து உதிருந் தாதுப்பொடிகளுடனேயும் கங்கைமானதியலைகளி லெழுந்த திவலைகளுடனே கலந்து மெல்லெனவந்து தென்றற்காற்று வீசிக்கொண்டிருக்கும் அந்த வெதிரிகாசிரமத்தில்—எ-று. (௧௯)

கங்கை யந்துறை பாற்கட லாடியர் களிறு
துங்க மந்தரந் துதைந்தெழு தரங்கம்வா சுகிகோட்
டங்க ளூசமு மதனிறை யரும்புமுன் கடையுஞ்
செங்கண் மாறன்மேற் சுதைத்துளி தெறித்தமை சிவணும்.

இ-ள். கங்காநதியென்னுந் திருப்பாற்கடலை அதில்விளையாடும் யானையாகிய மந்தரகிரியில் அலையாகிய வாசுகியென்னுங் கயிறுபூட்டிக் கடையும்போது கங்கைநீர்த் திவலைகள் கரையின்மேல்வீசக் கரையருகிலிருக்கும் புன்னைமரத்தி லரும்புகள் கொண்டிருப்பது எப்படியிருக்கிறதென்றால் முன் திருப்பாற்கடலைக் கடையும்போது அருகிலிருந்த விஷ்ணுவின்மேல அந்த வமுதத்துளிகள் தெறித்திருப்பதுபோல விளங்கிற்று—எ-று. (௨௦)

விண்ட வல்வினை யுளத்துமெய் விளக்கினுன் முனிவோர்
குண்ட வங்கியாற் றீபமா மரம்பொலி குழுவான்
மண்டு முட்புறம் புளவெனு மாரிருள் வடிவங்
கண் டறிந்தவ ரிலையவண் காதலித் தோருள்.

இ-ள். தீவினைகளைப் போக்கிய முனிவர்கள் மனதில் சிவஞானமென்னும் விளக்கின் பிரகாசத்தினாலும் புறத்தில் யாகசாலையின் அக்கினியொளியினாலும் சோதிமரங்களின் கூட்டம் ஆகாயம்வரைக்குமுயர்ந்திருக்குங் காந்தியினாலு முள்ளும் புறம்பும் அஞ்ஞானத்தினுருவையும இருளினுருவையுங் காண்போமென்று தேடினாலுங் காணக்கிடையாமல் விளங்கியிருக்கும் வெதிரிகாசிரமம்—எ-று. (௨௧)

கணங்கொள் மாதவர்க் கயலிடைக் காற்றினாற் பசுமை
யிணங்கு பிண்டியின் செம்மல ரிடையிடை வீழ்ந்தாங்
குணங்கு மாறுவே ளுதவிய சிலீமுக மவனை
யணங்கு செய்வதற் கஞ்சின வாடின வனைய.

இ-ள். முனிவர் கூட்டங்க ளிருக்குமிடத்தில் தங்கநிறமான அசோகமலர்கள் காற்றினலலைசந்து தபோதனர்க ளருகிலுதிர்ந்து வாடிக்கிடப்பது எப்படி யிருக்கிறதென்றால் மன்மதன் முனிவர்மீதிற் றொடுத்த வசோகமலராகிய பாணங்க ளவர்களை வருத்துவதற்குப் பயந்து உலர்ந்து கிடப்பதுபோ லிருக்கின்றது—எ-று. (உஉ)

சடையர் தண்டினர் குண்டிகைத் தடக்கையர் சீரை
யுடையர் நீறணி மேனிய ருயிர்வருந் தாத
நடைய ரைம்புலப் பகைஞரை வென்றருண் ஞானப்
படைய ரெண்ணிலர் மாதவர் பதியதவ் வனமே.

இ-ள். சடாமகுடந் தரித்தவர்கள் கரதலங்களில் தண்டு கமண்டலம் பிடித்தவர்கள் மரவுரியென்னும் வஸ்திரம்தரித்தவர்கள் விபூதி தரித்த மேனியுடையவர்கள் சிற்றுயிர்களும் இறவாதவிதமாய் நடக்கிறவர்கள் பஞ்சேந்திரியங்களென்னும் சத்துருக்களை சிவஞானமென்னு மாயுதத்தினல் வென்றவர்களும் ஆகிய எண்ணிக்கையில்லாத வனேகந் தபோதனர்கள் வாசஞ்செய்துக்கொண்டிருப்பார்கள் அந்த யிலந்தைவனத்தில்—எ-று. (உ௩)

தருப்பை கொய்பவர் சமித்துடன் கொணர்பவர் செவ்வி
மருப் பொதிந்திடு மலரிலை யெடுப்பவர் வன்னி
விருப்பின் வேட்பவ ரருச்சனை வியப்பினர் ஞானத்
திருப் பொலிந்திட விருப்பவர் காட்சியாற் சிறக்கும்.

இ-ள். தருப்பை யறுத்துக்கொண்டு வருகிறவர்களும், சமித்துகள் கொண்டுவருகிறவர்களும், காந்தியும் வாசனையும்பெற்ற பத்திர புஷ்பங்களை யெடுத்து வருகிறவர்களும், அக்கினியில் விருப்பத்துடனே ஓமங்கள் வளர்க்கிறவர்களும்,சிவார்ச்சனை பண்ணுகிறவர்களும், சிவயோக நிஷ்டையி லிருக்கிறவர்களுமாகிய மகாமுனிவர்கள் வாழ்ந்துகொண்டிருப்பதினல் வெதிரிகாசிரமம் பிரகாசிக்கும்—எ-று. உ௪

அளிகொ டேசிக ரிடத்துநூல் கேட்பவ ரையந்
தெளியு மாறெதிர் வினவிநற் றெளிந்திடு மாறு
கிளிகளோ வயற் பூவையுங் கிளர்த்திடு மென்று
லொளிகொ ளவ்வனத் துள்ளவர் பெருமையா ருரைப்பார்.

இ-ள். கருணையையுடைய குருவினிடத்திற்குவந்து சாஸ்திர பாடம் கேட்கு மடியார்களுக்கும், சந்தேகமுற்றுக் கேட்பவர்களுக்கும், அவ்வனத்திலிருக்கும் கிளிப்பிள்ளைகளும், நாகணவாய்ப் பறவைகளும், சந்தேகம் தீரத்தக்கதாக உள்ள பொருளைச்சொல்லி மன

தை தெளிவிக்குமென்று லந்த ஒளிபெற்ற வெதிரிகாசிரம வாசிகளா
கிய பெரியோர்களின் மகிமையை யாவராலும் சொல்லிமுடியாது.()

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆறிருது மைம்பொழுது நன்குகரு தன்பருவ மன்றிவிளை யாத
விளைவும், பேறனைய சாகமொடு மூலநிறை காய்கனிகள பேதமிகு வா
சமலருங், கூறிவைக ளப்பருவ மெப்பொழுதெ னுதருள் சொழுப்
புடன் விழுப்ப மிகுமான், மாறுபடு மைம்புலனை வென்றதவ மன்ன
வர்கள் வைகியுறை தெய்வவனமே.

இ-ள். சித்திரை வைகாசி இந்த இரண்டுமாதமும் வசந்தகாலம்,
இந்தப்படி இரண்டுமாதங்கள்கூடின ஆறு ருதுகாலங்களிலும் அரு
ணோதயாதிமுதல் அஸ்தமானம்வரைக்கும ஐந்துவேளைகளிலும் துளி
ர்த்து அரும்பி மலர்ந்து காய்கனி கிழங்குகளுடையதாய் மற்ற வன
த்திலுள்ள தருக்களைபோலக் கொடுப்பதுமல்லாமல் எக்காலமு மாறு
மல் செழிப்பாக அதிக வாசனையுடனே பஞ்ச யிந்திரியங்களைவென்ற
தபோதனர்களுக்கு வேண்டும்போதெல்லாம் கற்பகத்தருக்கள்போல்
துளிர் மலர் கனிகளைக் கொடுத்துக்கொண்டிருக்கு மந்த வெதிரிகா
சிரமம—எ-று. (உசு)

ஆதப மிகுங்கொடிய வேனிலிம மாரிமுத லாறுபரு வங்கள் புரி
யும், வேதனை நயப்பிலர் விருப்பிலர் வெறுப்பிலா வினைப்பகை தனை
ப்பொடி செய்தோர், பூதல வியக்கிலர் மலர்க்கணை யுருவடிவர் போ
தமுற வேதமுடிவிற், காதல்கொ டிருப்பதல தொன்றுமுனை ராமு
னிக ணம்பயின லம்பெருகுமால்.

இ-ள். சூரியகிரணங்களினால் உஷ்ணமிகுந்த இளவேனிற்கா
லம், முதுவேனிற்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், மழை
பெய்யுங்காலங், குளிர்காலம் ஆகிய இந்த ஆறுகாலத்திலும் வருத்த
ங்களெண்ணாமல் தவஞ்செய்கிறவர்கள் மண்-பெண்-பொன் என்
னும் இம் மூவாசைகளை விட்டவர்கள் எந்நேரத்துக் கெதுகிடைத்
தாலும் சிவானுக்கிரகமென்று சந்தோஷித்திருப்பவர்கள் விருப்பு
வெறுப்பில்லாதவர்கள் தீவினைகளைத் தருமந்தரங்கச் சத்துருக்களை
வெற்றிகொண்டவர்கள் உலகநடத்தையில் மயங்காதவர்கள் மன்மத
பாணம்படாத தேகமுடையவர்கள வேதாந்தமுடிவில் விளங்கும்
பரசிவத்தியானத்தில் விருப்பமாய் ஆநந்தானுபவம பெற்றிருப்பதே
யல்லாமல் பயனில்லாத சாஸ்திர பொருள்களைப்பாராத முனிவர்
கூட்டங்கள் வாசமாயிருப்பதினாலே மிகுந்த நன்[illegible]க்கும இல
ங்கைவனம—எ-று. ([illegible])

MAHOPADHYAYA

ஆசினிய ரம்பைபல சூதமுறு நற்கனியி லாறுகிகர் சாறுபெருகா, விசியொரு பாலடைய வேழமத தாரைநெடு வெள்ளமொரு சார்பின் மருவத், தேசுடைய கங்கைநதி யெவ்வகை சிறந்ததுகொ றேவர்பு கழ் வாணிநதியு, மாசில்யமு னைநதியும் வந்திடை கலந்ததுறை மானு மல தேதுரை செய்வாம்.

இ-ள். அனேகம் பலாக்கனி,வாழைக்கனி, மாங்கனிகள் தானே யுதிர்ந்து தாறுவெடித்து ரசங்கள் மஞ்சள்நிறமுடைய ஆறுய்ப்பெரு கியோடி யொருபக்கமாயக் கங்கையிலேகூடுகிறது யானைகளினுடைய கபோல மததாரைகள் வழிந்தொழுகி கரியநிறமாய் நதியாகப்பெருகி யொருவிடத்திலே வெண்மையான கங்கையிலேசேருகிறது எப்படி யிருக்கிறதென்றால் ப்றயாகையில் தேவர்கள்புகழும் சரஸ்வதி நதி யும், பரிசுத்தமான யமுனைநதியும் வந்துகூடுந திருவேணி சங்கமம் போல் வெதிரிகாச்சிரமத்தில் கங்காநதி பிரகாசிக்கும்—எ-று.(உ௮)

கொண்டலை யுழக்கியெழு தாழையிள நீர்பலவு கொக்கினுறு நெக்க கனிசேர், தண்டலைக ளண்டமிசை சென்றளவு கண்டெதிர் தயங்கு வவி யந்து முனிவோர், மண்டலம் விளக்குமறை கொண்டவவி யன் றியு மருந்தென வருந்து மெனவா, னண்டர்கள் பெறும்படி தினந் தொறும் விருந்தெதி ரளிப்பன நிகர்த் துடையவால்.

இ-ள். மேகமண்டலத்தைக்கலக்கி யுயர்ந்து வளர்ந்திருக்கும் தென்னமரங்கள் இளநீர்க்காயும் பலாமரங்களும் மாமரங்களுங் கனி களையுமேந்திய சோலைகள் ஆகாசத்தை அளாவியது எப்படியிருக்கிற தென்றால் மாத மும்மாரிபொழியவும் பூமி நன்றாய்விளையவுஞ் சகல தருமங்களும் வளரும்பொருட்டாக வேதங்களின் சொற்படிக்கு முனிவர்கள் யாகங்கள்செய்யு மந்த அவிர்ப்பாகங்கொள்ளவருந் தே வர்களுக்கு விடாய்தீர தேவாமிர்தம்பெற நற்கனிவற்கங்களை எதிரே யமைத்துவைத்திருந்து நாள்தோறுங் கொடுப்பதுபோல் பிரகாசிக் கின்றது—எ-று. (உ௯)

தேவருர காதிபர்கள் சித்தர்பல கிம்புருடர் சேணிலவும் வாச மு டையோர், யாவர்களும் வந்திலகு கங்கைநதி மூழ்கியரு ளெய்துதவ மாமுனிவர்தம், மேவரு மொழுக்கமும் விழுப்பமு மதிக்கரிய மெய் த்தவமு மெய்த் தகைமையா, லாவது நமக்கென வொருப்படும் விரு ப்பினை யளித்திடும் வனத்தி னியல்பே.

இ-ள். தேவர்கள் நாகலோகாதிபர்கள் சித்தர்கள் கின்னரர்-கிம் புருடர் ஆகாசத்தில் வாசமாயிருக்கிறவர்கள் மற்றுமுள்ளவர்களும் பிரகாசிக்குங் கங்காநதியில்மூழ்கி அந்த கங்கைக்கரையில்விளங்கும்

வெதிரிகாச்சிரமத்திலிருக்கும் தபோதனர்களைப்பார்த்து இவர்களைப் போல நமக்கு சித்திபங் கங்கைக்கரையில்மூழ்கவும் அரிதாகிய ஆசாரமும் பெருமையு மெண்ணுதற்கரிதான தவமுமுடைய விந்த மேன்மையுங் கிடைக்கத்தக்க பாக்கியமுண்டோவென் றதிசயித்து மிதுவே கிடைக்கவேண்டுமென்று இச்சிக்கத் தக்கதாகவிருக்கு மந்த வெதிரிகாச் சிரமத்தின்மகிமை—எ-று. (௯0)

மதங்கொடு வருங்களி றருந்தவ ரெதிர்ந்திடின் மகிழ்ந்தெதிர் விலங்கி யிலகும், பதங்களின் விழுந்துட னெழுந்துசுவை துன்றிய பலம்பல கொணர்ந் தவைகொடா, விதம்பெற வரும்பணி யறிந்தன புரிந்துறை வியன்றல மடைந் தவர்கள்சந, ததம்புக லறங்களி னுளங் களி மிகுந்தருட யங்கவய றங்கு வனவால்.

இ-ள். மதங்கொண்டுவரு மியானைகள் முனிவர்களை யெதிரில் கண்டவுடனே தரிசனஞ்செய்ய பாக்கியங்கிடைத்ததென்று அறிவுண்டாகி தூரவிலகி பாதாரவிந்தங்களில் தண்டனிட்டெழுந்து மதுரமாகிய கனிவகைகள்கொண்டுவந்து கொடுத்துந் தங்களால் செய்யத்தக்க ஊழியங்களைச்செய்தும் முனிவர்கள் ஆசிரமத்திற்சேர்ந்தபின் பவர்கள்செய்யப்பட்ட தருமங்களுக்கு எப்போ தென்னவுபசாரங்களால் செய்யத்தக்கதோ வந்தப் பணிவிடைக ளவர்கள்சொற்படிக்கு மனதில் மிகுந்த சந்தோஷமாகச்செய்தும் அவர்க ளனுக்கிரகம்பெற்று விளங்கிப் பக்கத்தில் இருக்கு மவ்வனத்தில்—எ-று. (௯க)

யாகமலி சாலைதொறு மங்கல விளக்கமென வெல்லைக ளறிந்து குறுகு, நாகமுமிழ் மாமணிகள் கொண்டுபல தீபமிட நண்ணியதனோடு பயிலுந், தோகையை விரித்தமர வீசிறு கால்கொடலர் துங்கமறை யங்கி தனைவின், றோகையொடு கேகய மெழுப்புவன கண்டவரு வப்புறு திவப் புடையதே.

இ-ள். யாகங்கள் செய்கிறவேளையில் யாகசாலைகளிலே வாத்தியமும் வேதகோஷமு முழங்குகிறதைக் கேட்டவுடனே நாகங்கள் வந்து சிரசிலிருக்கு மாணிக்கங்களை விளக்குகளாகவைக்கவு மந்தப் பாம்புகளுடன் பகையில்லாம லுறவாகி கலந்துதிரியு மயில்க ளிறகை விரித்தசைத்து அதில்வருஞ் சிறுகாற்றினால் ஓமகுண்டத்திலிருக்கும நெருப்பைமூட்டி எரியச்செய்விக்கும் புதுமைபார்த்தபேர்கள் சந்தோஷித் ததிசயத்தையடைவார்க ளந்த இலந்தைவனத்தில—எ-று.

ஈரமன மாமுனிவர் கங்கையிடை மூழ்கவுடன் மூழ்கியுட னேறி விலகுஞ், சீரைகள் கொடுத்தவர்கள் பின்னலுகிர் கொண்டுவகிர் செய்தரு ளருச்சனை செயு, நேரம தறிந்து பசு நேடிபெதி ரெய்துமவை

நேயமுறு கன்றை வெரினிற், பேர்வற வெடுத்துரிய சாலைதனி லுய்த்துழுவை பேதமற நீதி பெருகும்.

இ-ள். அன்புநிறைந்த மனத்தையுடைய முனிவர்கள்கங்கையிலே ஸ்நானஞ்செய்கிறதற்கு முன் வேங்கைப்புலிகள் கங்கையில்மூழ்கிக் கரையிலேறிப் பிரகாசிக்கும்படி வஸ்திரங்களெடுத்து ஸ்நானஞ்செய்த முனிவர்களுக்குக்கொடுத்து அவர்கள் சடைகளை தங்கள்நகங்களினால் வகிர்ந்து ஈரமுலர்த்தியபின்பு அவர்கள் சிவபூசைசெய்யுங்காலம் அறிந்து பால்கொடுக்கவரும் பசுக்களைத்தேடி எதிராகப்போய் வோட்டி அதின் கன்றுகளை முதுகில் சுமந்துக்கொண்டுவந்து பசுக்களிடத்தில் விட்டுப் புலிகளபசுவினுடன் உறவாக முனிவர்களுக்குப்பணிவிடை செய்துக்கொண்டிருக்கு மந்த வெதிரிகாசிரமத்தில—எ-று.()

கேழலுழ வந்தெழு மணித்திரள் வெடித்துகு பிளைத்தரள மந்தநெறியின், சூழனிமை யப்பரலி னேகுமுயர் மாதவர் துணைப்பதம்வருத்துவ தெனக், காழுடை யகிற்றழைகள் சந்தன நறுந்தழைகள் கைக்கொடவை முற்று மகல, வேழமரி யாளிகள் விளக்கிய வரைப்பணி வியப்பினை யுரைப்ப தெவனோ.

இ-ள். காட்டுப்பன்றிகள் கிழங்குகளைத் தின்னுகிமித்தம் பூமியை யுழுகிறபோது அதின் கொம்பிலிருந்து தெறித்த முத்துக்களு மூங்கில வெடித்துதிர்ந்த முத்துகளும் முனிவர்கள்நடக்கும வழிகளில கிடைக்கிறதைப்பார்த்துத் தபோதனர்கள பாதங்களிலே கல்லுகள் உறுத்துவதைப்போ லுறுத்துமென்று யானைகளுஞ், சிங்கங்களுமம, யாளிகளுங், கைகளினால் வாசனையையுடைய சந்தனத்தழைகளையும், அகிற்றழைகளையு மொடித்துக்கொண்டு மார்க்கங்களிற்கிடக்கிற முத்துக்களைக்கூட்டி யொதுக்கி அந்த ரிஷிகளைவணங்கிய பணிவிடைகள் செய்கின்றன அவைகளின் பக்திகளை யொருவராற்சொல்லிமுடியாது—எ-று. (௩௪)

இகம்பர முணர்த்துமறை யாகம முழக்கமு மிசைத்தவழி யர்ச்சனையுடன், மகம்புரி சடங்கினெழு பேரொலியு மீரமுடன் வந்தெதிர் விருந் தெதிர்கொளு, முகம்பொலி நயப்புரையி னாவமுடன் மாநதியின் மூழ்குமவ ரோசையு மெழுந், தங்களக லப்புணரி யஞ்சமுகி லஞ்சுவக லண்டமிசை மண்டி யெழுமால்.

இ-ள். இகலோக பரலோக சாதகங்களைத் தெரியச்சொல்லும் வேதாகமங்கள படிக்கிறவொலியும் அந்த வேதாகமங்கள் முறைமையாக சிவபூசைசெய்கிற வொலியும யாகங்கள செய்யுமிடத்தி லெழுந்த பேரொலிகளும் பெரியோர்கள் வருகிறகுறிப்பறிந்து அன்புடனே முனிவர்க ளெதிர்கொண்டுவந்து உபசாரஞ் சொல்லுஞ் சத்தமும்அ

ன்புடனே தோத்திரங்கள் செய்துக்கொண்டு கங்கையில் ஸ்நாநம்பண்ணுகிறவர்களொலியும இந்தச் சத்தங்களெல்லாங்கூடி சமுத்திரமும யுயத்தையடைய மேகங்கள் திடுக்கிட பாவங்கள் அந்தயெல்லையி லனுநாமலோடத்தக்கதாக பிரமாண்டம்வரைக்குமளாவும் அந்த வெதிரிகாசிரமத்தில்—எ-று. (௧௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தன்னிகரா நெறிபடைத்த திகழ்வெதிரி காசிரமர் தன்னின்முன்னர், துன்னுதுவா பரயுகந்து முடிவின்கட லவிழ்வாசத் துழாயலங்கன், மின்னவிருந திருமாறன் கலையான வியாதனென விளம்பு மேலோன், பன்னெடுநா ளினிதிருந்தா னிமையோரு முனிவோரும் பணிந்து போற்ற.

இ-ள். ஒப்புவமையில்லாமல் தனக்குத்தானே சமானமாகியலக்ஷணங்களை யுடைத்தாகி விளங்கும் வெதிரிகாசிரமத்தில் பூர்வகாலத்தில் துவாபரயுகமுடிவில் வாசனையுடைய துளசிமாலையணிந் தலங்காரமாகிய மார்பில் லட்சுமிதேவியைத் தரித்திருக்கும் மகாவிஷ்ணுவின் கலைகளிலொன்று வேதவியாசரென்று அவதரித்து கீர்த்திபெற்ற மேன்மையையுடையவராய் எக்காலமுந் தேவர்களும் முனிவர்களும் வணங்கித தோத்திரஞ் செய்யத்தக்கதாக சுகமா யெழுந்தருளியிருந்தார் அந்த இலந்தைவனத்தில்—எ-று. (௧௬).

சீதமா மதிவேணி யமலனுயர் திருவருளைச் சிறப்பா லெய்தி, வேதமெலா மளவிட்டுப் பிரித்துடைய குறிப்பினுல் வியாதனென்று, மேதமிலா மாதவங்கூர் வெதிரிகாச் சிரமத்தி னிருத்த றன்னால், வாதரா யணனென்றும் பெயருடையோ னவன்பெருமை வழுத்தற் பாற்றோ.

இ-ள். குளிர்ச்சிபொருந்திய சந்திரனைச் சடையிலணிந்த பரமசிவனுடைய மிகுந்த வனுக்கிரகத்தினுல் பிரகாசித்து வேதங்களைவரமாகப்பெற்று அந்த நாலுவேதங்களையும் காண்டங்களென்றுஞ் சாகைகளென்றும் பிரித் தளவிட்டு திட்டப்படுத்திய படியினுலேவேதவியாசரென்கிற பெயரும் இலந்தைமரத்துக்கு வடமொழியில் வெதிரியென்று பெயருண்டாகியதனுல் வெதிரிகாச்சிரமமென்னும் அதில் வாசமாய்த் தவஞ்செய்கிறபடியால் வாதராயணனென்கிற பெயரும் பெற்ற வேதவியாசர் மகிமையைத் தோத்திரம்பண்ண முடியுமோவென்று சூதபுராணிகர் திருவாய்மலர்ந்தனர்—எ-று. (௧௭)

பொங்குதிரைக் கடல்புடைசூழ் புடைவியிடைப் பிறந்திறந்து முலையு மாக்க, டங்கண்மதி யோசிறிது வானுரு மிகுதியிலை சாற்றுகி

ன்ற, லிங்கிவர்க ளிம்முறையா லென்ஞான்றும் பரகதியி லெய்த மா
ட்டா, ரங்கதுகொண் டவருய்யு நெறிவேண்டி யுலப்பிலா வருண்மீ
க்கொண்டு.

இ-ள். மென்மேலும் அதிகப்படுகிற அலைகளோடுங்கூடிய சமு
த்திரஞ் சூழ்ந்த பூமண்டலத்தில் பிறந்திறந்து வருத்தமடையும் மா
னிடர்களுக்கு அறிவு சிறிது ஆயுளும் வெகுகாலமில்லை ஆகையினுல்
இந்தவுலகத்தார் யெந்தவிதத்தினுலேயுஞ் சிவபதவியைச சேரமாட்
டாகள் இப்படியிருக்கிறதே யென்று மனமிரங்கிச் சகல ஜனங்க
ளும் கடைத்தேறும் விதம் ஆலோசனைசெய்து மிகுந்த கருணையுட
னே வேதவியாசரிருந்தார்—எ-று. (௩அ)

பெருக்கமிகு மொழிவேதப் பருப்பரத்திற் றிருவருளின் பெரு
மை தன்னு, லிருக்கியசுச் சாமமதர் மணந்திகழும் மறைநான்கு மெடு
த்திசைத்து, வருக்கமிகு புராணமிதி யாசமிவை தாமைந்தா மறை
யாச் சேர்த்துத், திருக்கிளரு முணர்வுடைய முனிவர்க்குப் போதி
த்தான் றெளிவு கூர.

இ-ள். சிவனருளினுல் மிகுதியும் பெருக்கமாய்ச்சொல்லப்பட்ட
வேதமென்னு மலையை வரமாகப்பெற்று அந்த கூட்டத்தை இருக்
குவேதம்-யசுர்வேதஞ்-சாமவேதம்-அதர்வணவேதமென்னும் நான்
காகப்பிரித்து மற்றும் பதினெண்புராணங்களையும் பாண்டவர் சரித்
திரமாகிய பாரதத்தையும் ஐந்தாம்வேதமாகச் சேர்த்துலட்சுமீகரம்,
விளங்கிய புத்திகோசரரான முனிவோர்களுக்கு நன்முகத் தெரியத்
தக்கதாக வேதவியாச ருபதேசஞ்செய்தார்—எ-று. (௩௯)

பகரிருக்குப் பயிலற்கு மியசுவைசம் பாயனற்கும் பரவினோர்தந்,
துகளொழிக்குந் திகழ்சாமஞ் சயிமினிக்கு மதர்வமறைசுமந்துவுக்கு,
மகமகிழ வருவித்துப் புராணமிதி யாசமிவை யடியேற் கீந்து, புகழ
மருவ வியாவர்க்கு மிகலொழியப் புகலென்று புகன்ற பின்னர்.

இ-ள். மேற்சொல்லிய இருக்குவேதத்தைப் பயிலவமாமுனிக்
கும் மியசுர்வேதத்தை சம்பாயனரிஷிக்கும் துதித்தவர்கள் மும்மல
ங்களையறுத்துப் பிரகாசிக்குஞ் சாமவேதத்தைச் சயிமினிபகவானுக்
கும் அதர்வண வேதத்தைச் சுமந்துமுனிக்கும் மனது சந்தோஷிக்க
ப்போதித்துப் பதினெண் புராணங்களையும் பாரதமுதலிய யிதிகாச
ங்களையும் அடிமையாகிய எனக்குத் திருவாய்மலர்ந்து இந்த ஐந்தாம்
வேதங்களைக் கீர்த்தியுண்டாகும்படிக்கு உலகத்தோர் பிறப்பிறப்பு
ஒழிந்து பரமசிவத்தை யடையத்தக்கதாக தெரியச்சொல்லென்று
சொன்னபின்பும் வேதவியாசர் சொல்லுகிறுர்—எ-று. (௪௦)

ஏத்தரிய நால்வேதப் பயனளவு படாவவற்றி னியல்புதன்னைப், பார்த்தறிய யாவோருஞ் சிற்றறிவோ ரெனக்கருணைப் பரவை போ லு, மாத்தவமா முனியிறைவன் றிருவருளான் மறைப்பயனின் வர ம்பி தென்னச், சூத்திரமு மினிதினுரைத் தறிஞர்பெற வருள்செய் தான் றுளக்க நீங்க.

இ-ள். துதித்தற்கு அரிய நாலு வேதங்களின்பயன் அளவுப டாது அந்த ரகசியப்பொருளை அறிதற்கோ மானிடர்கள்சிற்றறிவினை யுடையவர்கள் என்றுநினைத்து கருணைக்கடலாகிய மகாதவமுடைய முனிவர்களுக் கரசனான வேதவியாசர் திருவருளினால் வேதாந்த ரக சியப்பொருள் இன்னதென் றளவிட்டு வேதாந்த சூத்திரங்கள் சந் தேகமற அறிவுடையோராக ளறிந்துக் கொள்ளும்படி சொல்லி னார்—எ-று. (சுக)

பொருவரிய கருமகாண் டத்துமறை மொழியினுள பொருளினு ண்மை,யருளுடைய சயிமினிவ மொழிதியெனத் தேசிகன்ற னருளு மீசன், கருணையுமுற் கொண்டதனை யீராறு காண்டமாக் கழறினா னக், குருபரனைத் தொழுதிறைஞ்சி யருத்தியுடன் றெரித்துரைத் தான் குணக்குன் றன்னான்.

இ-ள். கிருபையையுடைய சயிமினிபகவானே ஒப்புசொல்லுத ற்கரிதான கர்மகாண்டத்திலுள்ள பயனை யாராய்ந்து சுருக்கமாகச் சொலலுங்களென்று கேட்க ஞான தேசிகரான வேதவியாச ரனுக் கிரகமும் பரமசிவன் றிருவருளும் பெற்று அந்த கர்ம காண்டத்தை பனிரெண்டு காண்டமாய் வகுத்துச்சொல்லி வாதராயணரை வண ங்கித் தோத்திரஞ்செய்து ஆசையுடனே சயிமினிபகவான் விண்ண ப்பஞ் செய்கிறார்—எ-று. (சுஉ)

அன்னவனுன் மொழிகரும காண்டத்தி னியல்புதனை யடைவிற் கேட்டு, நன்னலத்த தெனவுரைத்துச் சிரந்துளக்கி யாங்கவற்கு நய ப்பா லங்ஙன், முன்னியமா ணாக்கர்க்குந் தானுரைத்த வேதாந்தச் சூத்தி ரங்க, டன்னருளா லளித்துவிரித் துரைத்தருளிப் பின்னொன் று சாற்றுகின்றான்.

இ-ள். சயிமினிபகவான் சொன்ன பனிரெண்டு காண்டமாகிய கர்மகாண்டத்தின் பயனை வாதராயணர் அன்புடன்கேட்டுநல்லபொ ருளுடையதென்று மகிழ்ந்து சிரசையசைத்து மெச்சிக்கொண்டு மு ன்னந் தன்னைநெருங்கின முனிவர்களுக் குபதேசித்த வேதாந்தசூத் திரங்களைத்தானே தயவுண்டாகி திருவுளம்பற்றி விஸ்தாரமாகத் தெளிவா யுபதேசித்துப் பின்னையு மொருவசனஞ் சொல்லுகின்றார் வேதவியாசர்—எ-று. (சுங)

முத்தியனை வருமடையத் தோன்றினமங் கதுகொண்டு முடிவி
லாத, சித்தமறை களையெல்லாம் பிரித்துவகுத் திசைத்தனமர் மெய்
யினில்லாச், சித்தமுடை வேதியர்சூத் திரர்மாதர் விடைவான் [illegible]
ரிந்து கேட்க, வுத்தமமாம் புராணமிதி யாசமிவை நேசமுற வுணர்த்
தோ மன்பால்.

இ-ள். எல்லோரு மோட்சமடையும் பொருட்டாக நாமவதாரஞ்செய்தோ மாகையினாலே முடிவில்லாத மகேஸ்வர சொரூபமான வேதங்களை யெல்லாந் தொகையாகவகுத்து விரிவாகப் பிரித்துச் சொன்னோம் அந்த வேதமுறைமையாய் நடவாத சஞ்சலமனதுடைய பிராமணர்-சூத்திரர்-பெண்கள் இவர்களமுதலான பேர்கள் மோட்சம் பெறும் பொருட்டாக ஆசையுடனே கேட்கும்படிக்கு உத்தமமான பதினெண் புராணங்களு மிதியாசங்களும் விருப்பமாக வுலகமெல்லா மறிந்துக்கொள்ளச சொன்னார் வேதவியாசர்—எ-று. (சச)

கருமநெறிஞானநெறி யிவையிரண்டும் விளங்கியமெய்க்காதல்கூற,
வொருமைதிகழ் சயிமினியா லெம்மானின் றாராயந்தீங் குரைக்கப்
பெற்ற, பொருவரிய சூத்திரங்க டம்மாலெம் முடைத்தோற்றம்பொ
லிந்த திங்ஙன், றருமொழிக்கோ ளையமிலை நங்கருத்துச் சமாதியி
லே சார்ந்த தன்றே.

இ-ள். சிவயோகத்தினால் விளங்குஞ் சயிமினிபகவானாலுமென்னாலும் சொல்லப்பட்ட கருமகாண்ட சூத்திரங்களும் ஞானகாண்ட சூத்திரங்களும் இவையிரண்டு கருமமாக்கம் ஞானமாக்கம் இவை இரண்டும் பிரகாசிக்கின்ற வேதங்களிலரிதான பொருளாய்ப் பிரகாசிக்கும் அதை தெளிவா யாராயந்து சொன்னதினால் எங்களிருவர் சனனங்களுஞ் சாபல்லியமாச்சுது இந்தப் பொருள்களுக்குச்சந்தேகமில்லையென்று வேதவியாசர் திருவுளம்பற்றி நம்முடையமனஞ் சிவயோக னிஷ்டையிலே பொருந்திற்றென்று சொன்னார்—எ-று. (சரு)

நீங்களுநங் கற்பனையை நீங்காம லோங்கிவளர் நெறிக ளென்றுந்,
தேங்குமறை வழிதன்னை வருந்தியுமெவ்வுலகத்துஞ் சிறந்துநிற்கும்,
பாங்குபெற நிறுத்துமென வருள்செய்து மோனத்தின் பரிசுசார்ந்
தான், வாங்கரிய தீவினையி னெறிமாற்றி மெய்ஞ்ஞான வரம்பு கண்
டோன்.

இ-ள். நீங்குதற்கரிதான தீவினைகளின்வழியே செல்லாமல்ஞானமார்க்கத்தில் மனதைச்செலுத்தி மெய்ம்மையாய் சிவஞான பிரமாணத்தை யறிந்த வேதவியாசர் சயிமினிபகவானையுஞ்சூதனென்னும் பேர்பெற்ற வென்னையுங் கிருபையினால் பார்த்து நீங்களு நம்மைப்

போல் மனதைப் புறத்திற்போகாமல் அந்தரங்கத்திலிருத்தி மேன் மேலும் வளரு மார்க்கம் பொருந்திய வேதத்திலுரைத்த முறைமை யாக விருப்பமாகி யெவ்வுலகத்திலு மேன்மையாய் நிலைபெறும்படிக்கு நன்றாகச் சிவயோகசமாதியிலே மனதைநிறுத்துங்களென் றனுக்கிரகஞ்செய்து வொருவருடனேயும் பேசாமல் நிஷ்டையிலே யிருந்தார்—எ-று. (சசு)

பின்னரெழுந் தருளுடைய சயிமினிவன் றேசிகன்றன் பொருளை நோக்கிப், பன்னிருகா லட்டாங்க முறப்பணிந்து மகிழ்ந்திருகைப் பதுமங் கூப்பிச், சென்னியிறைஞ் சுதலொடுக்கத் துடனின்று நேசமெழச் சிந்தை யூறு, மின்னமிர்த நிகரையா நீயுரைத்த தெலாந்தோற்ற மெம்ம ஞேர்க்கே.

இ-ள். இப்படி யனுக்கிரகம்பெற்றபின்பு பக்தியுடனே சயிமினி பகவானெழுந்திருந்து வியாசரது நிஷ்டையிலிருக்கின்ற மைவைப்பார்த்து பன்னிரண்டுவிசை அவயவங்கள் பூமியில் பொருந்தத் தெண்டனிட்டுச் சந்தோஷத்துடன் இரண்டு கரகமலங்களைக்குவித்துச் சிரசைவளைத்து வணக்கத்துடனே அன்புண்டாக மனதி லுண்டாகின்ற தேவாமிர்தத்துக்குச் சமானமாய் தேவரீ ரெங்களுக்குத் தெளிவாகக் காட்டினையிட்ட யிந்தபுத்தி நன்று—எ-று. (சஎ)

அரந்தையிலா வறிவுடைய பெரியோர்தந் தோற்றங்க ளகிலமெங்கும், புரந்தருள்கைப் பொருட்டன்றே வப்படிநின் னுலகம் பொலிவு பெற்ற, வுரந்திகழுன் மாணுக்க னெனநின்னுற் போதிக்குமுணர்வா லுய்ந்தே, னிரந்தரமு நன்குடையே னுனு நினைக்கொன்று நிகழ்த்த லுண்டால.

இ-ள். உலகங்களையெல்லாம் இரக்ஷிப்பதற்காக வல்லவர்ஆணவாதி மும்மலங்களகற்று வொழுகுந்தகேநரடுங்கூடி ஞானமுடைய மேலோர்கள் திருவவதாரஞ்செய்வது ஆகையினுல் தேவரீரால் பூமியின்கண் ஆத்துமாக்கள் வாழுந்துகொண டிருக்கின்றது நம்முடைய உள்ளத்திலே அடிமையிவனென்றெண்ணி தேவரீரருளால் னுபதேசம் பெற்று அடியேன் ஞானமுண்டாகிக் கடைத்தேறினேன் எப்போதும் நன்மையுண்டானவ னுனுலும் இன்னமொரு விண்ணப்பம் அடியேன் செய்யவேண்டுவ துண்டென்று சயிமினிபகவான சொன்னுர்—எ-று. (சஅ)

மறைமுதலா கியகலையிற் பொருளுணர்மெய்ஞ் ஞானநகை வந்தெங்கு, நிறைபரம சிவத்திலுணர வுமுஞான மென்னிடத்தி னிகழுந்தில்லை, குறைவகல முதநிநீனைக் கூடுவதைப் படியென்னக் குரவன்றனும், பொறையுடைய சயிமினியோ டென்னையுமா தீனதிருத்திப புரலுகின்றன்.

இ-ள். வேதமுதலாகிய சாஸ்திரங்கள் படித்ததினால்உண்மைப் பொருளை யறிந்து கலைஞானந்தெளிந்து எங்கும் பரிபூரணரான பரமசிவனிடத்தில் பொருந்தியும் சிவஞானமு மடியேனுக்கு விளக்கமாகத்தெரியவில்லை எக்காலமுஞ் சனனமரணாதி யவத்தைகளில்லாத சிவபரமரகசியம் பொருந்தும் வகையெப்படியென்று சயிமினிபகவான் விண்ணப்பஞ்செய்ய குருவாகிய வேதவியாசர் சாந்தமுடைய சயிமினியுடனே சூதபுராணிகரென்னு மடியேனையுந் தம்முடைய பக்கத்தில் இருக்கச்செய்து திருவுளம் பற்றுகிறார்—எ-று. (சகூ)

மைந்தநீ கேட்டவுரை பல்லுயிரின் பொருட்டன்றோர்வருதியார்க்குஞ்,சிந்தைமகி மூன்றனக்கும் வீடடையு நெறியுளது செய்யவேணி, யெந்தைதிரு வருளுடையே னுதலா லியானறியா யாவுமில்லை,முந்து சிவ ஞானமலாற் கன்மகோ டிகடருமோ முடியா முத்தி.

இ-ள். நம்முடைய பிள்ளையாகிய சயிமினியே நீ நம்மைப் பிரார்த்தித்துக்கேட்ட கேள்வி சகலசீவாத்துமாக்களையுங் கடைத்தேறச் செய்விக்கிற நிமித்தமல்லவா என்னருகில் வரக்கடவாய் மனக்களிப் போடுகூடிய உனக்கும் மற்றவர்களுக்கும் மோக்ஷமடையு மார்க்கமுண்டு அஃதெப்படியென்றால் சிவந்த சடாமகுடத்தைத் தரித்த பரமசிவன் றிருவருளை அடைந்த யானறியாத ரகசியப்பொருள்கள் ஒன்றுமில்லை நித்தியமாகியசிவபதவி சிவஞானத்தினால் கிடைக்குமே யல்லாமல் யாகமுதலிய நல்வினைகள் கோடிசெய்தாலு மேலானமோக்ஷம் கொடுக்க மாட்டாதென்று வியாசர் திருவாய் மலர்ந்தருளினார்—எ-று. (ருo)

வேதமுடி வுரைப்பதுவே மெய்ஞ்ஞான மற்றையவை மிகு மஞ்ஞான, மோதலுறு மெய்ஞ்ஞான மாவதுயிர் பரமசிவத் துற்று வாழ்த, னுதனரு ளாற்குரவ னேயத்தான் மறையந்த நாடாநின்ற,போதமுடை யவர்பெறுவ ரல்லாதோர் பெறாரெம்மாற்புகன்றதுண்மை.

இ-ள். வேதாந்தத்திற்சொல்லப்பட்ட ஞானமே மெய்ஞ்ஞானம் மற்றெல்லாம் அஞ்ஞானம் யாவராலுஞ் சொல்லப்படுகின்ற மெஞ்ஞானமாவது சீவகோடிகள் பரமசிவத்தோடு கலந்துவாழ்தலாம் அம்மெஞ்ஞானம் எப்படிகிடைக்குமென்றால் சிவானுக்கிரகத்தினாலுங் குருவின் நேசவுபதேச மகிமையினாலும் வேதமுடியினாலுரைக்கும் மெஞ்ஞானம் பெற்றவர்கள் சிவபரமயிக்கியம்பெறுவார்கள் மெஞ்ஞானமில்லாதவர்கள் சிவபரமயிக்கியம் பொருந்தமாட்டார்களென்று நம்மாலே சொல்லப்பட்ட விந்தவாக்கியம் மெய்யென்றுரைத்தார்.(ருக)

அந்தணர்க்குத் திரர்நீச ரரிவையர்சங் கரசாதி யாயினோர்க்கு,கந்திருவ ரியக்கரிமை யவருரகா முனிவர்முதற் கணத்தினோர்க்கும,

வெந்திறல்கூர் புள்விலங்கு கிரிமிகீ டங்களுக்கும் விளம்பெ வைக்கு
ஞ்,சந்திரசே கரனருளுண் டாமாகிற் சிவஞானந் தானுண் டாகும்.

இ-ள். பிராமணர்-சூத்திரர்-சண்டாளர் - பெண்களொருஜாதி புருஷரொருஜாதி இருவர்க்கும் பிறந்த சங்கிரமஜாதியானவர்கள் இவர்கள் முதலியபேருக்குங் கந்திருவர்-இயக்கர்-தேவர்கள்-நாகலோகத்தார்-முனிவர்கள் முதலிய கூட்டத்தார்களுக்குங் கொடுமையாகிய பராக்ரமமுடைய பட்சிகளுக்குஞ் சிங்கமுதலான மிருகங்களுக்கும் கெளித்தலையுடைய கிருமிகளுக்கும் ஊர்வனவாகிய புழுக்களுக்கும் சொல்லப்படுகிற வெண்பத்து நான்குநூறாயிரம் ஜீவபேதங்களுக்குஞ் ஜடாமகுடத்தில் சந்திரனையணிந்த பரமசிவன் திருவருளுண்டானற் சிவஞானந் தனக்குத்தானே யுண்டாகுமென்று வியாசர் திருவுளம்பற்றினார்—எ-று. (ருஉ)

அன்றியுமைக் கருமனந்த கோடிபிறப் பிடைக்கரும மாற்றினாலுந்,
துன்றரிது பரகதியைச் சயிமினிவ வேதாந்தச் சொற்க டேர்ந்து,நன்
றுதிகழ் பொருட்டெளிவாஞ் சிவஞானஞ் சிவனருளா னண்ணின்
முத்தி, யொன்றலெளி தாதலால் முதுணர்வா விதற்கேற்ற வுறுதி
யோர்வாய்.

இ-ள். இதுவல்லாமல் நல்வினைதீவினையினால் எண்ணிக்கையில்லாத வனேககோடி ஜனனங்களெடுத்துக கருமகாண்டத்திலுரைத்தபடிக்கு நல்வினைகள்செய்தாலும் மேன்மையையுடைய மோட்சபதவியை அடைதல் மிகவும் அருமை சயிமினிபகவானே வேதாந்தத்திலுள்ள பொருளையறிந்து அப்பொருளில்விளங்கிய சாரமான சிவஞானத்தைச் சிவகருணையினாலெளிதாகச் சிவபரமயிக்கியம் பெறலாமாகையினாலே மேலான விரிவினாற் சிவஞானத்துக்கேற்ற நிச்சயித்தை யறிந்துகொள்ளென்று வாதராயணர் திருவாய்மலர்ந்தனர்.(ருங)

இந்நிலையி னலன்றிக் கலையறிவி னன்முத்தி யெய்த லாமோ, மன்
னுமனு பவஞான மடையுநெறி வினவுதியேன் மாசொன் றில்லா,மின்
னவிருஞ் சடாடவிமா தவநாத மிகுஞ்சாம வேதந் தன்னிற், றன்னி
கரா மொருதகர வித்தையுள ததனிலைமை சாற்றற்பாற்றே.

இ-ள். இந்தச் சிவஞானத்தினாலல்லாமல் சாத்திரங்களைப்படித்த கலைஞானத்தினால் சிவபதங்கிடைக்காது. நிலைமையுடைய சிவஞானஞ் சித்திக்கும்வகை யெப்படியெனக் கேட்பாயேயானால் குற்றமற்ற மின்னல்போல விளங்குஞ் சடாமகுடமுடைய சயிமினியே கேளும் மேன்மையையுடைய ஓசைவிளங்குஞ் சாமவேதத்தில் தன

க்குத்தானே யொப்பாயிருக்கு மொருதகரவித்தையென்னும் பரம ரகசியமுண்டு அது இன்னவிதமென்றுசொல்ல வொருவர் வசமோ வென்று வேதவியாசர் திருவாய்மலர்ந்தனர்—எ-று. (௫௪)

ஒருபிரம புரந்தன்னி லுண்ணியபுண் டரிகவகத் துணர்வுக் கெய
தா, வருளிடமா கியநுண்பே ராகாய முண்டஃதே யறிஞா தம்மாற்,
கருதவிரும் புதுமதுவா கேடுவதும் புறப்பூத ககனந் தன்னின்,மரு
வியவெல் லையினுமிருந் தெஞ்ஞான்றுங் குறைவின்றி வயங்காநிற்கும்.

இ-ள். ஒப்பற்ற ஏகரூபத்தையுடைய பரப்பிரமமிருக்குந் தானமாகிய இந்த தேகத்திற்குப பிரம்புரத்திலிருக்கிற இதயார விந்தத்தினுள்ளாக வறிவினாலேயு மறிதற்கரிதான வநர்ரக சத்திக்கிடமாகிச சூக்குமாதி சூக்குமமாய்ப் பெரிதுக்கும் பெரிதான வாகாயமுண்டு அந்த ஞானாகாசமான சிவத்தையே சிவயோகிகள் தியானஞ்செய்வதற்கு விரும்பப்பட்டதும் விசாரணை பண்ணுவதுமாயிருக்கும் புறத்திலுள்ள பூதாகாசத்தின் பரமமாண்டத்திலு மதிகவிசாலமா யெக்காலத்திலுங் குறைவில்லாமற் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும்-எ-று.

விண்ணுலக மண்ணனல்கா லிரவிமதி தாரகண மீன்க ளாதி, யெண்ணுமுள திலதென்னப் படும்பொருள்க ளெத்துணைக்கு மிருப்பாமந்த, நுண்ணியவந் தரமெந்த நிறைந்தநிறந் தெவரறிவு நோக்கிக் காண, நண்ணரிதாய் மூப்பிறப்புச் சோகந்தா ரகந்தாக நண்ணு தோங்கும்.

இ-ள். தேவ உலகமாகிய ஆகாயம் - பூமி-அக்கினி-காற்று சூரியன்-சந்திரன் நட்சத்திரக்கூட்டங்கள்-மேகங்கள்-மின்னல்கள் முதலானவைகளெப்போது முண்டென்றும் இல்லையென்றுஞ் சொல்லப்பட்ட பொருள்கள் எப்போதுமிருப்பது அந்த வதிசூக்குமமாகிய ஞானாகாசமெங்கும் பரிபூரணமாய்ப் ப்ரகாசித்துக்கொண்டிருக்குமதைச் சிவயோகிகட்கன்றி ஞானக்கண்ணினாற்பார்த்து வறியத்தக்கதேயல்லாமல் மற்றவர்கள் சித்தங் குவிந்தறிதற்கு அருமையாகிக் கிழத்தன்மை-இறப்பு-துக்கம்-பசி-நீர்வேட்கை பொருந்தாமல் வளர்ச்சி பெற்றிருக்கும்—எ-று. (௫௫)

கூறியவப் பொருணியமத் ததுவும்விரும் பெதுமொரு குறைவுண்டாகா, தேறவகி லாண்டமெலா மிற்றுமிலை தனினிறுத்துந் திரமாகு, மாறிலது தனையுணர்ந்தோர் முத்தராநு பவஞான மருவிவாழும்,பேறிதெனச் சாமமறை மொழிதகர வித்தையிது பேசுங்காலே.

இ-ள். சொல்லப்பட்ட வந்தப்பொருள் நிச்சயஞ் செய்பதற்கதுவும் ஆசிப்பதுவு மொருகுறைவு மில்லாமலும் தேறுதலையாகப

பார்க்குமிடத்தில் ப்ரம்மாண்டங்களையெல்லாம் நிலையாகநிறுத்துவத
ற்குத் துறையாயிருக்கும் மாறுபடாத அந்த சிதாகாசத்தை யறிந்த
வர்களே பேரின்பம்பெற்றவர்கள் சிவாநுபவ ஞானம்பொருந்தி பர
மசுகமடைவிக்கும் வாழ்வு இதுவென்று சாமவேதத்திற்சொல்லப்ப
ட்ட தகரவித்தை யிதுவென்று வேதவியாசர் திருவுளம்பற்றினர்.()

மலைவகல வுணர்தாவு மரியதெனச் சயிமினியும் வணங்கி ஞானத்
தலைவதிக முருந்தகர வித்தைதனை நன்குபெறத் தக்க வன்பா
லலைவகல வுரைத்திடவும புன்மதியே னதலினடிய னேற்கந்
நிலைமைதனிலியலபறிவி னிடைசந்தேகந் தெளிவுபெற நிகழ்ந்ததில்லை.

இ-ள். சந்தேகந்தீர அறிவித்தாலுந் தெரிந்துக்கொள்ளுகிற தரி
தென்று வியாசரசொன்னபோது சயிமினியும் பயந்து வணங்கிச் சிவ
ஞானநாயகனே பரகாசிக்கின்ற வந்தமேலான தகரவித்தையை அடி
யேன் பரமசுகம் பெறத்தக்கதாக வென்மேல கருணைவைத்து தேவ
ரீர் திருவாயமலாந்து சந்தேகந்தீர அருளிசசெயததும அறபபுததியை
யுடையவனாகையினால் அந்த சிதாகாசத்தின்குறிபபு இன்னதென்று
வென்னினைவில் சற்றேனுந் தெளிவுறத் தெரியவில்லையென்று விண்
ணப்பஞ்செய்தார்—எ-று. (௫அ)

புகலரிய பிரமபுர மப்பிரம புரந்தன்னிற் புண்டரிக
வகமதத்துணுண்ணரியபே ராகாயமெனவருளா லுறையாநின்ற | தான்
நிகழ்வுறுமிவ் விவற்றியல்பு தெளிவுறவே செப்புகெனச் சென்னிதாழ்த்
முகமலர வகமலர வாதரா யணனவிரித்து மொழிவதானான்.

இ-ள். சொல்லுதற்கரிய பிரமபுரமென்றும் அந்தப் பிரமபுரத்தி
லிதையதாமரையி லஞ்ஞானத்தைப்போக்கிச் சூட்சுமமாயப் பெரி
தான வாசகமுண்டென்றும அடியேன்மேலருளினாலே திருவுளம்ப
ற்றியும் அடியேனுக்குத தெரிந்ததில்லை ப்ரகாசம்பொருந்திய வந்த
தகரவித்தையின் இலட்சணமின்னும் விரிவாக வடியேன் தெளிவுபெ
றச் சொல்லவேண்டுமென்று சயிமினிபகவான் வணங்கிக்கேட்க முக
மலர்ந்து சயிமினி மனமானது களிப்புற விரிவாக வேதவியாசர் சொ
ல்லுகின்றார்—எ-று. (௫௯)

புரிகரணந் தனைக்கடந்து நிற்றலாற் சொற்றகைய புவனத் தியார்
க்குந், தெரிவரிதா யுண்மையாய்ச் சித்தாயா னந்தமாய்த் திரியா தோ
ங்கற், குரியபரி பூரணமா யிருக்கின்ற பரம்பிரம முள்ளே காணும,
பெரியநலத் தாலிந்த வுடல்பிரம புரமெனப்பேர் பெற்ற தம்மா.

இ-ள். மனமுதலான வந்தக்கரண நான்கினுடைய தொழிலைக்
கடந்து நிற்கிறபடியினால் கேள்வியுடைய வுலகத்தார்களுக்கெல்லா

மறிதற்கரிதாகி நிச்சயமாய்ச் சித்தாகி யானந்தமயமாகி விகாரப்படா மல் வளர்ச்சிக்குரித்தா யெங்கும் பரிபூரணமாய் நிறைந்திருக்கும் பரப்ரம்ம சிவயோகிக ளுள்ளத்துக்குள்ளே காணப்பட்ட மிருந்த தன்மையினால் இந்ததேகம் பிரமபுரமென்று நாமகரணம்பெற்றது விந்தபுதுமையை யென்னென்றுரைப்பேனென்றார் வாதராயணர்.()

சொற்றவுடற் கமலநிக ருள்ளக்கமலம் பிரமமுறை தொன்மை தன் னு, னற்றகைய புண்டரிக வகமாயிற் றந்தவக நண்ண லாலுான், பற் றுடலம் புரமெனப்பேர் படைத்ததுபுண் டரிகவகம் பற்றி நித்தம், பெற்றபிர மங்ககன வுவமையாற் ககனமெனப் பேசிற் றுமால்.

இ-ள். தாமரைபோல் இருக்கிறதென்று சொல்லப்பட்ட இத யாரவிந்தத்தில் பரப்பிரமம் எப்போது நிலையுற் றிருக்கின்றபடியினால் அந்த இதையதாமரைக்குப் புண்டரீகபுரமென்றும் பெயராயிற்று அப் புண்டரீகத்தில் பரப்பிரமம் வாசமாயிருப்பதினால் புண்டரீகபுரமென்று உடலுக்குப் பெயராயிற்று நிட்கள சொரூபமானதினால் கண் ணினாற்பார்க்கவும், வாக்காற்றுதிக்கவும்,மனத்தானினைக்கவும், அரிய பொருளாதலாற் சுத்தவெளியாகிய வாகாயம்போல் இருப்பதா லப் பரப்பிரமத்தைச் சிதாகாசமென்று நுவலுவது—எ-று. (கூக)

தனைநிகராம் பேரருளே மூப்பிறுதி முதற்குணங்க டயங்கு மென் னு,நினைவொடுநீ பல்காலும் பாவித்தா லனுபவத்தி னிலைவருதெயது, மனையதென வருந்தகர வித்தையிது காயம்போ லண்டத் துள்ளு, மினையமுறை மையினிற்குங் காயத்தின் பரிசுனக்கிங் கிசைத்தோ மி ப்பால்.

இ-ள். தன்னைப்போல் இன்னமொரு பொருளுண்டென்றுஞ் சொல்லப்படாததா யநுக்ரகசொரூபமாய்விளங்கும் கிழத்தன்மை யும் இறந்துபோவதும் இதுமுதலிய மாயையின்குணங்கள சார்புற் றிருந்தாலுந் தியானத்துடனே நீ எந்நேரமுந் தியானஞ்செய்வாயேற் சிவயோகசமாதிகைகூடும்அப்படிப்பட்டதென்றுசொல்லப்படுந தக ரவித்தை இந்நேரஞ்சொன்னது பிண்டத்திலுள்ளபடி ப்ரம்மாண்ட த்திலும் இப்படியேயிருக்கும் இப்போது பிண்டத்திலிருக்குந் தகர வித்தையைச் சயிமினிபகவானே யுமக்கு யாம் போதித்தோம் இனி மேல் ப்ரம்மாண்டத்தி லிருப்பவையைச் சொல்லத் தொடங்குகிறோ மென்றார் வேதவியாசர்—எ-று. (கூஉ)

அண்டமதிற் பாவிக்கு முறைமைகே ளண்டமருள் பிரமற் கண் டம்,வண்டகைய வடிவதனாற் பிரமபுர மவ்வண்ட வடிவினோர்க்குக்,

கொண்டவுளப் புண்டரிகம் புலியூரொன் றருமறைகள்கூறலாலே,வெ
ண்டருபுண டரிகவக மெனப்படுமப் பதியின்னு மிசைப்பக்கேட்டி.

இ-ள். பிரம்மாண்டத்திலிருக்குந் தகரவித்தையைத் தியானஞ் செயயும்விதஞ் சொல்லுகிறோமகேளும ப்ரமாண்டங்களையெல்லாம் லீலாவிநோதமாக நினைத்தமாத்திரத்தில் உணடாக்கிய பரப்பிரம்மம் பரிபூரணமான வஸ்துவாகையினால் ப்ரமாணடத்துள்ளுஞ் சிதாகாசமயமா யுள்ளேயிருப்பதாற் பரமமாணடத்துக்குப்பிரமபுரமென்று ம்பெயர் அநத ப்ரமமாணட சொரூபமான விராட்புருடனுக்கு இதயதாமரையாகையினால் புண்டரீகபுரமென்றுஞ் சிதமபரத்துககுப் பெயா. வியாக்கிரமபாதா வாசமாயிருநது பூசிககினறமையாற புலியூரொனறுஞ் சிதம்பரமென வேதங்களெல்லாமுறையிடுந் தன்மையாற புண்டரீகபுரமென்றுஞ் சொல்லப்பட்டது இஃதன்றி அகதலததின மகிமையை இன்னஞ் சொல்லுகிறோமென்று வாதராயணா திருவுளம பற்றுகிறாா—எ-று. (௬௫)

அப்பெருஞ்சிற் றம்பலத்து ளானந்தத் தாண்டவஞ்செய் கின்றொடாகின்ற,
மெய்ப்பொருளே நுண்ணியவந தரமலின மடையாளம் விகார மின்றி, யொப்பிகந்து நிறைந்திருக்கு மம்பரத்தோ டென்மிகவு முவமை யெயது, மிப்பரிசா னுணணியவா காயமென வேதமெலா மிசையா நிற்கும.

இ-ள் அப்பெருமைகொண்ட ஞானசபையினிடத்தில் ஆனநத நிர்த்தஞ்செய்யும் நிதயவஸ்துவானது மாயையின் சமபநதமும அழுக்கும மாறுபாடும் ஆகிய இககுணங குறிகளில்லாததாகியுமருககும சொருபமாகியும் ஞானாகாசமயமாயும் உபமானமில்லாத பரிபூரணத்துக் கொப்பாகியும இருககின்ற இநததன்மையினால் சுத்தவெளியான ஆகாயத்தையொத்திருக்குமெனறு நானகு வேதஙகளும சொல்லும—எ-று. (௬௬)

பூதவா காயம்போற் சடமாகா தருட்சிததாயப் பொலித லாலே,
யோதருமம பரமான சபாபதியைச சிதமபரமென் றுணாந்ததந்தத்,
தீதகனற சிதம்பரமெந நாளுமில காகிறகுஞ் செயலா லென்று,மேத மிலாப் பதியதற்குஞ் சிதம்பரமென றருணும மெய்திற் றுமால்.

இ-ள். பஞ்சபூகத்தி லொன்றாகி சடரூபமாயிருக்கிற ஆகாயத்தைப்போலிருக்குமென்று உறுதியாயதைச சொல்லலாகாது அருளுருவாயும் ஞானமயமாயும எப்போதும பிரகாசிததுக் கொணடு சிவயோகிகள அறிவினால் காணப்படும பொருளாகிய ஞானசொரூபமான சபாபதியை ஞானாகாசமெனவே சொலலப்பட்டது தீதுகளையக

ற்றிய பரமசிவன் எப்போதுஞ் சிதம்பரசொரூபமாய் ஆனந்தத்தா ண்டவஞ் செய்யுஞ்செயலினால் எந்நாளுங் குற்றமற்ற அத்தலத்திற் குச் சிதம்பரமென்று பெயர்கிடைத்தது—எ-று. (௩௫)

திகழ்ந்தவருட் சிதம்பரமாந் திருச்சிற்றம் பலத்துறையுந் தேவன் றாலே, புகழ்ந்திடவுந் தியானத்திற் புணர்ந்திடவும் பணிந்திடவும் பூ சை செய்து, மகிழ்ந்திடவும் பெறக்கடவ னிப்படிநீ நடத்தியேன் ம லமா யாதி, யகழ்ந்தரிய பரஞான வெளிவீட்டி லடைவதற்கோரைய முண்டோ.

இ-ள். அநுக்ரகசொரூபமாய் ப்ரகாசிக்கு ஞானாகாச மயமாகிய ஞானசபையினிடத்திலே எப்போது மானந்தநடனஞ் செய்துக்கொ ண்டிருக்கும் அம்பலவாணமூர்த்தி தோத்திரஞ்செய்யவு மனதிலே பாவனைசெய்து ஏகரூபமாய்வணங்கவும் பதினாறுவித வுபசாரத்துட னே பூசனைபுரிந்து சந்தோஷிக்கவும் தன்னை எதிர்ப்படுத்துவன்நீஇவ் வகை நடப்பாயேல் ஆணவாதி மாயை கருமங்களென்னு மும்மலங் களையும் அம்மாயையினது மயக்கத்தையும் போக்கி மேலாகியமெஞ் ஞானாகாசமாம் மோட்சத்தைச் சேருவதற்குச் சந்தேகமில்லையென் று வேதவியாசர் சயிமினிக்குரைத்தார்—எ-று. (௩௬)

அத்தலனி லுறையுமெவ ருந்தகர வித்தைதனை யறிந்துவந்தித்,து த்தமகன் னெறியடைந்தோ ராவரிது நிச்சயமிவ் வுடலம்பெற்ற, மெ ய்த்தகைய பயன்பெறுவோர் யாவோரும் பணிந்திறைஞ்சுமேன்மை யோர்க, ணித்தமுறு நலமுடையோ ரவர்பெருமை யெவராலு நிகழ் த்த லாமோ.

இ-ள். அந்தச் சிதம்பரதலத்தி லமர்ந்திருந்து தகராகாசத்தினு டைய மஹாமகிமையைத் தெரிந்து தரிசனஞ்செய்தும், பணிந்தும், பூசைசெய்தும, தோத்திரம் பண்ணுபவர்களே மேன்மைபொருந்திய நன்மார்க்கத்தை யடைந்து நன்மையான சிவபதவியையும் மானிட ஜென்ம மெடுத்ததனா லுண்டாகிய பயனையு மடைந்தவர்கள் இவர் களே ஜனனமரணத்தி லவதிப்படாமற் பரமானந்தத்தைப் பெற்று தேவாதி ஜீவகோடிகளும்பணிந் தேத்தத்தக்க வுத்தமர்களாய் என் றைக்கு மழிவில்லாத பரமசுகத்தைப் பெற்றவர்கள் இவர்களது மகிமையை யொருவராலுஞ் சொல்லுதற்கரிதாம் இதுநிச்சயம்-எ-று.

தக்கவுட லண்டத்தி னிருவகையாய் விளங்குமெனச் சாமவேத,மி க்கபரி சாலுரைத்த வருந்தகர வித்தைதனை விளம்பினோ மாற்,றொக் குடைய காத்திரத்திற் பாவிக்க வரிதெவர்க்குந் துளங்க முத்தி,புக்கு றுதி பெறவண்டத் தருந்தகர வித்தைதனைப் போற்றிக் காண்பாய்.

இ-ள். தேகமான பிண்டத்திலும் ஞானகாசம்போன்றதகரவித்தையென்னும் விராட்புருடன்வடிவம் ப்ரம்மாண்டத்திலும்அவையிருக்கின்ற விதத்தைச் சாமவேதத்திற் சொல்லியதுபோல உனக்குச் சொன்னோம் தேகத்திலிருக்கும் தகரகாசமான சிதம்பரத்தைக்குருவுபதேசத்தினாலுந் தத்த மனுபவத்தினாலுந் துதித்துங் கண்ணாற்கண்டும் நித்தியமான மோட்சத்தைப் பெறுவார்கள் அதையுங்காண்பாய்—எ-று. (௩அ)

அத்தகர வித்தையென விங்குரையா நின்றது நுண் ணறிவாமென்று, முத்தலைவேற் கைத்தலத்து முக்கணரு ளானந்த முதல்வனென்றுஞ், சித்தவையின் ஞானநா டகங்கண்டால் பேறென்றுந் தேறுவன்பால், வித்தகமா யுரைத்தனம்யா மிவ்வளவோ வின்னமுநீ விளம்பக் கேண்மோ.

இ-ள். நா முன்சொன்ன தகரவித்தையான ஞானகாசமகிமையை யுன்னுடைய சூக்குமவறிவினாலேயெண்ணிப்பார் சூலபாணியாம்சோமசூரியாக்கினிக் கண்களையுடைய ஆதிகர்த்தாவுமான பரமசிவத்தினது அநுக்ரகத்தினால் பஞ்சகிர்த்தியங்களும்நடக்கத்தக்கதாகத் திருவருட்கொண்டு ஞானசபையிடத்தி லெப்போதும் ஆனந்தநடனஞ்செய்யும் விநோதத்தைத் தரிசனைசெய்யும் பாக்கியமேமேலான பாக்கியமென்று துணிவுபெற்று சிவபக்தியின் உண்மையினாலே உனக்கு விஸ்தாரமாக வுபதேசஞ்செய்தோம் இதன்மகிமை இவ்வளவு தானென்றெண்ணாதே இன்னமு மதின்மகிமையைச் சொல்லுகிறோம் சாவதானமாகக்கேள—எ-று. (௩௯)

விற்கதுவும் விராட்புருடன் மனப்புண்ட ரீகத்து விழிகண் மூன்று, மற்களமு மிலகவுமை காணநிலை யாய்நிலைய மடைந்தவானைச், சிற்கனமா யானந்தத் திறமான தலைவனைமுன் சென்றுகண்டோர், நற்கதியோ ரெனக்கைவல் லியமறையன் பான்முனிவ நவிற்றல் காண்டி.

இ-ள். பிரகாசம்பொருந்திய விராட்புருடரானவர் இதயதாமரையில் மூன்றுகண்களுமநீலகண்டமுதலிய திருவுருவமும் விளங்குவதைச் சிவகாமசவுந்தரியம்பாள் கண்டு மகிழ்ச்சிநீங்காம லெப்போதும் ஞானசபைக்குள்ளாக ஞானகாசமாகியுமஞானம்பொழியுமேகமாகியும் ஆனந்தநடனம்புரியும் ஆத்மநாயகனை சந்நிதானத்துக்கெதிரேவந்து தரிசனஞ்செய்தவர்கள் மேலான சிவகதியைப்பெற்றவர்களென்று வேதத்தின்சிரமான கைவல்லிய உபநிடதஞ்சொல்லுகின்ற விபரத்தைச் சயிமினியே நீபக்தியுடனே பார்த்துக்கொள்—எ-று.()

ஏதமிலாக் கடவுளர்க ளெல்லோர்க்குங் காரணமா யிருப்போனந்தச், சீதமா லுக்கப்பா லாயினோன் மலர்த்தவிசிற் சிறந்தவேத, மாதவனைப் படைத்தருள்வோன் யாதொருவன் மலமாயை கரும நீக்கிச், சாதல்பிறப் பிவையொழிக்குஞ் சிவஞானம் யாவோர்க்குந் தருவோனென்றும்.

இ-ள். குற்றமற்ற சகலதேவர்களுக்குங் காரணரூபமாயிருப்பவனும் இலட்சுமியை மார்பிலேதரித்திருக்கும் மாயவனுக்கு மேலாயிருப்பவனும் தாமரைமலரின் மீதிருந்து நான்குவேதங்களையும்நான்குமுகங்களினாலுந் தோத்திரஞ்செய்யும் மகாதவ வாய்மையையுடைய பிரமனைப்படைத்துச் சிருட்டித்தொழிலை யநுக்ரகஞ்செய்யப்பட்டவனெவனோ வவன் ஆணவமுதலிய மலமாயைக் கன்மங்களைப்போக்கிப் பிறப்பிறப்புகளை யகற்றுஞ் சிவஞானத்தை யனைவருக்குமெளிதிற் கொடுப்பவன்—எ-று. (௭௧)

உருத்தெரியா மலமிகந்து காத்திரத்து ளருளகமா யொளியா நின்ற, திருத்தகுமெய்ம் மனக்கமலத் துட்பொலியு நுட்ககனஞ் சிறந்திலங்கும், வருத்தமுறும் பிறப்பிறப்பு மாமாயை கருமமும்போயமருங்கு சாய, வருத்தியுடன் யாவோரு நாடோறும வழிப்படுவ ததுவேயென்றும்.

இ-ள். ஆணவாதி மும்மலங்களின் ரூபமில்லாமற்போக்கி கிருபைக்கடலாய் ப்ரகாசியாநின்றஇலக்குமி கடாக்ஷமுற்றபுண்ணியதேகிகளினிதையாரவிந்தத்துள் வளராநின்ற சூக்ஷும ரூபமான ஞானாகாசமிகுதியும் விளங்கியிருக்குந் துன்பங்களைத்தருஞ்ஜனனமரணங்களும் மஹாமாயைத்தொழிலான வினைகளும் பற்றறும் பொருட்டாக ஆசையுடனே எப்போதும் யாவருந்தொழுது தியானஞ்செயயப்படுவது அந்த ஞானாகாசமே யென்றறிவாய்—எ-று. (௭௨)

அருமறைகண்முதலிடை வினின்முடிவி னறைவதுருத்திரனையென்று, மொருமைதிக ழுண்மையறி வானந்த மேயுருமா பொப்பிலாத, மருவருமவ் வுருத்திரனே யிதையகம லந்தன்னில் வந்தித்தேத்தும், பொருவருஞா னகாய மென்றுமிய லியசுமறை புகன்ற தன்றே.

இ-ள். அரிதான நான்குவேதங்களின் முதலிலும் நடுவிலும்முடிவிலும் பரமசிவனைச்சொல்லப்படுவதும் எப்போதுந்தானொருவனுகப்பிரகாசித்துக்கொண்டு நிச்சயமாகிய ஞானானந்தவடிவமாய்உவமையில்லாததாய் விஷ்ணுவினாலும் பிரமனாலுங் காணபதற்கரிதான அந்த மஹாதேவனே விராட்புருடனுடைய இதயதாமரையில் விளங்கி

யாவரும்வணங்கித் தோத்திரஞ்செய்யும் நிகரற்ற ஞானாகாசமான சிதம்பரமென்று யஜுர்வேதஞ் சொல்லப்படுகின்றது—எ-று. (௭௩)

மற்றுமுள பலமறையி னிப்பரிசு வருமிடங்கண் மதியான்மிக்கோ, யுற்றபொரு ளிப்படியே கோடிசிதம் பரப்பெருமை யுணர்ந்துசென்று, முற்றரிய காதலுடன் சிற்சபையி னற்புயங்க முயங்குகூத்தன், நற்றகதி ருதயநிகர் பதமலர்கண் டருண்முத்திச் சூழல்சேர்வாய்.

இ-ள். மிகுந்த புத்தி கோசரமுள்ள சயிமினியே இன்னுமுள்ள வேதங்களும் உண்மையானபொருளின்னதென்று முறையிடும்வஸ்து இப்படிப்பட்டதென்று மனத்திலெண்ணிச் சென்று சிதம்பரத்தினது அளவில்லாத மஹாமகிமையையறிந்து அளவில்லாத ஆவலுடனே திருச்சிற்றம்பலத்தில் நல்லசர்ப்பம் படம்விரித்தாடுவதுபோல் ஆனந்தத்தாண்டவஞ் செய்துகொண்டிருக்கும் நடராஜமூர்த்தியினது கோடிசூரியப்பிரகாசம்போன்ற சிவந்த பாதாரவிந்தங்களைத் தரிசித்துத் தோத்திரஞ்செய்து நற்கதியடைவாய—எ-று. (௭௪)

சுடர்பரவு விராட்புருட னுளக்கமல மாகியவத் தொல்லைத் தில்லை, யிடமதனு ளருவுருவச் சிற்சபையிற் சிறந்தகன மெவருமுய்ய, நடமருவு திருவுருவோ டெதிர்நின்று கண்டோர்க்கு நாடறகொணாத், தடமருவு பரமுத்தி தருமென்று லந்தலத்திற் றலங்கள் யாதோ.

இ-ள். எங்கும் பிரகாசியாநின்ற விராட்புருட னிதயாரவிந்தமான பழமையாகிய தில்லைவனத்தில அநுக்ரகசத்தி சொரூபமான திருச்சிற்றம்பலத்தில் யாவரு மீடேற ஞானாகாசசொரூபமாய ஆனந்தத்தாண்டவத் திருக்கோலங்கொண்ட அம்பலவாணமூர்த்தி சந்நிதானத்துக்கெதிர்நின்று தரிசனஞ்செய்தவர்களுக்கு இயாவராலுங் காணுதற்கரிய உயர்வான சிவபதங்கிடைக்குமென்றால அந்தச் சிதம்பரத்தலத்தினுக்கு நிகராக எந்தத்தலத்தை உவமித்துச்சொல்லலாம்—எ-று. (௭௫)

சித்தநெறி திரியாத சயிமினிவ யாமுரைத்த திறங்க ளெல்லாஞ், சத்தியமே யையமிலை வாழியெனப் பேரருளாற் சாற்றி னானல், வித்தகநல் லறிதவனு ளளவிலா வேதங்கள் விளங்கக் கிட்டா, முத்திநெறி யாவோரு மடையவவ தாரஞ்செய் முனிவர் கோமான்.

இ-ள். மனஞ்சென்றநெறியே செல்லாது நன்மார்க்கத்தையனுசரித்த சயிமினியே நாம் இப்போது சொல்லியவைகளெல்லாம உண்மையென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை இது சத்தியம் நாமுபதேசஞ்செய்தபடி தியானஞ்செய்துகொண்டு சென்று சிதம்பரத்தலத்தைத் தரிசித்து சுகமாய் வாழ்ந்துக்கொண்டிருவென்று ஆசீர்வதித்தார யட்டில்லாத வேதங்களினாலு மளவிடப்படாமற பா

காசிக்கும் மோக்ஷசாம்பராச்சியத்தை யாவருமடையச் செய்விக்கும் பொருட்டாக வேதாகமங்களுணர்ந்து சிவஞானமே திருவுருக்கொண்டெழுந்த வியாசமுநிவர் மிகுந்த கருணையினாலே திருவுளம்பற்றினாரென்று சூதபுராணிகர் நைமிசாரண்யவாசிகளுக்குரைத்தார்.(எசு)

மான்மியச்சருக்கம் - முற்றிற்று.

---

பாயிரம் உட்பட சருக்கம் இரண்டிற்கு திருவிருத்தம் - கூசு.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது

# துன்மதச்சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மதம்பரவை யெனப்பெருக வருகரடக் கரியுரித்த வள்ளலே யிச்சிதம்பரமென் றறியுநெறி சயிமினிக்கு முனியுரைத்த திறத்தி னன்னேன், பதம்பரவி யறிந்தவா றுரைத்திப்பாற் றுன்மதன்றன் பழநூல் வேத, விதம்பரமென் றுரைமன்றிற் றாள்கண்டு வீடுற்ற விளக்கஞ் சொல்வாம்.

இ-ள். சமுத்திரம்போல் மும்மதத்தாரை பொங்கிவருங் கபோலத்தையுடைய கஜமுகாசூரனையுரித்துப் போர்வையாய்த்தரித்த தேகத்தையுடைய பரமசிவனே இச சிதம்பரமென்று அறியும் மார்க்கத்தை வேதவியாசர் சயிமினிபகவானுக்குத் திருவுளம்பற்றினதுபோல் அவரது பாதபத்மங்களைப்பணிந்து யான் தெரிந்தமட்டுஞ்சொன்னேனென்று சூதபுராணிகர் நைமிசாரண்யவாசிகளாகிய செளனகாதிமுநிவர்களுக்குச் சொல்லிப் பின்னர் ஆதியான வேதங்களிற்றுதிக்கப்பட்ட பராபரவஸ்துவாகிய அம்பலவாணமூர்த்தி திருச்சிற்றம்பலத்தி லானந்தநடனம்புரியுஞ் சாணம்புயத்தை தரிசனஞ்செய்து துன்மதன் சிவபதவியடைந்த விவரத்தையுஞ் சொல்லுகிறோம் கேளுங்களென்று சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினார்—எ-று. (க)

குருபரனங் குரைத்தமொழி யமுதுசெவி நாவாகக் குலவு மன்பாற், பருகுசயி மினியொடுக்கத் துடனிறைஞ்சி மிகுங்கருணைப் பகவமுக்கீ, தருமரிய விருந்தகா வித்தையருள் செய்தனையென் றனக்

கோரைய, மருவியது தெளியவுரைத் தருள்புரிதி யெனமிகவும் வருந்திச் சொல்வான்.

இ-ள். ஞானகுருவாகிய வேதவியாசருரையென்னுந் தேவாமிர்தத்தைக் காதென்னும் நாவினாலே மிகுந்த பத்தியினையத்துடனே பானஞ்செய்யுஞ் சயிமினிபகவான் வணக்கத்துடனே தெண்டனிட்டு மிகுந்த வருளையுடைய ஆசாரியரே மோட்சத்தைக்கொடுக்கு மேலான தகரவித்தையை யுபதேசஞ்செய்தீர் அவற்றிலோர் சந்தேகம் அடியேனுக்குப் புலப்பட்டமையா லச் சந்தேகத்தைநீக்கி யருளவேண்டுமென்று தோத்திரஞ்செய்தார்—எ-று. (உ)

அடைவுபெறு மறைப்பொருண்முன் பின்கூட்டி யாராய்ந்த வளவிலிந்த, வுடலினுறப் பெறுந்தகர வித்தையொழிந் தண்டத்தி னுள்ளதாகத், திடமருவ வென்னிதயத் துதித்ததிலை யென்னறிவு தெளியும் வண்ணஞ், சடைமவுலி முனிவேந்த வருளென்றான் மெய்ம்முனியுஞ் சாற்றுகின்றான்.

இ-ள். நன்றாகவே தங்களின்பொருளை யாதியோடந்தமாகச் சோதித்தபோது இத்தேகமென்னும் பிண்டத்திற் பெரிதான தகராகாச மிருக்குதென்று சொல்லி இப்படியே பிரம்மாண்டத்தினு மிருக்குதென்றுரைத்தீர் அஃதென் னறிவுக்கெட்டாமையாற் சடைமுடி புனைந்த முனிவர்கட்கரசே என்னறிவிற்குப் புலப்படும்படியாய் பிரம்மாண்டத்திலிருக்குந் தகரவித்தையைத்தெரிவித் தருளவேண்டுமென்று சயிமினிகேட்க வேதவியாசர் சொல்லலுற்றனர்—எ-று. (௩)

நந்துமறைப் பொருளாய்ந்த மிகப்பெரியோய் வினவியது நன்றுசால, மந்தணமீ தாயினுநீ யென்பாலன் பினையதனான் மகிழ்ந்து கேட்டி, யநதமிலை வேதங்கட் கவற்றினுறும் பொருடெரியா வளவிலாத, விந்தவகை தெரிந்துவிரித் தனர்தவத்தி னுயர்ந்தருளை யெய்தினோர்கள்.

இ-ள். ஞானநீதியாகிய் வேதத்தின்பொருளைச் சோதித்துப் பெருமைபெற்ற சைமினியே நீ நம்மைக்கேட்ட வுத்தர மிகவும்நன்று அவை இரகசியப்பொருளாயிருப்பினும் நீ என்னிடத்தில் மிகுந்த பத்தியுடையவனாதலால் அதையும் விவரமாகச் சொல்லுகிறேன்கேள் முடிவில்லாத அனேக வேதங்களின்பொருள் இன்னதென்றுணர்ந் தளவிடப்படாத வித் தகரவித்தையின்விவர மின்னதென்றறிந்த தபோதனர்க ளனுபவானந்தமடைந்து பேறுபெற்றவர்கள்—எ-று. (௪)

அண்டமுட லவைதனக்கங் கதுபொதுவென் றருமறைக ளறையா நிற்கும், கொண்டவுட லகத்துளதென் றியாவோரும் வெளிப்படையாக் கூறுகிற்ப, ரெண்டருமண் டத்தினது மறைந்தபொரு ளா

யிருப்ப தியாதோ வென்னில், விண்டலரா மிமையோர்கண் மறைந் தபொருண மேல்விருப்ப மேவ லாலே.

இ-ள். அண்டத்தினும் பிண்டத்தினுந் தகராகாசபிண்டத் தற் றபடிக்கு ப்ரம்மாண்டத்திலு முண்டெனறு அரிதான வேதங்களிற் சொல்லியதுபோல் பிண்டத்திலிருக்குந் தகரவித்தையை யநுபவ ஞானிகள் சிவயோகத்திலறிந்து யாவருக்கு மெளிதிற்றோன்றப புக லுவார்கள் அறிதற்கரிய ப்ரம்மாண்டத்திலிருக்குந தகரவித்தையில் மறைந்தபொருள் யாதென்னில் இனிமேல் விகசிக்கபபடும் பக்குவ மானவரும பிண்டத்திலே யாவர்களும் விருப்பங்கொள்வதுபோல வும் தேவர்கட்குங் கண்ணினாற்காணப் புலப்படாமல் மறைவாயிரு க்கிற வஸ்துவினிடத்திலே ஆசைகொண்டிருப்பதால் அந்தப் பிரம மாண்டததிலிருக்குந் தகரவித்தை ஞானக்கண்ணினாற் காண்பதா யிருக்கும்—எ-று. (ரு)

மன்னியவண டத்தினிடை யருட்டகர வித்தைபது மபக்குமா யை.தன்னியல்பான் மறைக்கப்பட் டியாகாதி கருமங்க டவங்க ளோ ங்கு, நன்னியமு முடையோர்க்குந் தெரிவரிய தரவுமதி நதியம பூத த, பொன்னவிர்செஞ் சடையண்ண லருளுடையோ ருணர்நதின்பப் புணரிசேர்வார்.

இ-ள். நிலைமையான ப்ரம்மாண்டத்தினிடத்திலே யநுக்ரகரூப மான தகரவித்தை யாவரையுமயக்கு மாயாசம்பநதமானதால் யாவ ருக்கும் புலப்படாமல் மறைந்து யாகாதிமுதலிய தானதருமங்கள் தவங்கள்செய்யும் நன்மையான நியமமுடையவாகட்கு மறிதற்கரிதா கும் சர்ப்பத்தையுஞ் சந்திரனையுங் கஙகாநதியையுந் தரிததுப் பொ ன்போலிலகுஞ் ஜடாமகுடத்தையுடைய பரமசிவனது அருட்பெற்ற வர்கள் விராட்புருட னிதையாரவிந்தத்திலிருக்குந தகராகாசத்தை யறிந்து ஆனந்தக்கடலுள் மூழ்குவார்கள்—எ-று. (சு)

பரப்பிரமம் பரமசிவம் பரமபதம் பரமுத்தி பகரு மின்ன, வரம் பில்பெயர் புனைந்துசுராட் புருடனுளப் புண்டரிக மலரி லென்றுந, திரந்திகழ்மெயஞ் ஞானவரு ளிடங்கொண்ட சிதம்பரமே செநதீ நா கங்,கரம்பயில நடமருவு கடவுளென மறைகளெலாங் கழறுமன்றே.

இ-ள். விராட்புருட னிதயாரவிந்தமான திருச்சிற்றம்பலத்தி லெப்போதும ஞானசத்தி வாமபாகத்தில்விளங்க ஆனநதசித்தம்பு ரியுஞ் சிதமபரமே பரப்பிரமமென்றும் பரமசிவமென்றும் பரமபத மென்றும பரமுத்தியென்றும் அளவிடுதற்கரிய பல பெயர்களைப்பெ ற்று அக்கினியையும் சர்ப்பத்தையும் கரத்திற்புனைந்து தாண்டவஞ் செய்யும் மஹாதேவனென்று வேதமனைத்து முறையிடும்—எ-று. ()

படர்கின்ற தடுமென்று மான்முதலோ ரபயமெனப் பரவைதந்த,
விடமுண்ட வொருபெரிய கடவுடிரு வருள்புரியும் விளக்கத்தாலே,
யடரண்ட முறுதகர வித்தையது நுண்ணியபே ரறிவிற் கென்றுமி
டமிந்த வானந்த கனகசபை யெனவுணர்ந்தே னின்பங் கூர.

இ-ள். திருப்பாற்கடலிற்பிறந்து உலகமெல்லாஞ்சங்கரிக்கின்ற வரும் ஆலகாலவிடத்தைக்கண்டு விஷ்ணுமுதலிய தேவர்களும் தங்களைக் கொல்லுமென்றஞ்சி சிவபெருமானைச் சரணாகதியென் றடைந்தபோது அவ்விடத்தைப் பானம்பண்ணி ஜகமனைத்தையும் ரக்ஷித்த மஹாதேவனே ப்ரம்மாண்டத்திலிருக்குந் தகரவித்தையென்றும் சூக்குமபுத்தியாகிய ஞானத்துக் கிடமாயிருப்பது இந்த ஆனந்தக் கனகசபையென்றுஞ் சந்தோஷமாகவறிந்தேன் சுவாமீயென்றார் வாதராயணர்—எ-று. (அ)

நித்தமுடன் சுத்தமுறு மானந்த வம்பலத்து ணிருத்தஞ்செய்யுஞ்,
சித்துருவ வித்துருமச் சடையாளன் பதங்கண்ணாற் றிளைக்கப் பெ
ற்ற, வெத்தகைய வுயிரேனு முத்தியடைந் திடுமைய மின்று விச்
சொற், சத்தியமீ துத்தமநீ தேறுதியென் றனன்பின்னுஞ் சாற்றுகி
ன்றான்.

இ-ள். எந்தவேளையினும் பரிசுத்தமாயிருக்கும் ஆனந்தகரமான திருச்சிற்றம்பலத்தின்கண் ஞானரூபமாக ஆனந்தநடனம்புரியும்பவழம்போன்ற சடையையுடைய அம்பலவாணமூர்த்தியினது பாதாம்புயங்களைக் கண்ணினாற்கண்டு தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்ற எவ்வித ரூபத்தையுடைய ஜீவஜெந்துவானாலும் சிவபதவியையடையும் இதற்குச் சந்தேகமில்லை இம்மொழி சத்தியம் முநிவர்களுக்கெல்லா மேன்மைபொருந்திய சயிமினியேயென்று பின்னுஞ் சொல்லுகின்றார்—எ-று. (௯)

உருவருவங் கடந்ததிரு வுருவுடைய பரம்பரனை யுச்சிநெற்றி,யிரு
புருவ நடுச்செவிகண் களமார்ப மிதயமுட னுந்தி கொப்பூழ், மருவ
ருமூ லாதார முன்பின்ன ரிருபாற்றம் வடிவிற் சிந்தித், தருளுடன்
வந் தனைபுரிவோ ரியாவர்சிலர் திருவருளை யடைவ ரன்றே.

இ-ள். ரூபமும் அரூபமுங்கடந்து மேலாயிருக்கும் ஞானரூபமான பரமசிவத்தைச் சிரத்தில் பிரம ரந்திர தானத்திலும் இரண்டு புருவத்தின் நடுவான நெற்றியிலிருக்கும் ஆக்னேய தானத்திலும் இருசெவிநடுவான விசுத்திதானத்திலும் கழுத்தில் அநாகததானத்திலும் இதயத்தில் மணிபூரகதானத்திலும் உந்தியில் சுவாதிஷ்டானத்திலும் இருப்பிடத்தினடுவான மூலாதாரத்திலும் ஆதியோடந்தமாய்த் தன்னுடைய தேகத்திற்குள் தியானஞ்செய்து பக்தியுடன் வணங்கி

னவரெவர்களோ அவர்கள் பரமசிவனது அநுக்ரகத்தைப் பெறுவார்களிது நிச்சயம்—எ-று. (க0)

அப்பரிசு போலளவி லெவ்வுயிர்க்கு மருள்புரிவா னகிலந் தந்தாண், மெய்ப்படரு மொருபாகன் விடைப்பாகன் மதிப்பாக மிலைந்த சென்னிப், பொய்ப்பகைவன் முப்பகையுங் கடந்தவருட் போதமுறை புனிதனென்று, மிப்புவனத் திடங்கொண்ட பதிகளுககோ ரளவிலவா லெண்ணுங் காலே.

இ-ள். முன்சொல்லிய பான்மைபோல் அளவில்லாத சகலஜீவராசிகளுக்கும் அநுக்ரகஞ் செய்யும்பொருட்டு லோகாலோகங்களைப் படைத்து இரட்சிக்குஞ் சிவகாமவல்லி வாமபாகத்திற் ப்ரகாசிக்கா நின்ற திருமேனியை யுடையவனும் வெள்விடையை வாகனமாகக் கொண்டவனும் அசத்தியத்திற்குச் சத்துருவாயிருப்பவனும் மூவிதப்பகையையுங்கடந்த வநுக்ரகசொரூப ஞானபரிபூரணனுமாகிய பரமசிவன் இப் பூமண்டலத்தில் வாசமாயிருக்குஞ் சிவதலங்களையெண்ணில் கணக்கற்றனவைகளாம்—எ-று. (கக)

சொற்கமையா தெனவுரைத்த வளவிலாப் பதியவற்றுட் சுரர்களேத்து, மெற்கதிர்சூ ழுலகமொரு வடிவான விராட்புருட னிதயமாண, பொற்கமலம் பொற்பொதுவே யவ்வெல்லை யளவையாற் போற்றற் கெட்டாச், சிற்கருணை முதனிலையா யுறையுமென முறையிடுமெத் தெய்வ வேதம்.

இ-ள். இவ்வளவென்று சொல்லுதற்கரிய சிவத்தலங்களனேகமாயிருப்பினும் தேவர்களெல்லாந் தோத்திரஞ்செய்யும் ஆயிரங்கிரணங்களையுடைய சூரியன் மேருவை வலமாகவர விளங்குமஉலக வடிவாகிய விராட்புருடனுடைய உள்ளமான தங்கநிறமபோன்ற தாமரையே கனகசபை அப் பொன்னம்பலத்தின் மகிமை இவ்வளவென்றறிந்து தோத்திரஞ் செயதற்கரியது ஞானவுருவமான பரமசிவன் ஆதியாயெழுந்தருளி சிதம்பரத்தில நடனஞ்செயயுமென்று தெயவத்தன்மைபொருந்தி வேதங்களெல்லாம் ஓதித்துதிக்கும் மகிமையையுடையது—எ-று.* (கஉ)

ஆதலினு லெத்தலமு மித்தலத்துக் கொவ்வாத லாவி யுள்ளப், போதிலுட விடத்தளா யிருந்தாலும் விசேடித்தும் புணரு மாபோ, லோதலுறு மற்றுறையவை யுவந்தன்னி லுறுதுநா னென்போருள்ள, மீதுதரத் வைத்துரைப்பக் கண்டனயான் மற்றுறுப்பின் வியப்பா மன்னாம்

இ-ள். ஆதலால் எந்தத்தலமும் இச்சிதம்பரதலத்துக் கிணையாகாது மேலும் தேகமெல்லாம் ஜீவனிறைந்தாலும் நாமென்னுந் துணிபுகொண்டு சொல்லுகிறவர்கள் கரத்தை மார்பில்வைத்துச்சுட்டிக்காட்டுவதல்லாமல் மற்றஅவையவங்களைத்தொட்டுக் காண்பிப்பதுண்டோ இல்லை இதை யாம்பிரத்தியக்ஷமாகக் காண்கின்றோமாதலான் எல்லா அவயவங்களிலும் இதயத்தானமே யதிகம் அதுபோல் விராட்புருடன் இதயகமலமான சிதம்பரத்தலமே எத்தலத்திற்கும் விசேஷித்ததாம்—எ-று. (௧௩)

ஆங்கதுபோற் பரம்பரனு நிரந்தரமு மண்டத்துக் கப்பா லிப்பா,
னீங்கரிய நிறைவுடைய னாடியினும் விராட்புருட னிலவு முள்ளப்,
பூங்கமல மானசிதம் பரந்தன்னி லனவரதம் புகறற்கொண்ணா,வோ
ங்கிவளர் பெருங்கருணை யுடன்மிகவு மதிகமா யுறைவ னன்றே.

இ-ள். முன்சொன்னவைபோற் பராபரவஸ்துவான பரமசிவன் ப்ரம்மாண்டத்தி னுள்ளும் புறமும் நீங்காமல் பரிபூரணமாயிருந்தாலும் விராட்புருட னிதயதாமரைக்கமலமான சிதம்பரத்தி லெப்போது மானந்தத் தாண்டவஞ்செய்யுந் திருவருளுடன் சொல்லுதற்கரிய மேன்மைவளரக் கருணாகரனாய் மிகுந்த விருப்பத்துடன் வாசமாயிருப்பர்—எ-று. (௧௪)

உறைவதுவு மனாதியே மனாதிதனக் கெய்தாத வொருவ னெங்கு,
நிறையிறைவ னித்தலத்து னனவரதத் தாண்டவமு நீங்கானென்று
ற், பொறையுடைய புடவிதனி லெப்பதியு மிப்பதிபோற் பொலிவு
ண்டாகா, குறைவறவா னந்தநட மிவனொழிய வெவனுளது கூறு
ங்காலே.

இ-ள். ஆதிகாலமாயுங் காலாதீதமாயும் மனோவாக்குக் காயங்களுக்கு மெட்டாது தானொருவனே நித்தியபரிபூரணனாயிருக்கும் பரமசிவ னிந்தச சிதம்பரத்திற் சதாகாலமும் இடைவிடாது ஆனந்த நிர்த்தஞ் செய்துக்கொண்டிருப்பதா லழகிய பூலோகத்திலுள்ள எத்தலங்களும் நிகராகாது அதேனெனில் சிருஷ்டிமுதலிய வைந்தொழிலுக்கும் உரியதாயும் ஆண்டவனது தாண்டவமாறுதாயுமுள்ள இத்தலத்தைப்போல் வேறுதலமுண்டோ சொல்லுவாய—எ-று ()

கண்டவர்கட் கியாவோருங் காணாத முத்தியினைக காட்டுமென்
றே, யண்டர்பிரா னனவரத மானந்தத் தாண்டவநின் றுடலாலிம்,
மண்டலத்து ளெத்தலத்து மதிகமிக வதிகமென வயங்காநிற்கும்,பு
ண்டரிக புரந்தனக்கிங் கொப்பா[illegible]

[illegible] SWAMINATHA IYER LI[illegible]
MADRAS-41.

இ-ள். தமது பாதாம்புயங்களைத் தரிசனஞ்செய்தவர்களுக்குஅரிபிரமாதிதேவர்களுந்தேடிக் காணுதற்கரிய சேவடியென்னுமேலான முத்திவீட்டையருளும்பொருட்டுப் பரமசிவம் எப்போதும்நீங்காமல் ஆனந்தத்தாண்டவம் புரிதலால்இப்பூமண்டலத்துள்ள சிவதலங்களுக்கெல்லாம் அதிகமேன்பட்டதாகிப் ப்ரகாசித்துக்கொண்டிருப்பதாலும் விராட்புருடனுடையஇதயகமலமான சிதம்பரத்தைநிகர்க்குமென்று உவமித்துச்சொல்ல வேறொருதல மில்லாமையினாலும் இத்தலம் தனக்குத்தானே ஒப்பாய்விளங்கும்—எ-று. (கசு)

அருட்காமக் கொடிபாகன் றிருவாணை சிதம்பரங்கண்டவர்க்குமுத்தி, யொருக்காலன் றிருக்காலு முக்காலு முண்மையீ துண்மையாமென்,செருக்காலீ துரைத்தேனேற் கணப்போதிற் சிரமிற்றுச்சிதைகமுன்னே, யிருக்காதி மறைமொழிந்த திப்பரிசென் றுன்சுருதியெல்லாம் வல்லான்.

இ-ள். கருணாகரவல்லியாகிய சிவகாமசவுந்தரியை வாமபாகத்திற்றரித்த அம்பலவாணமூர்த்தியின்மே லாணைப்படிசிதம்பரதரிசனஞ்செய்தவர்களுக்கு மேலானமுத்தியுண்டென்று ஒருதரஞ்சொன்னதல்ல இரண்டு மூன்றுவிசையுஞ்சொன்னேன் இது சத்தியஞ்சத்தியம் நான் அகங்காரங்கொண்டுரைப்பனாயி லிக்கணமே யென்றலையற்றுவிழுக்கடவது அன்றியும் இருக்குமுதலிய வேதங்களும்இப்படியேசொல்லுகிறதென்றும் வேதங்களையெல்லாம் ஆராய்ந்தறிந்தவேதவியாசர்திருவாய்மலர்ந்தருளினுரென்று சூதபுராணிகர் நைமிசாரண்ய வாசிகளுக்குரைத்தார்—எ-று. (கஎ)

அந்தணர்மன் னவர்வணிகர் சூத்திரர்சண் டாளர்தவ மடைந்துநீத்தோ, ரிந்தமர பிவர்க்கென்னுத்தன்மையோ ரன்பினரன் பில்லோர்யாருஞ்,சந்ததமு மானந்த சபையினடம் புரிசலசத் தாள்கண் டோரோன், முந்தைவினைப் பாசமெலா முடித்துமுடி யாமுத்தி முதல்வராவர்.

இ-ள் பிராமணர்கள், இராஜாக்கள், வைசியர்கள், சூத்திரர்கள், நீசர்கள, விரதங்கெட்டவர்கள்,இன்னஜாதியென் றறியப்படாதவர்கள், சிவபத்தியுடையவர்கள், பத்தியில்லாதவர்கள் முதலிய யாவரும் ஆனந்தகரமான திருச்சிற்றம்பலத்திற் றுண்டவம் நீங்காதுசெய்யும் அமபலவாணமூர்த்தியினது சரணாரவிந்தங்களைத் தரிசனஞ்செய்தால் அனேக ஜன்மாந்திரங்களிற்செய்த யாவஙகளையும் பவபாசங்களையுமகற்றி யொருகாலத்திலேயுங் கெடுதலில்லாதமுத்திக் கதிகாரியாவார்கள—எ-று. (கஅ)

ஆரணமோ டாறங்கங் கலைகண்டோர் யோகநெறி யறிந் தடைந் தோர், சீரணவு மகம்பலவும் புரிந்துளோர் நித்தமுறுஞ் செந்தீ யோர்கள், பூரணவே தாந்தநிலை தெரிந்துளோ ராயினும்பொற் பொதுவி னுடுங், காரணகா ரியங்கடந்த தாள்கண்டா லொழிந்துகதி காண லாமோ.

இ-ள். நான்குவேதங்களையும் ஆறுசாத்திரங்களையும் உணர்ந்த றிந்தவர்களும் யோகமார்க்கந்தெரிந்து சாதனஞ்செய் தநுபவப்பட் டவர்களும் யாகாதிகிர்த்தியங்களை வழுவாதுசெய்தவர்களும் நித்தமு மக்கினிவளர்த்தி வலஞ்செய்து பூசித்தவர்களும் வேதாந்தசாத்திரங் களை யறிந்த பரிபூரணஞானிகளும் கனகசபையி னடனஞ்செய்யும் ஆதிகாரணகாரியங்களையுங் கடந்த அம்பலவாணமூர்த்தியினது பா தாரவிந்தங்களைத் தரிசனஞ்செய்யாராயின் முத்திகுரியவராகார். ()

அருட்கனக மணிமன்றத் தானந்தத் தாண்டவஞ்செய் தருள்வே தாந்தப், பொருட்கமல பதங்கண்டோர் வீடுறுவ ரெனவெம்மாற் புகன்ற செஞ்சொ, லிருட்கடுவுண் டவரறிய வுண்மையிதி லோர்கதையு மிசைப்பக் கேட்டி, தெருட்கருணை யறிவுடைய சயிமினிவ வெனமுனிவன் செப்பு கின்றான்.

இ-ள். அநுக்ரகசத்திருபமாகிய நவரத்தினங்களினால் அலங்கா ரம்பெற்ற திருச்சிற்றம்பலத்தில் உலகமெல்லாஞ் சுகமடையும்பொ ருட்டு ஆனந்தநடனம்புரியும் வேதாந்தப்பொருள்வடிவான சபாப தியினது சரணாரவிந்தங்களைத் தரிசனஞ்செய்தவர்கள் முத்திபெறு வார்களென்று ஆலகாலவிடத்தையருந்தி அகிலசராசரங்களையுங் கா ப்பாற்றிய திருநீலகண்டரறியச் சத்தியமாக நாம் சொன்னோம் இத ற்குமுன் தரிசனஞ்செய்து பதித்துவம்பெற்றவரு ளொருவர்கதை யைச் சொல்லுகிறோம் இரக்கமும் ஞானமுமுடைய சயிமினியே சா வதானமாகக் கேளென்று வேதவியாசர் சொல்லத்துடங்கினார். (உ0)

ஐஞ்சீரடியாசிரியவிருத்தம்.

காரெலாம் பயில் பொழிலெலாங் கழையெலாந் தடத்து
ணீரெலாங்குளிர் வயலெலா நிலனெலாஞ் செந்நெற்
போரெலாம்வளைத் தரளங்கள் புதுநிலா வெறிக்கும்
பாரெலாம் புகழ் முத்தமிழ்ப் பாண்டிநன் னாடு.

இ-ள். மேகங்கள்நெருங்கித் தவழுஞ் சோலைகளிலுங் கழைகளி லுந் தண்ணீர்நிறைந்த தடாகங்களிலும் வயல்களிலும் மற்ற நிலங்க ளிலும் நெற்போர்களிலுஞ் சங்கினங்களீன்ற தரளங்களினொளியான து பூரணசந்திர னிலவெறிப்பதுபோல் வயங்கிப் பூமண்டலமனைத்

துங் கொண்டாடப்பெற்று இயலிசைநாடகமென்னும் முத்தமிழுக்குந் தாயகம்போன்ற நல்வளம்பொருந்தியது பாண்டிநாடு—எ-று.()

சந்த னாடவி வாசமுந் தண்டமிழ் மணமு
மந்த மாருத மூலாவரு மிடமெலாம் வயங்கு
மந்த ராதிப ரனைவரு மகமகிழ்ந் தேத்து
மெந்தை மேவிய மதுரைநாட் டியல்பையா ருரைப்பார்.

இ-ள். மலைகளில் வளர்ந்தோங்கும் மேலான சந்தனவனத்திலுண்டாகிய பரிமளங்களையும் இனிமைபொருந்திய முத்தமிழினிசைகளையுந் தென்றற்காற்றானது கொண்டுவந்து எங்கும்வீசுவதால் விண்ணுலகத்தில் வசிக்குந் தேவர்களெல்லாம் மனக்களிப்போடுவந்து தோத்திரஞ்செய்ய அங்கயற்கண்ணியென்னும் பராசத்தியுடனே அறுபத்துநான்கு திருவிளையாடல்புரியுஞ் சொக்கநாதசுவாமி யெழுந்தருளியிருக்கும் மதுராபுரியைச்சார்ந்த பாண்டியதேசத்தின் வளப்பத்தை யெடுத்துரைக்கவல்லவருளரோ இல்லை—எ-று. (௨௨)

அத்த கைத்திரு நாட்டிலோ ரந்தணன் வேத
வித்த கன்றிக ழுத்தம வேள்விமா னென்போ
னெத் திறத்தன யாகங்க ளெவ்வகை விரத
நித்த நல்லற மியாவையும் புரியுநன் னெறியோன்.

இ-ள். முன்சொன்ன வளப்பங்களையுடைய பாண்டியதேசத்தில் ஓர் பிராமணன் வேதசாத்திரங்களைப்படித்து அதன்பொருள்களையறிந்து அவற்றுட்சொல்லியவிதிபோற் சகல யாகாதிவிரதங்களையும் அதிக நியமத்துட னநுட்டித்துவருபவனும் நித்தியகருமங்களையும சகலதருமங்களையுந் தவறாமற்செயயு நன்னடத்தையுடையவனுமாகிய உத்தமவேழ்விமானென்னும் பெயர்வகித்த வைதீக னொருவனுண்டு—எ-று. (௨௩)

புடவி யெண்ணுமவ் வந்தண னிடத்தலை பொருபாற்
கடல கத்தெழு கடுவினைக் காட்டுமோர் தனையன்
றடனி லாவிய புவிமகள் சுமையெனத் தருக்கு
மடமை தீவினை யுருக்கொடு வருதல்போல் வந்தான்.

இ-ள். பூமண்டலமெங்கணும் நல்லவனென்று கொண்டாடும் அந்த வுத்தம வேழ்விமான்வயிற்றில் திருப்பாற்கடலுள் ஆலகாலவிடம் பிறந்ததுபோலும் விசாலம்பொருந்திய பூமிக்குச் சுமையாக அகங்காரமும் மூடத்தன்மையுங் கொடிய மாபாவங்களும் ஓருருக்கொண்டுவந்ததுபோலும் ஒரு புத்திரன்பிறந்தான்—எ-று. (௨௪)

துன்ம தன்பெய ரன்னவன் சரிதம்யார் சொல்வார்
வின்ம தன்கலைக் கிலக்கென வளர்பவ னமேலோர

பன் மதங்களின் விதித்தவெம் பாவங்க ளனந்தந்
தன்ம தங்களால் விரிவுறப் புரிதரச் சமைந்தோன்.

இ-ள். அந்தப் பிள்ளைபிறந்த நட்சத்திர லக்கினபலனையுங் கிரகங்களினிருப்பையும் சோதிடர்களறிந்து இவன் துர்நடத்தைக்குரியவனென்று கருதி துன்மதனெனப் பெயரிட்டார்கள் அவனடக்கும் பொல்லாநடக்கைகளை வாக்கினாற்சொன்னாலும் பாவம்வரும் இவன் மன்மதனது ஐந்துகணைகளுக்கும் இலக்காயிருப்பவன் பெரியோர்க ளிது பாபமெனத் தள்ளியவைகளைச் சிரேஷ்டமாகக்கருதி கர்வத்தினால் விஸ்தாரமாகசசெய்வதற்குப் பிள்ளையாய்ப் புவியிற்பிறந்தான்—எ-று. (உரு)

சந்தி வந்தனை மந்தனன் றுறந்தனன் றரும
முந்தை யோர்தமைப் பழித்தன னொழித்தனன் முறைமை
சிந்தை செயதவந் தணந்தனன் புணர்ந்தனன் சிறுமை
பந்த மாமறை யிகந்தன னுகந்தனன் பாவம்.

இ-ள். மேலும் அந்த துன்மதனென்பவன் திரிகாலங்களிலுஞ் செய்யு நித்திய கருமாநுஷ்டானங்களை மறந்து பருவ புண்ணியகாலங்களினடாத்தும் விதிகளைத்துறநது பாபங்களையே துணையாகக்கொண்டு பெரியோர்களைப்பழித்து தாய்தமரென்னு முறைமைகளைதத ள்ளி நடந்து நன்மையான விரதங்கள் தவங்கள் புரியாமற் றீவினையையேவிரும்பி வேதசாஸ்திரங்களை நிந்தித்து அஞ்சாமல் பாதகங்களையே விசேஷமாகசசெய்து மகிழ்ந்தான—எ-று. (உசு)

உடல மீதுடற் காவியீ துயிற்குயி ராய
கடவு டன்மையீ தெனநெறி காட்டிய வேதத்
தொடர் குலத்திடைத தோற்றியு மந்நெறி மறந்தான்
விடல ரும்பெருந் தீவினை விலக்குவ ரெவரோ.

இ-ள். தேகதத்துவ மிப்படியென்றும் ஜீவனுடையதன்மை யிப்படியென்றும் ஜீவனாயகனான பரமசிவன்மகிமை யின்னதென்றும் அறிவிக்கும் வேதசாஸ்திரங்களைப்படித்து அதிற் சொல்லுமுறைபோ னடந்து மற்ற ஏனையோர்களுக்கும் நீங்கள் கடைத்தேறத்தக்க நன்னெறியிதுவென்று போதிக்கும் வைதீககுலத்திற்பிறந்தும் முன் ஜனனங்களிற்செய்த பாவத்தினால் நன்மார்க்கத்தைவிடுத்துத் துன்மார்க்கத்தைக் கைக்கொண்டால் அவனது தீவினையை விலக்குபவர் யார்—எ-று. (உஎ)

இனைய தன்மைய னிவன்றனைத் தந்தைகண் டிரங்கி
மனையும் வாழ்வுநம் மரபுநீ போற்றிலை யந்தோ

தனைய கேளெனப் பன்முறை சமைவரு மமிர்த
மனைய நூலினு லறம்பல வறிவுறுத் தினனால்.

இ-ள். இப்படிப்பட்ட பாதகனாகிய பிள்ளையினதுநடத்தையைக்கண்ட தகப்பன் நமது குலத்திற்பிறந்தபிள்ளை நரகத்துக் காட்படுவதோவென்று மனநொந்து இரக்கமுற்று அப்பாமகனே இல்லறதருமத்தையும் குலதருமத்தையும் செழித்தோங்கச்செய்யாமல் துர்விஷயத்தில் மனதைச்செலுத்தி பாபத்துக் குட்படுகிறாயேஐயோ புத்திரனே நான் நீபிழைக்கத்தக்கதாகச் சொலலும் புத்தியைக்கேளென்று அநேகவிதமாகக் காமக்ரோதமுதலிய வுட்பகைகளைக் களையும் பக்திஞான வயிராக்கிய சாஸ்திரங்களைப்போதித்துஞ் சமைதமைமுதலிய நற்குணங்கள்வரத்தக்க மனோபாவனை ஜீவனிடத்திற்பொருந்தும் விதமெதுவோ அதையும் போதித்தான்—எ-று. (உஅ)

தாதை கூறிய மொழியெலாந் தமையுணர்ந் தோர்பாற்
றீதுறா தென வவன்செவி யுறாதமை தெளிந்து
போத மாதவ ருலகினிற் புரிமயக் கறுத்த
நீதி யாமெனத் தனையன்பா னேயத்தை நீத்தான்.

இ-ள். தகப்ப னுரைத்தருளிய புத்தியெல்லாந் தன்னையறிந்த சிவயோகிகளிடத்திற் குற்றங்கள்சாராம லெவ்வகையகலுமோ அதுபோற் றன்மதன்செவியி னுழைபாமற்போனதைப் பிதாவானவன் கண்டு மனம்வருந்தி சிவஞானத்தைப்பெற்றவாகள் ப்ரபஞ்சமயக்கத்தைவிட்டு நீங்கியிருப்பதுபோற் பொல்லாநடத்தைக் கேதுவாகிய புத்திரன்மேலிருந்த ஆசையை யகற்றிவிட்டான்—எ-று. (உகூ)

மாயத் தாலுலை மைந்தனை யன்னையு மறந்தாள்
தாயத் தார்தனித் துணைவர்க டமருளா ரேவ
லாயத் தாரய லாயுளார் பதியுளா ரகலா
கேயத் தாருடன் றேயத்தா ரடைவினி னீத்தார்.

இ-ள். காமவிகாரத்தால் வேசையர்மயக்கி லாழ்ந்து தாறுமாறாய்த்திரியுங் குமாரனைப்பார்த்துப் பெற்ற அன்னையும் இவ னமக்குப் பிள்ளையல்லவென்று நினைந்து அவன்மேலுற்ற பிரியத்தைவிடுத்தாள் பெரியதகப்பன் சிறியதகப்பன் முதலான தாயாதிகளும் சோதார்களும் பந்துக்களும் பணிசெய்வோரும் புறம்பிலுள்ளோரும் நீங்காத சிநேகரும் மற்ற இதராளும் துன்மதன் பொல்லாநடத்தையுடையவனென்றும் அவனுற வாகாதென்றும் விட்டொழிந்தார்கள்—எ-று.()

ஆடல் வேந்தர்வங் கடிதொழ வருந்தமிழ்த் தெய்வப்
பாடல் வேந்தர்கள் புகழ்ந்திடப் பாண்டிநா டாளுங்

கூடல் வேந்தனு மொற்றரா லறிந்துபார் குறைக
ணீடல் வேந்தர்கண் டிருத்தல்பொல் லாதென நினையா.

இ-ள். அதிவீர பராக்ரமசாலியாகிய அரசர்கள்வந் தடிதொழுது கப்பங்கட்டிவரவும் தெய்வத்தன்மை பொருந்திய மேலானமுத்தமிழ்க் கவிவாணர்கள் கொண்டாடவும் பாண்டிநாட்டுக் கிறைவனாய் மதுராபுரியை யரசாட்சிசெய்துவரும் வேந்தனது சமுகத்தில் தூதர்கள்வந்து துன்மதனுடைய துர்நடத்தைகள்யாவையுஞ் சொல்லக்கேட்டுப் பாண்டிவேந்தன் சினங்கொண்டு பூமிக்குச் சுமையாகப் பிறந்து பொல்லாங்குகளை விளைவிக்குந் துர்த்தனைக்கண்டு சகித்திருப்பது ராஜநீதிக் கழகல்ல கண்டனைசெய்வதே கருமமென்று கருதினான்—எ-று. (௫௧)

மறை வழக்கமு மனுநெறி வழக்கமுஞ் சைவந்
துறை வழக்கமும் வழுங்குறுந தொல்லைநாட் டகத்தோர்
குறை வழக்கமுண் டாவதே யெனமனங் கொதியா
விறை வழக்கினில் லானைநாட் டெல்லைநீத் தொழித்தான்.

இ-ள். வேதாகம மார்க்கமும் மநுநீதிமுறைமையும் சைவநெறியும் பிறழாமல் ஆதிகாலமுதற்கொண்டு நடந்துவரும் நம்முடைய பாண்டிநாட்டில் ஒருவிரலினுடைய யிறையளவாகிலும் பாபத்தொழில் உண்டாக லாமோவென்று மனங்கொதிப்பெய்தி இராஜநீதியை மீறி நடக்குந் துன்மதனைத் தன் தேசத்தெல்லையைவிட்டுத் துரத்தினான்—எ-று. (௫௨)

ஆய நாட்டைவிட் டயல்செலா வளவிறே யங்க
ளேய கூத்தரோ டெத்திசை போற்றும்யாழ்ப் பாணர்
போய நாணுடைத் தூர்த்தர்பொல் லாருடன் புணர்ந்து
சேய நாட்டிரி வான்பொரு ளாசையிற் றிளைத்தான்.

இ-ள். பாண்டிநாட்டை விட்டகன்ற துன்மதனானவன் பின்பு அளவிறந்த தேசங்களில் கூத்தாடிகளுடன் கூடித்திரிந்துஞ் சங்கீத பாடகராகிய வீணை வாசிப்பவர்களுடன் சேர்ந்து சஞ்சரித்தும்நாணை மற்றவனாய் துட்டர்களுடனே கலந்து பொருண்மீ தாசைவைத்து வெகுகால மலைந்துதிரிந்தான்—எ-று. (௫௩)

கொச்சகக்கலிப்பா.

கானநெறித் தனிவருவோர் கருத்தலையப் பொருள்கவர்ந்து
மூனுயிர்போ லுறவுபுரிந் துடைமையுட னெடுத்தொழித்தும்
போனகநீ ரடைக்காயிற் புரிமயக்கஞ் சிறிதகலா
வானமருந் தருத்தியவ ரருஞ்செல்வங் கொணர்ந்தகன்றும்.

இ-ள். காட்டுவழியில் ஒண்டியாய் வருபவர்களை மனதுகலங்க வடித்து அவர்களிடத்திலிருக்குந் திரவியங்களைப் பறித்துங்கொண்டும், தேகமுஞ் ஜீவனும்போல சிநேகஞ்செய்து கொண்டிருந்து அவர்களுடைமையை சிலரிடத்தில் யெடுத்துமறைத்தும் அன்னம் அடைக்காய் முதலியவைகளி லிடுமருந்துகளைவைத்து அன்னவர் புசித்து மயக்கமுற்றபின்னர் அவர்களது பொருள்களைக் கவர்ந்துகொண்டு மற்றோரிடத்திற்குச் சென்றும்—எ-று. (௩௪)

அந்தணரை வதைசெய்து மறவோரை யுயிர்கவர்ந்து
முத்துநெறி விருத்தர்களைப் பாலகரை மூற்றுவித்தும்
பைந்தொடியார் தமைமுடித்தும் பல்கோடி கொலைபுரிந்தும்
வந்தபொரு ளான்மகிழ்வான் மதன்கணையால் வருந்துவான்.

இ-ள். வேதவேதியர்களைக் கொலைசெய்தும் புண்ணியசாலிகளுயிரைக் கவர்ந்தும் நன்மார்க்கத்தை யனுசரித்த விருத்தராகிய கிழவர்களையுங் குதலைசசொற்களையுடைய குழந்தைகளையுங்கொன்றும பெண்களை வதைத்தும் பின்னு மநேகங்கோடி பழிபாதகங்களைச் செய்துஞ் சம்பாதித்த திரவியங்களை நானுஜாதியிலுற்ற விபசாரிகளுக்கும் மாரனது பஞ்சபாணங்களுக்கும் இரையாய வருந்தினன் துன்மதன்—எ-று. (௩௫)

வாதித்த வேல்விழியார் மயலளற்றின் வீழ்ந்தழுந்தி
யாதித்தொல் குலமுடைய வரிவையரை யயலாரற்
பேதித்துஞ் சோர்வறிந்து பெட்பமுறத் தன்னுரையாற் [ன்.
போதித்தும் பொருளகொடுத்தும் புணர்ந்தவர்த நெறியொழித்தா

இ-ள். இளைஞர்களினது மனதைக் கொள்ளைகொள்ளும் வேலைப்போன்ற விசாலம்பொருந்திய விழிகளையுடைய விலைமாதர்களது மோகமென்னுஞ் சேற்றிலழுந்தியும் உயர்குலப் பெண்களைத் தோழிப்பெண்களைக்கொண்டு மனம்பேதிக்கச்செய்து புணர்ந்தும் சிறிது பெண்களைக் கள்ளமனத்தோடு அவர்களுக் கினிமையுண்டாகப்பேசி சேலைமுதலிய பணிகளைக்கொடுத்துப் புணர்ந்தும் அவர்களுடைய நெறியையும் நீக்கினன் துன்மதன்—எ-று. (௩௬)

மகங்களள விலபுரிந்தோர் மறைவரம்பு கண்டோர்தம்
மகத்தெளிந்தோர் மனிவியர்க ளனந்தம்பேர் புவிதாங்கு
நகங்கடனை யிறுத்துக்கா ணடுக்கச்சாய்த் ததுபோல
விகம்பரமென் றறியாதோ னிலகியகற் பழித்தொழித்தான்.

இ-ள். அளவில்லாத யாகாதிகளைச்செய்தவர்கள் வைதீகவேத சாத்திர முற்றுமுணர்ந்த பெரியோர்கள் யோகிகள் முதலிய சற்சன

ர்களினது இல்லறதருமத்துக்கியைந்த மனைவியர்கள் அநேகரை மன து பேதிக்கும்படியாய்ச்செய்தும் தெப்பம்போன்ற பூமிக் காதார மாயிலங்கும் பர்வதங்களைப் பிரளயகாலப்பெருங்காற்றானது வீசிப் பெயர்த்தெறிவதுபோலப் புண்ணியபாவ மிதுவென்றுஞ் சொர்க்கந ரக மிதுவென்று மறியாததுன்மதன் அந்த குலஸ்திரீகளினது பதிவி ருதாதன்மத்தையுங் கெடுத்தான்—எ-று. (ருஎ)

ஈந்தறியா னேருண்மை யிசைத்தறியான் பேரறநூ
லாய்ந்தறியா னாய்ந்தவரை யடைந்தறியா னொருநீர்த்தந்
தோய்ந்தறியான் றெய்வமெனச் சொற்றுமறி யானிரைய
நீந்தறியா வகையாவு நினைவுறையாக் கையிற்கொண்டான்.

இ-ள். பெரியோர்கட்கு ஈதலாகிய தானதருமங்களைச் செய்து மறியான், மெய்ம்மொழி புகன்றுமறியான், சிவபுண்ணியத் தெளிவா கிய சாத்திரங்களை விசாரித்துமறியான், அஃதுணர்ந்த பெரியோர் களை நேசித்துமறியான், பவமென்னு மழுக்கைப் பரிசுத்தப்படுத்துந் தீர்த்தங்களின் மூழ்கியுமறியான், பராபரவஸ்துவாகிய சிவபெருமா னது நாமங்களை வாக்கினாற் சொல்லியுமறியான், நரகவாதனையைத் தருந் துயரக்கடலினின்றகல வகையறியாது மனதில் பாபத்தொழி லையே நினைத்து காயத்தால் நடத்திவந்தான் துன்மதன்—எ-று. ()

கொலைகளிலிங் கிவன்முடியாக் கொலையில்லை யாவர்க்குங்
கலகமுறுங் களவுதனி லிவன்புரியாக் களவில்லை
யிலகுபெரும் புடவியிடை யிவனழியாக் கற்பில்லை
நலமகறீ வினைக்கொடியோ னிவ்வண்ண நாட்கழித்தான்.

இ-ள். ஜீவவதை செய்யுந்தொழிலில் இவன் கொலைசெய்யாத ஜீவனுமில்லை எவர்களிடத்திலும் கலகஞ்செய்து ஒருவர்க்கொருவர் விரோதித்தசமயத்தில் இவன் செய்யாத களவில்லை பெரியபூமியினி டத்தில் இவனழிக்காத கற்புமில்லை ஒருகாலத்திலும் நன்மையின்றி வாப் பாதகனாகிய துன்மதன் இவ்வகையாக வாழுநாளைக் கழித்துவ ந்தான்—எ-று. (ருகூ)

கருங்கடலுட் டிசைமயங்கிக் கரைகாணா துழலுமோ
ரருங்கலமங் கொருகாலா லேற்றகரை செல்வதுபோ
லொருங்கரிய பவக்கடல்வா யுலைபவன்முன் னைவினைகார
மருங்குதவி யுந்திடலான் மதிற்றில்லைந திசைசென்றான்.

இ-ள். நெடிய கருங்கடலுள் திசைதப்பி யுழலுமோர் மரக்கலத் தைச் சுழற்காற்றானது மோதியவற்றை நற்றுறையிற் சேர்ப்பதுபோ லச் சனனமரணமெனனும் பவசாகரத்தை நீந்தவறியாம லவதிப

டுந் துன்மதனை யவன் முற்பிறப்பிற்செய்த புண்ணியபலனென்னுங் காற்றானது வந்துகூடிப் பூலோககைலாசமான சிதம்பரதலத்திற்குப் போகிறமார்க்கத்திற் கொண்டுவந்து சேர்ந்தது—எ-று. (சாO)

கானின்று மலைநின்று கமலமிசை நின்றுதழன்
மேனின்று தவம்புரிந்தும் பெறற்கரிய வீட்டின்பம்
யானின்று தருவனென விளங்கொடியோ டானந்தத்
தேனின்று நடம்புரியுந் திருவெல்லைப் புறத்தணைந்தான்.

இ-ள். நெருங்கிய வனங்களிற் சஞ்சரித்தும் மலைகளில் வாசஞ் செய்தும் ஜலத்திலெழுநதொளிருங் கமலத்தின்மீதிருந்தும் பஞ்சாக்கினியின் மத்தியில்நின்று தபஞ்செய்துங் கிடைப்பதற்கரிய மேலான முத்திசுகத்தை என்னைத் தரிசனஞ்செய்தால் நான்றருகிறேனென்று சிவபெருமான் மின்போலிலங்குங் கொடியிடையாளாகிய சிவகாமவல்லி கண்டுமகிழ வெப்போது மானந்த நடம்புரியுஞ் சிதம்பரதலத்தெல்லைக் கருகேவந்து சேர்ந்தான் துன்மதன்—எ-று. (சக)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அங்கொடிக்கோ சேல்போ லரும்பிறப் பிறப்பிடைத்
தங்கிவெந் துயர்க்கணிற் றனவுமாறு மார்கழித்
திங்கடன்னி லாதிரைத் தினத்தும்வானம் வையக
மெங்குமுய்ய நெறிவழங்கு மெழில்விழா நடந்ததால்.

இ-ள். ஊசலானது முன்னும்பின்னு மசைந்தாடுவதுபோலப் பிறப்பிறப்பென்னுந் தீராப் பெருந்துக்கத்தை யநுபவித்துழலுஞ் ஜீவகோடிகளை யாதரிக்கும்பொருட்டு மார்கழிமாதந் திருவாதிரையென்னுஞ் சுபதினத்தில் தெய்வலோகவாசிகளும் பூவுலகத்தவரும் வந்து கூடி ஆனந்தக்கண்ணீருகுத்துத் தரிசனஞ்செய்த மாத்திரத்தில் சிவகதியைத்தரும் அழகானத திருவிழாநடந்தது—எ-று. (சஉ)

பந்தமாட வீதியிற் பளிங்கிழைத்த முன்றில்வாய்
முந்துசெம்ம ணிக்கணத்தின் முறையிழைந்த நிறைகுட
மந்தமற்ற பெருமைகொண்ட வாசிலா திலங்குபாற்
சிந்துவின்க ணிரவிவந் துதித்தசெய்கை சிவணுமே.

இ-ள். நவரத்தினங்களாலிழைத்து மேலணி மாடங்களநிறைந்த வலங்காரம்பெற்ற வீதிகளிலுள்ள வீடுகடோறும் வாயில்கடோறும் சந்திரகாந்தக் கற்களினற் றளவரிசைப்படுத்தி முத்தத்தின்கண் சிவந்த காந்தியையுடைய நாகரத்தினங்களிழைத்த பசும்பொற் பூரணகும்பங்களை வரிசையாய்ப் பிரகாசிப்ப தெப்படியிருந்ததென்றால மட்டி

ல்லாப் பெருமைபூண்டு களங்கமற்றிருக்குந் திருப்பாற்கடலிலே சூரியன்வந் துதித்ததுபோல் விளங்கியது—எ-று. (௪௫)

மாலடைந்த செய்யசோதி மணியினிற் குயிற்றிடும்
பாலிகைக்கண் வெண்முளைப் பரப்பெழுந்த பரிசுநான்
வேலைதந்த வமுதவிந்து மதியமன்றி வெய்யவன்
கோலமண் டலத்தும்வந்து குடிபுகுந்த தொக்குமால்.

இ-ள். ஒப்பற்ற சிவந்த காந்தியையுடைய இரத்தினங்களழுத்திய பாலிகைக்குள் வெண்ணிறமுற்ற நவதானியமுளைகளெப்படியிருந்ததென்றால் திருப்பாற்கடலிலெழுந்த வமுதென்னுந் துளிகள் வெண்மையையுடைய சந்திரபிம்பத்தினிடத்தும் அவற்றினு மதிக காந்தியோடுங்கூடிய சூரியமண்டலத்தினுந் தோய்ந்தனபோற் பிரகாசித்துக்கொண்டிருந்தது—எ-று. (௪௬)

குருமணிக் குலங்களிற் குயிற்றுமம்பொன் மாடமு
மருவுவாயின் மணிதயங்கு மகரதோ ரணங்களு
மிருமைகொண்ட வுதயவெற்பி னத்தினங்க ளுதயமா
யொருவிகந்த விரவியெண்ணி லுள்ளவாயி னொக்குமே.

இ-ள். காந்திபெற்ற இரத்தினங்களிற்சிறந்த குருமணியென்னு மாணிக்கங்களழுத்திய மேலணிமாடங்களும் வாயில்கடோறும் இரத்தினமயமாகிய மகரதோரணங்களும் வயங்குவன யாதுபோலுமெனின் இரண்டு உதயபருவதங்களினிடத்தில் எண்ணிறந்த சூரியர்களெழுந்து பிரகாசிப்பதுபோல் பிரகாசித்தன—எ-று. (௪௭)

இரவியால் விளங்குமா றிகந்ததில்லை யம்பலம்
பரவுசெம்பொ சோதியே பரந்திலங்க வெய்யவன்
கிரணமுந்து வெம்மைவந்து கிட்டுறா நிகேதன
நிரவுகேத னக்குழா நிறைந்துமே னிழற்றுமால்.

இ-ள். உலகங்களையெல்லாம் விளங்கச்செய்யுஞ் சூரியகிரணமானது பிரகாசம்பொருந்திய கனகசபைக்குமுன்னால் பானுவின்முன் விளக்கைப்போல ஒளிமழுங்கியிருந்தன வீடுகடோறும் மேலணிமாடங்களிற் கட்டியிருக்குந் துவசங்கள் சிதம்பரதலத்துள பருதியின் கிரணத்தைப் பரவவொட்டாமற் றடுத்து நிழலுண்டாக்கிக் குளிர்ச்சியாகிய சீதளத்தைத் தந்தன—எ-று. (௪௮)

யாகசாலை தெற்றிமுற்ற மேசிலாத வீதிவாய்
மாகநாடு கோபுரங்கண் மண்டபங்க ளாலயம்
பாகசாத னதிபண்டர் பாகநீத்து மனைநிரந்
சோகமுற்ற முனிவர்தொண்டர் தொகுத்தபெ ருயிர்த்தமால்.

இ-ள். யாகாதிஹோம யெக்ஞவிரதங்க ளநுட்டிக்குஞ் சாலைக ளிலும் பெரியோர்கள் வேதபாராயணஞ்செய்து ஆனந்தித்திருக்குஞ் சபைகளிலும் திருவாயில்களிலும் நால்வகை வருணத்தார்வாழும் அழகுபொருந்திய குற்றமற்றவீதிகளிலும் முகிலினங்கள்மொய்த்த வானுலகளவுமளாவிய கோபுரங்களிலும் இராஜசபைபோன்ற ஆயிரக்கால்மண்டபம் நூற்றுக்கால் மண்டபமுதலிய மஹாமண்டபங்களிலும் கோயில்களிலும் இந்திராதிதேவர்கள்முதலிய தெய்வகணங்கள் நிறைந்திருப்பதுமன்றியுஞ் சிவயோகிகள் யோகாநுபவங்களாற் பேரானந்தமுற்றும் தபோதனர்களும் பக்தஜனக்கூட்டங்களும் சதாகாலமும் இடைவிடாது நெருங்கியிருப்பார்கள்—எ-று. (சஎ)

புரமெரிந்து விழநகைத்த புனிதனன்ப ரளவிலார்
வரமிகுந்த மேனிநீறு மறுகிலங்கு மொளிகள்பாற்
பரவைமுன் பிரிந்தமெய்ப் பதஞ்சலிக் கிணையமே
விரவிவந்து காணவெங்கு மேவிநேட லொக்குமே.

இ-ள். திரிபுரத்தைக் குறுநகையா லெரிந்துவிழச்செய்த பரமசிவத்தின் மெய்த்தொண்டர் திருக்கூட்டங்கள் தந்தந் திருமேனியிலணிந்திருக்குந் தவளநிறம்போன்ற விபூதியினதுகாந்தி பட்டணமெங்கும் பிரகாசிப்பது எப்படியிருந்ததென்றால் பாற்கடலின்கண் விட்டுணுவுக்குச் சயனமாயமைந்திருந்த ஆதிசேடன் பதஞ்சலிமாமுனியா யவதரித்துத் திருச்சிற்றம்பலத்தி லானந்தத்தாண்டவத்தைத் தரிசனஞ்செய்து சிவானந்தத்தை யடைந்திருக்கும் அப் பதஞ்சலியாரைக் காணவேண்டி நனிகாதல் பூண்டெழுந்துவந்த பாற்கடலானது எங்கும் நிறைந்து தேடுவதுபோல் இருந்தது—எ-று. (சஅ)

மக்கடேவர் தநெருக்கின் வழிவிலங்கி வந்துளோர்
மிக்கதஞ்செய தொழிலறிந்து வேறுவேறு சேர்வரால்
பக்கமே பணிந்துமீள பதங்கர்தங்க டேர்தனைத்
தக்கதேரொ டையமாழி யொன்றுகண்டு தணர்வரால்.

இ-ள். மானிடர்களுந் தேவர்களுங் கலந்து நெருங்கி அம்பலவாணமூர்த்தியைத் தரிசிக்கின்றபோது கண இமைக்கின்ற குறிப்பைக் கண்ட பக்கள் மக்களுடன் சேர்வார்கள் கண்ணிமையாதிருக்கு மடையாளங்களைக்கண்ட விமையாதவராகிய தேவர்கள் தெய்வலோகத்தாருடன் சேர்வார்கள் சூரியரும் இராஜாக்களும நடராஜனைத் தரிசனஞ்செய்து தத்தம் தானங்களுக்குப்போகவேண்டி ஒற்றையாழிபூட்டிய தேரடையாளங்களைக்கண்டு சூரியர்கள் தேரேறிச்செலலுவார்கள் ஒற்றையாழியில்லாத ரதங்களைபபார்த்து வேந்தர்களவறிலா ரூராகணித்துச செல்லுவார்கள்—எ-று. (சகூ)

அண்டர்சூழ் விமானகோடி யந்தரத் தபந்தரான்
மண்டலத்தி னந்தகார மன்னனிங் கவற்றினால்
விண்டதேச தோவிளக்கும் வேதநாத னம்பலங்
கொண்டசோதி யண்டரண்ட கூடமெங்கு மூடுமால்.

இ-ள். தேவர்கள் ஆகாயமெங்கும் நிறைந்து பந்தரைப்போ னெருங்கியிருப்பதினால் அந்தலத்தின்கண் சூரியகிரணம் புகாமல அவ்வவர் ஆரோகணித்திருக்கும் விமானங்களின் தோகளின்மறைவால் மழுங்கிப் பூமண்டலத்தின் பிரமாணடமெங்கு மனாவிநின்றது—எ-று.

முடிகளோடு முடிநெருங்கி முந்திமுந்தி வந்துநின்
றடிகண்மன்றி லாடல்கண்ட வண்டரா வணங்கவெண்
பொடிகொண்மேனி சிலவுவிசு புனிதஞான வன்பரும்
படியின்மேல் விழுந்தெழுந்து பாடியெங்கு மாடினார்.

இ-ள். திருச்சிற்றம்பலத்தின்கண் ஆனந்தத் தாண்டவம்புரியும் விராட்புருடனாகிய சபாநடேசனது நடனத்திற்குமுன் செல்லவேண்டுமென்று தேவர்கள் நனியாவலுடனே கிரீடங்க ளொன்றோடொன்று தாக்க முன்வந்து தரிசனஞ்செய்து பின்வந்து தரிசிக்கும பரிசுத்தமான சிவனடியார்க ளணிந்திருக்கும் வெண்மைபொருந்திய விபூதியின் காந்தியானது பூரணச்சந்திரனொளிபோல பிரகாசிப்பதைக் கண்டு அவர்களுடன்சேர்ந்து பூமியில்விழுந்து அட்டாங்கமாயப்பணிந்து வேதாகமபுராணங்கள் தேவார திருவாசகங்கள் முதலியவைக ளால் தோத்திரங்கள்செய்து ப்ரம்மானந்த பலிதராய் எங்கும் கூத்தாடுவார்கள்—எ-று. (௫௧)

கதுவுதேவர் மகுடமீது கற்பகத்தின் மாலைவீழ்
மதுவையுண்டு புதுமைகொண்ட வண்டினங் களித்தபோற்
பதுமமன்ன கண்கள்கொண்டு பணைகள்கொண்ட மாமறைப்
பொதுவினூடு மதுவையுண்டு புலவருங் களித்தனர்.

இ-ள். நெருங்கிய தேவர்களினது கிரீடங்களில அலங்கிருதஞ்செய்திருக்கும் பாரிஜாதமலர் மாலைகளிலிருந்து ஒழுகும் இனிமையான தேனை வண்டினங்க ளிவை நமக்குக்கிடைப்ப தரிதரிதென நுகர்ந்து ஆனந்தத்தையடைந்தன பண்ணோடுங்கூடிய வேதங்களா முறங்குந் திருச்சிற்றம்பலத்தில்ஆனந்தநடனம்புரியும் அம்பலவாணமூர்த்தியினது தரிசனானந்தமென்னுந் தேனை தாமரைமலரையொத்த கண்களைக்கொண்டு பானஞ்செய்து தேவலோகத்தாருஞ் சந்தோஷித்தார்கள்—எ-று. (௫௨)

முற்றுமுள்ள புவனநின்று வந்தவந்த வானுளோர்
ரெற்றைநா ளணைந்ததென் றெதிர்ந்துதன்னில் வினவுறப்
பெற்றவோதை யன்பர்பூசை பேணுகின்ற பலவிதத்
துற்றவார வங்கடன்னி லொளிமழுங்கி யையுமால்.

இ-ள், சபாபதியினது பூசை தீபாராதனை காலங்களில் - பூரி-பேரி-காகளம்-டமாரம்-சின்னமென்னும் ஐந்துவகை மேளவாத்தியங்கள் முழங்குமோசையும் வேதாகமபுராண தேவார திருவாசகத்தின் கோஷ்டியும் லோகாதிலோகங்களிலிருந்து அம்பலவாண மூர்த்தியினது ஆனந்த தாண்டவதரிசனஞ் செய்யும்பொருட்டாகவந்த முப்பகதுமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் ஒருவர்க்கொருவ ரெப்போது வந்தீர்களென்றும் கைலாகுதந்துங் காடாலிங்கனஞ்செய்தும் க்ஷேமலாபங்களை வினவும் கோஷ்டியால் மழுங்கிக் கேளாமலிருந்தது—எ-று. (௫௩)

பங்கயத் தடம்பணிந்து பாசம்வீசி யேறுவா
ரங்கணமிக்க தானநல்கி யமரரஞ்ச விரவுவார்
சங்கரற் குகந்தசைவ தருமநின்று புரிகுமார்
பொங்கிமிக் கெழுந்தவோசை புவனமெங்கும் விரவுமால்,

இ-ள் சிவகங்கையில் தோத்திரங்கள் செய்துக்கொண்டு மூழ்கி மஹாபாதகங்களையும் பவமென்னும் பாசபந்தங்களையும் நீக்கிக் கரையேறினவர்களது ஆரவாரமும் அந்தத் தீர்த்தக்கரை மண்டபங்களில் பதினாறுவித மஹாதானஞ் செய்பவர்களைப்பார்த்துத் தங்கள் பதவியைப் பெறுவார்களென்று தெய்வலோக வாசிகளாகிய அமரர் பயங்கொள்ளும்படி தானஞ்செய்யும் ஒலியும் சிவபெருமானுக்கு விருப்பமான தருமங்களை வேதாகமங்களின் விதிவழுவாது நடாத்துகின்றவர்களினது ஆரவாரமும் பொங்கியெழுந்து சகலலோகங்களிலும் நிறைந்தன—எ-று. (௫௪)

அரம்பைமாதர் கீதவோதை யாடலோதை யாரணம்
பரம்புமோதை பல்லியம் பரப்புமோதை யன்றிமுன்
வரமபிலார் நெருங்குதேவர் மகுடமோது நந்திகைப்
பிரம்பினோதை சலதியோதை சிறிதெனப் பிறங்குமால்

இ-ள். அரம்பை - யூர்வசி - திலோத்தமை முதலிய தெய்வகணிகையாகள் சங்கீதங்கள்பாடுகின்ற இனிமையாகிய ஓசையும் அவர்கள் நாட்டியஞ் செய்யுமிடத்துண்டாகும் மத்தளமுதலாகிய வாத்தியமுழக்கமும் பிராமணர்கள் நான்குவேதங்களை பாராயணஞ்செய்யும் ஓசையும்பலவாத்தியங்களினது முழக்கங்களுமல்லாமல் சபாநடேசரது

சன்னிதானத்திற் றரிசனஞ் செய்யவேண்டுமென்று அவரவராவலினாற் றராதரமன்றி நெருக்கி முன்விரைந்துசெல்லுகின்ற தேவர்களினது கிரீடங்கள் தகரும்படி நெருங்குகின்ற சந்தடியை விலக்கும்பொருட்டு நந்திதேவர் கரத்திற் பொற்பிரம்பேந்தியடிக்கையில் கிரீடங்களின் மீதுவிழுவதால் கணீரென்னு மோசை மிகுந்தெழுந்து சமுத்திரத்தினது ஆரவாரத்தைச் சிற்றொலியாயடக்கிவிளங்கும்-எ-று

புரமெரித்த துங்கதித்த புண்டரீக வந்தணன்
சிரமறுத்த துஞ்சிலைக்கை வேளையன்று செற்றது
கரமடங்க லைத்தொலைத்த நன்குமின்ன வாதியாம்
வரமிகும் புராணமே வழங்குவார்க ளெங்கணும்.

இ-ள். சிவசம்பந்தத்தோடு பக்தியையனுசரித்த திரிபுரங்களுக்கரசர்களாகிய மூன்று சுராதிபர்களைச சுகமாயிருக்கச்செய்து சைவசமயத்தைவிட்டுப் புறசமயத்திற்புகுந்த மற்றவர்களோடு திரிபுரத்தைப் புன்னகைசெய்தெரித்த புதுமையையும் ஜலந்தரன் அந்தகாசுரன் முதலிய வசுரரைக்கொன்று தேவர்களை யிரட்சித்த புகழையும் ஆணவங்கொண்டு சந்திரஜடாதர மூர்த்தியாகிய பரமசிவனது முடியைக்கண்டேனென்று பொய்ம்மொழிபுகன்ற பிரமன் சிரத்தைக்கிள்ளிப் பாத்திரமாகக் கையிலேந்திய சிறப்பையும் கருப்புவில்லைவளைத்துச்சுரும்பைநாணாகப்பூட்டி முல்லை-அசோகு-நீலோற்பலம்-மாம்பூ தாமரையென்னும் ஐந்துவித மலர்க்கணைகளைத்தொடுக்கும் அனங்கனாகிய மன்மதனை நெற்றிக்கண்ணினால் நீறுக்கின பெருமையையும், விஷ்ணு மச்சம்-ஆமை-வராகம்-நாரசிங்கம்-வாமனென்னு மைந்தவதாரங்களாகிய காலத்தில் சங்காரஞ் செய்தவைமுதலிய சிவபுராணங்களைச் சிதம்பரத்தலத்தில் எங்கணும் வாசிப்பார்கள்—எ-று. ()

சரிதையீது கிரியையீது தக்கயோக மீதுதற்
குரியஞான மீதெனு வுணர்த்துமாக மங்களும்
புரியுமாக மங்களாதி புகலுமா ரணங்களுந்
தெரிவுளோர்கள் கழகமே திகழ்ந்துயர்ந்த திக்கெலாம்.

இ-ள். பரசிவமாகிய உமாமஹேசனது சரித்திரங்களின்னதென்றுஞ் சைவாசாரநடத்தை யின்னதென்றும் பரம்சிவத்தையே சிபவமாக மனதில்அநுசந்தானஞ்செய்து சிவயோகஞ் சாதிக்கின்றநெறி இன்னதென்றும் அறிவிற்கலந்து சிவபரமயிக்கியமாகுஞ் சிவஞானமின்னதென்றுந் தெரியச்சொல்லுஞ் சிவாகமங்களும் யாகாதிகருமங்கள் செய்விதமின்னதென்று அறிவிக்கும் வேதங்களும்அவ்வேதவிதிப்படி நடாத்திவைக்கும் பெரியோர்களின் திருக்கூட்டங்களும சிதம்பரத்தலத்தில் எங்கும் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும்—எ-று.

விரைவின்வேலை யன்னமாயன் வேதனெய்த வாயிலிற்
கருடனன்ன மஞ்சுணங்கல் கனகவெற்பும் வெள்ளிமால்
வரையுமெம் மிடத்திலும் வயங்குமன்றி னிறைவனென்
றருடவத்த சிறைபடைத் தணைந்ததன்மை யொக்குமே.

இ-ள். சபாபதியின் சன்னிதானத்திற்குப் போகவேண்டுமென்று வாகனாதிகளை விட்டிறங்கி அரியயனிருவருங் கோயிலுட்சென்று தரிசனத்திற் கெதிர்பார்த் திருக்கும்போது அன்னவரேறிவந்த பொன்னிறம்போன்ற கருடவாகனமும் வெள்ளியைபபோன்றஅன்னவாகனமும் அபிமுகவாயலுக்கு வெளியில் தத்தம் தலைவர்களது வரவை எதிர்நோக்கிபபார்த்து வாட்டமுற்று அசையாமல் பொன்மயமாகிய மஹாமேருவும், வெள்ளிமயமாகிய கைலையும், சர்வேஸ்வரன் நம்மைவிட்டு நீங்கிச சிதம்பரத்தில் நடிக்கிறுரென்று தெரிந்து சிறகுகள் பெற்றுவந்து கோபுரவாயிலில் காத்திருந்ததுபோ லிருந்தன—எ-று. (௫௮)

அருகுவாழு மங்கைநேய வண்ணலாட லாதரம்
பெருகுவார்க ளருவிகண்கள் பெருகுஞான வமிர்தமே
பருகுவார்கள் புளகமெயப் படைத்துளார்கள் பரவசத்
துருகுவார்க ளின்பவெள்ள முற்றுளார்க ளெங்கணும்

இ-ள். வாமபாகத்தில் விளங்குஞ் சிவகாமசவுந்தரி கண்டுமகிழ அம்பலவாணமூர்த்தி ஆனந்த நடனம்புரியும் விநோதத்தைத்தரிசனஞ்செய்தவர்கள் கண்களில் ஆனந்தவெள்ளம்பெருகச் சிவஞானமென்னும் தேவாமிர்தத்தைப் பானஞ்செய்கிறவர்களுந் தேகத்தில்மயிர்க்குச் செறிகிறவர்களும் ஆனந்தபரவசத்தான் மனமுருகி நிற்பவர்களும் பேரானந்தத்தை யடைந்தவர்களும் எங்கும் நிறைந்திருப்பார்கள்—எ-று. (௫௯).

வணங்குவார் வழுத்துவார் மகிழ்ந்துகாண லின்றிநின்
றுணங்குவா ரிருந்துதாளை யுள்குவா ரிடப்புறத்
தணங்குகாண மன்றுளாடு மாடல்கண்டி. யாவரு
மிணங்கொணாத சிவன்முத்தி யெய்தியின்ப மெய்துவார்.

இ-ள். வாமபாகத்தில் விளங்கும் அருட்சத்தியாகிய சிவகாமசவுந்தரிகாண எப்போது மானந்தநடனம்புரியும் அம்பலவாணமூர்த்தியைத் த்ரிசித்தவர்களும் பஞ்சசுத்தியோடு மண்மிசை யஷ்டாங்கமாய்ப்பணிபவரும் தோத்திரஞ்செய்பவர்களும் உமது பதாம்புயங்களை யிதயத்திலிருத்தித் துதிக்கவல்ல பாக்கியங் கிடைக்கவில்லையேயென்று வாடி மெய் சோர்ந்திருப்பவர்களும் மறுபடியும் ஜனனமர

ஞாதியவத்தைக ளில்லாமற் ஜீவன்முத்தர்களாகிச் சிவானந்தத்தைய
டைவார்கள்—எ-று. (௬௰)

இன்னதன்மை யெனவுரைக்க வெய்தொணாத நல்விழா
நன்னலந்த யங்குதில்லை நகரம்வந் தடைந்துடன்
றுன்னுகின்ற பாணராதி சூழுகின்ற துன்மதன்
பொன்னினம் பலத்துளன்ன போதுவந்து புக்கனன்.

இ-ள். இன்னவிதமென்று சொல்லுதற்கரிய சகலசம்பிரமவை
பவத்துடனே நடக்கும் மார்கழிமாதத்திருநாளில் நன்மை மிகுந்த
சிதம்பரதலத்துக்குள்வந்து பாணர் கழைக்கூத்தர்கள் முதலிய தூர்
த்தர் கூட்டத்துடன் துன்மதனும் கனகசபைக்கெதிரில வந்துநின்
றான்—எ-று. (௬௧)

தணிவிலாத கனகமன்று சபையின்முன்னர் நின்றுகைம
மணிகள்பேரி தாளமா மதங்கமுன் முழங்கவந்
தணியுலாவு காமவல்லி யசைதல்போ லுருத்திரக்
கணிகைமாதர் பரதநீதி காணவாடல் பேணினார்.

இ-ள். நெடிய பிரகாசம்பொருந்திய கனகசபைக்கெதிரிற் சங்
கீத மத்தளதாளமுதலிய வாத்தியங்கள் முழங்கவும் அந்தலையைக்கு
ச்சரியாக வல்லிசாதக்கொடியானது தென்றலுக்கசைந்தாடுவதுபோ
ல் திவ்ய வஸ்திராபரணாலங்கிர்தமுஞ் சந்தனபுட்பங்களணிந்த அதி
ரூபலாவண்யமான உருத்திர கணிகைமாதர்கள் பரதசாத்திரவிதி
வழுவாத முறைப்படியே அதிகவிருப்பத்துடன் நாட்டியஞ் செய்
துகொண் டிருந்தார்கள்—எ-று. (௬௨)

திருவிரும்பு மாதராடல் செய்தல்கண்டி யாவருமுன
மருவுபாட லாடலென்று வடதிசைக்க ணோக்கினா
னருள்சுரந்து வல்லிகாண வம்பலத்து ளாடுமோர்
கருணைவெள்ள நின்றதன்மை கண்கள்கொண்டு கண்டனன்.

இ-ள். இலக்குமிதேவி விருப்பத்துடன் கடாக்ஷிக்கத்தக்க அழ
குவாய்ந்த நடனமாதர்கள்நாட்டியஞ்செய்யு மதிசயத்தைப்பார்த்து
மகிழ்ந்து இச்சங்கீத மேளவாத்தியங்களுடனே நடிக்கும்வேடிக்கை
எந்த ராஜன்முன்பாக நடக்கின்றனவோவென்று வடதிசையை நோ
க்கிப் பார்க்கும்போது திருச்சிற்றம்பலத்திலே யாவரையுங் கடைத்
தேறச் செய்யுங் கருணாகரவல்லியான சிவகாமசவுந்தரிகண்டு மகிழ
ஆனந்தநடனஞ்செய்யு மருட்பெருக்காகிய அம்பலவாணமூர்த்தி
எழுந்தருளியிருக்குந் திருவழகை முற் சனனங்களிற்செய்த மஹா
புண்ணியவசத்தினால் துன்மதன் இரண்டுகண்களினாலுந் தரிசித்
தான்—எ-று. (௬௩)

நித்திலத்தை யொத்தமூர னிலவுவீச முகமதிக்
குத்திரத் தனைத்துமாதர் கொண்டவாட லங்கறச்
சித்திமுத்தி நல்குகின்ற தில்லையெல்லை தன்னைவிட்
டுத்தரத் திசைக்கணன்ப ருடன்விரைந்து சென்றனன்.

இ-ள். முத்தைதிகர்த்த பலவரிசையினது புன்கையாகிய நில வெறிக்கு முகாரவிந்தமென்னுஞ் சந்திரபிம்பங்களையும் காமுகர்கள பார்த்தமாத்திரத்தில் மயங்கிவிழத்தக்க மாயாவிநோதத்திற் கிடமானதனபாரங்களையுமுடைய குத்திரக்கணிகையர் வேடிக்கையைக்கண்டு மகிழ்ந்துபின்பு சகலபாக்கியங்களுங் கைவலலியமானதுபோல் மேலான சிவபதவியையளிக்குஞ் சிதமபரத் தெலலையைக்கடந்து திருவிழாவுக்கு வந்திருந்துபோகுந தன்னுடையசிநேகிதாகளுடனே வடதிசையைநோக்கித் துன்மதன் சீக்கிரமாகசசென்றான்—எ-று.()

கடலுலாவு புடவியிற் கருத்தினுக் கிசைந்தசெய்
தொழிலிடாது திரியுநாளி னெய்துகின்ற நெறியினோர்
படருகின்ற பணைகளசூழ பராரைமா மரத்திடைத
தொடருநீழ லதனின்தன்னு துார்த்தரோ டிருந்தனன்.

இ-ள். சமுத்திரஞ்சூழ்ந்த பூமண்டலத்தில் தன் மனதுக்கிசைந்த தொழில்களைச்செய்து சகலதேசங்களிலு மலைந்து திரியுமபோது ஓர்மார்க்கத்தில் நெடிதா யுயர்ந்து வளர்ந்து தணிந்த கிளைகளோடு நதழைத்து விஸ்தாரமாயப்பரவி நீழலைததரும் ஒரு மாமரத்தின்கீழ துார்த்தத்தையுடைய தனது கூட்டங்களுடனே துனமதன் கூடியிருந்தான்—எ-று. (௬௫)

ஐஞ்சீரடியாசிரியவிருத்தம.

தெரிகொணுமன்ற யாவையுஞ் சிறந்தநூல் பலவும
விரிக்குநாவின னருக்கனி லொளிவிடு மெய்யன்
பரிக்குஞானமுங் கருணையும் படைத்தனன் வினையை
யரிக்குமாதவத் தந்தணனொருவனங் கடைந்தான்.

இ-ள். யாவராலு மறியப்படாத மகிமையையுடைய நான்குவேதங்களையும் ஆறுசாஸ்திரங்களையும் படித்துணர்ந்து பிரசங்கஞ்செயது போதிப்பதில் வல்லவனும் சூரியனது ஒளியினு மிகக தேகத்தைபுடையவனும் நன்மைவாயந்த ஞானமும இரக்கமும் பூததயையுமுடையவனும் பாபங்களைப்போக்கும் புண்ணிய தபோதனனுமாகிய ஒரு பிராமணன் அவவிடம் வந்துசேர்ந்தான்—எ-று. (௬௬)

வந்தவந்தண னத்தருநீழலின் மகிழ்ந்
தந்தவண்ணணைச சிந்தைசெய தமர்ந்திளப் பாறிச

சந்தமாமறை வாக்கினாற்றுன்மதன் றனைப்பார்த்
தெந்தநாடுமுன் யாவனீர் யெனவெதிர்வினவ.

இ-ள். அங்கு வந்துசேர்ந்த புண்ணியசீலனாகிய பிராமணனைத் தமன் சந்திரசேகரனை செவ்வானம்போன்ற திருமேனியனையென்று சிவதுதிசெய்துக்கொண்டு அம் மாமரத்தினிழலிலிருந்து இளைப்பாற்றிக்கொண்டு அங்கிருக்குந் துன்மதனைப்பார்த்து வேதங்களோதும் வாக்கினால் நீ முன் எந்ததேசம் நீ யாவன் என்று விசாரணை செய்தான்—எ-று. (௬௭)

அழிவில்லாததன் னாடுமங் காட்டிடை நீதி
யொழிவிலாததன் குலனுமக் குலத்திடை யொழுங்கின்
வழிசிலாதவெங் குணங்களும் புரிந்தவன் பாவத்
தொழிலுமந்தணன் செவிதுளை சுடும்படி சொன்னான்.

இ-ள். அழிவில்லாத மநுநீதியையுடைய பாண்டியதேசத்தில் நன்மைவாய்ந்த வைதீகாசாரமுற்ற உயர்வாகிய பிராமணகுலத்திலேபிறந்து வேதத்திற்சொல்லிய விதிப்படி நடவாமல் துராத்மாவாகித் தான்செய்த பாபங்களையெல்லாம அப்பிராமணனது இருசெவியிலும் நாராசத்தைக்காய்த்துச் சொருகினதுபோலத் துன்மதன்புகன்றான்.

சொற்றவாய்மைகேட் டுள்ளமு முடலமுந்துளங்கி
யெற்றைநாளிவ னுய்வனோவெனமன மிரங்கித்
துற்றவலலிருந் தொல்வினைத் துன்மதன் றனைப்பார்த்
துற்றவன்பினா னந்தணனொருமொழி யுரைப்பான்.

இ-ள். இவ்விதமாகச்சொல்லிய அவனது சரித்திரங்களைக்கேட்ட பிராமணன் உடனே தனது உள்ளமானது பதைப்புறத் தேகமடுங்கி மிக வியாகுலமுற்று அந்தோ எக்காலத்திலிவன் கடைத்தேறுவானோவென்று இரக்கமுண்டாகி மேலாகியகுலத்திற்பிறந்து மஹாபாதகங்களைச் செய்துகொண்டிருந்த பாபியாகிய துன்மதனைப்பார்த்து மனதில் தயவுண்டாகி சன்மார்க்கந்துக்கேதுவாகிய சில தரும நீதி வசனங்களைச் சொல்லத்தொடங்கினான்—எ-று. (௬௮)

நீடும்வல்வினை புரிதலா னெஞ்சுறவஞ்சம்
வீடிலாதநீ பற்பல விளம்பருங்கற்ப
மூடுகாலரு மிருபதோ டோரிருநான்கு
கோடிமாநிரை யகருழி குளித்தனிச்சயமே

இ-ள். எண்ணிக்கையில்லாத பாவங்களைச்செய்தனையாதலால் மன திலே வஞ்சனைநீங்காமல் வினைசெய்துகொண்டிருக்கிறதினாலும் நீ அநேக

பிரம கற்பங்கள்வரைக்கும் இருபத்தெட்டுகோடி நரகத்திற்கிடந்து வேதனைப்படுவது தப்பாது நிச்சயம் என்று பிராமணன்சொல்லி னன்—எ-று. (௭0)

நினைதுசெய்கையை நினைதொறு நினைதொறுமெனது
மனனிடத்தெழு மச்சமோ டருணமிகவளரும்
வினைகளுள்ளன மாய்ந்திடு நெறிவிளம்புவனு
லனையதன்மைநீ புரிந்திடின் வினையுனையடரா.

இ-ள். ஓகோ துன்மதனே உனது நடக்கைகளைக் கேட்டதுமுதல் நினைத்தபோதெல்லாம் என்மனதில் பயமுண்டாகி இந்த மகா பாவியை எந்த புண்ணியத்தினால் கடைத்தேற்றலாமென்னும் இரக்கம் அதிகப்படுகின்றது ஆகையால் நீசெய்த பாவங்களெல்லாந் தீரத்தக்கதாக ஒரு நல்லவசனஞ் சொல்லுகிறேன் நான சொல்லுமுறைமையாக நீ நடந்துக்கொண்டா லுன்னைப் பாவங்கள் தொடராமற் போமென்று வேதியன்சொன்னான்—எ-று. (௭௧)

ஆதலால்விரைந் திக்கணத் தத்தகை புரிதி
தீதுசெயதுபின் பயந்தது தீர்த்திடமுயலவோர்க்
கோதலாநெறி யெனபறை யுரைத்தனனீதிப்
போதமுற்றுநீ கேட்டியேற் புகல்வனென் றுரைத்தான்.

இ-ள். ஆகையினால் சீக்கிரம் இந்தக்ஷணமே நான்சொன்ன நன்மார்க்கப்படி நடந்துக்கொள்ளென்றுசொல்லி மேலும் அறியாமையினாற் பாவங்களைச்செய்தபின்பு நரகவாதனைவருமென்றுபயந்து எந்த விதமாகப் பாவத்தைத் தீர்த்துக்கொள்ளலாமென்று பெரியோர்களை வணங்கிக் கேட்பவர்களுக்கு அப்பாவங்களை நீக்கிக்கொள்ளுகிற முறைமை சொல்லலாமென்று வேதத்திற் சொல்லியிருக்கிறபடியினால் நீ நீதிநெறியோடு ஞானமுடையவனும் பாவத்தைத் தீர்த்துக்கொள்ளுகிற முறைமை எவ்விதமென்றுகேட்டால் அந்தவிதி சொல்லுவோமென்று பிராமணனபோதித்தான்—எ-று. (௭௨)

கற்றகேள்வியா லறிவினாற் கருணையாற்பவத்தைச
செற்றமாதவ வேதியன் றிருமொழிகேளா
வுற்றமாமதத் தொருகைமே லொருகையையத்தாக்கி
வெற்றிமாமுர சிடித்தென வெடிபட நகைத்தான்.

இ-ள். கற்ற கல்விகளினாலும் பெரியோர்களிடத்திற் கேட்ட கேள்விகளினாலும் ஞானத்தினாலுங் கிருபையினாலும் சனனமரணாதி அவஸ்தைகளை ஒழித்தத் தபோதனனாகிய பிராமணன் இவன் கடைத்தேறும்பொருட்டாகச் சொல்லிய வசனங்களைக்கேட்டுத் துன்மதன்

மதத்தினால் இரண்டுகைகளையும் ஒன்றோடொன்று பேரிகையடிக்க துபோலத் தட்டிப் பக்கத்திலிருக்கிறவர்கள திடுக்கிட்டுப் பயப்பட தக்கதாக நகைத்தான்—எ-று. (எ௩)

நக்கதுன்மத னன்னவற் பார்த்துநான்மறையோய்
தொக்கமாமறை நல்வினை சூழநத்தீவினைகண்
மிக்கவேழைநின் போல்பவர் விளங்குவாரன்றித்
தக்கசெய்கையென் போல்பவர்க் கெனசெயுஞ் சாற்றாய்.

இ-ள். அப்படி நகைத்த துஷ்டனாகிய துன்மதன் அந்த பிராம ணனைப்பார்த்து நான்குவேதமும் அறிந்த பெரியவனே வேதங்களி லேசொல்லும் புண்ணியபாவங்களை மிகுதியும் ஏழையாகிய உன்னைப் போல் பயந்து நடக்கிறவர்களைத் தொடருமேயல்லாமல் என்னைப் போல துணிந்து நடக்கிறவர்களை என்னசெய்யுஞ் சொல்லென்று கேட்டான்—எ-று. (எ௪)

தனதுகற்புடை யாளிடைத் தனயனைப்பெறுதற்
கனியகாலத்தி லணைவதே யறமெனுமயலா
மனைவிபாலணைந் தாற்கொடு வினையென்றும்வழங்கு
மினையயாவருங் காணநீ யிசைத்தவா றெற்கும்.

இ-ள். தன்னுடைய பதிவிரதையாகிய பெண்சாதியினிடத்தில் குலத்தைவிளங்கச்செய்யும் பிள்ளைகளைப்பெறும்பொருட்டு நல்ல மு கூர்த்தத்தையறிந்து கூடுகிறதே புண்ணியமென்றும் அயலார்பெண் சாதிகளுடனே கூடுகிறது கொடிய பாவமெனவும் உலகத்தில்வழங் கும் இவைகளை எல்லாம் அறிய நீசொன்ன முறைமையாகப் பாவபு ண்ணியங்களைக் கண்ணாற்கண்டால் ஒத்துக்கொள்ளத் தக்கதாயிருக் குமென்று துன்மதன்சொன்னான்—எ-று. (எ௫)

இன்னபோல்வன வெண்ணில விகற்பங்கள்கூறி
யன்னவந்தணன் றன்னையு நிந்தனையறைந்து
துன்னுநண்புடைப் பண்பிலாந் தூர்த்தர்களுடனுஞ்
சென்னியர்குழு வொடுந்தன திசையிற் சென்றனன்.

இ-ள். இவ்விதமாக அநேகவிகடங்கள்பேசிப் புண்ணியசொ ரூபமாகிய பிராமணனை இகழ்ந்துசொல்லி தனது துஷ்டசினேகிதர் களாகிய விடபுருஷர்களோடும் பாணாக்கூட்டங்களோடும் கூடிக் கொண்டு தன் மனதுபோனவழியே துன்மதன்போனான்—எ-று. ()

செஞ்சொலாரெறி யாம்பல செப்பியுங்கொடுமை
விஞ்சுதீவினை நீக்குமா றிசைநதிலன்வினைசெய

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

தன்சலில்லவர் நரகன்றி யருள்பெறுரென்று
நெஞ்சநொந்துதன் னிடத்தகன் றனனருணியங்கான்.

இ-ள். நன்மையாகிய சொற்களினால் அனேகவிதமாக நல்லறிவு வரும்படி என்னென்ன தருமங்கள்போதித்தும் பொல்லாத கபடத்தையுங் கொலைத்தொழிலகளையும் துன்மதன் விடாமற்போனான் பாபத்துக்கஞ்சாத துன்மார்க்கநடத்தை யுண்டாகியவர்கள என்றைக்கும் நரகவாதனைக் காளாவார்களேயல்லாமல் நல்ல சிவகதியை அடையமாட்டார்களென்று மனதுநொந்து யிரக்கமுண்டாகிய பிராமணன் தானிருக்குந் தலத்துக்குப்போனான்—எ-று. (௭௭)

சத்தியத்திரு மறைமொழிச் சயிமினிமுனிவ
மத்தர்போல்வருந் துன்மதன் மன்றினுணின்ற
நித்தனுடைச் சரணங்க ணோகணடுசிவன்
முத்தனுகிய துணர்ந்திலன் முழுதுணாமறையோன்.

இ-ள். நித்தியமாயிருக்கும் வேதங்களையெல்லாம் கற்றுணர்ந்த சயிமினிபகவானே திருச்சிற்றம்பலத்தி லெப்போதும் ஆனந்தநடனம்புரியும் அம்பலவாணமூர்த்தியின் பாதாரவிந்தங்களைச் சுராபானஞ்செய்து உடம்பு மறந்தவன்போல வருந துன்மதன் கனகசபைக்கெதிராகநின்று தரிசனஞ்செயதல் சிவன்முததனுகியதை அநதவைதீக பிராமணனறியான்—எ-று. (௭௮)

அந்தணற்பழித் தகன்றவத் துன்மதனெடுநா
ளிநதமானிலத் துலைநதுவிக் காடவியெய்தி
வநதவேலையிற் சிநதுமோர் வல்விடப்பாநதண
முந்துறக்கடித் தகன்றிட வாவிபொய் முடிநதான்.

இ-ள். பிராமணனை நிநதனைசெய்து அவடம்விட்டுத் துன்மதன் நெடுநாள்வரையில் எண்ணிறந்த தேசங்களதிரிநது இநத ஆரண்யதிற்போகின்றபோது ஓர்நாள இராத்திரிகாலத்தில் கொடுமைபொருந்திய விஷமுடைய பாமபானது அதி சீக்கிரத்திற்கடித்து விலகிப்போக உடனே விஷமானது தலைக்கேறி பூமியிற்சாயந்து மரணமடைந்தான்—எ-று. (௭௯)

வேறு.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மடித்தவாயின ரிடித்தசொல்லினர் மருண்டபார்வையர் கொடுந்தழற், குடித்தகுஞ்சியா பொடித்தபங்கியர் குறித்தவன்மையர்கதங்கொளத், துடித்தமேனியர் விடுத்தகாலனடு தூதாவாயுவின் விரைந்துபோ, மடித்தலத்தினா முடித்தவன்பினர்க ளக்கணத்தி லடுத்தனர்.

இ-ள். கோபாவேசத்தினால் உதட்டைக் கடித்துக்கொண்டு இடியிடித்ததுபோல் பயங்கரமாகிய கொடுஞ்சொற்களைச் சொல்லுகின்றவர்களும் தீப்பொறி சிந்தக் கண்களை யுருட்டிப் பார்க்கின்றவர்களும் அழற் கொழுந்தையும் செவ்வானத்தையும் ஒத்துச் சிவந்து நெறித்திருக்கின்ற தலைமயிரை யுடையவர்களும் வேகத்தோடு துடிதுடிக்கின்ற மேனியையுடையவர்களும் தேகத்திலுள்ள மயிர்க்குச் செறிந்தவர்களும் தத்தம் பராக்ரமங்களைக்காணபிப்பவர்களுங் கோபத்தினாற் கரசரணாதிகள் துடிப்பவர்களும் இரக்கமில்லாதவர்களுமாய் யமதருமராஜ னனுப்பவந்த தூதர்கள் காற்றினுங்கொடிய வேகமாய்க் கணப்போதுக்குள்வந்து துன்மதனைச் சுற்றிக்கொண்டார்கள்—எ-று. (அ0)

பற்றுமென்பர்சிலர் பற்றிவெங்கொடிய பாவியைத்தரையின் மீதெடுத், தெற்றுமென்பர்சில ரெற்றிவந்தசையை யீருமென்பலர்சிலர்மார்பிடைக், குத்துமென்பர்சிலர் தணடியாதொழிதல் குற்றமென்பர் சிலர் முற்றுறச், சுற்றுமென்பர்சிலர் பாசம்விசியுடல் சூழுமென்று பலர் துன்னினார்.

இ-ள். இவ்விதமாய்வந்த தூதர்களிற்சிலர் இவனைப்பிடியுங்களென்பாருஞ் சிலரிந்தக் கொடியபாவியைத் தூக்கிப்பூமியில் மோதுங்களென்பாருஞ் சிலரிவன் சதையைப்பறியுங்க ளென்பாரும் சிலர் மார்பிற் குத்துங்களென்பாரும் சிலர்இவனைத் தண்டியாவிடின் குற்றஞ் சம்பவிக்கு மென்பாரும் சிலர் இவனை விட்டகலாமற் சூழ்ந்து வாருங்களென்பாரும் சிலர் பாசக்கயிற்றை விசிப் பிடியுங்க ளென்பாரும் இப்படிப் பலவிதமாகச் சொல்லிக்கொண்டு துன்மதனை நெருங்கினார்கள்—எ-று. (அக)

துற்றவக்கொடிய நெடியதண்டதர தூதரெண்ணிலர்கடுன்மதன்
மற்றடம்புய மூரிந்தொசிந்துக வயங்கொள்பாச மிறுகப்பிணித்
தெற்றநாளுமெவ ருக்குமிக்கபய மெய்துவிப்பதொரு செய்கையே
பற்றுகின்றதம துலகினிற்கடிது படருவானினையும் வேலையின்.

இ-ள். சுற்றிக்கொண்ட கோரமாகிய யமதூதர்கள் அநேகர் துன்மதனது வலிமை யுடையதாய் விசாலம் பொருந்தி யிருக்குந் தோள்களொரிந்தொடியும்படிப் பாசக்கயிற்றினா லிறுகக்கட்டிஇவனை வருத்துகின்ற வேதனைகளைப்பார்த்து எந்நாளும் உலகின்க ணுள்ளவரும் பயம் அடையும்படியாய்ச் செய்விப்பதே நலமென்றும் யமபுரத்திற்கு அதிகவிரைவாய்க் கொண்டுபோகும்படிநினைக்குஞ்சமயத்தில்எ-று

நாதனாரருள் படைத்துயர்ந்தவரு ணந்திதேவரா றோவலான்றார்
மாதிரங்களொளி விசுபூதிநிறை வடிவதொப்பொழுது முடிவில

*நீதிலாதகிரி புண்டரத்தர்திரி நூலர்செஞ்சடையர் தூதளறும்*
*போதமிக்கசிவ தூதரெண்ணிலாகள் பொங்கியங்கெதிர் பொருந்தினர்.*

இ-ள். சந்திரஜடாதர மூர்த்தியாகிய பரமசிவத்தினது திருவருட் சுரங்கோங்கும் நந்திதேவர் உத்திரவின்படிக்குத் திருமேனியெங்கும் வெண்ணீறணிந்து கொண்டிருக்கும் பிரகாசமானது திக்குகளெல்லாஞ் ஜொலிக்கவும் மூவிலைச்சூலங் கையிற்றரித்துக்கொண்டுஞ் சிவந்த ஜடாமகுடங்களோடும் எக்காலத்தினு மழியாத தேகத்தையுடைய குற்றமற்ற சிவஞானம்பெற்ற சிவகணங்களநேகர் ஆர்ப்பரித்துக்கொண்டுவந்து துன்மதனைத் துன்பப்படுத்தி யிழுத்துக்கொண்டுசெல்ல நினைக்கும யமதூதர்களுக் கெதிராகவந்து சுற்றிக்கொண்டார்கள்—எ-று. (௮௫)

*மட்டிலாதயம தூதர்முற்றுமுக மாறிபோடவவன் வன்புயக்*
*கட்டறுத்தொளிர் விமானமீதினிது கடிதுவைத்தகில வண்டமு*
*முட்டநின்றவரு ணந்திதேவர்த முகம்பெறக்கருதி மாதவச்*
*சிட்டர்விட்டகல வரியதண்கயிலை செல்லுவார்கள்சிலா சென்றனர்.*

இ-ள். எண்ணிறந்த யமதூதர்களெல்லோரும்புறங்காட்டிபோடத்தக்கதாகத் துரத்தித் துன்மதனைப் பிணைகட்டாகக் கட்டியிருந்த பாசக்கயிற்றையவிழ்த்துச் சீக்கிரமாகச சுகத்தையடையுந் திவ்யவிமானத்திலேற்றிக்கொண்டு சில சிவகணங்கள் சகல பிரமாண்டங்களிலு நிறைந்தகருணாநிதியாகிய நந்திகேஸ்வரர் சன்னிதானத்துக்கு முன்பாகக் கொண்டுபோய் விடவேண்டுமென்று தபோதனர்களுக்குங் கிடைப்பதற் கரிதாகிய மஹாமகிமையையுடைய கைலாசத்திற்குப் போகின்றமார்க்கத்தில் அழைத்துக்கொண்டு போனார்கள்-எ-று

*தக்கதுந்துமி முழங்கமாமறை தழங்கவானவர் வணங்கமுன்*
*றொக்கபேரொளி விமானமீதுவரு சுடரவற்பொருவு துன்மதன்*
*செக்கரஞ்சடையு முக்கணும்பரவு திண்புயங்களொரு நாலுநற்*
*கைக்கபாலமு மிலங்குறச்சிவ கணாதிபர்க்கிடை கலந்தனன்.*

இ-ள். தேவதுந்துமி முதலிய வநேகவாத்தியங்கள் முழங்க இருக்குயசுசு சாமம்-அதர்வணமென்னும் நான்குவேதபாராயணங்களை சப்திக்க தேவர்கள்-முனிவர்கள்-தபோதனர்கள் முதலிய கணங்களுந் தோத்திரஞ்செய்து வணங்க அதிகபிரகாசமுற்ற திவ்யவிமானத்திற் பாநுகோடி கிரணம்போன்ற தேகமும்செவ்வானநிறமபோற் சிவந்து அழகிய ஜடாமகுடமும் மூன்றுகணகளும் திணிந்து விசாலம்பொருந்திய நான்குபுயங்களும் கரத்திற் பிரமகபாலமும்பெற்று விளங்கத்தக்கதாகச் சிவகணசேனைகளுடன் கலந்தான் துன்மதன்—எ-று

காலதூதுவர்கள கண்டுகொண்டெழுதிர்கதமுமானமு மிருந்திடன்,
மேவிட்டாவவனை யெங்கள்பால்விடுமின் விடுமினென்றவர் விரைந்து
சென், ருலகாலமிக ராவதாமெண வடர்ந்தபோதெதிர் திரும்பினர், சி
லஞானசிவ தூதர்நின்றுசிலர் சீறினரவரை நூறினர்.

இ-ள். ஓரம்போன கருநிறத்தையுடைய தூதர்கள்திரும்பிஅதி
கரோபமும அபமானமுமுண்டாகி நாங்கள்பிடித்த துன்மதனையெங்
கள் வசமாக்கவிடுங்கள் விடுங்களென்று திருப்பாற்கடலிற்பிறந்தஆல
காலவிஷமானது ஆர்ப்பரித்துக் கொண்டெழும்பிச் சிவபெருமானி
டத்திற் வந்ததுபோல் தொடர்ந்து வருவதைப்பார்த்துச சிவாசா
ரமுஞ் சிவஞானமுமுள்ள சில சிவகணங்கள்நின்று காலதூதர்களைக்
கோபித்து ஆயுதங்களினாற் குத்தியும் வெட்டியும் பெயதுஞ் சின்ன
பின்னங்களாகச் செய்தார்கள—எ-று. (அசு)

தாளினலன லுயிர்ப்பினலுயர் தடக்கையானகை முழக்கினற்
றேளினலிடியு முட்கமிக்கவிதிர் சொல்லினலடரும் வில்லினல்
வாளினலயில்கொள் வேலினன்மழு வலத்தினனயன வன்னியாற்
கூளிநாமகிழ வந்தெதிர்த்தவர் குலைந்துசாய்தர மலைந்தனர்.

இ-ள். காலகளினாலும் அனல்வீசுகின்ற பெருமூச்சுகளினாலும்
நீண்டுயர்ந்த கைகளினாலும் அட்டகாசஞ்செயது நகைக்கின்ற ஆர
வாரத்தினாலும் இடியும் நடுங்கும்படிப் பேசுகின்ற சொற்களினாலும்
விற்களிற்றொடுத்தெய்யும பாணஙகளினாலும் கத்திகளினாலும் ஒள்
ளிய கூர்மைபொருந்திய வேலாயுதங்களினாலும் கண்டகோடாலிக
ளினாலும் நெற்றியிலிருக்கும் அக்கினிக் கண்களினாலும் பேய்களும்
பசாசுகளும்கழுகுகளும் தங்களநாவினுக்குரிசையாகிய உணவுகிடை
த்ததென்று சந்தோஷிக்கத்தக்கதாக யமதூதாகளது தேகங்களெல்
லாங் கண்டதுண்டமாய் விழும்படிசசிவகணங்கள யுத்தஞ்செய்தார்
தார்கள்—எ-று. (அஎ)

கரமறுத்துமழல் விழிசிதைத்துமழல் காறுணித்துமலை யெனவி
ழச், சிரமிறுத்துமிரு கன்னதா[illegible]மொடு செவிதகாத்துமுயிருலையுமா
றுரமொடித்துமுயர் புயமுரித்துமெயி றகவிடித்துமவ ரிடையரிா,
வரமிரித்துநதி யுதிரமோடமிடன் மடியமிநகமரின் முடிமினர்.

இ-ள். கைகளையறுத்தும் கால்களைவெட்டியுங் தோளகளைச சி
தைத்தும் மலைபோல் பூமியில் உடல்கள சாயந்துவிழுந்தலைகளையறு
த்துஞ் சிவந்த கண்களைப்பிடுங்கியுங் காதினொடு கன்னத்தையுஞ்சே
ரத்தறுத்தும உயிர கலஙகத்தக்கதாக மார்பிலேபடித்துமபற்களையுதி
ர்த்தும் யமதூதர்களது உருவங்களழியவும் இரத்தவெள்ளம ஆறாக

ளிபோல் பெருகியோட்வுஞ் சிவகணங்கள் யுத்தத்தில் போர்செய்தார்கள்—எ-று. (௮௮)

செக்கர்வானமெரி குஞ்சிதாரகைகள் சிந்துதந்திரை கொண்டலே
தொக்குமேவுமுட லந்தடித்தனைய சொரிதழற்கண்விடு சுடர்கடா
மிக்கவெண்ணில்பல பிறைகளுள்ளவென மேவுபேரெயிறு விரவலா
லக்கணத்தியம படர்முடிந்தகள மந்தரத்தைநிக ராகுமால்

இ-ள். போர்க்களத்தில் மடிந்துகிடக்கும் யமதூதர்களது தலையிலிருக்கின்ற மயிர்கள் செவ்வானம்போலவும் உதிர்ந்துகிடக்கும்பற்கள் நட்சத்திரங்களைப் போலவும் கறுத்தநிறங்கொண்ட தேகங்கள் சூற்கொண்ட மேகங்களைப்போலவும் அக்கினியைப்போலிருக்கும் கண்கள் மின்னல்களைப்போலவும் கோரைப்பற்கள் அநேகமூன்றாம் பிறைகளைப்போலவும் பிரகாசித்துக்கொண்டிருக்கிற அந்த யுத்தகளம் ஆகாயத்தைப்போல் விளங்கிக்கொண்டிருந்தது—எ-று. (௮௯)

அரிந்ததுண்டமு மிழந்தகண்களு மழிந்தவாய்களு மலக்கணு
முரிந்தமார்பமு மயங்குநெஞ்சமு முடிந்தசென்னியு நெடுங்குடர்
சரிந்தவுந்தியு மொடிந்தெலும்பொடு தறிந்ததாள்களு முயிர்ப்புறம்
பிரிந்தபே ருடலு மன்றிநின்றதொரு பேருமங்ஙனிலை பேசினே.

இ-ள். அவைகளைச் சொல்லுமிடத்தில் மூக்கறுபட்டதுகளும் தோட்களிழந்ததுகளும் வாய்கள்வெட்டுண்டதுகளும் மார்புகள் துன்பத்துக்கிடமாகத் துளைபட்டதுகளும் மனது கலங்கினதுகளும்தலையொழிந்த முண்டங்களும் நீண்டகுடல்கள் சரிந்தவயிறுகளும் ஓடிந்தஎலும்புகளும் துண்டமாகிய கால்களும் உயிரகன்ற தேகங்களுமாகக் கிடந்தவைகளேயல்லாமல் அந்தயுத்தகளத்தில் உயிரோடுங்காயப்படாமல் இருந்த ஒரு யமதூதனுமில்லை—எ-று. (௯0)

புலகையாடமரி லூனுகர்ந்துமிசை பறவையாடின பதம்பெயர்த்
துலகையாடின மகிழ்ந்துபாரிட மடங்கவாடின விழுங்குறைத்
தலைகளாடின விரத்தசாகர தரங்கமாடின வரந்தவா
வுலகையாடல்கொள வல்லகாலபடீ ருற்றுலந்தகள முற்றுமே.

இ-ள். உலகங்களிலிருக்குஞ் ஜீவகோடிகளைத் தருமந்தவறாமல்வெற்றிகொள்ளும்வல்லமைபொருந்திய யமபடாள்வாள்-வேல்-கத்திமுதலிய ஆயுதங்களினால்யுத்தஞ்செய்துயுத்தகளமெங்குமடிந்திருந்தவர்களது மாமிசங்களைக் கொத்தித்தின்று ஆகாயமார்க்கத்திலெழும்பிப் பட்சிகள் பறக்கின்றவைகளும் வைத்த அடிகளைப் பேர்த்துப்பேர்த்துப் பசாசங்கள் கூத்தாடுகிறவைகளும் பூதங்களசந்தோத்துநடிக்கின்றவைகளும் வெட்டுண்டுவிழுந்ததலைகளெழுந்தெழுந்தாடுகி

ன்றவைகளும் இரத்தவெள்ளம் நிறைந்த சமுத்திரம்போலிருப்பினு ல் அலைகளசைந்தாடுகின்றவைகளுமாயிருந்தன—எ-று. (௯௧)

சிட்டரானசிவ ஞானமாதவர்கள் சிந்தைகோவலொரு வன்மைசெய்
திட்டபாவிகுல மிலைகுலைந்ததென வெய்துகாலன்விடு தூதரும்
கெட்டொழிந்துபொடி பட்டெனுமொரு கேடிலாதசிவ தூதர்கைப்
பட்டபேரொழிய நின்றபேர்யம பதத்தைநாடினர் படர்ந்தனர்.

இ-ள். மகிமைபொருந்திய சிவயோகிகளாகிய தபோதனர்கள் மனது கலங்கத்தக்கதாக வருத்தஞ்செய்யும் பாவிகளுடைய குல கோத்திரங்களும அவாகளது வாழ்வுங் கெட்டழிந்துபோவதுபோல் இயமராஜனனுப்பிய சேனைகளின்தேகங்களானது ஒருகாலத்து மழி வில்லாத சிவகணங்களால் வெட்டுண்டுங் குத்துப்பட்டு மிறந்தவர்க ணீங்க ஓடி வொளிந்திருந்த சிலதூதர்கள் இயமனிருக்குஞ் சைமினி பட்டணத்தை நாடி யோடினார்கள்—எ-று. (௯௨)

இன்னதென்னவுரை யாடொணுதபய மெய்தியோடினர்த மிறை வனைந், துன்னியச்சமோ டிறைஞ்சிநின்றுமிகு துன்மதன்றனுயிர் கொணடது, மன்னபோதுசிவ தூதர்வந்தது மடாந்ததுந்தம் படை க்கணஞ்,சின்னமுற்றதுவு மன்னவற்கொடவர் சென்றதுங்கடிது செ ப்பினா.

இ-ள். இன்னவகையென்று சொல்லுவதற்கு பயந்து வேகமா ய்த் தங்களரசனுகிய யமதருமனிடஞ்சென்று பயபத்தியுடனே வண ங்கிநின்று நமது தூதாகள் துன்மதன் பிராணனைப் பிடித்துக்கொண் டுவருகிறபோது சிவகணங்களடர்ந்து யுத்தஞ்செய்து துன்மதனை வி டுவித்துக்கொணடதுமன்றி நமது சேனைகளையெல்லாம வெட்டியுங் குத்தியும் யுத்தகளத்தில் மடியச்செயது அன்னவனை விமானத்திலே ற்றிக்கொணடு கைலாயத்திற்குத் துரிதமாய்ச் சென்றார்களென்று சொன்னார்கள்—எ-று. (௯௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தெரிந்ததூதர்சொற் செவித்துணை புகுதலுஞ் சினக்கொடுந் தழன் மேன்மேல், விரிந்தபங்கிகள் பொரிந்தனசெறிந்தவர் வெருக்கொளப் புருரங்கண், முரிந்தநெற்றிமீ தாடினசீடிய மூடியபுகைவிசி,யெரிந்த கண்ணிணை சொரிந்தன கொடுந்தழ லிருண்டன திசையெல்லாம்.

இ-ள். அத் தூதர்சொல்லிய சங்கதிகள் இரண்டு செவிகளினு லுங் கேட்டமாத்திரத்திற் கோபாக்கினி மென்மேலும்வளர்ந்து மன ததுள்ளடங்காமற் சபையிலிருக் [illegible] நடுநடுங்கத்

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY. MADRAS-41.

தக்கதாக இரண்டுபுருவங்களையும்நெரித்துத் திசைகளெல்லாம் புகை சூழக் கனைகளினின்றும நெருப்புப்பொறிபறக்கப் பார்த்தவர்கள் தலைமயிர் எரியத்தக்கதாக யமதருமன் கோபித்துப் பார்க்கும்போது எட்டுத்திசைகளும் பூமி ஆகாயமெங்கும் அந்தகாரமாய்ப் புகையாகிய இருள்சூழ்ந்துகொண்டது—எ-று. (௧௪)

மண்டுவெங்கதத் தழறலைக்கொண்டென வளர்குஞ்சி துளங்கப்பா
ரெண்டிசாமுகம் பொடிபடவெழுந்துணைக்கர மெறறிமுறறில்லாத
துண்டவெண்பிறைவெயிற்றிடை சிரிவெழுச் சராசரம் வெருக்கொள்ள
வண்டகோளகை வெடிபடவிடிபட வலமரநகை செய்தான்.

இ-ள். மூண்டெழுந்த கோபாக்கினியினால் சிவந்த தலைமயிர்கள் துடிக்கப் பூமியிலும் எட்டுத்திக்குகளிலும் பொறிபறக்க இரண்டுகரங்களையுங் கொட்டிக்கொண்டு மூன்றாம்பிறையைப்போன்ற கோரப்பற்கள் வெண்ணிலவெறிக்கத் தக்கதாகவுந் தேவர்களும் அசுரர்களும் திடுக்கிட்டு பயப்படவும் ப்ரம்மாண்டகடாகங்களும் வெடித்து இடியத்தக்கதாகவுஞ் சுழலத்தக்கதாகவும் யமதருமராஜன் நகைசெய்தான்—எ-று. (௧௫)

செஞ்சேவேயுமக் கொ[illegible] [illegible]லொரிலை சிறினுங்களினீங்கள்
வெஞ்சமர்த்திறம் வி[illegible]ங்கிமேரவிளைத்தலால் விளைந்ததோவிருநீவி
ரஞ்சலுள்ளது பகைமினென்பிபென வறைந்தனனவரஞ்சிக்
குஞ்சிதாழ்த்தெமர் குலைபாலவபலவர் குறையெனாகககதமிக்கான்

இ-ள். தூதர்களைப்பா[illegible] [illegible] [illegible]
சகத்திற்குள உங்களுடைய [illegible] [illegible]
கள் ஆணவங்கொண்டு [illegible] [illegible]
அதனாற்றானோ சிவகண[illegible] [illegible]
யும் பயப்படாமல் ஆதிசேயாடகமாக [illegible] [illegible]
ஒன்று இடியிடித்ததுபோல யமதருமராஜன் [illegible] [illegible]
ர்கள் பயங்கொண்டு வணங்கி [illegible] [illegible]
ர்களே எங்களைபடித்தக அசமதனை விடுவித்துக்கொண்டு கைலாயத்திற்குப் போகின்றபோது [illegible] [illegible] எங்களை வெட்டியுங் குத்தியும் காலைவித வருத்தஞ்செய்தார்கள்—எ-று. (௧௬)

தொடர்ந்துவந்தென தூதரைச்சிலரெதிர் தொலைப்பதேதொலைக்தாரென், படர்ந்தவாசகங் கெடப்பேபாயினு மடம்யமகிலங்கள், கடந்தவாண்மையு மானமுமென்பெருங் காவலுஞ்செங்கோலு, நடந்த வாமிகஞன்றுநன்றிதுவெனப் பன்முறைநவில்கின்றான்.

இ-ள். நமது தூதர்கள்பிடித்த மஹாபாதகனாகிய துன்மதனை விடுவித்துக்கொண்டு கைலாயத்திற்குப் போவதுமல்லாமல் தொடர்

ந்தவர்களைச் சங்கரிக்கும் யாம் ஏற்படுத்திக்கொடுத்த சமாசாரமுங் கே ட்கலாயிற்று இது மிகவும் புதுமையாயிற்று உலகமெல்லாம் வெற்றி கொள்ளும் என் ஆண்மையையுஞ் செங்கோலையுந் தேவாதிதேவர்க ளும் மீறி நடக்கமாட்டார்களே நன்றுநன்றென்று கோபத்துடனே பலதரஞ்சொன்னான்—எ-று. (கஎ)

இவைபுரிந்தவர் சிவகணத்தவரேறு மெண்ணாமற் றிறைவற்காந், தவமுயன்றவர் தமைமேதுதுயர் தடுத்தனமோ வென்றுங், கவருமெ ஞ்சினனஞ்சினன்றுன்மத னல்வினைக்கணக்குண்டோ, லவைவிளங் கிய சித்திரகுத்தர்நீ ரறைந்திடும் விரைந்தென்றான்.

இ-ள். இப்படி நம்முடைய தூதர்களைச் சங்கரித்தவர்கள் சிவ கணங்களென்று ஆலோசனைசெய்து சிவனுக்குகந்த தருமங்கள் சிவ பூசை சிவவிரதங்கள்செய்த சிவபக்தர்களை நம்முடைய தூதர்கள் விசாரியாமற்போய் பிடித்தார்களோவென்று சந்தேகமாகி மனதில் பயங்கொண்டு சித்திரகுத்தரைப்பார்த்துத் துன்மதன் செய்த தருமங் கள் செய்ததுண்டோ இருந்தால் கணக்குப்பார்த்துச் சீக்கிரமாகச் சொல்லுமென்று எமதருமராஜன் விசாரித்தான்—எ-று. (கஅ)

கருதினும்பயந் தரும்பெருங் கடுந்தொழிற் காலன்வாய்மொழிகே ளா, வெருவியங்கவர் பன்முறைபன்முறை மிகவுமங்காராய்ந்து, தரு மகேள்கொடுந் துன்மதனிப்பவந் தனின்மன மொழியாக்கை, மருவு புண்ணிய மணுவளவிலனென வணங்கியின் றெதிர்சொன்னார்.

இ-ள். நினைத்தபோதெல்லாம் அச்சத்தைக்கொடுக்கும் கொடிய அதிகாரமுடையவனாகிய எமதருமன் சொற்படிக்கு பயந்து உடனே கொடிய துன்மதன் புண்ணியஞ்செய்த கணக்குண்டோவென்று பல தரஞ் சோதித்துப் பார்த்துப்பார்த்து தருமராஜனே அவன் இந்த ஜனனத்தில் மனதில் நினைத்தாகிலும் வாக்கினாற் சொல்லியாகிலும காயத்தாற் செய்தாகிலும் அணுவளவேனும் புண்ணியஞ் செய்ததில் லையென்று சித்திரக்குத்தர்கள் தொழுதுநின்று விண்ணப்பஞ்செய் தார்கள்—எ-று. (கக)

துகடவிர்ந்ததோர் புண்ணியமிலனெனச் சொற்றலுந் தொலையா ப்பா, விகடனக்கொரு துணையிலை செயல்வியப் பெனவெழுந்தெய ண்ட, முகடுமேல்கொளக் கால்கிளர்கோட்டுவெம் மோட்டுமைம்மா மெருப், பகடுமுன்வர வெரினிடைப் புகுந்துமைப் பரவைபோல் வழிக்கொண்டான்.

இ-ள். சித்திரகுத்தர் கணக்குப்பார்த்து அணுவளவாகிலும் பு ண்ணியஞ் செய்ததில்லையென்று சொல்லிய வசனங்கேட்டு மஹாபா

வி இவன் ஒருவருக்கும் உதவிசெய்ததில்லை இப்பாவியாகிய துன்ம தனுக்குச் சிவகணங்கள் சகாயமாகவந்தது மெத்தவும் அதிசயமாயிருக்கிறதென்று சிங்காசனத்திலிருந் தெழுந்துவந்து பிரமாண்டகோளகைவரைக்கும் அளாவிய உயர்ந்த கொம்புகளையும் கால்களையுமுடைய கருமைநிறங்கொண்ட மஹாமேருகிரிபோல் அலங்காரமாகி வந்துநின்ற எருமைக்கடாவின் முதுகின்மீதிலேறிக்கொண்டு யமதூதகணங்கள் நீலநிறச சமுத்திரம்போற் சுற்றிக்கொணடு வரத்தக்கதாகக் கைலாசத்திற்குப்போகு மார்க்கங்கொண்டு எமதருமராஜன் சென்றான்—எ-று. (கய0)

அதிசயத்துட னிறந்தவரொழிந்துவந் தடைந்ததூதுவர்சூழ
முதிருமச்சமு மேல்கொளக்கோபமு மூண்டெழவிரைந்தேகி
விதிபரம்பரம் பொருளெனவருளென விளங்கினோர்யாவர்க்குங்
கதியளித்திட நின்றருளெம்பரன் கயிலையைக் கண்ணுற்றான்.

இ-ள். சிவகணங்களினால் இறந்ததூதர்களொழிய மற்றைத்தூதர்கள் சுற்றிக்கொண்டுவர மனதில் சிவகணங்கள்செய்த அதிசயமும் போகிறவிடத்தில் என்ன நடக்குமோவென்கிற அச்சமும் சிவகணங்கள் விசாரியாமல் இப்படிசெய்யலாமோவென்னுங் கோபமும் மேலு மேலும் அதிகரிக்க அதிவேகமாய்ச்சென்று வேதாந்த முடிவில்விளங்கிய பொருளென்றும் கருணைக்கடலென்றும் குறிப்பினாலறிந்த தபோதனர்களுக்கெல்லாம் சிவபதவியைக் கொடுக்கத்தக்கதாக பரமசிவன் எழுந்தருளியிருக்கும் கயிலாசகிரியை எமதருமராஜன் இரண்டு கண்களினாலும தரிசனஞ்செய்தான்—எ-று. (க0க)

ஆலகாலமுண் டருள்பரனாலயத் தணிக்கடைப் புறத்தங்கோர்
சீலமாயனு மயன்முதலோர்தொழுஞ் சிறப்பினாற்சிறந்தொன்று
ஞாலமேழினோ டேழும்வந்தெய்தினு நடுவிடைவெளிகாட்டுங்
கோலமாமணி மண்டபமுளதது கூறலாம்படித்தன்றால்.

இ-ள். பாற்கடலிற்பிறந்த ஆலகாலவிஷத்தைப் பானஞ்செய்து தேவர்களுக்கு அமிர்தத்தைக்கொடுத்து உலகங்களையெல்லாம் இரட்சித்த கருணையையுடைய பரமசிவன் எழுந்தருளியிருக்கும் அரமனை வாசல் முகப்பில் நவரத்தினங்களிழைத்த ஆசாரமாகிய சபாமண்டமத்தில் சிவதருமபரனை விஷ்ணுவும் பிரமதேவனும் தேவேந்திரன் முதலிய தேவகூட்டங்களும் எக்காலமும் பிரகாசித்துக்கொண்டிருக்கும் பூலோகமுதல் பதினாலுலோகங்களிலுமுள்ள யாவர்களும் வந்திருந்தாலும் நடுவிலிடைவெளி காண்பிக்கும் விசாலமாகி அலங்காரம்பெற்றிருக்கும் அந்த ஆசாரமணி மண்டபத்தின் சிங்கார அதிசயங்களை எவர்களாலுஞ் சொல்லிமுடியாது—எ-று. (க0உ)

மிக்கபேரொளி யுலகெலாம்விளங்குற விளங்குமண்டபந்தன்னிற்
றிக்குபாலருங் கடவுளர்தொகுதியுஞ் சென்றுமுன்பணிந்தேத்தித்
தக்ககாரியம் புகன்றிடவிஞ்சையர் சாரணர்புகழ்பாடச்
செக்கரஞ்சடை முனிவருஞ்சித்தருந் திரண்டுநின்றெதிர்போற்ற.

இ-ள். அதிக பிரகாசத்தினால் உலகங்களையெல்லாம் ஒளிரச்செய்யும் அந்த மண்டபத்தில் இந்திரன்முதலிய எட்டுத்திக்குப் பாலர்களும் தேவகூட்டங்களும் வந்துவணங்கித் தோத்திரஞ்செய்துதாங்கள் வந்தகாரியங்களை விண்ணப்பஞ்செய்யவும் வித்தியாதரர்கள்சாரணர்கள் சிவமகிமையைச் சங்கீதமாகப்பாடவும் சிவந்தசடாமகுடமுடைய முனிவர்களும் சித்தகணங்களும் தொழுது எதிர்நின்றுதுதிக்கத்தக்கதாகவும்—எ-று. (௧0௩)

தேடியாரணங் காண்கிலாப்பரம்பரன் றிருவுருத்தவந்தன்னா
னீடியாவருந் தொழப்பெறுங்கணதிபர் நிரைதொழப்பன்னூறு
கோடிகாலாவந் தெதிர்ப்பினும்விழுங்கிமுன் றேக்கிடுங்குறட்பூதம்
பாடியாடிமுன் னிறைஞ்சிடவலகைகள் பணிந்தெதிர்பரந்தோங்க.

இ-ள். வேதங்களுந்தேடி அறிதற்கரிதாகிய பரமசிவனை மகாதவங்கள்செய்து எப்போதுங்கண்டு தரிசிக்கப்பெற்றும் தேவர்கள்முதலிய யாவர்களும் வணங்கப்பெற்றும் இருக்கிற சிவகணங்களும் பிரளயகாலாக்கினி ருத்திரர்முதலிய பிரமதகணாதிபர்களும் நின்றுபணியவும் பல நூறுகோடி காலர்கள்வந்து போர்செய்தாலும் அவர்களைக்கூட எடுத்துவிழுங்கி ஏப்பமிடுங் குறுகியபூதங்கள் முன்னின்றுபாட்டுகள்பாடிக் கூத்தாடிக்கொண்டு தொழவும் பேய்க்கூட்டங்கள் தெண்டனிட்டு முன்னின்று புகழத்தக்கதாகவும்—எ-று. (௧0௪)

அந்திவெண்பிறை வேணியுநுதற்கணு மணிப்புயமொருநான்குஞ்
சுந்தரந்திக ழுழைமழுப்பிரம்புடன் சுரிகையுந்தடக்கையும்
வந்தசூரிய ரொண்ணிலர்புகுந்தன வடிவமுமுழுநீறு
மெந்தைதந்திடப் பெறுநந்திவானவ னிருந்தனனினிதம்மா.

இ-ள். மூன்றும் பிறையணிந்த சடாமகுடமும், நெற்றிக்கண்ணும், நான்குபுயமும், அழகியமானும், மழுப்படையும், பிரம்பும், கண்டகோடாலியும், சூரியும் பிடித்திருக்குங் கரங்களும் அநேகஞ்சூரியர்கள் ஒருமண்டலத்தில் உதயஞ்செய்ததுபோல் விளங்குந்திருமேனியும் நெற்றிமுதலிய தானங்களில்அணிந்திருக்கும் விபூதிபிரகாசிக்கவும் பரமசிவன் றிருவருள்பெற்ற நந்திகேஸ்வரர் ஆசாரமண்டபத்தில் நவரத்தின சிங்காதனத்தில் எழுந்தருளியிருந்தார்—எ-று.

இருவர்சங்கர ருளனெனநந்தியெம் மிறைவன்வீற்றிருந்தோங்கு,ம ருவருஞ்சபைச் சேணிடைக்கண்டுதன் வாகனத்திழிந்துள்ளம், வெ ருவியாடையை யொதுக்கிவாய்ப்புதைத்தருள் வெள்ளமேயனையான் முன், கருகுமுள்ளமும் வடிவமும்படைத்தவெங் காலன்வந் தெதிர் சார்ந்தான்.

இ-ள். பரமசிவம் இரண்டு உருவங்கொண்டதென்று வேதாக மங்கள்சொல்லும் மகிமையையுடைய இரண்டாஞ்சம்புவாகியும் நம துகர்த்தாவாகியுமிருக்கிற நந்திகேஸ்வரர்எழுந்தருளியிருக்குஞ் சபா மண்டபத்தின்பிரகாசம் ஆகாயத்தில் விளக்கமாயிருப்பதைப் பார்த் துத் தரிசித்தவுடன் எருமைக்கடாவை விட்டிறங்கி மனதில் அச்சங் கொண்டு மேலேயிருக்கும் வயிரபாசத்தை இடையிலிறுக்கிக் கட்டி க்கொண்டு கையினல் வாயைப்பொத்திக்கொண்டு கருணைக்கடலாகி யநந்திகேஸ்வரர் முன்னாக இருள்போன்ற மனச்சந்தேகம் படைத்த எமதரும ராஜன்வந்து எதிர்நின்றான்—எ-று. (கoகு)

கண்டிறைஞ்சிமுக் கால்வலங்கொண்டுடன் காசினியிடைச்சேர்ந்த
தண்டுபோற்படிந் தீரிருகாலருந் தலத்திடைப்பணிந்தேத்திக்
கொண்டலாமென நின்றுகால்குவியக்கை குவித்தியாவருங்கேட்ப
மண்டுபேரரு ணந்திவானவனெதிர் வகுத்துரைசெய்கின்றான்.

இ-ள். வந்து தரிசனஞ்செய்தவுடன் வணங்கி மூன்றுதரம்வல ம்வந்து உருக்கத்துடன் பூமியிற்கிடப்பதுபோல் பன்னிரண்டுதரம் தெண்டனிட்டெழுந்து கருமேகம்போன்ற கரசரணாதிகளைக் குவித் துச் சபையிலுள்ள யாவருங்கேட்க மிகுந்த பெருங்கருணை நிறைந்த நந்திகேஸ்வரர் சன்னிதானத்தில் விண்ணப்பஞ்செய்யத் தொடங்கி னன்—எ-று. (கoஎ)

தெண்ணிலாநறுங் கண்ணியஞ்சடாடவித் தெய்வநாயகனெங்கு
மண்ணிலாவிய பகவனெம்பரம்பர னுமையவ ளொருபாக
னெண்ணிலாவுயிர் புரிந்தவல்வினைபறிந் திதற்கிதென் றுறுந்தண்டம்
பண்ணுமாறெனக் களித்தியேபணிக்கயான் பணிவிடைப்படிநின்றேன்

இ-ள். தெய்வங்களுக்கெல்லாம் நாயகனுகிச் சந்திரனையும் வாச னைபொருந்திய கொன்றைமலரையுஞ் சடாமகுடத்தி லணிந்து எங் கும் பரிபூரணமாகியும் பராபரவஸ்துவாகியும் பகவனுகியும் பார்வதி யை யிடப்பாகத்தில வைத்துக் கொண்டிருக்கும் பரமசிவன்என்மே லருள்வைத்துக கணக்கிலலாமல் நிறைந்திருக்கும் ஜீவபேதங்கள்செ ய்தபாவங்களை விசாரித்துப் பாவங்களுக்குத் தக்கதாகத் தண்டனை கண்டனை செய்விக்கச்சொல்லி ஆதிகாலத்தில் கட்டளையிட்டபடி ப

ணிவிடை செய்துக்கொண்டு இன்னேரம்வரைக்கும் நின்றேனென்றான் காலன்—எ-று. (க0அ)

இற்றைநாள்வரை யோரிடையூறும்வந் தெய்திடா துலகத்தென்,
வெற்றியாணையே நடந்ததிப்போதது வியந்ததென்னதிகார,முற்றும்
வேண்டிலன் வேண்டினர்க்கீவதே முறைமையென்றடுக்தண்டஞ், சு
ற்றுபாசமங் கெடுத்துமுன்வைத்தனன் சுார்கணத்தொகைகாண.

இ-ள். பரமசிவம் கட்டளையிட்டநாள்முதல் இதுவரையில்உலகங்களில் அடியேனுடைய கட்டளையும் செங்கோலுந்தவறாமல்நிறைவேறிவந்தது இப்போது என்னுணையும் ஆக்கினையும் தவறிப்போயிற்று ஆகையினால் இந்த அதிகாரம் அடியேனுக்கு வேண்டாம்வேண்டுபவாகளுக்குக் கொடுங்களென்றுசொல்லிச் சகலதேவர்களுங்காணநந்திகேஸ்வரர்முன்பாக யாவர்களையுங்கொல்லுஞ் செயலுடைய இயமதண்டத்தையும் சுற்றியிழுக்கும் பாசக்கயிறலையும் காலன் வைத்தான்—எ-று. (க0கூ)

ஆற்றல்சால்யமன் செய்கைகண்டப்படி. யாகநின்னதிகார
மாற்றிவேறொரு காலனுக்குன்பதம் வழங்குதல்வழக்கால்வெள்
ளேற்றுநாயகன் சைவநன்னெறிதனக் கிடரிழையாதனபாற்
போற்றலாதநீ யொழிவதேநெறியெனப் பின்னரும்புகலகின்றான்.

இ-ள். மிகுந்த வல்லமையுடைய யமன் செய்ததை நந்திகேஸ்வரர் பார்த்து நீசொன்னபடியேயாகட்டும் உனது அதிகாரத்தைவாங்கி மற்றொருகாலனுக்குக் கொடுக்கிறதேநீதி வெண்மைபொருந்தியரிஷபவாகனரூடராகிய பரமசிவனது சைவமார்க்கந்தவறாதசிவனடியார்களை வணங்கி உபசாரஞ்செயயாமலும் மதத்தினால் விசாரியாமலும் வருத்தஞ்செயதமையான் உன் அதிகாரத்தை மாற்றிவைப்பதேகாரியமென்றுசொல்லி பின்னையுந் திருவுளம்பற்றுகிறார்—எ-று. ()

தேவர்தேவனுக் கன்பனையானுமெத் தேவருமுனிவோரும்
யாவருந்தொழத் தகும்பெரியோன்றனை யிடருறப்பிணிபித்த
பாவகாரிநீ யென்செய்தாய்சிவனையே பழித்ததன்றோவென்றுத்
தாவிலாதவெஞ்சினதொடுமருள்செய்தான்சங்கரனருளபெற்றான்.

இ-ள். தேவாதிதேவர்களும் பணிந்தேத்துந் தெய்வ நாயகனுகிய பரமசிவனுக்கன்பனை சகலதேவர்களும் தபோதனாகளும் மற்றுமுள்ள எவாகளும் வணங்கி வாழ்த்துதற்குரிய வண்மையுடைய சிவபகதனை பாசகபற்றினால் கட்டியிழுத்து வருநதும்படிசெயவிநதபாவியாகிய நீ என்னகாரியஞ்செயதாய இக்குறறஞ சிவனைசெயதது

போலல்லவாவென்று மிகுந்தகோபத்துடனே பரமசிவத்தினது அநுக்கிரகத்தை யடைந்த நந்திகேஸ்வரர் திருவாய் மலர்ந்தார்—எ-று.

கலிவிருத்தம்.

அடுந்திறற் கணத்திபர்க் கதிபன்கூறலு
மொடுங்கின னுயிர்ப்பில னுடலமுள்ளமு
நடுங்கினன் வேர்த்தன னாவுணங்கினன்
படுங்கொடும் பயமெனும் பரவையாழ்ந்தனன்.

இ-ள். வெற்றிப்பிரதாபமுடைய பிரமதகணத்தியர்களுக்கு அரசனாகிய இரண்டாவது சங்கரன் கோபித்துச் சொல்லியவுடனே தேகமெல்லாங்குன்றி மூச்சுவிடுவதற்கு மசக்கத்தனாய்த் தேகம் நடுக குற்று வியர்த்து நாவுலர்ந்து அச்சமென்னுங் கடலில்காலன்மூழ்கிக் கிடந்தான்—எ-று. (கக௨)

கற்றுணர் வுற்றநற் கலையுஞானமு
முற்றுணர் பேரருண் முயங்குமாதவ
வற்றைநாண் மறலித னச்ச மொப்புறச்
சொற்றிடி லெனிதெனச சொல்லலாகுமோ.

இ-ள். படித்தறிந்த நல்ல சிவசாத்திரங்களும் சிவஞானமும் பொருந்திய நன்மையைத்தரும் பெருமையுடைய இரக்கத்துடன் தபோமகிமைபெற்ற சயிமினிபகவானே நந்திதேவர் கோபித்துச்சொன்னபோது எமதருமன் அச்சங்கொண்டிருந்ததுபோல் மற்றொருவரிப்படி நடுக்கங்கொண்டிருந்தவர்களில்லை அக்காலன்பட்ட அவதியையெவர்களாலும் இவ்வகையென்று சொல்லிமுடியாது—எ-று.()

பயக்கடல் விழுந்தொரு படியினுலெழுந்
தயர்த்தன னறிவுவந் தடையப் பேரரு
ணயபவிடை விடாவரு ணந்திதேவன்முன்
வயத்திறன் மறலியும் வணங்கிக்கூறுவான்.

இ-ள். அச்சமென்னுஞ் சமுத்திரத்தின்கண் மூழ்கியிருந்தவன் ஒருவிதத்தினுல யெழுந்து மனந்தெளிந்து ஆலோசித்து இது நன்மார்க்கமென்றறிந்து பெரிதாகியகருணையின் நன்மையைவிட்டுநீங்காத அருட்கடலாகிய நந்திதேவர் முன்பதாக சகல லோகங்களையுஞ் ஜெயங்கொள்ளும் வல்லமையுடைய தண்டதரனாகிய யமன் சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு வணங்கிச சொல்லுகின்றான்—எ-று.(ககச)

தலைவநின் னேவலைத் தலையின்மீதுகொண்
டலைவற வென்றொழி லாறறினேன்மலைச

உ. வே. சாமிநாதையர் நூல் நிலை[illegible] ...சென்னை-20.

சிலையவ னன்பனை[illegible]
மிலைதிரு வுளத்தினுக் கிசைந்தசெய்கென.

இ-ள். கர்த்தனே தேவரீர் கட்டளையிட்ட கட்டளையைச் சிரத்தின்மேற்றரித்துக்கொண்டும் யாதும் வசையில்லாமல் என்னதிகாரம் நடத்திக்கொண்டும்வந்தேன் மஹாமேருவை வில்லாகவளைத்துப் பிடித்த சிவபெருமானது அடியார்களுக்குப் பொல்லாங்கு செய்ததில்லை ஆகையினால் தேவரீர் சித்தத்திற்றோன்றியபடி அடியேனுக்கு புத்தி கடாக்ஷிக்கவேண்டுமென்று காலன் வணக்கத்துடன் விண்ணப்பஞ்செய்தான்—எ-று. (கரு)

நண்ணுமிப் பிறப்பிடை நவிலித்துன்மதன்
புண்ணிய மொன்றிலன் புனிதற்கன்பனென்
றெண்ணவுந் தருவனோ வெனது தூதுவ
ரண்ணலே யறியுற தடர்ப்பரோவென்றான்.

இ-ள். கொடியனாகிய துன்மதன் இந்தஜனனத்தில் வந்தபின்பு ஒருகருமமுஞ் செய்ததில்லை பரமசிவனுக் கன்பனாகியிருந்தால் அவனை என்னுடைய தூதர்கள் பயமில்லாமற் பிடித்திழுப்பார்களோ வென்று நந்திகேஸ்வரர் சமுகத்தில் காலன் வினவினான்—எ-று. ()

என்றலு முகிணகை யிளநிலாவெழ
நன்றிது நன்றென நந்திவானவ
னன்றவற் பார்த்திவ னரனுக்கன்பனென்
றின்றுநீ யுணர்ந்திலை போலுமுள்ளதால்.

இ-ள். இப்படிக் காலன்கூறினவுடன் நந்திகேசுவரர் சிறுநில வெழ்பவதுபோற் குறுநகைகொண்டு இது நல்லகாரியந்தான் நல்லதென்று காலனைப்பார்த்து துன்மதன் சிவரூபமாக யிருப்பதைக்காட்டி இவன் சிவபக்தி யுடையவனென்று உன்மனதில் தோன்றியதில்லை ஒருகாரியமும நன்றாகவிசாரித்தறிந்த திலலைபோலிருக்கிறதென்று திருநந்திதேவர் திருவாய்மலர்ந்தார்—எ-று. (கஎ)

வன்பெரு நரகிடை மறுகு வோர்சிவ
னன்பரை யிகழ்பவ ரனறியங்கவா
பொன்பொதி சடாடவிப் புனிதற் கொபபெனா
வின்புறு வோர்கதிக் கிறைவ ராவரால்.

இ-ள். சிவனடியார்களை நிந்தனைசெய்தவர்கள் பயங்கரமாகிய நரகங்களில வருத்தப்படுவார்கள் சிவபக்தர்களது தங்கநிறச[illegible]வ

னத்தை பரமசிவனுக்குச் சமானமென்றெண்ணி வணங்கி நடக்கிற வர்கள் சிவபதவிக்கரசர்களாக விருப்பார்கள்—எ-று. (கக அ)

நிறையடி யவர்பிழை நீக்கி யாளுமெங்
கறைமலி களரருட் கடன தாதலான்
முறைபுரி நீயறி யாது முற்றிய
வறைபெருங் குறைபொறுத் தருள்வ னஞ்சனீ.

இ-ள். நிறைந்த சிவபக்தியுடைய அடியார்கள்செய்த குற்றத்தைப்பொறுக் தாண்டு இரக்ஷிப்பது நீலகண்டத்தையுடைய பரமசிவனது கருணைக் கடையாளமாகவிருக்கும் ஆகையால் நீ யறியாமல் உன் னதிகாரமுறைமையாகச் செய்வித்தாய் அந்த பெரிதாகிய குற்றத்தைச் சிவன் பொறுத்து இரட்சிப்பார் நீ பயப்படாதே என்றார்—எ-று. (ககக)

அற்புதற் கன்பனே யாமித் துன்மதன்
முற்பக னல்வினை முயங்கமுன் னோநாட்
டற்பர மாகிய தமனி யப்பொதுச
சிற்பர நாடகந் தரிசித் தானரோ.

இ-ள். இத்துன்மதன் முற்பிறப்பில் அநேகபுண்ணியங்கள் செய்ததினால் இச்சனனத்தில் ஒருநாள் வேதாந்த மஹா வாக்கியமாகிய அந்த அற்புதப்பொரு ளுருவத்தையுடைய கனகச்சபையினிடத்தில் ஞானசொரூபனாய் விளங்கும் அம்பலவாணமூர்த்தியினது ஆனந்தத் தாண்டவவிநோதத்தைத் தரிசனஞ்செய்தான் ஆகையால் பரமசிவத்துக்கு அன்பன் என்று நந்திதேவர் காலனுக்கு அறிவுவரத் தக்கதாக உபதேசித்தார்—எ-று. (கஉ0)

தாவருஞ் சிதம்பரந தன்னி லற்புத
மேவருந் திருநட மேவிக் காணபரேற்
றீவினை மிக்கவர் திருந்து புண்ணியர்
யாவரு முத்தரோ ரைய மில்லையால்.

இ-ள். மஹாமகிமையையுடைய சிதம்பரகலத்தில் அதிசயமாக ஆனந்தநடனம்புரியும் விநோதத்தை கொடியபாவிகளாயினும் மேன்மைபொருந்திய தவமிழைத்தவராயினும் போய் தரிசிப்பார்களேயாகில் அவர்களசெய்த பாபங்களெல்லாநதொலைநது புண்ணியரூபமாகிச் சிவபதவியையடைவார்கள் இதற்கொரு சந்தேகமும் இல்லையென்று எமதருமராஜனுக்குப் போதித்தா—எ-று. (கஉக)

ஆதலி னின்றறி யாது செயதவித்
தீதுநீ யன்பனுஞ் செல்கை கொணடரு

ஞதனும் பொறுத்தன னடுங்க யானையும்
வேதனைத் தண்டமும் விளங்கச் செய்தியால்.

இ-ள். ஆகையினால் நன்றாகவிசாரித் தறியாமல் நீ செய்தகுற்ற த்தைப் பரமசிவன்பொறுத்தார் எதனாலெனின் நீ சிவபக்தியுடையவனென்று சித்தத்திற் றோற்றியிருப்பதால் இனிமேலாகிலும் பய பக்தியுடன் நன்றாகவிசாரித்துச சிவனடியார்களைப்பணிந்து மற்ற பாவிகட்குரிய தணடனைகளைப் புரிநதுகொண்டிருக்கச்சொல்லி நந்தி தேவர் கட்டளையிட்டார்—எ-று. (கஉஉ)

செய்த[illegible]குளரெனிற் சிவன்றன் றொண்டர்பா
லெய்தத றவிர்தியே யிறைவற் கன்பனீ
கைதவ மிலாதவெங் கால நின்பதி
யெய்தினி லேகென நோக்கிக் கூறினான்.

இ-ள். சிவனடியார்க ளென்னபாதகங்கள் செய்திருந்தாலும் அவர்களிடத்திற்கு நீ போகாமலிருந்தால் நீ சிவனுக்குரிய பக்தனு வாய் மனதில் கபடில்லாமல் அறியாமையினாற்செய்த குற்றத்தைப் பொறுத்தோம் ஆதலின் உனது சைமினிபட்டணத்திற்குச் சீக்கிர மாகப்போவென்று நநதிகேசுவரர் நமனுக்குக்கட்டளையிட்டார்-எ-று.

அந்தக னதிசயித் தடியர் தீவினைப்
பந்தனை யெய்தினும் படர லென்றனை
யெந்தையெம பரம்பரற் கன்ப ரென்பவர்
தந்தம தொழுககனீ சாற்றென் றேத்தினான்.

இ-ள். நநதிதேவர் திருவுளம்பற்றிய புத்தியைக்கேட்டு எமத ருமன் மிகவு மதிசயித்துச் சிவபக்தர்கள் எனனபாதகஞ்செயதிருந் தாலும் அவர்களிடத்திற்குப் போகவேண்டாமெனறு கட்டளையிட் டீர்கள் சிவனடியார்கள் இவ்வகை யிருப்பார்களென்றும் அவர்கள் நடத்தையும் குணங்களும் இவ்வகைப்பட்டதென்றும் தேவரீர் திரு வுளம்பற்றவேணடுமென்று காலன்றொழுது தோத்திரஞ்செயதான்.

அற்றவன் மொழிதல்கேட் டரனுக் கன்பர்தம
முற்றபே ரொழுக்கமே யுணர்ந்து வான்புலன்
செற்றெழு முணர்வுடைச் சிலாத ரன்பெறு
நற்றவப் பயனிகர் நாதி கூறுவான்.

இ-ள். இயமனுரைத்த மொழியைக்கேட்டுச் சிவனடியார்கள் எப்படியிருப்பார்களென்றால் ஐம்பொறிகளின்வழி உலக விவகாரங் களில் மனதுசெல்லாமலடக்கி சிவனையும் சிவனடியார்களையும சிவன

திருவிழாக்களையும் கண்களினாற்காணவும் சிவசரித்திரங்களையும் சிவ பக்தர்களது கதைகளையும் செவிகளாற்கேட்டும் சிவனுக் கற்புதமா கிய சந்தனம் மலர்முதலிய வாசனைத்திரவியங்களை மூக்கினால் அனு பவிக்கவும் சிவப்ரசாதமாகிய அன்னபானாதிகளை நாவினால் சுவைத் தானந்திக்கவும் வேதாகமசாஸ்திரப்படி தோத்திரஞ்செய்யவும் சிவ சம்பந்தமான சீத உஷ்ணமுதலியவைகளை ஸ்பரிசத்தால் அறியவும் மனதைச் சிவத்திடத்திற்செலுத்தி இக் குணாதிசயங்களையுடைய தொண்டர்களின்செயலைப் பஞ்சேந்திரியங்களைவென்று சிவஞான முற்ற தபோதனராகிய சிலாதரரென்பவர் அடைந்த தவப்பயனை யொத்த நந்திதேவர் தருமராஜனுக்கு உபதேசி[illegible]று. (கஉ௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மூன்றைமறை யாகமநன் னெறியணிபுண் டரராக முழுது நீற் றோர், சிந்தையினன் பிலரேனுஞ் சிவார்ச்சனைகள் செயவிரும்பிச் செய்வோர் தீங்கின், பந்தமுள ரேனுமுருத் திரசிவசங் கரவமல பர மவென்று, சந்ததமு முரைப்போர்க ளிவரன்றே விறைவனுக்குத் தரும்பேரன்பர்.

இ-ள். ஆதிவேதாகமவிதிப்படிக்கு விபூதியை மூன்றுரேகைக ளாய் அவையவங்களில் தரித்தவர்களும் சரீரமெல்லாம் அணிந்தவர் களும் மனதில் பக்தியோடும் பக்தியில்லாமலும் சிவபூசைசெய்யு மவர்களும் கொடியபாவங்களைச்செய்தவர்களும் நாவினால் உருத்திர னே சிவசங்கரனே மலமற்லவனே பரமனே என்று சிவநாமகீர்த்த னங்களை எப்போதுஞ் செய்வார்களாயின் இவர்களெல்லாருஞ் சிவ னுக்கு உரிமையான பெருமையையுடைய சிவபக்தர்கள்—எ-று. ()

செஞ்சடையோன் றெய்வவிழாச் சேவிப்போ ரங்கவற்குச் செவ் விமாறு, வஞ்சுவைகூ ரமுதுதக மளித்துளோர் சிவாலயங்க ளகிலம் போற்றத், தஞ்சமெனச் செய்வோர்செய் விப்போர்கண் டுளமகிழ் வோர் சைவநீதி, விஞ்சுசிவ னன்பர்தமைப் பூசிப்போ ரீசற்கு மிகுந் தநேசர்.

இ-ள். சிவந்த சடாமகுடத்தையுடைய பரமசிவனுக்கு திருவி ழாக்கள் செய்விப்பவர்களும் அவர்களுக்கு அவ்விடத்தில் அறுசுவை பதார்த்தவகைகளுடன் அன்னதானங்கள்செய்தவர்களும் தண்ணீர் ப்பந்தல்வைத்தவர்களும் உலகத்தார் தரிதனஞ்செய்து பூசித்துக் கடைத்தேறத்தக்கதாகச் சிவாலயங்கள் கட்டுகின்றவர்களும் கட்டி வைக்கப்பட்டவர்களும் அவர்களைக்கண்டு சந்தோஷித்துப் புகழ்கி ன்றவர்களும் சைவநெறிதவறாத சிவனடியார்களை வந்தனை வழிபாடு

த்து அவ்வடியார்களுக்கு அன்னவஸ்திரங்கள் பக்தியுடன்கொடுத்தவர்களும் சிவனுக் குகந்தபக்தர்கள்—எ-று. (கஉஎ)

சிரமீதுங் களமீதுங் கன்னமீதும் புயத்துஞ் செங்கைமீது, முரமீதுங் கண்டிகையைத் தரித்துளோரு பனிடதத்தும் ஞேர்வேலும்,
வரமீயத் தக்கசத வுருத்திரமந் திரநவில்வோர் மறைகட் கெல்லாம், பரமீதென் றுளருமெழுத் தஞ்சுமுறைப் போர்கள்சிவ பத்தராவர்.

இ-ள். சிரத்திலும், செவிகளிலும், கண்டத்திலும், தோள்களிலும், மார்பிலும், உருத்திராக்ஷங்களை அணிந்திருக்கிறவர்களும், வேதங்களின்சிரங்கள் [illegible] உபநிடதங்களைப்படித்துப் பொருளறிந்தவர்களும் விரும்பினோ, [illegible]வரங்களைக்கொடுக்கும் வேதங்களின் ரகசியப்பொருளாகிய ஸ்ரீ ருத்திரமந்திரத்தை நூறு உரு ஜெபிப்பவர்களும் அந்த உருத்திரமந்திரத்திலடியில் விளங்கியும் வேதமந்திரங்களுக்கெல்லாம் மேலாகி அரசாய்விளங்கும் பஞ்சாக்ஷரமந்திரத்தை எப்பொதுஞ் ஜெபஞ்செய்கின்றவர்களும் உத்தம சிவபக்தர்கள்—எ-று. ()

எந்தைபரன் றனைநோக்கி யுய்யானந் திருக்குளங்க ளேற்றகூவ, நந்தவனம் பலசெய்வோர் செய்விப்போ ரருட்சைவ நற்றுனத்துச்
சிந்தைமகிழ் வுடனுழைவோ ருறைவோர்க்கு வேண்டியன செய்வோரீச, னந்தமிலா வடியவர்தம் மேலவ்பணி விடைத்தொழிலோ ராறுங்கன்பர்.

இ-ள். பரமசிவனுக்கு உதவியாகத் தோப்புகள் நந்தவனங்கள் திருக்குளங்கள் கிணறுகள் உண்டாக்குகின்றவர்களும் மேற்சொல்லிய சிவதருமங்களைச் செய்விக்கின்றவர்களும் சிவசம்மந்தமாகிய சிவாலயங்களில் மனமகிழ்ந்து சிவ பணிவிடை செய்துகொண்டிருப்பவர்களும் அவர்களுக்கு அன்ன வஸ்திரமுதலானவைகொடுத்து நடப்பிப்பவர்களும் சிவனடியார்களுக்குப் பணிவிடைசெய்பவர்களும் சிவனுக்குரிமையான பக்தர்கள்—எ-று. (கஉஅ)

அரியயனோ முதலான புத்தேளி ரனைவரினு மழியாவீசன், பெரியனென வுணர்ந்துளோ ரகவன்றன் னுமைத்திற் பெரியோர்பேணும், சூரியவுருத் திரபரம வமலசிவ சங்கரவென் றுனைக்குமிந்தத், தெரிவரிய திருநாமம் பெரிதென்போர் சிவலோகச் செல்வராவார்.

இ-ள். பிரமன்-விஷ்ணு-தேவேந்திரன்முதலிய தேவர்களினும் பிறப்பிறப்பற்ற பரமசிவனே அதிகமென்றுணர்ந்த பெரியோர்களும் அகஸ்தியர்-அத்திரி-கௌதமர்-பதஞ்சலி - வியாக்ரமபாதர்முதலாகிய சிவபக்தர்களைத் தோத்திரஞ்செய்கின்றவர்களும் அறிதற்கரிதாகிய பரமசிவனே-உருத்திரனே-அமலனே-சிவசங்கரனே என்றும் இத் திரு

நாமங்களைத் தினம் ஓதுதல் மஹாமகிமையைத்தருமென்று உணர்ந்தவர்களும் சிவலோகத்திற் கதிபராவார்கள்—எ-று. (௧௯0)

அறையுமறைப் பெரும்பற்றப் புலியூரி லன்பினரான் பகன்றோரோ னு, முறைபவர்க ளங்கவர்க்குத் தூரத்து மணித்திருந்து முதவத்தக்க, நிறைவுபெறும் பொருளீவோர் சேயதேயத்துறைந்து நிறைந்தசெல்வப், பொறைமலியம் பலங்காணுங் காதலுடை யோரெம்மாற் போற்றுந்தொண்டர்.

இ-ள். வேதங்களெல்லாம் புகழும் மகிமையுடைய சிதம்பரத்தில் பக்தியுடனும் பக்தியில்லாமலும் வாசமாகவிருப்பவர்களும் தூரதேசங்களிலும் சமீபங்களிலும் இருந்து சிதம்பரதலத்தில் வாசஞ்செய்பவர்களுக்கு வேண்டிய பண்டபதார்த்தவகைகளைக் கொடுப்பவர்களும் தூரதேசங்களிலிருந்து இலட்சுமீகரம் நிறைந்து அழகுபொருந்திய பொன்னம்பலத்தில் சபாபதியைத் தரிசனஞ் செய்யவேண்டுமென்னும் ஆசைகொண்டிருப்பவர்களும் நாம் புகழத்தக்க மகிமையையுடைய சிவபக்தர்களென்று நந்திதேவர் திருவுளம்பற்றினார்—எ-று. ()

அடுத்தமணி யம்பலத்து ளானந்தத் தாண்டவஞ்செய் தருணந்தாள்க, ளடுத்தபிறப் பிடையொருகாற் சென்றடைந்து கண்டுளோ ரொன்றுங்கண்டோர், வடுத்தவித் தலந்தன்னி னன்புளரன் பிலரோனு மாய்ந்துளோர்கள், கடுத்தகமை பெறவிளங்குங் கண்டத்தெம் மன்டர்பிரான் கணத்துளோரால்.

இ-ள். நவரத்தினமயமாகிய திருச்சிற்றம்பலத்திலெப்போதும் ஆனந்தத்தாண்டவம் புரிந்து அநுக்கிரகஞ்செய்கின்ற பாதாரவிந்தங்களை இச்சனனத்தில் ஒருநாளிற்போய்த் தரிசனஞ்செய்தவர்களும் தினம் தரிசிக்கிறவர்களும் பக்தியுடனும் பக்தியில்லாமலும் குற்றம் நீங்கிய அத்தலத்தில் இறந்தவர்களும் ஆகிய இவர்கள் ஆலகாலவிஷத்தால் அலங்காரம்பெற்று விளங்கும் திருநீலகண்டத்தையுடைய எமது தேவனாகிய பரமசிவத்தின் கணங்களிற் சேர்ந்தவர்களாவார்கள்—எ-று. (௧௯௨)

அருவினைசெய் யாதீச னடியவர்பூ சனைதவறா தரன்றாட்கன்பாய்த், திருநடங்கண் டவ்வுருவஞ் சிந்தனைசெய் தருணமஞ் செப்பிச்சைவ, மருவருமந் திரம்போற்றிச் சிவஞானத் துடன்றில்லை வைகிமாய்ந்தோ, ரொருமைதிக ழன்பர்களி னுத்தமரி னுத்தமரொன் றுரைக்கற்பாலோர்.

இ-ள். கொடிய பாதகங்களைச்செய்யாமல் சிவனடியார்களை எப்போதும் தவறாமற் பூசைபுரிந்து சிவபெருமானது பாதாம்புயங்களில்

யக்தியுடையவராகி அம்பலவாண மூர்த்தியின் ஆனந்தத்தாண்டவ சொரூபத்தைத் தரிசனஞ்செய்து ஞானரூபமாகிய சபாபதியையும் சிவசிதம்பரமென்னு மேலாகியதலத்தையும் பஞ்சாட்சர மந்திரத்தையுஞ் ஜெபஞ்செய்துகொண்டு சிவஞானத்துடன் பூலோககயிலாசமாகிய சிதம்பரதலத்தில் வாசமாயிருந்து இறந்தவர்கள் சிவனே தெய்வமென்று மனதில் துணிவுகொண்ட சிவனடியார்களுக்குள் மேன்மையுற்ற வரமடைந்தவர்களினும் பெருமையுடையவர்களாவார்கள் அவர்கள் பெருமையை நம்மாலே சொல்லிமுடியாதென்று நந்திகேஸ்வர் காலனுக்குபதேசித்தார்—எ-று. (கடங)

யாமுரைத்த விதிமொழிக்கோ ரையமில்லை யைய்யமில்லை யாமுன்கூறுங், தோமகன்ற வடையாள முடையோரை யடைந்தவர்பாற் றுன்றுக்கமெய்த, வேமமுறத் தண்டங்கள் புரிதமொழி வாயுன்ற னேவற்றூதர், தாமுணர வித்தகைமை தனிலொன்றுங் குறையாது சாற்றுவாயால்.

இ-ள். யாம்சொல்லிய இந்தவசனங்களுக்குச் சற்றேனுஞ் சந்தேகமில்லை முன்னுரைத்த குற்றமற்ற அடையாளங்களுள்ள சிவனடியார்களிடத்திற்கு நீபோகவேண்டாம் அவர்கள் இம்மியிப்படியாய்ப் பிடித்து வருத்தமுறத் தண்டிக்கவேண்டாம் உன்னுடைய தூதர்களுக்கு இவ்வகைகளெல்லாம் ஒன்றுந்தவறாமற் றெரியச்சொல்லி இனி அவர்கள் புத்தியுடையவர்களாய் நடந்துகொள்ளும்படி திட்டஞ்செய்யென்று சூரியபுத்திரனாகிய தருமனுக்குச் சிலாதரர்புத்திரர் உபதேசித்தார்—எ-று. (கடச)

பரவுபல சாதிகள்பல் லாச்சிரமத் தோர்மறையைப் பழித்துளோர்கள், விரவுருநாய்க் கெடுத்திடுவோர் பதிதரிழி குலத்தர்முதல் வியன்பசுக்க, ளரவுபுழுக் கரங்கருமாய் பாதவஞ்சூர் கொடிபுள்கூ றாதிநிலைத், தரைமருவு சராசரந்தீ வினையுடைய வெனினுநீ சார்வாயல்லை.

இ-ள். பிராமணர்முதலிய வருணத்தார்கள் பிரமசாரிமுதலிய வாச்சிரமங்களுடையவர்கள் வேதத்தை நிந்தனைசெய்தவர்கள் வேட்டைநாய்களுக்குச் சோறிடாதவர்கள் விரதங்களைச் செய்யத்தொடங்கி நடுவில் விட்டுவிட்ட பதிதர்கள் சண்டாளர்முதலிய தாழ்குலத்தோர்கள் பசுக்கள்-பாம்புகள்-புழுக்கள்-கழுதைகள்-யானைகள் - குதிரைகள்-மரங்கள்-கொடிகள்-பறவைகள்-நெற்கள்முதலிய சரங்களும் அசரங்களும் இச்சிதம்பரதலத் தெல்லைக்குளடங்கிய மற்றவைகளும் என்னபாவஞ் செய்திருந்தாலும் அவர்களிடத்திற்கு நீபோகாதேயென்று இரண்டாஞ்சங்கரனாகிய நந்திகேஸ்வரர் தண்டதரனுக்குத் தெரியச்சொன்னார்—எ-று. (கடரு)

அத்தகைய தேதென்று வினவுதியேற் றில்லையிடத் தியாரும்யாவு,
மெய்த்தகையசிவனுருவாய் விளங்குவர்கள்பரமனுக்கு மிக்கநேசப்,ப
த்தரிவை கொண்டியானு மரியயரும் விண்ணோரும் பணியத்தக்கோர்
மொய்த்தமிடலோயுன்றற் றீண்டரியர் தூதர்க்குமொழிவாயென்றான்.

இ-ள். அத்தன்மையாகிய தென்னகாரணமென்று உன்மனதிற் சந்தேகந்தோன்றி நீகேட்பாயானால் சொல்லுகிறேன்கேள் சிதம்பரதலத் தெல்லைக்குள்ளாகவிருக்கும் மானிடர்முதலிய சரங்களும் கல் மரமுதலிய அசரங்களும் சிவனுடைய திருவுருவா[illegible]ரகாசிக்கும் அவர்களோ பரமசிவத்திற்குப் பிரியமாகிய சிவபக்[illegible] அதுகொண்டு இரண்டாஞ்சங்கரனை நானும் அரிபிரமாதி தேவா[illegible]ம் வணங்கி வாழ்த்துதற் குரிமையானவர்கள் அவர்களை நீ தீண்டுவதற்கு யோக்கியமுடையவனல்லன் ஆதலால் இவ்வசனங்களையெல்லாம் உன்னுடைய தூதர்களுக்குப் புத்திவரும்படிச் சொல்லென்று சிவபக்தியே திருவுருக்கொண் டெழுந்தொளிரும் நந்திதேவர் திணிந்தபலமுடைய கூற்றனுக்குக் கட்டளையிட்டார்—எ-று. (௧௬௬)

அருளுடையா னணிக்கயிலைக் கோயிலு யகஞ்செய்யு மண்ணல்பாசத், திருளுடையக் கருணைபொழி நந்திவா னவன்மொழிகேட் டிதயந்தன்னின், மருளுடைய வணங்கிடைக்கொண் டங்கனகின் றுறையுமையாளன் மனுளற்போற்றித், தெருளுடைய விறன்மறலி தூதரொடுந் தனதுலகஞ் சென்றுசேர்ந்தான்.

இ-ள். கருணையையுடைய கயிலாசநாதன் அரண்மனைவாயிலிற் சகல அதிகாரங்களையுஞ் செலுத்தும் தலைமையுடையவரும் அஞ்ஞானமென்னும் இருளையோட்டி ஞானசூரியனாகி விளங்குகின்ற சிலாதநாது புத்திரருமாகிய நந்திகேஸ்வரர் உபதேசத்தைக்கேட்டு மனதில் சிவபக்தியுண்டாகி பயபக்தியுடன் இரண்டாஞ்சங்கரர் பாதாரவிந்தங்களுக்குத் தண்டனிட்டுக் கைகுவித்து விடைபெற்றுக்கொண்டு அவணின்று பார்வதியார் பரமசிவ னெழுந்தருளியிருக்கும் திக்குநோக்கித் தண்டனிட்டு அதிகபலன்பெற்ற எமதருமராஜன் தன்சேனைகள் சூழ்ந்துவரும்படிச் சயிமினிபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தான்—எ-று. (௧௬௭)

சிந்தைமகி ழன்புடைய சயிமினிவ னுன்மதன்றன் செய்கைமிக்க மந்தனைமீக் கிதுநினக்கு வகுத்துரைத்தோ மாதலான் மன்றுளாடு, மந்தமிலாப் பதங்கண்டோர் சிவகதியை யடைகுவரென் றறைந்தானென் றன்றுஞ், சந்தநெறி மறைநூலைத் தலைக்கண்டுங் குலகசரித்த தவத்தோர்சிங்கப்.

இ-ள். மனதில் சந்தோஷங்கொண்டு பக்தியையுடைய சயிமினி யேக்வான் துன்மதனுடைய சரித்திரங்களையெல்லாம் ரகசியப்பொருளாயிருப்பதை உனக்கு விரிவாகவகுத்துச்சொன்னோம் ஆகையினால் முடிவில்லாத திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தத்தாண்டவஞ்செய்யும் அம்பலவாணமூர்த்தியினது பாதாரவிந்தங்களைத் தரிசனஞ்செய்தவர்களெல்லாம் சிவபதவியை யடைவார்களென்று வேதங்களையெல்லாம் வகுத்துரைத்து உலகத்திலுள்ளோர் கடைத்தேறும்படிசெய்து தவத்தோர்களுக்கெல்லாம் தலைமைபூண்ட வேதவியாசமஹாமுனி சயிமினிபகவானுக்குக் [illegible] சூதபுராணிகர் நயிமிசாரண்ணியத்தில் சவுனகாதி [illegible]ச் சொன்னார்—எ-று. (௧௩௮)

துன்மதச்சருக்கமுற்றும்.

பாயிரம் உட்பட சருக்கம் மூன்றுக்குத் திருவிருத்தம் - ௨௧௪.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மூன்[illegible]து

## துச்சகச்சருக்கம்.

கலிவிருத்தம்.

பற்றொனாக் கதி பற்றிய துன்மத
னற்றவச் சரிதத்தை நவிற்றினஞ் சொற்ற
தீவினைத் துச்சகன் முத்தியி
னுற்ற வாறங் குரைக்கலுற் றுமரோ.

இ-ள். எவர்களுக்குங் கிடைப்பதற்கரிய சிவபதவியை அடைந்து நன்மைபெற்ற துன்மதன் கதையைச் சொன்னோம் இனிமேல் பொல்லாத பாவியாகிய துச்சகன் சிதம்பரதலத்தில் இறந்துமேலான சாயுச்சிய பதவியையடைந்த சரித்திரத்தை வேதவியாசர் உபதேசித்தவிதிபோற் சூதபுராணிகர் சவுனகாதி முனிவர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்—எ-று. (௧)

சொன்ன மாக்கதை கேட்டுத் துளக்கிய
சென்னி மாதவன் சிந்தையிற்பேரரு

டன்னை நோக்கியத் தாபதர் சேகா
னின்ன மோர்கதை கேளென் றியம்புவான்.

இ-ள். துன்மதன் சரித்திரத்தைக் கேட்டு அதிசயித்துச் சிரமசைத்து முகமலர மனதில் ஆனந்தத்தையடைந்து இன்னஞ் சிதம்பரத் தலமகிமையைக் கேட்க வேண்டுமென்று ஆவலோடிருக்குஞ் சயிமினியைப் பார்த்து மற்றுமொரு சரித்திரஞ் சொல்லுகிறோம் கேளென்று தபோதனர்கட் கரசராகிய வேதவியாசர் திருவுளம்பற்றுகிறார்—எ-று. (௨)

துன்று ஞானச் சுடருரு வங்கொ[illegible]
மன்று ளாடு மலர்ப்பதங் கண்டவ
ரன்றியுந் தில்லை யம்பல வெல்லையிற்
பொன்றி னோரும் பொருந்துவர் முத்தியே.

இ-ள். ஞானஸ்வரூபங்கொண்டு பிரகாசம்பொருந்திய திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தத்தாண்டவஞ்செய்யும் சபாபதியின் பாதாரவிந்தங்களைத் தரிசனஞ்செய்தவர்களும் மற்றுஞ் சிதம்பரத்தலத்தினெல்லைக்குட் பிறந்திறந்தவர்களும் சிவபதவியை யடைவார்கள்—எ-று.

அறந்தவா நெறி யாயைய மில்லையாற்
றுறந்த பாசச் சுருதிப் ப[illegible]பொருள்
சிறந்து வாழுடைத் தில்லையி னெல்லைவா
யிறந்துளோர் முத்தி யெய்தின ரெண்ணிலோர்.

இ-ள். தருமமார்க்கந் தவறுத சயிமினிபகவானே நல்லநெறிதவறினவராயினும் சிதம்பரதலத் தெல்லையில் இறந்தவர்கள் சிவகதியை யடைவார்களென்றுஞ் சொல்லிய மொழிக்குச் சந்தேகமில்லை மேலும் வேதப்பொருளாகிய அம்பலவாணமூர்த்தி ஆநந்தத்தாண்டவஞ்செய்யும் மிகுந்த செல்வமுடைத்தாகிய சிதம்பரத் தெல்லைக்குள்ளாக இறந்தவர்கள் பிறப்பிறப்பென்னும் பலபாசபந்தம் நீங்கிச் சிவபதவியை யடைந்த ஜீவராசிகளுக்குக் கணக்கில்லை—எ-று. ()

ஆய்ந்த மாமறை யம்பல வெல்லையின்
மாய்ந்து ளோனொரு வன்மெய்த மாதவ
வேந்தர் போற்ற விளங்குஞ் சிவபதஞ்
சேர்ந்த நற்செயல் செப்புவன் கேட்டியால்.

இ-ள். வேதங்களெல்லாம் புகழுந் தில்லைவனத் தெல்லைக்குள்ளாக ஒருவன் இறந்துபோய் மஹாதபோதனர்களில் உத்தமராகிய முனிவர்களுந் தோத்திரஞ்செய்ய மேன்மையுற் றிலங்குஞ் சிவபதவி

யை அடைந்த தன்மையாகிய சரித்திரத்தைச் சொல்லுகிறேம் சமியி னியே கேளென்று வாதராயணர் சொல்லத்தொடங்கினர்—எ-று. ()

தொலைவிலாத வினையைத் துகள்செயு
மூலமா முந்தவத் தோர்களு மும்பருங்
கலைஞரும் புகழ் காவிரி மானதித்
தலை விளங்குந் தனிச்சைய மால்வரை.

இ-ள். தீராத பாவங்களையெல்லாந் தீர்த்து உயர்வாகிய கதியைக்கொடுக்கும் மகிமையையுடையது பூலோகத்தி லுள்ளவர்களும் முனிவர்களும் தேவர்களும் சகலகலைகளை யுணர்ந்தவர்களும் புகழ்கின்ற காவிரிநதியானது தோன்றும் இடமாகிய சையமலையென்பது ஒன்றுண்டு—எ-று. (சு)

கரியை யீரு மரியின் கணங்களு
மெரியு நெஞ்சத் தெரியினர் குழாங்களும்
விரிகதிர்ச் சுடர் மேவருங் கானமுந்
தெரியின் மிக்குள செப்பிய வக்கிரி.

இ-ள். யானைகளின் மத்தகங்களைப்பிளந்து மாமிசாதிகளை யருந்துஞ் சிங்கக்கூட்டங்களும் நெஞ்சத்திற் கோபாக்கினியென்னுங் கனலை வீசிக்கொண்டிருக்கும் வேடுவகூட்டங்களும் சூரியனது கிரணங்கள் நுழைவதற்கு இடமில்லாமல் நெருங்கித்தழைந்து நீழலுண்டாகியவனங்கள் மிகுதியுமடர்ந்திருக்கும் அந்தச்சையகிரியில்—எ-று.()

அக்கிரிக்க ணமர்ந் துறை வோனெடுந்
தொக்க வல்வினை துச்சக னிச்சகத்
தெக்கொலைத் தொழி லேனு மியற்றிடத்
தக்க வஞ்சச் சவரர் குலத்துளோன்.

இ-ள். அந்தச் சையமலையில் வாசஞ் செய்துகொண்டிருக்கும் வேடுவர்குலத்தில் முற்சனனத்திற்செய்த மஹாபாதகத்தினால் துச்சகனென்னுமொருவன் பிறந்தான் இப்பூமியில் நானாவித கொலை வஞ்சனை சூதுகள் முதலிய பாதகங்களைச்செய்துகொண்டிருந்தான்—எ-று.

செய்த வத்திற னேடறந் தீத்தெழு
வெய்தின் மிக்க வடவை மிகுங்கொலைப்
பெய்துலாவும் பெரும் புயல் விஞ்சிய
கைதவம் பெரு குங்கடல் போன்றுளான்.

இ-ள். பெரியோர்கள் செய்யுந் தவங்களையும் தருமங்களையும் அழித்து வெப்பமிகுந்த வடவாமுகாக்கினியினும் அநேகமாக ஜீவராசிகளைக் கொலைசெய்து புசித்தும் கொடியவனுய் மழைபொழிவதுபோல் அம்புகளைச்சொரிந்து அநேக உயிர்களை வதைத்தும் உண்டாகின்ற பாதகங்களுக்கெல்லா மிருப்பிடமாய் விளங்குவதால் சமுத்திரம்போலத் துச்சகனிருந்தான்—எ-று. (கூ)

கோல மாய கொடியோரன் கொடுமையாற்
காலன் மாதவர் போல்வன் கள...
பால நேத்திரன் முன்னம் பருகிய
வால கால மமிர்த நிகர்க்குமால்.

இ-ள். முன்னமிருந்த வாதாபி வில்வலன்போல் துச்சகன் மாயாவிநோதமாகக் கொடுமைசெய்வதனால் இயமனும் நல்லதபோதனனை யொப்பான் அழற்கண்ணையுடைய சிவன் முன்னுண்ட விஷத்திலுங் கொடுமைசெய்வதினுல் ஆலகாலவிஷமும் தேவாமிர்தத்துக்குச் சமானமாகும்—எ-று. (க0)

உன்னருங் கொடி யோரி னுயர்ந்தவன்
றன் னியற்கை தனையித் தராதலத்
தின்ன வாறென யாவர்க்கு மாதவ
முன்ன ரன்பின் மொழிந்தன மில்லையால்.

இ-ள். நினைப்பதற்கரிய பாதகங்களைச்செய்வோர்களிலும் மிகக் கொடுமைபொருந்திய துச்சகனது நடக்கைகளையுடையோர் இப்பூமியில் ஒருவருமில்லையாகையால் சயிமினிபகவானே முன்னொருவருக்கும் விருப்பமாகச் சொன்னதில்லை என்று பராசர் திருவாய் மலர்ந்தார்—எ-று. (கக)

எல்ல வர்க்கு மியம்பரி தன்றியு
மொல்லை கேட்க வுறுதது கேட்பினுந்
தொல்லை வல்வினைத் துச்சகப் பேரிழு
லல்லன் மல்கிய வச்ச மளித்திடும்.

இ-ள். அவனுடைய துஷ்டநடத்தைகளை எவர்களுக்குஞ் சொல்லமுடியாது அதுவல்லாமலும் அவைகளை ஒருவர் கேட்கத்தக்கவைகளுமல்ல அன்றிக் கேட்டாலும் பாவங்கள் சம்பவிக்கும் மகாபாவியான துச்சகன்பெயர் கேட்டவுடனேயும் மிகுந்த பயத்தைக் கொடுக்கும்—எ-று. (கஉ)

செல்லுநீணெறி செல்லாநெறியிதென்
றல்லல்கூறி யருந்துலைபோனடக்

தெல்லையானவி டத்தவர்கைப்பொரு
ளொல்லைகொண்டங் கொளிகருமியல்பினேன்.

இ-ள். கனமாரககததிற் செல்லுகின்றவர்களைத் தடுத்து அநு பயமுடைய வழியென்று சொல்லி யானுந்துணை வருகிறேனென வேறுவழியி லழைத்துக் கொண்டுபோய் நடந்த இளைப்பால் மெய் மறந்திருக்குஞ் சமயம்பார்த்து அவர்களது கைப்பொருள்களை அப கரித்துக் கொண்டு வஞ்சனைசெய்து ஓடிப்போவான்—எ-று. (கங)

பிணியுளேனெனைப் பேணுமென்றியாவருந்
துணியுமாறு நடித்தனன்சொற்சொலா
வணியர்போல வமர்ந்தணியாடைக
டணியவஞ்சந் தனிற்கொண்டகல்வனால்.

இ-ள். பிணியால்மெலிந்து துன்பப்படுகின்ற என்னைக் காப்பாற்றுவதினால் உங்களுக்கு வெகுபுண்ணியமுண்டென்று பெரியோர்களுக்கு இரக்கம்வரும்படி உறுதி மொழிகளைச்சொல்லி அவர்கள் நம்பிக்கை பெறுமளவிலிருந்து தனித்தவேளைபார்த்து ஆடையாபரணங்களையுந் திரவியங்களையுங் கொள்ளைகொண்டோடிப்போவான்-எ-று

கொற்றவாளிகள் கோதண்டங்கொண்டழல்
துற்றவெஞ்சுரந் தோற்றித்தனிநெறி
யுறறபோதி னுயிருடன்கைப்பொருள்
செற்றுவாங்கிச் செருக்குந்திறலினேன்.

இ-ள். வில்லும் அம்புங் கைக்கொண்டு எங்குந்தண்ணீர்கிடையாமல அக்கினிச்சுவாலையைத்தரும் பாலைவனத்தடங்களில் ஒளித்திருந்து தனிதது ப் போகின்றவர்களையும் வருகின்றவர்களையும் பாணத்தினால்எய்து அவர்களுயிரைப்போக்கித் திரவியஙகளைக் கைக்கொண்டு சந்தோஷமாகத்திரிவான்—எ-று. (கரு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புரிநூற்சிகையுத் தரிகமுடைப் பொலியமறையோர் வேடங்கொண்
டருநான்மறையோர் பாலதிதி யவரோடடிசி லருந்திவழி
வருநீர்மையினு லிளைத்தோர்போல் வைகியெல்லின் மனைவளங்க
ளொருநீர்மையிற்பார்த்திரவினெடுத்தொளிக்குங்களவையுளைப்பார்.

இ-ள். பூணநூலும், குடுமியும், உத்தரீகமும் விளங்கப் பிராமணனைப்போல வேடந்தரித்து அவ்வேடத்துக்குத்தக்க வார்த்தைகளைப்பேசிக்கொண்டு அன்னதானஞ்செயயும் வைதீகப் பிராமணர்மனைகளில் அதிதிகளாய்வருகின்ற பிராமணர்களுடனேகூடி போஜன

ஞ்செய்து வழிகடந்து அலுத்தவன்போற் படுத்திருந்து பகற்போதி ற்றுனே அவ்வளவில் ஆடையாபரணங்கள் திரவியங்களி லிருக்கும் இடத்தைக் குறிப்பாகப்பார்த்திருந்து பாதிராத்திரியில் எடுத்துக் கொண்டு மறைந்தோடிப்போகுந திருட்டுத்தனத்தை ஒருவராலுஞ் சொல்லி முடியாது—எ-று. (கசு)

அழிந்தவேந்த னொருவன்சே யாகவியம்பிக் கண்கணீர்
வழிந்துசோர நெட்டுயிர்த்து வாடிமனிக்த ருளார்முன்னங்
கழிந்தசெல்வம் வரும்வந்தா லுட்டே[illegible]கக்கொண டெயப்பமொன
மொழிந்துதங்கு மிடத்துள்ள வெடுத்தகளவு முடிவுண்டோ.

இ-ள். ஒரு தேசத்தையாளும் வேந்தன்யுத்தத்திற்றுப்போயிரு ந்தகாலையில் அவ்வரசன் புத்திரனைப்போல் வேடங்கொண்டு அத ற்குத்தக்க சொற்களையுஞ்சொல்லிக் கண்ணீர் பெருகத் தேம்பித்தே ம்பியழுது பெருமூச்சுவிட்டு அவர்களுட் பெரிய காரியக்காரர்கள் ம னது கரைய இனிமையாகிய வார்த்தைகளைச்சொல்லி இந்தவேளையி லுதவிசெய்து என்னூர்போய்ச் சேரும்படிசெய்தால் என்வாழ்வனை த்து நுங்களுக்கேயென்று நம்பிக்கைவருமப்படிச் சொல்லியிருந்து ச மையம் பார்த்து அகப்பட்ட திரவியங்களை எடுத்துக்கொண்டு ஓடி ப்போகும மாயா விநோதங்களைச் சொல்லிமுடியாது—எ-று. (கஎ)

முன்னங்கரவின் வருமணியும் பணியுமவிற்க முயல்வணிக
ரென்னவணுகிக் கொளவோரபோ லுளளதெலலாம் வினவியவர்
தன்னைநட்பி னிடைப்படுத்திக் கருதிபாவித்த தங்குள்ள
பொன்னுமணியுமுளகளவு புரியுஞ்செயலோ தரிதரி[illegible]ல்.

இ-ள். முன்னோர்செய்த களவினால் சம்பாதித்த ஆடையாபரண ங்கள் இரத்தினங்கள் பொன்முதலானவைகளை எடுத்துக்கொண்டு வியாபாரஞ்செய்யும் வணிகர்போல் வேடம்பூண்டு பட்டணங்களில் பெரிய வர்த்தகரிடத்திற்குப்போய்க் கொள்ளுகிறவன்போல் அவர்க ளிடத்திலிருக்கின்ற திரவியங்களை விலைபேசித் தெரிந்துக்கொண்டு வியாபாரங் கொடுக்கல் வாங்கல்முதலியன செய்தலினால் அவர்களி றவாடி தனதாகப் பாவித்திருந்து வஞ்சனையினால் அவர்களிரத்தி னங்களையும் பொன்னையும் சூதுசெய்தெடுத்துக்கொண்டு ஓடிப்போ குந்திருட்டைச் சொல்லுவதற் கரிதாயிருக்கும்—எ-று. (கஅ)

வித்திற்குளவோ வேருளவோ விலைக்குவேந்தர் கோயிற்கோலா
லெய்த்திங்கடைந்தே னின்னலூ ரின்னார்வகையு ளேனென்று
சித்தங்கரைய வேளாளர் திறம்போலொழுகி நண்புடையோர்
வைத்தபொருள்க ளெடுத்தொளிக்குங் களவையுரைக்க வல்லாரார்.

இ-ள். எங்கள்தேசத் தரசனானவன் நீதிமுறைமைதப்பித் தெண்டம்பிடித்துக் கொள்ளைகொண்டுபோனான் அதனால் இளைத்துவந்தேன் நான் இன்னகிராமத்தில் இன்னார்வழியில் இன்னபெயர்கொண்டவனென்றும் பெரியகிராமத்து நாட்டாண்மைக்காரர்கள் மனதிரங்க வேளாளர் நடத்தையைப்போற்பேசி விலைக்கு விளைதானியமுண்டோவென்றும் உறவுக்குமாண்டோவென்றும் இது நல்லதல்ல வேறேயுண்டோவென்றும் அவர்களைத் தோழமைசெய்துகொண்டு இருந்து அவர்கள் வீடுகளிலுள்ள திரவியங்களைத் திருடிக்கொண்டு ஓடிப்போகுஞ் சமர்த்தை எவர்களாலுஞ்சொல்லித் தீராது—எ-று. ()

அறங்கள்புரியுந் தீவினைநோய்க் கஞ்சுநெஞ்சத் தருள்கூறு
மறங்கடவிரு மௌனமுனிவர் வடிவாலுண்டி தவிர்விரத
முறங்கலின்றி யாற்றியுறை துடையமனையிற் பொருள்கவர்ந்து
கறங்குபோல விரைந்தகன்ற களவுபுகலிற் கரையுளவோ.

இ-ள். தீவினையாகிய பாவநோய்களுக்கு பயந்து கிருபையோடு கருமங்களைச் செய்வோர்களது வீடுகளில தபசியைப்போல்வேடமபூண்டு சென்று புண்ணியஞ்செய்தால் மேலாகிய பதவியையடையலாம பாபங்களைசெய்தால் நரகவேதனையை யநுபவிக்கவேண்டுமென்று சில தருமங்களைப் போதித்து யான் இப்போது போஜனமும் நித்திரையுமநீக்கிய விரததைக் கைக்கொண்டிருக்கும முனிவனென்று அவர்களுக்கு நம்பிக்கைவர நடந்துகொண்டிருநது பின்னர்அவர்கள வீட்டிலிருக்குந் திரவியங்களைக் களவுசெய்துக்கொண்டு காற்றாடியைப்போல ஓடிப்போய்விடும் மாயாவிநோதங்களைச் சொல்ல வேண்டுமெனறால் வழியுண்டோவென்றார்—எ-று. (௨௦)

தலமாவிகந்த துறவினர்போற் றண்டமுண்டந் தயங்குகிலம்
வலமாயினநற் பதியுளது வணங்கப்பெற்றேன் தீர்த்தத்தின்
குலமாடினனிங்கோரொடுக்கங்கொடுத்தாலிருப்பே னெனவுறைத்த
கலமாமனையொ ருறத்தனங்கள் கவருஞ்செயலோ வறைவரிதால்.

இ-ள். மண்-பெண்-பொன் இம் மூவாசைகளையும் ஒழித்த சன்னியாசிகளைப்போல வேடங்கொண்டு தண்டு கமண்டலமேந்தி பூமண்டலத்திலுள்ள திவ்வியநதிகளாகிய புண்ணியதீர்த்தங்களில் மூழ்கி அநேகதலங்களைத் தரிசித்துப் பூமியை வலமவந்தேனென்று அறிவித்து இங்கு எனக்கோர்மடம்புதுக்கிகொடுத்தால இருக்கிறேனென்று சகலகலைகளையுணர்ந்த புண்ணியர்களாகிய பிராமணர்களுக்குச் சொல்லி நீதிகளைபபோதித்து அவர்களிடத்தில் அடைந்த திரவியங்களைச் சொல்ல முடியாதென்றார்—எ-று. (௨௧)

களவோகொலையோ வஞ்சகமோ சூதியுமைக்கி லிவன்புரிந்த
தளவோவில்லை யென்சொல்கே மநதோவந்தோ நல்வினைக
ளுளவோயாது மிலைக்குறவ ருடையமகளி ரெயிறுநறுந்
தளவோடிகலுஞ் சையகிரி தன்னினின்ன தகையுறைநாள்.

இ-ள். துச்சகன்செய்த களவுகளையுங் கொல்லுகிற தொழில்களையும் வஞ்சனை சூதுமுதலிய பாதகங்களையும் மற்றுமிவன்செய்த தீவினைகளையும் நினைத்துச் சொல்லவேண்டு மென்றால் கணக்கில்லை என்னசொல்லப்போகின்றோ மையோ ஐயோவென் றுகிலேசப்பட்டு இவனிந்த ஜனனத்தில் புண்ணியஞ் செய்ததுண்டோவென்று விசாரணைசெய்தால் ஒரு தருமமுஞ்செய்யாத பாவியாகிய துச்சகனென்பவன் முல்லையரும்புபோன்ற பல்வரிசைகளை யுடைய குறப்பெண்களுடன் லீலாவிநோதங்கள் செய்துகொண்டு சையகிரியிலிருக்கின்ற காளில்—எ-று. (உஉ)

ஏந்தத்தவங்கண் முயன்றாலு மெந்தக்கருமம் புரிந்தாலு
மந்தக்கொடிய தீவினையை யாற்றற்கெளிதோ வாய்ந்துணர்ந்து
சிந்தைக்கினியோர் துயரொழிக்குந் திறனேபோல வாங்கவனை
முந்தைத்திகழ்நல் வினைமுயங்க விளைந்தசெயகை மொழிகின்றாம்.

இ-ள். எந்தத்தபசுகள் பண்ணினாலும் எந்தப்புண்ணியஞ்செய்தாலும் துச்சகன்செய்த பாதங்கள்நீங்குமோ கற்றறிந்து சிந்தைதெளிந்தபெரியோர்கள் தங்களுக்குவந்ததுன்பங்களை விசாரணைசெய்து ஒழிப்பதுபோல அவனுக்கு முற்சனனங்களிலசெய்த புண்ணியவசத்தினால் நடந்தகாரியத்தை வாதராயணர் திருவாய்மலர்ந்தார்—எ-று

நாகர்தருநேர் நந்தனங்க ணரலைவாவி நந்தனங்கண்
மாகமிடையோங் டானங்கள் வளருந்தரும தானங்கள்
யாகமன்றுசேர் தந்திரங்க ளிகல்வாள்வேந்தர் தந்திரங்கண்
மேகமகர மலைநாடு வேலைமருவு மலைநாடு.

இ-ள். தேவர்களுடைய கற்பகவனத்துக்கு ஒப்பாகிய நந்தவனங்களும் குளிர்ச்சிபொருந்திய தடாகங்களிலுள்ள சங்குகளும் அன்ப்பட்சிகளும் ஆகாயம்வரையில் உயர்ந்த சிவாலயங்களும் ஓங்கி வளரும் புண்ணியங்களும் சோடச மகாதனங்களும பிராமணாகள் யாகாதிகருமங்களி னிலமையும் வெற்றிபெற்ற ஆயுத பாணிகளாகிய அரசர்களின் சதுர்விதவுபாயங்களும் மேகங்களும் மகரமச்சங்களுமுடைய மலைநாடாகிய மேற்குசமுத்திரக் கரையில்விளங்கும் மலையாளதேசம்—எ-று. (உச)

அயலார்சோலை முருகவிழா வணியார்வளாகன் முருகவிழாப்
புயலாடுவபொற் கோபுரங்கள் பொன்னாட்டணிபொற் கோபுரங்கள

வியலார்வயலோ மிகப்பணிலம் விருந்தேவான மிகப்பணில
மியல்பாய்விளங்குங் கலைவேத மில்லாதனவுங் கலைவேதம்.

இ-ள். பக்கங்களிலிருக்குந் தோப்புகளில் வாசனைகள் வீசுகிற தும் அழகுபொருந்திய மலைகளில் சுப்பிரமணியசுவாமியின் திருவி ழாக்களும் மேகங்கள்வந்திளைப்பாறும் மேலணிமாடங்களையுடைய இராஜாக்களிருக்கும் பட்டணங்களும் தெய்வலோகத்துக் கலங்கார மாகத தங்கமயமாகிய கோபுரங்களும் புதுமையாக வயலோரங்க ளில் மேன்மையாகிய சங்கினங்களும் யாகமும்மாரி பெய்யத்தக்க தாகப் பெரியோர்களுக்கு எப்போது மன்னதானங்கள்செயயு மனை களும் இலக்கணத்துடன் ப்ரகாசிக்கும் வேதாகமசாஸ்திரங்களும் விளங்கு மந்த மலையாளத்தில இல்லாததென்னென்றால் பெரியோர் களுக்குக் குற்றங்குறைகளு மில்லாதிருக்கும்—எ-று (உரு)

வளாமிக்கெழுமம் பொழிகடங்கள் வருமாதங்கம் பொழிகடங்கள்
பரவைத்திருவாழ் மனைமணங்கள பயிலும்பொழிலவாய் மனைமணங்
விரவிச்சிறந்த வண்டினங்கள் வீணையகலா வணடினங்க [கள
ளுளாயிற்பொலிவோர் மாதிரஙக ளுயர்நூலொலியே மாதிரங்கள்.

இ-ள். மலைகளின்மீதில் தவழ்ந்து மழைபொழியு மேகங்களும் கபோலங்களில் மதஜலங்கள் பொழியும் யானைக்கூட்டங்களும் திரு ப்பாற்கடலில்பிறந்த லட்சுமிதேவி வாசமாயிருக்கும் வீடுகடோ றுஞ் சுபசோபன கலியாணங்களும் தோப்புகளி லெப்போதும் உய ர்வாகிய பரிமள நிரம்பிய மலர்களை நாடித்திரியும் நால்வகை வணடி னங்களும் வீணாட்செலுத்தாம லெப்போதும் சிவபூசை சிவவிரதங் கள் திதிபூசைகள்செய்து நாளகழிக்கிறவாகளும் சததிய வாக்கியத்தி னாலும நன்மையாகிய கைகளினாலும் லட்சுமி பொருநத நடப்பவர்க ளும் எட்டுதிக்கிலும் மேலாகிய சிவசாததிரங்களை வாசிக்குங் கோ ஷ்டங்களும் முழங்கி விளங்குஞ் சேரதேசத்தில்—எ று. (உசு)

அந்தநாட்டுக் கலங்கார மணிமாமணிசே ரலங்காரந்
தநததறமே நாடகங்க டழைக்குமருங்கு நாடகங்க
ணந்துஙகொடியின்மா தகன நணணிநெருங்குமா ககனம்
விந்தைகலையாண மலைஞ்சி விளங்கும்புகழாண் மலைவஞ்சி.

இ-ள். அச் சேரதேசத்திற்குச் சிங்காரமாக விருப்ப தெதுவெ ன்றால ஆபரணங்களில் இரத்தினங்கள் பிரகாசிபபதுபோல் எழு த்து-சொல்-பொருள-யாபபு அலங்காரமெனனும் ஐநதிலக்கணஙக ளுங கொடுக்கிற தருமமேவிளஙகும் மலையாளதேசத்தில் நாடகசாலை களில மிருதியுமு நாடகமாடுகிறவாகளும பெருமைபெற்ற கொடிக

ளோடுங்கூடி மிகுந்த வனங்கள் அடர்ந்து ஆகாயம்வரைக்கும் வளர்ந்திருப்பவைகளும் துர்க்கையும்-சரஸ்வதியும்-இலக்குமியும் ஆகிய இவர்களும் வாசமாயிருந்து பிரகாசிப்பதனால் விளங்கும் அந்த மலையாளதேசம்—எ-று. (உஎ)

உரைசெயிந்தப் பதியுறையோ னொளிர்வேனிங்காத் தனியுறையோ
னரவுவாழ்த்த மருங்குடையா னறிஞர்போற்று மருங்குடையான்
பரவைமருவு தாலத்தார் பரவற்குரிய தாலத்தார்
விரவுதிருவா ழாகத்தான் விறல்வேளனைய வாகத்தான்.

இ-ள். இவ்விதமாகச் சொல்லப்பட்ட அம்மலையாளத்துக்கரசனாவன் தனக்குத்தானே ஒப்பாகிய பட்டணமுடையவன் சத்துருக்களில்லாமையால் வேலாயுதத்துக் கெப்போதும் உறைபோட்டு வைத்திருப்பவன் ஆதிசேடனுந் துதிக்கத்தக்கதாகக் கொடுக்கும் ஈகையையுடையவன் கவிவாணர்களருகேயிருந்து துதிக்கத்தக்கதாய்க் கொலுவிலிருப்பவன் சமுத்திரஞ்சூழ்ந்த பூமண்டலத்தாரெல்லோரும் தோத்திரஞ்செய்யப் பனைமாலைபணிந்து லட்சுமீகரம்பொருந்திய விசாலமுடைய மார்பையும் மன்மதனுக்கிணையாகிய திருவழகினையுமுடையவனும்—எ-று. (உஅ)

கலியினீத வரவேலான் காணார்க்கடிந்த வரவேலா
னிலவுநுதல்வாழ் பூதியினா னொருங்கிவளரும் பூதியினா
னிலகுவீர வாரணத்தா னெழிலியனைய வாரணத்தா
னுலகமுதவு மம்புயத்தா னுவப்பப்புவியா ளம்புயத்தான்.

இ-ள். கோடிதிரவியம் வருகிறதாயினும் மநுநீதிவழி தவறாதவன் சகித்துக்கொள்ளாத சத்துருக்களைச் சங்கரித்தும மேன்மை பொருந்திய வேலாயுதத்தைத் தரித்தவன் நிலவெறிப்பதுபோல் நெற்றியில் வெண்மையாகிய திருநீறணிந்தவன் எங்கும் நிறைந்து வளர்ந்துகொண்டிருக்கும் பெரிதாகிய செல்வமுடையவன் வெற்றிபெற்று விளங்கும் மதயானையையுடையவன் மேகத்தனையை நிகர்த்த வெற்றிச்சங்கமுடையவன் உலகங்களைச் சிருட்டிக்கும் பிரமனுஞ் சங்கோஷிக்கத்தக்க புஜபலபராக்கிரமத்தினால் துட்டரைக்கண்டித்துஞ் சிட்டரைப் பரிபாலனஞ்செய்தும் பூமியையாளத்தக்கவன—எ-று. (உகூ)

இறைவர்சைவ வாலயத்து வியற்றுப்பணிகள் யாதுமிலை
இறைகளளவா மன்னரிலை செங்கோல்செல்லாத் தேசமிலை
நிறையுமறுநூ னீதியினி னிகழ்த்தாது யாவுமிலை
முறையினரசர் தருமத்துன் முறைதவறு மிவற்கிலையால.

இ-ள். சிவாலயங்களிலுஞ் சிவனடியார் மடங்களிலும் நிறைவேற்றாத திருப்பணிகளுமில்லை கப்பங்கட்டாத அரசர்களுமில்லை ஆணைசெல்லாத தேசங்களுமில்லை நிறைந்த மநுநீதிமுறைமையில் ஒன்றேனுந் தவறி நடக்கிறதில்லை இராஜதருமங்களில் செய்து முடிக்காததுமில்லை—எ-று. (௧௦)

மண்டலீகர் மகுடசிகா மணியிலொளிக ளகலமிசைச்
சண்டசூர கிரணமெனத் தவழுநகழற்காற் றனிவேந்தன்
கண்டிகவள நீறணிந்து கருணைபமலற் கருளடைந்த
தொண்டாசரண முயாகதிககுத துணையாநாடு மிணையில்லோன்.

இ-ள். தேசதேசராஜாக்களும் பாதகாணிக்கைகள் வைத்துத் தெண்டனிடும்போது அவரவாகள கிரீடங்களிலுள்ள இரத்தினங்களின் காந்தியானது செந்தாமரை மலர்களின்மேற் சூரியகிரணங்கள தவழுகிறதுபோல் விளங்கும் வீரகண்டாமணியணிந்த பாதாரவிந்தங்களையுடைய ஒப்பற்ற ராஜாதிராஜன் வெண்மையாகிய விபூதி ருத்திராக்ஷங்க ளலங்கரித்துக்கொண்டு கிருபைக்கடலாகிய பரமசிவன் றிருவருளபெற்ற சிவனடியாாகள் பாததாமரைகளைப் பரலோக சாதனமெனறறிநது அச சிவனடியாாகளைப் பூசிக்கும் ஒப்பற்ற சிவபக்தியையுடையவன்—எ-று. (௧௧)

மறையிற்பொலியும் புண்டரிக மலர்மேலுறையு மொருகடவுண
முறையிற்பயநத பகிரணட முழுதுந்தவள நுணடுகிலா
லுறைவிப்பனைய நிலவுபுக ழுடையான்கடலசூ ழுலகமெலாங்
குறைவற்றிலக வருள்சுரக்குங் கோமான்சேரர் குலதீபன்.

இ-ள். நான்குவேதங்களும நான்குமுகங்களில் விளங்கச் செந்தாமரைப்பொகுட்டிலிருக்கும பிரமதேவன் பரமசிவனுததரவின்படிக்குப் படைத்த பிரமாண்டமெங்கும் வெளளைவஸ்திரத்தினல் உறையிட்டதுபோற் கீர்த்தியாகிய நிலவு பிரகாசிக்கு மகிமையையுடையவன் சமுத்திரஞ்சூழ்ந்த பூமணடல மெங்கெங்கும் குற்றங்குறைகளில்லாமற் சுகமாயிருக்கக தயவுடன் இராசரியபரிபாலனஞ் செய்து சேராகுலத்தைப் பிரகாசிக்கச்செய்யும் ஞானவிளக்காகிய் மஹாராஜன்—எ-று. (௧௨)

ஐஞ்சீரடியாசிரியவிருத்தம்.

வானநாடர்வந் தடிதொழ மன்றிடை விளங்கு
ஞானநாடக வுளத்தின னவில்தொறு மின்ப
மானசைவநூன் மொழிப்படி யருச்சனை சைவத்
தான்முடிப்பவ னவன்பெயா சபாபதிப் பிரியன்.

இ-ள். பதஞ்சலி வியாக்கிரமபாதர்முதலிய முனிவர்களும் அரி யயன்முதலிய சகலதேவர்களும் தீர்க்கதெண்டனிட்டு தரிசனஞ்செ ய்யத் திருச்சிற்றம்பலத்தில் பிரகாசத்துடன் ஆனந்தநடனஞ்செய்யும் அம்பலவாணமூர்த்தியை இதயாரவிந்தத்தி லெப்போதுந் தியானஞ் செய்துகொண்டிருப்பவன் சபாபதியின் மகிமைகளைத் தோத்திரஞ் செய்கிறபோதெல்லாம் ஆனந்தபரவசத்தையடைந்து வேதாகமவிதி ப்படிக்குச் சிவாலயங்களிற் சிவபூசைகள் மிகுந்த பக்தியுடனே நட ப்பிக்கிறவன் சபாபதிப் பிரியனென்னும் பெயர்பெற்ற சேரமகாரா ஜன்—எ-று. (௯௩)

உள்ளமுள்ளன பகைகளு மூலகினிற் பகையுந்
தள்ளியேனைய குறைகளுந் தணந்திட வருளின்
வெள்ளமாமென வடகலை தென்கலை விளங்க
வளனியோனியற் சேராத மரபுயய வாழவோன்.

இ-ள். காமக்குரோதாதி யந்தரங்க சத்துருக்களை அறிவினாலும் உலகத்திலுள்ள சத்துருக்களைச் சாம தான தண்ட வுபாயங்களினா லும் வெற்றிகொண்டு மற்றுமுள்ளவுலகத்தார் குற்றங்களையும் குறை களையுந் தீர்த்துக் கருணைவெள்ளமெனத்தக்க வடமொழியாகிய கிரந் தசாஸ்திரங்களும் வேதாகமபுராணங்களும் தென்மொழியாகிய முத் தமிழ்களும் பிரகாசிக்கத்தக்கதாக ஈதலிரக்க மிகுந்த வளப்பங்களு டையவனாகி சேராகுலங் கடைத்தேறத்தக்கதாக சபாபதிப பிரிய னென்னும் பெயரையுடையவனாகி சிவபக்தியுடனே ராச்சியபரிபால னஞ் செய்துகொண்டிருந்தான் சேரமகாராஜன்—எ-று. (௯௪)

வேதநர் மந்திரக் கிழவர்கள் விளங்கமண் டபத்திற்
போநது வாளரித் தவிசிடைப் பொலிதரு ளுமையாள்
காந்தன்மேவிய கனகமன் றிடைப்புக ழாயகத
மாந்தர்கூறமிர் தஞ்செவி மாந்தவுண் மகிழ்வோன்.

இ-ள். தேசதேசராஜாக்களும் மந்திரிமுதலாகிய எழுபத்திர ண்டு வினியோகத்தார்களுங் கண்டுசேவிக்க நவரத்தினமயமாகிய கொலுமண்டபத்திற்குவந்து மணிமயமாய் விளங்குஞ் சிங்காதனத் தில் கொலுவீற்றிருக்கிறபோது வேதாகமங்களுணர்ந்து சிவபக்தி மிகுந்த பெரியோர்கள் திருச்சிற்றம்பலத்தில் கருணைநிறைந்த சிவகா மசவுந்தரிகளிக்க ஆனந்த நடனம்புரியுஞ் சபாபதியினுடைய மகிமை யையுஞ் சிதம்பரதல மகிமாதிசயங்களையுஞ் சொல்லுகின்ற அமிர் தத்தைச் செவியென்னும் வாயினால் பானஞ்செய்து மனதினால் ஆனந்தத்தை யடைவான் சபாபதிப் பிரியனென்னும் சேரமகாரா ஜன்—எ-று. (௯௫)

காண்ட லெய்தினர் போகமு முத்தியுங்காண
வாண்ட நாயகன் பொற்பொது வமர்ந்தவானைத்
தாண்ட வந்தொழுங் கரதலின் றகைமைகொள்ள
வீண்டு மந்திரக் கிழவர்க்கு மிசைத்துடனெழுந்து.

இ-ள். தரிசனஞ்செய்தவர்கள் போகபாக்கியத்தையும் சிவபதவியையும் அடையும்பொருட்டாகக் கனகசபையினிடத்தில் ஆனந்த நடனம்புரியும் சபாபதியைக்கண்டு தரிசிக்கவேண்டுமென்று மனதில் ஆசைமிகுந்தெழுந்ததினால் மந்திரிமுதலாகிய பேர்களுடன் ஆலோசனைசெய்து பிரயாணமாகச் சபாபதிப்பிரியனென்னும் சேரமகாராஜனெழுந்தான்—எ-று. (௩௬)

முரசமார்த்தெழ வலம்புரிச் சங்கின முழங்கப்
பரிசுபலவியந் துவைத்திட வந்திகர் பரவ
விரைசெய் சாமரக் காலபொர வெண்குடை நிழற்ற
வரசரெண்ணிலர் புடைவரச் சிவிகைமீ திவர்ந்தான்.

இ-ள். பேரிகை-மத்தளம்-தாளம்-காகளம்-வலம்புரிச்சங்கங்கள் முதலிய வேதவாத்தியங்கள் முழங்க, மாகதர்கள் புகழ, இரண்டு பக்கத்திலும் பெண்கள் வெண்சாமரைகளால் சிறுகாற்றுவரும்படி வீச, முத்தின் வெண்குடைநிழலில் சபாபதிப்பிரியனென்னும் சேரமகாராஜன் நவரத்தினமயமாகிய தங்கச்சிவிகையிலேறிக்கொண்டு இராஜாக்களும், மந்திரிகளுஞ், சேனாபதிகளுஞ், சதுரங்கபலங்களுஞ் சூழ்ந்துவரச் சிதம்பரத்திற்குப்போகப் பிரயாணமாகி நடந்தான். ()

செறுத்தகோபமுந் தழற்கணுந் திறற்கையுங் கோடும்
பொறுத்த மேனியுங் கறுத்தடல் புரிந்திட லிழலை
வெறுத்தலாவரு பேருவும் பலவென வல்லி
யறுத்துலாவிய களிற்றினமளப்பில நெருங்க.

இ-ள். மிகுந்த கோபங்கொண்டு நெருப்புப்பொறிபறக்குஞ் சிவந்த கண்களையும் வலிமையையுடைய துதிக்கையையும் பிறைபோன்ற கொம்புகளையும் உடையதாய நீலநிறத்தோடுங்கூடி மகமேரு அநேக உருவங்களைக் கொண்டதையொத்து தன்னிழலை வேற்றானையென்று சங்கிலிகளையறுத்துக்கொண்டு பாய்கின்ற உயர்ந்த மதயானைக்கூட்டங்கள் அணியணியாக நெருங்கிவர—எ-று. (௩௮)

அருக்கரேறிய தேரெனவளவிலா விரதந்
நெருக்கமிக்குற வாழிபிளிடிய வெங்கா
லுருப்படைத்தன துரகமுலப்பில விலாவச்
செருப்பொருப்பென விருநருமளவிலா செறிய,

இ-ள். சூரியரேறிவரும் இரதங்களைப்போல எண்ணிக்கையில்லாத தேர்களும் பிரளயகாலப்பெருங்காற்றினது உருவத்தைப்பொருந்த அளவில்லாத குதிரைத்திரள்களும் யுத்தத்தில வெற்றிகொண்டு விருதுகள்பெற்ற காலாள்கூட்டங்களும் பத்திபத்தியாய நெருங்கிவந்தது—எ-று. (௩௯)

படிமறைத்தன நடவியபதாகினி படியிற்
பொடிமறைத்தன மாதிரப்பொலிவைவான் விசும்பைக்
கொடிமறைத்தன வாதித்தர் குருசுடர் ராசர்
முடிமறைத்தன மறைத்தன கடலொலி முரசம்.

இ-ள். பூமிதெரியாமல் மறைத்துக்கொண்டு சதுரங்கசேனைகள் நடக்கிறபோதெழுந்த துளிகள் எண்டிசைகளையுமறைத்தன துகிற்கூட்டங்களாகாசத்தைமறைத்தன இராஜாக்களுடைய கிரீடங்களினது காந்தி சூரியகிரணங்களைமறைத்தன பேரிகைமுதலிய வோரசைகள கடலொலியைமறைத்தன—எ-று. (௪௦)

செந்தமிழ்க்கலை வடகலைதெளிந்தவ ரேத்தத்
தந்திரத்திரு மறையவர்தாபதர் வாழ்த்த
விந்திரத்திரு வீதெனப்பூதல மிசைப்ப
வந்திறுத்தனன் சுந்தரசையமால் வரைப்பால்.

இ-ள். இயலிசைநாடகமென்னு முத்தமிழ்க் கவிவாணர்களும் தெலுங்கு கிரந்தமுணர்ந்த புலவர்களும யாகாதிகருமங்களசெய்யும் வைதிகப்பிராமணர்களும், முனிவர்களும வாழ்த்தி யாசீர்வாதஞ்செய்ய சபாபதிப்பிரியனென்னும் சேரமகாராஜன் வருகின்ற சிங்காரத்தைப் பூமியிலுள்ளோர்பார்த்து இந்திரபோக மிதுதானேவென்று அதிசயிக்கத்தக்கதாக வந்து தென்பாற் காவிரிநதியும் வடபாற் திருவணைவேணிநதியும் பிறக்குமிடமாகிய சையமலை யடிவாரத்தில் இறங்கினன்—எ-று. (௪௧)

குடதிசைக்கட லெழுந்தொரு குலகிரியாற்றிற்
படவியிற்குண திசைநெறிபபொலிந்துசெல் வதுபோற்
றடமிலங்கிய சையமால்வரையினை யிகந்து
நடவுகின்றது துன்றியநாதிப னனிகம்.

இ-ள். மேற்குச்சமுத்திரம்பொங்கி எழுந்துவந்து மகமேருவில் இளையபாறிச் சுற்றிக்கொண்டு கிழக்குசமுத்திரத்திற்குப் போகிறதுபோல் விசாலமாயவிளங்குஞ் சையகிரிசாரலி லிறங்கியிருந்து அவணின்றெழுந்து சிதம்பரதலத்து மார்க்கமாகச சபாபதிப்பிரியனென்னும் சேரமகாராஜனது சேனைசமுத்திரம்நடந்தது—எ-று. (௪௨)

முச்சகங்களு மண்டமுறையினிற் பயந்த
கச்சகங்கொளாக் கனமுலைகணவற்கு விடத்தை
வைச்சகந்தாற் கன்புடைமன்னவன் படைக்கட்
டுச்சகன்கள வாசையாற்சோர்வுபார்த் தணைந்தான்.

இ-ள். சுவர்க்கமத்திய பாதாளமென்னு மூன்றுலோகங்களையும் பெற்றுக் கச்சுக்குளடங்காத கனதனங்களையுடைய சிவகாமசவுந்தரி ஆலகாலவிடத்தைக் கண்டத்தில் நிறுத்தினதினாலே நீலகண்டமூர்த்தியென்னும் பெயரையுடைய சிவபெருமானுக் கடிமைபூண்ட சபாபதிப்பிரியனென்னும் சேரமகாராஜன் சேனைக்குள்நுழைந்து திருடவேண்டுமென் றாசைகொண்டு துச்சகன் சமையம்பார்த்து வந்துசேர்ந்தான்—எ-று. (௪௩)

உரியருத்திர னிவனெனவுருக்கொடு வந்த
க்ரியநெஞ்சினன் றனையடற்காவல னேவல்
புரியுமாக்களோர் பொன்பொதிசுமையுடைத் தேற்றிப்
பெரியகாவலா லிவன்றனைப்பேணினர் சென்றார்.

இ-ள். வேளாளர்வேடம் பூண்டுவந்த கபடமனத்தோனாகிய துச்சகனைச் ருத்திரஜாதியானென்று இராஜனது ஏவற்றொழில்செய்யும் காவற்காரர்களகண்டு பிடித்தடித்துத் தங்க சுமையை யவன் றலை மீதுவைத்து அநேகங் காவற்காரர் பத்திரமாகப் புடைசூழ்ந்துவர சேனைகளுடனே யழைத்துக்கொண்டுபோனார்கள்—எ-று. (௪௪)

அன்னபோதவ னிச்சுமைதுறந்துநா மகன்றாற்
றன்னுமன்னவர் புடைத்திடுந்துயரமே செய்வர்
பொன்னினீள்சுமை சோர்விடைக்கொணர்ந்துபோ வதுவே
நன்னலத்தென மகிழ்ந்திடநாடியே வந்தான்.

இ-ள். அக்காலையில் துச்சகனானவன் நாம் இந்தப் பொன்சுமையைப் போட்டுவிட்டோடினால் சுற்றிக்கொண்டுவருங் காவற்காரர்பிடித்துக்கொண் டடித்துக் கொன்றுவிடுவார்களென்றுபயந்து ஆலோசித்துப் புண்ணியவசத்தினாற் தங்கச்சுமை நமதுவசமாயிருக்கின்றது இச்சுமையை எவ்விதமாயினுங் காவற்காரர் அசந்திருக்கும்வேளைபார்த்து எடுத்துக்கொண்டு போகலாமென்று மனதில் எண்ணிச் சந்தோஷித்துக் களவுசெய்யத் தகுந்தயிடத்தைநாடிச் சென்றான்.()

ஆய்ந்தமெய்ப்பொருண் மாதவரடைந்தவெம் புலனைக்
காய்ந்தடர்த்தவை செல்வுழிக்காக்குமா போல
வேந்தனேவலர் துச்சகனினைவினில விடாமற்
போந்துகாவலை மேவினர்விரைந்தனர் போனார்.

இ-ள். வேதாகமங்களிற்சொல்லும் மெய்ப்பொருளையுணர்ந்தசி வயோகிகளாகிய தபோதனர்கள் தங்கள்மனதை மெய் வாய்-கண்-மூக்குச்-செவி யென்னும் பஞ்சேந்திரியங்களின் வழியாய்ச் செல்லாமற் காப்பதுபோலச் சேனைபோகின்றபோதும் இறங்கினபோதும் துச்சகன் எண்ணப்படிச்செல்லவொட்டாமல் இராஜாவின் காவற்காரர்கள் உறுதியாய்க் காவற்படுத்திக்கொண்டு சீக்கிரமாய்ச்சென்றார்கள்—எ-று. (௪௬)

பராகமண்டகோ ளகையுறப்படைபுடை நெருங்க
வராகமீசனை யன்றிமற்றயலிலா தருள்கூர்
தராதலாதிபன் சராசரஞ்சராசரச் சயிலப்
புராரிதன்வடி வாகியபுரிக்கய லடுத்தான்.

இ-ள். சதுரங்கசேனைகளுஞ்சூழ்ந்து நெருங்கி நடக்கின்றகாலத்தில் எழுந்ததூளி பிரமாண்டகோளகைவரைக்கும் நெருங்க வராகபுராணத்திற்குரிய சிவபெருமானையன்றி மற்ற தெய்வங்கண்மீது விருப்பமில்லாத மகா சிவபக்தனாகிய சபாபதிப்பிரியனென்னும் சேரமகாராஜன் மேருவை வில்லாகவளைத்து முப்புரத்தை நகைத்தெரித்த பரமசிவன் சொருபமாகித் தாபரஜங்கமாதி ஜீவகோடிகள்விளங்குஞ் சிதம்பரதலத்துக்குப் புறத்தில்வந்திறங்கினான்—எ-று. (௪௭)

பைவனுகவேந் தறிதெளிதுரைக்கவும் படுமே
யெய்வனனென வருமதனெரியெழ விழித்த
சைவநாயகன் சதுமறைநாயக னென்னுந்
தெய்வநாயக னடம்புரிதில்லைமா நகரம்.

இ-ள். பஞ்சபாணத்தினால் எய்வேனென்று ஐங்கணையோடும் வந்தெதிர்த்த அனங்கனை நுதல்விழியால் எரித்தவன் சைவசமயத்தலைவன் நான்குவேதங்களுக்கும்நாயகன் தெய்வங்களுக்கெல்லா முதல்வன் ஆனந்தநடனம்புரியும் சிதம்பரதலத்தின் மகிமையை ஆயிரமுகமும் இரண்டாயிரம்நாவுமுள்ள ஆதிசேடனாலும் அறிந்து புகழமுடியாது—எ-று. (௪௮)

புண்டரீகமுந் திசைமுகம்பொலிந்தவா ரணமு
மண்டுபேரொளி யன்னமுமலர்நதசொற் கரும்புங்
கண்டபல்பொருட் டோற்றமுங்காட்சியுங் கவினுங்
கொண்டுகான்மறை யவனெனக்குலவுவ பழனம்.

இ-ள். தாமரைமலரும் நான்குமுகங்களிலும் விளங்குகின்ற நான்குவேதங்களும் மிகப்பிரகாசத்தையுடைய அன்னவாகனமும் கரும்பையொத்த மொழிகளையுடைய சரஸ்வதிதேவியும சகல வளப்பங்களையுண்டாக்குஞ் செயலும் தன்னிடத்தில எபபொருளும் கண

ளூரக்காணவிளங்கும் அழகையுடைய பிரமனைப்போல் தாமரைமலர்களும் நான்குதிக்கிலுஞ் சங்கினங்களும் அன்னப்பட்சிகளும் செந்நெற்களும் கரும்புகளுங் கற்கண்டு சற்கரை வெல்லமுதலிய ரசவர்க்கங்களு முண்டாகிற வளப்பங்களைக்கொடுக்கின்ற அழகையுடைய வயல்கள் பிரகாசிக்கும்—எ-று. (௪௯)

கோடுதாங்கலா னேமிமேற் குலவலாற்குலப்புள்
ளூடுமேவலா லரியரவத்தினு லும்பர்
நாடுகீழ்ப்பட வோங்கலாற் பசுமைநண்ணுதலா
னிடுமாலெனப் பொலிவன நெருங்குதண்டலைகள்.

இ-ள். சங்குசக்கரத்தைத்தரித்தும் கருடன்மீதேறியும் தேவேந்திரன் றுதிக்கிறதினாலும் வாமனாவதாரங்கொண்டு தெய்வலோகத்திற்கும் மேலாக வளர்ந்துநின்ற பச்சைநிறமாகிய விஷ்ணுவைப்போல் கொம்புகளைத்தாங்கி சக்கரவாகப்பட்சிகள் மேலேயிருக்க வண்டுகளின் ரீங்காரவொலியுங் கூடித் தெய்வலோகத்துக்கு மேலாய்வளர்ந்து பசுமைதங்கிய இலைகள்தழைந்த தோப்புகள் நெருங்கிவிளங்கும். (௫0)

அளியுமேனிறை புளகமு மலர்முகமுங்கட்
டுளியுமுட்டுகளின்மையு மீரமுந் துவன்றிப்
பளிதகுங்குமப் பயோதரி பணியுமெய்ஞ்ஞான
வெளிநடந்தொழு மன்பரின் விளங்குவபொய்கை.

இ-ள். கருணையோடு தேகமெல்லா மயிர்க்குச்செறிதலும் புன்சிரிப்போடுங் கூடியமுகமும் ஆனந்தக்கண்ணீர் சொரிதலும் இரக்கமும் கலவைசந்தனமணிந்த தனபாரமும் உடைய சிவகாமசவுந்தரி கண்டுமகிழும் ஞானகாசரூபமாகிய ஆனந்தத்தாண்டவத்தைத் தரிசனஞ்செய்த சிவனடியார்களைப்போல் வண்டுகளும் மலர்ந்த செந்தாமரையாகிய முகங்களும் பூத்தேன்றுவியும் தாமரை நீலோற்பலவரும் புகளினினிமையுங் குளிர்ச்சியும்பொருந்திய தடாகங்கள் பிரகாசிக்கும்—எ-று. (௫௧

ஆளுநாயகன் றில்லையினணிபெறுங் கோயின்
மேளுலாவுற வளரெழு கிளர்மதிலண்ட
கோளமீநுரச சோதிகள் குலவியநேமி
வாளமாலவரை யேழுள வேலவைமானும்.

இ-ள். அடியேனை யடிமையாகப் படைத்தாண்டு இரட்சிக்குஞ் சிவரூபமாகிய சிதம்பரதலத்தில அலங்காரம்பெற்ற சிவாலயத்தின பிரகாசம் பாயந்துலாவ ஆகாயம்வரைக்குமளாவிய கோபுரங்களோடு

ங்கூடிய ஏழுமதில்களுக்கு பிரமாண்ட கோளகைவரைக்கு முயர்ந்து நவக்கிரகங்களின் பிரகாசத்தை யுட்படுத்தி ஏழுதீவுகளையுஞ் சுற்றிக்கொண்டிருக்குஞ் சக்ரவாளகிரி ஏழிருக்குமாயின் இணையாகச்சொல்லலாம்—எ-று (௫௨)

ஏமவெற்பெழு மூழிகோ றலைந்துகு மிறவாக்
காமரித்தலத் துளதெனத் தளர்வறக்கருதித்
தாமரைத்தவி சுறைபவன் பற்பலசமைத்த
சேமமேருவிற் சிறந்தபொற் செறிந்தகோபுரங்கள்.

இ-ள். தங்க நிறத்தையுடைய மகமேருவானது பிரளயகாலங்களில் அலைந்தலைந்து கெடுகிறதென்று கமலாசனத்திலிருக்கும் பிரமதேவன் ஆலோசனைசெய்து எக்காலத்திலும் இந்த சிதம்பரதலமழிவில்லாம லிருக்கிறதென்று நிச்சயித்து அநேக மகமேருகளை அமைத்துவைத்ததுபோலப் பிரகாசிக்கின்ற கனகமணிக் கோபுரங்கள் நெருங்கியிருக்கும்—எ-று. (௫௩)

அடர்ந்தவண்டமூ டிடைவிடா தணைந்தகோபுரத்தை
யுடங்குதேரொடும் வாயிலினுழைந்துபோ துவன்வான்
றொடர்ந்தநீணெறி விலகிமுன் சூழ்வனல்லாது
கடந்துபோகவும் வல்லனோ வெழுபரிககதிரோன்.

இ-ள். பிரமாண்டம்வரைக்கும் அளாவி நெருங்கியிருக்குங் கோபுரங்களின் மேனிலை வாயல்வழியாகத் துவசங்களினால் அலங்கரிந்த தேருடன் நுழைந்துபோயும் விலகியும் மகமேருவை ஆகாயமார்க்கமாய் வலம்வருகிறதுபோல வருவதேயல்லாமல் சிதம்பர கோபுரங்களைத் தாண்டிப்போக ஏழுகுதிரைகள்பூட்டிய ரதத்தையுடைய ஆதித்தனுக்கும் வல்லமையுண்டோ—எ-று. (௫௪)

தேறுமாகரு மரம்பையர் தொகுதியுஞ்செறிய
வேறுவேறுதிர் முத்தமுமணிகளும விரிந்து
மாறுமாறெதிர் விளங்கலால் வயங்குதாரகைப்பே
ராறுபூதலத் தணைந்தமை யனையவாவணங்கள்.

இ-ள். தெளிந்தஞானமுடைய தேவர்களும் அரம்பை-ஊர்வசி திலோத்தமைமுதலிய தேவகணிகையர்களும் ஆகாயவீதியில நிறைநிரையாக நெருங்கிநின்று தரிசிக்கின்றபோது அவர்களணிந்திருக்கும் முத்துகளும் இரத்தினங்களும் உதிர்ந்து எதிரெதிரே இரண்டு புறமும் வரிசையாயிருப்பதுபோலவும் ஆகாயத்திற் பிரகாசிக்கும நட்சத்திரங்கள் பூதலத்திற் சேர்ந்ததுபோலவும் சிதம்பரதலத்துக் கிடைவீ

திக ளிருபுறத்திலும் நவரத்தினராசிகள் குவியலாகக் குவித்துக்கொண்டு வியாபாரஞ்செய்வார்கள்—எ-று. (௫௫)

முத்தியாவது தில்லையம்பலமென முயங்குஞ்
சித்தமேவிய வானவர்சிறப்பினு லுறைந்து
வித்தகத்துடன் றத்தமவிமானங்க ணிரைத்து
வைத்தவாமெனப் பொலிவன மாடமாளிகைகள்.

இ-ள். மேலாகிய மோட்சமென்பது சிதம்பரதலம் என்று மனதில் தெளிந்துகொண்டு தேவர்கள் தத்தம் திவ்யவிமானங்களிலேறி வந்து சிதம்பரதலத்தில் வாசமாயிருக்க இறங்கி மேன்மைபொருந்திய விமானங்களைப் பத்திபத்தியாய் நிறைந்திருப்பதுபோலச் சகலவலங்காரத்துடன் மேனிலை மாடமாளிகைகள் வீதிகளில்விளங்கும்.

துங்கமாளிகை வெண்சுதைச் சோதிநாற்றிசையும்
பொங்கிமீதுசூழ் திலகியபொலிவுமான் மழுச்சேர்
செங்கையான்வடி வாகியசிவகங்கை தனைவான்
கங்கைமாநதி வலம்வருங் காட்சியைக்கடுக்கும்.

இ-ள். உயர்வாகிய மேலணிமாடமாளிகைகளின் வெண்மையாகிய ஒளி நான்குதிக்குகளிலும் பரந்து ஆகாயத்திற் பிரகாசிப்பது யாதுபோலுமெனின் மானையும் மழுவையும் செங்கையிற்றரித்திருக்கும் பரமசிவனுருவாகிய தீர்த்தங்களிற் சிறந்த சிவகங்காதீர்த்தத்தை வெண்மையையுடைய ஆகாயகங்கை மேலாகப் பிரதட்சணஞ் செய்துகொண்டிருப்பதுபோல் விளங்கும—எ-று. (௫௭)

மொய்த்தபேரொளிப் பரிதிதேர் முயங்கியபரிமேல்
மத்திகைக்குழா மெனப்பொலி மாடவெண்பதாகைப்
பத்திதாக்குத லொழிவறத் தொழில்புரிபாகன்
கைத்தலத்தினுக் குதவிசெய நலத்தினைக்காட்டும்.

இ-ள். அதிக காந்தியோடுங்கூடிய சூரியனது இரதமானது சிதம்பர பட்டணத்துக்கு மேலாகவரும்போது தேரிற்பூட்டியிருக்கும் ஏழுகுதிரைகளையு மேலணிமாடங்களில் வரிசையாகக்கட்டிய வெண்மையையுடைய துவசங்கள் காற்றின்பெருக்கினால் எந்நேரமும் ஓய்விலாமலசைந்து தேர்ப்பாகனாகிய அருணனது கரங்களுக்கு உதவி செய்வதுபோலுமிருந்தன—எ-று. (௫௮)

அருங்கலைத்துறை வேள்வியோ ரளப்பருமிரதங்
கருங்களத்திறை விழாவினிற் கதிர்மணிநெடுந்தேர்

மருங்குசூழ்தரு வானவர்விமானங்கண் மறுகி
னெருங்கியிவ்வகைத் திவையென நினைக்கவுமரிதால்.

இ-ள். அரிதாகிய சாத்திரவிதியின்படி யாகங்கள்செய்யும் அநேகந் தபோதனர்கள் தோகளும் நீலகண்டமுடைய அம்மலவாணமூர்த்தி எழுந்தருளிவரும் நாகரத்தினமணிகளின் பிரகாசம்பொருந்தி யுயர்ந்த தேர் திருவிழாவைத் தரிசிக்கப் பக்கங்களில சூழ்ந்த தேவர்களின் விமானங்களும் வீதிகளில் வந்திறங்கி நிறைந்திருக்கும் இந்தச் சிங்காரங்களை இவ்விதமென்று மனதில் நினைப்பதற்கும அரிதாகிப் பிரகாசித்துக்கொண்டிருக்கும்—எ-று. (௫௯)

திலகவாணுத லரிவையர் தேவர்தந்நெருக்கிற்
குலவுமாமுடி யுதிர்மணியலகிடுங் குப்பை
யுலகநாயக னம்பலங் காணியவுவந்து
தலனுறும்பரி தியருடன்றலைமயக் குறுமால்.

இ-ள். நெற்றியிற் றிலகமுதலிய நான்குவகை யலங்காரங்களும் பெற்ற வனிதையர்களுடன் தேவர்களும் நெருங்கி வருகிறபோது கிரீடங்களும் ஆபரணங்களும் ஒன்றோடொன்றுபட்டு உதிர்ந்த நவரத்தினப்பொடிகளைப் பெருக்கிக் கூட்டிவைத்திருக்கின்ற குப்பைகள் உலகநாயகன் ஆனந்த நாட்டியஞ்செய்யும் பொன்னம்பலத்தில் திருவிழாவைத் தரிசிக்கவந்த சூரியர்களைப்போற் பாரப்பவர்களுக்கு மயக்கத்தை யுண்டாக்கும—எ-று. (௬0)

ஒன்றிலாதவைம் புலன்வழித் தடைபடா துலகை
வென்றமாதவர் மன்றிடைநடந்தொழ விரைந்து
துன்றுமன்பொடு செல்வுழிச்சுரர்முடி யிடைவீழ்
மன்றன்மாலையே வழியிடை தடிப்பனமறுகு.

இ-ள். நன்மார்க்கம்பொருந்தாத பஞ்சேந்திரியங்களின் வழியில் மனதைமறிக்காமல் மயக்கு முலகநடையைவென்ற தபோதனர்கள் திருச்சிற்றம்பலத்தில் அம்பலவாணமூர்த்தியினது ஆனந்தநாட்டியத்தைத் தரிசனஞ்செய்துப்பணிய நிறைந்தபக்தியுடன் விரைவாக நடந்துவருகின்றவர்களைத் தேவர்கள் கிரீடங்களில் அணிந்திருக்கும் எப்போதும் நீங்காத வாசனையையுடைய கற்பக மலர்மாலைகள்தவறி பூமியில் விழுந்து அந்தவீதியில் தடுத்துக்கொண்டிருக்கின்றது. (௬௧)

நீடுமெண்ணன்பான் மலைமகள்செறிந்தமை நிகர்ப்ப
மாடுயர்ந்தபே ரம்பலசசோதியும் வடபாற்
கோடுகொண்டெழி னிழலுமிழ் குலவிபவடத்தி
னூடிதங்கியு பசுமையுங்கலந்துநனி றொளிரும்.

இ-ள். கனகமணிகளாலமைந்த திருச்சிற்றம்பலத்தின் பிரகாசமும் சபைக்கு வடதிசையில் உயர்ந்த கொம்புகளிற்பச்சைநிறமாகிய இலைகள் தழைத்திருக்கும் ஆலமரத்தின் அதிகபிரகாசமுங் கலந்து உயர்வாகிய அநேகஞ் சூரியகாந்தியையுடைய சபாபதியும் மரகதமணிபோன்ற சிவகாமசவுந்தரியுஞ் சேர்ந்து விளங்குவதுபோலப் பிரகாசித்துக் கொண்டிருந்தது—எ-று. (௬௨)

மதியமீதுகீழ் வடத்தருவயங்குற வெறுக்கைப் *
பொதுவெழுஞ்சுட ரண்டமேற்பொலிவதோ திமமுங்
கதுவுகேழலு மாயயன்கண்ணன்முன் றேட
முதிருநீடொளித் தழற்பிழம்பொன்னலா மொழியின்.

இ-ள். ஆகாயத்திற் பூரணசந்திரன் உதயமாகிவிளங்க பூமியில் ஆலமரத்தின் பச்சைநிறம்விளங்க கனகசபையின்பிரகாசம்பிரமாண்டகடாகம்வரையிற் பொருந்தியிற்பது வெண்மையையுடையஅன்னவுருவங்கொண்ட பிரமனும் பச்சைநிறத்தையுடைய பலம்பொருந்திய வராக உருவங்கொண்ட விஷ்ணுவும் அடிமுடிகாணநின்றஅழற்பிழம்பென்று சொல்லும்படி பிரகாசிக்கும்—எ-று. (௬௩)

திருநடந்தொழு வோர்சிவமாகிய செயல்போ
லருளிலங்கிய வம்பலத்தாடகத் தொளியா
லிருபெருஞ்சுடர்த் தாரகையொழிறசரா சரங்கண்
மருவியுள்ளன தமனியவடிவமாய வயங்கும்.

இ-ள். அழகிய ஆனந்தத்தாண்டவத்தை தரிசனஞ்செய்தவர்கள் ஒப்பற்ற சிவபெருமா னுருவத்தை யடைவதுபோல் சபாபதியினனுக்ரகத்துடன் விளங்கியிருக்குந் தங்கமயமாகிய திருச்சிற்றம்பலத்தின் பிரகாசத்தினல் சூரியன் சந்திரன் முதலியநவக்கிரகங்களும் நட்சத்திரங்களும் தேவர்கள் மனிதர்களமுதலியசரப்பொருள்களும் கல் மரமுதலிய அசரப்பொருளகளும் தங்கநிறமாய்விளங்கும்.எ-று

விழைவுகொண்டனோ விண்ணவர்மகுடகோ டியின்
றழைவுகொண்டெழு கற்பகத்தமனிய மாலை
யிழைவுநெருக்குற வீழ்வனபொற்றல மென்பபொன்
மழைமுகிற்குல மொழிவறப்பொழிவன மானும்.

இ-ள். தரிசனஞ்செய்ய விருப்பமாகிவருந் தேவர்களுடைய கிரீடங்களி லணிந்திருக்குந் தங்கநிறமாகிய கற்பக மலர்மாலைகளும் ஆபரணங்களும் ஒன்றோடொன்றுநெருங்கி நழுவிவிழுகின்றவை சிதம்பரநகரந் தெய்வலோகமென்று மேககூட்டங்கள் இடைவிடாமல் பொன்மாரி பொழிவதுபோல்விளங்கும்—எ-று. (௬௪)

ஏண்டலத் துறு கடவுளரிழைக்கிடும் யாகத்
தூண்டிவேண்டிய வண்டர்தம்மேனியோ டொளியே
சேரண்டவங்கியின் கொழும்புகையண்டகூடத்து
மண்டலாற்றெயவ நதியமுமாகுதி மணக்கும்.

இ-ள். சிதம்பரநகரிலிருக்கும் பூசுரர்கள் யாகக்கள்செய்கிற வி டங்களில் ஆகுதிவாங்கவருந் தேவர்களது தேககாந்திஅக்கினிச்சோ திபோற் பிரகாசிக்க யாகத்தில் உண்டாகின்ற வாசனையோடுங்கூடிய புகையானது பிரமாண்டமெங்கும் நிறைவதினால் ஆகாய கங்காநதியு ம் ஆகுதி வாசனைபெற்று விளங்கும்—எ-று. (௬௬)

படைப்புறத்தினை மறைப்பனபணிலங்கள் பழன
மடைப்புறத்தினை மறைப்பனமணிமுதத மைந்தா
தொடைப்புறததினை மறைப்பனதும்பிகண் மறையோர்
கடைப்புறத்தினை மறைபபனகடவுளா தொகுதி.

இ-ள். வயல்களில் உழுகபடைசசால் ஓரங்களை சங்கினங்கள் மறைககும அச சங்கினம்ஈனற முததுக்கள் வயல்களின் நீமடைப் புறஙகளை மறைக்குங் நவரத்தினபரணங்க ளணிந்தஜனங்களின் பு ட்பமாலைகளை வண்டுகள்மொயததுமறைக்கும் வேதிய ரகத்துவாயி ல்களைத் தேவர்கள் ஆகுதிகொளளுமபொருட்டு நிறைநதுமறைத்து க் கொள்ளுவார்கள்—எ-று. (௬௭)

நெடியமான்முதற் கடவுளாநிறைதலா லறையும்
படியிலாமையான் மகத்தொடுதவம்பர வுதலான்
முடிவிலாமையா னற்கதிதருதலான் முடியா
அடிகள்வாழ்தலா லாரணமனையதந நகரம்.

இ-ள். அரிபிரமாதிமுதலாகிய தேவர்கள் நிறைந்திருப்பதினாலு ம் குற்றங்களில்லாச சொற்களும், மகங்களும், தவங்களும், தோததி ரங்களும் பரவி இருப்பதினாலும், முடிவிலாமையினாலும, மோட்ச த்தைத் தருவதினாலும், ஒருவராலுங் கண்டறிய முடியாத சிவபெ ருமானது திருவடிவாழ்தலாலும் வேதம்போற் சிதம்பரநகரமானது விளங்கும்—எ-று. (௬௮)

கலிவிருத்தம்.

நிறையுமழுணர்வுந் திதியும்மறமும்
மறையும்மகமும் மற்கும்மணமும்
பொறையுந்தவமுங் கொடையும்புகழும்
நிறையும்மயிரும் மெனநின்றிலகும.

இ-ள். மானமும், ஞானமும், நன்மார்க்கமும், தருமமும், வேத ங்களும், யாகங்களும், விதிகளும், அவ்விதிகளில் கவியாணங்களும், பொறுமையும், தபமும், தானமும், கீர்த்தியும், இவைகளெல்லாஞ் சி வமும் ஜீவனும்போலக்கலந்து பிரகாசிக்கும—எ-று. (௬௯)

அருளம்பலமீ தடர்பொற்சுடரா
லிருள்வெம்பகலென் றிவைகண்டிலமா
லுருவும்மருவும் மொருவும்மொருவன்
றருமெய்க்கதியென் பதுமித்தலனே.

இ-ள். அருட்சத்திரூபமாகிய திருச்சிற்றம்பலத்தின் பிரகாசம் மேலெழுந்து தங்கமயமாய் விளங்குவதினால் அச் சிதம்பரநகரில்இர வென்றும் பகலென்றும்காணக்கூடாமல் விளங்கிக்கொண்டிருக்கும் பிரமன் விஷ்ணுமுதலிய உருவப்பொருள்களையும் ருத்திரன் மகேற ஸ்வரன் கிட்களரூபமான சதாசிவம் கிட்களசித்து நாதவிந்து முதலி ய அருவப்பொருள்களையும் கடந்திருக்கும் பரமசிவமாகிய ஒருவன் பரப்ரம்மசொரூபத்தை அடியாாகளுக்குககொடுப்பான் என்றுசொ ல்லப் படுவது இநதச் சிதம்பரதலம—எ-று. (௭௦)

மூவாயிரமா முனியோர்முயலுந்
தாவாதமகந் தனிலுணடுபொதுத்
தேவாடல்பணிந தருள்சேர்கரத்
தோவாதகளிப பினரும்பரெலாம

இ-ள். தில்லைமூவாயிரவர்களும் பிரமரிஷிகளும் செய்யும யாகங் களில அவிர்பாகஙகளையுண்டு கனகசபையில் அமபலவாண மூாததி யின் ஆனநதநடனத்தை தரிசனஞ்செய்து சிவனருள்பெற்றுச சந தோஷமடைவதினல் தேவாகள சிதமபரதலத்தைவிட்டு நீஙகாமலி ருப்பாாகள—எ-று. (௭௧)

எங்கும்மறையெங் கணுமாகமமே
மெங்கும்மகமெங் கணுமர்ச்சனையே
யெங்குந்தவமெங் கணுமீறமே
யெங்குநதிருவென் றுமிலங்குறுமால்.

இ-ள். எவவிடங்களிலுமு வேதபாராயணங்களும் ஆகமசாத்தி ரங்கள் வாசிக்கின்றவாகளும், யாகங்களும், சிவபூசைசெய்கின்றவர்க ளும், தவஞ்செய்கிறவர்களும், தருமங்கள் செய்கிறவர்களுமாகி இ ருக்கிறதனல் இலக்குமி எவ்விடங்களிலும், எக்காலத்திலும், அந்த சிதமபரநகரத்தில் விளஙகிககொணடிருபபாள்—எ-று. (௭௨)

நீடுந்தவமுந் நிதியும்விதியிற்
றேடுங்கதியுந் திகழ்மன்றிடையின்
ருடும்பதமென் றறிவைச்செறியக்
கூடுந்தகையோர் குறைஒன்றுமிலோர்.

இ-ள். அழிவில்லாத தவங்களையும் திரவியங்களையும் வேதாகமங்களிற்சொல்லு முறைமையாகச்சமபாதிக்கப்பட்ட மோட்சத்தையும் பிரகாசம்பொருந்திய திருச்சிற்றம்பலத்தில் எப்போதும் ஆனந்தநடனம்புரியும் பாதாரவிந்தமே கொடுக்குமென்று அறிவுவிளங்கிய பெரியோர்கள வேறொரு குறைவுமில்லாமற் சந்தோஷித்துக்கொண்டிருப்பார்கள—எ-று. (எங)

வற்றுவினைசெற் றுயர்மாதவமே
யுற்றுருமுறு தொளிரொண்கதிவா
னெற்றுவியமன் றெதிர்பார்வையினிற்
பெற்றாரினியோர் பெறுபேறுமிலார்.

இ-ள். ஒருகாலத்திலுங் குறையாதவினைகளைச்செய்து மேலாகியதவத்தையடைந்த பெரியோர்களுக்கும் காணக்கூடாதவொளியையுடைய சூரியமண்டலவனாயில்காந்தியைவீசுகின்ற திருச்சிற்றம்பலத்துக் கெதிராகநின்று அம்பலவாணமூர்த்தியைத் தரிசனஞ்செய்தவர்களும் இனிமேற் பெறவேண்டியமோட்சம் வேறேயில்லை—எ-று.

கொன்றுருயிருண் கொடுவெஞ்சமனை
வென்றாரழியா விரதத்துயர்வோர்
மின்றுமெலர்ப் பதமல்லதுவே
தொன்றுதொளிரும் முளமெய்யுரையோர்.

இ-ள். மனோவாக்குக் காயங்களினால் திருச்சிற்றம்பலத்தில் எப்போதும் ஆனந்தத் தாண்டவம்புரியும் பாதாரவிந்த தரிசனஞ்செய்து தியானமும், தோத்திரமும், வணங்குதலும் உடையவர்கள் உலகத்தில் உள்ள ஜீவகோடிகளது பிராணனைப்பிடித்து வருத்துகின்ற எமதருமராஜனை வென்று அழிவில்லாத தபோமகிமையைப் பெற்றவர்களாவார்கள்—எ-று. (எரு)

எய்துந்தபெரும் பதமெய்திடினு
மெய்துஞானிகளினைவோர் நுவன்மன்றுறையும்
பைதாழ்வா பரனன்பணியே
செய்தார்வமுறுந் திகழ்வாழ்வுடையோர்.

இ-ள். வேதாகமங்கள் துதிக்குந் திருச்சிற்றம்பலத்தில் ஆதிசேடன்முதலிய நாகங்களை ஆபரணமாக அணிந்துகொண்டு நடம்புரியும் அம்பலவாணமூர்த்தியின் பாதாரவிந்தங்களுக்குத் தொண்டு செய்வோர் மற்றவுலகத்தார் யாகாதி புண்ணியங்கள்செய்து அரிதாகப்பெறும் சுவர்க்காதி பதவிகளை அற்பமென்றெண்ணி வெறுத்துப் பேரின்பவாழ்வை யடைவார்கள்—எ-று. (எசு)

அறிவாரறிகா லறியாநிறையும்
மறிவாரருளா லறிவார்பிறிதொன்
றறிவானமையா ரறியாமையிடத்
தறிவாமெனமெய் யறிவுடைமைவார்.

இ-ள். தெரிந்துக்கொள்ளத் தக்கவர்கள் விவேகத்தினால் அறிதற்கரிதாகிய சிவஞானத்தைப் பரிபூரண ஞானமுள்ள ஞானசாரியர் அநுக்ரகத்தினால் தெளியத் தெரிந்துகொண்டு மற்றொன்றைத் தெரிந்துகொள்ள இச்சிப்பது அஞ்ஞானமென்று நீக்கி சிவயோகநிட்டையிலிருந்து பரமசிவதரிசனத்தை அடைந்த சந்தோஷத்தினால் தத்துவங்களையும் உலகங்களையும் சிவசொரூபமென் றறிந்திருக்கும் உண்மையாகிய சிவஞானத்தையுடைய சிவயோகிகள் சிதம்பரதலத்தில் எழுந்தருளியிருப்பார்கள்—எ-று. (எஎ)

வேதாகமநூல் விரிநூல்பலவும்
மோதாவுணரும் முணாவுக்குணர்விந்
நாதாதிகடந்து நடம்புரியுந்
தாதாகமலச் சரணென்றுணர்வோர்.

இ-ள். வேதாகமங்களின் விரிவாகிய அநேகசாத்திரங்களை படித்தறிந்த அறிவுக்கறிவினால் நாதவிந்துகளாதீதமாகி ஆனந்தநடனஞ் செய்யும் வேதாகமங்களென்னும் பாதங்கள் விளங்கும் பாதாரவிந்தங்களே இரட்சிக்கும் பொருளென்றுணர்ந்த சிவயோகிகள் அத்தலத்தில் வாசமாயிருப்பார்கள்—எ-று. (எஅ)

ஆறாறுகடந் தருளாரணமுந்
தேறாதொளிர்தற் பரசிற்கனகத்
தாறாவுணரா வுருகாமகிழும்
பேறாவரிற் பெறுவாரிலரோ.

இ-ள். முப்பத்தாறு தத்துவங்களுக்கு மேலாகிய வேதத்தினாலும் நிச்சயிக்கப்படாமல் பிரகாசிக்கும் தற்பரப்பொருளாகிய ஞானாகாசமெனலும் சிதம்பரத்தை அறிவினாலறிந்து மனமுருகி ஆனந்த

தையடையும் பேறுபெற்றவர்களினும் மேன்மையாகிய பதவியை அடைபவர்கள் இல்லை—எ-று. (௭௧)

இத்தன்மையரென் றுமிருப்பதுமெய்
வித்தன்னதுமுத் திவிரும்பினர்தஞ்
சித்தங்கணிலா யதுசித் துருவத்
தத்தன்வடிவா கியதங்கரம்.

இ-ள். இத்தன்மையையுடைய மேன்மையைப் பெற்றவர்கள் எப்போதும் நித்தியஞானப்பொருளாகிய மோக்ஷத்தைத்தானே விரும்பினவர்கள் சித்தங்களிற் பிரகாசிக்கும் ஞானசொரூபமாகிய பரமசிவன் வடிவாகிவிளங்கும் அந்தச் சிதம்பரபுரம்—எ-று. (௮௰)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முல்லைத்திருநகை வல்லைப்பொருமுலை முடியாவுமைதிரு வடிபேணத், தொல்லைப்பழமறை யெல்லைத்தனிமுத றொலையாநலமுறு நிலையங்கண், டல்லைப்பொருவினை வெல்லுத்தமர்சிவ மதுவாநெறியருள் பொதுமேவத்,தில்லைத்திருநகர் மல்லற்களியொடு சென்றான்மனுநெறி குன்றாதான்.

இ-ள். முல்லையரும்பையொத்த அழகியபற்களின் வரிசையும் சொற்கேட்டான் காய்க்கிணையாகிய தனபாரங்களையுமுடைய சிவகாமசவுந்தரி பாதாரவிந்தங்களைத் தரிசனஞ்செய்து பூசிக்கவும் ஆதிகாரணராயிருக்கும் வேதத்தின்முடிவாகி ஒப்புவமையில்லாத முதன்மையாகிய பரமசிவன் நடம்புரியும் அழிவில்லாத நன்மைபொருந்திய சிவாலயத்தைக் கண்டவளவில் தீவினைகளைப்போக்கிச சிவசொரூபமாகிய பதவியைக்கொடுக்குந் திருச்சிற்றம்பலத்தைச்சேர சிதம்பரபுரத்துக்குள் மநுநீதிதவறாத சபாபதிப்பிரியனென்னும் சேரமகாராஜன் மகிழ்ங்களிக்கவந்தான்—எ-று. (௮௧)

குலவெற்பினமரு ளடையத்திருநகர் குடிபுக்கனவென மதிமிக்கோர், புலனுற்றறிவரு லெனிற்கிளர்திகழ் பொற்கோபுரமவை முற்காணு, விலக்ப்பொலனணி பெறுநற்சிவிகையி னிழியாவருமெணறிவழியாமத், தலனிற்றுகள்வடி வுறமிக்ககமகிழ் தணியப்பரிவொடு பணிவுற்றான்.

இ-ள். பிரளயகாலங்களிலேயும் கெடாதிருக்கலாமென்று சப்தகுலபருவதங்களும்வந்து சிதம்பரநகரத்தில் குடியாயிருப்பதுபோ[illegible] தபோதனர்கள் செவிமுதலாகிய பஞ்சேந்திரியங்களை வசப்ப[illegible]கொண்டு அறிதற்கரிதாகிய சிவசொரூபத்தை அறிவினாற்றெ

ரிசிப்பதுபோலவும் நன்மை அமைந்து தங்கமயமாய்ப்பிரகாசிக்குங் கோபுரதரிசனையாகியவுடன் அழகுபெற்று விளங்குந் தகைப்பல்லக்கை விட்டிறங்கி விதிமுறைமையாக மனதில சந்தோஷம்பொங்க ஆனந்தமடும பூமியிற் றேகம்படத்தக்கதாக ஐந்துவிசை தணடம்ப ணினான் சேரர்குலாதிபன்—எ-று. (அஉ)

பாமாமகளிரக ளுடனுடவர்களு மறைநூலவர்களு மிறைபாதத், திடம்பெறியவறி வுடையாரெவர்களு மியல்வாணருமிசை முரல்வாரு ந, தொடராதரவுட னடராமிகுபுகழ் துதியாகிறைகலை மதிகாணுங, கடலாமெனவரு ளடலான்மறுநெறி கண்டான்வரவெதிர கொண டார்கள்.

இ-ள். சுமங்கலிகளாகிய ஸ்திரீகளும் புருஷர்களும் வேதபாராய ணஞ்செய்யும் பிராமணர்களும அம்பலவாணமூர்த்தியின பாதாரவி ந்தங்களில அதிபக்தியுடைய சிவகணங்களும மற்றுமுணடாகிய அடி யார்களும் கல்வியறிந்தவர்களும் வீணைமுதலியவைகளை வாசிப்பவர் களும் பராக்ரமங்களைப் புகழுகின்றவர்களும் சூழ்ந்துவர சமுத்திரம் போல் சகலவித்தைகளையுங்கற்று தயவும் வெற்றியுமபடைத்து இரா ஜநீதிவழுவாத சபாபதிப்பிரியனென்னும் சேரமகாராஜனைச் சிதமப ரதலத்தா ரனைவரும பூரண சந்திரோதயத்தைக்கணட சமுத்திரம் பொங்கி எழுவதுபோல எதிர்கொணடு உபசரிப்படைந்தார்கள். ()

அளகைக்கதிபதி வரவோவரமிகு மமராபதியிறை வரவோமெய்த, துளவக்கருமுகில வரவோவரவிது சொல்வாரெனிலவா வல்லாரெ ன், றுளனிறபயிலகலை யறிவோர்புகழ்தர வொழியாதெழுமரு ளுட ன்வந்தான,பளகறறிருவினை யகலப்பரிவொடு பணிவாரகதியுறு மணி வீதி.

இ-ள். அளகாபுரிக் கதிபதியாகிய குபேரன் வருகிறானோவென் றும், அதிகவரமபெற்ற அமராபதிக்கதிபதியாகிய தேவேந்திரன் வரு கிறானோவென்றும், மெய்யிற றுளசிமாலையணிந்த நீலமேனியனாகிய மகாவிஷ்ணு வருகிறானோவெனறும் இப்படிவருகின்ற வைபவத்தை ச் சொல்லத்தக்க வல்லவர்கள யாவரென்றும் கணடோர அதிசயிக்க மனதில் சகலகலைகளும் அறிந்த கவிவாணர்களாலும புகழமுடியாத அன்போடு கருணாரசங் கடைக்கணகளினாற்பொழியச் சேரர்குலா திபன் எக்காலமும் நீங்காத சஞ்சிதபிராரத்தவங்களும் இருவினைகளும் நீங்கி முத்தியடையவணங்கித் துதிப்பவர்கள் வாசஞ்செய்யும் மாட மாளிகைகளையுடைய வீதியில்வந்தான்—எ-று. (அ௩)

திலமங்கைகளிரு மரமாமகளிரு மெழ்மானிடர்களு மிமையோருங்,கள வாவரவா விலகாதுலவிய கனகாசலமிகர் பூணிமாடப், பலவாவு

MAHAMAHOPADHYAYA
SAMINATHA IYER LIBRARY,

கெதிர் பரவாவிடையிடை பணியாவுயர்புய வணிபோலிவ், வுலகா
ளொருகுடை நிழலானருளுட னுற்றனிறையுறை பொற்கோயில.

இ-ள். பூலோகத்துப் பெண்களும் தெய்வலோகத்துப் பெண்களும் மாநிடர்களும் தேவர்களுங் கலந்துநெருங்கி உலாவுகின்ற பொற்குன்றமென்னும் மகாமேருவையொத்த மேலணிமாடங்கள் விளங்கும் வீதிதோறும் அடிக்கடிபணிந்து தோத்திரங்கள் செய்துகொண்டு வெற்றியை ஆபரணமாகவணிந்து புஜபலபராக்ரமத்தினால் துட்டநிக்ரக சிட்டபரிபாலனஞ்செயதுகொண்டு ஒரு வெண்குடைநிழலில் பூமண்டலமெல்லாம் காத்தருளும் கேரளதேசாதிபதி சபாபதியெழுந்தருளியிருக்கும் தங்கமயமாகிய சிவாலயத்துக்குள் இரக்கத்துடன்வந்தான்...எ-று. (௮௫)

விதுவாழ்முடியினன் வடிவாமிதுவென விதியாரணமொழி புகல்
வாசப். புதுமாமலர்விரி மதுவாலுயரலை பொங்கிப்பொழிசிவ கங்கை
ப்பான், முதுவாய்மையருட னருகாமகிழ்வுடன் மூழ்கிச்சூழ்கரை
யேறிப்பொற், சதுவான்மறையவா பெறுமாறருளொடு தந்தானிலங்கி
ன் மிகுந்தானம்.

இ-ள். மூன்றாம்பிறைச் சந்திரன்வாழுஞ் சடாடவியையுடைய பரமசிவத்தினது வடிவிதுவென்று வேதாகமங்கள துதிக்கும் மகா மகிமையையுடைய தாமரைமுதலிய மலர்கள்மலர்ந்து பரிமளம்வீசித் தேன்பொங்கி அலைகளோடு வழிந்தோடுகின்ற சிவகங்காதீர்த்தத்தில் மறைவிதிப்படிக்குச சகலசாத்திரங்களும் அறிந்த பெரியோர்களுடன் ஆனந்தத்தை யடையத்தக்கதாக ஸ்நாநஞ்செய்து கரையேறி அழகிய நான்குவேதங்களை அறிந்த பிராமணர்களுக்கு மனமகிட்சியோடு அநேக தானதருமங்களைசசெயதான்—எ-று. (௮௬)

வலப்புலனுறு காலத்ததனெறி யெய்தாமுனிவர ரெய்தப்போ
யாலத்தருநிழன் மூலப்பதியிடை யழிபாமுதலென மொழிவேதக்
கோலச்சிகையெழு ஞானத்திரளொரு கோலத்துடனுயர் ஞாலத்தின்
பாலற்புதமது வாகிப்பொலிவது பாராவிழிவரு நீர்வாரா.

இ-ள். ஐம்புலாதிகளைவென்ற தபோதனர்கள் சூழ்ந்துவரக் கோயிலுக்குள் வலமாகவந்து ஆலமரத்து நிழலில் ஆதியந்தமில்லாததாய் வேதங்களின் சிரமாகிய உபநிடதங்களின் முடிவில்விளங்கி சகலகலைகளாலும் அளவிடப்படாத மகிமையைப்பெற்றுக் கேழ்பூழ்கழும் மூன்றுவிப் பூமியில் ஞானசொரூபமாய் முளைத்தெழுந்த அருவுருவாகிய மூலஸ்தான மகாலிங்கத்தை இருகணகளிலும் ஆனந்த நீர்பெருகச் சோழகுலாதிபன் கண்டுமகிழ்ந்தான்—எ-று. (௮௭)

அழுதும்புளகபொ டுளமங்குருகியு மணியாபடிமிசை பணியாமு
ன், றெழுதும்பரபத சிவசங்கரவர தொலையாமறையுட னுலகேழு
முழுதுந்தருமொரு முதல்வாசிலைபெறு முத்தாவலைவருசித்தாவெப்,
பொழுதும்பதமினை தரநல்கெனவனி புகழுதந்தருளொடு மகிழ்கின்
றான்.

இ-ள். இதுவரையிலும் தரிசனஞ்செய்யாமல் வீணாக நாளைப் போக்கினேனென்று துயரங்கொண்டு மயிர்க்குச்செறிந்து மனதுருகி நவமணிகளா லலங்கரிக்கப்பட்ட பூமியில் அவையவங்கள் பொருந்த தீர்க்கதெண்டனிட்டுப் பராபரவஸ்துவே சங்கரா அரனே நித்திய மாகிய வேதங்களையும் மாயாசொரூபமாகிய வுலகங்களையும் விநோத மாகப்படைத்த ஆதிகர்த்தனே நிலைமையாயிருக்கு முத்தனே அசை வற்ற ஞானசுந்தனே தேவரீரது பாதாரவிந்தங்களை எப்போதும தரி யானஞ்செய்து துதிக்கவணங்க அடியேனுக்கு வரந்தரவேணுமென்று மிகுந்தவணக்கத்துடன் ஆனந்தம்பெருகச சேரமகாராஜன் பிரார்த்தனை செய்துகொண்டான்—எ-று. (அ-அ)

கோதற்றிடவெழு மாதிக்குறியெதி ருறுகாவருள்கொடு செறுநா
ளு, பேதக்கொடுவினை மோகித்திகழவிடை பெற்றுகமமறை கற்றுர்
சூழ், போதப்பரசிவ போதப்பொலிவொடு பொற்பாலினிதுட னுற
றுஞல், வேதச்சிகையெழு நாதச்சுடரால் வெளிநின்றிலகிய வொளி
ர்மன்றம்.

இ-ள். அடியார்கள் குற்றம்நீங்க முளைத்தெழுந்த ஆதிகர்த்தாவாகிய மூலஸ்தான மகாலிங்கத்தின சந்நிதானத்துக்கெதிர்நின்று விருப்பத்தோடும் கோததிரஞ்செயது அற்பமாகிய அநேக தீயவினைகளை நாசமாக்கி விளங்குகினற சணடேஸ்வரனைவணங்கி விடைபெற்றுககொண்டு வேதாகமங்கள் படித்துணர்ந்த சிவயோகிகள் சூழ்ந்து உபதேசித்த சிவஞானத்தோடு சிதாகாசமாகி ப்ரகாசிக்குந்திருசசிற்றம்பலத்துக் கெதிராக இனிய வலங்காரததுடனே சபாபதிபபிரியனென்னும் சேரமகாராஜன் வநதான்—எ-று. (அகூ)

இருகு[illegible]குமழலை யொருபெண்கொடியுட னொருவன்றிரு நடமெ
திர்கண், [illegible]ருவுமபுலனொடு கரணந்தலைகெட வளரும்புளகமோ டெ
ல்கம்பித், [illegible]ருகுஞசெயலபெற வுளமுஞ்செயலற வுறையுஞ்சிறிதற
வரழாறு, [illegible]கொண்டருவியி னிருகண்புனறா [illegible]
வசமானன்.

இ-ள். [illegible]பமணிந்த இரண்டுதனங்களையும் வல்லிக்
கொடி[illegible]னையுமுடைய சிவகாமசவுந்தரியுடன் ஆனந

நடனஞ்செய்யும் அம்பலவாணமூர்த்தியைத் தரிசனஞ்செய்தவுடன் ஐம்புலாதிகளேயும் மனம்-புத்தி-சித்தம்-அகங்காரமென்னும அந்தக்கரண நான்கையும்மறந்து மயிர்க்கூச்செறிந்து நடுக்குற்று மனதுருகி வேறொருசிந்தனேயுந் தோன்றாமல் மொழிகுழறி இடைவிடாத திருவருட்பெற்று இருகண்களினு மானந்தநீர் அருவிபோற் பெருக அசைவில்லாத சிவபக்தி பரவசமாயினுன் சபாபதிப்பிரியனென்னும் சேரமகாராஜன்—எ-று. (கம0)

ஆறும்பகைபுரி யஞ்சுங்கொடுவினேயருகாமனமூந் லொருநாலுஞ், சீறும்பெரியவர் தேறும்பரபத சிந்தாமணிசிக பொந்தாய்வெணணீறு ம்பகிரதி யாறும்புனேசடை நிமலாகமரு ளமலாவென், றாறும்பரிவுட னுவுங்குளறிட வுளமுங்களிகொள வுரைசெய்தான்.

இ-ள். பகையுண்டாகக்கும் காமக்குரோதாதி அந்தரங்கசத்துருவாக விருக்கிற ஆறையும் தீவினேவழியாக மனதைச்செலுத்தும்ஐம்புலன்களேயும் அநேகவிதமாய நினேக்கும் அந்தக்கரண நான்கினேயும் வென்ற தபோதனர்களை தியாகிக்கும் மேன்மைபொருந்திய பதங்களும் சிந்தாமணியனேய அடியார்கள வேண்டியவரங்களேக்கொடுக்குமென் தந்தையே விபூதியணிந்த திருமேனியையுங் கங்கையையுஞ்சந்திரனேயுஞ் சடையிறறரித்து அனேவரையும் பரிசுத்தமாக்கும் இருபத்தெட்டாகமங்களேயுந் திருவாய்மலாந்தருளிய நிர்மலனேயென்று மிகுந்த பக்தியுடன் நாவானது குழற மனக்களிப்புடன விண்ணப்பஞ் செய்யத்தொடங்கினுன்—எ-று. (கக)

என்பால்வினேகெட நின்பாலருள்பெற விறைவாவருளென வறையாநின், றன்பான்மிகவுள மகிழவானுதன லருளாலொருப்படி விடைகொள்ளாப், பொனபான்மிளிதரு நன்காரொளிர்மனே புக்கானிவனிலுமிக்காருண், டென்பாரிலெபெறு மின்பார்கதியள விதுவென்றுரைசெய யார்வல்லார்.

இ-ள். அடியேனேப்பற்றிய தீவினேயகலவும் தேவர் [illegible]டைய அநுக்கிரகம்பெறவும் கட்டளேயிட் டருளவேண்டுங் கர்த்த[illegible]யென்று விண்ணப்பஞ்செய்து பக்தியினுல் மிகசசந்தோஷித்து [illegible]டன் சிவளருட்பெற்று வணங்கி வாழ்த்திச் சந்தி[illegible] மனதெழாமல் வெகுநேரம்நின்று சண்டேஸ்வரரிட[illegible]டைபெற்றுக்கொண்டு கனகமயமாய் மேகமண்டலத்[illegible]யங்கும்அரண்மனேயிற் சேரமகாராஜன்போய்ச் சேர்ந்[illegible]இருந்துவாழ்வும் போகபாக்கியமும் உடையவர்கள் உ[illegible]சொல்ல வல்லவர்கள்—எ-று. (கஉ)

ஐஞ்சீரடியாசிரியவிருத்தம்.

தங்கசேரலா மன்னவன்றன்மைமீ திப்பான்
மிக்ககாவல ரேவலால்விரைவினர் சூழத்
தொக்கபொற்சுமை யெடுத்தவணை துச்சகன் றானுந்
திக்கெலாம்புகழ் தில்லையம்பதியிடைச் சேர்ந்தான்.

இ-ள். மகா சிவபக்திபரனாகிய சபாபதிப்பிரிய சேரமகாராஜன் சரித்திரம இப்படியிருக்க அந்த ராஜாவின் ஆக்கினையின்படிக்காவற் காரர்கள் பத்திரமாய சுற்றிக்கொண்டுவந்து திக்குக ளெல்லாந்துதிக் கும் மகிமையையுடைய சிதம்பரதலத் தெல்லைக்குள்ளாகத் தஙகச் சுமைபோடும் துச்சகனைக்கொண்டுவந்து சேர்த்தார்கள்—எ-று. ( )

படியிலாதவப் பார்த்திபனேவலோர் சுமையைக்
கடிதுவாங்கினர் நற்றவக்கணத்தினைப் பதியிற்
கொடியவெப்புநோய் வருநெறிக்கோடலான் வருந்தி
முடிவிலாவினை முடிந்திடவாருயிர் முடிந்தான்.

இ-ள். குற்றமற்ற சேரமகாராஜன் பொக்கிஷக்காவற்காரர்தங்க ச்சுமையைச் சீக்கிரத்தில் வாங்கிவைத்துக்கொண்டு துச்சகனைக்காவ லினின்றும் நீக்கிவிட்டமையால் வழிநடையிற் சுரவியாதியினாலுமவு வதிப்பட்டு வந்ததினாலும்சிதம்பரபட்டணத்தில் ஓரிடத்திற்சேர்ந்து உடனே தீராவினைகளயாவு மகலத்தக்கதாக நோயமிகுந்து ஆருயி ரிழந்தான்—எ-று. (௯௪)

கற்பகாடக மலர்மழைகடவுளர் பொழியப்
பொற்பராகமோ டரம்பையர்வரம்பிலா புகழ
விற்பராவிய விமானமேல் விளங்கியங் கவணிருந்
சிற்பரானந்த ரடையுமச்சிவபத மடைந்தான்.

இ-ள். கற்பகமுதலாகிய ஐந்தருக்களின் மலர்களை மாரிபோற் றேவர்களசொறிய அதிக சவுந்தரியமுடைய அரம்பைஊர்வசிமுதலா ன அநேகந தேவகணிகையாகள் சங்கீதங்கள்பாடி ஆடல்புரியச் சூரி யப்பிரகாசம்போன்ற திவ்ய விமானத்தில அழகியவடிவமாய்ஏறிக்கொ ண்டு துச்சகன் ஞானானந்தம்பெற்ற சிவயோகிகள் அடையும் உயா வாகிய சிவபதவியைச் சேர்ந்தான்—எ-று. (௯௫)

ஆதிநாயக னடலைக்கண்டில னேனுங்
கோதிலாப்பதி யதனிடைத்துஞ்சலாற் குறியாப்
பாதகம்புரி துச்சகன்முத்தியிற் படர்ந்தா
னீதுசத்தியஞ் சத்தியமிசைக்குமா றெவனோ.

இ-ள். ஆதிகர்த்தாவாகிய பரமசிவத்தின் ஆனந்த நடனத்தைத் தரிசனஞ் செய்யாமலிருந்தும் பரிசுத்தமாகிய சிதம்பரதலத் தெல்லைக்குள் இறக்கும்படி நேரிட்டமையால் அளவில்லாத பாதகங்களைச் செய்த துச்சகன் மோட்சத்தைச்சேர்ந்தான் இதுசத்தியம்சத்தியம் இந்தத் தலமகிமையை எவர்களாலுஞ் சொல்லமுடியாது—எ-று. ()

அண்ணலாடலைக் கண்டிலராயினு முத்தி
யெண்ணில்கோடிய ரிறந்துடன்பெற்றவர் விண்ணு
மண்ணுநாரமு மநுமப்பொதும்பரு மெந்தக்
கண்ணுமாய்ந்தவெவ் வுயிருநற்கதியடைந் திடுமால்.

இ-ள். அம்பலவாண மூர்த்தியின் ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசனஞ் செய்யாமலிருந்தாலும் அவ்வெல்லைக்குள் இறந்து சிவகதியை அடைந்தவர்கள் அநந்தங்கோடி ஜீவராசிகளுண்டு அத்தலத்துள் ஆகாயத்திலும், பூமியிலும், ஜலத்திலும், மரங்களிலும், புதருகளிலும், மற்று மெந்தவிடங்களிலும், இறந்த எந்த ஜீவராசிகளும் நன்மையுற்றுச் சிவபதவியை யடையும்—எ-று. (கூள)

பொருவினுரவப் புணரியிற்புணரொடு மீனோ
ரெருவைமுன்கொணர்ந் தணிதில்லையெல்லையோர் மரத்தின்
மருவியக்கயல் கொன்றுணமாய்ந்தவவ் வுயிர்போய்க்
கருதரும்பெரு முத்தியைப்பெற்றதக் கணத்தில்.

இ-ள். அலைகளினால்மிகுந்த ஒளியுண்டாகிய சமுத்திரத்தில் வாழ்ந்துகொண்டிருந்த ஓர்மீனைப் பருந்து கொத்திக்கொண்டுவந்து அலங்காரம்பெற்ற சிதம்பரதலத்தெல்லையுள் ஓர் மரத்தின்மீதுட்கார்ந்து அம்மீனைக்கொத்தித் தின்னுகையில் அவற்றின் உயிர்நீங்கி யாவருக்குங் கிடைப்பதற்கரிய சிவபதவியை உடனே யடைந்தது—எ-று. ()

ஈதுபோலவிவ் வெல்லையினமலநீர் வானம்
பூதலந்தனி லிறந்துமுன்னற்கதி புகுநதோ
ரோதிணெண்ணில ராதலாலாடல்கண் ணுறுமற்
றேதலத்தலத் தெய்தினுமுத்திசத் தியமால்.

இ-ள். இம்மீனைப்போல் தில்லைவனத் தெல்லைக்குள் இருக்கும் மரங்கள் தண்ணீர் ஆகாயம் பூமிஇவைகளிலிறந்த ஜீவகோடிகள்நன்மையாகிய மோட்சத்தை யடைந்தவைகளைச் சொல்லவேண்டுமென்றால் கணக்கில்லையாகையினால் அம்பலவாண மூர்த்தியினது ஆனந்த நடனதரிசனஞ் செய்தவர்களுக்கு மல்லாமல் தரிசனஞ்செய்யாமல் அத்தலத்தில் இறந்தவர்களுக்கும் மேலாகிய சிவபதவிகிடைக்கும் இது சத்தியம்—எ-று. (கூகூ)

பொதுவினடனைக் காணிலப் புரத்திடைமாயிற்
கதியடைந்திடக் கணடனங் கடற்றலத்தெந்தப்
பதியினும்பெரி திப்பதி பகர்விராட்புருட
னிதயபங்கய மீதென விருக்கிசைத்தலினால்.

இ-ள். திருச்சிற்றம்பலத்தில் அம்பலவாணமூர்த்தியின் திருநடனத்தைத் தரிசனஞ்செய்தாலும் அவ்வெல்லைக்குள் இறந்தாலும் சிவபதவியை யடையக்கண்டோம் இவ்வதிசயங்களினால் கடல்சூழ்ந்த உலகங்களிலிருக்கும் சகலதலங்களிலும் சிதம்பரதலமேயதிகம் அதெப்படியென்றால் விராட்புருட னிதயாரவிந்ததலம் சிதம்பரமென்றும் இருக்குவேதஞ் சொல்லுகிறபடியினால் அந்தலமே உத்தமத்திலும் உத்தமம்—எ-று. (௧௦௦)

கவையிகந்தமா மகிட்சியைக் கருத்துறின்மற்றை
யவையவங்களு நின்னல தாயினுமணியா
நவைபடுந்துயர் கருத்துறி னவிலவையவங்க
ளவையுமெவ்வணி யெய்தினு மிலகுமோவிலகா.

இ-ள். கவலையென்னுந் துக்கத்தைப்போக்கி மனதில் மகாசந்தோஷத்தைப்பொருந்தி மற்ற அவையவாதிகளில் ஆபரணங்களை அலங்கரித்துக்கொள்ளாவிடினும் அலங்கரித்துக் கொண்டதாகவே விளங்கும் மனதில் வியாகுலமும் துக்கமும் பொருந்திக் கரசரணாதி அவையவங்களில் அநேகவாபரணங்க ளணிந்திருந்தாலும் அவைகள் பிரகாசிக்குமோ பிரகாசிக்கமாட்டாது—எ-று. (௧௦௧)

இன்னதென்னமன் றிறைகொளும் பூசைபாலெந்த
நன்னெடும்பதிப் பூசையு நடந்ததேயாகும்
பொன்னினம்பல வாணர்க்குப் பூசையின்றேலப்
பன்னெடும்பதிப் பூசையாற் பயன்கள்வேறென்னே.

இ-ள். இவ்வகையாய்க் கனகசபையில் அம்பலவாணமூர்த்திக்குப் பூசைநடத்திவந்தால் மற்ற நன்மையாகிய சகல தலங்களையும் பூசித்ததேயாகும் பொன்னம்பலத்தில் சிதம்பரேஸ்வரமூர்த்திக்குப் பூசைநடத்தாமல் இதரதலங்களுக்குப் பூசைநடந்தால் அதனாற் பலனில்லை—எ-று. (௧௦௨)

பொருவினுள்ளமோ டன்றியே கண்முதற்புலங்க
ளுருவமாதிய விடயங்க ளுணருமோவுணரா
கருதுமவ்வுளம் புலத்தொகை கடந்திடாதெனினு
மருவுதுன்பொடின புணர்நா வல்லதேயதுபோல்.

இ-ள். மனம்பொருந்தாமலிருந்தால் கண்-காது-நாசி-நா-மெய் முதலிய இந்திரியங்கள் உருவமுதலியவைகளை அறியுமோ அறியமாட்டாது விடயங்களை கடக்காவிடினும் அதனால்வரும் இன்பதுன்பங்களை இன்னதென்றறிந்து அநுபவிக்கின்ற சமர்த்து அவ்வுள்ளத்துக்கிருப்பதுபோல்—எ-று. (௧0௩)

வாணலந்திக ழும்பல வாணனைச்சென்று
காணலன்றியெத் தலங்களைக் காணினும்பயனென்
சேணிலங்குமச் சிதம்பரத் திருநடங்கண்டா
லாணவப்பெரும் பகையறுத் தருளடைந்திடலாம்.

இ-ள். சகல வளப்பங்களும் பிரகாசிக்குஞ் சிதம்பரதலத்திற்குப்போய்ச் சபாபதியைத் தரிசனஞ்செய்யாமல் மற்ற தலங்களுக்கெல்லாம்போய்த் தரிசனஞ்செய்தாலென்னபலன்வரும் ஆகையினால் ஞானாகாசசொரூபமாகிய திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தநடனத்தைத் தரிசனஞ்செயதால் நானென்னும் ஆணவமுதலாகிய பகைவர்களை நாசஞ்செய்து சிவத்தினது திருவருளைப்பெறலாம்—எ-று. (௧0௪)

சொற்றதின்னதேற் சுருதிநா யகனிடங்கொண்ட
நற்றலங்களா லாவதென் னென்னினன்மறைகண்
முற்றுநாடருஞ் சிதம்பர மூர்த்தியைக்கண்டாற்
குற்றமுத்தலக் காட்சிக ளேதுவாமுணரில்.

இ-ள். இப்படி சொல்லப்பட்டதனால் வேதங்களுக்குக் கர்த்தனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் உத்தமமான தலங்களைத் தரிசனங்கள் செய்கதினால் ஆகின்றபலனென்னென்றால் வேதங்கள் முழுதும் அறிவதற்கரிதாகிய அம்பலவாணமூர்த்தியைத் தரிசனஞ் செய்வதற்குக் கூடுதல்செயவிக்கு மற்றதலங்களின் தரிசனை சொலலுமிடத்து—எ-று. (௧0௫)

ஆகியம்பலங் காண்டலோ ரருந்தலங்காணற்
கேதுவாகுமோ விமையவ ரெண்ணிலாமூர்த்தி
பேதமுள்ளன வரணவப் பெரும்பிணக்கறுத்தோர்
போதநாடிய பரசிவப் பொலிவையொப்பாமோ.

இ-ள். ஆதிகாலமாயிருக்குந் திருச்சிற்றம்பலத்தைத் தரிசனஞ் செய்தால் வேறொரு மேலாகிய தலமிருக்கிறதென்று விவேகத்தினாலெண்ணி அத்தலத்தை தரிசிக்கக் காரணமாமோவென்றால் ஆகாது அதெப்படி எனில் ஒரு பரமசிவனை லீலாவிநோதரூபமாய் அநேக தலங்களில் எழுந்தருளியிருக்கின்ற மூர்த்திகளைப்போய்த் தரிசனஞ

செய்தாலும் ஆணவகாமிய மாயையென்னு மும்மலங்களையும் வென்றவர்கள் சிவயோகத்தினால் இதயாரவிந்தத்தில் நிஷ்கள பரசிவரூபமாகிய ஞானாகாச தரிசனைக்குச் சமானமாகாது—எ-று. (௧0௬)

ஆயபோலருட் சைவநற் றலங்களினழியாத்
தூயவிப்பதி தூயது சுருதியாற்றவத்தான்
மேயசெய்கையுள் ளவற்றினால் விளங்கியபொதுவி
னேயநாடகங் காண்டற்கு முயல்வதேயியல்பாம்.

இ-ள். அப்படிபோல அடியார்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுக்கும் அநேக சிவஸ்தலங்களுக்குள் எக்காலமும் மிகவும் பரிசுத்தமாகி அழியாதிருக்கும் இந்தச சிதம்பரதலமேயாதலால வேதங்களினாலும் மகாதபங்களினாலும் நன்மைபொருந்திய உத்தம நடத்தைகளினாலும் பிரகாசிக்கின்ற கனகசபையில் ஆனந்த நடனம்புரியும் அம்பலவாணமூர்த்தியைத் தரிசனஞ்செய்ய ஆசைகொண்டு முயற்சி செய்வதே மானிடதேக மெடுத்ததற்குப் பலன—எ-று. (௧0எ)

எந்தநல்வினைத் தவங்களு மித்தலங்காணும்
பந்தவாயுள முளதெனிற் பயன்பெறுமிலையேன்
முந்துமப்பய னிலையலை புலன்முரணமுருக்குஞ்
சிந்தைமாதவ வின்னமுஞ் செப்புவன்கேண்மோ.

இ-ள். எவ்விதப் புண்ணியங்களைச் செய்தாலும் எவ்வித தவங்களைச்செய்தாலும் சிதம்பரதரிசனங் கிடைக்கவேணுமென்றுஆசைகொண்டு செய்தாற்றான் செய்தபுண்ணியங்களும் தபங்களும் சித்தியாகிப் பலனைக்கொடுக்கும் சிதம்பரதரிசனஞ்செய்து ஆசையில்லாவிடில் செய்தபுண்ணியங்களும் தபங்களும் சித்தியாகமாட்டாது பலனுங்கொடாது ஆதலால் ஐம்புலாதிகளைத் தீவினைவழியாகச் செலுத்தாமற் சிவசம்பந்தமாகச் செலுத்தும் மனதையுடைய சயிமினிபகவானே இன்னஞ் சிதம்பரமகிமையைச் சொல்லுகிறோம் கேளென்று வேதவியாசர் சொல்லத்தொடங்கினார்—எ-று. (௧0அ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இத்தல மமர்ந்துமன்று ளிரும்பதங் காணுமுத்தி
சத்திய மென்னுதையஞ் சார்ந்துவே றோர்தலத்தின்
மெய்த்தவம் புரிந்துமாய்ந்தோர் விட்டின்ப மெய்தலாகார்
நித்தவம் பலத்துள்ளானை நிந்தைசெய் கையினலம்பர்.

இ-ள். இந்தச் சிதம்பரதலத்தில் வாசமாயிருந்து திருச்சிற்றம்பலத்தில் எப்போதும் ஆனந்தத்தாண்டவம்புரியும் அம்பலவாணமூ

ர்த்தியினது இரண்டு பாதாரவிந்தங்களையும் தரிசனஞ்செய்ததினால் முத்தியாகிய சிவபதவியை யடையலாமென்று வேதாகமங்களில் நிச்சயமாகச் சொல்லக்கேட்டறிந்துஞ் சந்தேகமாகவெண்ணி மற்றொரு தலங்களுக்குப்போய் வாசமாயிருந்து மேலாகிய புண்ணியங்களும தபங்களும் செய்துகொண்டிருந்து இறப்பார்களாயின் இன்பவீடாகிய சிவகதியைப் பெறமாட்டார் அதேதென்றால் சிதம்பரமகிமையைச் சந்தேகமாகவெண்ணி வேறொரு தலத்திற்குப் போயினமையால் நித்யமாகிய சிதம்பரேசமூர்த்தியை நிந்தைசெய்ததாகும். ()

இருடரு பேரவத்தை யிறுதியி னிதயந்தன்னிற்
கருவிக ளொடுங்குமாபோற் கருதிய பதிகள்யாவும்
பொருவரும் புண்டரீக புரத்திடை யொடுங்குமீச
னுருவமா மிதுவென்றொன்று மொடுங்குறா துண்மையாமால்.

இ-ள். விவேகம் ஒடுங்கி வியாதிமேற்கொண்டு செவிமுதலிய பஞ்சேந்திரியங்கள சத்தாதிவிடயங்களை அறிவதற்கில்லாமல் அஞ்ஞானத்தினால் மயக்கமாகிய இருள்வந்தடுத்தவேளையில் தத்வாதிகளெல்லாம இதயத்திலொடுங்குவதுபோல் நினைக்குந் தலங்கள்யாவும் ஒப்புவமையில்லாத விராட்புருட னிதயகமலமாகிய சிதம்பரத்திலொடுக்கமாயிருக்கும் பரமசிவசொரூபமாகிய சிதம்பரதலமோ வெக்காலத்திலும் அழியாமற் பிரகாசிக்கும இதுசத்தியம்—எ-று. (௧௧௦)

எப்பதி களினுமுள்ள விறைபருண் மூர்த்தியாவுஞ்
செப்பருஞ் சிதம்பரத்துட் டிருவநத யாமந்தன்னி
லொப்புற வடைதலானு லுறைக்குமெக் காலத்துள்ளு
மப்பெருங் காலசசேவை யதிகவுத் தம்மாமென்றே.

இ-ள். எத்தலங்களிலும் எழுந்தருளியிருக்கின்ற மூர்த்திகளெல்லாம் வேதாகமங்களாற் சொல்லுதற்கரிதாகிய சிதம்பரதலத்தில் இராத்திரி அர்த்தயாமத்தில் வந்தொடுங்குமென்று சகலகலைகளுஞ் சொல்லுவதினால் மற்ற புண்ணியகாலங்களில தரிசனஞ்செயவதிலும் அர்த்தயாமதரிசனையே சிதம்பரத்தில் மகாவுத்தமம்—எ-று. (௧௧௧)

ஐவகைத் தொழிலுக்கேற்ற வைவகைக் கடவுளெல்லாந்
தெய்வத வடிவமான சிவபரன் வடிவதாகு
மெய்வளர் தில்லையெல்லை விடாமலங் குறைகின்றனெஞ்
சைவநாயகனென்றாலோர் தலங்கண்மற்றதின்வேறுண்டோ.

இ-ள். சிருஷ்டி-திதி-சங்காரம்-திரோபவம்-அநுக்ரகமென்னும் ஐந்தொழில்களுக்குள் அதிகாரிகளாகிய பிரமன்-விஷ்ணு-உருத்திரன்-மகேஸ்வரன்-சதாசிவன்முதலிய விவர்களுக்குங்கர்த்தனுப பரசிவரூ

பமாய் அதிகமேன்மைபெற்று விளங்கும் சிதம்பரதலத்தில் இறந்தாலும் தரிசனஞ்செய்தாலும் ஜீவகோடிகளைச் சிவரூப மாக்கும் பொருட்டாகச் சபாபதி எப்போதும் ஆனந்தநடனஞ் செய்துகொண்டிருக்கிற படியினால் சிதம்பரதலத்துககு வேறே ஒருதலத்தையுஞ் சமானமாகச் சொல்லப்படாது—எ-று. (கஙஉ)

மாலயன் முதலாயுள்ள வானவர் குழுவுக்கெல்லா
மேலவன் புராரியென்று விரித்திடுஞ் சுருதியாவுந்
தாலமேற் றலங்களிந்தத் தலத்தினுக் கொவ்வாதென்றென்
றோலிடு மந்தவேத முறைக்கலாந் தகைமையென்றால்.

இ-ள் விஷ்ணு பிரமன்முதலிய தேவர்களுக்கெல்லாம் தலைவன் சிவனேயென்று நான்குவேதங்களும் விரிவாகச்சொல்லி முறையிடும் அவ்வேதங்கள் பூமண்டலத்திலுண்டாகிய சிவதலங்களுக்கெல்லாம் மேலாகியது இச்சிதம்பரதலமேயென்று நிச்சயமாகச்சொல்லுகிறபடியினால் இதற்குச் சமானமான தலமில்லை—எ-று. (கஙங)

அதிகமொப் பானதேவ ரரன்றனக்கில்லையில்லை
முதுபதி தனக்குமிந்த முறைமைவா ணோைவேணி
மதியவற் கொப்பென்றுள்ளு மனத்தரோ பதிதரெந்தப்
பதியுமிப் பதிக்கொப்பென்னும் பதகரும் பதிதராவார்.

இ-ள். பரமசிவனுககு மேலாகியும் ஒப்பாகியுமிருக்கிற தேவர்களில்லை அதுபோல முதுமையான சிதம்பரதலத்துக்கு மேலாகியும ஒப்பாகியும் இருக்கிற தலங்களுமில்லை சந்திரனைச் சடையிலணிந்த பரமசிவனுக்கு ஒப்பென்று மனதில் வேறொரு தெய்வங்களை நினைக்கின்றவனே பாதகன் எந்தத் தலத்தையாகிலும் இந்தச் சிதம்பரதலத்துக்கிணையாக மனத்திலுன்னினால் அப்பாதகனிலும் மகாபதிதனாவான்—எ-று. (கஙச)

ஓதுபன் னெறியுள்வேத வொழுக்கமே யுயர்ச்சிமுத்தி
சாதனம் பலவுட்பூதி சாதனந் தலைமைவெற்பின்
மாதொரு பாகற்கேற்க வழிபடும் பூசைதன்னு
ளாதர மவன்றனன்பர்க் கன்பினி லளிக்கும்பூசை.

இ-ள். அநேக சாத்திரங்களில்சொல்லும் ஆசாரங்களைவிட வேதத்திற்சொல்லும் ஆசாரமே உத்தமம் மோட்சசாதகமாகிய அநேகவித சாதனத்திலும் விபூதியே முதற்காரணமாகிய மோட்சசாதனம் பர்வதராஜகுமாரியாகிய பார்வதிதேவி வாமபாகத்தில்விளங்கும் பரமசிவனைச் சகலவுபசாரத்துடன் பூசைசெய்வதிலும் பரமசிவத்தடி

யார்கள் சந்தோஷமடையப் பக்தியுடன் பூசிப்பதே உத்தமமான பூசை—எ-று. (௧௧௫)

வேதமந் திரத்துட்போத மிகுஞ்சத வுருத்திரம்பே
ராதிமந் திரத்தினுடு மஞ்செழுத் ததிகமென்று
மேதமி லறங்களாதி யிரதிடும விரதந்தன்னிற்
சீதரன் முதலோர்பேணுஞ் சிவார்ச்சனை பெரியதாகும்.

இ-ள். வேதங்களில்சொல்லு மந்திரங்களுக்கெல்லாம் உத்தமமாகியது உருத்திரமந்திரம் உருத்திரமந்திர நாமங்களுக்குள் நடுநாயகமாகவிளங்கும் பஞ்சாட்சரமே உத்தமமாகியமந்திரம் தானதருமங்களினும் பலவிரதங்களினு மேலாகியது விஷ்ணுமுதலிய தேவர்கள யாவரும் ஆவலோடுசெய்யும் சிவபூசை அதைசசெய்வதே உத்தமம்—எ-று. (௧௧௬)

வருணமெண் ணிலவுள்வேத மறையவ ருயர்ந்தோர்நீதி
யருளுமாச சிரமந்தன்னுட் டுறந்தவ ரதிகாரன்பு
பெருகிய வரத்திற்கொல்லாப் போறம பெரிதுநன்று
தருபவ ரவருட்டக்க தேசிகா தலைவராவா

இ-ள். அநேக ஜாதிபேதங்களுக்கெல்லாம வைதிகப் பிராமணனேயதிகம் ஆச்சிரமங்களுக் கெல்லாம் ஞானநீதியையுணருஞ் சன்னியாசமேயதிகம் தருமஙகளுக்கெல்லாம் அனபோடும் இரககத்தோடும ஜீவஹிம்சை செய்யாமலிருப்பதே யதிகம நன்மையைததருகிற தருமஞ் செயகிறவர்களிலும் ஞானோபதேசஞ்செயகின்ற குருவேஅதிகம—எ-று. (௧௧௭)

பற்பல ஞானந்தன்னுட் பரசிவ ஞானமேலாம்
பொற்புறு மிவைகளபோலப் புடவிமேற் பதிகடம்முற்
கற்பனையில்லாஞானக் ககனமென் றிருக்கோவிட்ட
வற்புதங் கொண்டதில்லை யம்பல மதிகமன்றே.

இ-ள். பற்பலவித ஞானங்களுக்கெல்லாம் மேன்மைபொருந்திய சிவஞானமேயதிகம் பொறுமைதங்கிய விவைகளைப்போல் பூமண்டலத்தில்விளங்குந தலங்களுக்குள் வேதங்களெல்லா முறையிடும் மகிமையை யுடைய கனகசபையதிகம் அப்பொன்னம்பலத்திலாடும் அம்பலவாணமூர்த்திக்கு விருப்பாகிய சிதம்பரமே யதிகம்—எ-று.

புகழுறும் புண்டரீக புரத்தினுக் கெந்தஞான்று
மீகாதி கங்களில்லை நிகாதி கஙகளாகப்

பகர்பவ னுடனோர்வார்த்தை பகர்ந்தவன் பாவிவேதஞ்
சகலமு முணர்ந்துந்தேறான் றன்றந்தை தனையனல்லன்.

இ-ள். சகலவேதங்களும் புகழும் விராட்புருட னிதயகமலமாகிய சிதம்பரத்திற்கொப்பாகிய தலமும் அதிகமாகிய தலமும்இல்லை அப்படியிருக்க சமமும் அதிகமும வேறொன்றுண்டென்று சொல்லுகின்றவன் மஹாபாவி அப்பாவியோடு ஓர்வார்த்தை சொன்னவனும் அவனிலும்பாவி அவன் வேதங்களையெல்லாம் படித்துணர்ந்தாலும் தெளிந்த அறிவில்லாதவனேயாம் அன்றியும அவன் தந்தைக்குப பிறநதவனுமல்ல—எ-று. (௧௧௯)

போகமும் வீடுமென்று புனிதனைக கண்டாலன்றி
யாகுமோ பதிகளிங்ங னாற்றிய வறங்கணீத்து
மாகமார் புரிசைத்தில்லை மாநகர் நோக்கியன்பா
லேகுதி முனிவமுத்தி யெதிர்ந்தவப் போதேயெய்தும்.

இ-ள். திருச்சிற்றம்பலத்திலே சபாபதியைத் தரிசனஞ் செய்யாவிடின் போகபாக்கியங்களும் மோட்சமும் கிடைக்கமாட்டாதுஆகையினால் மற்ற தலங்களிலசெய்யுந் தவங்களையுந தானதருமங்களையும் நிறுத்தித் தேவலோகம்வரைக்கும் அளாவிய மேல்நிலைமாடங்கள விளங்கும் மகாமகிமையையுடைய சிதம்பரபுரத்திற்சென்றுபக்தியுடன் நீபோய்த் தரிசனஞ்செயதால் உடனே மேலாகிய சிவபதவிகிடைக்கும் சயிமினிபகவானே இன்னமும் அதன்மகிமையைச்சொல்லுகின்றோமென்றார் வேதவியாசர்—எ-று. (௧௨௦)

பத்தியு நியமந்தானு முயர்ச்சியும் பழுதொன்றின்றி
முத்தியு முதநில்கு முழுமுத ளுனீங்காச்
சத்தியுஞ் சிவமுமான தனிச்சுட ராடல்கண்டு
வித்தக வீடுகாண்டி வேறிதற் கையமின்றால.

இ-ள். அன்பும் நன்மையும் ஆசாரமும் ஆதிக்கியமும் ஒருகாலமுங் குறைவிலலாமல் மேலாகிய சிவபதியைககொடுக்கும் அந்தபரிபூரண சொருபமாகிய பரமசிவனை எப்போதும் நீங்காமல் பராசத்தியாகிய சிவகாமசவுந்தரி வாமபாகந்திற் கலந்துவிளங்க ஏகரூபமாய் ஆனந்த நடனம்புரியும் லீலாவிநோதத்தை வேதாந்த ஞானமறிந்த சமர்த்தனாகிய சயிமினிபகவானே நீ தரிசனஞ்செயது நித்தியமாகிய மோட்சத்தைச்சேர்வாய் வேறே இதற்குச் சந்தேகமிலலை—எ-று. ()

பேறினை யென்னுதையம் பேதமை தன்னுழுற்றோர்
மாறிலா நிலையந்தன்னின் மாரவுர்வத்தைச்சேர்வ

தேறுதி முனிவனென்று செவித்துணை களிப்பவன்பாற்
கூறினன் புராணம்யாவுங் கூறிய கொள்கைமேலோன்.

இ-ள். இந்தச் சிதம்பரதரிசனஞ் செய்வதினால் மோட்சங்கிடைக்குமென்பதைத் திடமாக நம்பாமல முன்செயதபாதகத்தினால் அறிவில்லாமற் சந்தேகமா யெண்ணினவன் மகா பயங்கரமாகிய துன்பத்தைச்செய்கின்ற ரவுரவாதிநரகத்தில் அழுந்திப்போவான் ஆகையினால் சிதம்பரமகிமையைப் பக்தியாகவும் உறுதியாகவும்கொணடுமனதிதெளிந்துக் கொள்ளென்று சயிமினிபகவான் இருசெவியென்னும் வாயினால் சிதம்பரமகிமையென்னுந தேவாமிர்தத்தை பானஞ்செய்துசந்தோஷிக்க அன்புடன் யாவருந் தடைத்தேறும்பொருட்டுப் பதினெண்புராணமும் வகுத்துரைத்த வேதவியாசர் திருவாய்மலர்ந்தருளினரென்று சூதபுராணிகர் நயிமிசாரண்ய வாசிகளாகிய சவுனகாதிமுனிவர்களுக்கு உபதேசித்தார்—எ-று. (௧உ௨)

துச்சகச்சருக்க - முற்றிற்று.

---

பாயிரம் உட்பட சருக்கம் நான்குக்கு திருவிருத்தம் - ௩௰௪.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நான்காவது

# நியமச்சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சுரர்தொழும் வீடுபெற்ற துச்சகன் சரிதந்தன்னில்
விரவிமுன் னறிந்தவாறு விளம்பின மிப்பா லிப்பார்
பிரவிய தொல்லைத்தில்லைப் பதியிடை யுறைவோர்தங்கள்
வரமிகு நியமந்தன்னை வகுத்துரை செய்யலுற்றாம்.

இ-ள். தேவர்களும் பணியத்தக்கதாகச் சிவபதவியைப்பெற்ற துச்சகன் சரிதத்தில் நாம் முன் னாராய்ந்தறிந்தமட்டுஞ் சொன்னோம் இப்பால் இந்த பூமண்டலமெல்லாம் தோத்திரஞ் செய்கின்ற பழைமையாகி ப்ரகாசிக்கும்சிதம்பரதலத்தில் மிருந்தவரம்பெற்றுவாசமா

யிருப்பவர்கள் நியமத்துடன் நன்மார்க்கமாய் நடந்துக்கொள்ளுகின்றமுறைமை இப்படியென்று வேதவியாசர் சயிமினிபகவானுக்குத் திருவாய்மலர்ந்தபடிக்குச் சூதபுராணிகர் நயிமிசாரண்யவாசிகளாகிய சவுனகாதிமுனிவர்களுக்குச் சொல்லத்தொடங்கினூர்—எ-று. (௧)

சலமகன் முனிவன்கூறச் சயிமினி யிவைகளெல்லாங்
குலமறைப் பொருளேநீதி கொண்டதே சிகரன்பெய்தி
நலமிகு மெவையுமென்று நவிற்றுதல் கடனேயானிங்
கலமுற வுரைத்தாயொன்று மடியனேற் கையமின்றால்.

இ-ள். கோபத்தைசெயித்த வாதராயணர்சொல்லச் சயிமினிபகவான்கேட்டுச் சொல்லுகிறார் தேவரீர் திருவுளம்பற்றிய சிதம்பரதரிசனஞ்செய்த துன்மதனும் அத்தலத்தில் இறந்த துச்சகனும் சிவபதவியைப்பெற்றதும் அத் தலமகிமையையும் தேவரீர மொழிந்ததினூல் நான்குவேதங்களில்சொல்லும் பொருளென்றுணர்ந்தேன் நன்மையைத்தரும் இந்தமகிமை அடியேனுக்கு விருப்பமாக உபதேசிக்கவேண்டிய கடமையாதலினூல் திருவாய்மலர்ந்து தெளிவாகச்சொன்னமையான் அடியேன் சந்தேகமின்றித் தெளிந்துக்கொண்டேன். ()

ஞானதேசிகர்களுண்மை நவின்றிடி லிதனுக்கைய
மானவர் பதிதராத லதிசய மன்றேதில்லை
மானக ருறைந்துவாழு மாசிலா நியமமன்பு
தானுற வருள்செயென்னத் தவமுனி சாற்றலுற்றான்.

இ-ள். ஞானகுருவானவர் இரகசியப்பொருளைக் கருணையினூல் உபதேசம்செய்தால் அதனை மெய்யென்றெண்ணுமற் சந்தேகப்பட்டவர்கள் விரதந்தவிர்ந்த பதிதராகின்றது புதுமையல்ல தில்லையம்பலத்தின்கண் தபோதனர்கள் வாசஞ்செய்யும் நியமத்தினது பக்திமுறைமை இவ்வகையென்று தேவரீர் அடியேனுக்கு அநுக்ரகஞ்செய்யவேண்டுமென்று சயிமினிபகவான் கேட்கத் தபோநிதியாகிய வேதவியாசர் திருவுளம்பற்றுகின்றார்—எ-று. (௨)

யாதொரு தேயந்தன்னி லிருப்பவர் தில்லையெய்ப்துங்
காதல்கூர் நியமங்கொண்டு சிவார்ச்சனைக் கடன்கண்முற்றி
மாதவர் மறையோர்க்கேற்ற வந்தனை புரிந்திறைஞ்சி
யாதர மல்கப்போற்றி யவரருள் பெற்றபின்னர்.

இ-ள். எந்தத்தேசத்தி லிருக்கிறவர்களும் சிதம்பரதலத்துக்குப் போகவேண்டுமென்றெண்ணி மகாநியமத்துடன் சிவபூசைகள் முடித்துக்கொண்டு சிவயோகிகளுக்கும் பிராமணர்களுக்கும் சந்தோ

ஷம் வரும்படித் தன் செல்வத்திற்குத்தகுந்த உபசாரங்கள்செய்து பணிந்து துதித்து மிகுந்த ஆவலுடன் அடியேன் சிதம்பரதரிசனஞ் செய்யவேண்டுமென்று கொண்டவிரதம் நிறைவேறத்தக்கதாக நீங்கள் ஆசிர்வதிக்கவேண்டுமென்று பிரார்த்தித்து அவர்கள் உத்தரம் பெற்றபின்பு—எ-று. (௪)

கட்டுறு காமமாதி கட்டற விட்டுவெட்டைக்
கிட்டிமற் றியாரிடத்துங் கேண்மைகூ ரடிசில்கொள்ளா
தட்டதன் சொன்றியென்று மிசைந் தயலார்தங்கையி
னெட்டுணைப் பொருளுங்கொள்ளா திறைபுகழ் பரவியெய்தி.

இ-ள். பற்றிக்கொண்டிருக்கும் அஞ்ஞானமென்னும் காமக்குரோதமுதலாகிய அந்தரங்க சத்துருக்களைவென்று சிதம்பரதலத்துக்குப்போகின்ற மார்க்கஞ்சேர்ந்து பரதிரவியங்களில் வெறுப்புற்றும் அன்னியரிடத்தில் அன்னபானாதிகள்யாவும் எள்ளளவேனும் இச்சியாமல் தான் தேடியபொருளில் போஜனமும் மற்றசெலவுகளுஞ் செய்துகொண்டு அம்பலவாணமூர்த்தியினது கீர்த்தியைப்புகழ்ந்து துதித்துக்கொண்டுபோவது—எ-று. (௫)

சென்றுலக கத்துண்மிக்க தில்லையம் பதியினெல்லை
துன்றியங் கற்றையுணடி துறந்து மூண் டிதமுமெய்தித்
தன்றுணைக் கங்கையாதி சேவிக்குந் தகைமைபூண்ட
பொன்றரு புண்டரீகப் பொய்கையைக் கண்டுபோற்றி

இ-ள். இயமத்துடன்சென்று உலகங்களுக்குள் முயற்சிபெற்ற சிதம்பரதலத்தெல்லைக்குள் போயினவுடன் அன்றையதினம் ஆகாரங்கொள்ளாமல் உபவாசமாயிருந்து முடிமயிரிறக்கிக் கங்கைமுதலிய மகாநதிகளெல்லாம் வந்துபணியும் மகிமையையுடைய தங்கநிறத் தாமரைபோல்விளங்குஞ் சிவரூபமாகிய சிவகங்கையைவணங்கித் தோத்திரஞ்செய்தபின்பு—எ-று. (௬)

அன்புடன் மூழ்கியேறி யருட்சிவ லோகத்திற்றன்
றென்புகழ்க் கிழவர்வாழச் செய்வன செய்தேயங்கம்
பொன்புவி கன்னியன்னம் பசுத்துகில் புகனறதான
மின்பொலி சடையாற்பேணும் விளங்குவே தியர்பானல்கி.

இ-ள். மிகுந்த பக்தியுடன் சிவதுதி செய்துகொண்டு அச்சிவகங்கையிற் றீர்த்தமாடிக் கரையேறிச் சிவபூசைமுடித்துக் கருணையோடுஞ் சிவலோகத்தில் தனது பிதுர்களுக்குச் சிவபதவிகிடைக்கத் திலதர்ப்பண முதலானதுஞ்செய்து மிகுந்த காதலோடும் சொர்ணதானம

பூதானம்-அன்னதானம் - கன்னிகாதானம்- கோதானம்-வஸ்திரதானம் இவைமுதலாகிய மகாதானங்களைத் தனக்கியன்றமட்டும் மின்னற்கொடிபோல் அழகுபெற்ற சடையையுடைய பரமசிவனை தியானித்துச் சிவபூசையும் வேதபாராயணமுஞ் செய்யும் வைதிக பிராமணர்களுக்குக்கொடுத்து—எ-று. (௭)

ஆறுவெம் பகையைநூறி யருடரு மஞ்செழுத்தை
நூறுட னெண்காலன்பா னுவன்றபின் மறைகளின்னுந்
தேறருங் கருணைச்சோதித் திகழ்திரு மூலத்தானத்
தூறிய நேசமேன்மே லுள்ளிடை வளரவெய்தி.

இ-ள். காமாதிவுட்பகை ஆறையும்போக்கிக் கிருபையுண்டாக்கும் பஞ்சாக்ஷரத்தை நூற்றெட்டு உரு பக்தியுடன் ஜெபஞ்செய்து பின்னர் பிரதட்சணம்வந்து வேதங்களாலும் இன்னமும் அதன்மகிமையை அறிதற்கரிதாகிய பரஞ்சோதிமயமாய் பிரகாசிக்கும மூலஸ்தான சிவலிங்கத்தினிடத்தில் பக்தியானது மனதில் மிகவும்பொருந்தச் சந்நிதானத்திற்குப்போய்—எ-று. (௮)

சந்நிதி தன்னின்முக்கால் விதிப்படி தாழ்ந்தெழுந்து
பின்னரும் வலஞ்செய்தைங்காற் பெறும்பய னுறப்பணிந்தங்
கின்னபே ருருவஞ்செய்கை யீதென விருக்குமோராப்
பொன்னவிர் கொன்றைவேணிப் புனிதனைமேன் மகிழ்வுகூர.

இ-ள். மூலஸ்தான சந்நிதானத்தில் மூன்றுவிசை விதிப்படி. பணிந்தெழுந்து பின்பு ஐந்துதரம் வலம்வந்து மேலாகிய பாக்கியங் கிடைக்கத்தக்கதாக வணங்கி அரிபிரமாதிகளாலுங் காணுதற்கரிய பெரிதாகியவடிவமும் நடத்தையும இவ்வகைப்பட்டதென்று வேதங்களாலு மறிதற்கரிய பொன்னிறமுடைய கொன்றைமாலிகையினால் அலங்காரம்பெற்ற சடாடவியையுடைய மூலலிங்கத்தினிடத்தில் பக்தியும் ஆனந்தமும் உண்டாக—எ-று. (௯)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காரணகாரிய மாகிநிறைந்து கடந்துவிளங்குபெரும்
பூரணஞான சுகோதையநாத புரோசபராதியநா
லாரணவாரண பேதமளிந்த வகண்டிதவண்டருட
னாரணனான்முக னாடரிதாகிய நாதவெனப்பரவ.

இ-ள். சிருட்டி-திதி-சங்காரம்-திரோபவம்- அனுக்கிரகமென்னும் ஐந்தொழிலுக்கும் வித்தாகியும் சகலரூபமாகியும் எங்கும்நிறைந்தும் அதீதப்பட்டும் பிரகாசிக்கும் பெருமையையுடைய அகண்டா

காரமானவனே சிவஞானமும் பேரின்பமும் அடியார்களுக்குண்டாகத்தக்கதாக அருட்சுரக்குங்கர்த்தனே ஜீவநாயகனே மேலான பராபரவஸ்துவே நான்குவேதங்களையும் அயிராவதமென்னும் யானையையும் உடையர்கத்தரித்தவனே அநேக ஜீவபேதங்களையுண்டாக்கிய அலசவிலலாதவனே தேவர்களும் அரிபிரமாதிகளுங் காணுதற்கரிதாகிய நாதமயமானவனே என்று தோத்திரஞ்செய்து—எ-று. (௧௦)

பூதலமாடைக ளாடைகளோடைகள் பூண்மகுடங்கடவுட்
டாதியர்கேதன முத்தணிசத்திர சாமரமின்னமிர்தந்
தீதறுமாமணி தூபம்விடாதொளிர் தீபமொடின்னன்போ
லோதியயாவைய மேதமறும்படி யுள்ளமகிழ்ந்துதவி.

இ-ள். நன்மையைத்தரும் நெல்-கரும்பு-வாழை முதலியவைகளுள்ள நிலங்கள் திரவியங்கள் நல்லவஸ்திரங்கள் தாமரை செங்கழுநீர் அலருந் தடாகங்கள் கிரீடமுதலிய ஆபரணங்கள் தேவகணிகைபர்கள் முத்துக்குடைகள் சாமரைகள் அறுசுவையோடுங்கூடிய பதார்த்தங்கள் பணியாரவகைகளுடன் அன்னராசிகள் ஓசையைத்தரும் மணிகள் சாம்பிராணிதூபங்கள் எந்நேரமும் பிரகாசிக்குங் கனகமயமாகிய தீபங்களும் சகல தீவினைகளுந் தொலையத்தக்கதாக மனக்களிப்புடன் ஆலயத்துக் கமர்த்திக்கொடுத்து—எ-று. (௧௧)

தண்ணளிகூரிம வானருள்சுந்தரி சந்நிதியிற்பணிவுற்
றெண்ணியவின்னன நல்கியிறைஞ்சுக விங்கிவையில்லையெனிற்
கண்ணியவணுவள வாயினுநெஞ்சு களிக்கவளித்தருள்கூ
ரண்ணலையுன்பின் வணங்கினரன்பர லாதவரன்பர்களே.

இ-ள். குளிர்ச்சிபொருந்திய கருணையைப்பொழியும் பர்வதராஜகுமாரியாகிய சிவகாமசவுந்தரி சந்நிதானத்தில் வணங்கி முற்சொன்ன உபசாரப்பொருள்களை பக்தியுடன்கொடுத்துத் தோத்திரஞ்செய்யக்கடவது இவ்வகையளிக்கச் சக்தியில்லையேல் தனக்கியன்றவளவில் திணைத்துணையேனும் மனக்களிப்போடுங் காணிக்கைக் கொடுத்துக் கிருபாரசம்பொழியுங் கர்த்தனாகிய சபாபதியைச் சித்தசுத்தியுடன் விருப்பமாகத் தொழுதவர்களை சிவபக்தர்கள் இந்நடத்தையில்லாதவர்கள் சிவனடியார்களல்ல—எ-று. (௧௨)

யாதுமிலர்சொனி விலைமலராயினு மிட்டுவணங்குதலே
நீதியலாநெறி நிதிகொளகைபொரு ளோர்படலொன்றிலரோ
சாதிதனுலைய மீதிறைசூடிய் கற்றியவன்றியவன்
போதருசெற்றை மலாதியெடுத்தயல் போகடன்மாகடனே.

இ-ள். யாதொருபொருளுங் கையிலில்லையாயின் பத்திரபுட்பங்களாயினுஞ் சிவசந்நிதியிற் கொடுத்துப் பணிய வேண்டியதே கருமம் அதல்லாமலும் நன்மார்க்கத்துடன் தேடியபொருள் சிவனுக்குப் பிரியாகையால் அநீதியாய்த் தேடிய திரவியஞ் சிவனுக்கு யோக்கியமல்ல மேலும் யாதொருபொருளி லெவ்வளவாயினுந் தன்கையி லில்லாமற் சிவாலயத்துக்குப் போகிறது விதியல்ல ஆயினும் இன்னுமொருவிதஞ் சொல்லுகிறோம் ஆதிகர்த்தாவி னுடைய ஆலயத்திற் பரமசிவனணிந்துகழித்த நிர்மாலிய முதலியவைகளையும் மற்றுமுள்ள அசுத்தங்களையும் நீக்கிச் சுத்திசெய்துகொண்டிருப்பது கடமை—எ-று. (௧௩)

ஈதுமிலாரெனின் முன்பரிசாரக ரிதையமகிழ்ந்திடநன்
கோதிவணங்கவ லாதுபணிந்தெழ லொழிவதுவேகருமம்
வேதமுமிப்படி நிச்சயமாக விளம்பியதப்படியே
யாதிநெடும்பதி யண்ணல்பதந்தொழு மன்பினரன்பர்களால்.

இ-ள். இவ்வகைக்கும் இல்லாமற் போயினும் சிவ சந்நிதியிற் பணிவிடைகள் செய்துக்கொண்டிருக்கும் அடியார்களதுமனது சந்தோஷிக்க நன்மையாகிய உபசாரங்கள சொல்லித் துதித்துப் பணிய வேண்டியதே முறைமை அப்படிசெய்யாமல் விரைகப்போய்த்தெண்டனிட்டெழுவதை விட்டுவிடுவதே காரியமென்று நான்கு வேதங்களும் உண்மையாகச்சொல்லி யிருப்பதினால் முன்சொல்லிய முறைமையைப் போல் உயர்ந்த சிவாலயத்துக்குப் போய்ப் பரமசிவத்தினது பாதாரவிந்தங்களைத் தரிசனஞ் செய்துபணியும் அன்பர்களே பக்தாகளாவார்கள்—எ-று. (௧௪)

பின்னருமாமகிழ் வால்வலம்வந்து பிறங்கியமூவொருகா
லன்னிலனூடு பணிந்துயர்சந்நிதி நண்ணிளிருந்தருள்கூர்
முன்னவர்பேணிய வக்கரமஞ்சு முயங்கியுயிர்க்குயிரா
மின்னமிர்தந்தம துள்ளுறநூறுட னெட்டுருவேறியபின்.

இ-ள். பின்னையு மிகுந்தசந்தோஷத்துடன் பிரதக்ஷணங்கள் வந்து சந்நிதிக்கு முன்பாகப் பரிசுத்தபூமியில் காசரணுதி அவயவங்களொருந்த மூன்றுதரந் திர்க்கதெண்டனிட்டுச் சந்நிதிக் கெதிர்ப்பக்கத்திற் பதுமாசனமாகவிருந்து கிருபையை யளிக்கும் பரமசிவத்துக்கு விருப்பமாகிய பஞ்சாட்சரத்தை ஏகமனதோடு பிராணனுக்கு நாயகனாகியும் தேவாமிர்தம்போன்ற பஞ்சாட்சர ரூபமுமாகிய பரம்பொருளைத்தியானித்து நூற்றெட்டுதரம் ஜெபஞ்செய்தபின்—எ-று. (௧௫)

நின்றுபணிந்தவ னின்றுமகன்றரு ணைபம்வளர்த்திட்டுமுன்
னொன்றரிதான புலன்கரணங்களு மொன்றினருள்ளொளியா
யென

யென்றுமரும்பொரு ளென்றுமறைக்குல மென்றுபு ரைத்திடமா
மன்றுணடம்புரி வள்ளன்மலர்ப்பதம் வந்தெதிர்கண்டுதொழா.

இ-ள். இந்தப்பிரகாரம் பஞ்சாக்ஷரஜெபமும் பிராணாயாமமுஞ் செய்து சிவானந்தம் பொருந்தினவனாய் எழுந்து சந்நிதானத்திற்குமுன்பாகநின்று சிவபக்தி பெருகவும் தனக்குக் கைவசப் படாத ஐம்புலன்களையும் மனமுதலிய அந்தக்கரண நான்கையும் வசப்படுத்திக்கொண்ட சிவயோகிக ளிதையார விந்தத்தில் சோதிஸ்வரூபமாயும் நித்யமாயும் மனவாக்குக்கெட்டாத வஸ்துவென்று வேதங்கள் எப்போதுந் தோத்திரஞ்செய்யு மகாமகிமையை யுடைய திருசசிற்றம் பலத்தில் ஆனந்தநடனஞ்செய்யும் அம்பலவாணமூர்த்தியினது சரணாரவிந்தங்களைத் தரிசனஞ்செய்து பணிந்தபின்—எ-று. (கசு)

என்னுடலென்னுயிரென்னுணர்வென்செயலென்பவிகந்துடையோர்
முன்னுணர்வாகிய பேருணர்வென்று முயங்குபுயங்கமணிப்
பொன்னவைமுன்னர் மகிழ்ந்துதிகழ்ந்து புகழ்ந்துலகேழுடையா
யின்னமிர்தேபொரு ளேயருளேயென வின்புறுமன்புமிகா

இ-ள். என்னுடையதேகம், என்பிராணன், என்னறிவு, என்தொழில் என்னும் மும்மலங்களை யகற்றிய பெரியோர்களுடைய அறிவுக்கு முதன்மையாகிய 'சிவத் தியானமே நித்தியமாகிய தென்று எண்ணி நாகரத்தினங்களிழைத்த கனகசபைக்கு முன்பாக ஆனந்தங் கொண்டு சகலலோகநாயகனே இனிய தேவாமிர்தமே பராபரவஸ்துவே கிருபைக்கடலே அருளே அரும்பொருளே என்று இன்புற்று பகதியென்னும் அன்புபெருக—எ-று. (கஎ)

ஆலமருங்கத னீழலிலேமூல காரணுடையானுறையு
மூலநெடும்பதி யெய்தியிறைஞ்சிய மூறைகுறையாதிவனுஞ்
சீலமுறும்படி நன்னியமத்தொடு சேவைபுரிந்தருளோர்
பாலுடையான்விடை யானடமாடிய பதமலரிதையமுறு

இ-ள். ஆலமரத்தின் தென்கீழ்ப் பக்கத்து நீழலில் புவனங்களுக்கெல்லாங் கர்த்தனாகி எழுந்தருளி யிருக்கும் மூலஸ்தான மகாலிங்க சந்நிதானத்திற்குவந்து வந்தனை வழிபாடுடனே முன்சொன்னவிதிப்படி தவறாமற்செய்து திருச்சிற்றம் பலத்திலும் பரிசுத்தத்துடனே ஞானமுண்டாக வந்தனை வழிபாடுபுரிந்து சேவித்து அநுக்கிரக சத்தியாகிய சிவகாம சவுந்தரியை இடப்பாகத்தி லுடையவனும் ரிஷபவாகனமுடையவனுமாய் ஆனந்தத்தாண்டவஞ்செய்யும் அம்பலவாணமூர்த்தியினது பாதாரவிந்தங்களை இதயகமலத்தில் நிலைமையாக வைத்துக்கொண்டு—எ-று. (கஅ)

நாதபுராதனஞானவரோதைய ஞானநடம்புரியும்
பாதநிராமய வாதிபரேசப ராபராதத்துவநால்
வேதபராயண சிதாணுபக வெற்பருள்கற்புமிகு
மாதொருபாலுடை யாயெனநின்று வழுத்திவணங்கியபின்.

இ-ள். நாதனே பழமையானவனே, ஆதியந்தமில்லா நாயகனே, மலையரையன் தபோமகிமையாற்பிறந்து பதிவிரதைகளுக்கெல்லாஞ்சிரோரத்தினம்போன்ற பார்வதிதேவியை வாமபாகத்திலிருத்தியவனே என்று நின்றுகொண்டு தோத்திரஞ்செய்து பணிந்தபின்பு—எ-று. ()

அருள்விடைபெற்றருமாமறைசூழ்திருவாலயவெல்லைகடந்
தொருமைகொடுத்தின யங்ஙனுறைந்தொளிகதிருதையத்திலெழுந்
திருவினைசெற்றிடு பங்கயவாவியி னினிதுபடிந்தருளான்
மருவியதான மிசைந்தனமாதவர் மறையவர்பாலருளி.

இ-ள். சிவானுக்கிரகம்பெற்றுத் தண்டீசேஸ்வரனை வணங்கி மேலாகிய வேதங்கள் நிறைந்திருக்குஞ் சிவாலயத்தின்வெளியேவந்து அன்றையதினம் ஒருமையாகிய மனோபக்தியுடன் அத்தலத்தி லோரிடத்திற் சயனித்திருந்து சூரியோதயத்திற்குமுன் எழுந்திருந்து நித்தியகருமங்களை முடித்துக்கொண்டு பரிசுத்தமாகி நல்வினை தீவினையென்னும் பாசபந்தத்தை நீக்கிச் சகல போகபாக்கியங்களும் மோட்சமுங் கொடுக்குஞ் சிவகங்கையில் நியமத்துடனே முழுகிச் சிவபூசை முடித்துக்கொண்டு மனதிரக்கத்துடன் பெரியோர்களுக்கும் பிராமணர்களுக்கும் தானதருமங்கள் தன்னாலியன்றமாத்திரங்கொடுத்து—எ-று. ()

சீதரநாடரு மன்றினடம்புரி சேவடிகண்டிடவே
பூதலவானவர் சைவர்தபோதனர் புந்திகளிக்கசமா
ராதனநல்கி மகிழ்ந்துபுகழ்ந்தரு ளுற்றவரேவலினா
லேதமில்போனக மோனமொடுண்டிட லேயியல்பாகுமரோ.

இ-ள். விஷ்ணுவின் உலகத்திலுள்ளவர்களுங் காணுதற்கரிய திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தத்தாண்டவம் புரியுஞ் செந்தாமரைமலர்போல் விளங்குகின்ற பாதங்களைத் தரிசனஞ்செய்து முன்சொல்லியவண்ணம் வந்தனை வழிபாடுகள் செய்து பூலோக தேவர்களாகிய பிராமணர்களுக்குச் சமாராதனையும் சைவமார்க்கந் தவறாத சிவனடியார்களுக்கும் சிவயோகிகளுக்கும் மகேசுரபூசையும் மனது சந்தோஷிக்கச்செய்வித்து ஆனந்தத்தையடைந்து தோத்திரங்கள்செய்து அப்பெரியோர்கள் கட்டளையின்படி சுத்தபோஜனம் மவுனத்துடன் மந்திரக்கிரமமாக போசித்து நியமத்துடனிருப்பதே முறைமை—எ-று. (உக)

மிக்கநலந்திகழ் புண்டரிகத்தட மீதுபடிந்துடனே
யக்கரமஞ்சையு நூறுடனெட்டுரு வங்நனவிற்றிமதிச்
செக்கர்நறுஞ்சடை யானடமாடிய சேவடிகண்டவர்தா
மிக்கொடுவன்பவ மெய்தவிரும்பினு மெய்துவரோவிலையால்.

இ-ள். மிகுதியும் நன்மையைத் தரும் சிவகங்கையில் தீர்த்தமாடிப் பஞ்சாக்ஷரத்தை நூற்றெட்டுதரம் அவடத்திற் செபித்துச்செக்கர்வானத்தையொத்த சடாமகுடத்தில் சந்திரனையணிந்த சபாபதி ஆனந்தத் தாண்டவம்புரியும் பாதாரவிந்தங்களைத்தரிசனஞ்செய்யப்பேறுபெற்றவர்கள் பின்பு துன்பத்துக்கிடமாகிய ஜனனம் வேண்டுமென்று ஆசித்தாலும் அவர்களுக்கு மறுபடியுஞ் ஜனனமரணம் பொருந்தாது—எ-று. (௨௨)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உற்றவிந்நெறி மூத்தினைமைந்தின மோர்பக்கமோர்திங்கண்
மற்றொராண்டுதம்மாயுளினெல்லையவ் வளநகர்வைகிச்சீர்
பெற்றவேதியா மாதவர்க்கொருமுட்டி பிச்சையாயினுமன்பா
லெற்றைநாளுமிட் டுண்டலேநெறியலா துண்டலுமியல்பன்றால்.

இ-ள். முன்சொன்ன முறைமையாக மகாநியமத்துடன் சிவகங்கையில் தீர்த்தமாடிச் சிதம்பரேசுரனைத் தரிசனஞ்செய்துகொண்டு அந்தச் சிதம்பரநகரத்தில் மூன்று நாளாயினும், ஐந்துநாளாயினும், பதினைந்து நாளாயினும், ஒருமாதமாயினும் ஒருவருடமாயினும், அல்லது ஆயுளவரைக்கு மாயினும்வாசம் பண்ணுகிறவர்கள்மேன்மைபெற்ற வைதீகப்பிராமணர் களுக்குஞ் சிவயோகி களுக்கும் ஒருமுட்டி உபாதான மாகிலும் ஒருகவளம் அன்னபிட்சை யாகிலும் அன்புடனே ஒருதினமேனுந் தவறாமற் கொடுத்துப் போஜனஞ் செய்துக்கொண்டு இருக்கவேண்டியமுறைமை இவ்வகையாய் ஒருதினமாயினும் அத்தலத்தில ஒருபிடி உபாதானமாகிலும ஒருகவளம் அன்னமாகிலும் பிட்சையிடாமல போஜனஞ்செய்யத்தகாது—எ-று. (௨௩)

இல்லறத்துட னிருப்பவருந்தமக் கிசைந்தசெய்தருந்தாரேல்
வல்வினைத்தொகை துய்ப்பவாசிச்சியமறையெலாம் புகழ்ந்தேத்துந்
தில்லைபம்பதி நன்னெறியுறைபவர் சிதம்பரநாதன்றன்
மல்லன்மல்கிய சேவடிநாடொறும் வணங்குதல்வழுக்காமல்.

இ-ள். சிதம்பரதலத்தில் எப்போதும் இல்வாழ்க்கையுடனிருக்கின்றவர்களும் தங்களுக்குத்தக்க நன்மார்க்கமாய் நடந்துக்கொண்டு தங்களா லியன்றமாத்திரம் பெரியோர்களுக்குபசரித்து உதவி

செய்து போஜனஞ்செய்வாராகில் அநேக பாபபலன்களை யநுபவிப்ப தற்குச் சந்தேகமில்லை இது நிச்சயம் வேதங்க ளெல்லாங் கொண்டாடித் தோத்திரஞ்செய்யும் அச்சிதம்பரதலத்தில் நன்மார்க்கத்துடன் வாசமாயிருக்கிறவர்கள் ஞானாகாசசொரூபமாய் ஆனந்தநடனம்புரியும்மகிமையைப்பெற்ற அம்பலவாணரது சிவந்த பாதாரவிந்தங்களையெக்காலும் தரிசனஞ்செய்து பணிவதேவிதி—எ-று. (௨௪)

அனகமாதவ சயிமினிமுனிவ கேளாநம் பெருநியமங்க
ணினது செய்கைகண் டுரைத்தன நீயுமந் நியமங்கடவறாமற்
றினமுஞானமு முத்தியுமாகிய சிவபரஞ் சுடராடுங்
கனகவம்பலத் தாடலைக்கண்டு கண்கருத் தினுங்களிப்பாயால்.

இ-ள். பாபரகிதமாகியமகாதபோதனனாகியசயிமினிமுனிவரனே கேள் உனது நன்மையாகிய நடக்கையைப் பார்த்து அரிதாகிய பெருமைபெற்ற சிதம்பரதலவாசஞ்செய்யும் நியமங்களைச் சொன்னோம் நீயும் அந்த நியமந்தவறாமல் எப்போதும் சிவஞானமும் மோக்ஷமுமாகிய சிவபரஞ்சோதி பொன்னம்பலத்தில் ஆனந்த நடனம்புரியும் வினோதத்தைக் கண்ணினாற்கண்டு மனதில்மதித்து ஆனந்தத்தை யடைவாயென்று வேதவியாசர் திருவாய்மலர்ந்தார்—எ-று. (௨௫)

காலைவாயணி தில்லையம்பதிதனைக் கைதொழச் செல்வோமென்
றேலுமவ்வுரை கொண்டெழினற்றையின் வினையெலா மிரிந்தோடு
மாலுமன்புடன் சேறலின்னாளைத் தாமென நியமித்தான்
மாலடைந்தவிப் பவத்தறியாதுசெய் வல்வினை மாய்ந்தேகும்.

இ-ள். உதயகாலத்தி லெழுந்திருந்து சகல அலங்காரமும்பெற்ற சிதம்பரதலத்திற்குப்போய்ச் சபாபதியைத் தரிசனஞ்செய்துபணிய வேண்டுமென்று பயணமாகி எழுந்தவுடன் அதுவரையினுஞ் செய்த பாவங்களெல்லாம் தொலைந்தோடும் பக்தியோடு சிதம்பரதலம்போய்ச் சேர்ந்தால் அவர்களைச்சபாபதி ஆட்கொள்ளுவார் நியமத்துடன் ஆசைகொண்டு யாவரேனு மத்தலத்திற்குப் போகவேண்டுமென் றெண்ணியமாத்திரத்தில் மாயசம்பந்தமாகிய இச்சனனத்தில் அறியாமையாற்செய்த மகாபாதகங்களெல்லாம் நிவாரணமாய்ப் போம—எ-று. (௨௬)

தொழுதுமென்றெழி லிப்பவத்தறிந்துசெய் தொடரும் வல்வினைக்
கூட்ட முழுதுமாய்ந்தறுங் கலைமறையாகம முற்றுமா மெழுத்தஞ்சா
லெழுதிமெய்ந்தசிற் றம்பலத்தெல்லையைக் காணொண்முன் னெண்ணில்
லாபமுழு தகூர்பிறப் பிடையறியாதுசெய் பாவங்கள் பேவாவால்,

இ-ள். அம்பலவாணமூர்த்தியினது பாதாரவிந்தங்களைத் தரிசனஞ்செய்து பணிவோமென்றெழுந்தவுடன் இந்தஜன்மத்தில் அறிந்துசெய்து தன்னைவிட்டுநீங்காத அநேகந் தீவினைக ளெல்லாம் தொலைந்துபோம் வேதாகம சாத்திரங்களி னுண்மைப் பொருளாகி மந்திரங்களுக்கெல்லாம் மூலகாரணமாகிய பஞ்சாட்சரத்தைப் பொற் றகட்டி லெழுதி மேய்ந்திருக்கின்ற திருச்சிற் றம்பலம் விளங்குஞ் சிதம்பரத் தெல்லையை தரிசனஞ் செய்தவர்களது எண்ணிறந்த பிறப்புகளில் அறியாமையினாற்செய்த தீவினைகளெல்லாம் தொடாமற்போம்—எ-று.

பிறிந்தவல்வினை மாதவகொடுமையிற் பிரங்குமந் தகன்வீழ
வெறிந்தமூவிலைப் பாம்பரன்வடிவமா யிலங்குமப்பதிதன்னைச்
செறிந்தவடைந்தபோ தலகிலாமுன்னைவெந் தீப்பிறப் புகடோறு
மறிந்துசெய்வினை மறிந்துகுந்தவங்கள்வேறுற்றவாறறிவென்னே

இ-ள். புண்ணிய சொரூபமாகிய சயிமினியேகேள் பொல்லாங்குசெய்யும் பாபிகளைப் பயங்கரமாகிய தண்டனைகள்செய்துவிளங்கும் காலனை மூவிலைச்சூலத்தினாற்குத்திய பராபரவஸ்துவாகியபரமசிவன் திருவுருவாகிப் பிரகாசிக்கும் அந்தச்சிதம்பரதலத்தை வந்து சேர்ந்தவுடன் எண்ணிக்கையில்லாத கொடிய பிறவிகடோறும் அறிந்துசெய்த பாபங்களெல்லாம் நீங்கிப்போம் இத்தன்மை யிருக்க இம்மார்க்கத்தை விட்டு வேறே தேகவருத்தமாகிய தபங்களைச்செய்பவர்களதுமதி என்னமதியோ—எ-று. (உ௮)

பங்கயத்தடங் கண்டபோதந்தனன் பதம்பெறலாந் தீண்டிற்
செங்கண்மாலரும் பதத்தினையெளிதினிற் சேரலாங் குடங்கையுட்
டங்குநீர்தம துட்கொளினுருத்திரன் றக்கவான். பதமெய்தும்
பொங்குமத்தட மூழ்கினான்மகேசுரன் பொற்பதம் புகலாகும்

இ-ள். தாமரைமலர்ந்திருக்கும் உயர்ந்த சிவகங்கா தீர்த்தத்தை தரிசனஞ் செய்தமாத்திரத்தில் பிரமதேவன் வாசமாயிருக்குஞ் சத்தியலோகமாகிய சமனாவதியென்னும் பட்டணத்தைப் பெறலாம் அந்த தீர்த்தத்தைக் கையினாற்றொடும்படியாகிய பேறுபெற்றவர்கள் மகாவிஷ்ணு வாசமாயிருக்கும் திருப்பாற்கடல்சூழ்ந்த சுவேதத்தீவினிற் பிரகாசிக்கும் வைகுந்தத்தை எளிதாய்ப்பெறலாம் அந்ததீர்த் தத்தை உள்ளங்கை கொண்டு மட்டும் பானம் பண்ணினால் உருத்திர மூர்த்தி வாசமாயிருக்கும் கயிலாசத்தைப்பெறலாம் அந்ததீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினால் மஹேஸ்வரனது பதத்தைப்பெறலாம்—எ-று. (உ௯)

சிந்தையன்புகொ டகிலநாயகன்றனைத் திருமூலத் தானத்தார்
வந்துகண்டவர் சதாசிவபதத்திடை வைகுவர் பொன்மன்றத்

மதக்கதையப்பிகை காளைனின்றாடிய விருபதங் கண்டோர்க
ளந்தமொன்றிலா முத்தியக்கலைத்திலை யடைதனிச் சயமாமால்.

இ-ள். மனதில் பக்திபூண்டு சகலலோகநாயகனாகிய திருமூலஸ்தான சிவலிங்கத்தைத் தரிசனஞ்செய்தவர்கள் பிரமாண்டங்களுக்குட்படாமல் சுத்தவெளியில் ஜோதிமயமாய்ப் பிரகாசிக்கும் பிரமிருக கயிலாசமாகிய சதாசிவபதத்தைப்பெறுவார்கள் பொன்னம்பலத்தில் சிவகாமசவுந்தரி கண்டுமகிழ ஆனந்தநடனம்புரியும் அம்பலவாண மூர்த்தியினது இரண்டு சரணகமலங்களைத் தரிசனஞ்செய்தவர்கள் ஒருகாலத்திலும் அழிவில்லாத பரப்பிரமமாகிய பரமசிவ ஐக்கியத்தை அக்கணமே பெறுவது நிச்சயம்—எ-று. (௯௦)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஈசனுக்குப் பிழைத்தகொடும் பாவமுதற்பாவங்க ளியற்றாதுள்ள,
நேசமுறச்சைவநூ லாய்ந்துணர்ந்து நின்றுநிலை நீங்காதென்றும்
பாசவினைப்பகைசாட வடிவுகொடுசிதம்பரத்துட் பதுமச்செந்தாள்
வீசியொரு பொருளாடல் கண்டுறைந்தோ ருள்ளபடிவீடுசேர்வார்.

இ-ள். சிவத்துரோகமுதலிய மகாபாதகங்களைச் செய்யாமல் புண்ணியஞ்செய்து சித்தத்தில சிவபக்திபொருந்திச் சிவசம்பந்தமாகிய வேதாகமசாத்திரங்களிலும் புராணங்களிலுமுள்ளபொருளகளை நன்றாயக்கற்றறிந்து அவற்றிற்சொல்லிய முறைமைதவறாமல நடந்துக்கொண்டு மாயாசம்பந்தமாகிய பாசபந்தத் தீவினையென்னும் சத்துருவைச் சங்கரிக்கவேண்டி ஞானாகாசரூபமாகித் திருச்சிற்றம்பலத்தில் என்னாளுஞ் செந்தாமரைமலரைப்போற் பிரகாசிக்குஞ் சிவந்தபாதத்தைவீசி ஆனந்தநடனம்புரியும் வேதாந்தப்பொருளின் விநோதத்தை தரிசனஞ்செய்து ஆனந்தத்தையடைந்தவர்கள் மெய்மையாகிய மோட்சத்தையடைவார்கள்—எ-று. (௯௧)

அப்பரிசொன்றிலரேனுஞ் சிதம்பரத்துட் சேவடிகண்டவருமந்த,
மெய்ப்பதியி லிருந்துமலர்ச் சேவடிகாணாதவன் வியந்துளோரு,
மெய்பதியோ ரெப்பிறப்போ ரெவ்வினையோராயினுமங் கிறந்துளோ
ருஞ், செப்பரியசாலோக முதன்முத்தி யடைந்தடைவிற் சிவத்தைச்
சேர்வார்.

இ-ள். அச்சிதம்பரத்தில் முன்சொன்ன முறைமையாக நடவாமற்போனாலும் திருச்சிற்றம்பலத்தில் அம்பலவாண மூர்த்தியினது பாதாரவிந்தங்களைத் தரிசனம்செய்தவர்களும் மேன்மையாகிய பக்தியிலிருந்து சபாபதியினது பாதபத்மங்களைத் தரிசனஞ் செய்யாமல் இறந்தவர்களும் எந்ததேசத்தாராகிலும் எச்சாதிபேதங்களாகப் பிற

ந்தவர்களாகிலும் எத்தொழி லுடையவர்களாகிலும் அத்தலத்தில்வந் து இறந்தால் அவர்கள் சொல்லுதற்கரிய சிவசாலோக சாமீப சாரூப சாயுச்சியமென்னும் நான்குபதவியையுங் கிரமப்படி அடைந்து முடிவில் பரமசிவத்தைச் சேருவார்கள்—எ-று. (௩௨)

அழிவிலாவப்பதியி லிருந்துகொடு வினைபுரிந்தோ ரடைந்துவிழு,
மொழிவிலா நரகத்தை மொழியுமாறெவன்கொலோ வுலவாவேத,
வழியினாலுயர்முனிவ வென்னுமுனா செவிப்புகலு மயங்கிஞான,
விழியினானெதிர்பணிந்துசயிமினியஞ் சலிசெய்து விளம்புவானால்.

இ-ள். என்னாளும் நித்தியமாயிருக்கும் அந்தச்சிதம்பரத்தில் குடியிருந்து பொல்லாங்குவினையும்பாதகங்களைச்செய்து மகாரவுரவாதி நரகங்களில் விழுந்து அவதிப்படுகிறவர்களுக்கு விமோசனம் எவ்விதம்வந்து வாய்க்குமோதெரியவில்லையென்று இரக்கத்துடன் எப்போதும்நிலைமையாயிருக்கும் வேதமார்க்கத்தினால் உயர்வுபெற்றசயிமினி முனிவனேயென்று வேதவியாசர் திருவாய்மலர்ந்தவுடன் அவ்வசனங்களைச் செவியுங்கொண்டு நினைத்து ஞானகண்களையுடைய வேதவியாசரது பாதாரவிந்தங்களில் பணிந்து கைகுவித்துச் சயிமினிபகவான் சொல்லத்தொடங்கினான்—எ-று. (௩௩)

முடிவிலாவம்பலத்தி னடங்கண்டோர் முத்தரென மொழிந்தாயந்த,
ப், படிவிடாதாகம வேதங்களெலா மையமறப் பகராநின்ற, நெடியமா
தவர்புகழுப் பதியிருந்து வினைபுரிந்தோர் நீங்கொணாத, கொடியமாநி
ரையத்தோ ரென்றவுரை மாறன்றோ கூறுங்காலை.

இ-ள். எக்காலத்திலும் அழிவில்லாத திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தநடனஞ்செய்யும் விநோதத்தைத் தரிசனஞ்செய்தவர்கள் ஜீவன்முத்தர்களாவார்களென்று தேவரீர் திருவுளம்பற்றினீராதலால் அவ்வண்ணமே வேதாகமபுராணங்களிலுஞ் சந்தேகமற நிச்சயமாகச் சொல்லியிருக்க மகாதபோதனர்கள் பணிந்தேத்தும் அச்சிதம்பரதலத்தில் இருந்து பாபஞ்செய்தவர்கள் மகாரவுரவாதி நரகங்களில் வீழ்ந்து அகலாது அவதிப்படுவார்களென்று சொல்லியவசனம் முன்சொல்லிவந்த மகிமைக்கு ஒப்பிடுமிடத்தில் மாறுபாடல்லவாவென்று சந்தேகந்தீரச் சயிமினிபகவான் வாதராயணரைக்கேட்டார்—எ-று. (௩௪)

ஐயமிகவையமெனக் கடைந்ததுநீ யையமறவருள்செயென்ன, மெய்புணருமுனிவனுகன் றுறைத்தனைமைந் தாவெவர்க்கும் விளம்பொணாத, வுய்யுநெறியாமிதனைக் கேட்கவிரும் பினைநேச வுள்ளங்கொண்டு, செய்யநெறி யுடையயினைக் குள்ளபடிமொழிதுமெனச் செப்புகின்,றான்.

இ-ள். வேதவியாசனைப்பார்த்து மிருகியும் என்மனதில் சந்தேகந்தோன்றி யிருப்பதால் அவைதீரத் தேவரீர் அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று சைமினிபுகலவான் கேட்டவுடன் வேதாந்த ஞானமறிந்த வாதராயனர் சந்தோஷித்து நீ யிப்போதுரைத்தவை நன்மையானவையென்று மெச்சிக்கொண்டு அறிவுடையபிள்ளையே இஃதை அபக்குவர்களுக்குச் சொல்லுகின்றவையல்ல கடைத்தேறு மார்க்கமாகிய இப்பொருளைக்கேட்க ஆசைகொண்டாய் சிவபக்தி பூண்டு வேதாகமவிதிப்படிநடக்கும் உனக்கு உண்மையாகிய விதியைச் சொல்லுகிறோமென்று வாதராயனர் சொல்லத்தொடங்கினர்—எ-று. (௩௫)

எங்கண்ணுமியாரேனு மியற்றியநல் வினைதீமை யிரண்டினுள்ளும்
பொங்குபய னொன்றொன்றே யழியாதபெரும்பற்றப் புலியூர்தன்னிற்
றங்கநெறியோரேனு மறிவுடனு மறியாமை தொடர்ந்துஞ்செய்த,
தங்குபெரு நல்வினைதீ வினையொன்றுகோடியாய்த் தழைக்குமன்றே.

இ-ள். எவ்விடத்திலும் எவர்களாலும்செய்த புண்ணியபாவங்களின் பலன்கள் ஏறுமலும் குறையாமலும் செய்தமட்டு மனுபவிக்கப்படும் என்றைக்கும் நித்தியமாயிருக்கும் இந்தச்சிதம்பரதலத்தில் நன்மார்க்கமுடைய பெரியோர்களாயினும் அறிந்தும் அறியாமையினாலும் நாள்தோறுஞ்செய்த புண்ணியபாவபலன்கள் ஒன்று கோடியாய் வளரும்—எ-று. (௩௬)

சீதமலர்ப்பொழிற்றில்லை யிருந்து தீவினைபுரிந்தோர்தெய்வமன்றுட்
பாதமலர்கண்டிடனே முத்தரா தலினாலும் பகருமன்னோ (ய்நற்
ரோதுவினைப்பயனூட்ட வுரவி... னன் மதுகொண்டு தண்டஞ்செ
காதிபரம் பரன்காலற் கதிகாரமவ்வளவுக் கமைத்தானல்லன்.

இ-ள். குளிர்ச்சியையுடைய தாதுநிரம்பிய மலர்களைச்சொரியுஞ் சோலைகளா லலங்காரம் பெற்ற சிதம்பர தலத்தி லிருந்து பாபங்களைச்செய்தவர்கள் தெய்வத் தன்மை பொருந்திய திருச்சிற்றம் பலத்தில் அம்பலவாண மூர்த்தியினது பாததாமரைகளைத் தரிசனஞ்செய்தவுடன் மோட்ச அதிகாரிகளாவதுமல்லாமல் முற்சொன்ன தீவினையாளர்கள் அந்த நரகதுன்பத்தை அநுபவிக்கும்படித் தண்டிப்பதற்குக் காலனுக்கும் அசாத்தியமாம் ஏனெனில் ஆதிகர்த்தாவாகிய பரமசிவன் சிதம்பரதலத் தெல்லையுளிருந்தவர்களைத் தண்டிக்கப் படலாமென்று அந்தகனுக் கதிகாரங் கொடுத்ததில்லை—எ-று. (௩௭)

அன்னதனுக் கதிகாரமப்பதியால் வயிரவனுக் களித்தான்காலன்
புன்னரியவோரிருபத் தென்கோடி நரகத்துப்பதுமத்தன்னை



MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRAR

றன்னூரியகற்பமெலாம் புரிதண்ட மவ்வடுகேன் றயங்குசூலத் (தும்மா
துன்னரிய நுனியிடையோர் கணப்போதிற் படுந்துயருக் கெவ்வா

இ-ள். அந்தச் சிதம்பரதலத்தில் பாதகஞ் செய்தவர்களைத் தண்டனைசெய்யும் அதிகாரம் காளவ யிரவருக்குப் பரமசிவன் கட்டளையிட்டார் அவர்செய்யுந் தண்டனை எவ்வகைப் பட்டதென்றால் எமதருமராஜன் விதிக்கும் இருபத்தெட்டுகோடி நரகத்திலும் 'கமலாசனனாகிய ஒருபிரமதேவன் கற்பகாலம்வரைக்கும் வாதைப்படுத்தும் அவதிகளெல்லாம் இக்காளவர்கையில் விளங்கும் சூலாயுதத்தின் முனையிலொருகணப்போது படும்படியாகிய வருத்தத்துக்கு இணையாகமாட்டாது அவ்வாதனையை நினைத்தமாத்திரத்தில மனதுநடுக்கும்...எ-று. (௩௮)

அத்தலத்தி னிடைக்கொடிய பாதகங்கள்புரிந்தோரையனேகக்கோடி, நித்தமுறு கற்பமெலாம் பதிப்பாலன் கரதலத்துணிகரிலாத, மூத்தலையினுனியினருங் கொடியவினைப் பெரும்பயன்கண முடித்துநீக்கத், துய்த்திடுமாறுய்த்திடுவன் றுயக்கும்போ தூள்துயரஞ்சொல்லற்பாற்றோ.

இ-ள், அச் சிதம்பரதலத்தில் பொல்லாங்கை விளைக்கும் கொடிய பாதகங்கள் செய்தவர்களை அநேகக்கோடி கற்பகாலம்வரைக்கும் காளவயிரவரது கரதலத்திலே தனக்குத்தானே ஒப்பாகவிளங்கும் மூவிலைச்சூல முனையினால் அப்பாதகங்கள் தீரப் பெரிதாகிய வாதனைகளையநுபவிக்கச் செய்வித்து பரிசுத்தராக்கிக் கடைத்தேற நிமித்தம்படுத்தும்வருத்தத்தை உள்ளபடி சொல்லிமுடியாது—எ-று, (௩௯)

பங்கமகற்றியதில்லை நகரடைந்துஞ் சிவகங்கை படிந்துமன்றத், தங்கமிலான் றாள்கண்டு மத்தலத்திற்கொடுவினைக ளெங்ஙோவந்தோ, தங்கமதுமனமறியப் புரிவதேமூடர்களென் சாற்றுகேன்யான், சிந்தை செயுந்தொறுமுடலந் தளகுமெனதுளநடுக்கம்பஞ் சேருமன்றே.

இ-ள். ஜனனமரணாதி அவதியைத்தீர்க்குஞ் சிதம்பரதலத்தில் வாசஞ்செய்து சிவகங்கையில்மூழ்கித் திருச்சிற்றம்பலத்தில் எங்களாலும் நித்தியனாகிய சபாபதியினது பாதாரவிந்தங்களைத் தரிசனஞ்செய்யப் பாக்கியங்கிடைத்தும் அத்தலத்தில் மனமறியப் பாதகங்களைச் செய்யு மூடர்களின்விவேகத்தை என்னென்றுசொல்லப்போகிறேனோ ஐயோ அவர்களை நினைக்கும்போதெல்லாம் என்னுடையதேகமும் மனதும் நடுக்கங் கொள்ளுகிறதென்று வேத வியாசர் சிந்தை நொந்தார்—எ-று. (௪௰)

செல்லாடல் புரிபொழில்சூழ் தில்லைமாநகரிருந்து தீங்கு செய்தல்
பொல்லாது பொல்லாது கல்லாதோரறியாரோற்புகல்வதென்னே, சொ

ல்லாதிமறைமுனிவ சிதம்பரங்கண் டிறைஞ்சுதற்குத் துணிகாதிவ்வ
னில்லாதுசெல்வாய்க் கணந்தன்னிற்கொடியவினை நீத்துவாழ்வாய்,

இ-ள், மேகங்கள் தவழ்ந் துலாவும் உயர்வைப் பெற்ற கோபுரங்கள்சூழ்ந்த மேன்மையை யுடைய சிதம்பர தலத்தில் அநேகஜனனங்களிற்செய்த புண்ணியவிசேஷத்தினால் வாசஞ்செய்யப் பாக்கியம் பெற்றுமட ஜனனமரணாதி அவதிகளாத தொலைந்தும் அழிவில்லாத மோக்ஷத்தைப் பெறுதற்கில்லாமல் மூடர்கள் பாதகங்களைச் செய்கிறது மிகப் பொல்லாதுபொல்லாது ஆகையினால் வேதாகம புராணங்களில் அத்தலத்தினது மகிமையைச் சொல்லியிருப்பதைப் படித்தாகிலும் அல்லது பெரியோர்களிடத்திற் கேள்வியுற்றாகிலும் தெரிந்துகொள்ளாத அவிவேகிகளை யான் என்னென்று சொல்லுவேன் சகல கலைக்கியானங்களுக்கு முதன்மை யாகிய வேதங்களின் பொருளை யுணர்ந்த சயிமினியே இவ்விடத்திற் கணப்போதாகிலும் தாமசமாக விராமல் தில்லைவனத்துக்குப்போய் ஞானாகாசரூபமாகிய அம்பலவாணமூர்த்தியைத் தரிசனஞ்செய்துகொண்டு சன்மார்க்கத்துடன் நியமப்படி வாசமாயிருந்து பொல்லாங்காகிய தீவினைகளைப்போக்கிச் சுகமாகவாழ்ந் திருமென்று வாதராயணர் திருவாய்மலர்ந்தருளினார்—எ-று, (௪௧)

சிலமுறை நடக்கணடங் கிருந்து மனமறியவினை செய்தோர் தானப்
பாலவயிரவன்கரத்துச் சூலநுனிமிசைவாதைப் பட்டபின்னர், கோல
முறுமன்னையர்தம் முடரத்துக்குறுநவரோ குறுகார்வெய்ய, நீலமிடக்
காலனடுங் கண்டமுறு ருடன்சிவத்து ணித்தாராவர்.

இ-ள். தரிசிப்பவர்களுக்கு மேலாகிய முத்தியைக் கொடுக்கும் மகிமையையுடைய திருச்சிற்றம்பலத்தில் ஆனந்த நடனத்தைச் சேவைசெய்துகொண்டிருந்து அத்தலத்தில் மனமறியப் பாபஞ் செய்தவர்கள் காலபயிரவரது சூலநுனியினால் மகாவாதனை யநுபவித்துப் பரிசுத்தராகிப் பின்னர் தாயினது கருக்குழியிற்பட்டுப் பிறப்பார்களென்றெண்ணவேண்டாம் அப்படி பிறக்கவேண்டுமென்று ஆவல்கொண்டாலும் பிறவியுறாது நீலநிறம்போன்ற எமதருமனது தண்டனையும் அடாமல் உடனே மேலாகிய சிவபதவியைப் பெற்று முத்தராவார்கள்—எ-று, (௪௨)

பொங்குமறைச் சயிமினிவ நாதனடிம் புரிதருளப் புரிபின்வாழ்
வோர், தங்கண்மன்மறியாமல் வந்தகொடு வினைகளக்குத தங்கசாந்தி
கங்கைமுதலாகியநற் றீர்த்தமெலாம் வணங்கு சிவகங்கையென்று, ம
ங்கமலத்தடவாவி மூழ்குதலேமுழுதுநல் லியதையக்கேட்டி,

இ-ள், விரிந்தோங்கும் வேதாந்தப்பொருளை யுணர்ந்த சயிமினி முனிவனே எல்லாரையுங் கடைத்தேற்ற வேண்டிக்கர்த்தாவாகிய பரமசிவன் எப்போதும் ஆனந்த நடனம் புரிந்தருளும் சிதம்பர தலத்தில் வாசமா யிருக்கின்றவர்கள் மனதறியாமல்வந்தபொல்லாதபாதகங்களுக்குப் பரிகாரம் எப்படியென்றால் கங்காதிமுதலிய தீர்த்தங்களெல்லாம்வந்து பணிகின்ற தாமரைகள் நிறைந்து விசால மாகிய சிவகங்கையென்னும் தீர்த்தத்தில் மூழ்கிறதேவிதிஅதில் தீர்த்த மாடுகிற முறைமையைச் சொல்லுகிறோம் கேளென்று வாதராயணர் வகுத்துரைப்பார்—எ-று, (௪௩)

தன்னிகராகியதில்லைத் தலத்துறைவோர் சிவகங்கை தன்னில் மூழ்கி, னென்ன விராப்போது தனி லடைந்தகொடுவினையாவு நீங்கியுய்வரன்னியதேயத்துறைவோ ரன்றடைந்து சிவகங்கை யாடப் பெற்றூற் பன்னுமறைமுனிவர்களும் பெறலரியமகேசர்பதம் பற்றிவாழ்வார்

இ-ள், தனக்குத் தானொப்பாகி விளங்குஞ் சிதம்பர தலத்தில், வாசமாயிருக்கின்றவர்கள் சிவகங்கையில் மூழ்கினால் முந்நாள் அறுபது நாழிகைக்குள் அறியாமற்செய்த பாவங்களெல்லாந் தீரும் மற்றொருதேசத்தி லிருந்துவந்து சிவகங்கையில்மூழ்கப் பாக்கியம் பெற்றவர்கள் வேதங்களையுணர்ந்து வேதவிதிப்படி நடக்குந் தபோதனர் களுக்குங் கிடைப்பதற்கரிய மகேசுரபதவியையடைந்து சுகமா யிருப்பார்கள்—எ-று, (௪௪)

திங்கள்சேய்புந்திகுரு புகர்காரிவாரத்துச் சென்று மூழ்கி, னங்கடைவினைஒன்றிரண்டு மூன்றுநான்கைந்தாறென் றறைந்தநாளிற், றுங்கவினையறுமருக்க வாரத்துச்சுடரருக்கன் றோன்றுமுன்னம், பொங்குமலர்சசிவகங்கை படியிலெழுநாள்வினைகள் போகுமன்றே,

இ-ள், திங்கள்-செவ்வாய்-புதன் - வியாழம் - வெள்ளி-சனி இத்தினங்களில் அத்தீர்த்தத்தில்மூழ்கினால் கிழமைகளின் வரிசைப் படிக்கு ஒருதினம், இரண்டுதினம், மூன்றுதினம், நான்குதினம், ஐந்துதினம், ஆறு தினங்களினுஞ்செய்த பாதகங்களெல்லாந் தீரும் ஆதிவாரதினஞ் சூரிய உதயத்திற்கு முன்பாக தாமரைக ளலர்ந்துவயங்கும் சிவகங்கையில்மூழகினால் இவ் வேழுநாட்செய்த பாதகங்களெல்லாம் போம்—எ-று, (௪௫)

வருலவுவளர்மதியின் முதற்பக்கத்தனக் கொருநா ளிரண்டாம்பக்கமோரிருநாண்மூற்பக்க முக்காண்மற்றையபக்க மொழியினிவ்வா, று ருநிறைபவுரணையி னளவறிக குறைமதியி னந்தாளிற், சீருலவுசிவகங்கையாடிஞெருதிங்கள்வினை தீருமன்றே

இ-ள். அழகுலாவிய மூன்றாம்பிறைப்பக்கத்து யாட்டியமி - நந்தை-திதியை-பத்திரை-திரிதியை-சயை-சவுத்தி இருத்தை-பஞ்சமி பூரணையென்றும் பேர்கொண்ட நந்தைமுதலிய வைந்துங்கூடினது அறிய பட்சம்இவ்விதமாகவே சஷ்டியும், ஏகாதசியும், நந்தையும், சப்தமியும், துவாதசியும், பத்திரை-அஷ்டமியும, திரயோதசியும, சயை-நவமியும், சதுர்த்தசியும், இருத்தை - தசமியும்,பவர்ணையும்,பூரணையிக்தவிதமாகவே அமாபட்சத்திற்கும்வரும் இதில் இந்த சிறியபட்சத்தில் முதற்பட்சம் நந்தையாகிய பிரதமையிலும் இரண்டாம்பக்கத்துப் பத்திரையாகிய சப்தமியிலும் மூன்றாம்பட்சம் சயையாகிய திரயோதசியிலும் இவ்வகையே அமரபட்சத்திலுஞ் சிறப்போங்குஞ் சிவகங்கையில் மூழ்கினால் ஒருமாதம்வரையிற் செய்தபாவங்கள் தீரும்—எ-று. (௬௬)

வியன்மதியக்குறைபக்கத் தட்டமிக்குச்சதுர்த்தசிக்கு விதிபாதத்துக், குயர்திங்கட்பிறப்புகளுக் காதிரைநாட்கொவ்வொன்றுக் கோரோராமாத, மிபல்புறமைப்பசிமாதப் புகுதிக்குமூத்திங்க ளெழிற்றையாடி, யயனமிவைக்காறு திங்களுருவினையகலு மக்கீராடல்.

இ-ள். பிரகாசம்பொருந்திய சந்திரன் தேய்பிறைப்பக்கத் தட்டமி-சதுர்த்தசி-வதிபாத மாதப்பிரவேசங்களில் மாதமாதம்வரும் திருவாதிரைகள் இத்தினங்களில் ஒவ்வொருதினமும் மூழ்கினால் ஒருமாதஞ்செய்த பாவங்கள் தீரும் ஐப்பசிமாத முதலில் மூழ்கினால் மூன்றுமாதஞ்செய்த பாவந்தீரும் உத்தராயணமாகிய மாதமுதலில மூழ்கினால் ஆறுமாதஞ்செய்த பாவந்தீரும் தெக்ஷணாயனமாகிய ஆடிமாதமுதலில்மூழ்கினால் அந்த ஆறுமாதஞ்செய்த பாவங்கள்தீரும்—எ-று.

சித்திரைத்திங்கட்புகுதி மார்கழியாதிரைமாசித் திருமகத்தின்,மெய்த்தடத்தின்மூழ்கி லொவ்வொன்றுக் கோராண்டின் வினைகளிக்கும், தத்தமனெஞ்சறியாது செய்வினைக்குச்சாந்தியிவை தலத்தோய்தத்தஞ், சித்தமறி வல்வினைக்கு வயிரவன்மூவிலைநுதியிற் சேர்வாரன்றே.

இ-ள். சித்திரைமாதப் பூரணை மார்கழியிற் றிருவாதிரை-மாசிமகம் இம் மூன்றுதினங்களிலும ஒவ்வொருநாள மேன்மைபொருந்திய சிவகங்கையிலமூழ்கினால் ஒருவருடமனமறியாமற்செய்த பாவங்கள்தீரும் சிதம்பரதலத்தில் அறியாமற்செய்த பாவங்களுக்குச் சிவகங்கையில் மூழ்குவதே பரிகாரவிதியாம் தபோநிதியாகிய சயிமினியே மனமறிந்துசெய்த பாவங்களுக்கெல்லாம் காலவயிரவரது சூலமுனையினால் அவதிப்படுகிறதே சாந்தி—எ-று, (௬௭)

சிதமலர்ச்சிவகங்கை சிவனுருவேயென்றுதோர் தெண்ணீரென்னும்
பாதகர்நான்முகன்வாழ்நா ளளவுநிரையக்குழியிற் படிவார்சிந்தை
போதினர்கள்சிவசிந்தை யுரைத்தவரேபூசனைக ளுவந்துசெய்த
வாதிதனைப்பூசித்த வாமுண்மையறைந்தனமயா மற்வான்மிகவோய்.

இ-ள். குளிர்ச்சிபொருந்திய தாமரைமலர்கள்வளர்க்கும் சிவகங்கையைப் பரமசிவருருவமென்று எண்ணாமற் றண்ணீரென்று எண்ணியபாதகர் நான்முகனாகிய பிரமதேவனது ஆயுளுள்ளவளவாகவும் மகாரௌரவாதிநரகத்தில் வாதனைப்படுவார்கள் கங்கையை சிந்தனைசெய்தால் சிவனை சிந்திக்கவேண்டியபலமட்டாக்கும அக் கங்கையைப் பக்தியுடன் பூசைசெய்தால் ஆதிகர்த்தாவாகிய பரமசிவனைப் பூசைசெய்ததாகும் உனக்கு நான் முன்சொல்லிய மகிமையெல்லாமநிச்சயமெனறும மிகுந்த ஞானமுண்டாகிய சயிமினிமுனிவனுக்கு வியாசபகவானருளிச்செய்தார்—எ-று. (சகூ)

உடலிடைவெம்பிணிபகலக் கல்வியொடுசெல்வமெலா முறச்சிறந்த
மடமகளிர்புணர்ச்சிபெற யாவருந்தன்வயதாக மனங்கொண்டுநத்
தடமதனின்மூழ்கினு லவைவெய்துங்காவடியிற ருங்கியனபா
னைடமருவினோரடிக்கோர் பரிமேதமகப்பயனை யண்ணிவாழ்வார்.

இ-ள்- தேகத்திலுள்ள கொடிய வியாதிகள்தீரவும் வித்தைகள் செல்வங்கள் போகபாக்கியங்கள் அடையவும அழகிய மங்கையரின்போகமும் சகலசனங்களுந் தன்வசமாகவேண்டுமென்றும் எண்ணி மனவுறுதியோடும் அச் சிவகங்கையில்மூழ்கினுல் யாவுஞ் சித்தியாகும் சிவகங்காதீர்த்தத்தைப் பக்தியோடும் காவடிகட்டி யெடுத்துக்கொண்டு நடந்தால் ஓரடிக்கு ஒரு அஸ்வமேதயாக பலன்பெற்று சுகமாயிருப்பார்கள்—எ-று, (ருo)

படிபுகழ்ச்சிவகங்கைப் பானீயந்தனைப்பானம் பண்ணிச்செல்வோ
ரிடிமுரசக்கொடியபடைச் சமர்களத்திலேற்று லிவரேவெல்வர்
கொடியவிலங்கிராகதர்பேய் பாரிடங்களிங்கிழையா குறிக்கிலாயு
முடிவினியற்பதிகொண்டாங்கதக் கீர்பருகினமகேசாயத முத்திசேர்வார்,

இ-ள், உலகமெல்லாந் திசைக்கு மகிமையைப்பெற்ற சிவகங்காதீர்த்தத்தைப் பானஞ்செய்தது இடிபோலப் பேரிகைசத்த முழங்குஞ் சதுரங்கபலத்துடனும் பயங்கரமாகிய ரணரங்கத்துக்குப் போயினுஞ் ஜெயம்பெற்று வருவார்கள கொடுமைபொருந்திய சிங்கம்-புலி-கரடிம் முதலிய மிருகங்களின் உபாதியும பூதபேதபசாசுஇராக்கத ருபாதியு முண்டாகாத புவனத்தில் தீமைகளை நினைக்கவொட்டாது வேறுகிராமங்களில் பட்டணங்களில் இருப்பவர்கள் அந்தியகாலங்களில சிவ

கங்காதீர்த்த மெடுத்துப்போய் உட்கொண்டால் மஹேஸ்வர பதவியா
கிய மோக்ஷம்பெறுவார்கள்—எ-று. (௫௧)

அன்னதலத்தார் தலயம் பதியாதவிருந்தாரே யங்கீர்த்தன்றன், மன்னி
யபூசனையோருங் கீர்ப்பதமத்தோய மஞ்சனத்தாற், றன்னிகரான்சி
வார்ச்சனையை நாடோறும்புரிவோர் ற்றுயர்களசெய்த, வின்னலுறுமப
ராத மென்பனவெல்லாம்பொறுப்ப னிமையோர்நாதன்.

இ-ள், அம்பரதலத்தில் வாசமாயிருப்பவர்களும் மற்றவூர்க
ளிலுள்ள பட்டணங்களில் இருப்பவர்களும் சிவகங்காதீர்த்தத்தினால் பக்
தியுடன் சிவபூசைசெய்தால் அவர்கள் செய்யும் கருமம் அன்றியும் அப்ப
ரிசுத்தமாகிய தீர்த்தத்தினால் தினந்தோறும் சிவனுக்கபிஷேகஞ்செய்
தால் சிவத்துக்கென்ன அபசாரஞ்செய்திருந்தாலும் அக்குற்றங்களை
யும் குறைகளையும் பரமசிவன் பொறுத்தாட்கொள்வார்—எ-று. ()

தென்புலத்தார்தமைநோக்கி யங்கீராற்றருப்பணங்கள் செய்தாலு
கிற்,றன்பெரியமூவகையிற் சுற்றமெலாநற்கதியிற் சார்ந்துவாழ்வ,ரின்
பமுறப்பொருள்வேண்டி யாடினலங்கவைக ளெய்துமென்று, மம்பு
விதிச்சையுற மூழ்கினன்மகேசாபதம் வாய்க்குமன்றே,

இ-ள், சிவகங்காதீர்த்தத்தில் பிதுர்தேவதைகளைக் குறித்துத் த
ர்ப்பணங்கள் செய்தால் தாய்வமிசத்தார் தந்தையின் வமிசத்தார்
பெண்சாதிவமிசத்தார் இம்மூன்று வமிசத்தாரும் மற்ற பந்துசனங்க
ளும் மேலாகிய பதவியைப்பெற்று வாழ்வார்கள் சுகமும் பொருளும்
வேண்டித் தீர்த்தமாடினால் அக்காரியங்களுஞ் சித்திக்கும் இப்பூமியி
ல் ஒருகாரியங்களையும் ஆசிக்காமல் சிவதுதிசெய்துகொண்டு மூழ்கி
னால் மஹேஸ்வரபதங் கிடைக்கும்—எ-று, (௫௩)

எங்குமிடையறநிறைந்த பரம்பரனோர் தீர்த்தவடிவெய்திநின்ற,பொ
ங்குபுனற்சிவகங்கை யதன்பெருமையாவரோ புகலற்பாலர், திங்கள்
வளர்பக்கத்திற் சதுர்த்தசியிற்சனிவாரஞ் சேரின்மூழ்கிற், றங்கண்ம
னநினைத்தவெல்லாங் கூடிவரும்பெருவினையுந் தணந்துநீங்கும்,

இ-ள், எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருக்கும் பரமசிவனே தீ
ர்த்தசொரூபமாகையால் அலைகளுடன் பிரகாசிக்குஞ் சிவகங்கையின்
மகிமாதிசயத்தை யாவராலுஞ் சொல்லிமுடியாது வளர்பிறைப்பக்கத்
துச் சதுர்த்தசியுஞ் சனிவாரமுங்கூடின புண்ணியதினத்தில் மூழ்கினால்
அவர்கள் மனதில் நினைத்தகாரியங்களெல்லாம் கைகூடிக் கொடியமாபா
தகங்களெல்லாந் தொலைந்துபோம்—எ-று, (௫௪)

திங்கள் குருமங்கலவா ரங்களினவைகலைமதியக் தேயும்பக்கத், தங்கண்முடிவரும்பருவல் கூடிடநாளிற்றிரவி யரவநுங்கிப், பொங்குதன மிக்கதினச் சித்திரத்துப் புண்டரிகப் பொய்கையடிற், றங்குகெடும் பெருவினைக ளுள்ளவெலா மொழிந்துதவத் தலைவராவர்,

இ-ள், திங்கள் செவ்வாய்க்கிழமைகளில் தேய்பிறைபக்கத் தமாவாசையாயினும் அல்லது வளர்பிறைப்பக்கத்துப் பூரணையாயினுங்கூடிய தினங்களிலும் சந்திரகிரகண சூரியகிரகண அத்திராபவுர்ணமிஇப்புண்ணியகாலங்களிலும் சிவகங்கையிற் றீர்த்தமாடினுல் நிலைமையாயிருக்குங் கொடியபாதகங்களெல்லாந்தொலைந்து தபோதனர்களாவார்கள்—எ-று, (௫௫)

வந்துபடிந்தோர்விடுதத வினைகளறக்கங்கைமுதன் மாதீர்த்தங்க,டந்தமதுசுருதிகளாற் சிவகங்கைதினம்படிந்து சார்ந்துநின்ற, வந்தமிலாநன்குதவு மாசிமகத்தத்தீர்த்த மனைத்தும்வந்து, முந்துநெறி தமக்குரிய சத்திமுழுதுடன்மூழ்கி முதன்மையெய்தும்,

இ-ள், வந்து தோய்ந்தவர்களது வினைகளையேற்று அவ்வினைகளைத் தீர்த்துக் கொள்ளும்பொருட்டு கங்கைமுதலாகிய தீர்த்தங்களெல்லாம் தெய்வப்பெண்களுருவாகிச் சிவசங்கையில் மூழ்கிப் பரிசுத்தராகும் நிமித்தம் நாள்கடோறு மூழ்குவார்கள் நித்தியமாகிய நன்மையைத்தரும் மாசிமகத்தில் சகல தீர்த்தங்களெல்லாம வந்து பிரமத்துடன் சத்திசொரூபமாகிமூழ்கிப் பாபபரிகாரஞ்செய்துக்கொண்டு மேன்மையைப்பெறும்—எ-று, (௫௬)

இவ்வண்ணமுறுமாசி மகத்தரியசிவகங்கை யெய்திமூழ்கின், மைவண்ணவினைநீங்கிச் சிவத்தடைவர்மன்றுடையான் மகிழ்சேவைக்கும், பொய்வண்ணமொழித்ததிரு வத்தயாமம்போலப் புகல்காலத்துண், மெய்வண்ணமுறுமாசி மகத்தந்தீராடன் மிககதம்மா,

இ-ள், இத்தன்மையாய் மாசிமகத்தில் அரிதாகிய சிவகங்கையில் வந்துமூழ்கினுல் அந்தகார உருவமாகிய மகாபாதகங்களெல்லாந்தீர்ந்து சிவரூபமாவார்கள் திருச்சிற்றம்பலத்திற் சபாபதியை ஆறுகாலத்திலும் தரிசனஞ்செய்தால் சனனமரணாதிகள் நீங்கும் மேலும் இரவில் அர்த்தஜாமசேவை செய்வதினுல் எவ்வகையுத்தமமோ அவ்விதம் மேன்மையுற்ற மாசிமகத்திற் சிவகங்கையில் மூழ்குதல் மிகுகியும் உத்தமம்—எ-று, (௫௭)

யாரேனுந்தன்கண்மன வறியாமற்செய்தவினை யெல்லாமல்லற், பாரேழ்ஞ்புண்டரிகத் சிவகங்கையாடினுற் மற்றற்றேகுஞ், சீரோதசி

மினிவ வுரைத்தனவகளோவரையமிலை தெரிதி யென்றான், காரேறுகண்டத்தான் பெருமையெலாம்புராணத்தாற் காட்டுமேலோன்.

இ-ள். ஏழுதீவினிலுள்ள யாவரேனும் மனதறியாமற்செய்த பாவங்களெல்லாம் தாமரைநிறைந்த சிவகங்கையில் மூழ்கினவுடன் பற்றற்றகலும் சிறப்போங்கிய சயிமினி முனிவனே யாம் சொல்லிய சிவகங்கைமகிமை முதலியவெல்லாம் உண்மையானபொருள் இதில் ஒருசந்தேகமுமிலலை நன்றாகத் தெளிந்துகொள்ளென்றும் சிவபுராணம் பத்திலுள்ளும் மற்ற எட்டுப்புராணத்திலுள்ளும் நீலகண்ட முடைய பரமசிவன் மகிமைகளெல்லாந்தெரியச்சொன்னேனென்றும் வேதவியாசர்திருவாய்மலர்ந்தருளினரென்று சூதபுராணிகர் நயிமிசாரணியவாசிகளாகிய சவுனகாதிமுனிவர்களுக்குத் திருவுளம்பற்றினர்—எ-று. (௫அ)

---

நியமச்சருக்கமுற்றும்.

பாயிரம் உட்படச் சருக்கம் ஐந்துக்குத் திருவிருத்தம்—௪௧௪.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது

# சோமநாதச்சருக்கம்.

---

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்,

சயமிகுந்தமெய்த் தவருறைதில்லையந் தலத்திடை யுறைவோர்தந், நியமமுமுள்ளன கூறினமாறிலா நெடுவரைச் சிலைதாங்கும், புயமுயங்கிய புராரியெம்பராபரன் பொருள்கவர்ந்தெடுத்தோர்தம், பயமிகுந்த வெங் கொடுவினைப்பெருமையின் பரிசினைப்பகர்கின்றாம்.

இ-ள். காமாதி அந்தரங்க சத்துருக்களாறையுஞ் ஜெயித்த மகாதபோதனர்கள்வாழும் சிதம்பரதல வாசஞ்செய் கின்றவர்கள் நடந்துகொள்ளும் நியமத்தைச்சொன்னோம் இனிமேல் எப்போதும் அழியாத பொன்மலையாகிய மகமேருவைச் சிலையாக வளைத்து முப்புரத்தை வென்ற பரமசிவனுடைய நிதிகளைத் திருடினவர்கள் அநுபவிக்கும் பயங்கரமாகிய எமதண்டனையும் பின்னுமவர்கள் பூலோகத்தில் சென்ற

னையெடுத்து வாதனைப்படுவனையுஞ் சயிமினி பகவானுக்கு வியாசம
காரிஷி சொல்லுமுறைமையாகச் சூதபுராணிகர் சவுனகா திமுனிவர்க
ளுக்குச் சொல்லத்தொடங்கினார்—எ-று. (௧)

சஞ்சிதத்துடன்வரு வினைகடிந்திடுஞ் சயிமினிகரங்கூப்பி
யஞ்சலித்துளங் குழைவுறப்புளகமோ டமர்ந்துதேசிகனுண்மை
நெஞ்சமுற்றிட விருந்துழியருந்தவ நிருபனும்மிவன்றன்மேல்
விஞ்சுமற்புதநெஞ்சம்வைத்தினமு மெய்ந்நெறிவிரிக்கின்றான்.

இ-ள். பழைமையாய் அநேகஞ் சனனத்திற் செய்த சஞ்சித வி
னைகளும் முற்ஜனனத்திற் செய்த பிராரத்வ வினைகளும் இப்பிறப்பிற்
செய்யும் பாவமாகிய ஆகாமியவினைகளும் தொலைந்து புண்ணியசொ
ரூபமாகிய சயிமினி முனிவன் கைகுவித்து அஞ்சலி செய்துகொண்டு
மனமுருகி மயிர்க்குச்செறிந்து ஞானகுருவாகிய வேதவியாசர் உபதே
சித்தபொருளை மனதில் தரிக்கச்செய்துகொண் டிருக்கின்றபோது த
போதனர்களுக்கு அரசனாகிய வாதராயணருஞ் சயிமினிமுனிவன்மே
ல் அதிசந்தோஷத்துடன் விருப்பங்கொண்டு பின்னும் மேன்மையா
கிய சிவரகசியப்பொருளை விரித்துச்சொல்லுகின்றார்—எ-று. (௨

அத்தலத்தறி யாதுசெய்வினையறு மந்நெறியுரைத்தோமுன்
வைத்தவற்றினு நீக்கரிதாகிய வல்வினையாதென்னி
னித்தவானவர் வேதியர்பொருள்கடந் நெஞ்சறியார்கொண்டு
துய்த்தகள்வர்வல் வினையதுசாந்தியாற் றொலைக்கரிதாமன்றே

இ-ள். சிதம்பரதலத்தில் மனதறியாமற்செய்த பாவங்களைத் தீர்
த்துக்கொள்ளு முறைமையை முன்னமே சொன்னோம் மகாதவங்கள
செய்தாலும் நீக்குவதற்கரிய பாதகமேதென்றால் நித்தியமாயிருக்குங்
கடவுளினது திரவியங்களையும் வைதீகப்பிராமணர்கள் பொருள்களையு
ம் மனதறியாமற் கைக்கொண் டநுபவித்த திருடர்களுடைய கொடிய
பாதகங்கள் ஜெபதப ஓமாதிசாந்திகளினால்தீருவது அருமை—எ-று,

கோதில்வேதியர் பொருளறியாமையாற் கரவினிற் கொணர்ந்தோர்
கள், போதநோக்கதிற் பதின்மடங்கதனோடு பொருள்கொடுத்தறிவி
ல்லேன், நீதுநீர்பொறு மெனவணங்கலுமவர் சிந்தையிற்களிகூர்ந்திப்
பாதகம்பொறுத் தோமெனிலவ்வினை படர்ந்திடாதிடைந்தோடும்.

இ-ள். குற்றமற்ற பிராமணர்களது திரவியங்களை மனதறியாமற்
றிருடிக்கொண்டவர்கள் தெரியாமல் எடுத்துக் கொண்டோமென்று பி
ன்பு துயரப்பட்டுத் தானபகரித்துக் கொண்ட பொருளுக்குப் பதின்
மடங்கதிகமாக வதனுடன் சேர்த்துக் கொடுத்து நான் மனதறியாமற்

செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டுமென்று அவர்கள்மனமிரங்கப்பண்ணுந் துபசாரஞ்செய்வதினால் அவர்கள் நீ செய்தகுற்றத்தைப் பொறுத்தோமென்று சொல்லி மனமகிழ்வாராயின் அந்தக் கொடியபாதகந் தொடராமலோடிப்போம்—எ-று (௪)

அல்லதவ் வினை யாற்றவோ ராறிலை யறிவிலா ரறிந்தங்க
மல்லல்வேதியர் பொருள்கவர்ந்தாரெனில் வருமருவினையிட்ட
மொல்லையந்தணர் மகிழ்தரக்கடவுள ருவப்புறப்பலபூசைத்
தொல்லையாகம முதலியபுரியினுந் தொலையுமோதொலையாவாம்.

இ-ள். அகல்லாமல்பிராமணர்களுடையபொருளை எடுத்துக்கொண்ட பாவந் தீர்த்துக்கொள்ள வேறேவழியில்லை ஆகையினால் விவேகமில்லாதவர்கள் மனமறிந்து வல்லமையினால் அந்த ப்ராமணர்களுக்கும் தெய்வங்களுக்கும் மனங்களிக்க எவ்விதமாகப் பூசித்தாலும் யாகாதி கிருத்தியங்கள் செய்தாலும் அந்தப்பாதகந் தீருமோ தீராது—எ-று. (௫)

பொறையுஞானமும் புலப்பகைசாடலும் புனிதன்மே லன்புங்கொண், டறையுமேன்மைய ராயினுங்கரவினி லணுவள வறியாமற், குறைவிலாவிடைக் கடவுடன்பொருடனைக் கொண்டவல்வினை தீர்க்கு, முறைமையென்றுமுண் டாகுமோநரகிடை மூழ்குதன்முறையாமால்.

இ-ள். பொறுமையும் அறிவும் உடையவராய் காமக்குரோதாதி முதலிய அந்தரங்க சத்துருக்களை வெல்லும் உபாயமும அடைந்து பரமசிவனிடத்திற் பிரியமாகிய பக்தியோடு சிவனுமங்களைத் துதிசெய்யும்பெரியோர்களாயினும் எங்கும்வியாபகவானாகிவிளங்கும்வெள்விடையோனாகிய பரமசிவனது திரவியங்களில் மனமறியாமல் அணுவளவாகிலும் திருடிக்கொண்டால் அச்சிவத்துரோகம் கொடியபாதகத்துக் கெப்போதும் பரிகாரமில்லை ரவுரவாதி நரகங்களில் கிடந்துவாதனைப்படுவதே விதி—எ-று. (௬)

அளவிலாச்சிவ பரம்பரன்பொருளினி லணுவளவறியாமற்
களவுசெயதவர் மட்டலவன்னது காண்பவர்தாமுமபோ
யுளமடுக்குறு நரகிடைமூழ்குத லுண்மையேயிதுதனில
வளமிகுந்தசோ ரருங்கதைகேளென வகுத்துரைசெய்கின்றான.

இ-ள். இவ்வளவென்றெண்ணப்படாத மகிமையையுடைய பராபரவஸ்துவென்னும் சிவபெருமானது திரவியங்களை மனமறியாமல் அணுவளவேனுந் திருடினவர்களுக்கு மாத்திரமல்ல அதைப் பார்த்துக்கொண்டிருந்தவர்களும மனநடுங்கும்படியாகிய பயங்கரத்தையுடைய நரகங்களில்மூழ்கி வாதனைப் படுவார்கள இதுநிச்சயம் இவ்வா

றாக நடந்த கதைகளில் மிகுதியும் வளமையுள்ளகதை யொன் றுண்டு அவ்வரிதாகிய கதையைக்கேளென்று வியாசபகவான் வகுத்துச் சொல்லத்தொடங்கினார்—எ-று. (எ)

சீதநுண்டுளித் தரங்கமேலைத்திசைச் செழுங்கடற்றீரத்து
மாதவம்பெரி யோரிமையோர்கிளை வழுத்தரும்பரஞானச்
சோதிநாயக னிடைவிடா துறைதருஞ் சோமநாதப்பேராற்
பூதலந்தனிற் சிவபதியுளதெனும் பொற்பதியுளதம்மா.

இ-ள். பூமண்டலத்தில் குளிர்ச்சியைத்தருந் திவலைகளைத்தூவுகின்ற அலைகளையுடையமேலைச்சமுத்திரக்கரையில் மகாதபோதனர்களும் பெரியோர்களும் தேவகூட்டங்களும் துதிப்பதற்கரிதாகி விளங்கும் ஞானச்சுடராகிய பரமசிவன் எப்போதும்பிரசன்னமாகிச்சோமநாதனென்னும் பெயரை உடையவராய் வாசமாயிருக்கும் ஒப்பற்ற பொன்மயமாகிய சிவஸ்தலம் ஒன்று உண்டென்று வாதராயணர் சொல்லி யாச்சரியமுற்றார்—எ-று. (அ)

அந்திவான்மதி மிலைச்சியபரம்பர னணிவிழாவொலிவாச
மந்தமாருதம் வந்தசைபந்தரின் மாளிகைமணத்தோதை
சந்தனாசல முலையவர்நடமிடுஞ் சரணநூபுரவோசை
சிந்துவார்திரை வாரிதிரவமுஞ் சிறிதெனச்சேணோங்கும்

இ-ள். செவ்வானம்போன்ற சடாமகுடத்தில் மூன்றாம்பிறையைத்தரித்த சோமநாத சுவாமியினது அலங்காரம் பெற்ற திருவிழாவில் ஐந்துவித வாத்தியங்களின்ஓசையும் பரிமளத்தோடு வீசுந் தென்றற்காற்றினால் அசையும் மலர் மாலைகளினால் அலங்காரம் பெற்ற பந்தர்களோட்ட மேலணி மண்டபங்கள் பொருந்திய மனைகளிற் செய்கின்ற கலியாணவோசையும் சந்தனமலைக் கிணையாகிய தனபாரங்களையுடைய கணிகையர்கள் நாட்டியஞ் செய்யும்போது தண்டை பாதசரமுதலிய ஆபரணங்களின் ஓசையும்கூடி அலைகளைவீசுஞ் சமுத்திரத்தின் ஓசையைச் சிறிதாகவடக்கி ஆகாயவரையில் மிகுந்து எழும்—எ-று. (௯)

மறைகளுள்ளன வாதலாலயன்பத மாகமம்வளர்நீதித்
துறைகளின்புற விளங்கலாற்றுலக்கினைச் சிவபதமெனத்தோற்று
நறைமலர்த்திரு வாழ்தலானாரண னற்பதம்போலாகு
நிறையவானவர் செறிதலாற்றுறக்கமு நிகர்க்குமப்புரமன்றே

இ-ள். நான்குவேத பாராயணங்களும் வேதவிதிப்படி யாகாதிகளும் வளர்தலினால் சத்தியலோகம் போலவும் சிவாகமவிதிப்படிச் சி

வதருமம் சிவார்ச்சனைகள் மென்மேலும் விளங்குதலினால் ஒப்பில்லாத
கயிலாசம்போலவும் சகலசெல்வங்களும் நிறைந்து இலட்சுமிபொருந்
தியிருத்தலான் மேன்மை பொருந்திய வைகுந்தம்போலவும் தேவர்க
ளிடைவிடாமல் நிறைந்து வாசமாயிருப்பதினால் அமராவதி புரம்போ
லவும் அந்த சோமநாதபுரம் பிரகாசித்துக்கொண்டிருக்கும்—எ-று. ()

அறந்தயங்கலி னிலைபொறுமலைமக ளனையதுபுனைசெல்வத்
திறந்தயங்கலிற் றிருமகள்புரைவது திகழ்தருகலைகன்னூ
னிறந்தயக்கலி னளவறுகலைமக ணிகர்ப்பதுபொறையுந்தன்
புறந்தயங்கலிற் புவிமகளன்னதப் புரத்தையார்புகழ்கிற்பார்.

இ-ள். முப்பத்திரண்டு தருமங்களும் நடப்பதினால் மலையரசன் மகளாகிய பார்வதி தேவியைப் போலவும் நிலைமையாகியும் அலங்காரமும் அயிஸ்வரியமும் விளங்குதலால் இலக்குமிதேவியைப்போலவும் எப்போதுஞ் சகல சாத்திரங் களும் பிரகாசிப்பதால் சரஸ்வதிதேவியைப்போலவும் பொறுமைமுதலிய நன்மைவிளங்குதலால் பூமிதேவியைப்போலவும் பிரகாசிக்கும் அந்தச்சோமநாதபுரத்தை யாவராலும் புகழமுடியாது—எ-று. (௧௧)

பல்வளங்களும் படைத்தலாண்டமர்ந்திகழ் பங்கயாசனன்போலுஞ்
செல்வமல்குவித் துயிர்பலவளர்க்கலாற் றிருநெடுமாலேய்க்கும், வல்வி
னைத்தொகை மாய்த்தருள்வழங்கலான் மழுவலான்றனையொக்கு, மெ
ல்வளர்ந்தெழு மாடமாளிகைகளா லிலங்கியபுரமம்மா,

இ-ள். பற்பலவித வளப்பங்களை யுடையதாயிருக்கலினால் இதழ்விரிந்துபிரகாசிக்குங் கமலாசனனாகிய பிரமதேவனைப் போலவும் அயிஸ்வரியங்களைக்கொடுத்துச் சகலஜீவான்மாக் களையும் இரட்சிப்பதினால விட்டுணுவைப் போலவும் தீராதவல்வினைகளைத்தீர்த்து ஆட்கொள்வதினால் கரத்தினில்விளங்கும் மழுவாயுதத்தைத் தரித்திருக்கும் உருத்திரனைப் போலவும் சூரியமண்டலமளாவிப் பிரகாசிக்கும் மாடமாளிகைகள் விளங்குஞ் சோமநாதபுரம்—எ-று. (௧௨)

பிருகுமாமுனி சபித்தலினடைந்தவெம் பிறப்புகளோர்பக்தின்
றிருவிளங்கிய விதுகுலத்திடைவசு தேவன்பாலுதயஞ்செய
தருணுமாயவன் புதல்வரோடத்தலத் தடைந்துபவிர்ந்தின்ப
மருவுதன்பெரும் பதம்புகுந்தானெனில் வழுத்தலாம்படித்தன்றால்

இ-ள். பிருகுமாமுனி சாபத்தினால் விட்டுணுபத்து அவதாரமெடுத்ததில் இலக்குமிகரம் பொருந்திய யாதவகுலத்தில் வசுதேவன்மகனாகப்பிறந்த கிருஷ்ணதேவன் அநேகம்பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் அத் தலத்துக்குவந்து சோமநாதனைப்பூசித்து மாறிடவழிவுநீங்கி

த் தம்முடையபதவியாகிய மகிமையைப்பெற்ற வைகுந்தஞ்சேர்ந்தானென்றால் அத்தலத்தின்மகிமாதிசயத்தைத் துதிக்கமுடியாது—எ-று.

அளந்துகாணவு நாவினாற்பகரவு மறிஞர்க்குமரிதான
வளம்பெருஞ்சவு ராட்டதேயத்திடை மறைநெறிச்சிவநீதி
துளங்கலொன்றிலாப் பொற்பிரகாசமாஞ் சோமநாதந்தன்னில்
விளங்குகார்த்திகைத் திங்களிற்கார்த்திகை விழாநடக்கவன்றே,

இ-ள். இவ்வளவென்று அளவுபடுத்திக்காணவும் வாக்கினாற்சொல்லவும் மகா விவேகிகளாகிய தபோதனர்களுக்கும் அரிதாகிய லட்சுமிகரம்பொருந்திய சவுராஷ்டதேசத்தில் வேதமார்க்கமுஞ் சிவாகமமுறைமையுந் தவறாமல் அழகுடன் பொன்மயமாக விளங்குஞ் சோமநாதத்தலத்திற் பிரகாசிக்கும்படிக் கார்த்திகை மாதத்திற் றிருக்கார்த்திகை விழா நடக்கும்போது—எ-று. (௧௪)

நவ்விகங்கிய செங்கையோனை நச்சனை நயந்துமுப்போதுஞ்செய்
செவ்வியோன்சிவ சன்மனென்பவன்சிவ சிந்தையந்தணர்கோமா
னெவ்விழாவினு நல்விழாவிது வென வேத்துகார்த்திகைத்திங்க
ளவ்விழாவணி யிறைஞ்சுவான்பராபர னன்போடணைவுற்றான்

இ-ள் மானை செந்தாமரைபோன்ற கரத்தினிற்றரித்து விளங்கும் பரமசிவனை வைதிகப்பிராமணர்களில் அவதரித்து மூன்றுகாலங்களிலும் பூசைசெய்யும் சிவதருமசாலியாகிய சிவசன்ம னென்னும் ஓர் உத்தமன் சிவத்தியான மறவாதவன் எத்திருவிழாவினும் இக்கார்த்திகைத்திருவிழாவே உத்தமமானதென்று புராணங்களிலெல்லாம் தோத்திரஞ்செய்யத்தக்கதாகிய கார்த்திகைதீப ஆராதனையைத்தரிசனஞ்செய்யும்பொருட்டாய்ச் சிவபக்தர்கள் கூட்டத்துடன் அச்சோமநாததலத்திற்குவந்தான்—எ-று, (௧௫)

குடகிசைக்கடற் படிந்தருட்டானங்கள் கொடுத்துமையொருபாகக்
கடவுடன்பதஞ் சோமனாதத்திடைக் கருத்துறப் பணிந்தேத்தி, விட
ரும்பரி வுடன்மகிழ்ந்துறைபவன் விளங்குகார்த்திகை நன்னாட், டொ
டருமந்தியிற் றீபகாலத்தணி துற்றவாலயஞ்சேர்ந்தான்,

இ-ள், மேலைச்சமுத்திரத்தில் விதிமுறைமையாகத் தீர்த்தமாடிச் சிவார்ச்சனைமுடித்துக்கொண்டு இரக்கத்துடன் தானதருமங்கள் செய்து வாமபாகத்திற் பார்வதிதேவிவிளங்கும் பரமசிவனது பாதாரவிந்தங்களில் பக்தியோடு தெண்டனிட்டுத் துதித்துநீங்காத அன்புடன் சந்தோஷகரமாகி யிருக்கின்ற சிவசன்மன் பரமசிவனுக் குரியதாகிய திருக்கார்த்திகையின் அந்தி தீபாராதனைவேளையில் அலங்காரம்பெற்ற சிவாலயத்துக்குள்வந்தான்—எ-று, (௧௬)

*சென்றுசந்நிதி சிறிதணித்தாகமுன் சேர்ந்தவன்பர்கள்கூட*
*நின்றிறைஞ்சுயவ் வெல்லையிலிங்கிவ னிசற்பதோர்சிவற்கன்பன்*
*தன்றுணைக்கலைச் சோமசன்மப்பெயர் தரித்தருணெறிபென்றுக்*
*துன்றுவேதிய னொருவனவ்வெல்லையிற் றொழுதருகுறநின்றான்.*

இ-ள். ஆலயத்துட்சென்ற சிவசன்மன் நெருங்கிய சந்நதியிற் போய்ச் சிவசன்னிதானத்தின்சமீபத்தில் அடியார்கள்கூட்டத்துடனின்று தரிசனம்செய்யும்போது சிவசன்மனுக்கிணையாகிய சிவபக்தன் சகலசாஸ்திரங்களிலுந் தனக் கிணையில்லாதவன் சைவமார்க்கமும்இரக்கமுமுடைய சோமசன்மனென்னும் ஓர் வைதீகப்பிராமணன் அவணெழுந்தருளியிருக்குஞ் சோமநாதனைப் பணிந்து சிவசன்மனது பக்கத்தில்வந்துநின்றான்—எ-று. (௧௭)

*வருநெருக்கினச் சோமசன்மன்றிகழ் வடிவுபட்டெரிகின்ற*
*திருவிளக்குநெய் யகலொடுவீழ்ந்தது தெரிந்து கண்டிலனன்றே*
*னருகுகண்டுநிற் குஞ்சிவசன்மனென் றறைந்திலன்றிருநாளு*
*மொருவவிங்கிவர் தந்தமக்குரியன வுறைவிடந்தனையுற்றார்.*

இ-ள். வெகுஜனநெருக்கத்தினாற் சோமசன்மனது அலங்காரம் பொருந்திய தேகம்பட்டு எரியுந் திருவிளக்கு நெய்யுடன் கீழேவிழுந்தது அவற்றைச் சோமசன்மன் திரும்பிப்பார்த்தறியான் பக்கத்திலிருக்குஞ்சிவசன்மன்கண்டு சோமசன்மனுடனே சொல்லவுமில்லை பார்த்தவனாகிலும் விழுந்தவிளக்கையெடுத்து ஏற்றவுமில்லை அப்போது கார்த்திகைத்திருவிழாவும் நிறைவேறிவிட்டது பின்னர் அவர்கள்வாசமாயிருக்கும் தலம்போய்ச்சேர்ந்தார்கள்—எ-று. (௧௮)

*சிறிதுநாட்கழித் துடன்சிவசன்மனுந் திருவிளக்கதனெய்யார்*
*மறியவீழ்த்திய சோமசன்மனும்பொறை மாய்ந்தனர்மாய்ந்தந்தோ*
*செறியின்வானவ ராயினுந்தீய்த்தெழுந் தீச்சுரமென்றியாரு*
*மறிவலைந்தவிந் தாடவியிடத்தடைந் தலகையாயினரன்றே.*

இ-ள். சிலகாலஞ்சென்றபின்பு திருவிளக்கை நெய்யுடனே பூமியில் வீழ்த்திய சோமசன்மனும் அவ்விளக்கு விழக்கண்ட பெருமைபெற்ற சிவசன்மனும் இறந்துபோயினார்கள் அவர்களிறந்தவுடன் எமதண்டனை யநுபவித்துந்தீராமல்ஐயோ தெய்வலோகத்தாரையும்கொடியவெப்பஞ்செய்யும் பாலைநிலமென்னும் ஆரண்ணியத்தில் அவர்களிரண்டுபேரும் பயங்கரமாகிய பசாசு உருவங்கொண்டு அலைந்துதிரிந்தார்கள்—எ-று. (௧௯)

*திருவிளக்குநெய் யகலொடுவீழ்த்திய சோமசன்மனுஞ்சேர்ந்த*
*வுரிவினென்பது வாயிலிற்சிவிழ வுடன்புழுக்குடைந்துந்த*

மருவுநாற்றமூன்றியோசனைசுற்றிசைவளர்ந்திடவுடல்வாடப்
பெருகுநீரருந்தாகமும்பசியுமேற் பிறங்கவங்குலைகின்றான்.

இ-ள், தேகம்பட்டுத் திருவிளக்குநெய்யை விழச்செய்த சோம
சன்மன் பயங்கரமாகிய பசாசுஉருவங்கொண்டும்உடலிற் புழுக்கள்கு
டைந்தும் ஒன்பதுதுவாரங்களினுஞ் சீயுமிரத்தமும் பெருகத் துற்க
ந்தஞ் சுற்றிலும் மூன்றுயோசனை தூரம்வீச உடலஞ்சோர்ந்துபோகத்
தண்ணீர்தண்ணீரென்று தாகத்தினாலும் பசியினாலும் அந்த அடவியி
ற்றுன்பப்படுகின்றான்—எ-று. (௨0)

கண்டுநின்றவச் சிவசருமனுமிகக் கருதருகுறளாகிக்
கொண்டவெம்பசி மேல்கொளநாக்குமூக் கூப்பிடுவளர்ந்தந்தோ
மண்டுகண்களு மலையெனத்தளர்ந்தன வளருநாவிழியூனைத்
துண்டவெம்பற வைக்குலமெறும்புணத் துயரடைந்தலமந்தான்.

இ-ள். திருவிளக்குவிழக்கண்டு நின்ற சிவசன்மன் நினைப்பதற்க
ரிய பசாசுஉருவங்கொண்டு மிகுதியும் பசியுண்டாகி நாக்கும் மூக்கு
ம் கூப்பிடுந்தூரம் நீண்டுவளர்ந்தன இரண்டுகண்களும் மலைபோல்
ஊன்தள்ளி வளர்ந்தன அந்தநாக்கையுங் கண்களையும் அலகைபோன்
றமூக்கையும் காக்கைகள் கழுகுமுதலாகிய பட்சிகள்கொத்தித்தின்ன
எறும்பு கறையான்முதலியவைக ளரிக்க வேதனைபொறுக்க மாட்டாம
ல் ஒலென்றலறிக்கொண்டு துன்புறும் அவதியை ஐயோ என்னென்று
சொல்வேன்—எ-று, (௨௧)

கலிவிருத்தம்,

காணரிய விண்ணவர் கருத்தலை சுரத்தே
சேணிலகு சைவமுறு தெய்வ வடிவென்ன
வாணவ மழித்தன தாண்மை நிகரான
டாணவர்க ளெண்ணிலர் மருங்குற நெருங்க

இ-ள், காணுதற்கரிய தேவர்கள் மனது நடுக்கங்கொள்ளத் தக்
கதாய் பயங்கரமாகிய பாலைவனத்தில் ஆகாயமார்க்கத்திற் பிரகா சிக
கும் சிவசம்பந்தமாகிய தெய்வமே ஒருதிரு உருக்கொண்டு எழுந்தது
போல் நானென்னும் ஆணவமுதலிய மும்மலங்களையும்வென்ற தபோ
மகிமையோடு தனக்கிணையாய் சிவபக்தி வளப்பமும்பெற்ற சீடர்கள்
அநேகர் புடைசூழ்ந்து நெருங்கிவர—எ-று, (௨௨)

மாலினை யடர்த்தவுரு மாணவர்கள் பேணு
மூலமறை யாகம மொழிந்து புடைசூழ
வாலநிழ னீங்கமெனை யாளுடைய நாதன்
சீலமுனி வோர்களொடு சேர்வதலை மன்ன,

இ-ள். மயக்கந்தீர்ந்த பெருமைபெற்ற சீடர்களாகிய முனிவர்கள் விரும்பி ஆதிகாரணமாகிய வேதாகமங்களை யோதிக்கொண்டு சூழ்ந்துவர வாமதேவ ரெழுந்தருளியது ஆலமரத்துநிழலில் எழுந்தருளி என்னையாட்கொள்ளும் தக்ஷிணாமூர்த்தி சிவஞானமுள்ள ஜனகாதி முனிவர்களுடன் எழுந்தருளி வந்ததுபோ லிருந்தது—எ-று, ()

வித்துருப வெற்பையொளிர் வெண்முகில் வளைந்தா
லொத்துவடி விற்றவளவொண்பொடி வயங்க
வத்தட வரைக்கணுத யாதப நிகர்ப்பத்
தத்துகதிர் வீசிய சடாமுடி தயங்க,

இ-ள். பவழமலையின்மீது பிரகாசம்பொருந்திய வெண்மேகங்கள் படர்ந்ததுபோற் சிவந்துவிளங்குந் திருமேனியில் திருநீறு பிரகாசிக்க அப்பவழமலைமேற் சூரியன் உதயமாகியதுபோற் காந்தியைச் சிந்துஞ் சடாமகுடம் விளங்க—எ-று, (உச)

தண்டரள வாளருவி தன்பவள வெற்பின்
வண்டவட நூலுமணி மார்பமும் வயங்கத்
துண்டமதி தாமரை தொடர்ந்துறைவ தென்னப்
புண்டர முகத்திடை பொலிந்தொளி விளங்க.

இ-ள், பவழமலையி னின்றுங் குளிர்ச்சிபொருந்திய முத்துக்களைக் கொழித்தருவி யாறு இறங்குவதென்ன வெண்மைபொருந்திய பூணூல் மார்பிலசைந்து பிரகாசிக்கச் செந்தாமரைமலரில் இளஞ்சந்திரன்சேர்ந் துறவாய் விளங்குவதுபோல முகத்தில் விபூதி திரிபுண்டரம் ஒளியுற்றுப் பிரகாசிக்க—எ-று. (உரு)

விண்டலமு மாதிரமு மேதினியு மாகக்
கொண்டதொரு சோதியது கொண்டுநிறை வெய்தக்
கண்டிகை யலங்கிய கலன்களி னிலங்க
வண்டகைய பட்டுடையின் வற்கலை வயங்க.

இ-ள். ஆகாசமும் பூமியுந் திக்குகளும்நிறைந்த பரஞ்சோதி சொரூபந் திருமேனிகொண்டதுபோல் விளங்குந்தேகத்தில் பிரகாசிக்கும் இரத்தினாபரணங்களும் உருத்திராக்க ஆபரணங்களும்விளங்க இடையில் பட்டுடைபோல மரவுரிதுலங்க—எ-று, (உசு)

ஆவிரிக ரண்ணலை யகத்தினி லிருத்தி
நாவினிறை வற்குரிய மந்திர நவிற்றி
மேவவரு பாசவினை வீசியுயர் வாம
தேவனெனு மன்புடைய தெய்வமுனி வந்தான்,

இ-ள்- பிராணனுக்கொப்பாகிய பரமசிவனை இதயாரவிந்தத்தில் தியானஞ்செய்துகொண்டு சிவனுக்குரித்தாகிய பஞ்சாட்சரத்தைநாவினாலுச்சரித்துக்கொண்டு அடியார்களது பாசபந்தங்களையுந் தீராத வல்வினைகளையுந்தீர்த் தாட்கொள்ளு மகா மகிமையைப்பெற்ற வாமதேவமகாமுநிவென்னும் பெயரையுடைய சிவபக்த சிரோமணியாகிய தேவரிஷி அந்தவிந்தாரணியத்திற்குவந்தார்—எ-று, (௨௭)

அன்னவன் வரத்தினை வனத்தலகை யாகி
பின்னுறு மிவர்களிரு வோருமெதிர் கண்டார்
முன்னிறை வனர்ச்சனை புரிந்தவருண் மெய்ம்பா
னன்னிமல னன்பனிவ னன்றென நினைந்தார்,

இ-ள். அந்த வாமதேவரிஷி எழுந்தருளிவருவதை அவ்வனத்திற் பைசாசஉருவமாய் அலைந்துபட்டுக் கொண்டலையும் சோமசன்மனும் சிவசன்மனும்பார்த்து பூர்வஜன்மத்திற்செய்த சிவபூசையினது புண்ணியபலத்தினால் இந்த சிவபக்தசிரோமணியாகிய வாமதேவமுநிவரை வணங்கி வாழ்த்துவதே நமக்குத்தக்க பணிவிடையென்று இருவர்களும் நினைந்தார்கள்—எ-று, (௨௮)

சென்றனர் பணிந்தனர்கள் சேவடி மருங்கே
நின்றன ரிறைஞ்சியவர் நின்றநிலை காணா
வன்றருள் சுரந்துமுனி யங்கவர்க ளிந்தத்
துன்றுரு வெய்தவரு தொல்வினை நினைந்தான்,

இ-ள்:-எதிர்கொண்டுபோய் அவர் பாதாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாக தெண்டனிட்டெழுந்து பக்தியினின்று ஸ்தோத்திரஞ் செய்துகொண்டிருக்கும் இருவருமவிகாரரூபங் கொண்டிருப்பதை வாமதேவமுநி கருணாசம்பிரம்பிய திருக்கண்களினால் பார்த்து இரக்கமுண்டாகி இவர்களுக் கிந்த பொல்லாத அவதிக்கிடமாகிய தேகம் வந்த காரணம் என்னவென்று அவர்கள் முன்செய்த புண்ணிய பாவங்களைத்தமது ஞானக்கண்ணினால் பார்த்தார்—எ-று, (௨௯)

அண்ணலிரு தாண்மலர கத்துநெடு நேர
நண்ணரிய நன்னினைவி னண்ணியருள் ஞானக்
கண்ணினிவர் முன்னைவினை கண்டவரை நோக்கி
யெண்ணரிய செய்தவ மிசைந்தவ னிசைப்பான்,

இ-ள், பரமசிவனுடைய இரண்டு சரணகமலங்களையும் நிருமலமாகிய இதயாரவிந்தத்தில் நெடும்போது தியானஞ்செய்து கிட்டுவதற்கரிய சிவனருள்பெற்று ஞானக்கண்ணினால் அவர்கள் முன்செய்த தீவினைகள் இன்னதென்று சோதித்தறிந்து அளவுபடாததபோபலனை

யுடைய வாமதேவமகாமுநி அவ் விருவர்களையும் நோக்கிச் சொல்லத் தொடங்கினார்—எ-று, (௩௦)

பேதைமை யடைந்துலவு பேயுருவி னின்றீர்
வேதியர் கணீர்முனருள் விடனைய சோம
நாதனகர் கார்த்திகை விழா கலனி னண்ணிக்
கோதில் பரமற்கொரு கொடும்பிழை புரிந்தீர்,

இ-ள். அஞ்ஞானம் பொருந்திப் பசாக உருவமாய் அலையும் நீங்கள் முன்ஜன்மம் பிராமணர்களாகப்பிறந்து சிவபக்தியை அளிக்குங் கயிலாசத்திற் கிணையாகிய சோமநாதபுரமென்னு மகாசிவஸ்தலத்தில் கார்த்திகைத் திருவிழா விநோதத்தைத் தரிசனஞ் செய்யப்போய் குற்றமற்ற பரமசிவனுக்கு ஒப்பொல்லாத குற்றஞ்செய்தீர்களென்றார்—எ-று, (௩௧)

ஏதெனி னெருக்குறு மிடத்துட னினனீ
சோதிகொள் விளக்கொடு தறைந்தநெய் கவிழ்த்தா
யோதுமதெ னீயுமவ னூற்றுவது கண்டு
மாதவென வொன்றுமுனா யாதபவி னின்றாய்,

இ-ள். அக்குற்றம் என்னவென்றால் சிவசந்நிதானத்தில் நெருக்கமாகிய சந்தடியிற்போய்ச் சிவதரிசனஞ் செய்கின்றபோது சோமசன்மனாகிய உன்தேகம்பட்டு எரிகின்ற நெய்விளக்குக் கவிழ்ந்து விழுந்தது அதைச் சிவசன்மனாகிய நீ கண்ணாரக்கண்டும் அவன் கவடத் தேறும் விதிக்கு மறுபடியும் அவ்விளக்கை ஏற்றச்சொல்லாமல் நீயாகிலும் எடுத்தேற்றிவையாமல் சும்மாய்ப் பக்கத்தில் நின்றிருந்தாயல்லவாவென்று வாமதேவரிஷி திருவுளம்பற்றினார்—எ-று. (௩௨)

மெய்பட விளக்கொடுநெய் வீழ்வது தாழா
தெய்தரிய தீயவினை யெய்திட வினனீ
மொய்படா புழுக்குடைய முற்றுமுடல் சீபா
பெய்திழிய வெபதுடைய பெய்துழ வடைந்தாய்

இ-ள். உன்னுடைய தேகம்பட்டுச் சிவசந்நிதானத்தில் நெய்விளக்குக் கவிழ்ந்த அம்மகா பாதகத்தால் கொடிதாகிய தீவினைதொடர உன்தேகமெல்லாம் புழுக்களடைந்து சீயுமிரத்தமுஞ்சொரிய துர்க்கந்தமாகி மகாவாதனைக்கிடமாய் பயங்கரமாகிய பசாசு உருவங்கொண்டாய் என்றார்—எ-று. (௩௩)

வாய்ப்பவிது கண்டுமொரு வார்த்தை புகலாத
தீப்பரிய தீவினையை நீப்பரிபு நீயு

*மேற்பறவை யுண்ணநெடு வெற்பனைய கண்ணூக்*
*கூப்பிடுவளர்ந்தநெடு நாக்கடிது கொண்டாய்,*

இ-ள். திருவிளக்கு வீழ்ந்ததைக் கண்ணினாற்கண்டும் அவற்றை ச்சொல்லாமலிருந்த நீ நீப்பதற்கரிய தீவினையைத்தீர்த்துக்கொள்ளா மையினால் மலையைப்போல் கண்களில் ஊன் தள்ளியிருப்பதைப் பட் சிகள் கொத்தித்தின்னவும் கூப்பிடுந்தூரம் நாவுவளர்ந் திருப்பதைப் பறவை எறும்புமுதலியவைகள் எரிக்கப் பசாசரூபங் கொண்டா யெ ன்றார்—எ-று. (௩௪)

*உமைக்கதி ரயிற்பர சுடைக்கடவு ளுக்குப்*
*பிழைத்தவர் தமக்கொரு பிழைக்குநெறி யுண்டோ*
*தழைத்த துயரத்தொடு தனித்தளவில் கற்ப*
*மிழைத்த நரகக்குழி யிடத்தலைவ ரன்றே.*

இ-ள். மானும் சூரியனொளியைப்போன்ற மழுவும் தரித்த கர கமலங்களையுடைய பரமசிவனுக்குக் குற்றஞ் செய்தவர்கள் கடைத் தேறத்தக்க வழியும் உண்டோ மிகுந்த துக்கத்துடன் மகாரவுரவாதி நரகங்களில் வீழ்ந்து அநேக கற்பகாலம்வரையில் வாதனைப்பட்டலை வார்கள்—எ-று. (௩௫)

*முற்பகலி னீவிருண் முக்கணிம லன்றாள்*
*பற்பல வணங்கிவரு பத்தியத னன்று*
*னிற்பரிய விவ்வடிவி னின்றுவினை துய்த்துக்*
*கற்பமொ ரிரண்டிடை கடந்துகதி சேர்வீர்*

இ-ள். முற்பட்ட ஜன்மத்தில் நீங்கள் அருளுடைய முக்கண்ண னாகிய பரமசிவனது பாதாரவிந்தங்களை அநேகநாள் பூசித்த சிவபக் தர்களானபடியினால் இப்போது வெகுதுன்பத்துக் கிடமாகிய இத்தே கத்துடனே இரண்டு கற்பகாலம்வரையில் பேயுருவாய் வாதனைப்பட் டபின்பு சிவகதியடைவீர்கள்—எ-று. (௩௬)

*நம்மையெதிர் கண்டுதொழ நாடரு நலத்தா*
*லிம்மைசிவ சிந்தனை யிசைந்திடுவிர் பேயாய்*
*வம்முருவ மாறிபருண் மன்னுமென யாமு*
*ரம்முதன்மை யெம்முதல்வ னன்றியெவர் வல்லார்,*

இ-ள். சிவபக்தியையுடைய எங்களை தரிசனஞ் செய்து பணிந்த பாக்கியவசத்தினால் இம்மையில் உன்னுவதற்கரிதாயிருக்குஞ் சிவசிந் தனையை மறவாமலிருந்து இப்பசாசு உருவம் நீங்கிச் சிவனருட்பெ றுவீர்கள் அடியார்கள் செய்தபிழைகளைப் பொறுத்தாட் கொள்ளுங்க

டன் பரமசிவத்துக்கேயல்லாமல் மற்றவர்களுக் கந்தவல்லமை யுண் டோவென்றார்—எ-று, (௩ )

அந்தமில ரற்கொர்பிழை யஞ்சலர் புரிந்தோர்
பந்தமுறு தீவினைகள் பற்றற நினைக்கி
லெந்தையிறை யல்லனிம வான்மகளு நேய
மைந்தரிரு வோருமது வல்லரென் லாமோ.

இ-ள். ஆதியந்தங்கடந்த ஜகதீசனாகிய சிவபெருமானுக்கு ஓர் குற்றத்தை பயமில்லாமற்செய்த அபசாரத்தினால்வருங் கொடியபாவங்களை யகற்றநினைக்கில் எமதுகடவுளாகிய பரமசிவனன்றி பர்வதராஜகுமாரியாகிய பார்வதிதேவியும்பிள்ளைகளாகிய கணபதி சுப்பிரமணியன் இவ்விருவர்களும் அச்சிவத்துரோகத்தைத் தீர்க்க வல்லவரென்று சொல்லலாமோ—எ-று. (௩௮)

அன்னபெரு வெம்பிழை யகற்றவ னகற்றா
னென்னுமது மந்தவிறை யேயறிவ னன்றி
யுன்னரிய வப்பிழையி னோர்க்கருள் செய்யானெம்
முன்னவ னெனத்தவர் மொழிந்தனர்க ளன்றே,

இ-ள். அப்படிக்கொத்த மகாபாதகத்தைப் பரமசிவன் அகற்றுவான் அகற்றமாட்டான் என்பதும் அப்பரமசிவத்துக்கேதெரியும் அதல்லாமலும் மனதில் நினைக்கவுங்கூடாத அந்தசிவத்துரோகத்தைச்செய்த பாவிகளுக்கிரங்கிப் பரமசிவன் இப்பாதகத்தைத் தீர்த்துப் பரிசுத்தமாக்கானென்று சிவபக்தர்களாகிய தபோதனர்கள் சொன்னார்கள—எ-று, (௩௯

இவ்வுரைபொய் மெய்ம்மையென லெங்குநிறை வெய்து
மவ்விமல னேயறிவ னஞ்சியெவ ரேனும்
வெவ்வலகை யாகியுழல் வீர்வினையை நாடித்
தெய்வமுதல் வர்க்கொர்பிழை செய்யவறி யாரால்,

இ-ள், இந்தவாக்கியம் பொய்யென்பதும் மெய்யென்பதும் எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருக்கும் அக்கர்த்தனே யறிவானகையினால் பேயுருவாய் அவதிப்பட்டுழலும் உங்கள் தீவினையைப்பார்த்து அச்சங்கொண்ட எவர்களும் தேவர்களுக்கு ஆதிநாயகனாகிய பரமசிவனுக்கு ஓர் பொல்லாங்கும் வராதவிதமறிந்து நடந்துகொள்ளுவார்கள்—எ-று, (௪0)

ஓதுமிரு கற்பமுடி வாதபொலி சோம
நாதமுய ரன்பரொர் நணணிமு னிறைஞ்சி

வேதமற முத்திதனை யெய்துவது தீர்வா
லாதியிரு பாதமற வாமவிரு மென்றான்,

இ-ள், முன்சொன்ன இரண்டு கற்பகாலம் வரையிலும் இப்பசாசு உருவமாகவேயிருந்து பின்பு சகலவைபவங்களு மிகுந்த சோமநாதமகாலிங்கத்தை அதிபக்தியுடன் தரிசனஞ்செய்துபணிந்து தோத்திரித்துக் குற்றமற்ற சிவபதவியையடைவீர்கள் இது நிச்சயமாகையினால் நீங்கள் பரமசிவனுடைய உபைய பாதாரவிந்தங்களை மனதில் மறவாமலெப்போதுந் தியானஞ்செய்துகொண்டிருங்களென்று வாமதேவமகாமுனி திருவுளம்பற்றினார்—எ-று. (௪௧)

என்றுமுனி கூறுதலு மென்றுமொழி யாமம்
கன்றும்வினை தீர்வதொரு காலமுள தென்று.
வன்றவ ரறிந்தனர் பணிந்தனர்க ளாடா
நின்றனர் மகிழ்ந்தனர் நிகழ்த்துவதை யென்னோ.

இ-ள், இவ்விதமாக வாமதேவமகாமுனிவர் திருவாய்மலர்ந்தவுடன் ஒருகாலுந் தீராதவல்வினை இரண்டு கற்பகாலத்தில் தீருமென்று சொன்னவைகளைக்கேட்டு அப்பசாசு உருவங்கொண்டு நின்ற சோமசன்மனும்சிவசன்மனும் அத்தபோதனைப்பணிந்தானந்தத்துடன் கூத்தாடினார்கள் அவர்கள் சந்தோஷத்தை இன்னதென்று சொல்லிமுடியாது—எ-று. (௪௨)

ஐஞ்சீரடியாசிரியவிருத்தம்.

காமவெம்பகை கடந்தருட்கடலிடத் தழுந்துந்
தோமகன்றநாற் சுருதியாகமநெறி துளக்கா
வாமதேவனு மருங்கின்மாணுக்கரை நோக்கி
யாமுரைப்பன கேளுமென்றியம்பன்மே யினால்,

இ-ள், காமக்குரோதாதி வெம்பகைகளைவென்று கிருபாசமுத்திரத்தில்மூழ்கிக் குற்றமற்ற நான்குவேதங்களையும் இருபத்தெட்டுசிவாகமங்களையும் முறைமையாகக்கற்றுப் பிரகாசிக்கும் வாமதேவரிஷி தன்னைச்சூழ்ந்திருக்கும் தம்முடைய சிஷர்களைப் பார்த்து நாமொன்று சொல்லுகிறோம் கேளுங்களென்றுகூறத்தொடங்கினார்—எ-று. (௪௩)

என்னகூறுகோ மீதொரற்புதந்தனை யந்தோ
முன்னரின்னவர் முப்பொழுதருச்சனை முயன்று
சென்னிவான்மதி மிலைச்சியதெய்வநா யகன்று
டன்னையல்லதோர் சார்விலாத்தகைமையோ சோர்நாள்

இ-ள், என்னென்று சொல்லப்போகிறோம் இவ்வதிசயத்தை ஐயோவென்று விதனப்பட்டு இவ்விரண்டுபேரும் முன்ஜன்மத்தில் மூன்று காலங்களிலுஞ் சிவபூசை தவறாமற் செய்துகொண்டு சந்திரனை சடாமகுடத்திலணிந்த பரமசிவன் பாதாரவிந்தங்களைத்தவிர வேறுகதியில்லையென்று நம்பியிருந்தவர்கள் ஓர்நாளில்—எ-று. (௩௩)

தோத்திரங்களாற் சுரர்புகழ்சோமநா தத்திற்
கார்த்திகைத்திரு நாளினெய்கவிழ்த் தயனிவன்முன்
பார்த்துநின்றவ னிவனிவர்பண்ணிய திதுவே
கூர்த்தவெம்பசைப பேயுருக்கொண்டமை பாரீர்.

-ள். தேவர்களால் தோத்திரஞ்செய்யப்பட்ட மகாமகிமையையுடைய சோமநாதஸ்தலத்தில் கார்த்திகைத்திருவிழாவில் சந்நிதியிலிருக்கும் நெய்விளக்கில் தேகம்பட்டுக்கவிழ்ந்துவிழச்செய்த இச்சோமசன்மனும் அதைக்கண்டு சொல்லாமலிருந்த இச் சி சன்மனு மாகிய இவர்களால் சிவனுக்குநேரிட்ட துரோகம் இதுவே இப்பாபத்தினால் இவர்கள் பசாசு உருவங்கொண்டு மகாவாதனைப்பட்டலைவதைப் பாருங்களென்று வாமதேவரிஷி சிஷ்யர்களைப்பார்த்துச்சொல்லினார்—எ-று.

செய்திநல்லறமென்றுளோர்செய்துமோ வன்று
னெய்தினூற்றுவா யென்பவனெய்தினின் முடித்தோ
னெய்திமுற்றினோன் செறிற்றுணையாயுளோ னன்பு
பெயதுகாத்துளோ ரைவர்க்கும்பெரும்பய னொக்கும்.

இ-ள், இது நல்லதருமமசெய்யென்று சொல்லுகிறவனும் தருமஞ் செய்கின்றவனை நவனுடன் இத்தருமஞ்செயலாமென்றால் அதற்கவன் இதுகிடைப்பது அரிது மகாநன்மையாகிய தென்று திடப்படுத்தி உறுதிபண்ணுகிறவனும் அத் தருமத்தைச்செய்து முடித்தவனும் அதற்குத்துணையா யுதவிசெய்தவனும் அதை பக்தியுடன்காத்துப் பரிபாலனம் பண்ணினவனும் ஆகிய இவ்வைந்து பேருக்கும் அத்தருமத்தின் பலன் சமனாகச்சித்திக்கும்—எ-று. (௩௪)

அரியநல்லற முற்றினோன்றன்னிலு மதனைப்
புரிகவென்பவன் காபபவன்புகலிரு வர்க்கும்
பெரிதுமப்பயன் பதின்மடங்கென்றனர் பெருநூற்
குரியமாந்தாக டவினைவழிக்குமீ தொக்கும்.

இ-ள். மேலாகிய தருமஞ்செய்தவனிலும் அத் தருமத்தைச்செ [illegible] தியில் தெரியச்சொன்னவனுக்கு அத் தருமத்தைக்காத [illegible] பவனிலும் பதின்மடங்கதிகமாகிய புண்ணியஞ் சித்திக் [illegible] மென்று வேதாகமங்களுணர்ந்த பெரியோர்கள் சொல்லுவார்கள் இ

வ்விதமாகவே பாவத்தைச்செய்கிறவனுக்கு செய்யலாமென்று துணிவுசொல்லுகிறவனும் அதற்குச் சகாயமாயிருக்கிறவனும் செய்யென்கிறவனும் அத்தீவினையை வளரச்செய்கிறவனும ஆகிய இவ்வைவருக்கும் பாவஞ் சமனாகப்பொருந்தும் இதல்லாமலும பாபஞ்செய்தவனிலும் அதைச்செயயச் சொன்னவனுககும அதைப் போக்காமல் பின்னும வளாக்கின்றவனுக்கும் பதின் மடஙகதிகமாகிய பாபம லயிக்குமென்று தபோதனர்கள சொன்னார்கள்—எ-று. (௬௭)

அலலுலாங்களத் தண்ணறன்பொருள்கவர்ந் தோனை
வல்லனுங்கலங் கவன்றலைத்துணிப்பமீத வழகார
லொல்லைகோறலுஞ் சோன்றனையோனிவன் றன்னை
கொலலினின்னவன் முத்தியிற்கூடனிச சயமே.

இ-ள். மைபார்ந்த கண்டத்தினையுடைய பரமசிவனது பொருள களில் ஏதாகிலுமொன்றைத் திருடினவனைக் கண்ட சிவபக்தன் தனக்குக்கூடியவல்லமையினால் அச்சிவத்துரோகியைச் சிரச்சேதஞ்செய்வதே நீதி அவ்வகை சிரசசேதப்பட்ட பாபியைச்சேர்ந்தவர்களவந்து இச் சிவபக்தனைக் கண்டித்தபோதினும் இச்சிவபக்தனுக்கு சிவபதவி சித்திக்கும இதுசத்தியமென்றுரைத்தார வாமதேவரி—ஷிஎ-று, ( )

கோறலுக்குறு தென்னிலக்கொடியவ னிருப்பிற்
பேறுசேரினு மிகந்துடன்பெயர்வதே சரும
மாறணிந்தவாக கனபரேலப்பொருள் கவாவோர்க்
கூறகல்லுரைபோதித்துமாற்றுத லுயர்வால்

இ-ள், சிவசொத்தை எடுத்தவனைத் தன்னால் சொல்லக்கூடாமற்போனாலும் அக்கொடியமாபாவி யிருக்குமிடத்தில் தனக்கு அளவற்றபொருள் கிடைப்பதாயினும் அதைக் குற்றமென்று நீக்கி அவ்விடம்விட்டேகுவதே நீதி சிவசொத்தை யபகரித்தவன் கங்கைவேணியனுக்கன்புள்ளவனாக விருந்தாலும் அவன்மனந் தெளியும்படியாய் நன்மார்க்கங்களைப் போதித்துச் சிவத்துரோக பரிகாரம்பண்ணிவைப்பதே உத்தமம—எ-று, (௬௯)

இத்தகைக்கொரு கருத்திலராகி யீசற்குப்
பத்தியானெறி யான்மிகும் பரிசினரேனு
மத்தனைப்பிழைத் தோர்களேற் பொருளகவர்ந்தெடுத்த
சித்தலஞ்சரைப் பார்ப்பரோ நீணகதிக்குரியோர்.

இ-ள். இவ்வகையாய்ப் போதித்தும் நன்மையாகிய புத்தியை யடையாதவர்கள பரமசிவனுக்குப் பக்தியாக நன்மார்க்கத்துடன்

எவ்வளவு பொருள்களை யுதவிசெய்கின்றவர்களாக விருந்தாலும் அவர்கள் சிவத்துரோகிகளேயாம் சிவசொத்தையபகரித்துக் கொண்ட தீவினையாளராகிய வஞ்சகரை எப்போதுங் கண்ணினாலுங் காண்பார்களோ மேன்மைபொருந்திய சிவபதவிக் குரிமையை யுடையவர்கள் — எ-று, (௫௦)

கரணமாரினு மப்பொருளை கவாவரோ வறிந்தோ
ராணமூன்றெரி யூட்டினோ னாலயத் திடையோர்
திரணமீசற்கு வேண்டல தாயினுஞ் சிந்தை
முரணுறக்கொண்டு ளோரிரு ணிரய மூழ்குவரால்

இ-ள். அறிந்தோர் மனம் புத்தி சித்தம் அகங்காரமென்னும் அந்தக்கரணங்கள் கலங்கிய சமயத்திலும் சிவசொத்தை யடார்கள நகையால மூப்புரத்தை எரித்த பரமசிவன் ஆலயத்தில் கிடக்கும ஓர் துரும்பாகிலும் சிவனுக்குதவியில்லாமலிருந்தாலும் கெடுபுத்தியினால் எடுத்துக்கொண்டவர்கள் இருண்மூடிய மகாரவுரவாதிநரகங்களில் அழுந்திப்போவார்கள் — எ-று, (௫௧)

சிலமாதவ ரிடைவிடாச் சிவாலயந் தனக்கென்
றேலனேக்கிய கறுமல ரிலைமுத லியவைப்
பாலநேத்திரங் கொடுமை தன்படை விழித்தங்கா
ளாலமுண்டவற் கன்றியே யாவற்கு மாகா.

இ-ள். சிவாசாரமுடைய சிவயோகிகள் நிறைந்திருக்கும் சிவாலயத்திற்கென்று நியமித்துப் பரிபாலித்து வரும் நந்தவனங்கள் தோப்புகள் நஞ்சை புஞ்சை தோட்டங்கள் முதலியவைகளிலுண்டாகிய இலை மலர் காய்கனி யாவும் நெற்றிக்கண்ணினால் மன்மதனையெரித்து ஆலாலவிஷத்தைப் பானஞ்செய்து லோகாலோகங்களை யெல்லாம் இரட்சிக்குஞ் சிவனுக்கு யோக்கியமேயல்லாமல் மற்ற எவர்களுக்கும் அங்கிகரிக்கத் தக்கதல்ல — எ-று. (௫௨)

கன்னிபாகமெய்ப் பரன்பொருட் காவலுக் குரியோர்
மன்னராயினும் யாவரோ யாயினு மதியா
ரன்னவான்பொருள் கவரிலீ ரைம்பது மடங்கு
தூன்னுவல்வினை பெறுவர்முன் சொற்றவர் தம்மில்

இ-ள். பார்வதியை வாமபாகத்திலுடையவனாகிய சிவபெருமானது பொருள்களைக்காத்து இரட்சிப்பதற்குரிய சிவகணங்களும் மன்னர்களும் மற்ற எவர்களும்சிவகாரியத்தில் குறைவறநடந்தாராயினும் அணுமாகிலு மெண்ணாது அச்சிவசொத்தை யபகரித் தெடுத்தால்

முன்சொன்ன சிவத்துரோகிகளிலும் நூறுபங்கதிகமாகிய வாத படுவார்கள்—எ-று. ([illegible]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அலைபுனல் வேணியண்ண லாலயந் தன்னிலென்றுந்
தலைமயி ரிறக்கிக்கோட மருக்கின்மெய்ப் பிடித்துக்கோட[illegible]
குலதில தயிலம்வார்த்துக் கோடலா பத்துறுமன்
மலசல நீக்கலுகதும் வாகனத் தேறச்சேறல்

இ-ள். அலைகளையுடைய கங்காநதியைச் சடையிலணிந்த [illegible] பரம சிவனாலயத்தில எப்போதும் முடிமயிரிறக்கிக கொள்ளுதலும் [illegible] னொருவனைக்கொண்டு உடம்புபிடித்துக்கொள்ளுதலும் எ[illegible] ய்முதலியவை தேய்த்துககொள்ளுதலும் ஜலமலாதிகளைபோக்கு[illegible] ரதத்தின்மேலேறிக்கொண்டுபோதலும்—எ-று, ([illegible])

அடிசினீ ரடைக்காயாதி யானவை துய்த்தறுப்பல்
கொடியகா மாதியாதர் கூட்டங்கள் கொடுங்கோள்பொ[illegible]
கடியபொல்லாமைகூறல் கம்பளா தியினிருத்தல்
னெடியபோர்ச் சதுரங்காதி சூதினை நிகழ்த்தியாடல்,

இ-ள். அன்னம் நீர் பாக்கு வெற்றிலைமுதலியவைகளைத் [illegible] தலும் எச்சில் துப்புதலும் ஸனமையாசித்தலும் கோபத்துறும் [illegible] தலும் பெண்களுடன் சரசசல்லாபங்கள் செயதலும சொ[illegible] ருத்தியகோள்சொல்லுதலும் பொய்சொல்லுதலும் பொல்லாங்[illegible] விளைத்தலும் கம்பளிமுதலிய வாசனங்களிலிருத்தலும் மிகுதியும் போர்செய்தலும சதுரங்கஞ் சொற்கேட்டான்முதலிய சூது ஆட்டங் களை ஆடுதலும்—எ-று. ([illegible])

சொற்றசின் மாலியத்தைச் சோமசூத் திரத்தைத்தூபி
நற்றட நிழலைககண்டு நடந்துமுன் கடந்துபோதல்
கற்றவார் சடையானுக்குங் கதிரப்பலி பீடத்துக்கு
முற்றகன் னடுவேசேற லொழிந்தவ ருயர்ந்தோரன்[illegible]

இ-ள். சொல்லும் சிவன் நின்மாலியத்தையும் சிவனு[illegible] மாகிய தீர்த்தம்போன்ற சோமசூத்திரத்தையும் கெற்ப[illegible] மேலிருக்கும் விமானங்களின் சிகரத்தினது நிழலையும் ப[illegible] ண்டிப்போதலும் சிவலிங்கத்திற்கும் பலிபீடத்திற்கு நடு[illegible] தலும் ஆகிய இவைகளெல்லா மிகுதியுங் குற்றமென்றறிந்[illegible] க்கமாய் நடக்கிறவர்களே பெரியோர்கள்—எ-று.

ஆதியா லயத்துக்கூவ லாதியா இயதீர்த்தத்தைத்
தீதுபோய்ப் புரிதலத்தச் சிறப்புறுஞ் சிவதீர்த்தத்திற்
கோதுறு மகத்தத்தோடு மூழ்குதல் குற்றமென்றே
யோதிய வாகமங்க ளுபநிட தங்களென்றே.

இ-ள். ஆதிகர்த்தாவாகிய சிவபெருமானது ஆலயங்களிலிருக்கும் கிணறு தடாகமுதலிய தீர்த்தங்களில் அநுசாரஞ்செய்தலும் சிறப்புற்றிருக்கும் சிவதீர்த்தங்களில் ஆசாரமில்லாமல் மூழ்குதலும் மகாபாதகங்களென்று வேதங்களில் சிரசாகிய உபநிடதங்களிலும் சிவாகமங்களிலுஞ் சொல்லும்—எ-று. (௫௭)

ஈங்கிவர் துயரம்பாரீ ரென்றுமா ணாக்கர்கோதி
யோங்குமஞ் செழுத்தைநாவி னுச்சரித் துளத்திறைகன்
பூங்கழல் வைத்துத்தன்றன் பொருவிலாச் சிரமம்புக்கான்
றீங்ககல் வாமதேவத் தெய்வமா முனிவனம்மா.

இ-ள். சிவத்துரோகம்பண்ணின இச்சோமசன்மனும் -- ன்மனும் பசாசுஉருவங்கொண்டு துன்பப்படுகின்றதைப் பாருங்களென்று தம்முடைய சீடர்களுக்குக் காண்பித்துச்சொல்லி மந்திரங்களுக்கரசாகிய பஞ்சாட்சரத்தைநாவினாலுச்சரித்துக்கொண்டும் இருதயாரவிந்தத்தில் பரமசிவனது சரணகமலங்களைத் தியானஞ்செய்துகொண்டும் அடியார்களது தீவினைகளைத்தீர்க்குந் தெய்வத்தன்மைபெற்ற வாமதேவமகாமுனிவர் தமது ஒப்புமையில்லாத ஆச்சிரமத்திற்குச்சென்றார்—எ-று. (௫௮)

தந்திர வேதநீதிச் சயிமினி முனிவகேட்டி
யந்தணர் பொருளிலீச னரும்பெரும் பொருளிறுண்டோ
முந்திய வியல்புகாண்டி மொழிதவஞ் ஞானந்தன்னால்
வந்ததீங் ககலவின்னு மவருத்தம்தார் வழியுண்டாமே.

இ-ள். வேதாகமங்களின் முறைமையாக நடக்குஞ் சயிமினியே கேளும் சிவபக்திசெய்யும் வைதீகப்பிராமணர்களினது பொருள்களையும் பரமசிவனுக்குரிய பொருள்களையும் மனதறியாமற் றொட்டதால் வந்த பொருட்சேதத்தாலும் அவற்றைப் பார்த்திருந்த நிலைவந்த தீவினைவினைவையும் முன்சொன்ன சிவசன்மன் சோமசன்மன் இவ்விருவர்களாலும் அறிந்துகொள்ளென்றும் பின்னையும் அப்பேலகத்தினால் வந்ததீவினையைத் தீர்த்துக்கொள்ளுவதற்கோர் சன்மார்க்கமுண்டென்றும் வேதவியாசர் திருவுளம்பற்றினார்—எ-று. (௫௯)

புண்டரீகப் புரத்துப் பொருந்திய வினையைநீக்கி
மண்டிய பயனைல்க வல்லதீர்த் தங்களோர்பத.

துண்டென வுரைத்தான்ஞால மூய்ந்திடக் கருணையோதக்
கொண்டரு மறைகளெல்லாம் விளக்கிய குணக்குன்றன்னான்.

இ-ள், சிதம்பரதலத்தில் இருந்து அறியாமையினாற்செய்த பாவங்களைப்போக்கி மிகுதியும் புண்ணியபலன்களைக்கொடுக்கும் மகிமையையுடைய பத்துத்தீர்த்தங்களுண்டென்று உலகங்களெல்லாங்கடைத்தேறும்பொருட்டாகக் கிருபையோடு பரமஞானத்தால் அரிதாகிய வேதங்களைப் பகுத்துச்சொல்லிய மலைபோன்ற பொற்புவாய்ந்த வேதவியாசரருளினாரென்று சூதபுராணிகர் நயிமிசாரணியத்தில்சவுனகாதிமுனிவர்களுக்கு அருளிச்செய்தார்—எ-று, (௬௦)

சோமநாதச்சருக்கமுற்றும்.

பாயிரம் உட்படச் சருக்கம் ஆறுக்குத் திருவிருத்தம்—௩௭௪.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஆறாவது

# தீர்த்தச்சருக்கம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்,

அரவுடனிதழிசூடு மண்ணறன் பொருளைவஞ்சக்
கரவினிற் கொண்டோரெய்தும் கடுங்கொடும் வினைதொகுத்தும்
பரவினம் பரவுந்தில்லைப் பதியிடைக் கதிகணல்கு
முராறுறு தீர்த்தமீரைந் துள்ளவை யுரைக்கலுற்றும்

இ-ள் பாம்பையும் கொன்றை மாலையையு மணிந்த பரமசிவனுடைய திரவியங்களைக் களவுசெய்தவர்கள் அநுபவிக்கப் பட்ட மிகவும் பொல்லாங்காகிய பாவத்தைச் சுருக்கமாகச் சொன்னோம் இனிமேல் அரியயன்முதலிய தேவர்களால் தோத்திரஞ்செயயத்தக்க மகாமகிமையையுடைய சிதம்பரதலத்தில் சகலபோக பாக்கியங்களையுஞ் சிவபதவியையுங் கொடுக்கும் வல்லமைபொருந்திய பத்துச் சிவதீர்த்தங்கள் இருக்கின்றது அத்தீர்த்தத்தின் மகிமையைச் சொல்லுகிறோம் கேளுங்களென்று வேதவியாசர் சயிமினிமுனிவனையுந் தன்னையும்பார்

த்துச்சொன்னதாய்ச் சூதபுராணிகர் நயிமிசாரணியத்தில் சவுனகாதி
முனிவர்களுக்குச் சொல்லத்தொடங்கினார்—எ-று. (௧)

பராசரன் றனையன்பாதஞ் சயிமினி பணிந்து போற்றித்
தராதல மெண்ணுந்தில்லைத் தலத்தினி னாந்துதீர்த்தம
புராதன வுளவொன்றாயப் புனிதமாகிய தீர்த்தங்கள்
விராவிய தானப்பேர்கள் விளங்குற விளம்புகென்றான்

இ-ள். பராசரன் புதல்வனாகிய வியாசபகவானுடைய பாதாரவி
ந்தங்களில் தெண்டனிட்டுத் தோத்திரஞ்செய்து பூமண்டலந்துதிக்கி
ன்ற சிதம்பரதலத்தில் பண்டைநாண்முதல் பத்துத் தீர்த்தங்களுண்
டென்று திருவுளம் பற்றினீர் அம் மேன்மைபொருந்திய தீர்த்தங்களி
ருக்குமிடமும் அவைகளின் பெயருந் தெரியச் சொல்ல வேண்டுமெ
ன்று சயிமினிபகவான் கேட்க வாதராயணர் சொல்லத் தொடங்கி
னார்—எ-று, (௨)

பாரிட மெண்ணுந்தில்லைப் பதியினி லெங்குந்தங்கு
நீரெலாந் தீர்த்தமாத னிச்சய மதனுண்முன்னங்
காருறு கண்டன்கண்டங் காதலிற் பயந்துயர்ந்த
வாரியைக் குலகமுய்ய வருளினா லருள்செய்தானால்,

இ-ள். பூமண்டலத்தின்கண் உத்தமமாகிய சிதம்பரதலத தெல்
லைக்குள் இருக்கும் நதிகள்-ஓடைகள்-ஏரிகள்-குளங்கள் - கிணறுகள்
ஊற்றுகள் ஆகிய இவைகளெல்லாம புண்ணிய தீர்த்தங்களே யாகும
இதற்குச் சந்தேகமில்லை அதனிலும் நீலகண்டராகிய பரமசிவன் மு
ன் லீலாவிநோதமாகப்பிரமாண்டங்களனைத்தையும் ஆவலோடுபெற்
ற உத்தமியாகிய பார்வதிதேவிக்கு உலகங்களெல்லாங் கடைத்தேறும
பொருட்டாகக் கருணையினால் திருவாய்மலர்ந்தார்—எ-று, (௩)

பொற்கிரி புண்டரீக புரத்தினிற் றீர்த்தத்தன்மை
யெற்கிது தெரிவதல்லால் யாவரு முணரமாட்டார்
முற்கிரி வளைத்தெடுத்த முதல்வனுக் கன்புபூண்டு
நிற்குநீ கேட்கலாகு மெனமுனி நிகழ்த்துகின்றான்,

இ-ள். பொன்மலையாகிய சிதம்பரதலத்தி லிருக்கும் தீர்த்தங்க
ளின் மகிமையைச் சந்திரசடாதர மூர்த்தியினது அருளால என்னொருவ
னுக்குத்தெரியுமேயல்லாமல் மற்றைத் தேவர்கள் முதலிய யாவருக்கு
ந் தெரியமாட்டாது முன்னர் மகமேருவை எடுத்து வில்லாகவளைத்த
பரமசிவன் பாதாரவிந்தத்தில் அன்புகொண்டிருக்கும்நீகேட்கத்த
க்கதாமென்று வாதராயணர் சயிமினிக்குச் சொல்லுகின்றார்—எ-று. (

சித்தென வசித்தைநீத்தோர் தெளிந்தபொன் மன்றஞ்சேர
உத்தரத் துள்ளதென்று முயர்ந்ததீர்த் தத்துயர்ந்த
தெத்திசை யோரும்போற்று மெழிற்சிவ கங்கையார்க்கு
முத்தியை நல்குதீர்த்த முதலருட் டீர்த்தமாகும்,

இ-ள். அஞ்ஞானம் நீங்கிய சிலஞானிகள் ஞானசொரூப மென்றுணரும் மகிமையையுடைய பொன்மயமாகிய திருச்சிற்றம் பலத்திற்கு அந்த்த வடக்கில் தீர்த்தங்களுக்கெல்லாம் உத்தமோத் தமமாகியவர்களுக்குந்தோத்திரஞ்செய்யத்தக்கமகிமையை யுடையசிவகங்கை யன்றஓர்தீர்த்தமுண்டு அத்தீர்த்தம் பரமசிவன் திருவருளுருவமாகி யாவற்கும் பதவியைக்கொடுக்கும் தீர்த்தங் களுக்கெல்லா முதன்மையாய் எந்நாளும் பிரகாசிக்கும—எ-று. (௫)

நடமிறை பிரியாதோங்கு நற்றில்லை நர்தனக்கு
வடகிழக் கிடையோர்தீர்த்த மறிகட லதுவாங்கொன்றைத்
தொடையவ னன்றியாரு முணர்கிலாத் தொன்மைதன்னு
விடாடர் குப்பதீர்த்த மெனப்பெயரெய்திற்றுமால்,

இ-ள் பரமசிவனெப்போதும் நீங்காமல் ஆனந்த நடனம்புரியுந்தன்மைபொருந்திய சிதம்பரதலத்துக்கு ஈசானியதிக்கில் அலைகளையுடைய சமுத்திரமே ஓர்தீர்த்தமாயிருக்கிறது அத்தீர்த்தத்தி னுண்மை கொன்றைமாலையணிந்த பரமசிவனுக்கே தெரியுமல்லாமல் மற்றொருவருக்குந்தெரியாது ஆகையினால் அதற்குத் துன்பங்களை நீக்குங் குய்யதீர்த்தமென்றுபெயர்—எ-று. (௬)

இறையிறை விக்குக்கூற விறைவிகந் தற்கியம்ப
வுறையமற் கந்தனனபாற் சனற்குமா ரற்குரைப்ப
முறைமையினவன்பாற்பெற்றுமுனிவர் தேவர்க்கிசைத்த
னறையுமக் குய்யதீர்த்தப் பெருமையா ரறியவல்லார்,

இ-ள். பரமசிவன் பார்வதிதேவிக் குபதேசஞ்செயயப் பார்வதி சுப்பிரமணியருக் கருளிச்செய்யக் கூர்மைபொருந்திய வேலாயுதத்தைக் கரத்தில்வைத்திருக்கும் சுப்பிரமணியர் கருணையுடன் சனற்குமாரருக்குத் திருவுளம்பற்ற அந்தச் சனற்குமாரைப் பணிந்து முறைமையாக பக்தியுடன் உபதேசம்பெற்றதை முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் சொன்னான் இத்தன்மைவாய்ந்த குய்யதீர்த்தத்தின் பெருமைமையையாவராலறியக்கூடுமென்று வியாசர் சயிமினி பகவானுக்குரைத்தார்—எ-று. (௭)

இரைக்கட லெனுமத்தீர்த்தஞ் செப்பிடற் றிசைகடோறு
முரைத்த யோசனையினெல்லை புரைத்ததெய்வி-த்துமோரும்

வரைக்கரும் பவங்கணீங்கி மாசிமா மகத்துமூழ்கி
னரைக்கர வசைத்தகன்ப வருட்பதம் பெறுவதிண்ணம்.

இ-ள். அலைகளோடும் கூடிய சமுத்திரமென்றுசொல்லும் அந்தக்குய்யதீர்த்தத்தில் தெற்குவடக்கு கிழக்குமேற்கு இந்நான்கெல்லையின் பத்துநாழிகை தூரம்வரையி லுள்ளவர்களும் மற்றெங்குள்ளவர்களும் மாசிமகநட்சத்திரத்தில் வந்துமூழ்கினால் அளவிடற்கரிய ஜனனமரணாதி யவத்தைகளை நீங்கி இடையில்பாம்பைக் கச்சாகவணிந்தபரமசிவத்தினது பாதாரவிந்தங்களைப் பெறுவார்கள் இது நிச்சயம்—எ-று. (௮)

கொலைத்தொழில் வடிவோடொய்க்குக் கொள்கலந் தானேயெல்லை
தொலைத்தலெங் களவுவந்து தோற்றிடனே யோயோர்
மலைத்ததீ வினைகள்வாழும் வாழ்க்கையோ னென்னைமாறு
நிலைத்தனி நிரையமெல்லா மிசைபெற வருமோர்நீசன்.

இ-ள். உயிர்களைக் கொள்ளைகொள்ளுங் கொலைத்தொழிலே ஒருருவங்கொண்டு வந்ததோ அசத்தியமென்னுஞ் சரக்குகளைஏற்றுங்கப்பலோ அளவில்லாத் திருட்டுகளெல்லாம்வந்து பிறக்கும் இடமோ கொடும்பாவிகள்செய்யு மகாபாதகங்களெல்லாம் வளர்கிறுக்கும்வீடோ என்னத்தக்கதாக மகாரவுரவாதி நரகங்களை நிலைமையாக அனுபவிக்க வந்த ஓர்சண்டாளனுண்டு—எ-று. (௯)

மாசிமா மகத்துச்சொற்ற வரைபறை யிலாத்தனை
நீசனங் கவனுநன்கு நினைந்திடா னதனின்மூழ்கித்
தேசுறு முத்திசேர்ந்தான் செப்புவ தென்னேவென்று
மேசுவ தில்லாத்தீர்த்த மீதிரண் டாவதென்ப.

இ-ள். முன்சொல்லிய கொடியபாதகனாகிய சண்டாளன் மாசிமாதத்தில் அந்தக்குய்யதீர்த்தத்தில் மூழ்கவேண்டுமென்றுநன்மையாகிய மனதோடும்வந்து மூழ்காமல் விளையாட்டாக மூழ்கினமாத்திரத்தில் கிடைப்பதற்கரிய சிவபதவியை யடைந்தானென்றால் அதின்மகிமையைச் சொல்லிமுடியுமோ ஆதலால் குற்றமற்ற அந்தக் குய்யதீர்த்தம் இரண்டாந்தீர்த்தம்—எ-று, (௰)

தேவர்சூழ் மன்றினுக்குத் தென்றிசை நீசராகி
யாவருஞ் சிலகங்கைப்பா லெய்திடப் பெறுர்களென்று
தாவிலாச் சிரமத்தில்லோர் சாதிபேதத் தோர்மூழ்க
மூவிலை நுனியாவீசன் முயன்றுசெய் தீர்த்தமுண்டால்

இ-ள். தேவர்களெல்லாம் பணிந்து வலஞ்செய்யுந் திருச்சிற்றம்பலத்திற்குத் தென்றிசையில் சண்டாளர்முதலிய யிழிகுலத்தோர்முதலியவர்கள்வந்து முதற்றீர்த்தமாகிய சிவகங்கையில்மூழ்க யோக்கியரல்லரென்றும் சாதிபேதமாகியவர்களுங் குற்றமுற்ற ஆச்சிரமங்களிலிருப்பவர்களும் மூழ்கிக்கடைத்தேறும் பொருட்டுப் பரமசிவன் கைச்சூலமுனையினா லுண்டாக்கிய வோர்தீர்த்தமுண்டு—எ-று. (௧௧)

ஆதிரை மதிதேய்பக்கத் கட்டமி மாதத்தோற்ற
மீதுறு மருக்கவாரம் விதிபாதங் குருவாரங்கூ
டோதியபருவமூன்று தினமுறு மோர்நாண்மூழ்கி
மாதவர்க் கிசைந்ததானம் வழங்கினோர் முத்தராவர்.

இ-ள். திருவாதிரை நட்சத்திரத்திலுந் தேய்பிறைபக்கத்தட்டமியிலும் மாதப்பிறப்புகளிலும் மேன்மையாகிய ஆதிவாரத்திலும் எதிபாதயோகமும் வியாழக்கிழமையும் கூடிய சுபதினத்திலும் தர்ப்பணம் பண்ணத்தகுந்த புண்ணியகாலமாகிய மூன்றுபருவங்களில் எந்தினங்களிலாகிலும்ஓர்நாள்மூழ்கித் தபோதனர்களுக்குத் தன்னாலியன்றமட்டுந் தருமஞ்செய்தாற் சிவபதவியையடைவார்கள்—எ-று, (௧௨)

எப்பரி சோர்க்குந்தீமை யிரிந்திட விறைவன்செய்யு
மப்பெருந் தீர்த்தமுந்நா ளாகமத் தன்னுள்வேங்கை
மெய்ப்பதங் காணலாலே வியன்புலி மடுவென்றுள்ள
தொப்பலத் தீர்த்தமூன்றுந் தீர்த்தமா யுரைத்ததீர்த்தம்.

இ-ள். எவ்வகைப்பட்ட வினையாளர்களுடைய பாபங்களைத்தீர்க்கும்பொருட்டாகப் பரமசிவனுண்டாக்கிய சூலதீர்த்தம் வெகுகாலமாய்த் தூர்ந்திருந்தபடியினால் அதை வியாக்கிரமபாதர் அதைத் திருத்திப் பிரபலமாகச்செய்தமையால் புலிமடுவென்னும் பெயருடையதாய் ஒப்பிலாத மூன்றுந்தீர்த்தமென்று பெயருடையதாயிற்று—எ-று. ()

குழைபொலி ஞானச்செந்தேன் குனிக்குமம் பலத்துமேல்பான்
மழமுனி பூசைசெய்யும் வளர்புலீச் சரத்துமுன்னர்
விழைவுற வுளதன்பேர் வியாக்கிரம பாததீர்த்த
மழகுற வதனைவானோ சேவைசெய் தகலாரென்றும்.

இ-ள். அன்பர்களது பக்திக்குக் கனிந்தொழுகுஞ் சிவந்தஞானத்தேனாகிய சிவானந்தநடனம்புரியும் திருச்சிற்றம்பலத்திற்குமேற்பால் வியாக்கிரமபாதர் பூசைசெய்த மேன்மையையுடைய புலீச்சரலிங்கசந்நிதானத்திற்கு முன்னர் அதியாவலோடும் மெய்யன்போடும் வியாக்கிரமபாதமுனியுண்டாக்கிய தீர்த்தத்தில் அழகுபெறத்தக்கதாகதேவ

ர்களெல்லாம் வந்துமூழ்கிச் சேவித் தெப்போதும் நீங்காமலிருப்பார்கள்—எ-று, (௧௪)

வெய்யவன் சிறந்தவாரம் விதிபாத யோகந்தத்திற்
பையராத் திங்கடன்னைப் பருதியை விழுங்குங்கால
மொய்யல ரத்தீர்த்தத்தின் மூழ்கித்தம் வகைக்கேடான
செய்பதா னங்கள்செய்தோர் தீவினை முழுதுந்தீர்வர்.

இ-ள். சூரியசம்பந்தமாகிய ஆதிவாரம் எதிபாதயோகத்திலும் பொறிகள்விளங்கும் படங்களையுடைய இராகுகேதுக்கள் சந்திரசூரியர்களைத் தொடுகின்றகிரகண புண்ணியகாலங்களிலும் நீலோற்பலாதி மலர்கள் மொய்த்துக்கொண்டிருக்கும் தடாகமாகிய வியாக்கிரபாத தீர்த்தத்தில் மூழ்கிப் பிதுர்தேவதைகளுக்கும் பிரீதியாகத் தன் செல்வத்துக்குத்தக்க தருமங்களைச்செய்தால் அவர்கள்முன் செய்திருந்த பாவங்களெல்லாந்தீரும்—எ-று, (௧௫)

கன்னிஞா யிற்றின்வானக் கறைமதி குறைபக்கத்து
மன்னுமட் டமியின்மூழ்கித் தானமும் வழங்கியங்கண்
முன்னவற் பணியிழையுக ணரைதிரை மூப்பகாலந்
துன்னிறப் பொழியுநாலாஞ் சொற்றகுந் தீர்த்தமீதால்.

இ-ள். புரட்டாசிமாதம் ஆதிவாரங்களிலும் ஆகாசத்தில் வருங்களங்கமுடைய தேய்பிறைபக்கத்து நிலைமைபெற்ற அட்டமிதிதியிலும்அந்த வியாக்கிரமபாததீர்த்தத்தில் மூழ்கித்தன் செல்வத்துக்குத்தக்க தருமங்களைச்செய்து அத் தீர்த்தத்திற்கு மேற்பாலி லிருக்கும் வியாக்கிரமபாத ஈஸ்வரனைப்பணிந்து பூசித்தவர்களுக்கு வியாதிகள் நரைதிரை மூப்புச்சாக்காடும் அணுகாது முன் திருநீலகண்டரும் அவர் தேவியாரும்மூழ்கி இருவரும் மூப்புநீங்கி எவ்வனராகியதால் அந்த நான்காந்தீர்த்தத்துக்கு இளமனூர்தீர்த்த மென்றும் பெயர்வாய்ந்தது—எ-று, (௧௬)

சிதம்பரந் தனக்குமேல்பாற் றிகழுவோர் மடமுஞ்செய்து
பதஞ்சலி யிருந்துபூசை பண்ணலா லவன்பேரேற்ற
விதந்திக ழனந்தீசத்து முன்னரோ விண்ணோர்சூழம்
புதம்பெறச் சேவைசெய்யும் பொலிவுளதனந்ததீர்த்தம்.

இ-ள். சிதாகாசமாகிய திருச்சிற்றம்பலத் திற்கு மேற்பாலில் பதஞ்சலிபகவான் பிரகாசிக்கும்படி ஓர்மடம்புதுக்கிக் கொண்டு அதில் வாசமாயிருந்து வேதாகமவிதிவிளங்க பூசை பண்ணினபடியினால் அனந்தீஸ்வரரென்று பெயர்பெற்ற சிவலிங்க சந்நிதானத்துக்கு முன்னர்

சகலதேவர்களும் அதிசயமாகவந்து மூழ்கித் தானதருமங்கள்செய்து பூசிக்கும் மேன்மையையடைந்து பொலிவுள்ளதாயிருக்கும் அனந்த தீர்த்தம்—எ-று. (கஎ)

பருதிவா ரங்கடோறும் பருவங்க டோருந்திங்கு
ளெருவவா திரையினன்னாள் விதிபாத யோகம்பாந்த
ளிருசுடர் விழுங்குகால மனுவாதி யித்தீர்த்தத்தி
னருளொடு டினரோன்மூழ்த்த ரனையினீ தஞ்சாந்தீர்த்தம்.

இ-ள். ஆதிவாரங்களிலும் அமாவாசைமுதலிய புண்ணியகாலங்களிலும் தீவினைகளையகற்றுந திருவாதிரைநட்சத்திரங்களிலும் விதிபாதயோகங்களிலுஞ் சந்திரக்கிரகண சூரியக்கிரணங்களிலும் மனுவாதியிலும் இந்தத்தீர்த்தத்தில் உள்ளன்புடன் மூழ்கினவர்கள் சிவபதவியடைவார்களாதலால் இவ் வனந்தீர்த்தம் ஐந்தாந்தீர்த்தம்—எ-று.

பெருமைகூ ரனந்தீசத்து மேற்றிசைப் பிலத்துணின்றும்
வருபதஞ் சலிமுன்னன்பால் வந்துதோன் றியதோரெல்லை
பொருவரு நன்மைநல்கும் புண்ணிய நண்ணுந்தீர்த்த
மருவினை யெவையுநீக்கு மதன்பெயர் நாகசேரி.

இ-ள், பெருமைநிறைந்த அனந்தீஸ்வர சந்நிதானத்திற்கு மேற்றிசையில் பாதாளலோகத்திலிருந்து ஆதிசேடனே பதஞ்சலிமாமுனியாகிச் சிதம்பரத்திற்குவந்த பிலத்துவாரமாகிப் புண்ணியசொரூபமாய் இணையில்லாதமகிமையையுடையதீர்த்தத்தில் மூழ்கினவர்களுக்கு எண்ணிய காரியங்களெல்லாங்கைகூடி நன்மையைத்தந்து மகாபாதகங்களை எல்லாநீக்கும் பெற்றியையுடையநாகச்சேரியெனனும் பெயர்பெற்றதீர்த்தம்—எ-று, (க௯)

அருளுடன் கன்னிமாதத் தைம்பரு வங்களாதன்
மருவுமா யிலியம்வெய்யோன் வாரத்தி னுதலந்தக்
குருமலர்த் தீர்த்தமூழ்கிக் கூடிய தானஞ்செய்தோ
ரொருவுவர் வினையையாராந் தீர்த்தமீ துணர்வாண்மிக்கோய்.

இ-ள். புரட்டாசிமாதத்தில் அமாவாசைபவுரணை முதலியஐந்துபருவகாலங்களிலும் ஆயிலிய நட்சத்திரங்கூடிய ஆதித்தவாரத்திலும் நன்னிறம்பொருந்தியமலர்களையுடைய நாகச்சேரிதீர்த்தத்தில்பக்தியுடன்மூழ்கித் தனக் கியன்றமாத்திரந் தானதருமங்கள் செய்தாற்கொடியபாவங்களை யெல்லாமகற்றும்மகிமையையுடையநாகச்சேரி என்னும்ஆறுந்தீர்த்தம் மிகுஞானமுடையசயிமினியே கேளென்று வியாசபகவான் திருவுளம்பற்றினர்—எ-று. (௨௦)

மங்டிலான் மன்றினுக்கு வடகுட திசையின்வானோ
ரிட்டமாம் பிரமதீர்த்தத் தெழிற்றையுண் மதிதேய்பக்கத்
தட்டமி மனுவினாதி யுகாதியி லன்பான்மூழ்கிச்
சிட்டர்பாற் றானஞ்செய்தோர் சிவகதி சென்றுசேர்வார்.

இ-ள், அளவிலாப்புகழ்படைத்த திருச்சிற்றம்பலத்துக்குவாயுதிக்கில் தேவர்களுக்கு விருப்பமாகிய பிரமதேவன்பூசித்த பிரமலிங்கத்திற்கு முன்னர் பிரமதீர்த்தம்விளங்கும் அத்தீர்த்தத்தில் அழகிய தைமாதத் தேய்பிறைபக்கத்து அஷ்டமிதிதியிலும் மனுவாதியுகாதிகளிலும் பக்தியுடன்மூழ்கிப் பெரியோர்களுக்குத் தானதருமங்களைச் செய்தவர்கள் மகா பாவமெல்லாம் நீங்கிச் சிவகதியையடைவார்கள்—எ-று, (உக

சிறந்தவித்தீர்த்தவாவித் தீரத்திற் பூசையோம
மிரந்தமந் திரசவிற்றி நிகழ்த்திடினொன் றனந்தமங்க
ணுறைந்தவீ சனைப்பணிந்தா லுன்னிய தெய்துமன்னா
லறைந்தவிப் பெரியதீர்த்த மதனையே ழாவதென்ப.

இ-ள், சிறப்போங்கிய அப் பிரமதீர்த்தத்தில்மூழ்கியும் அவற்றுற்சிவபூசை ஜெபதப ஓமங்கள்செய்தால் ஒவ்வொன்று அனேகபலன் கொடுக்கும் அவணெழுந்தருளியிருக்கும் பிரமலிங்கத்தைப் பூசித்துப் பிரார்த்தனை செய்து கொண்டால் அவர்கள் எண்ணிய வெண்ணங்களும்தக்கவரங்களும் சித்திக்குமென்று பரமசிவன் உபதேசித்தது இத் தன்மையையுடைய பிரமதீர்த்தம் ஏழாவதுதீர்த்தம்—எ-று

மதாசல முரித்தோன்வைகு மன்றத்து வடபாலுன்னிற்
பிதாமகன் பிரிவாய்வைகு ம பிரமசா முண்டிமுன்னர்
சுதாசனர் புகழோர்தீர்த்தந் தோய்ந்தவர் தம்பாலீசன்
சதாமகிழ் தரலானுமத் தான்சிவப் பிரியையாமால்.

இ-ள். கஜமுகாசுரனை யுரித்துப் போர்வையாகத் தரித்துக்கொண்ட அம்பலவாணமூர்த்தி எப்போதும் ஆனந்தநடனஞ்செய்யுந் திருச்சிற்றம்பலத்திற்கு வடபாலில் பிரமதேவ னொருகூறாகப் பிரமசாமுண்டி யென்னுஞ் சத்திரூபமாகி மேற்றிசைநோக்கிய சந்நிதானமாய் எழுந்தருளி யிருக்குந்தில்லையம்மனுக்கு முன்னர் ஒரு தீர்த்தமுண்டு அத்தீர்த்தம் அமிர்தபானஞ்செய்யுந் தேவர்களுந் துதிக்கத்தக்க மகிமையைப்பெற்றது அதில் மூழ்கினவர்களிடத்தில் பரமசிவனெப்போதுஞ் சந்தோஷிக்குந் தன்மையினால் சிவப்பிரியை என்னும் பெயரையுடையது—எ-று. (உஉ)

மாதங்க டன்னிற்செய்யோன் வாரங்க டோறுமூழ்கி
னூதங்க டந்தஞான நாடக னளவிலாத
வேதங்க டந்தநம்பன் வீட்டின்பந் தருவன்சேர்ந்தோ
ரேதங்க டங்காதீர்த்த மெட்டாவ தென்னுங்காலே

இ-ள். மாதமாதங்கடோறும்வருஞ் செவ்வாய்க்கிழமைகளில் அச்சிவப்பிரியை என்னுந் தீர்த்தத்தில்மூழ்கிப் பிரமசக்தி யாகிய தில்லையம்மனைத் தரிசனஞ்செய்து சபாபதியைச்சேவித்தால் நாதாந்தமாகிய ஞானானந்தநாட்டியஞ்செய்து அநேக வேதங் களையும் படைத்தருளிய பரமசிவன் சிவானந்தத்தையருளுவன் மூழ்கினவர்களது பாவங் களைப்போக்கிப் பரிசுத்தராக்கும் இச் சிவப்பிரியை யெட்டாவது தீர்த்தம்—எ-று. (௨௪)

விளங்குமிக் கதற்குத்தென்பால் வியாக்கிர பாதனல்கு
முளம்பர மற்களித்த வுபமன்னி யற்குச்சென்னி
யிளம்பிறை வளைந்தோன்றந்த திலகுபாற் கடலென்றெங்கும்
வளம்பெறப் புகழுந்தீர்த்த மதனையார் வழுத்தற்பாலார்,

இ-ள். மிகப் பிரகாசம் பொருந்திய சிவப்பிரியைஎன்னுந்தீர்த்தத்திற்குத் தென்றிசையில் வியாக்கிரபாதர் புதல்வராகிய உபமன்னியபகவான் றன் னிதயாரவிந்தத்தில் சபாபதியை எப்போதும் நிலைமையாக விருத்திக்கொண்டு பசிக்குப்பால் வேண்டுமென்றழுதபோது மூன்றாம்பிறையைத்தரித்த சடாமகுடத்தினையுடைய பரமசிவன் றிருப்பாற்கடலை வருவித்துக் கொடுத்த தீர்த்தம் அத் தீர்த்தத்தின் மகிமாதிசயங்களை யாவராலுந்துதித்து முடியாது—எ-று (௨௫)

ஓதரும் பரமஞானத் துயர்ந்துப மன்னியன்றான்
மாதவர் வானோர்காணா வரம்பிலா மகங்கடாய்ந்து
சீதரன் கண்ணன்வாசு தேவன்றன் சென்னிதன்னிற்
பாதம்வைத் தருளினனப் பாற்கட லாடியன்றே,

இ-ள். திருப்பாற்கடலாகிய வத்தீர்த்தத்தில் உபமன்னியபகவான் மூழ்கியும் பானமுஞ்செய்த மகிமையினால் சொல்லுதற்கரியமேலாகிய சிவஞானமிகுந்த தபோதனர்களாலுந் தேவர்களாலும் அறிதற்கரிதாகிய அநேக சிவாகமங்களை ஆராய்ந்து வசுதேவன்றனையனாகி உருக்குமணிமனோகரனாகிய ஸ்ரீ கிருஷ்ணதேவன் சிவதீட்சை யில்லாமற் சிவபூசைசெய்வதைப்பார்த்துஇப்பூசையைச்சிவன் ஆட்கொள்ளாரென்று வேதாகமங்களைப்போதித்து சிவதீட்சைசெய்து அவர்சிரசில்பாதாரவிந்தங்களைச் சூட்டிப் பின்னர் சகலமுனிவர் களுக்குஞ் சிவஞானபோதனைசெய்து மகிமையைப்பெற்றார்—எ-று. (௨௬)

மேற்கடவுளர்கள்போற்ற வியன்முனியுண்டுமூழ்கும் ஙம
பாற்கடற் றீர்த்தஞ்சென்று படிந்தவர் பயன்களெல்லா ௪௨
மாற்கட வரையுரித்தோன் வழங்குறப் பெறுவரீது
நூற்கடன் முறையாலொன்ப தாவதா நுவலற்பாற்றே

இ-ள். மேன்மை பொருந்திய தேவர்கள் பணிந்து தோத்திரஞ்செய்யும் உபமன்னியபகவான் மூழ்கிப் பானஞ்செய்த பிரசாதமாகியதிருப்பாற்கடற் றீர்த்தத்தில் மூழ்கினவர்களையும் மனதில்நினைத்தவர்களையும் கரியுரிபோர்த்தவனாகிய பரமசிவன் வேண்டியவைகளைக்கொடுக்கப் பெறுவார்கள் இது சாத்திரத்தின்முறைமையில் ஒன்பதாந்தீர்த்தமாகிய விதன்பெருமையைச்சொல்ல வெளிதோவென்றார்—எ-று.()

ஆனந்த சபைக்குக்கீழ்பா லானந்த வடிவமான
வானந்தை கூவலானு ளதனைமுன் பார்த்துப்பார்த்தே
யானந்த நிருத்தஞ்செய்யா நின்றன ரழிவிலாத
வானந்த பரமானந்த கூவமென் றதற்குநாமம

இ-ள், சச்சிதானந்தமயமாகிய திருச்சிற்றம் பலத்திற்குக் கீழ்த்திசையில் ஆனந்தசொரூபமாகிய சிவகாமசவுந்தரியே ஆனந்தக் கிணறுருவாய்ப் பிரகாசிக்கும அந்த விசேடத்தைப் பார்த்துப்பார்த்து ஆனந்தநடன மெப்போதுஞ் செய்துகொண்டு பரமசிவன் ஆனந்தமயமாயிருப்பதினால் அத்தீர்த்தத்திற்கு ஒருகாலத்திலும் அழிவில்லாத ஆனந்தத்தில் மேலாகியவானந்தத்தை தருவதால் பரமானந்தக் கூவமென்று பெயர்பெற்றது—எ-று, (௨௮)

கொடியிடை பரமானந்த கூவமென் றுருக்கொ ண்டதும்
படியிடை நவதீர்த்தங்கள பற்பல தீர்த்தமற்று
மடிமிசை வந்துதாழ்ந்தின் கலகுறு மெனறுலந்த
நெடியவான் றீர்த்தம்போல நினைத்திடி னிகழ்த்தில்யாதோ.

இ-ள். மின்னற்கொடிபோல்விளங்கும் இடையினை யுடைய சிவகாமசவுந்தரியே பரமானந்த கூபமாகத் திருவுருக்கொண்ட அப்பரமானந்தத்தீர்த்த [illegible] தம்பாதலத்தி லுண்டாகிய மற்ற ஒன்பது தீர்த்தங்களும் பார்முதற் பதினான்கு லோகங்களிலுள்ள கங்கை நருமதை முதலிய நதிகளும் காசி ஞானவாவிமுதலிய தீர்த்தங்களும்வந்து பணிந்து வலஞ்செய்யு மகிமையைப் பெற்றதென்றால் அத்தீர்த்தத்திற் கிணையாகநினைக்கில் வேறே தீர்த்தமில்லை—எ-று, (௨௯)

நவமியிற் புகர்வாரத்தி னற்சுடரிரண்டைப்பாந்தள்
கவாதரு நாளினமூழ்கிற் கடுக்கொடு வினைகணீங்கும்

புவமதி வளர்பக்கத்துப் புகர்வாரந் தன்னிலெவ்வோன்
றவையுறு நாளின்மூழ்கி னெய்தொணு நலங்களெயதும்,

இ-ள், நவமிதிதி வெள்ளிக்கிழமை சந்திரகிரகணம் சூரியகிரகணங்களிலும் அத் தீர்த்தத்தைமொண்டு ஸ்நாநஞ்செய்தால் கொடியமா பாதகங்களெல்லாந்தீரும் அமாவாசையிலும் வளர்பிறைச் சுக்கிரவாரத்திலும் மூழ்கினால்கிடைப்பதற்கரியபோகபாக்கியங்க ளெல்லாஞ் சித்திக்கும்—எ-று. (௩௦)

பொருவிலைப் பசிமாதத்துப் புதுமதி வளர்பக்கத்து
வருநவ மியினின்மூழ்கில் வருங்கவி கல்விமெய்து
மொருதின மிடைவிடாம லோராண்டோ ருமூழ்கினெல்லை
யருடரு மங்கீருட்கொண் டவர்கவிக் கரசராவர்

இ-ள், ஒப்பற்ற ஐப்பசிமாதத்தில் வளர்பிறைபக்கத்தில்வரும்நவமிதிதியில் அப்பரமானந்த கூபதீர்த்தத்தில் மூழ்கினால் நூதனமாகப் பஞ்சலட்சணக்கல்வி யுணர்ந்தவர்களாவார்கள் அல்லாமலும் அத்தீர்த்தத்தை ஒரு வருஷம்வரையில் ஒருநாளாயினு மிடைவிடாது பக்தியோடும் அகங்கைபிரமாண முட்கொண்டு வருவராயின் அவர்கள் சகலவித்தைகளுக்கும் ஆசிரியராய்க் கவிவாணர்களாவார்கள்—எ-று.()

சுரர்குரு முனனோராண்டு தூங்கிய மத்துநாளும்
வரனரு ளங்கீர்கொண்டே வாக்கிற்கு மன்னனானன்
திரமிகு மலடியன்பாற் றிருந்தவோ ராண்டேகொண்டா
லரனருட் கன்பனுஞ்சே யலைவறப் பெறுவளன்றே

இ-ள், முற்காலத்தில் தேவகுருவாகிய விபாழபகவான் ஒருவருஷம்வரையில் மிகுபயமத்துடன் நடராஜ னனுக்கிரகத்தினால் அப்பரமானந்ததீர்த்தத்தைப் பானஞ்செய்தமையால் சகலகலைகளை யோதும் ர்க்குத் தானதிபதி யாயினன அதுபோற் பிள்ளை யில்லாமல் ஏக்கங்காண்டு மலடியாயிருப்பவள் மிகுந்த அன்போடும் ஒருவருடம்வரையில் அத்தீர்த்தத்தைப்பானஞ்செய்து வருவளாயின் பரசிவத்துக் கன்பனுகவும் ஞானசாரம்யாவும் வாய்ந்தபிள்ளையைபபெறுவாள்—எ-று.

யாவையும் காமியாம லியல்பினுட் கொண்டோர்வீடு
மேவுவர் மாசிதன்னின் வெண்மதி வளர்பக்கத்துத்
தாவிலா விளக்கங்கொண்ட சதுர்த்தசி மூழ்கிற்றீர்த்த
ராவரீ னைந்தாந்தீர்த்த மாமிஃக றையினம்மா,

இ-ள், எந்த போகபாக்கியங்களையும் விரும்பாமல் நித்தமும் நியமத்துடன் அத்தீர்த்தத்தைப் பானஞ்செய்தவர்கள் மோட்சவீட்டை

யடைவார்கள் அதல்லாமலும் அமாவாசையிலும் எங்கும் வெண்மை யாய்ப்பிரகாசிக்கும் வளர்பிறைபக்கத்துச் சதுர்த்தசிதிதியிலும் மூழ்கி னால் சிவகதியைப்பெறுவார்கள் இந்தப் பரமானந்த கூபமானது பத் தாவது தீர்த்தமென்று சொல்லப்படும்—எ-று. (௨௩)

ஐந்திரண் டாமித்தீர்த்தந் தாடினோர் முத்தரன்றிச்
சிந்தைசெய் தைமாதத்திற் றேய்மதிக் கிறுதிநாளின்
வந்திவை யடைவின்மூழ்கின் மறைமுடி விதுவென்றோது
மாதமில் லாதமுத்தி யடைவதற் கையமின்றால்.

இ-ள். இப்பத்துத்தீர்த்தங்களிலு முழுகினவர்கள் மேலாகியக தியைப் பெறுவார்கள் இதுவுமல்லாமல் துதிக்கப்படுகின்ற தைமாத அமாவாசையில் சிவகங்கைமுதற்கொண்டு இப்பத்துத் தீர்த்தங்களி லும் வரிசையாய்மூழ்கினவர்கள் எக்காலத்திலுங் கெடுதலில்லாத வே தாந்தமுடிவாகிய பரமசிவனிடத்தில் ஐக்கியமாவார்கள் இதற்குச் சந்தேகமில்லை—எ-று, (௩௪)

இன்னன தீர்த்தத்தன்மை யுமையவட் கெமையாளையன்
முன்னரு ளெறியேயானு மொழிந்தனன் மூவாதில்லை
நன்னக ருறைவோரெங்க ணம்பனைப் பிழைத்ததன்றிப்
பின்னறி யாதுசெய்த பிழையினை மூழ்கிற்போமால்.

இ-ள், இவ்வண்ண மகிமையைப்பெற்ற இப்பத்துத் தீர்த்தங்க ளின் பெருமையை எம்மையாட்கொள்ளும் பரமசிவன் பார்வதிதே விக்கு முன்னுபதேசஞ்செய்த முறைமையாகச் சயிமினிபகவானே யானுனக் குபதேசித்தேன் மேன்மைபொருந்திய சிதம்பரதலத்தில் வாசஞ்செய்கின்றவர்கள்சிவனுக்கபராதஞ்செய்தபாவங்களும் அறியா மற்செய்தகுற்றங்களும்இத்தீர்த்தங்களில்மூழ்கினாற்றீர்ந்துபோம்-எ-று,

சுராசுரர் முனிவராதி சொல்லுமெல் லோருமன்பா
னிராமயன் பரமானந்த நிருத்தமுன் னுய்த்தரித்த
பராபர லிங்கந்தில்லைப் பதியினுண் டாக்கிப்போற்றித்
தராதலத் துயர்ந்தாரன்ன சாற்றுவன் றொகுத்துக்கேட்டி.

இ-ள். தேவர்கள் அசுரர்கள் முனிவர்கள் முதலியயாவரும் பக்தி யுடன் சிதம்பரத்தில் நிஷ்களரூபமாகி ஆனந்த நடனஞ்செயயும் அம லவாணமூர்த்தியின் ஆதிகாரணரூபமாகிய சிவலிங்கப் பிரதிஷ்டைகள் செய்து பூசித்துப் பூமண்டலத்தி லுயர்வுபெற்ற மகாமகிமையைய டைந்தார்கள் ஆதலால் அங்கிலையைத் தொகுத்துச்சொல்லுகிறேன் கேளென்று வேதவியாசர் சயிமினிபகவானுக்குரைத்தாரென்-று, ()

DR. U.V. SWAMINATHA IYER

பொதுவினிற் கீழ்பான்மாயோன்போற்றிமுன் கண்டெல்லோர்க்குக்
மதிகமா யினனத்தான மரீச்சுர மதற்குத்தென்சார்
பதுமையா ளங்கணன்கு படைத்தவக் கமலேசத்தை
விதியினிற் பணிந்தோர்சிந்தை விரும்பிய தெய்திவாழ்வார்.

இ-ள், திருச்சிற்றம்பலத்திற்குக் கீழ்த்திக்கில் மகாவிஷ்ணு சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து பூசித்த மேன்மையினால் சகலதேவ களுக்கும் முதன்மையாகிய மகிமையைப்பெற்றார் அந்த அரீச்சுரமென்றும் பேர்பெற்ற சிவலிங்கத்திற்கு அடுத்ததென்றிசையில் இலக்குமி தேவி சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து சகலசெல்வங்களுக்கும் அதிகாரியாயினாள் அக் கமலேசலிங்கத்தை விதிப்படிபூசித்தவர்கள் மனதில் நினைத்தசெல்வங்களை எல்லாம்பெற்று வாழ்வார்கள்—எ-று, (௩௭)

மற்றதன் றென்பாலன்பால் வலாரிமுன் கண்டிதீங்கு
செற்றவிக் கிரீசமீதிற் றெக்கணந் தன்னிலன்னி
முற்றகக் கண்டவக்கி னீச்சுர முயங்கியேத்தப்
பெற்றவர் நினைத்தவெல்லாம் பெறுவராங் கதற்குத்தென்னர்.

இ-ள். அக் கமலேசலிங்கத்திற்குத் தென்பாலில் தேவேந்திரன் பக்தியுடன் இலிங்கப்பிரதிஷ்டைசெய்து குற்றங்கள்தீர்ந்து தேவர்களுக் கதிபதியாயினான் இந்திரீசலிங்கத்திற்குத் தென்மேற்கில் அக்கினிதேவன் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்த அந்த அக்கினீச்சுரலிங்கத்தை விருப்பமாகப் பூசித்தவர்கள் நினைத்தவரங்களெல்லாம் பெறுவார்கள் மேலும் அந்தலிங்கத்திற்குத் தென்றிசையில்—எ-று. (௩௮)

அருக்கன்முன் கண்டிறைஞ்சு மருக்கேசம் பணியிலெங்நோய்
வருக்கமும் போமதற்கு வடகிழக் கிடைநாவல்லி
யிருட்கெடக் கண்டவோங்கா ரேசத்தை நேசித்தோர்நூற்
பெருக்கிடை மூழ்கியாக்கும் பெறுவராங் கதற்குத்தென்சார்.

இ-ள். சூரியன் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து பூசித்த அருக்கேசலிங்கத்தைப் பக்தியோடும் பணிந்தவர்களுக்குச் சகலவியாதிகளுந்தீரும் அந்தலிங்கத்திற்கு வடகிழக்கில் சரஸ்வதிதேவி அஞ்ஞானவிருணீங்கிச் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து பூசித்தாள் அந்தலிங்கத்திற்கு ஓங்காரேசுரமென்று பெயர்பெற்ற அதனைப்பூசித்தவர்கள் சகலகல்விப் பெருக்கமும்பெற்று வாழ்வார்கள் அந்த ஓங்காரேசுரலிங்கத்திற்குத் தென்றிசையில்—எ-று, (௩௯)

வருணன்முன் பிரமகத்தி மாற்றுவான் கண்டிறைஞ்சு
மருள்வரு ணேசமுன்ன ரறையரீச் சுரத்துக்கீழ்பாற்,

திருவளர் நந்தியெம்மான் செய்தநந் தீசஞ்செம்பொன்
னுருமலி பொதுவிற்றென்பா லுள்ளன வுரைப்பக்கேண்மோ

இ-ள். முற்காலத்தில் வருணதேவன் பிரமஹத்தியாதகந் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு பக்தியுடன் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து பரிசுத்தனாயினான் அந்தலிங்கத்திற்கு வருணேசமென்றுபெயர் முன்சொல்லிய திருமால்பூசித்த அரிச்சுரலிங்கத்திற்குக் கீழ்த்திசையில் எம்முடைய கர்த்தராகிய நந்திகேஸ்வரர் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தார் அந்தலிங்கத்திற்கு நந்தீச்சுரலிங்கமென்றுபெயர் இனிச்செம்பொன்னுருவமாகிய திருச்சிற்றம்பலத்திற்குத் தென்றிசையிலுள்ள சிவலிங்கங்களைச் சொல்லுகிறோம் கேளென்று வாதராயணர்சொல்லத்தொடங்கினார்—எ-று. (௪௦)

கந்தன்மா முகன்வசிட்டன் வாமனன் கபிலன்கற்க
னிந்திர சித்துவாலி தாரையோ டெமன்சாமுண்டி
சுந்தர வாலகில்லி யவக்கிரி சுவேதகேசன்
சந்தமார் குழுகள்கண்டோ ரிவைதிற்கச் சபைக்குமேல்பால்.

இ-ள். சுப்பிரமணியன்- விநாயகன் - வசிட்டன் - வாமனன் -கபிலன் - கற்கி - இந்திரசித்தன் - வாலி - அவன் றேவியாகிய தாரை எமன் - துர்க்கை-அழகிய வாலகில்லியன் - வக்கிரி-சுவேதகேசன்முதலிய தேவர்கள் - தபோதனர்கள் - இராக்கதர்கள் - வானரர்கள் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து பூசித்தார்கள் இவைக ளிப்படியிருக்கத் திருச்சிற்றம்பலத்திற்கு மேற்றிசையிலுள்ள சிவலிங்கங்களைச் சொல்லுகின்றோம்கேள்—எ-று. (௪௧)

அகத்தியன் கடவுட்டச்சய னனந்தன்பா ரத்துவாசன்
மிகத்திகழ் கமடன்வாயு வியாக்கிர பாதன்வேதா
மகத்தொழிற் குண்டினன்சாத் திகன்வற்சன் வாட்களன்றீங்
குகத்திகன் கவுசிகன்வா லிகனுருப் பசியென்றுள்ளோர்.

இ-ள். அகஸ்தியன் விஸ்வகருமன் ஆதிசேடனாகிய பதஞ்சலி நன்மார்க்கமுடைய பாரத்வாசன் கூர்மாவதாரனாகிய விஷ்ணுவாயுதேவன் வியாக்கிரமபாதரிஷி பிரமதேவன் யாகாதிகள்செய்யுங் குண்டினன் - சாத்திகன் - வற்சமுநிவன் இவர்களுமல்லாமல் குயத்திகன்-விஸ்வாமித்திரன் - வால்கனை - உருப்பசி என்னும் பெயர்களைப்பெற்றவர்களும்—எ-று, (௪௨)

சித்துருக் கோசங்கண்டு சிறந்தவர் வடபாறன்னி
லநந்திரி வாமதேவ னளகையோன் பிருகுமாணி

பத்திர னளன்வியாதன் பத்திரா கவனுஞ்வேதக்
கொத்துணர் கணைமன்றெய்வச் சதானந்தன் குறிகள்செய்தோர்

இ-ள். முன்சொல்லிய விவர்கள் ஞானசொரூபமாகிய சிவலிங்க ப்பிரதிஷ்டைகள்செய்து மகிமையையடைந்தார்கள் திருச்சிற்றம்பல த்திற்கு வடதிசையில் அத்திரிமகாமுநி-வாமதேவன்-குபேரன்-பிருகு மாமுநி-மாணிபத்திரன்-நளன்-வியாசனாகிய யானும் ஸ்ரீராமன் நான்கு வேதத்தினது உட்பங்களையுணர்ந்த கணமன் கன்மையாகிய புண்ணி யங்களைச்செய்துந் தெய்வத்தன்மைபெற்ற சதானந்தயகாமுநி முதலி யவர்கள் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்தார்கள்—எ-று (௪௩.)

எண்டரு மிவர்களன்றி யளவிலோ ரின்னசெய்தோர்
கண்டவர் போராலுனைமைக் கதிசிவ லிங்காம
மண்டலத் திடைவழங்கு மாதவம் புரிந்தோர்
முண்டத ஞலலவோர்க்கு முறுதிமற் றதில்வென்றன்றோ

இ-ள். எண்ணுவதற்கரிய இவர்களுமல்லாமல் சிவலிங்கப்பிரதி ஷ்டை செய்தவர்கள் அளவிறந்தவர்கள் அவர்கள்பேருடன் ஈசுரனெ ன்னும் நாமங்கூடி அரிபூசித்த சிவலிங்கத்திற்கு அரீசுரனென்றுபெ யர் விளங்கியதுபோல் பூமண்டலத்திற பிரகாசிக்கும் இப்படி லிங்கப் பிரதிஷ்டைசெய்வதினால் மகாபாதகங்கள்நீங்கி மிகுக்க புண்ணியமு ம் கீர்த்தியுமாகிய இரண்டையும்பெற்று இவ்வுலகத்தில சகலபோகபா க்கியங்களும் நினைத்தவரங்களும் முடிவில் சிவபதவியையும் அடைத லைவிட யாவர்களுக்கும் மேன்மையாகிய உறுதிவேறேயில்லை—எ-று.

பெருமறை யுணர்ந்துஞானம் பிறங்கிய முனிவனுஞ்சக்
கருநெறி மாற்றவென்னுங் காதலோர் செய்தவெலலா
மொருவழி தொகுத்துரைத்தே னுரைக்குமிச் சைவலிங்கத்
திருவுருக் கண்டிறைஞ்சிற் சிவகதி யடைதறிண்ணம்.

இ-ள். பெருமைபெற்ற வேதங்களின் பொருளை யுணர்ந்து சிவ ஞானம்பிரகாசிக்கு மனதையுடைய சயிமினிபகவானேமாயாசொரூ பமாகிய ஜனனமரணாதியவத்தைகள் நீர்த்து நித்தியானந்தம் பொருந் தவேண்டுமென்று ஆசைகொண்டவர்களெல்லாம் சிவபிரதிஷ்டைசெ ய்ததை ஒருவாறு சுருக்கமாய்ச்சொன்னேம் வேதாகமங்களெல்லாந்து திக்குஞ் சிவனுங் காதிகாரணசொரூபமாகிய இந்தச் சிவலிங்கப்பிரதி ஷ்டைகளைத் தரிசனஞ்செய்து பூசித்தவர்கள் சிவகதியடைவார்கள் இதுநிச்சயம்—எ-று. (௪௫)

அன்றியுந் தில்லைதன்னி லுறைந்தறி யாதுசெய்ய
துன்றிய வினைகளிந்தச் சுடர்சிவ லிங்கமேச

பொன்றிய கருத்தாற்கண்டன் கிறைஞ்சினோ ரொழிலர்செம்பொன்
மன்றுடையார்ப்பிழைத்த லுய்த்தன்றி மாறாதன்றே.

இ-ள். இதுவுமல்லாமல்மகாமகிமைபொருந்திய சிவலிங்கங்களை ஒருதினமாயினும் மிகுந்த பக்தியுடன்பூசித்துத் தரிசனஞ்செய்தால் சிதம்பரதலத்தில் வாசமாயிருந்து மனதறியாமற்செய்த பாவங்களெல்லாந்தீரும் செம்பொன் னம்பலவாணருக்குச்செய்த குற்றங்களாகிய சிவத்துரோகங்கள் அநுபவியாமற்றீராது—எ-று, (௪௬)

புனிதற்கும் பிழைத்தாற்கோடி புண்ணியஞ் செய்துநீக்க
மனிதரோ வானோர்யாரோ வல்லவ ரில்லையிந்த
கனிதரு மிலிங்கத்துக்கு ளைற்சிதம் பரம்போலெங்கு
மினியவி ளைந்துதீர்த்தத் திலகுயச் செயவக்கங்கை.

இ-ள். தேவர்கள் மானிடர்கள் அநேகங்கோடி நன்மையாகிய தருமங்களைச்செய்தாலும் சிவத்துரோகபாதகங்களைத்தங்களவல்லமையினால் தீர்த்துக்கொள்ள வல்லவர்களல்லர் மிகுந்த பலன்களைக்கொடுக்கும் எல்லாச்சிவலிங்கங்களிலும் சிதம்பரலிங்க மெப்படிஉத்தமோத்தமமோ அதுபோல் சிதம்பரதலத்திலிருக்கும் பத்துத் தீர்த்தங்களில் மகிமைபொருந்திய சிவகங்கையே உத்தமோத்தமம்—எ-று, (௪௭)

பத்தரா யுள்ளாதீர்த்தப் பரிசுகேட் டாடவென்னுஞ்
சித்தமா நீராகிசன் சிவகங்கை வடிவாய்நின்று
*னைக்கை யென்கோவிமா மூலகதகி லெத்தீர்த்தத்து
முத்தம தீர்த்தமீது சதறிய வுரையாமன்றே.

இ-ள், பதினாலுலகங்களிலுள்ள தீர்த்தங்களின் மகிமையை விசாரித்து மூழ்க வேண்டுமென்னுஞ் சிவபக்தர்களது மயக்கந்தீரும்பொருட்டாகப் பரமசிவன்சிவகங்கையாயத் திருவுருக்கொண் டெழுந்தருளியிருக்கிறார் இம்மகிமை எவ்விதத்திற் பொருந்திய தென்றால்பரசிவமே இச் சிவகங்கை உருவங்கொண் டிருக்கின்றபடியினால் பதினாலுலகங் களிலுள்ள தீர்த்தங்களும் இச்சிவகங்கைக்குச் சமானமல்லஇது சத்தியவசனமென்று வேதவியாசர் சயிமினிபகவானுக் குபதேசித்தார்—எ-று. (௪௮)

கற்பதி யவற்றுட்டில்லைநகர்பெரி திமையோர்தம்முட்
பொற்பொது நாதன்மிக்கோன் புவனத்துட் டீர்த்தத்தம்முண்
முற்பட வுயர்ந்ததியான்முன் மொழிசிவ கங்கையென்று
மற்புதத் திவற்றுளொவ்வொன் றனைவர்க்கு மளிக்குமுத்தி

இ-ள். சகலதலங்களிலும் நன்மைபொருந்திய இச் சிதம்பரதலமேயதிகம் அரிபிரமாதி தேவர்களுக்கெல்லாம் தலைமையாகிய நிருத்

சிற்றம்பலத்தில்நடனஞ்செய்யும் அம்பலவாணமூர்த்தியே அதிகம்உலகங்களிலுள்ள சகலதீர்த்தங்களிலும் நா முன்சொல்லிய மகிமையையுடைய சிவகங்காதீர்த்தமேயதிகம் இவ்வகையாகிய விச்சிதம்பரதலமும் அம்பலவாணமூர்த்தியும் சிவகங்காதீர்த்தமும்மூன்றில் ஒவ்வொன்றே யாவர்க்கும் முத்தியைக்கொடுக்கும்மகிமையையுடையது—எ-று.

இத்தகை மூன்றுமோர்பா லியைந்தென் றுலடைந்தோர்
முத்தியிற் புகுவரென்று மொழிந்திட வேண்டுமோவிம்
மைத்தலம் பிறபொழிப்போர் வருந்தியு மன்றுளென்று
முத்தம னாடுந்தில்லை யுறுவதே யுறுதியாகும்.

இ-ள் இப்படி மகாமகிமையைப்பெற்ற தலவிசேடமும் மூர்த்திவிசேடமும் தீர்த்தவிசேடமுமாகிய இம்மூன்றும் ஓரிடத்திற்பொருந்தியிருத்தலினால் சிதம்பரதலத்திற்குவந்த எவர்களும் முத்தியைப்பெறுவாரென்று நான் சொல்லவேண்டுமோ இவ்வுலகத்தில் மகாதவங்கள்செய்து ஜனனமரணாதி அவத்தைகளைப்போக்கி நித்தியாநந்தம் பொருந்தவேண்டுமென்று விருப்பமுடையவர்கள் திருச்சிற்றம்பலத்தில் எப்போதும் பரமசிவன் ஆனந்தநடனஞ்செய்யுஞ் சிதம்பரதலத்திற்கு எத்தனைவருத்தப்பட்டாலும் வந்துசேருகின்றதே துணிவாகிய காரியமாகும்—எ-று. (௫0)

மடலவிழ் பொழில்சூழ்தில்லை மாநக ருள்ளதீர்த்தம்
படரொளிச் சைவப்ரகாசப் பரிசிவற் றன்மையுன்ற
னிடமுறு காதல்கண்டங் கிசைத்தன மென்றான்ஞானச்
சுடரொரு வடிவமான சுகன்றனைப் பயந்ததூயோன்.

இ-ள். இதழ்விரிந்து தேன்களைச்சொரியும புட்பங்களாலுங் கனிகளாலும் அலங்காரம்பெற்ற சோலைகள் சூழ்ந்தசிதம்பரதலத்திலுள்ள பத்துத்தீர்த்தங்களின் மகிமையையும் அரிபிரமாதி தேவர்கள்முனிவர்கள முதலிய எவர்களும் பிரகாசமாகப் பிரதிஷ்டைசெய்த சிவலிங்கங்களின் மகிமையையும் ஓய் சயிமினி பகவானே நீ மிகுதியும் பக்தியுடன்கேட்கும் விசுவாசத்தை அறிந்து சொன்னேமென்று ஞானச்சுடரே ஒருருவமாகிய சுகப்பிரமரிஷியின் பிதாவாகிப் பரிசுத்தராய்விளங்கும் வேதவியாசர் திருவுளம்பற்றினரென் றசூதமகாமுனி நைமிசாரணியத்தில் சவுனகாதிமுனிவர்களுக்கு உபதேசித்தார்—எ-று. (௫௧)

---

தீர்த்தச் சருக்க முற்றும்.

பாயிரம் உட்படச் சருக்கம் ஏழுக்குத் திருவிருத்தம்—௫௨அ.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஏழாவது

# திருச்சிற்றம்பலச்சருக்கம்.

———0*0———

ஐஞ்சீரடி யாசிரிய விருத்தம்,

தேடரும்பலந் தரும்பெருந்தீர்த்தத்தின் பெருமை
கூடுமாறுரைத் தனைமுனிக்குறிகரி தான
வாடகஞ்செறிந் திலங்குசிற்றம்பலத் துண்மை
நீடுமாதரம் பெருகுமுனிகழ்த்தலு முனையால்·

இ-ள். கிடைத்தற்கரிய நலங்கள்செய்தாலும் அடைதற்கரிய மகாபலன்களைக்கொடுக்கும் சிவகங்கைமுதற் பத்துத் தீர்த்தங்கள் அப்பயனை நீ, பெறும்விதமாகச்சொன்னோம் இனிமேல் மனதினால்நினைத்தற்கரியதாய்த் தங்கமயமாய்ப்பிரகாசிக்குந் திருச்சிற்றம்பலத்தின்ரகசியப்பொருளினுண்மையை அவாமேன்மேலும் வளரச்சொல்லுகிறோமென்று வேதவியாசர் சயிமினிபகவானுக்குந் தனக்கும் போதித்தவண்ணம் சூதபுராணிகர் நயிமிசாரணியத்திலே சவுனகாதிமுனிவர் களுக்குச் சொல்லத்தொடங்கினார்—எ-று (க)

வாதராயணன் புகன்றிடமகிழ்ந்துமெய்ஞ்ஞானப்
போதமாகவச் சயிமினிபுளகமெய் போர்ப்பத்
தாதுலாவிய தாமரைத்தடங்கணீர் பொழிய
மீதுகைத்தலங் குவித்தொருவிண்ணவுரை செய்தான்.

இ-ள். இலந்தைவனவாசியாகிய வியாசபகவான் சொன்னவுடன் ஆனந்தம்பெருகிச் சிவஞானபோதத்தைப் பெற்ற மகா தபோதனனாகிய சயிமினிமுனிவன் ஆனந்தபரவசத்தினால் மயிர்க்கூச்செறிந்து பராகங்களினால் அலங்காரம்பெற்ற செங்கமலம்போன்ற கண்களிலே ஆனந்தநீர்சொரிய சிரமிசை இரண்டுகைத்தலங்களையுங்குவித்துக்கொண்டு ஒரு விண்ணப்பஞ் செய்யத்தொடங்கினார்—எ-று, (உ)

நாரணன்கம லாசனன்முதலியர் நாடும்
வாரணங்குற வளர்மூலமலைமக ளுடனெங்
காரணன்கயி லைக்கிரியுளனெனக் கழறு
மாரணங்களு மாகமபேதமு மனைத்தும்,

இ-ள். மகாவிஷ்ணு கமலாசனனாகிய பிரமதேவன் முதலிய தேவர்களும் தரிசனஞ் செய்யும்படி கச்சுக்குளடங்காக் கனதனகலசங்க

லைப்படைத்த பார்வதிதேவியுடன் ஆதிகாரண கர்த்தனாகிய பரமசிவ ன் கொலுவிலெழுந்தருளி லீலாவிநோதமா யெப்போதுங் கயிலாசத் தில் வீற்றிருக்கிறானென்று நான்குவேதங்களும் இருபத்தெட்டுச்சிவா கமங்களும் பதினெண்புராணங்களும் இதியாசமாகிய பாரதமுதலிய வைகளும் சொல்லுகின்றன—எ-று. (௩)

சொற்றதின்னவை யுன்றியுஞ் சுராதிபர்முனிவர்
மற்றுமுள்ளவர் யாவருங்கண்டெதிர் வணங்கப்
பெற்றுமீடாக் கண்டனை மெண்டகுபெரியோ
யெற்றைநாளினு முளதிற் கில்லையாமையம்.

இ-ள். வேதாகமங்களிற் புகலுவதல்லாமலும் தேவாதிதேவர்கள் தபோதனர்கள் தெய்வத்தன்மைபெற்ற மற்றவர்களெல்லாரும் கயிலா யத்தில பரமசிவனைத் தரிசனஞ்செய்து தெண்டனிடப்பெற்றும் வரு கிறவர்களது ஒப்புவமையில்லாத வைபவங்களை கண்ணாரக்கண்டோ ம் முனிவர்களில் எண்ணத்தக்க மேன்மையைப்படைத்த பெருமை யையுடையவனே எக்காலத்திலும் உண்டாகிய இக்கயிலாய வைபவத திற்குச் சந்தேகமில்லை—எ-று. (௪)

அன்றியுஞ்சிவ பரம்பர னனவரதமும்பொன்
மன்றினீடருள் வடிவமாய் மலைமகள்காணத்
தன்றனிச்சையிற் றழைத்தவா னந்ததாண்டவமே
யென்றுமெய்ப்பறப் புரிகுவனென்றினி திசைத்தாய்,

இ-ள். கயிலாயத்தில் பரமசிவன் பிரசன்னமாகி எழுந்தருளி யி ருப்பதுமல்லாமல் எப்போதும் பாவதராஜ குமாரியாகிய சிவகாமசவு ந்தரிகண்டதிசயிக்கத் தங்கமயமாகிய தருச்சிற்றம பலத்தில் பஞ்சகி ருத்தியங்களும் நடக்கும்பொருட்டு மிகுந்த கருணையோடு ஞானரூப மாகித் தனக்குத்தானே விருப்பங்கொண்டு ஆனந்ததாண்டவமே உ லகத்திற்கிதமாக ஒப்புவமையில்லாமல் எக்காலுஞ்செய்துகொண்டிரு க்கிறானென்று இனிமையாகத் தேவரீர்திருவுளம்பற்றினீர்—எ-று. (௫)

அன்றுபோரு ளுடையநீ துகளறபபுகன்ற
தென்றுமுண்மையே யாயினு முணர்ச்சியின்மையினு
மின்றெனக்கைய மில்வுறா யிகதமைதீர
வுன்றனித்திரு வாக்கினு லுரையெனவுரைத்தனன்.

இ-ள். அடங்காத கருணையையுடைய தேசிகனே தேவரீர் களங் கமற உபதேசித்தது எப்போதும் மெய்யையாயிருந்தாலும் என் பு த்தியிற்பொருந்தவில்லை இவ்வார்த்தையிலோர் சந்தேகந்தோன்றியிரு

ப்பதால் அவை நன்றாய்த் தெளியத்தக்கதாகத் தேவரீர் திருவாய் மலர்ந்தருளிச் செய்யவேண்டுமென்று சயிமினிபகவான் பிரார்த்தித்துக்கொண்டார்—எ-று. (௬)

மதியினாலுயர் சயிமினி வாசகங் கேளா
வதிசயத்துட னருளொடு மகமிகமகிழ்ந்து
விதிவிடாமறை நெறியெலாம் விளம்பியவாக்கான்
முதிருமாதவ னிறைதிரு வருட்கடன்முழுக.

இ-ள். புத்தியினாலுயர்ந்த உத்தமனாகிய சயிமினி வசனத்தைக் கேட்டவுடன் ஆச்சரியமாகி மிகக்கருணையோடுளமகிழ்ந்து சகலதருமமுறைகளையுஞ் சொல்லப்பட்ட நான்குவேதங்களையும் பகுத்துச்சொல்லிய திருவாக்கினும் தபோதனராகிய வியாசபகவான் பரமசிவனது அழகிய கருணைசமுத்திரத்தில் கலந்தவராயினார்—எ-று. (௭)

மூலகாரண மாகியமுதல்வனை முன்னை
மாலகீளிலைப் பாயலோ னம்பினால்வினாய
தேனுமிவ்வுரை நன்றநீ கேட்டனையெழில்கூர்
சீலமாதவ கேளெனச் செப்பன்மேயினனால்.

இ-ள். பூர்வம் ஆலிலையிற்றுயின்றோனாகிய விஷ்ணுவானவர் ஸ்ரீ கயிலாயத்தில் ஆதிகாரணசொரூபனாகிய பரமசிவனைப் பக்தியுடன் வணங்கிக்கேட்ட உத்தரத்தைப்போல நீ இப்போ தென்னை அந்த நன்மையாகியவசனஞ் சொல்லச்சொல்லிக் கேட்டாய் அழகுபொருந்திய ஞானதபோதனனாகிய சயிமினியே கேளென்று பரமாசாரியர் சொல்லத்தொடங்கினார்—எ-று, (௮)

தெரிவரும்பெரு மறையெலாந் திரண்டதோவுயர்ந்தோர்
புரியுநல்லற வடிவமோ பொலிவுறுமமுதன்
கிரியுருப்படைத் தெழுந்ததோ கிளக்குமாறென்னோ
வரியயற்கரி யானுறை யணிக்கயிலாயம்,

இ-ள். காண்பதற்கரிதாகிய வேதங்களெல்லாந் திரண்டு திருவுருக்கொண்டதோ பெரியோர்கள்செய்யும் நன்மார்க்கங்களாகிய தருமங்களெல்லாஞ் சொரூபங்கொண்டெழுந்ததோ பனிக்கூட்டங்களெல்லாங்கூடி யோருருக்கொண்டெழுந்ததோ அரிபிரமாதி தேவர்களாலுங் காண்பதற்கரியவனாகிய பரமசிவன் எழுந்தருளி யிருக்கும் கயிலாயத்தின் விபவத்தை நான் என்னென்று புகழுவேன் எனனும் றுதித்து முடியுமோவென்று வியாசபகவான் அதிசயித்தார்—எ-று, (௯)

படியிலக்கிரி வினைத்துறப் பணிந்துசொல்லிமையோர்
முடிதயங்குபொற் றொடையிக விழ்ந்தனமுயங்கு
நெடியகோடரப் பாதவ நிறைமலர்ப்பூத்த
கடிவிளங்கிய கடுக்கையங் கானமேயனைய.

இ-ள், சுத்தஞான சொரூபமாகிய கயிலாயகிரியைக் கண்டுசீக்கி
ரமாகப்பூமியில் ஆசாரமுறைப்படி தெண்டனிட்டுப் போகின்றதேவர்
களினது கிரீடங்களில் அணிந்திருக்கும்பொன்னிற மாகிய மந்தாரம
லைகள் கழுவி வரிசையா யெங்குமெழுந்து உயரமாகிய கொம்புகளை
யுடைய மரங்கள் நிறையைப்பூத்துவாசனைதங்கி விளங்கும்கொன்றை
க்காடுபோற் பிரகாசிக்கும்—எ-று. (௧0)

முருகார்தாமைதன் செவித்துணை முறைமுறையன்பாற்
பருகுமாவெதிர் பாடுநர் பாட்டிசைதன்னாற்
பொருவில்வெள்ளியங் குவடுகள் புளகமோடிளகி
யுருகியோடலபோன் மருவுவெள் ளருவிகளுளவால்.

இ-ள் சுப்பிரமணியர் பிதாவாகிய பரமசிவன் தனது அழகிய
செவிகளினால் இசையாகிய ரசத்தைப் பானம்பண்ணத் தும்புருநார
தர் கின்னரர் கிம்புருடர் முதலியவர்கள்சந்நிதானத்தில் எதிரினின்று
பக்தியுடன் வரிசையா யவரவர்கள் பாடும்பாடலின் இராகத்திற்குளைப்
பற்ற வெள்ளிமலையின் சிகரங்க ளானந்தமடைந்து பூரிததிளங்க க
னிந்து உருகி ஒழுகுவதுபோல் வெண்மையாகிய அருவியாறுகள் வி
ளங்கும்—எ-று. (௧௧)

கங்கையாயிர முகத்தினாற் கண்ணுதற்கலந்த
பொங்குபேருணா பொறுவளைப் பொலிந்தகாளிந்தி
நங்கைபெண்ணிலா முகத்தினா னன்னலேபோலுந
துங்கமாமதந் திசைதொறும் பெருகியசூழல்.

இ-ள். பரமசிவன் றிருவாக்கினால் பிறந்த வேதங்களின் பொரு
ள்போல் கங்காநதி ஆயிரமுகங் கொண்டு சிவனோடு கலந்திருப்பதை
எழுமேலாகும யமுனாநதிகண்டு மனம்பொறாமல் எண்ணிக்கைப்படா
த முகங்கொண்டு சிவபெருமானைக் கலந்ததுபோலக் கஸ்தூரி பரந்து
திசையெங்கும் வாசனைவீசி விளங்கும்—எ-று. (௧௨)

கதிகொணெய்தல்செங் காலங்க ணினாதிரைகலந்த
நெடியவான்சுனை யுமையிறை நிகர்த்திடும்பவளக்
கொடிபடர்ந்தவெண் சிகரியிற் குதிகொள்பேரருவி
யடிகள்வேணியுங் கங்கையு மனையசில்லிடங்கள்.

இ-ள். வாசனைபொருந்திய நீலோற்பலங்களுஞ் செங்கமலங்களும் நிரைநிரையாய்மலர்ந்து காந்தியோடு விளங்குங் கயிலாயத்திலுள்ள சுனைகள் இந்திரநீலமணி நிறத்தையுடைய பார்வதிதேவியுஞ் செவ்வானம்போன்ற சிவனுங்கலந்த திருமேனியாகிய அர்த்தநாரீசுவரர் போலவும் பளிக்கொடி படர்ந்திருக்கும் வெண்மையாகிய அருவிகள் ஒப்பற்ற பரமசிவனுடைய சடாமகுடத்தில் கங்காநதி குடியாய்க்கலந்திருப்பதுபோலவும் சிலசில இடங்களில் பிரகாசிக்கும்—எ-று. ()

பாகசாதனன் கடவுளர் பணியுமக்கயிலை
நாகமீதகல் வெளியிடை நண்ணிநண்ணரிய
மாகமூடற வளர்கிரிதிகிரிபாற்கடல்வாய்
மேகசாலங்க ளுலாவிய வியப்பினையக்கும்.

இ-ள். இந்திராதிதேவர்களும் வணங்கித் தெண்டனிடுங் கயிலாயகிரியின்மேல் ஆகாயம்வரையிலுமுயர்ந்து வளர்ந்து சஞ்சரிக்கின்ற யானைகள் எங்குமிடமில்லாமற் சூழ்ந்து நெருங்கிவருவது திருப்பாற்கடலில் முகிற்கூட்டங்கள் படிந்துதிரிவதுபோற் புதுமைகளை விளைவிக்கும்—எ-று. (௧௪)

விஞ்சுவெண்பளிக் கலிடை விநம்பரம்பையர்செம்
பஞ்சுதோய்பதச் சுவடுசெம் பதுமமென்றயல்சூ
ழுஞ்சுனைக்களு ரலரொழித் தளிகண்மொய்ப்பனபார்த்
திஞ்சொலன்னவர் குறுநகை யளமுறுமொருசார்.

இ-ள். அதிகவிசாலமும் வெண்மையுமுடைய பளிக்குக்கற்களினிடையில் அரம்பைமாதர்களது செம்பஞ்சூட்டின அடிச்சுவடுகள் பொருந்தி இருக்கப் பக்கங்களிற் சுனைகளிலுள்ள மலர்களின்தேனைப் பருகும் வண்டினங்கள் அம்மலர்களைவிட்டெழுந்து ஸ்ரீகளினது அடிச்சுவடுகளைச் செந்தாமரைமலரென்று மொய்க்கும்விநோதத்தை இனியதேவாமிர்தம்போன்ற வசனங்களையுடைய தெய்வகணிகையர் நோக்கிச் சிரித்துக்கொண்டிருப்பார்கள் சில இடங்களில்—எ-று. (௧௫)

இறுதியிக்லவற் றொழுக்கிரி யெழுந்தவெண்சுடர்மேற்
குறுகிநீண்டெழும் விண்ணவர் விமானகோடிகடா
மூற்றமூழ்கிரைப்பெருங்கடல் மூழ்கியுமுதித்து
முறுவிலாதவ ரிதரமேல வயங்குவபோலும்.

இ-ள். பிறப்பிறப் பில்லாத கயிலாசநாயகனைச் சேவைசெய்யும்பொருட்டு அதிவெண்மைபொருந்திய கயிலாசகிரிக்கு வந்துபோகின்ற விமானங்களிலுள்ள தேவர்கள்வழிகாலத்தி லெழுகடலு மொன்

றாய்ப் பொங்கிப்பெருகிச் சத்தியலோகக்கடியில் அலையடித்துக் கொண்டிருக்கின்றபோது தேவர்கள விமானம்விட்டிறங்கி மூழ்கியும் எழுந்துங் குற்றமற்றவர்களாய் விமானத்தின்மீதேறிப் பிரகாசிப்பவர்களைப்போல் விளங்குவார்கள்—எ-று. (௧௬)

வயங்குமண்டமே லக்கிரி யெளியெழூன்மார்பிற்
புயங்கமைம்பிகைக் கன்புசெய் வதுடைப்ருளவெணி
யிடங்குகங்கையாள் பிறங்கக் தெழுதல்போன்றும்வான்
முயங்குதாரகை யந்தரி யொக்குவேளையொக்கும.

இ-ள் அக்கயிலாச கிரியின் வெண்மையாகிய பிரகாசம் ஆகாயமெங்கும் பரவியிருப்ப தெப்படியிருந்த தென்றால் டாயகத் தாவாபரணமணிந்த சங்கரனை மலைமகளாகிய உமாதேவிக் கிடங்கொடுத்து உபசரிக்கும் லீலாவிநோ கத்தைச் சடாமகுடத்தி லிருக்கும கங்கை பார்த்து மனம்பொறாமல் தான்உற்பவித்த இல்லாமாகிய ஆகாயத்திற்குப் போவதுபோலவும் அவ்வனமிலங்கு நட்சத்திரங்கள் அங்கிரகுமிழிபோலவும் விளங்கும்—எ-று, (௧௭)

விடைகாப்பெருங் கடவுளா விமானமொன்றொடொன்
றூடுதாக்கிய முழக்கமு மொடுங்கமேல்கிளருவ
கோடுகட்டிய முகனிகர் குஞ்சரமுழக் கந்
தேடுமாற்கரி யானுறை திருமலைச்சூழல,

இ-ள், வாராகவுருவமெடுத்துத் தேடியதிருமாலும் அறிதற் கரியவனாகிய பரமசிவனெழுந்தருளியிருக்குங் கயிலாசகிரிச் சூழலில் பெறவாப் பெருமை பெற்ற தேவேந்திராதி தேவர்களின் விமான கோடிகணெருங்கி ஒன்றோடொன்றுதாக்கும்ஓசையடங்கும்படி பூமியைக் கொம்பினாலெடுத்துச் சமுத்திரத்தின்மேற் பிரகாசிக்கும் படியாய் வைத்த வெண்மை பொருந்திய ஆதிவராகத்தைப்போல் முகத்தையுடைய ஐராவதமுதலிய யானைகள் வீறிடும் ஓசைகள் முழங்கிக் கொண்டிருக்கும்—எ-று, (௧௮)

விடையுயர்த்தவத்தவற் றொழுவெழு விண்ணவாமகுடத்
தொடையுமாலய ரூர்தியிற் றுதைக்துகிராசிறகுங்
கடவுளீசனூர் குஞ்சரக் கனிமதச்சுவடு
மிடைவிடாதன வங்கிரி யெழில்வழியெலலாம்

இ-ள். இடபக்கொடியை யுடைய பரமசிவனுக்குத் தெண்டனிட்டெழுந்த தேவர்களின் கிரீடங்களிலணிந்த மந்தார மாலைகளும் விஷ்ட்டுணு பிரமதேவன் வாகனங்களாகியகருடனிடத்தினின்றும அன்னத்தினிடத்திருந்தும உதிர்ந்த இறகுகளும தேவர்களுக் கரசனுகிய

தேவேந்திரன் ஏறும் ஐராவதத்தின் மததாரைக ளொழுகிக்கிடக்குஞ் சேறுகளும் அக்கயிலாசகிரியெங்கும் இடைவெளி யில்லாமல் நிறைந்து பிரகாசிக்கும்—எ-று. (கசு)

அண்டர்நாயகற் பணிதரக் காலமென்றுணர்ந்து
கண்டபேர்புகன் மொழிவருங் கடவுளர்செங்கை
முண்டகங்கட்கு முகவனை சங்கட்கு * முமதி
கொண்டபேரொளி யிரவியேபோ குவிந்தலர்ந்தனவால்.

இ-ள், தெய்வங் களுக்கெல்லாங் கர்த்தனாகிய பரமசிவனது சமயமறிந்து தரிசித்துவருபவர்கள் உற்பசமயமென்று சொன்ன வுடனே நந்திகேஸ்வரர் உத்தாரப்படி சிவசந்நிதானத்திற்கு வருகிறபோது சாம்பசிவனது இடக்கண்ணாகிய சந்திர கிரணத்தினால் தேவர்களின் கரங்களாகிய செந்தாமரைகள் சிரமிசைகுவிந்தன வலக்கண்ணாகிய அதிக ப்ரகாசம்பெற்ற சூரியகிரணத்தால் அத்தேவர்கள்முகங்களாகிய தாமரைகள் மலர்ந்தன—எ-று. (உ0)

அடியிறைஞ்சிமீள் கடவுள ரமலனின்றெம்பான்
முடிதுளக்கினன் பார்த்தனன் முகமலர்ந்தனனே,
படியிலாமொழி பகர்ந்தனன் மகிழ்ந்தனனென்று
நெடியபேரொலி மறைமொழி சிறுதெனவியிரும்.

இ-ள், சிவபெருமானது வைபவங்களைத் தேவர்கள் தரிசனஞ் செய்து தெண்டனிட்டு நின்றபோது பரமசிவன் என்னிடத்திற் றிருவுளம்வைத்து இன்றையதினஞ் சிரமசைத்தா ரென்றும், என்னைக் கருணாகடாக்ஷத்து ன் நோக்கினா ரென்றும், என்னைப் பார்த்துக் குறுநகை கொண்டாரென்றும், என்னைநோக்கித் திருவாய்மலர்ந்து வெகுவசனம் வசனித்தாரென்றும், என்மேல் மிகச்சந்தோஷ மாயினரென்றும் தேவர்கள் தங்கள் தானங்களுக்குப் போகின்றபோது தப்போபல பாக்ய திசயத்தினால் ஒலைக்கச்சென்று கொண்டாடிக்கொண்டு செல்லும் ஒலியானது வேதங்களினோசையைச் சிறிதாகச்செய்யும்—எ-று. (உக)

கருதுஞ்சாரத ராகியர் கானயாழிசையுஞ்
சுருதியோசையு மக்கரதுந் துமிமுழக்கு
பொருவுமெய்க்கவக் கடியவா சிவாகமகோலியு
மருவுமேழ்கட லோதையின் வளர்ந்தெழுந்தனம,

இ-ள், எப்போதும் தும்புருநாரதாதியர்கள் வீணைவாசிக்கின்ற ஓசையும் வேதகோஷ்டங்களும் ஆகாசத்திற் சேவதுந்துமி முழக்

* முழுமதியென ஞா-மூ-பிர் - பாடம் விகாரமாயிற்று.

கழும் மெய்த்தவருடைய சிவபக்த்தர்கள் பக்திரசத்துடன் மனமுருகிச் சிவாகமங்களைத் தோத்திரஞ் செய்யு மொலியும் இவ் வோசைகளெல்லாங்கூடி எழுசமுத்திரங்களின் ஆரவாரத்தையடக்கி ஓங்கி வளரும்—எ-று, (௨௨)

உலகினுள்ளன வொளியெலா மோரிடத்தெய்தி
யிலகுகோபுர மண்டபந் தெற்றிகளெயில்க
ளலகின்மாளிகை சூளிகை யாயினவென்னக்
குலவுகின்றதக் கிரியினெம் பரம்பரன்கோயில்,

இ-ள், உலகங்களிலுண்டாகிய சூரியன் சந்திரன் நக்ஷத்திரம் நவக்கிரகமுதலிய பிரகாசங்களெல்லாங்கூடி யோரிடத்திற் சேர்ந்து கயிலாசகிரியில் விளங்குங் கோபுரங்கள்-மண்டபங்கள்-மதில்கள்-கர்ப்பக்கிரகங்கள்-சிகரங்கள்-வீதிகளில் மேலணிமாடங்கள் முதலியவைகளாகி நமது கர்த்தனாகிய பரமசிவனுடைய அரண்மனைகளில் அதிக ஒளியாய்ப் பிரகாசிக்கும்—எ-று, (௨௩)

அண்டகோளகைப் பரப்பெலா மலர்கதிர்பரப்புஞ்
சண்டசூரிய ரளவிலார் சாரினங்கவர்முன்
கண்டதாரகைக் கணமெனவொளிகெடச்சோதி
கொண்டமண்டப மொன்றதக் கோயிலினுளதால்.

இ-ள், பரமசிவன் அரண்மனைநடுவில் விளங்குங் கொலுமண்டபம் பிரமாண்டங்களை எல்லாம் விளக்கஞ்செய்யுங் கிரணங்களையுடைய அநேகசூரியர்கள் ஓரிடத்திலொருமிக்க உதயமானாலும் அவைகளினொளிகளியாவு சூரியனுக்குமுன் நக்ஷத்திரங்கள் ஒளிமழுங்கி யிருப்பதுபோல மழுங்க அதிக பிரகாசங்கொண்டிருக்கும்—எ-று: (௨௪)

இன்னபேரொளி யின்னதொப் பெனவிளசக்கரிய
வன்னமண்டப மன்பர்தம் முள்ளமேபோலச்
சென்னியோவதி யோமதிற் றிகழரியணைமேற்
றன்னைநேருமை யுடனருட் டலைவன்வீற்றிருந்தான்,

இ-ள். இவ்வகைப்பட்ட பிரகாசத்தோடுங் கூடித் தனக்குத் தானே ஒப்பாகிவிளங்குங் கொலுமண்டபத்தி னடுவில் அடியார்களாகிய சிவயோகிகளின் இதயகமலமோ வேதங்களின் சிரமாகிய உபநிடதங்களின்முடியோ எனப் பகுத்தறிவதற்கரிய நவரத்தின மயமாகி ஞானசொரூபமாகப் பிரகாசிக்குஞ் சிங்காதனந்தன்மேல் ஒப்புவமையில்லாத சவுந்தரியஞ் சிவஞான வடிவுகொண்ட பார்வதிதேவியுடன் கொலுவிலெழுந்தருளி யிருந்தார்—எ-று, (௨௫)

அடர்ந்த காலவட் டங்களுமொளியலு மசையத்
தொடர்ந்தவிசணி கோவெழுச் சடாமுடிக்கங்கைத்
தடந்திரைக்கொழுந் தெழுந்துவீள் தகையெனப்பாசங்
கடந்ததொண்டர்கண் மருங்குறுக வரிமெய்ச்சாட்ட.

இ-ள். கவரத்தினங்களநெருங்கிய விசிறிகளும் வெட்டிவேர்விசிறிகளும் தேவரம்பையாகளேந்தி வீசுறவும அககாற்றினுற் பரயசிவனது பிரகாசம்பொருந்திய சடாமகுடத்திலிருக்கும விசாலமாகிய கங்கையின அலைகள் புரண்டெழும்பிவிழுவதுபோல் மாயாபாசங்களையறுத்துச சிவபக்தமிகுந்த சிவகணங்களா பக்கங்களிலிருந்து வெண்சாமரைகள் மேலாகவீசவும்—எ-று, (உ௬

தோடலர்ந்தபொன் னிதழியந் தொங்கலுந்திங்கட்
கோடலர்ந்தவெண் சோதியுங் கொடும்பணிச்சுடிகை
மாடலர்ந்தசெம் மணிகளுங் கங்கையும்பவளக்
காடலர்ந்தெனச் சடாடவிக் கதிர்திசைவிளங்க,

இ-ள். இதழ்கள் விரிந்து தங்கநிறத்தை யுடைய கொன்றைமாலைகளும மூன்றாம் பிறையினது வெண்ணிலவி னொளியும், சடைகளைக்கட்டி முடிந்திருக்கின்ற பாம்புகளின படங்களி லொளிரும் நாகரத்தினங் களினது சிவகாந்தியும, கங்காநதியின வெண்மை நிறமும், சடைகளாகிய பவளக்காட்டில் கலந்து திசைகளைப் பிரகாசிக்கச் செய்யும்—எ-று, (உ௭)

மீதுசாத்திய விளம்பிறை விளங்கிய நிலாச்
சோதிதாக்கிய தெனநுதற் புண்டரஞ்சுடர
மாதுபார்த்துள மகிழ்தர வயங்குசெங்கனிவாய்ப்
போதுபூத்தபுன் முறுவலுஞ் செவ்வியும்பொலிய.

இ-ள் சடாமகுடத்திலணிந்த இளம் பிறையினது வெண்மையாகிய பிரகாசம் பரந்திருப்பதுபோல் அழகியநெற்றியில்மூன்றுரேகையாய் விபூதிவிளங்கவும் மலையரசன்மகளாகிய அம்பிகைபார்த்தானந்தம்பெறுக பிரகாசிக்குங் கோவைக்கனிக்கிணையாகிய வாயினிடத்தில் முல்லைப் புட்பங்கள் பூத்ததுபோற் குறுநகை கொண்ட முகத்தினிற் றிருவழகுவளரவும்—எ-று, (உ௮)

செழுங்கதிர்க்கருங் கொடியெனப்புருவங்கடிகழ
பொழிந்தபேரொளி யிடைவிடாதடையுமுச் சுடர்வங்
கெழுந்தலர்ந்தசெந் தாமரையெனவரு ளொளிர்ந்தும்
பொழிந்திருக்கு நயனமுமக்கணும் பொலிய

இ-ள், சிவந்த சூரியனிடத்தில் நீலக்கோடி படர்ந்ததுபோல் புருவங்கள் விளங்கவும் பிரகாசங்களுக்கெல்லாம் இடமாகிய சூரியன் சந்திரன் அக்கினி இவைகள் முக்கண்களாகப் பொருந்தி அலர்ந்த செந்தாமரைபோன்ற முகமும் எவர்களுக்குங் கருணாரசம்பொழியுந் திருநயனங்களும் விளங்கவும்—எ-று. (௨௯)

பேதியாவொளிப் பரிதியாயன்னிரு பெயரு
மேதிலும்பவிப தரிவர்றன்னிமென் றிசைக்குஞ்
சோதிவீசிய க திடைக்குண்டலச் சுடராக
வாதிவாண்முகத் தாமரைக்கயவொளி யெறிப்ப.

இ-ள். ஆயிரங் கிரணங்களோடுங்கூடிய பன்னிரண்டு சூரியர்களும் இக் குண்டலங்களிற் பிறந்தார்களோவன்றி வேறெங்கே பிறந்தார்களென்று சொல்லும்படி குண்டலமாயிருக்கின்ற நாகராஜாக்களுடைய சிரோரத்தினங்கள் மிகுந்த காந்தியோடு ஆதிகாரணனாகிய பரமசிவன் முகாரவிந்தத்திற்கு இரண்டுபக்கங்களிலும் விளங்கஎண்டிசைகளையும் பிரகாசிக்கச்செய்யும்—எ-று. (௩௰)

அண்டம்யாவையு மளிக்கருள்கண்டமு மணிகள்
மண்டுமேருவுஞ் சிறிதெனவளர்புய நான்குந்
துண்டவெண்பிறை நுதற்றிருந் துணைமுலைச்சுவடு
கொண்டகாத்தணி மாலபுமாரமுங் குலவ.

இ-ள், பிரமாண்டங்களையெல்லாங் காத்துரட்சிக்கும் நீலகண்டமும் நவமணிகளுங் கொழிக்கருவிபாயும் பொன்மலையாகிய மேருவும் சிறியதென்றுசொல்லும்படித் திரண்டு பிரகாசியாநின்ற நான்குபுயங்களும் ஒள்ளிய பிறைபோன்ற நுதலும் பார்வதிதேவியின் இருதனங்களுந்தோயுஞ் சுவடுகளாகிய அலங்காரம்பெற்ற மார்பகத்தில் நவரத்தின மாலைகளும் புட்ப மாலைகளுஞ் சிரமாலைகளும் வயங்க—எ-று, (௩௧)

வாகமுந்திக முபயமும்வயங்குறத் தயங்கும்
பாகமானுடன் பங்கயச்செங்கைநீ கொளிர
விரவுபேரொளித் தமணியுவாடைமேல் விளங்க
விரவியெண்ணில ரிநப்பெனச்சேவடி யிலங்க.

இ-ள். அடியார்கள் நினைத்த வரங்களையெல்லாங்கொடுக்கும் அபயாஸ்தமும் தொண்டர்கள் காலன்முதலிய யாவர்களும் அஞ்சாமலிருக்கும்படி விளங்கும் மழுவும் மானும் பிரகாசம் பொருந்திய பீதாம்பரமும் அளவிறந்த சூரியர்கள் தங்கியிருப்பதுபோன்ற பாதாம்புயங்களுந்துலங்க—எ-று, (௩௨)

வாட்டமுந்துமாற் கரும்பணிவடிவமு மாற்றி
நாட்டமுந்தருங் களிற்றுவதனநா யகனுங்
கோட்டருந்துழாம் வராகமித்துநில மெடுத்த
கோட்டைமுன்பறித் தருளயிற்குமாரனுஞ் சூழ.

இ-ள். மகாதேவியின் சாபகாரணத்தினால் குருட்பேப்பாம்பாய்த் துயரப்படும் விஷ்ணுவின் சாபத்தைநீக்கிக் கண்கொடுத்த ஆனைமுக னுந் துளசிமாலையணிந்த மாதவன் வராகரூபமாய்ப் பூமியை எடுத்து நிலைநிறுத்தியபோது அந்த வராகத்தின் கொம்பையொடித்துச் சிவன ணிந்துக்கொள்ளக் கொடுத்த வேலாயுதக்கடவுளாகியசுப்பிரமணியனு ம் இருபக்கத்திலுஞ் சிங்காதனத்திலிருந்துவிளங்க—எ-று. (௩௩)

மிடைந்தவைம்பொறி வென்றருளவினையி னுருகி
யுடைந்தவுள்ளமும் விழிசொரிவெள்ளமு முலகுங்
கடந்தசெய்கையுங் கம்பமும்புளகமுந் நீறு
மடைந்தமேனியு முடையமெய்யடியவர் மகிழ.

இ-ள். இடையிற் சேர்ந்த சப்த ஸ்பரிச ரூப ரச கந்தமென்னு மைம்பொறிகளையும்வென்று அநுக்கிரக சத்தியருளினால் உருகிக்கனி ந்த மனதுங் கண்களில் ஆனந்தவெள்ளம பொழிவும் பிரபஞ்சவாழ்க் கையைத்துறந்தசெயலும் தேக நடுக்கமும் மயிர்க்குச் செறிவும் விபூதி யினலலங்காரமும்பெற்ற திருமேனியையுடைய அடியார்கள் சந்தோ ஷிக்க—எ-று, (௩௪)

சடைவிளங்கிய மவுலியுந்தடம்புய நான்கும்
விடமிலங்கிய கண்டமும்விழிபொரு மூன்று
முடையநாயக னுவந்துறையுள்ளமும் படைத்துத்
தொடருமன்புறு கணாதிபர்தொகுதிகள் விளங்க.

இ-ள். பிரகாசிக்குஞ் சடாமகுடமும் விசாலம்பொருந்திய நான் குபுயங்களும் விளங்கும் நீலகண்டமும் மூன்று நயனங்களும் பரமசி வன் பரிபூரணமா எழுந்தருளியிருக்கும் இதயகமலமும் பொருந்திய வர்களாகிய சிவகணபதிர் கூட்டங்கள்சூழ—எ-று. (௩௫)

நடமலர்ப்பதத் தருள்பெறுநந்தியெம் பெருமான்
சுடர்மலர்க்கரம் பிரம்பினுஞ்சுரர்களைத் தொகுதி
யிடைநெருங்குப நீக்கிநின்றிலகுகோ புரத்துக்
கடையினிற்பவர் பெயர்சொதிர்கைகுவித் தியம்ப.

இ-ள், ஆனந்தநடனஞ்செய்யும் பாதாரவிந்தத்தினது அநுக்கிரக ம்பெற்ற எம்முடையகர்த்தராகிய நந்திகேஸ்வரர் மலர்க்கரத்தி லிருக்

கும் சுவர்த்தினங்களிழைத்த பொற்பிரம்பினால் சிவசந்நிதானத்திற் த
ரிசனஞ் செய்யவேண்டுமென்னும் ஆவாவினாலெருங்கிய தேவர்களை
அடித்தொதுக்கியும் பிரகாசிக்குங் கோபுரவாயலில் காத்துக்கொண்டி
ருக்குந் தேவர்கள் முனிவர்கள முதலானவர்களது பெயரைாக் கைகுவி
த்துச் சிவசமுகத்தில் எச்சரிக்கவும்—எ-று. (௩௬)

படைத்தவின்னன படைப்பதாய்வினைவலின் னவை நீ
யடைதவித்தொழிற் சாலவை நருக யளியர்
விடைத்தனிக்கொடி யாயெனவிழுந்தெழுந் திறைஞ்சா
கடைத்திகழ்க்கமா மறைகொண்டுநான்முகன் பரவ,

இ-ள். இவைகளை இவ் விவ்வகையாய்ச் சிருட்டி பண்ணினேன்
இனை இவ் விவ்வகைச் செய்ப வினைகளேன் தேவரீர் கற்பிக்கவரியசி
ருட்டியதிகாரத்திற்கு உக்கவேண்டியமுறைமை இப்படியென்று புத்
திகளை யிடவேண்டுமெனப் பிரமதேவன் தெண்டனிட்டெழுந்து ஒரு
காலத்து மழியாத சிஷரத்துவசமாரணைத்த பரமசிவமேயென்று சக
லவகவிதிகளும் விரித்துரைக்கும் வேதப்பொருளால் தோத்திரஞ் செய்
தான்—எ-று, (௩௭)

அரக்கராற்றலுந் தயித்தியராற்றலு முலகிற்
முரக்கமற்றலும் வனவெலாந்துரந்துநின் னருளாற்
புரக்குமாறெலாம் புரந்திடுகின்றன னருளாற்
கரக்குநாதவென் றச்சுதன்கைகுவித் திசைப்ப,

இ-ள். இராக்கதர்களின் பலபராக்கிரமங்களும் தயித்தியர்களி
ன் வீரமும் உலகத்தில் மற்றுள துட்டர்களினது வலிபுமடக்கித் தே
வரீர் அநுக்கிரகஞ்செய்தபடிக்கு உலகங்களை நீதியாகக் காப்பாற்றிக்
கொண்டு வருகிறேன் சகல பிரமாண்டங்களை எல்லாஞ் சங்கரிக்குங்
கர்த்தனேயென்று நெடியவனாகிய விஷ்ணு கரங்குவித்துப் புகன்
றான்—எ-று. (௩௮)

முற்றமாகிய திருவுருமுழுமையும் பாரக்
கொற்றவெற்பினிற் சிறகினைக்குறைத்தும்வாய் மடித
லற்றவச்சிரன் மலர்பொழிதாயிரங் கண்கள்
பெற்றபேறெலாம் பெற்றமுன்பணிந்தன்பு பெருக.

இ-ள். சகல அலங்காரமுமுடைய புவியைச் சுமக்காநின்ற ம
லைகளின் சிறகுகளைவெட்டியும் முனைமழுங்காத வச்சிராயுதமேந்திய
தேவேந்திரன் ஆயிரங்கண்களைப் படைத்தவைகளுக்குப் பலன் இப்
போது கிடைத்ததென்று சர்வாலிங்கிதமுடைய பரமசிவனது அழகி

ய திருமேனியை ஆயிரங்கண் களினாலுந் தரிசித்துக் கற்பக மலர்களி னு லர்ச்சனைசெய்து பக்திமிகுந்து வணங்கி வாழ்த்தினன்—எ-று, ()

தணிவிலச்சமோ டந்தகனிறைஞ்சிடச் சலதி
மணிகடேவினன் வருணன்முன்வணங்குற மார்பி
னணிபிறழ்ந்தன திருத்தினன்றளகையர் கோனும்
பணியமற்றைய நால்வருந்தாழ்ந்தனர் பரவ

இ-ள். அளவுபடாத பயங்கரத்தோடும் எமதருமன் தெண்டனிட்டுத் தோத்திரஞ்செய்யச் சமுத்திரவரசியாகிய வருணன் நவரத்தினங்களினு லர்ச்சித்துவணங்கப் பரமசிவன் மார்பினி லணிந்திருக்கும் ஆபரணங்களைத்திருத்திக்கொண்டு குபேரன் பணிந்துபோற்ற மற்ற அக்கினி-நிருதி-வாயு-ஈசானன்-இந்நால்வருந் தொழுதுநிற்கவும்—எ-று.

அந்தமொன்றுமில் லாதவனணிந்தவெண் ணீறுஞ்
சுந்தரங்களுக் குறைபுளாந்துகளிலா வடிவுந்
தந்தபேரொளிப் பெருமையாற்றம்மொளிமழுங்கு
மிந்துசூரிய ரிருமருங்கிறைஞ்சிநின் றேத்த

இ-ள். முடிவில்லாத சிவபெருமானணிந்த விபூதியினது மிகுந்த வெண்மையினாற் சந்திரன் ஒளிமழுங்கியும் அழகுக்குறைந்திருக்குங் குற்றமற்ற சிவன் திருமேனியி லுண்டாகிய காந்தியினால் சூரியன் ஒளிமழுங்கியும இருபக்கங்களிலும் பணிந்து நின்று தோத்திரஞ் செய்யவும்—எ-று. (௪௧)

பொருந்தவெம்பவப் பிணிக்கொருமருந்தெனப் பேணி
மருத்துவாதிப ரிருவரும்வணங்கினர் பரவ
வருத்திகூருமெண் வசுக்களுமகங்குழைந் தேத்த
வுருத்திராதிபர் பதினொருவருமிருந் திறைஞ்ச

இ-ள். தெய்வ வயித்தியர்களாகிய அஸ்வினிதேவர்க ளிருவரும் ஜனனமரணமென்னு மகா வியாதிகளுக்குப் பத்தியமாகிய மருந் தருளவேண்டுமென்று வணங்கித் தோத்திரஞ்செய்ய அஷ்ட வசுக்களுஞ் சந்நிதானத்தில் தரிசனஞ்செய்து ஆனந்தத்தை யடைந்து மனதுருகித் துதிக்கப் பதினொரு உருத்திரர்களுந்தொழுதுகொண்டிருக்க—எ-று.

கின்னராதிபர் தொழுதெழக்கிம்புரு டேசர்
சென்னிதாழ்ந்திட மாதவர்சித்தர்கள் போற்றப்
பன்னகாதிபர் பணிந்தெழச்சாரணர் பரவ
வின்னபோற்பதி னெண்கணத்தேவ ரிறைஞ்ச;

இ-ள். கின்னராதிபர்கள் தெண்டனிட் டெழுந்து நிற்க கிம்புருடர்களுக் கதிபதிகளவ ரணங்க பேயலாகிய தபோதனர் களுஞ் சித்தர் களுந்துதிக்க நாகராஜர்கள் தொழுதெழுந்து நிற்கச் சாரணர்கள் சிவ மகிமையைப்புகழப் பதினெட்டுவகைச் சிவகணங்களின்கூட்டமும் சிவனருட்பெற்றவர்களெல்லாம் வணங்கவாழ்த்தவும்—எ-று, (௪௩)

இலங்குமேழிசை யாழெடுத்தியாவரு முருகத்
துலங்குநாரதர் தும்புருமுதலியர் பாட
வலங்கண்மாமணி யணிகலனணிந்துபொற் கொடிபோ
லலங்கொளபூண்முலை யரம்பையர் நாடகம் புரிய,

இ-ள். ஏழு சுரங்களோடுங்கூடிய வீணைகளை எடுத்துச் சகலருமனமுருகும்படி நாரதர் தும்புருவர்கள்பாட விலையில்லாத சுவர்ணமணி ஆபரணங்களணிந்து தங்கக்கொடி போன்றவளு மிடையும் தனங்களுங்களுக் குலுங்க வாமமையை ரம்பை திலோத்தமைமுதலிய தேவகன்னிகையர்கள் நாட்டியஞ்செய்யவும்—எ-று, (௪௪)

முகக்தபாடலை யாடலைமுழவினதொனியைத்
திகழ்க்துவந்துமங் கலாமெனதிருமுக மலர்ந்து
மிகக்ஞானமா தவர்க்கருளெழின்மறைப் பயன்கள்
பகர்ந்துமாமலை மடந்தையைப்பன்முறை மாத்தும்.

இ-ள். இராகம் தாளமுதலியவை தவறாமல் ஆநந்தத்துடன்பாடி நாடகமாடும் விசித்திரத்தைத் திருநோக்கமுறப் பார்த்து மகிழ்ச்சி பெறக் குறுநகைகொண்டும் அதிக தபோதனர்களாகிய சிவஞானமுடைய ஜனகாதிமுனிவர்களுக்குக் கருணையுடன் அழகிய வேதங்களின்பொருள் இன்னதென்று திருவாய்மலர்ந் தருளியும் மலையரசன்மகளாகிய பார்வதிதேவியின் றிருவழகையுங் குணாதிசயங் களையும் அடிக்கடிநோக்கியும்—எ-று. (௪௫)

இலகுவானவர் முனிவரரிவர்முதற்கணங்க
ளலகிலாதவ ரவரவர்விரும்பின வளித்து
மலருளானொடு மான்மகவானவா விவ
வுலகவாழ்க்கைக்கு வேண்டுவவுவந்தருள் செய்தும்,

இ-ள். பிரகாசம்பொருந்திய தேவர்கள் முனிவர்கள் சிவகணங்கள்முதலிய குற்றமற்றவர்களுக்கு வேண்டியவரங்களைக்கொடுத்தும் பிரமன மால் இந்திரன் தங்கள்தங்கள அதிகாரகாரியங்களை எச்சரிக்க அவர்களுக்கு பிரபஞ்சநடக்கு வேண்டியவரங்களைச் சந்தோஷத்துடன் அநுக்கிரகஞ்செய்தும்—எ-று. (௪௬)

அருகிருந்தருண் முருகவேளமுதுகு மழலைத்
திருமொழிக்குட மகிழ்வுறத்திருச்செவி தாழ்த்துத்
தருணவாதபத் தண்டையந்தாள்படத் திருமெய்
யுருகியும்புயந் தழுவியுமுவப்புட னகைத்தும்.

இ-ள். சிங்காதனத்தினருகி லெழுந்தருளியிருக்குஞ் சிவசுப்பிரமணியஸ்வாமி தேவாமிர்தஞ்சொரிவதுபோற் பேசுமழலைச் சொற்களுக்கு மனதுருகித் திருச்செவிகளைத் தாழ்த்தியும் உதயசூரியனைப்போல் சிவந்து தண்டைகள் அணிந்திருக்கும் பதாம்புயங்கள்படத் திருமேனியிளகிப் புளகமாகியும நான்கு தோள்களினாலும் கடப்பமாலையணிந்த பன்னிருபுயத்தனை ஆலிங்கனஞ்செய்து ஆனந்தங்கொண்டே—எ-று. (௪௭)

துன்றுபேரருட் கடலிருந்தருளிய தோற்ற
மென்றனாவினு லுரைத்திடற்கரியதவ் வெல்லை
நின்றமாதவ னிருந்த நணிமலனை யிறைஞ்சி
யொன்றுணர்த்துவ துளதெனவுரைத்தன்மே யினனால்

இ-ள். நிறைந்த கருணாசமுத்திரமாகிய பரமசிவன் சபாமண்டபத்தி லெழுந்தருளியிருக்கும் மகாவைபவத்தை என்னுடையவாக்கினாற் சொல்லிமுடியாது இப்படிக் கொலுமண்டபத்திலெழுந்தருளியிருக்குஞ் சமயத்தில் நின்றிருந்த திருமாலானவர் கயிலாசநாதருடைய பாதாரவிந்தங்களில் பணிந்தெழுந்து புகழ்ந்து ஒருவிண்ணபபங்கேட்கவேண்டி யிருக்கிறதென்று சொல்லத்தொடங்கினார்—எ-று. (௪௮)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அண்டமளவற்றனவு மவ்வண்டத்தெல்லையிலா வணுவுமோங்கக், கொண்டதிரு வருள்சுரந்து கோமளவல்லியுநீயுங் குலவாநின்ற, வெண்டகைய கயிலைவரை யென்றுமிளி துறைகின்ற வென்றநாதச, சண்டமறைபலகோடி யெண்ணரியசிவாகமமுஞ் சாற்றுகிற்கும்,

இ-ள், எண்ணிறந்த பிரமாண்டங்களிலும் அப் பிரமாண்டங்களில் நிறைந்திருக்கும அணுமுதலியவ்வவளிலும நிறைந்தோங்குங் கருணைகொண்டு கோமளரூபமாகிய பார்வதிதேவியும் தேவரீரும விநோதமாக மேன்மைபெற்ற கயிலாசகிரியில் எப்போதும வாசமாயிருக்கிறீர்களென்றும் அறிவைத்தரும் அனந்தவேதங்களு எண்ணிக்கையில்லாத சிவாகமங்களுஞ் சொல்லிக்கொண டிருக்கும்—எ-று,()

பொன்மயமாகியசடிலப் புனிதபரம்பரனன்றிப் புகலொணாத, சின்மயவம்பரமாகித் திகழ்தில்லையம்பலத்துச் சிந்தைக்கெய்தா, நின்மய

மிக்கானந்த நிருத்தமனவரதமுநீ நீங்காயென்னூர், தன்மையது தெரியும்வகை யடியேற்குப்பேரருளாற் சாற்றுகென்றான்.

இ-ள். தங்கநிறத்தையொத்த சடாடவியையுடைய பரிசுத்தராகிவிளங்கும் பராபரவஸ்துவாகிய தேவரீர் இங்கெழுந்தருளியிருப்பதுமல்லாமல் வாக்குக்கெட்டா ஞானசொரூபமாகிய ஆகாசவுருவாகப் பிரகாசிக்குஞ் சிதம்பரதலத்தில் திருச்சிற்றம்பலத்தில் நினைத்தற்கரிய நின்சொரூப பரிபூரணகலைகளோடும் ஆனந்தத்தாண்டவமெப்போதுஞ் செய்துகொண்டிருக்கிறேனென்று புகலுகின்ற இரகசியப் பொருளை அடியேனுக்கு நன்றாய்த்தெரிய மிகுந்த கருணாரசத்துடன் உபதேசிக்கவேணுமென்று திருமாலபிரார்த்தனைசெய்தார்—எ-று.()

வேதநான்முகன்றிகழும் விரிஞ்சனுதவியவெழிலான் மிகுந்தவண்ட, நாதனாகியதிருமா லுரைசெய்தமொழிகேளா ஞானானந்த, போதனுய்ப்பரையாதி விருப்பறிவுதொழிலாயிப் புவனம்பெற்றாள், காதனாயகனுள்ள மகிழ்ந்துதிருவாய்மலர்ந்தான் கருணைகூர

இ-ள். நான்குமுகத்தினு நான்குவேதங்கள் விளங்கும் பிரமனையழகிய உந்திக்கமலத்திற்படைத்துத் தேவர்களுக் கெல்லாந் தலைவனாகிய மகாவிஷ்ணு மொழிந்த வசனங்களைக்கேட்டுச் சிதானந்தபோதனாகி பராசத்தி இச்சாசத்தி ஞானசத்திசொரூபமாகி ஐந்துதொழில்களையுநடத்தி உலகங்களைப்பெற்ற பார்வதிதேவிக்குக் காதல்நாயகனாகியபரமசிவன்மனங்களித்து அருளோடுதிருவுளம்பற்றுகிறார்—எ-று,

கேட்டவுரைமிக்குய்ய நற்பொருளுமடைவுபெறக் கேட்டுளோரும், வேட்டதுவுமில்லைமுன முரைத்ததுவுமில்லைபெவர்க்கும் விளம்பொணாது, நாட்டமலரளித்தென்பா லன்புடையார்களினுன்னினுட்டயாவர்,; தோட்டலர்சூழ்துழாய்முகிலே யாதலினாலதுநினக்குச் சொல்லலாகும்.

இ-ள். நீ வினவியபொருளின் நிலைமையோ அதிக ரகசியம் சரிதை-கிரியை-யோகம்-ஞானம இந் நாற்பொருள்களின்விளக்க உபதேசத்தைக்கேட்ட ஞானாதியாகளும் இவ் வுண்மையை விரும்பிக்கேட்டதில்லை நாமும் ஒருவருக்குஞ் சொன்னதுமில்லை மற்றைபெயாருக்குஞ் சொல்லத்தக்கதல்ல ஆயினும் உன்னைப்போல் எவர்களவென்னுமமையோநின் நயனமாகிய செந்தாமரையை அர்ச்சித்தவர்கள் ஆதலாற் சிவபக்தர்களிலுத்தமனாகிக் துளபமாலையணிந்த நீலமேகமேனியனே உனக்கு அச்சிதம்பர ரகசியத்தைச் சொல்லத்தகுமென்று பரமசிவன் திருவாய்மலர்ந்தார்—எ-று, (௫௨-

அறையளவிலுமூவகையா ருயிர்க்கெல்லாமாருயிரா யகண்டமாகிக்,
குறைவகலவெங்கணுறு மெஞ்ஞான்று நிறைந்தியல்பாய்க் குலவாநின்
றோ’ மறைமொழியாகமம்புகன்ற வெல்லையிலாப்பகிரண்ட வருக்கந்த
ன்னுள், விறையுமெமையன்றியொரு பொருளுமிலையீதுண்மை யிசைக்
குங்காலை,

இ-ள். சொல்லுமிடத்து எண்ணிக்கையில்லாத மூன்றுவித ஜீவகோடிகளுக்கெல்லாம் பிராணாதாரமாய் முடிவில்லாத வநேகரூபமாய் வளர்ச்சிபெற்று எவ்விடத்தும் எப்போதும் பரிபூரணமாயக்கூடி அச் சீவராசிகளின் இலட்சணம்பொருந்திக் கலந்து லீலாவிநோதமாயிருக்கிறோம் வேதாகமங்களில் விளம்பாநின்ற அளவில்லாத சகலபிரமாண்ட கூட்டங்களிலும் எள்ளளவேனும் நம்மையன்றி வேறேவஸ்துவில்லை சொல்லுங்காலையில் இது நிச்சயமாகிய ரகசியப்பொருள் என்றார்—எ-று. (௫௩)

உலகமெலாம்விளக்கமுற வுலகமெலாம்புகழ்ந்தேத்த முதயபானு,
குலவுபெருங்கிரணங்கள் பரம்பிமிகநிறைந்திலங்குங் கொள்கைபோ
ல, வலமுறவெங்கணுமாக நிறைந்திருப்பமாயினு மண்டந்தன்னுட்,
சிலபொருளின்மிகவிளங்கிச் சிலபொருளிற்சிறிதிலங்கிச் சிறந்துநிற்
போம்.

இ-ள். உலகங்களெல்லாம் பிரகாசமடைய உலகங்களெல்லாம் வணங்கி வாழ்த்தித்துதிக்கும் உதயகிரியில் உதயமாகிய சூரியன் ஒளிபெற்ற ஆயிரங்கிரணங்களையு மெங்குநிரப்பிப் பரிபூரணமாய்ப் பிரகாசித்த முறைமைபோல் அசைவற்ற எவ்வெவ் விடங்களிலுங் கலந்து பரிபூரணமாயிருந்தாலும் பிரமாண்டத்தில் சிலவஸ்துக்களில் மிகுதியும் பிரகாசித்தும் சிலவற்றிற் சிறிதாகப் பிரகாசித்துங்கொண்டு விளங்கியிருப்போம்—எ-று. (௫௪)

ஆதபன்றன்சுடரெங்கு நிறைந்தாலுங்கனத்திலரிதுகாண்டற்,கோ
தாயுயர்பாதவங்க டன்னில்விளக்கந்திகழு முறைக்குமங்கப், பாதவங்
கடன்னிலுநற் றருப்பணத்திலொளிதழைக்கும் பகராநின்ற, கோதி
றருப்பணந்தனிலும் படிகத்திலுருவின்மிகக் குலவுஞ்சோதி.

இ-ள். சூரியனுடைய கிரணங்கள் எங்கும் நிறைந்திருந்தாலும் ஆகாயத்திற் பிரகாசங்காணுவதருமை குற்றமற்ற உயர்ந்த மரங்கள்கற்கள்முதலிய அசரங்களில் பிரகாசமதிகமாயிருக்கும் அம்மரங்களிலு மதிகமாகக் கண்ணாடியிற் காந்தியுண்டாயிருக்குஞ் சொல்லாநின்ற குற்றமற்ற கண்ணாடியிலும் படிகக்கல்லில் மிகுதியுங் கிரணம் ஊடுருவிக் குடிபாய்ந்து பிரகாசிக்கும்—எ-று. (௫௫)

ஒளிருமுபலத்தனிலும் பருதிகாந்தத்தன்னி லுவண்மையில்லாத், தெ
ளிவுதிகழ்குருச்சுடரும் வெம்மையுமுண்டாகுமலர்ச் செந்தேன்காலு,
மளிமருவுதுழாயலங்கற் கேசவகம்யேருருவு மதுவேபோல, விளிவு
மகிழ்விகந்துறையு நெறியறிவில்லைவகல விளங்குவாயால்.

இ-ள். விளக்கமாகிய படிகக்கல்லினும் அதிகமாய்ச் சூரியகாந்த
க்கல்லில வைபவமையற்ற தெளிவும பிரகாசமுஞ் சுடுகின்றகுணமும்
வெண்மையு முண்டாயிருக்கும் மலர்களின் தேனையுண்டு வண்டினங்க
ள் சப்திக்கின்ற துளவமாலையணிந்தநெடுமாலே நம்முடைய தூலதே
கமும் அச்சூரியகிரணத்தைப்போலேயாம் இப்போதுசொன்ன உபமா
னவுபமேயவகைபோல் சுகதுக்கங்கள் கடந்து விளங்குவோம் இவ்
விதமாய்ப் புத்திசஞ்சலப்படாமல் விவேகத்தினுற்றெரிந்துகொள்ளெ
ன்று பரமசிவன் அநுக்கிரகஞ்செய்தார்—எ-று. (௫௬)

எங்குநிறைந்திருந்தாலு மெமையொருவரிதென்ன வெண்ணமாட்
டா, ரங்கிதுவேயியல்பென்று மாயிடினுநிலமாக்க ளன்பாற்செய்த, த
ங்குலிங்கத்தி னெமைக்காணலாகுமது தன்னைப்பற்றத், துங்கநெ
றித்தவர்கண்ட சிவகோசந்தனின்மிகவுஞ் சுடராகிற்போம்.

இ-ள், சகல உலகங்களிலும் சகல ஜீவராசிகளிலும் உள்ளும் பு
றம்பும பரிபூரணமாயிருந்தாலும் நம்மை எவர்களும் இப்படியிருக்கி
றோமென்று மனதினாலறியமாட்டார்கள் அவ்வகையிருப்பதே லட்சண
மாயிருந்தாலும பூலோகத்தில் மானிடர்களாற் செய்யப்பட்ட சிவலிங்
கத்தினிடத்தில் விருப்பமாகப் பூசித்தால் நம்மைக் கண்டுகொள்ள
லாம் அம்மானிடர்களாற் பிரதிஷ்டைசெய்த சிவலிங்கத்திற்கும் அதிக
மாகத் தபோதனர்கள் தேவர்கள் இவர்களாற்செய்த லிங்கத்தில் மி
குதியும் பிரகாசித்துக்கொண்டிருப்போம்—எ-று (௫௭)

செறியுநெறித்தவர்கண்ட வருட்சிவகோசந்தனிலுந் திகழ்சயம்புக்
குறியினிடைமிகவிளங்கக் கொண்டிருப்பமச்சயம்புக் குறியிற்பார்க்
கப், பொறிமருவுதிருமார்ப புண்டரிகபுரப்பொதுவிற் போதத்தன்று
வறிவரியபாவிளக்க முடனுறைதுமறையுமிதற் கையமின்றால்

இ-ள். நிறைந்த தவப்பேறுபெற்ற முனிவர்களாலுந் தேவர்களா
லும் பிரதிஷ்டைசெய்யப்பட்ட சிவலிங்கத்தைவிட ஒவ்வொருகாரண
த்தினாலுண்டாகிய சுயம்புலிங்கத்தில் மிகுதியும் பிரகாசங்கொண்டிரு
ப்போம் அச்சுயம்புலிங்கத்தினு மதிகமாக விராட்புருடனிதயகமலமா
கிய சிதம்பரமென்னுந் திருச்சிற்றம்பலத்தில் அறிவினாலும் அறிவதற்
கரிதாகிய ஞானப்பிரகாசமாய் எப்போதும் ஆனந்தநடனஞ் செய்து
கொண் டிருப்போம் ஆதலால் இலக்குமியை மார்பிற்றரித்த திருமா

லை இவ்வுரைக்குச் சந்தேகமில்லையென்று பரமசிவன் திருவாய்ம லர்ந்தார்—எ-று. (௫௮)

சொற்பயிலுமொழியுண்மை யுண்மையருளுருவாகித் துகளொன் றில்லாய், பொற்படருமானந்தப் பொதுவிடத்தின் மிகவிளங்கும் பொ லிவுமன்றி, பற்புதமாமானந்த மெமக்குண்டாமாதலினு லச்சபைக்கு ச், சிற்பூரவானந்தசபை யெனுநாமமென்ஞான்றுந் திகழாநிற்கும்.

இ-ள். வேதாகமங்களிற் புகலாநின்ற யாஞ்சொல்லிய இவ்வாசக ம் உண்மை உண்மை ஆதலால அநுக்கிரகசொரூபமாகி ஒருகுற்றமு மில்லாமல் நிறைந்த அழகினையுடைய ஆனந்த சபையினிடத்தில் அதி கபிரகாசமுண்டாகும் வளப்பமுமல்லாமல் ஐயம்பொருந்திய சந்தோ ஷம் எமக்குண்டாகுமாகையினால அக்கனகசபைக்கு ஞானபரமானந் த சபையென்றும்பெயர் அச்சபை எக்காலத்திலு மழிவில்லாமல் பிர காசித்துக்கொண்டிருக்கும்—எ-று. (௫௯)

தனதெனதுதவிர்ந்தருளே சார்துறவோருளக்கமலந் தன்னினீ ங்காக், கனகசபைபோலெமக்கு விளக்கமுடனானந்தங் கதிக்கநல்க, வினைதெனவேறோரிடமு மிலையதனாலற்புதத்தோ டிசைந்துகூற, வன வரதமானந்தத் தாண்டவமேபுரிந்தங்க ணமராநின்றோம்,

இ-ள். தனது எனது என்னும் ஆணவாதி மும்மலங்களையும்வெ ன்ற சிவயோகிகளது இதயாரவிந்தத்தில் இடைவிடாமற் பொன்னம் பலத்தைப்போல் பிரகாசித்துக்கொண்டிருப்போம் அதிக பிரியத்தை யுங்கொடுப்பது இதுபோல வேறிடமுமில்லை ஆகையினால் அதிச யமும் அவாவுங்கொண்டு எப்போது மானந்தநடனம் புரிந்துதிருச் சிற்றம்பலத்தில் எழுந்தருளியிருப்போம்—எ-று. (௬௰)

செங்கதிரியேரொளிக்குத் திவாகரகாந்தங்களகஞ் சேர்தலின்றிப், பொங்குதலாலுறக்காந்தி பொலியுமாறுதவியது போலவுண்மை, கந் துபொதுவானந்த வடிவானதன்மையாற் றன்பாற்றங்கு, மெங்குநிறை யெமக்குமிகு விளக்கமுடனானந்த மென்றுநல்கும்.

இ-ள். நிஷ்களங்க ரகிதமாயிருக்குஞ் சூரியகாந்தச் சிலையினிட த்தில் செஞ்சுடர்கிரண[illegible]ய சூரியன் ஒளியானது தோய்ந்தவுடன் காந்திபெருகிப் பிரகாசம் அதிகமாய் வளர்ச்சியைக்கொடுக்குந் தன் மைபோல் திருச்சிற்றம்பலஞ் சிதம்பரமந்திர ரகசியப்பொருளினிலை மையாயிருக்கும் மேன்மைபெற்ற சிதானந்தமய மாகையினால் தன்னி டத்திற்பொருந்தும் நமக்குளெங்கும் பரிபூரணமாயிருப்பதிலும் அ திகபிரகாசத்துடன் பிரியமும் வளர்ச்சியுங் கொடுத்துக்கொண்டிருக் கும் அந்தஞானசபை—எ-று. (௬௧)

சத்தியமாய்ச்சிவத்துருவாய்ப் பேரொளியாயருள்வடிவாய்த் தன்னேரின்றி, நித்தமுமாம்பொதுவுன்னை யின்னுங்கேட்டியேனிகரொன்றில்லா, மித்திரகாந்தமுமிந்து காந்தமும்வெவ்வகிரியங்குவெய்யோன்றிங்க, டத்தமகற்கிரணமுறத் தீநீரங்குண்டான தன்மைபோல

இ-ள். உண்மையாகிய ஞானசொரூபமாய் அநுக்கிரக சத்திமயமாகிய பரஞ்சோதியாகி ஒப்புவமையில்லாமலும் அழிவில்லாமலும் நிலைமையாயிருக்குந் திருச்சிற்றம்பலத்தினுடைய மகிமையுற்ற இரகசியபபொருளை நீ மனக்தெளியக்கேட்கவேண்டுமாயின் இன்னுஞ்சொல்லுகின்றோம்கேள் தனக்குத்தானே ஒப்பாகிவிளங்குஞ் சூரியகாந்தச் சிலையில் பருதியின்கிரணம் பற்றியவுடன் அக்கினி வுண்டாகிறது போலவுஞ் சந்திரகாந்தச்சிலையில் சந்திரனதுகிரணந் தோய்ந்தவுடன் தண்ணீருண்டாகின்றதுபோலவும சச்சிதானந்தமயமாய்த் திருச்சிற்றம்பலத்தில் நாம் நிலைமைகொண் டிருப்பதான் ஆனந்தரச மிகுதியும் பெருகும்—எ-று. (சூ௨)

அறுசீரக்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மன்றகம்பர மானந்த வடிவமே யந்தமன்றத்
தொன்றுநாம்பர மானந்த வுருவமேயதனுலென்று
நின்றருட்பர மானந்த நிருத்தமே புரிதுமெங்கு
துன்றுமின் றிடினுமங்ஙன் றோற்றுதும் விளக்கமோங்க.

இ-ள், திருச்சிற்றம்பலம் ஆனந்தசொரூபமேயாம் அவ்வானந்த சபையில் பொருந்திய யாமும்மேலாகிய வானந்தசொரூப மாகினோம் ஆகையினுல் எப்போதும் ஐந்தொழிலை நடாத்தும் பொருட்டாகக் கிருபையோடும் நின்று பரமானந்த நடனஞ்செய்துகொண் டிருக்கின்றோம் மற்றெங்கும் நாம் நிறைந்திருந்தாலும் அத்திருச் சிற்றம் பலத்தில் மாத்திரம் அதிக பிரகாசம் ஆனந்தமும்பெருக எழுந்தருளி யிருப்போம்—எ-று, (சூ௩)

எங்கணு மிதுபோலில்லை யென்னருங் கிரிகடம்முட்
புங்கவ வானவெள்ளிப் பொருப்பகந் தன்னின்மன்னித்
தங்குநம் பிரிவின்றென்று தமனியப் பொதுவினென்றுந்
துங்கமோ டகண்டமாகி யுறைகின்றோஞ் சுருதிபோற்ற

இ-ள், எவ்விடத்தும் இத் திருச்சிற் றம்பலத்தைப் போல் சச்சிதானந்தமயமாகிய தலம்வேறில்லை அத்தலத்தின்பெருமை சொல்லுகின்றோம் நாமநுக்கிரகரூபமாயெழுந்தருளி யிருக்கும் மேன்மை பெற்ற கயிலாசகிரியிலும் அதிகமாய்த் திருச்சிற்றம்பலத்தில் ஞானகாசரூபமாய் நிறைந்த ஆயிரங்கலைகளில் ஓர்கலைபிரிந்துஇக்கயிலாசகிரி முதலி

ய வெங்கும்நிறைந்து பொன்னம்பலத்திற்பூரணமாய் வேதாகமங்கள் துதிக்கத்தக்கதாக எப்போதுமெழுந்தருளியிருப்போம்—எ-று, ()

படைத்தலே யாதியாய வைந்தொழிற் பரிசுமென்று
நடத்துவா னினைந்திவ்வெள்ளி நகத்துறை தனிஞற்செவ்வி
மடற்றுழாய் மாலையாய்நீ வாசவன் முதலியோர்நும்
மிடத்துறு தொழிலுக்கேற்ற நினைவுமீ கின்றேமென்றும்.

இ-ள். சிருட்டி-திதி-சங்காரம்-திரோபவம் அநுக்கிரகமாகிய இவ்வைந்து தொழில்களையும் எப்போதும் நடத்தும்பொருட்டுச் சித்தத்துள் நினைத்து இக்கயிலாசத்தில் நாமெழுந்தருளியிருக்கின்றதினால் அழகியதுளவமாலையணிந்த முகுந்தனே நீயும் மற்ற இந்திராதிதேவர்களும் தத்தம் தொழிலுக்கேற்றபடி நம்மிடத்தில் நினைத்தவையாவும் கொடுத்துக்கொண்டிருப்போம் போமென்று பரமசிவன் திருவுளம்பற்றினார்—எ-று: (சு௫)

பொற்புறு புண்டரீக புரத்திடைப் பரமானந்தத்
தற்புத வெள்ளந்தன்னி னகமகிழ்ந் தினிதிருப்பஞ்
சொற்படர் முத்திவேண்டுஞ் சுராதியர் சேவைசெய்து
நிற்பரெந் நாளுமெம்மை நினைவிட நீங்கிடார்கள்,

இ-ள். அழகிய விராட்புருட னிதயகமலமாகிய சிதம்பரத்திலுள்ள சச்சிதானந்தமயமாம்விளங்கும் திருச்சிற்றம்பலத்திற் பரமானந்தப் பெருக்கில்மூழ்கி லீலாவிநோதமாகவிருப்போம் வேதாந்த சித்தாந்தமுடிவாகிய பரசிவ ஐக்கியம்பெறவேண்டுமென்று விருப்புற தேவர்முதலியயாவரும் அம்பலவாணமூர்த்தியினது பாதாரவிந்தங்களைப்பணிந்து பணிவிடைசெய்தும் தியானித்தும் நீங்காமலிருப்பார்கள்—எ-று, (சுசு)

அம்பிகை கலையினொன்றிவ் வணிக்கயி லைப்பானிற்பச்
செம்பொனம் பலத்துளென்றுந் திருந்துபூ ரணமாய்நிற்ப
தும்பிமா முகத்துமைந்தன் சுடரயிற் கந்தனந்தி
பம்புறு கணங்களன்பர் பகருமிப் பரிசேநிற்பர்

இ-ள், சிவகாமசவுந்தரியினுடைய ஆயிரங்கலைகளில் ஒருகலை இவ் வலங்காரம்பெற்ற கயிலாசகிரியிற் பார்வதிதேவிரூபமாய் நமது பக்கத்திலிருக்கப் பொன்னம்பலத்திற் பரிபூரணகலைகளுடன் சிவகாமசவுந்தரி எப்போதும் எழுந்தருளியிருப்பாள் நமது புதல்வர்களாகிய யானைமுகப்படைத்த விநாயகனும் ஒள்ளிய வேலாயுதபாணியாகிய சுப்பிரமணியனும் நந்திகேஸ்வரர்முதலிய அநந்தகோடி சிவகணங்களு

ம் நம்போலுஞ் சிவகாமசவுந்தரியைப்போலும் பரிபூரணகலைகளுட
ன் எப்போது மங்கு வாசமாயிருப்பார்கள்—எ-று, (௬௭)

அளவிலாப் பரமானந்த வம்பலந் தன்னிலென்று
முளமகிழ்ந் திச்சையாக வுறைதனிச் சயமேவாசத்
துளவமா முகிலோயின்னுஞ் சுராதிபர் தராதலத்தோர்
வளமுறப்போற்றவெம்மான் மகிழ்ந்துசெய்தலங்களுண்டால்,

இ-ள். ஒப்புவமையில்லாத பரமானந்தசொரூபமாகிய ஆனந்தசபையில் நா மெப்போதும் மனக்களிப்புடன் விருப்பமாக ஆனந்தநடனஞ் செய்துகொண்டிருப்பது சத்தியம் நீலமேகம்போன்ற திருமேனியில் வாசனைபொருந்திய துளவமாலையணிந்தவனே இன்னுஞ் சுராதிபர்களும் தராதலத்தோராகிய பூலோகவாசிகளும் தோத்திரஞ் செய்து நன்மையடைவதற்குச் சிவபெருமான் மகிழ்வோடு இலிங்க வடிவா யெழுந்தருளியிருக்குந் தலங்களுண்டு—எ-று, (௬௮)

முழுவது முரைத்துமென்னின் முற்றுமோ முற்றுதேனுஞ்
செழுசில னிடத்தனந்தந் திகழ்பதி யாதலாலே
விழுமிய பதியவற்றுள் விளம்புதுஞ் சிலவென்றன்பூரால்
வழுவையினதண்மெய்போர்த்த வள்ளலங்கருள்செய்கின்றான்

இ-ள். சிவதலங்கள்முழுதையுஞ் சொல்லவேண்டுமென்றால் பூமியினிடத் தனந்த புண்ணியக்ஷேத்திரங்களாகையால் நம்மாற்சொல்லிமுடியாது அவற்றுள்சிறந்த சில புண்ணியக்ஷேத்திரங்களினது மகிமைகளை விருப்பத்தோடுஞ் சொல்லுகிறோமென்று கரியுரிபோர்த்தவனாகிய பரமசிவன் கருணையுடன் மகாவிஷ்ணுவுக்குச் சொல்லத்தொடங்கினார்—எ-று. (௬௯)

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

இடருற்றவருக் கிடரற்றிடவும் மிமையோர்முதலோர் தொழுதுய்ந்திடவுந், தொடரொப்புவனங் களுநன்னெறியே குழும்படியாம் வாழுங்கிரியா, லடர்பொய்ப்பிறவிக் கடன்மூழ்கினர்சென் றுறும்படிவந் தேறுங்கரைமெய்க், கடவுட்கிரியென் பனவும்புகலுங் கடவுட்கிரியிக்கயிலைக்கிரியே.

இ-ள். துன்பங்களையடைந்து அவதிப்படுகின்றவர்களது துன்பங்களைத்தீர்க்கவும் தேவர்களுந் தபோதனர்களும் பணிந்து கடைத்தேறவும் அவற்றோடு மெவ்வுலகத்தாரும் பத்தியுடன் நன்மார்க்கமாய் வலஞ்செய்து தொழவும் சனனமரண சமுத்திரத்திலழுந்தி அவதிப்படுகிறவர்கள் கரையேறுவதற்கும் காரணமாகி மகாமேருமுதலிய ம

லகமெல்லாம் வணங்கிப்போற்றும் தெய்வத்தன்மையையுடையதாய் நாம் எழுந்தருளியிருக்கும் இக்கயிலாசகிரி மகா வைபவத்துடன் விளங்கும்—எ-று, (௭0)

பூதாதிபடைத் தவனீமுதலோர் புகழும்புகழிற் பொலிவெய்தியவக்
கேதாரமெனுந் தலனிற்களிகூர் கேதாரமெனப் பெயர்பெற்றவரும்,
வேதாகமநூ னெறிமாமுனிவன் மிகுமன்புடனே தருவந்தனைசெய்,
தாதாரமெனக் கருதிப்பணியு மவனுக்கருள்செய் தமர்கின்றனமால்,

இ-ள், பூமிமுதற் பஞ்சபூதங்களைப்படைத்த பிரமதேவனும் நீ முதலிய தேவர்களுந் துதிசெய்து புகழ்வதினால் மேன்மைபெற்ற அக் கேதாரமென்னுந் தலத்திற் சந்தோஷங்கொண்டு வேதாகமசாத்திரங் களுணர்ந்து கேதாரனென்னும் பெயர்பெற்ற தபோதனன் மிகுந்தபக்தியுடன் வேதவிதிப்படிப் பூசைசெய்து நின்னையன்றி வேறேகதியில்லையென்று மனோவாக்காதி களொருமித்து நம்மைத் தொழுதமையான் அம்முனிவனுக் கநுக்கிரகஞ்செய்து இமயமலைச்சாரலாகிய கேதார தலத்தில் இலிங்கவடிவா யெழுந்தருளியிருக்கின்றோம்—எ-று (௭௧)

தலமொண்பிருகுத் தவமாமுனிதன்சாபத்தொடர்வால் வசுதேவனணிக்,
குலநந்தனனா பிறப்பிடையுன் குலமைந்தருடன் முடிவெய்தி மிகும்,
பொலமொன்றியநின் பதமெய்திடமுன்பொய்பாலுதவும் பொலியுந்நெறியும்,
நலனும்புகழும் பெருகுஞ்சோம நாதந்திகழுண் டருணன்னகரம்.

இ-ள். உலகமனைத்தும்புகழும் மகிமையையுடைய பிருகுமாமுனிவன் சாபத்தினால் நீ வசுதேவனது அழகியகுலத்தில் பிள்ளையாகப் பலராமருங் கிருஷ்ணனுமாக வவதரித்து உன்னுடைய சந்ததிகளுடன் நீயும்பூசித்து வரங்களைப்பெற்று அக்குலத்தில் இறந்தவுடன் மிகவும் பஞ்சேந்திரியங்களும் சந்தோஷிக்கத்தக்க அழகிய வைகுந்த பதவியை முன்பெறச்செய்து மேன்மையும் முத்திக்குவழியும் நன்மையும் மகிமையுமிகுந்தோங்குகின்ற சோமநாதனென்னும் பெயரைப்படைத்து மேற்சமுத்திரக்கரையிற் பிரகாசம் பொருந்திய ஓர் நகரமுண்டு—எ-று, (௭௨)

ஆசிற்பயிலும் பூசற்புலனாற் றந்தக்கரணப் பந்தங்கெடுவோர், மாச
ற்றடையும் பாமுத்தியவண் மாணப்பெறுவோர் பெறுமாறருளப், பா
சத்தனைதீர் நேசத்துலகம் பழியாமறைநூல் வழியாலெனைநீ, பூசித்தி
டுமெய்க் காசிப்பதியிற் புவனேசனென் றமர்கின்றனமால்

இ-ள், குற்றவழியிற்செல்லும் பஞ்சேந்திரியங்களை வென்று மனம் புத்தி சித்தம் அகங்காரமென்னும் அந்தக்கரணங்களை உலகநடை

யிற்செலுத்தாமல் சனனமரணங்களையறுத்துக் களங்கமற்ற மோட்சம் பெறும்பொருட்டாகக் கங்காநதிக்கு மேற்கரையில் வருணாநதிக்குஞ் சிந்துநதிக்கும் நடுவில் ஆனந்தகரண பஞ்சகோசததிலிறக்குஞ் ஜீவராசிகளினது வலதுசெவியில் மந்திரார்த்தமாகிய பிரணவத்தை நாமுபதேசஞ்செய்து நம்முடைய சாரூபபதவியைத் தருகிறோமாதலால் சனனமரணங்கள்தீர்த்துக்கொள்ளும் விருப்பத்துடன் உலகங்கள் நம்மைப் புகழத்தக்கதாக வேதாகமவிதிப்படிக்கு நீ, பூசைசெய்துகொண்டிருக்கும் நன்மையாகிய காசிமாநகரில் விஸ்வநாத இலிங்கவடிவாய் எழுந்தருளியிருப்போம்—எ-று. (எ௩)

மேலைச்சலதிப் பாலத்திடையெம் விண்கோநகாபோ லெழுகோகரணத், தேலத்திகழ்வா னவராயுளர்வந் தெமைவந்தனைசெய் திடாயமுறையுந், தாலக்கிரியும் பெரிதென்பதுவுந் தனையேநினைவார்வினைசாடுவதும், பாலொத்தமொழிப் பவையாமுறையும் பதியுந்திருநீயி பருப்பதமே,

இ-ள். மேற்சமுத்திரக்கரையில் இந்திரன்வாழும் அமராவதிக் கொப்பென்றனும்படியாகிய கோகரணத்தில் இராவணன் பசுமுருகிக் கரங்களினாற்பிடித்திழுக்கப் பசுவின்காதுபோல் நெகிழ்ந்தமையால் கோகரணமென்றும மகாபலலிங்கமென்றும் பெயருற்ற நம்மைத் தேவர்களெல்லாம்பூசைசெய்ய அக் கோகரணத்திலும எழுந்தருளியிருக்கின்றோம் மேலும் பூமண்டலத்துற்ற மலைகளுக்கெல்லாம பெரிதாகிய அதை நினைந்தவர்களது மகாபாதகங்களைத்தீர்க்கும் வல்லமையையுடைய ஸ்ரீசயிலத்தில தேவாமிர்தம்போல் வசனிக்கும பிரமராமபிகையுடன் நாமெழுந்தருளியிருக்கும் வளமைபொருந்திய மல்லிகார்ச்சுனமென்னும் பெயருடைய மலை மகா மகிமையுடன்விளங்கும்—எ-று, (எ௪)

தேனாருவித் தரளத்திரள்சேர் திருவேங்கடமென் றுயர்சோங்கலினின், ஞானெறிசூ ழறிவாலெமைநீ யன்பால்வழிபட் டென்பூருகத், தானென்னுமா றிகழ்வோர்புகழுந் தகுபொன்முகலிக் கரையிற்பொழிலிற், கானார்தருதென் கயிலைக்கிரியென் காளத்தியெமக் காலயமொற் றதியே.

இ-ள், தேனருவியாகிய ஆறுகளில் முத்துகள் நிரைநிரையாய்க் கொழிக்கும் வளப்பமுற்று உயர்ந்த திருவேங்கடமலையின்மீது நீ நின்று சன்மார்க்கமாய்ப் பக்தியும் பரமஞானமும்பெற்று தியானஞ்செய்து மனங்குழைந்து என்புருகித் தொழுதுகொண் டிருக்கத் தானென்னும் ஆணவமகற்றிய வதிஷ்டா முதலியவர்கள். பூசித்துவணங்கப்

பொன்முகலிநதியின் கீழ்க்கரையில் தட்சண கயிலாசகிரியின்மேற் புறத்தடிவாரத்தில் கல்லிச்சிமரநீழலில் மேற்குமுகமாய் எழுந்தருளியிருக்கும் நம்மைச் சிலந்தியானை அரவுபத்தி யுடனேபூசிக்க அவைகளுக்கு முத்தியளித்து ஐந்தலைநாகம் படம்விரித்திருப்பது போல் உருக்கொண்டு காளத்திலிங்கமென்றும் வாயுலிங்கமென்றும் பெயர்பெற்று நாம் வசிக்கத்தகுந்ததாயிருக்கின்றது திருக்காளத்திநகரம்—எ-று.()

காலங்களறிந்து நமைப்பரவிக் கடவுட்டிரளோர் பேரத்திகிரிப், பாலன்புடனின் றூர்வங்கொடுநீ பணியப்படியிற் படர்கோடரமா, மூலந்தனிலெவ் வுலகும்முயிரும் முழுதாக்கருவா டொழுதர்ச்சனையா, லேலுந்தவமும் பயனும்பெறயா மிச்சித்துறையுங் கச்சிப்பதியே.

இ-ள், காலமறிந்து தேவர்கள் கூட்டத்துடன் வந்து பணியவும் பூசைசெய்யவும் நமக்குநேர் கீழ்த்திசையிலுள்ள உயர்வாகிய யானைமலையின்மீதில் மேற்றிசைமுகமாக வரதராஜனென்னும் பெயர்பெற்று நீ, சேவித்துக்கொண்டிருக்குங் காஞ்சீபுரத்தில் நாம் விருப்பத்துடன் பிருதிவிலிங்கமாய்மாமரத்தின்நீழலில் நம்மைவேண்டியகாமாட்சிதேவியினது தபோமகிமையையீடேற்றி எழுந்தருளியிருப்போம்—எ-று,

மலையாளுடனே ருருவாயுறைதும் மகிடாசுரனு முயர்தானவருந், தொலையாவரமும் முர்முந்தலையுந் தோளுங்கழலுந் தாளுந்துணிபட், டுலைபாவொழியக் கலையான்மகிழ்தக் துடையாள்புனையுந் தொடைவாகைபெற, மலையாமறைநற் கலைமாதவர்பே ரருணாடருள்கூ ரருணாசலமே.

இ-ள், பர்வதராஜ குமாரியாகிய உண்ணாமுலை நமது இடப்பாகத்தில்வாழ வெழுந்தருளியிருப்போம் அவ்வம்பிகையின் கலையாகிய துர்க்கையானவள் மகிடாசுரன்முதலிய வசுரகூட்டங்களையும் அவர்கள் தபோமகிமைகளையும் வலிமைகளையும் காசராணுதிகளையும் மாய்த்து ஜெயமடைந்து பிரமதேவன்சந்தோஷிக்க வழகுபெற்றசோணசைலத்தடிவாரமாகிய பவளக்குன்றின்மேல்* எழுந்தருளிஅவள்வெற்றிமாலைபெறவும் ஓர்காலத்திலுமழியாத வேதாகமங்களுணர்ந்த சிவபத்தியையும் மிகுந்த தவத்தையுமுடைய கௌதமர்முதலிய தபோதனர்களுக்கு மேன்மையாகிய அநுக்கிரகஞ்செய்யவும் நீயும் பிரமனும் அடிமுடிகாண வரிதாய்விளங்கித் தேயுலிங்கமாய் எழுந்தருளி யிருக்கின்றோம் திருவண்ணாமலையில்—எ-று. (எஎ)

உறுகாதலினுலகந்தொழயா முறைகின்றதுவெம்புலனீள்வழியேம் றுகாநெறிமெய்ச் சிவபோதமிகும் மாசற்றவர்தாம நசிப்பதுவாஞ் சிறுகாலுடனே யறுகால்பயிலுஞ் சீதப்பொழிலா மோதத்தொகையி

ண். குறுகாவிமையோர் மகிழ்க்கமழுங் கொற்றக்கெழுங் கோவற்ப தமே,

இ-ள். பொருந்திய விருப்பத்துடன் உலகிலுள்ளவர்க ளெல்லா ஞ் சேவிக்க நாம் வாசமாயிருப்போம் அத்தலத்திற் பொல்லாங்கைவி ளைக்கும் பஞ்சேந்திரியங்களின் வழியிற் சித்தத்தைச் செலுத்தாமல் ந ன்மையாகிய சிவானுபோசமிகுந்த சிவயோகிகள் வாசஞ்செய்ய விரு ம்புகின்ற தென்றற்காற்றுடன் வண்டுகளுலவுங் குளிர்ச்சிபொருந்திய சோலைகளில் மலர்களின் வாசனைமிகுத்துத் தெய்வலோகம் வரைக்கு ம் வீசுவதால் சகலதேவர்களுஞ் சந்தோஷித்து வசிக்கின்ற வெற்றிவி ளங்குங்கோபருவதத்தில்—எ-று (எஅ)

வழுவிக்குவினைப் புகைசாய்தரவும் மாயைக்கலைபா வறியெய்திட வுங், தழுவுங்கருமா மலமற்றிடவுந் தற்போதமரச் சிற்போதமிகுந், தொழுகும்படியும் பெறினிங்கிதுபோ லுளதோவிலையென் றுயர்மாம றையின், முழுதுங்தெரிமா தவாதாமகலா முதுகுன்றமுநம் பதியெ ன்றுணரே.

இ-ள். இரவுரவாதி நரகங்களில் வீழ்த்துகின்ற மகாபாதகங்க ளென்னுஞ் சத்துருக்கள் தொலைந்துபோகவும் அஞ்ஞானத்திலழுந் தச்செய்யு மகாமாயைகளீங்கவும் நீங்காச்சனனமரணத்திற் கேதுவா கிய ஆணவாதி மும்மலங்க ளற்றுப்போகவும் உலக வாழ்க்கையிலுஞ் சிற்றறிவழிந்து சிவஞானம்பொங்கி வழியவும் மற்றொருதலங்களிலி ருந்தாலும் பிரணவரூபமாய் விளங்கும் இத்தலம்போல் வேறில்லை என்று மகிமையுற்ற வேதங்கள் யாவுமுணர்ந்த தபோதனர்கள் நீங் காதிருக்கும் விருத்தாசலமானது நமது பட்டணமென்றறிந்துகொ ள்—எ-று. (எகூ)

விண்டாரணியென் புகழ்வீடணனின் மேலன்புடனே பூசித்துனை யுங், கொண்டாறகல்போ தினிறுவனிழற் குறைவொன்றறியா முறை யின்றகலங், கண்டாதரவா லப்பொற்பதியைக் கடவாதயனின் றியல் பாலமைசீ, தண்டாமனையா ளுடனேயணியுந் தகைமைப்பதியத் த க்திப்பொழிலே

இ-ள், தெய்வலோகமும் பூலோகமுந்துதிக்கச் சிவபக்தியிலும் விஷ்ணுபக்தியிலு மிகுந்த விபீஷணனுக்கு ஸ்ரீராமர் குலதெய்வமா யிருக்கும் ஸ்ரீரங்கநாயகனாகிய உன்னை வரமாக அளிக்கப் பெற்றும் அவன் மிகுபக்தியுடன் பூசித்து இலங்கைக் கெழுந்தருளப் பண்ணிக் கொண்டு போகின்றபோது வெண்ணுவன் மரத்தடியில் குற்றமின்றி

வேதவசனப்படி, அப்புலிங்கருபமாய்நாமெழுந்தருளியிருக்கும் ஆன்மையை நீ ஆசையோடுந் தரிசனஞ்செய்தவுடன் அழகிய வத்தலத்தினெல்லையைக்கடக்க மனமில்லாமல் நமதுபக்கத்தில் வாயுபாகத்திற் குளிர்ச்சிபொருந்திய தாமரைமலரில் வசிக்கும் இலக்குமி தேவியுடன் மிகுந்த பக்தியாய்ப்பணிந் தெப்போதும் தரிசனஞ்செய்துகொண்டிருக்குமேன்பாடுடையதலம்திருவானைக்காவல்—எ-று. (௮௰)

கருத்திற்கலனென் றிலர்நின் றிலகுங் கதியீதென நூல் விதியாளினைபூண், துருந்திப்பறியும் பிறவிக்கடலின் றுணைபிங்கநலும் புணையென்றறிவைத், திருத்தித்தெளிவித் தளிகூர்முநியோர் சேருந்திருநல் லூரும்பணிவோ, ரருக்கித்துபாற்ற வலஞ்சுழியு மகிழ்வாலுறைநந் திகழ்மாநகரம்.

இ-ள். மனோவாக் காதிகளாற் குற்றமின்றிச் சிவாநுபோதமாக மனத்தைச்செலுத்திய அப்பர்சுவாமிகள் முதலியதபோனர்களிருந்து பிரகாசித்த மோட்சஸ்தலமிஃதென்று வேதாகமங்களிற் சொல்லுந் திரும்பூந்துருத்தியிலுஞ் சனனமரணமாகியபவசாகரத்தினின்றேற மனதை நன்மார்க்கத்திற் செலுத்தி யானந்தத்தையடையும் பெரியோர்கள் வாசமாயிருக்குந் திருநல்லூரிலுஞ் சேவைசெய்யப் பட்டவர்கள் பிறப்பாகிய சுழலில் வருத்தப்படாமலிருக்கச் சுகத்தைக் கொடுக்குந் திருவலஞ்சுழியிலும் நாம் சந்தோஷமாப் எழுந்தருளியிருப்போம் அவைகள் அழகுபொருந்திய நம்முடைய பட்டணங்கள்—எ-று. (௮௧)

வடந்தாள்முலையாண் மணிமார்பகத் வந்தித்தெமையே சிந்தித்திருக், குடந்தாபுரியுங் கடல்சூழ்நிலனிற் குலவுஞ்சிவலோ கமிதென்றருளைத், தொடர்ந்தார்பணியும் புகழ்வுந்திசழ்வுந் தொலையாவிடைமாமருதுந்தருமத், திடந்தானிகரா வடுதண்டுறையு மெப்போது நமக் கியல்வாமிடமே,

இ-ள். முத்துமாலையணிந்த தனகலசங்களையுடைய இலக்குமி தேவியை மார்பிலணிந்திருக்கும் மாயவனே நீ எப்போதும் மனமுருகிச் சேவித்துக்கொண்டிருக்குங் கும்பகோணமும் கடல்சூழ்ந்த புவனத்தில் விளங்கியிருக்கும் சிவாநுக்கிரகம்பெற்றவர்கள் கயிலாசமிதுவென்று வணங்குமகிமையும் பிரகாசமும்பெருகி அழிவில்லாத திருவிடைமருதூரும் புண்ணியங்களுக்கிடமாகிய தருமபுரமும் தனக்குத்தானே ஒப்புவமையாகிய திருவாடுதுறையும் எப்போதும் நாம்வாசமாயிருக்கும் இடங்கள்—எ-று, (௮௨)

பயிலாவிமையோர் பணிநம்பதியே பணியிற்றணியப் பரவைத்திரையிற், றுயிலாவுயிரும் புவனத்திரளுஞ் சுருதித்தொகையும் பொரு

தத்தருநஞ், சயிலாதிபமான் மயிலாயெமையே தனிவந்தனைசெய் நனிகொண்டதுமா, மயிலாலவியும் புயல்போலதிரும் மயிலாடுதுறைத் திருமாநகரம்.

இ-ள், தேவர்களெல்லாம்வந்து வலஞ்செய்து தொழும்படியாகிய நன்மையிருந்த ஓர்தலமுண்டு அத்தலத்தைத் தரிசனஞ்செய்து வணங்கினவுடன் ஓய்வில்லாத சனனமரணமாகிய சாகரத்தினின்றுங் கரையேற்றி மோட்சத்தைககொடுக்கும் அன்றியும் சகலஜீவகோடிகளையும் சகலலோகங்களின் வளப்பங்களையும் அநந்த வேதங்களையும் அவைகளின் பொருள்களையு முண்டாக்கிய மலையாசன் மகளாகிய நமதுதேவி மயிலுருவாகி நம்மைநனிபக்தியோடும் பூசித்துத் துதித்த ஆனந்தத்தினால் நடிக்குஞ் சத்தங்கள் மேககர்ச்சனைபோல் முழங்கும் கௌரிமாயூரமும் நாம்வசிக்கும் அழகுபொருந்திய பட்டணம்—எ-று. (௮௩)

முருகார்தருமா யிரமாமலரான் முன்னாள்வழி பட் டேன்றாதரவால், வருநாளொருநாண் மலர்முன்மறையக் குறையாவகையுன் றனகண்மலரா, லருளாலெமையாற் சனைசெய்திடயாமடனேமிநமகிழ்ந் துடனே யுதவுந், திருவார்பெருவின் னெழியானமெனுந் திருவீழியுநந் திகழ்மாநகரம்,

இ-ள். முற்காலத்தில் மதுக்கணிறைந் தொளிராநின்ற ஆயிரம் வெண்டாமரைமலர்களினால் நம்மைத் தினந்தோறும் பக்தியுடன் பூசைசெய்துகொண்டுவருகிறபோது உனது பக்தியைச் சோதிக்கும்பொருட்டு அவற்றிலோர்மலரை யாம் ஒளித்தவுடன் நீ உள்ளன்பினால் ஆயிரமலருஞ் சரியாக அன்றலர்ந்த செந்தாமரைமலர்போல் விளங்கும் கண்ணைப்பெயர்த்து ஆயிரஞ்சிவநாமமும் நிறைவேறும்படி அர்ச்சித்தவுடன் உனக்குக் கமலக்கண்ணனென்னும் பெயரைக்கொடுத்து வெற்றியையுடைய ஆயிரஞ்சூரியர்களைப்போன்ற சுதரிசனமென்னுஞ் சக்ராயுதத்தைச் சந்தோஷமாவளித்தோம் தெய்வலோகத்துக் கற்பகவனமானது பூலோகத்திற் றங்கியதுபோன்ற வளப்பமிருந்தசோலைகள்சூழ்ந்த திருவீழிமிழலையென்னும் தலமும் நாம்வசிக்கும் அழகிய பட்டணம்—எ-று. (௮௪)

தள்ளற்கரிதாம் வினைசாடியெழுஞ் சம்பாதிசடாயு வெனும்பெருமைப், புள்ளுக்கரசா னவரெம்மையருட் டொற்பூடணையா முற்பூசனைசெய், துள்ளக்களிமேல் கொள்ளப்புவிமே லுண்டாமெவருங் கொண்டாசுறுநோய், வெள்ளத்துலையா தமருத்துவனும் மேவும்பதியுள் வேளூர்நகரம்,

இ-ள். தீராதவல்வினைகளைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டுச் சம்பாதி சடாயுவென்னும் பெயரையுடையபட்சிகளுக்கெல்லா மரசாயிருந்த இருவரும் பக்தியுடன் அழகுபொருந்த மும்காலத்தில் நம்மைப்பூசைசெய்து சந்தோஷித்து வினைகளொழிந்து வரங்களும்பெற்றார்களாதலால் பூலோகத்திலிருக்கின்றவர்களும் நம்மைப்பூசித்தவுடன் கடல்போன்ற சனனமரணமென்னும் வியாதியாகிய அவர்களது வினையைத்தீர்க்கவேண்டி வயித்தியநாதனென பெழுந்தருளி விளங்கும் புள்ளிருக்கும் வேளூரென்னு நம்முடையதலம்—எ-று. (௮௫)

மடலுண்மலரான் முதலாமிறையோர் வந்தித்திலவா வரமெய்திடநம் மிடனாகரவா விடமாயுறையும் மிமையத்தருசீ ருமைமங்கையுடனுறைவுடனிலமே முதலாமுலகஞ் சாயும்படிவந் தெழுபேரிறதிக், கடலுண்மறைசூழ் கலமேலுறையுங் கதிர்பொற்புரிசைக் காழிப்பதியே.

இ-ள். ஆயிரமிதழ்விரிந்த வுனது உந்திக்கமலத்திலுற்பவித்த பிரமதேவ னாதிகடவுளர்கள் நம்மைப் பூசித்துப் பணிந்து நிலைமையாகி வரங்களைப்பெற நமது வாமபாகத்தில் மலைமகளாகிய அம்பிகை யுடனிருக்க பூவுலகங்கள் முழுகிப்போம்படி எழுசமுத்திரமும் பொங்குகின்ற பிரளயகாலத்தில் வேதங்களெல்லா மிதந்து சூழ்ந்துகொண்டிருக்குந் தோணிபுரமாகிய கப்பலின்மேல் வசிக்கின்ற பிரகாசம்பெற்ற கோபுரபிரகாரங்களோடுங் கூடியது நமது சீர்காழித்தலம்—எ-று (௮௬)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொதியின்மலைத்திருமுனிவன் பொன்னிபடிந் தெமைப்பூசை புரிவானெண்ணி, விதிமுறையத்தலத்தனுக நினைப்போன் மூக்கோடி முனிவரன்னான், மதிபுனையுமகத்தியாகளா பணிந்தெனைச் சீரமிலமாதவத்தோர், வதிசயித்தெயதினனதனுற் றிருக்கோடிக்காவனத்து நகேதனமாம்.

இ-ள். பொதியமலையிலிருக்கும் அகத்தியமுனிவன் நம்மைப் பூசிக்கவேண்டி காவேரியில் ஸ்நானஞ்செய்து நியமத்துடன் தன்னைப் போலவர்கள் பூசைசெய்ய வல்லவர்களென்று மனத்தில் ஆலோசித்துக் கொண்ட அக்கணமே நமது தேகமாகிய சிவலிங்கத்தில் முன்னர் தன்னைப்போன்ற அறிவுள்ளோர்கள் மூன்றுகோடி அகத்தியர்களவதரித்து வேதாகமவிதிப்படி பூசைசெய்து பேறுபெற்றார்களென்று அவர்களைக்கண்டிருந்தவுடன் அகத்தியன் ஆச்சரியமடைந்தான் ஆதலா லத்தலத்திற்குத் திருக்கோடிக்காவலமென்று பெயருண்டாயிற்று ஓர்காலத்திலும் அழிவில்லாத வந்தலமும் நம்முடையதலம்—எ-று, (௮௭)

விஞ்சைநாலவர்புகழுந் திருமங்கலக்குடியும் வெய்யதண்ட, வஞ்சனூரடையாத மகிழ்ச்சிதருமாந்துறையு மயங்குமஞ்சு,மஞ்சநாறுநீள ரகலா வக்கினேசப்பெயரோ டுயர்ந்தியாமோங்கும்,கஞ்சநாறும்பணி லக் கருமுகிலேசம்பதியாக் கருதுவாயே.

இ-ள். வித்தியாதரர்முதலிய புலவர்கள் துதிக்கும்வளப்பமுடைய திருமங்கலக்குடி கொடிய தண்டனைகுட் படுத்தும் இயமனுடைய சயிமினிபுரத்தை அணுகவொட்டாமல் சந்தோஷத் தோடுஞ் சிவபக்தியைக்கொடுக்கும் திருமாந்துறையும் மேகங்கள்தவழுஞ் சோலைகளும் கோபுரங்களும்வயங்கு மேன்மையுற்றுப் பஞ்சேந்திரியங்களையும் வென்ற தபோதனர்கள் எக்காலும் வாசமாயிருந்து சேவைசெய்ய அக்கினி யீசலிங்கமாய் எழுந்தருளியிருக்கும் திருக்கஞ்சனூரும் பாஞ்சசன்னியமென்னுஞ் சங்கமுடைய நீலமேக மேனியனை நம்முடைய தலமென்று நினைப்பாய்—எ-று, (அஅ)

முத்திநெறிப்பயனுதவு முக்குளங்கள்செறிந்தார முயங்குசோலை,
வித்துருமக்கொடிசுடலிற் செங்கதிரின்கிரணமென விரிவெண்காடுந்,
தத்துதிரைக்கடற்றரள நிலவெறிக்கவழகெறிக்குஞ் சாய்க்காடென்னு,
முத்தமநற்றலமு மிலங்கிமையமருளுமையுடனு முறையுந்தானம்.

இ-ள், மோக்ஷவழியைத் தருஞ்செயலுண்டாகிய மூன்றுகுளங் களும் மேகங்களசஞ்சரிக்குஞ் சோலைகளும் சூரியனுதய மாகியது போற் பவளக்கொடிகள்படர்ந்து விளங்கியசமுத்திரமும் பிரகாசிக்கின்ற திருவெண்காடும் கடற்றிரை நிரைநிரையா யொதுக்குகின்ற முத்துகளின்காந்தியானது வெண்மையாகிய பூரணச் சந்திரோதயம் போல் அலங்காரம்பெற்ற சாயாவனமும் நன்மை மேன்மைபெற்று விளங்கும் இமாசலபுத்திரியாகிய பார்வதிதேவியோடும் நாம் வாசமா யிருக்குந்தலம்—எ-று. (அகூ)

பொருவரியநெடுஞ்சையப் பொருப்பெழுந்துகடல புணர்க்கு பொன்னியாற்றின், மருவுமணலடுத்தகரை மணலிவைகணங்குறியே வளங்கொளோங்குந், திருநதியினிருபாலு மொருகாலுமகலாத தெய்வத்தானங், கருதிலனேகங்களுள வங்கவற்றுட்சிலவுனக்குக் கழறுவோமால்.

இ-ள். ஒப்புவமையில்லாத நீட்சியு முயர்வுமுடைய சையகிரியிற்பிறந்து சமுத்திரராஜனைச்சேர்ந்த காவேரிநதியிலுள்ள மணல்களும் மடுக்கரைகளிலிருக்கும் மணல்களும் நமது இலிங்கசொரூபமே அன்றியும் வேண்டியவரங்களை மென்மேலும்பாலிக்கும் அழகியநதியினிருகரைகளிலும் நாமில்லாத விடமில்லை ஆதலால் மகிமைபெற்ற எண்

ணிறைந்த கலங்களுண்டு அவற்றிற் சிலதலங்களை யுனக் கெடுத்துச் சொல்லுவேனுய—எ-று, (௬௦)

ஆற்றரியதீவினைக ளோராலேனு மிலாலேனு மக்கள்வந்து தோற்றமுறு பிரானையெலா நித்தமிகுமுத்திபெறத் துளங்காதியும், போற்றுமுயர வெட்டபுரந் தன்றனருளிலகாதி புண்டரீகத், தேற்றதனியாலயமாந் திக மாரூர்மறைவனம்மா மிருக்குமெல்லை,

இ-ள், தீராதவினைகளைச் செய்திருந்தாலுஞ் செப்பாம லிருந்தா லுஞ் ... அவ்விலம்லேயுள்ளது பிறந்தவுடன் அவைகளின் தீவினைகளைப்போக்கி ... நற்றிலுமறிவில்லாத மோட்சத்தைக்கொ டுக்கும துநக்கும் மேன்மையையுடைய பிரமாண்ட உருவமாகிய வி ராட்புருஷனது அநாகதசக்கிரமாகிய மூலாதாரகமலமே நமகதநப் புவனமையில்லாத கமலாலயமென்னுந் திருவாரூரும் வேதாரண்யமென் னுந் திருமறைக்காடும் ஆமிருக்குந்தலங்கள்—எ-று. (௬௧)

கந்தமலர்க்கணைதொடுத்த வெவ்வினைதனைப் புணர்ப்பெருங் காதலோ ங்கத், தந்தைதனை நகொலைசெய்து தொலைவரியபாதகங்க டாங்கிசோ ந்த, சிந்தையுடன்வந்தனைக்கப் பத்தனென்மா முத்தியினைச் சேரநல்கு மிந்திரியபொன்மதிலசூழ் தென்மதுரையெனக்கினிய தெந்தஞரா ன்றும்,

இ-ள். கந்தமுள்ளதாவும் முல்லை-அசோக-நீலோற்பலம்-மாங்கு, தாமரைமலர் நவின்றைமத்தகணைகளையுடைய மன்மதனது பாணத் தினியால் மெலிந்து அறிவழிந்து பெற்ற தாயைப்புணர்ந்து அவனையி ழுக்கொண்ட பெரியகாதலால் தகப்பனை வதைசெய்தது அதனால் பிரம ஹத்தி மகாபாதகந்தொடர்ந்து வேதனைப்பட்டு யனைகலங்கி எத்தல ங்களிலுந்திரிபல அவனையகற்றிச் சாந்தபாதகனாகிய அந்தணனது தீ ராத மகாபாதகந்தணைத்தீர்த்துச் சிவபதவிகொடுத்த அநேக மகிமை களையுடைய அறுபத்துநான்கு திருவிளையாடல்களைச் செய்த கனக மதில்களைசூழ்ந்து கோபுரங்களெலழுதுபெற்ற தென்மதுராபுரி பட்டண மானது நாம விருப்பமா யெப்போதும் இருக்குந்தலம்—எ-று. (௬௨)

விலங்கரியதவப்பிருகு முனிபுரையான்மானிடரூப் மிக்கம்மண்மே ல், லைலதிகழுந்தசரதன்றன மைந்தனிராகவனெனகீ வந்துதோன்றி, யிலங்கையனாயன்றலைபத் தறத்தலாற்பிரமகத்தி யெய்தநெஞ்சன், த லங்கிமைக்கண்டாசித்துயர்ந்தவிராமீசுரங் காதன்மூதூர்

இ-ள். அழிவில்லாத மகா தபோதனனாகிய பிருகுமுனிவனது சா பகாரணத்தினால் மேன்மைபொருந்திய பூமண்டலத்தில வெற்றியின்

மிகுந்த தசரதமகாராஜனது பிள்ளையாய்ப்பிறந்து ஸ்ரீ இராமனென்னும் பெயரையுடையவனாகி இலங்கைக்கரசனாகிய இராவணனென்னும் அவுணனது பத்துத்தலைகளையுந் துணித்தமையால் பிரமஹத்தி தொடர அதனுங்கலங்கி நம்மைப் பிரதிஷ்டைசெய்து பூசித்தவுடனந்த பிரமஹத்தியைத்தீர்த்த உத்தமமாகிய இராமீசுரமும் நாம் இருப்பமாய் வாசங்கொண்டிருக்கும் பழைமையாகிய ஊர்—எ-று. (௯௩)

எண்டருமப்பதியவற்றுட் சதாசிவமேவடிவாகி யிருப்போமந்தப,
புண்டரிகபுரமெமது பேருருவமபுவனமுதற் புகன்றயாவும, விண்டு
பரமானந்த வுருவமாங்கினிதுறைது மிருமவ்வெல்லை, கண்டதுகண்
மணற்சுக்கா னங்குறிநீருள்ளசிவ கங்கையாமால்.

இ-ள். கணிதமிடுவதற்கரிய அத்தலங்களிலெல்லாம் சதாசிவமூர்த்திரூபமாய் எழுந்தருளியிருப்போம், அந்த விராட்புருடனிதயகமலமாகிய சிதம்பரதலத்தில் நமது பரிபூரணகலையுடன்விளங்கிக்கொண்டிருப்போம் பூமிமுதல்சராசரங்களாகிய ஜீவகோடிகளெல்லாந் தீவினைகள்தீர்ந்து பரமானந்தசொரூபமாய் அங்ஙனம் விருப்புற்றிருக்கும் அன்றியும் அவ்வெல்லைக்குட் காணப்படுந் தூசுமணல்களாங்கற்கள் முதலியவெல்லாஞ் சிவலிங்கவடிவமாகும் தண்ணீரெல்லாஞ் சிவலிங்காதீர்த்தமேயாகும்—எ-று, (௯௪)

நடமருவுநலமுறுமத் தனித்தில்லைநகர்நாப்பண் டன்னின்மன்னு
ம்,புடவிமுதலோரைந்து மகத்துவமாங்காரமெனப் புகலுமோரேழ், மூ
டைவுதிகழாவரணப் பிரமாணமூலத்துக் கப்பாலுஞ்சென் றனையவ
டிபடைத்தளவி லொளிகிளரக்கிளர்சயில மொன்றுண்டன்றே,

இ-ள். விசாலமாகி நன்மைமிகுந்திருக்கும் ஒப்புவமையில்லா அச் சிதம்பரதலத்தில் நடுவில் எப்போதும் நிலைமையாகவிருக்கும்பூமிமுதற் பஞ்சபூதங்களும் மகத்துவ மாங்காரமென்னும் ஏழுவகை ஆவரணமாகவிளங்கும் பிரமாண்டத்தின் அடிக்கப்பாலுமசென்று மூன்றுண்டாகி முடிவில்லாப் பிரகாசமிகுந்து முளைத்திருக்கும் ஓர்மலையுண்டே—எ-று. (௯௫)

அங்கிரியின்வடபாலுந் தென்பாலுங்குடபாலு மாகித்தோற்றமுய
ய்க்[illegible]க் கொடிமுடிமூன் றுட்புவியான் மறைந்தவைகள் விளங்கித்
தோன்று,"தக்கவடபாற்சிகரந் தளங்களாயிரம்படைத்த சலசந்தன்
னை, யொக்குமதனடிப்பொருட் டொத்திலிங்கவுருவங்கொடு நாமுறை
கின்றேமால்.

இ-ள். அம்மலைக்கு வடதிசையிலுந் தென்றிசையிலும் மேற்றிசையிலுமாகத் தங்கமயமாகிய மூன்றுசிகரங்களுண்டு அம்மூன்றுசிக

ரங்களும் பூமிக்குள்மறைந் திருப்பதினுல் பிரகாசந்தோன்றுது அதின் மேன்மையாகிய வடபாற்சிகரம் ஆயிரமிதழ்க்கமலவுருவமாகவிருக்கும் அத்தாமரையி னடுப்பொருட்டுப்போல் நாஞ்சிவலிங்கரூபமாக வெழுந்தருளியிருப்போம்—எ-று. (௬௫)

அச்சிகரச்சலசவித ழாயிரநேரிடங்கடொறு மமர்ந்துதோன்று, மெச்சிவலிங்கம்புகலி னீராஞ்ஞூறளவளவில் விண்ணோரண்டா, லிச்சை சயெறுமருச்சிறப்பர்மானிடர்கள் டறிந்தறைஞ்சி யேத்தவெய தா,லிச்சயம்பாநடுவணையு மிக்கசிவக்குறிதனையாம் நீங்கோமென்றும்.

இ-ள். அந்த சிகரமாகிய கமலத்தின் ஆயிரமிதழ்களிலும் மறைந்திருக்கும் மெய்ம்மையாகிய ஆயிரஞ் சிவலிங்கங்களுண்டு அச் சிவலிங்கங்களை எண்ணிறந்த தேவர்கள் பக்தியுடன் வரங்களைவேண்டிதரிசனஞ்செய்து பூசிப்பார்கள் பூலோகத்தார்காண்பதற்கும் பூசித்துவணங்குவதற்கும் அரிதாகியும் மெய்மையாகியும்நடுப்பொருட்டில்வசிக்கும் மேலாகிய சிவலிங்கத்தைவிட்டு நீங்காமல் நாமெப்போதும் எழுந்தருளியிருப்போம்—எ-று. (௬௭)

அருளுருவக்குறியெவைக்கும் பற்றுயோராலினுக்கண் கடுத்ததென்சார், மருவுறுமிப்பிரமாண்ட மூலத்திற்கீழெய்து மரபினுலே, பொருளினுக்குமூலமாய்க் காரணமாய்விளங்கலாற் புவனங்காக்கு,திருமறுமார்பகனாமந் திருமூலத்தானமெனத் திகழாநிற்கும்,

இ-ள். அநுக்கிரகரூபமாகிய அச்சிவலிங்கம் எல்லாவற்றிற்கும் பிடிப்பாய் ஓர் ஆலமரத்துக்குத் தென்கீழ்ப்பக்கமாகிய அக்கினிமூலையில் பிரமாண்டத்துக்கு மூலமாயிருப்பதினுலும் எப்பொருட்கும் ஆதியாகவும் வித்தாகவும் பிரகாசித்துக்கொண் டிருப்பதாலும் திருமூலஸ்தானமென்று பெயர்விளங்கியிருக்கும் உலகங்களை இரட்சிக்கும் அதிகாரமுடையவனுகி இலக்குமிதேவியை மார்பிற் றரித்திருக்குங் கேசவனே அறிந்துகொளளென்று சிவபெருமான் அநுக்கிரகஞ் செய்தார்—எ-று. (௬௮

ரனவர்விஞ்சையர்சித்தர் சாரணர்பாரிடமலகைதாபதேசர்வானவர்கந்திருவரிராக் கதரியக்கர்கிம்புருடர் வானவாசி, யானவர்கின்னரர் [illegible] நரகர்தாரகைபோகத் தலனியோரு, மேனையமானிடர்யாரும் [illegible]த்துவாவ் விலிங்கந்தன்னை,

[illegible]ரர்-வித்தியாதரர்-சித்தர்-சாரணர்-பசாசர்-பூதகணங் [illegible]வர்கள்-கந்தருவர்-யட்சர்-கிம்புருடர்தெய்வலோக [illegible]ரர்-கருடர் - நாகலோகத்தார்-நக்ஷத்திரபதவி பெ [illegible]லோகத்திலுள்ள ஜீவராசிகள்-மாந்தர்கள் யாவரும்அம்மூ

லஸ்தான மகாலிங்கத்தைப் பூசித்துத் துதித்து வரங்கள் பெறுவார்கள்—எ-று, (௩௯௯)

விற்பொலிதென்பாற்சிகரங் கனகசபைபெனுமுண்மை விளம்பக்கேட்டி, கற்பனைகளிகந்துயர்ந்த தற்பரசைதன்னி யத்தைக் கலைவேதங்கள், பொற்புடையகனகவெளிக் கொப்பென்றுபுகன்றன பொற்பாதுவுமாறு, வற்புகாமபேருருவே யாதலாற்சின்மயமே மையமின்றல்,

இ-ள். அம்மூலஸ்தானலிங்கத்துக்குத் தென்றிசையில் மிகுதியும் பிரகாசம்பொருந்திய சிகரங் கனகசபையென்று மெய்மையாகச் சொல்லப்பட்டது அதன் இரகசியப்பொருளைச் செல்லுகிறோம். கேளும் பாபசம்பந்தங்களை நீக்கி ஆநிக்கமுடைய வேதாந்த மகாவாக்கியப்பொருளிற் சமரச வபிக்கியத்தோங்கலந்த வேதாகமத்தையுடைய தங்கசிறம்போன் றிருப்பதினால ஞானசபையென்று பெயர் பெற்றது இதற்குச்சந்தேகமில்லை—எ-று. (௪௦௦)

அன்னதுகொண்டதுகனக சபையெனக்கம்பாலணமுந்த தறவோரமிக்க, பொன்னிலகுசிகரத்திற் பொலிதலாற்பொற்பொதுவாப் புகன்றுரென்று, மன்னுதமனியத்தானம் மனுவெழுதியானவர்கள் வகுத்தலாலே, தன்னிகர்பொன்னம்பலமென் றுரைத்தர்தராதலமேற் றங்குமாக்கள்.

இ-ள். அந்தச்சொற்கொண்டு பொன்னம்பலமென்றும்மாற்சொல்லப்பட்டது தருமசீலராகிய தபோதனாகள் தங்கமயமாகப் பிரகாசிக்குஞ் சிகாத்தில் காமவிளங்குவதினால திருசிற்றம்பல மென்றுஞ் சொல்லுவார்கள் தேவர்களெப்போதும் பொற்றகட்டில் பஞ்சாட்சர மந்திரமென்னுஞ் சிதம்பரசக்கரத்தை எழுதிப் பூசித்துவணங்கித் தோத்திரஞ்செய்துகொண்டு வருவதினால் பூலோகத்திலிருக்கு மானிடர்கள் ஒப்பற்ற கனகசபையென்று சொல்லுவார்கள்—எ-று. (௪௦௧)

ஆராதநாதபர சித்தானந்தத்துருவ மாகமக்குப, பேரானந்தாலானந்தசபையெனப்பேர் பெற்றதியார்க்குந், தோரநற்சின்மயமாய் விளங்கலாற்றிருச்சிற்றம் பலமென்றுள்ள, தோராழிநெடுமாலேய கனுண்மை விரித்தெளிதி னுரைக்கற்பாற்றே.

இ-ள், எக்காலத்திலு மழிவில்லாத நாதபரசித்தா[illegible]மாகி
நமக்கு மிகுதியுஞ் சந்தோஷத்தையுண்டாக்குவதினு[illegible]
யென்றும் பெயர்பெற்றது எவர்களுக்குங் கண்ணி[illegible]
செயலினாலும் ஞானமயமாய்ப் பிரகாசிப்பதினாலும்[illegible]
லமென்றும்பெயர்பெற்றுவிளங்கும் ஆதலால் சுதரிசனமென்னு[illegible]

காத்தையுடைய மாதவனே அதனுண்மையை எளிதாய்விரித்துச்சொல்லமுடியாது—எ-று, (௧௦௨)

மற்றுமுள தலங்களினங் கலைதங்கவெமக்குடைய வடிவந்தில்லை, நற்றலமீதினிதினுறைந் தெஞ்ஞான்றுமிகவிளக்கநண்ணுகிற்போஞ், சொற்றிமென்கயற்றிந்த விளக்கமிலைசுராட்புருடத் தொல்லோனுள்ளப், பொற்றளவுரீசமீ தாதலால்யாவையினும் பொலிவுண்டாகும்,

இ-ள். மற்றும் பூலோகத்திலுள்ள தலங்களில் நமது கலைதங்கியிருக்க சாம்பரிபூரணகலையுடன் பகாருபங்கொண்டு நன்மைமிகுந்த சிதம்பரதலத்தில மகிழ்வுடன் எபபோதும் பிரகாசம்பொருந்தியிருப்போம் அன்றியும் வேதங்களிற் றுதிக்கத்தக்க இக்கயிலாசத்திலும் அப்பிரகாசம் நமக்கில்லை அதேதெனென்றால் பிரமாண்டரூபமாகிய விராட்புருடனுடைய தங்கிறமாகிய இதயகமலமாதலால் எத்தலங்களினும் இச்சிதம்பாதலம் நமக்குப்பிரகாசத்தையும் நனிமகிழ்வையுமுண்டாக்கும்—எ-று, (௧௦௩)

உரைக்குமதுநிச்சயமப் புண்டரிகபுரமுமது னூடேயிந்தத், தரைக்குண்மறைந்திலகுசுடர் பொற்சிகாபபொற்கிரியுஞ் சாற்றுகின்ற, வரைக்கரியபகிரண்ட ரண்டங்களிறுதிபெற மருவுநாளும்,விரைக்கமலமலர்மருவு திருமாபவழியாமல் விளங்குமன்றே.

இ-ள், சொல்லுகின்ற வந்த உண்மையாகிய புண்டரீகபுரமென்னுஞ் சிதம்பரதலமும் அதனடுவிற் பூமிக்குள்மறைந்து பிரகாசிக்கும் பொன்னம்பலமென்னும் மூன்றுசிகரங்களையுடைய பொன்மலையும் சொல்லுவதற்கரிய அண்டபகிரண் டங்களும் அழியும்படிமகாபிரளயகாலங்கள் வந்தபோதும் வாசனைபொருந்திய செந்தாமரைமலரிலிருக்கும் இலக்குமிதேவியை மார்பிலணிந்த மாயவனே அழிவில்லாமல் நிலைமையாகவிருந்துவிளங்கும்—எ-று. (௧௦௪)

செப்பரியநம்முருவப்பொற்பதிநம்மருளுருவஞ் சிதையாதென்று, மப்பதியுமப்பதிசேர் பரமானந்தக்கூவற் கடுத்தமேல்பா, லொப்பரிய சிவகங்கைத் தென்பானின்றன்பாலிவ் வுமைகண்டேத்தெம். மெய்ப்பரமானந்தநட மங்கொருகாற்கண்டவரே வீடுசேர்வார்.

இ-ள். வேதாகமங்களிலுஞ் சொல்லுதற்கரிதாகிய மகிமையையுடைய [illegible]மை நமது திருவுருவம் சிதம்பரதலமானது அதுக்கிரக்சத்தியுருவம் ஆதலால் இவ்விரண்டும் எப்போதும்அழிவில்லாமலிருக்கும் பரமானந்த கூபதீர்த்தத்திற்கு மேற்பாலாகவும் ஒப்பற்றொளிருஞ் சிவகங்கைதீர்த்தத்திற்குத் தென்பாலாகவுந் திருச்சிற்றம்

பலத்தில் இப் பார்வதிதேவி சிவகாமசவுந்தரி ரூபமாய் அன்புடன் கண்டுதுதித்து மகிழ்வெய்தும் மெய்மையாகிய நமது பரமானந்த நாட்டியத்தை அங்ஙன மொருதரங்கண்டு தரிசனஞ்செய்தவர்கள் மோக்ஷமென்னுமுத்திவீட்டைப்பெறுவார்கள்—எ-று. (௧௦௫)

குடதிசையிற்கொடுமுடிப்பா லெலைக்கருதிக்கந்திருவர் குலவும் வானோ, ரடன்முனிவர்சித்தர்முத லிருப்பவொனமருள்செய்தானருளா லண்டந்,தொடர்புடையசராசரமாப் தொல்லுயிராய்ப்பல்லுயிர்க்குத் துணையாய்நாதம்' படர்மறையாய்மறைமுடிவாய் முடியாதபராபரமாம் பரமானந்தன்.

இ-ள். திருச்சிற்றம்பலத்துக்கு மேற்றிசையிலிருக்கும் சிகரத்திற் கந்திருவர் பிரகாசமபொருந்திய தேவகூட்டங்கள் காமாதி அந்தரங்க சத்துருக்களைவென்ற முனிவர்கள் சித்தர்கள்முதலிய தெய்வத்தன்மை பெற்றவர்களெல்லாம் வாசமாயிருந்து திருச்சிற்றம்பலத்தில் நாம் ஆனந்தநடனஞ்செய்யும் விநோதத்தைத் தரிசனஞ்செய்துகொண்டு எப்போது மிருப்பார்களென்று கருணாசவிநோதத்தினற் பிரமாண்டங்களிலுள்ள தாபரசங்கமங்களுமாய அவைகளின் சீவரூபமாய் பிராணகோடிகளுக்குந் துணையாய்ச் சத்திரூபமாகிய வேதங்களாய் வேதமுடிவாயும் ஒருகாலத்திலு மழிவில்லாத பராபரவஸ்துவாய் விளங்கும் பரமானந்தன் திருமாலுக்குபதேசஞ்செய்தார்—எ-று,

ஆதிமறைத்திருவாக்கா லருள்செய்தவுரைகேளா வன்புமிக்கோன், மாதவனும்பிறைவபரம் பரவமலபகவமிக வயங்கும்வெள்ளிப், பூதராநாதமொழித்த புனிதசிதம்பரவென்று போற்றிசெயய, பாதமலர்த்துணைபலகாற் பணிந்தெழுந்துநேசமுடன் பகருகின்றான்.

இ-ள், ஆதியாகிய வேதாகமங்களைமொழிந்த திருவாக்கினல் உபதேசித்த வுரையைக்கேட்டு மாதவன் பக்திமிகுந்து கர்த்தனே பரம்பரனே அமலனே பகவனே பிரகாசம்பொருந்திய வெள்ளிமலையிலிருக்கும் லோகநாயகனே காமனை யெரித்த கண்ணனே புநிதனே சிதம்பரனே என்று அநேகதோத்திரங்கள்செயது பரமசிவத்தினது பாதாரவிந்தங்களில் பலதரந்தெண்டனிட்டெழுந்து ஆசையுடன் விண்ணப்பஞ்செய்கிறார்—எ-று. (௧௦௬)

நின்னுடையகருணையினு னினக்குரியபதிதோறு நின் [illegible] ன்னிறையுந்தனனிந்தப் புண்டரிகபுரத்திலடநான் [illegible] பொன்னவையினின்றுநி மானந்தத்தாலடவம்யான் [illegible] முன்னிமகிழ்ந்திறைஞ்சியுறைத் திடுமாறென்சிந்தைமா [illegible] ன்றே,

இ-ள். தேவரீருடைய அநுக்கிரகத்தினால் தாங்களெழுந்தருளியிருக்குந் தலங்கள்தோறும் நான் உம்மை பக்தியுடன் பூசைசெய்து நிலைமையாகவிருந்தேன் இந்தப் புண்டரீகபுரமாகிய சிதம்பரதலத்திலே வேதங்கள் சூழத்தக்கதாய்ப் பொன்னம்பலத்தில் நடனஞ்செய்யும் ஆனந்தத்தாண்டவத்தை நான் கண்களினாற்றரிசனஞ் செய்துபணிந்தேத்திமகிழ்வெய்தி எப்போது மிருக்கவேண்டுமென்று என்மனதில் ஆசைமிகுந்துலவுகின்றது—எ-று (௧௦௮)

வானவர்நாயகநினது திருவுள்ளத் தருளிலரேன் மனிதர்வானோர், ஏனையயாவருமந்தத் தலமிதையந்நாளு மெண்ணமாட்டார், யானுனதுதிருவருளுக் குரியேனின் கருணையினாலெய்தற்கெய்தா, ஞானமணியம்பலத்தி னடங்கண்டிறைஞ்சநெறி நல்காயென்றான்

இ-ள். தேவர்களுக்கெல்லாம் நாயகனே தேவரீருடைய திருவுளத் தநுக்கிரகம் பெறுமற்போயினால் மானிடர்கள் தேவர்கள் மற்றுளவெவர்களும் அந்தச் சிதம்பரதலத்தை மனதினாலேயும் நினைக்கமாட்டார்கள் ஆகையினால் அடியேன் தேவரீரது பாதாரவிந்தங்களுக்கு உரித்தாகிய பக்தனென்று திருவுளத்தில் அருள்சுரந்து யாவர்க்குமரிய சின்மயமாய் நவரத்தினங்களினாலலங்காரம்பெற்ற பொன்னம்பலத்தில் ஆனந்தநடனஞ்செய்யும் விநோதத்தை அடியேன் தாமரைக்கண்ணனென்னும் பெயர்படைத்ததற்குப் பயனடையத்தக்கதாகக் கண்டு தரிசனஞ்செய்து பூசிக்கும் நன்மார்க்கத்தை அருள்செய்யவேண்டுமென்று மாதவன் பிரார்த்தனைசெய்தான்—எ-று, (௧௦௯)

ஆயவுரைகேட்டருளி நெடுமாலேநமக்குரிய வன்பர்நம்மை, நேயமுடனினைந்துரிய நாமமுடனங்கதையே நிகழ்த்திக்கேட்டு, மாயைவினைப்பகைநூறி யானந்தக்கடன்மூழ்கி வாழாநின்ற, தூயவறிவுடனிருப்ப ரெஞ்ஞான்றுமாசையிடைத் தொடர்புகொள்ளார்.

இ-ள். இவ்வகையாய் மாதவன் வரங்கேட்டதற்குக் கருணைகொண்டு மாயவனே நமக்கு விருப்பமாகிய பக்தர்கள் நம்மை அந்தரங்கபக்தியுடன் தியானஞ்செய்து சிவநாமங்களையும் மகிமையையும் பெரியோர்களாற்சொல்லக்கேட்டு மாயாசம்பந்தமான சத்துருக்களைத்தொலைத்து ஆனந்தக்கடலுண்மூழ்கி வாழ்ந்து பரிசுத்தஞானத்துடனெப்போதுமிருப்பார்கள் மாயாசம்பந்தமென்னும் பாசக்கடலுட்சேரார்கள்—எ-று, (௧௧௦)

உரியபெருமக்கவர்தம்மி லுயர்ந்தேகளொத்தோர்வே றுனக்கவுண்டோ, வரியதிருவெனவலருக் கெஞ்ஞான்றும்பாதுமிலை யளவிலாத,

விரிவுறுமுப்புவனத்து மில்லாதபொருளேனும் விரும்புவாரேல், பெரிதுமகிழ்ந்தருளுவதே யெம்முடையநன்னியமம் பேசுங்காலை

இ-ள். நமக்கு விருப்பமாகிய வத்தலவாசிகளிலும் உயர்வானவர்களும் சமானமானவர்களும் வேறே சொல்லுவதற்கில்லை அவர்களுக் கெப்போதுங் கிடைப்பதற்கரிதாகிய பொருள்களொன்றுமில்லை அளவுக்கெட்டாத விரிவாகிய மூன்றுபுவனங்களிலும் இல்லாதகாரியங்களை யவர்கள் இச்சித்தாலும் அக்காரியத்தை மிகச்சந்தோஷத்துடனே உண்டாக்கிக்கொடுப்பதே எமக்குரிய நன்னீதியென்றுசொல்லப்படும்—எ-று. (ககக)

புரந்தாளுமெமக்குரிய வன்பருக்குளுத்தமனீ போற்றிக்கேட்ட, வரந்தாழ்வொன் றறத்தந்தோ மாதவர்வானவர்முதலோர் மயக்குமாமாயை, யுரந்தாழவக்கிரியிற் பச்சிமப்பொற் சிகரத்தி லுறைகின்றார்கள், பரந்தாமவங்கவர்தம் முடனிறைஞ்சிமன்றினடம் பார்த்துவாழ்வாய்,

இ-ள். நாம் தடுத்தாட்கொண்டு இரட்சிக்க விருப்பமுற்ற பத்தர்களுக்குள் மேன்மையாகிய நீவணங்கி வாழ்த்திக்கேட்டவரத்தை ஒருகுறைவுமின்றிக் கொடுத்தோம் ஆதலான் மகாதபோதனர்களையும் தேவர்களையும் மற்ற யாவர்களையுமயங்கச்செய்யு மகாமாயையின் வலிமைகுறைய அத் தங்கமலைக்கு மேற்றிசையிலிருக்குங் கனகமயக்கொடுமுடியில் முநிவர்களுந் தேவர்களும் ஞானசொரூபம் படைத்திருக்கின்றார்கள் பரந்தாமனே நீ அங்கு அவர்களுடனேகூடித் திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தநடனத்தைத் தரிசனஞ் செய்துகொண்டு வாழ்வாயென்று பரமசிவனநுக்கிரகித்தார்—எ-று, (ககஉ)

வடிவுவடிவிறுதியிலா வின்பவுருவாயுலக வாழ்க்கையென்னோ, நெடியாகமதுண்மைதனை நினைந்துநினைந்தனவரத நிறையானந்தப், படிவமணியம்பலத்துப் பரமானந்தப்பரவை படிந்தழுந்தி, யடிமுடிவுகாணு வானந்தத்தாண்டவங் கூடாகின்றோம்,

இ-ள், மாயாசம்பந்தமான தேகமாகி முடிவில்லாத பிரபஞ்சவாழ்க்கையுட் புகுவதென்கொல் அஃதுணராமல் பெரிதாகிய நமதுண்மையென்னும் இரகசியப்பொருளை இடைவிடாமற் றியானஞ்செய்துகொண்டிருக்க எப்போதும் பரிபூரணானந்தமயமே திருவுருக்கொண்ட இரத்தினத்திரளொளிபோன்ற ஞானசபையிலே பரமானந்தக்கடலுள்தோய்ந்து ஆதியந்தங்காண வரிதாகிய பரமானந்தநடன மெப்போதுஞ் செய்துகொண்டிருக்கின்றோம்—எ-று. (ககங)

எல்லையிலானந்தநட மின்புறக்கண்டுருகியினி திருந்தியந்தத், தில்லைநகரிடத்துறைவோர் மனுகுலங்கடிவினைக ளுயநோய்க, ளல்லன்மி கவருமச்ச மன்னவராலிடுகலக மரிகள்கோறல், வல்லபுலியாதிபல வருபயங்கண்மருவினுநீ மாற்றுவாயால்.

இ-ள். முடிவில்லாத வானந்தநடனத்தை மகிழ்வோடுதரிசனஞ் செய்து மனமுருகி எப்போதுஞ் சிதம்பரத்தில் சுகமா யிருந்துகொண்டு அத் தலவாசிகளின் மனக்கவலையையும் பொல்லாங்காகிய பாவ வினைகளையும் நீரோதவியாதிகளையும் மிகு துன்பங்களுக்கிடமாய்வரும் பஞ்சகாலங்களையும் அரசர்களால்வருங் கலகங்களையுஞ் சத்துருக்கள் பயங்களையும் கொடிய சிங்கம் புலி கரடிமுதலிய மிருகங்களால்வரும் பயங்களையுங்கண்டித்து அன்னவரை இரட்சித்துவருவாய்—எ-று ()

கண்டிகைநீறணிந்துநம தியல்பாடியெம்மையே கருதியேற்ற, தொண்டுபுரிதொண்டருக்கோ ரிடையூறுண்டானாலுந் தூயநேயங் கொண்டதனையொழித்தந்தத் தலம்புரக்குமியல்புனக்குக் கொடுத்தோமென்று, னண்டமெலாமுன்னாளி னன்னவனேபுரந்தளிக்க வருளுமண்ணல்.

இ-ள், விபூதி உருத்திராக்க மணிந்து நம்முடைய மகிமையைத் தோத்திரங்கள்செய்து நம்மை மனதில் தியானித்துப்புகழும் அடிமைத்திறமுண்டாகிய சிவபக்தர்களுக்குள் ஒரு இடர்கள்வந்தால் மிகுதியும் விருப்பத்துடன் அவர்கள் துன்பத்தைத்தீர்த்து அத்தலத்தை இரட்சிக்கச்சொல்லிக் கட்டளையிட்டார் அண்டரண்டங்களையெல்லாமுன்னாளிற்படைத்தளித்த விருபாக்ஷியாகிய சிவபெருமான்—எ-று, ()

கலிவிருத்தம்,

அளவைக் கரியா னருள்செய் திடமால்
வளரம் பொழுமே வலம்வந் துளமேன்
முளரிப் பதம்வைத் தெதிர்பன் முறைவெம்
பளகற் றிமோறு பணிந்துதொழா

இ-ள். வேதாகமசாத்திரங்களினாலு மளவிடப்படாத பரமசிவன்றனக்கு அதிகாரங்கொடுத்தவுடனே மாதவன் மிகுதியுமானந்தித் தெதிர்நின்று அநேகதோத்திரமும் பக்தியும்பெருக உயர்வாகிய கயிலாசகிரியை மூன்றுதரம் பிரதக்ஷணஞ்செய்து பரமசிவனது பாதாரவிந்தங்களைத் தன் னிதயகமலத்திலிருத்தி யெதிர்நின்று சந்தோஷத்துடன் அனந்ததெண்டனிட்டு வணங்கினன்—எ-று, (௧௧௬)

விழியிற் பொழிநீர் வியன்மார் பகலம்
வழியப் புளகம் மருவச் செவது

மழியக் களிவங் தகையத் தளர்நா
மொழிபெற் றருள்கூர் மொழியான் மொழிவான்.

இ-ள். கண்களிலே ஆனந்தரசம்பெருகி விசாலம் பொருந்திய மார்பிடமாய்வழிந்தோட மயிர்க்குச்செறிந்து நடைகள்தடுமாறிச் சந்தோஷமிகுதியினால் நாவுகுழறிக்கொண்டு மாதவன் பக்தியோடுமொருவசனஞ் சொல்லத்தொடங்கினான்—எ-று. (ககஎ)

முன்னே புவனம் முழுதும் புரவென்
றன்னே ரருளா லுரைசெய் துலகிற்
றன்னே றவைசூழ் தலனுங் குலவும்
பொன்னே ரனையாய் புரவென் றனையால்.

இ-ள், முன்காலில் உலகங்களையெல்லா மிரட்சிக்க அதிகாரங்களைக்கொடுத்த தேவரீர்என்னிடத்தில் மிகுதியுங்கிருபைவைத்துபுவனத்தின்கண் தனக்குத்தானே ஒப்புவமையான ஞானசபையைச்சூழ்ந்திருக்குஞ் சிதம்பரபுரத்தையும் இரட்சிக்கச்சொல்லி ப்ரகாசம்பொருந்திய தங்கநிறம்போன்ற திருமேனியி னழகினையுடைய தேவரீர் மேன்மையான வதிகாரத்தை யருட்செய்தீரென்று முகுந்தன் ஆனந்தமுற்றான்—எ-று: (ககஅ)

மலையஞ் சிகரந் தொளிர்மன் றிடையுன்
னிலயந் தனிகண் டடிநின் றனனித்
தலமென் னருமைத் தலனங்க தெலா
மலைவொன் றறவெய் கருள்செய் தனையால்,

இ-ள், சிதம்பரத்தின் நடுபூமியில் மறைந்திருக்கும் தங்கமலையின் சிகரங்களும் அதனடுவிற் பிரகாசிக்கும் ஞானசபையில் தேவரீர் ஞானானந்த நடனஞ்செய்யும் விநோதத்தை அடியேன் தரிசனஞ் செய்யும்விதமும் தாங்க ளொவ்வொருகாரணங்களினால் ஒவ்வொருபக்தர்களுக்குச் சேவைதந்த அநேகதலங்களின்மகிமாதிசயங்களையுஞ் சந்தேகந்தீர அடியேனுக்குத் திருவுளம்பற்றினீரென்று நீலமேனியன் விண்ணப்பஞ்செய்தான்—எ-று, (கககூ)

உன்போல வெனக் குதையர் ரெவரோ
வென்போல வுனக் கினியா ரெவரோ
துன்போட விளங்கிய தொண்டரு ளின்
னன்றோ கையொடென் னிலனட்ந்தவர் யார்.

இ-ள், நின்னைப்போல வெனக்கு வேறே நாயக னுண்டோ என்னைப்போலுந் தேவரீருக்கு விருப்பான பக்தனுண்டோ துயரைப்

போக்கி விளங்கச்செய்த நின்னடியவர்க்குள் அன்பும் ஆனந்தமுமுள்ளன்போல் தேவரீரநுக்கிரகம்பெற்றவர்கள் வேறுயில்லையென்று அச்சுதன ஆச்சரியமடைந்தான்—எ-று, (கஉ0)

என்று வுரையா விருளாய் வெளியா
முன்றுப் நடுவாய் முடிவா யடியா
ருன்று வுணாவா முடையா னியலமா
நன்று மகவிற் றநயந் தனனுல்

இ-ள். இவ்விதமாய் அடியேன் நாவினுற்சொல்லும் வசனமாய் இருளாய் வெளியாய் ஆதியாய் நடுவாய் அனந்தமாயசிவயோகிகளினது நினைவினுலறியத்தக்க ஞானமயமாய் காத்தனுகிய தேவரீருடைய அநுக்கிரகத்தினுல் தம்முடைய மகிமையைத்துதிக்க விரும்பினனென்று நாராயணன் மகிழ்வடைந்தான்—எ-று. (கஉக)

வேதா திபர்தந் தேவே சரண
மூவா மலையான் முதல்வா சரண
மேவா தவர்பால் மேவாய் சரணம்
பூவா ளியடும் புனிதா சரணம்.

இ ள். தேவாதிதேவர்களுக்கெல்லாந் தேவனேசரணம் திரிமூர்த்திஸ்வரூபமாயும் பர்வதராஜகுமாரியாகிய சிவகாமசவுந்தரியின் நாயகனே சரணம் அன்பில்லாதவர்களிடத் தணுகாதவனே சரணம்மன்மதனை நெற்றிக்கண்ணுலெரித்த விமலனேசரணஞ்சரணம்—எ-று. ()

கருவே யுலகின் கல்லணே சரண
மருவே யுருவே யறிவா ரறிவின்
மருவே சடையேன் மதியா யிமையோர்
திருவே மறையின் றெளிவே சரணம்.

இ-ள். உலகங்கள் தோன்றும் இடமாகியவனே சரணம் அவ்வுலகங்களுக்கு க்ஷேத்திர மானவனே சரணம் நிட்களமானவனே சரணம் சகளரூபனே சரணம் பக்தியுடனேதியானிக்குஞ் சிவயோகிகளினுள்ளினிறைந்தவனே சரணம் சடாமகுடத்திற் சந்திரனே யணிந்தவனே சரணம் தேவர்கள் செல்வனே சரணம் அழகிய வேதத்தின்றெளிவே சரணம் சரணம்—எ-று. (கஉங)

எந்தாய் புரமூன் றெரிசெய் தருளத்
தந்தாய் சரணந் தலைவா சரண
கந்தா பரமா னந்தாசரணஞ்
சிந்தா மணியே சிவனே சரணம்.

இ-ள், என் தந்தையே முன்னர் திரிபுரங்களை எரித்து எம்மை இரட்சித்தவனே சரணம் எங்க ளுயகனே சரணம் ஒருகாலத்திலு ம ழிவில்லாத ஆனந்தமயனே சரணம் அடியார்கள் வேண்டிய வரங்களைக்கொடுக்குந் தெய்வமணியே சரணம் பரமசிவனே சரணஞ் சரணம்—எ-று, (கஉச)

அத்தா வனைவர்க் குமகிழ்ந் தருள்கூர்
சித்தா சரணஞ் சிவசம் புவெனு
முத்தா சரணம் முதல்வா சரணம்
வித்தாய் விளைவாய் விரிவாய் சரணம்.

இ-ள், அத்தனே சகலமானவர்களுக்குஞ் சந்தோஷித்து அநுக்கிரகஞ்செய்யு மனதையுடையவனே சரணம் சிவசம்பு வென்னும் பெயரையுடைய முத்திக்குநாயகனே சரணம் ஆதிகாரணனே சரணம் வினைபாயும் அவ்வினையின் பலனும் உலகத்தில் நிறைந்தவனே சரணஞ்சரணம்—எ-று (கஉரு)

புகலற் றுணர்வொற் பொருவென் றுணர்சிற்
ககனத் துறைமா ககனச் சுடரா
மிகலற் றகடந் திறைவா சரணம்
நிகரற் றிலகு நிமலா சரணம்.

இ-ள், வாக்குக்கெட்டாது சிவயோகத்தினு லறியத்தக்கதாகிய பொன்னம்பலமென்னுஞ் ஞானகாசத்தின் மகாதகராகாச பரஞ்சோதியாய் விளங்கி மாறுபாடில்லாத ஞானனந்த நடனஞ்செய்யும் கர்த்தனே சரணம் ஒப்புவமை யில்லாமற் பிரகாசிக்கும்விமலனேசரணஞ் சரணம்—எ-று. (கஉசா)

ஆறூர் சடையா யமலா சரணம்
மீறும் முதலா யெளிதா யரிதாய்
வேறா யுடனாய் விரிவாய் சரணந்
தேறு வுணர்வார் செயலே சரணம்.

இ-ள், கங்கையையணிந்த வேணியையுடைய நிர்மலனே சரணம் அந்தமாய் ஆதியாய் எளிதாய் அருமையாய் வேற்றுமையாகிக் கூடியிருப்பதாய் நிறைந்தவனே சரணம் தெளிந்த வுள்ளமுடையவர்களிடத் தொருந்துஞ் செயலையுடையவனே சரணஞ்சரணம்—எ-று.()

குரவா மறையாழ் குழகா சரணம்.
பரவா தியர்தம் பதமே சரண

மரா பரனே யடியே னையுநீ
புரவா வடியென் றனைமுன் புகழா,

இ-ள். குருவே பராபரனே குழகா சரணம்புறச்சமயவாதியர்களுக்கு ஒளிப்பானவனே சரணம் நாகாபரணனே அடிமையான் வென்னையும் நீ இரட்சியும் இரட்சியுமென்று சந்நிதானத்தினின்று நாராயணன் தோத்திரங்கள் செய்தான்—எ-று, (௧௨௮)

என்றின்ன பன்னி யிறைஞ்சுதலுந்
துன்றுஞ்சுடர் மன்றறு தாபநடஞ்
சென்றன்பொடு காணுதி சேர்தியென்று
வன்றன்புறு மாலருள் செய்தனனால்.

இ-ள், இவ்வகையாய் மாதவன் துதித்துப்பணிந்தவுடன் பரஞ்சோதி சொரூபமாய் திருச்சிற்றம்பலத்திலே ஞானானந்த நடனஞ்செய்யும் விநோதத்தை நீபோய் அங்கு தரிசனஞ்செய்து கொண்டிருவென்று பரமசிவன் மாயவனுக்கு மிகவுமன்போடு கட்டளையிட்டருளினார்—எ-று. (௧௨௯)

விடையா னருளால் விடைபெற் றவனைப்
புடையா யறவோர் புத்தேளிர் கலம்
படையா வரவந் தணிபைந்துளவத்
தொடையா னெழிலன் னெறிதுன் னினனால்,

இ-ள், நந்திவாகனனான பரமசிவன் அநுக்கிரகத்தினால் உத்தரம்பெற்று கயிலாசகிரியைச் சூழ்ந்திருக்கும்புண்ணியஸ்வரூபமானவர்களிடத்தும் தேவர்களிடத்துமன்மைபெற விடைபெற்றுக்கொண்டு அனந்தசயனான துளவமாலையணிந்த திருமால் அழகிய சிதம்பரக்குமார்க்கமாய் கருடவாகனத்தின் மீதேறிச்சென்றான்—எ-று. (௧௩0)

தனதன் பொருநற்றலமுந் நதியும்
வனமுங் கிரியும் மகிழ்வா லொருவிக்
கனகந் திகழ்மன் றுறுகண் ணகர்வா
யனகம் பெறுமா றனைகின் றனனால்,

இ-ள் சிவபக்தியுடன் நன்மையைத்தரும் புண்ணிய தலங்களையும் நதிகளையும் தீர்த்தங்களையும் வனங்களையும் மகிழ்வோடு தரிசனஞ்செய்து நீங்கித் தங்கமயமான திருச்சிற்றம்பலம் பொருந்திய சிதம்பரபுரத்தெல்லையில் புண்ணியஸ்வரூபனான மாயவன் வந்துசேர்ந்தான்—எ-று. (௧௩௧)

அடிநா டியவா னயரா திபரு
முடியா மறைதேர் முனிவோர் கிளையுங்
கடியார் துளவத் தொடைசேர் கலுழக்
கொடியான் வரவந் தெதிர்கொண் டனரால்

இ-ள். ஆனந்த நடனஞ்செய்யும் பாதாரவிந்தங்களைத் தரிசனஞ்செய்துகொண்டு தலவாசமாயிருக்குந் தேவர்களுங் கதிபர்களும் வேதாகமங்கள் யாவுமுணர்ந்த முனிவர்கூட்டங்களும் வாசனைபொருந்திய துளவமாலையணிந்த கருடத்துவசனாகிய நாராயணன் வருகிறபோது எதிர்கொண்டு வந்தார்கள்—எ-று. (௬௨)

* பலரும் புடையிற் பயிலச் செயலா
லுலகன் றுயிரொன் றுயிருக் குயிர்நீ
குலவும் பொதுவின் றுகுனித் திடுமென்
றிலகும் பதியெல் லையிறைஞ் சினனால்

இ-ள். தேவர்கள் முனிவர்கள் முதலியயாவரும் பக்கத்தில் சூழ்ந்துவரச் சுகமாக உலகவிவகாரங்களை நடத்திவைக்குஞ் ஜீவகோடிகளின் பிராணனுக்குப் பிராணரூபமாய் நின்றுலவச்செய்யு ஆத்தும நாயகனின்றானந்த நடனஞ்செய்யுந் திருச்சிற்றம்பலம் விளங்குஞ் சிதம்பரதலத்தெல்லையைத் தரிசனஞ்செய்தவுடனே வாகனம்விட்டிறங்கிக் கோவிந்தன் தெண்டனிட்டுநின்று தோத்திரஞ்செய்தான்—எ-று

சீலத் தவர்சூழ் சிவகங் கைபடிந்
தாலத் தருகீ ழமர்ந் துறையு
மூலப் பதிமுன் னவன்முன் னர்மகிழ்ந்
தேலப் பணிவுற் றெழுமேலோ டகலா.

இ-ள். சிவபூசைசெய்யும் அடியார்கணிறைந்த சிவகங்காதீர்த்தத்தின்மூழ்கி ஆலமரத்து கீழ்வெழுந்தருளியிருக்கும் மூலஸ்தானசிவலிங்கத்தைப்பணிந்து தோத்திரஞ்செய்து வலமாகவந்து அழகிய திருச்சிற்றம்பலத்திற்கெதிராகத் திருமால்வந்தான்—எ-று. (௬௪)

மண்டா வியமான் மறைமா முடிவொன்
றுண்டா மெனவோ தியவோ ரொளிவா
னண்டா திபர்சூ ழவைவின் றிலகக்
கண்டா னெதிர்கண் களித்தனனால்.

இ-ள். மகாமகிமைபெற்ற வேதமுடிவாகிய ஓர் பொருளுண்டென்று சுருதிகளிற்சொல்லாநின்ற பரஞ்சோதி பூமியில் சிதாகாசரூபமாகப் பிரகாசிக்கின்ற திருச்சிற்றம்பல நாயகனைச் சுடர்கூட்டத்துட

...மாதவன் எதிராகக்கண்டு யாம் கண்களைப் படைத்தவைகளுக்கு ப் பலன் இன்றுகிடைத்ததென்று மகிழ்ந்தான்—எ-று, (௧௬)

கன்குர வருளின் கடன்மா கடமுங்
கொண்டான் மனமும் விழியுங் குளிரத்
தண்டா வருளே தலைவா நிலைகூ
ரண்டா திபவென் றெதிரின் றறையா.

இ-ள் கருணை சமுத்திரத்தினுடைய ஆனந்தநடனத்தை தரிசனஞ்செய்து மனதிலேதியாநித்துக் கண்களுங் கருத்துமகிழ அம்பலவாணமூர்த்தியை பக்தர்களுக்கு வேண்டியவரங்களைத் தடையின்று கருணைசெய்யுமநாயகனே ஆதியந்தமில்லா மகாதேவனே என்றுதோத்திரஞ்செய்தான்—எ-று.

அன்பா லுருகா வவசம் பெருகா
வென்பா லருணல் கினையென்று தொழா
முன்பா ரிமையோர் முனிவோ ருடன்மா
றென்பா லெதிரின்று திளைத்தன னல்

இ-ள். பக்திரசத்தினால் மனங்கரைந்து ஆனந்த பரவசமிருந்து அடியேனிடத்திற் கருணைசெய்தீரேயென்று துதித்துவணங்கி முன் தரிசனஞ்செய்த தேவர்கள் தபசிகளுடனே சபைக்கெதிராகத் தென் திசையில்நின்று கேசவன் மகிழ்வடைந்தான்—எ-று. (௧௭)

கலையா லுறைவன் கதிர்சூ ழுலகி
னிலையா யுபரம் பலகீள் பதிவா
யுலையா தொளிர்தன் னுருவா லுறைவ
னலையாழி விடா தமர்மா யவனே

இ-ள். திருப்பாற்கடலி லெப்போதுஞ் சயனித் திருக்கும் மாதவன் சாத்திரங்களாலு மறிவதற்கரிய சூரியன பிரகாசிக்கின் ...டலத்தில் நித்தியமானதிருச்சிற்றம் பலம்விளங்கும் விசாலமாகி ... சிதம்பரதலத்தில் அழிவில்லாமற் பிரகாசமாய்த் தில்லை கோவிந்தனெனப் பெயர்பெற்று அமரர்கூட்டத்துடன் வாசமாயிருந்தான்—எ-று. (௧௮)

இதுமுன் னொருவர்க் குமிசைத் திலவின்
முதிரன் பதுகணடு மொழிந் தனமா
லதிக திகழ்வே தமளப் பிலவும்
பொதிகின் றதருப் பெருகும பொருளே

இ-ள். சயிமினியே இத் திருச்சிற்றம்பலத்தின் இரகசியப் பொருளை முன் ஒருவருக்குஞ் சொன்னதில்லை உன்னுடைய பக்தியைப் பார்த்து உனக்குச்சொன்னோம் அவ்வற்றின்மகிமை யேதென்றால் உத்தமமாய்விளங்கும் அனந்தவேதங்களின் முடிவில் அமர்ந்திருக்கும் கருணைநிறைந்த பராபரவஸ்துவின் உண்மையாய்விளங்கும்—எ-று. ()

ஐயஞ் சிறிதில்லை யறைந்தனவுட்
கையிற் கதுவே கதியெய்த மகிழ்ந்
தய்யும் பொழுதென்ன வுரைத்தனனன்
மெய்யன் பருள்கூர் முனிபுங் கவனே.

இ-ள். நாம்சொன்ன சிதம்பர ரகசியப்பொருளில் எவ்வளவேனுஞ் சந்தேகமில்லை ஆகையினால் மோட்ச கைவல்யமாகும்பொருட்டுச் சயிமினியே நீ இப்போதே சிதம்பரதலத்துக்குப் போய்க் கடைத்தேறென்று நிறைந்த சிவபக்தியிருந்த வேதவியாசர் திருவாய்மலர்ந்தாரென்று சூதபுராணிகர் நயிமிசாரண்ணியத்திலே சவுனகாதிமுனிவர்களுக்குரைத்தார்—எ-று. (கூ௰)

திருச்சிற்றம்பலச் சருக்கமுற்றும்.

பாயிரம் உட்படச் சருக்கம் எட்டுக்குத் திருவிருத்தம்—கூகூரு.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டாவது

## சமாதிச் சருக்கம்.

—0*0—

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

மாவுலாவியமாப னகமகிழ்நதிகழ்கயிலை மலையிருந்து, தேவர்தேவருள்செய்த திருச்சிற்றம்பலத்தன்மை செப்பவென்றால், யாவரேவலலாரி லறிந்தவாதொகுத்துமொழிக் தபபால்வேத, மேவுநாவியாதனட னிணைந்துபரவசமடைந்த வியப்புஞ்சொல்வாம்.

இ-ள் இலக்குமிதேவியை மார்பிலவிளங்கத் தரித்திருக்குநாராயணன் மனஞ் சந்தோஷிக்கப் பிரகாசம்பொருந்திய கயிலாசமலை

வீற்றிருந்தருளியிருக்கும் பரமசிவன் திருவுளம்பற்றிய திருச்சிற்றம்பலத்தின் மகிமாதிசயத்தைச் சொல்லவேண்டுமென்றால் எவராலுஞ் சொல்லவரிது ஆகையினால் யாம் அறிந்தமட்டுஞ் சுருக்கமாகச் சொன்னோம் என்று வேதங்களைப்பகுத்துச்சொல்லிய திருநாவினையுடைய வியாசமகாமுனிவன் பரமசிவனுடைய ஆனந்தநடனத்தைத் தியானஞ்செய்து பரவசமடைந்த அதிசயத்தைச சொல்லுகிறாரென்று சூதபுராணிகர் நயிமிசாரண்ணியத்தில் சவுனகாதி முனிவர்களுக்குரைத்தார்—எ-று. (க)

இன்னவகைசயிமினிமா முனிவனுக்கருள்புரியு மிந்துவேணி, முன்னவனதருளுடைய பராசரன்மாதவமுனிய முனிவர்கோமான், மன்னிராம்புண்டரிக புரப்பெருமைநினைந்துள்ளந் தழையாநிற்கு, நன்னெடுநேயந்தன்னை லாராமைமீக்கொள்ள நவிற்றுகின்றான்.

இ-ள். இவ்விதமாகச் சயிமினிபகவானுக்கு அநுக்கிரகஞ்செய்த சந்திரனைச் சடாமகுடத்திலணிந்த முதல்வனாகிய பரமசிவன் அருள்பெற்ற பராசருடைய தபோபலமேலோர் பிள்ளையாய்ப்பிறந்த வியாசமகாமுனிவர் தனக்கொப்பில்லாத புண்டரிகபுரமாகிய சிதம்பரதலத்தின் மகாமகிமையைநினைந்து மனதினிறைந்த அன்புடனே நெடுங்காதல்பெருகி அடங்காமற்பொங்கிச் சொல்லத்தொடங்கினார்—எ-று. (உ)

அற்புதமற்புதமந்தோ வந்தோவென் சொலகேனிவ் வகிலத்துள்ளோர். விற்பொலியும்விளக்கதனைக் கைப்பிடித்தாழ்கூவலிலே வீழ்வராலும், சொற்பொலியுஞ்சுருதிசிவாகமப்புராணங்கணடுந் துதிக்குங் கேட்டும், பொற்பொதுவி னியல்பறியா மூடரவர் விலங்கினத்தைப போல்வரன்றே.

இ-ள். அதிசயம் அதிசயம் ஐயையோ இவ்வதிசயத்தை யென்னென்று சொல்லப்போகிறேன் இப் பூமண்டலத்திருப்பவர்கள் பிரகாசம்பொருந்திய விளக்கைக் கையிற்பிடித்துக்கொண்டு ஆழ்ந்தகிணற்றில் விழுவார்களேயாகில் மகாவாக்கியங்கள் நிறைந்த வேதாகமபுராணங்கள் சிதம்பர ரகசியப்பொருளைத் தரிசனஞ் செய்வதையும் விளக்கமாகத் தோத்திரஞ்செய்வதையும் பெரியோர்கள்சொல்லக் காதினாற்கேட்டும் பொன்னம்பலத்தினது பெருமையைத் தெரிந்துகொள்ளாத மூடரானவர்கள் மிருகஜாதிகளுக் கொப்பாவார்கள்—எ-று. (ங)

மாங்கரஞ் நகாருமலி பொட்டாகயாகிடகுண்டு மன்னேனார்தில்லைப், பரங்கருணையுருவாகிச் சிற்பரானந்தநடம் பயிலாநின்ற, புரங்கடிதின் பொருட்டாக வினைந்தடைந்துகேட்டொருகாற் புன்மைகண்டிங், கிரங்கிடு மென்னுள மிந்த மானிடர்களெவ்வண்ண முய்வரன்றே.

இ-ள். மரங்கள், கழுதைகள் பன்றிகள், நாய்கள், ஒட்டகங்கள் முதலியவைகளைப்பார்த்து என்மனதில் துயர்கொள்ளவில்லை பரமசிவம் அருளுருவாகி ஞானமயமாய் மேலான ஆனந்தநடனஞ் செய்து கொண்டிருக்குஞ் சிதம்பரதலத்தை உலகத்தார் மோட்சமடையும் பொருட்டுத் தியானித்தும் வந்து தரிசனஞ்செய்தும் மகிமையைக் கேட்டும் மனதுருகாத விவேகமற்ற மாநிடரைப்பார்த்துஐந்தறிவுடைய நரஜன்மம்படைத்தும் வீணாகின்றார்களிவர்களெந்தவிதங் கடைத்தேறப்போகின்றார்களென்று என்மனங் குழைகின்றது—எ-று, (ச)

சாத்திரமெண்ணிலபயில்வர் மகங்களளவிலபுரிவர் தவங்கள்செய்வ
ர், தீர்த்தமவையடைந்துகுடைந் திடுவர்களிந்நெறிதவறச் செய்கை
பூண்டு, நேத்திரமூன்றுடையபிரான் பொன்றுவுமன்றுட னீங்காதோ
ங்கு, மாத்தலனிற் பெருமையறி யாரவர்கலஞ்ஞானம் வரம்புண்
டாமே

இ-ள். அநேக சாத்திரங்களைப் படிப்பார்கள் எண்ணிறந்த யகாதிகள்செய்வார்கள், தவங்களைச்செய்வார்கள், தீர்த்தயாத்திரைகள் செய்து சகலதீர்த்தங்களிலுமூழ்குவார்கள், இவ்வகையாகிய நன்மைகளனந்தமிருந்தாலும் மூன்றுகண்களையுடைய பரமசிவன் தங்கமும் விரும்பிப்புகழ்கின்ற பொன்னம்பலத்திலே ஆனந்தநடனமெப்போதுஞ்செய்யு மகாமகிமையைப்பெற்ற சிதம்பரதலத்தின் மேன்மையை அறியாதவர்களுடைய அஞ்ஞானத்திற்கு அளவுண்டோவென்று வாதராயணர் மனதிளகினார்—எ-று. (ரு)

பசையகன்றநெஞ்சராய் வஞ்சராய்ப் படிறராய்ப் பதித்துநாயின், ற
சையருந்தித்திரிவோர்களளவாகப்பொற்பொதுவிற் றயங்காநின்ற, வி
சைபுரிந்தநிலபத்தாள் கண்டனரேல்வீடுறுதன் மெய்யேயந்தோ, தி
சையடைந்தவுலகிடத்தோ ரீதறியாரிதற்கினியாஞ் செய்வதென்னே.

இ-ள், இரக்கமற்ற மனமுடையவர்களாய் வஞ்சனையாளராய்ஜீவவதைசெய்து நாயின்மாமிசமுதலானவைகளைத்தின்று திரியு மகாபாவிகளாயினும் தங்கமயமான திருச்சிற்றம்பலத்தில் நிலைமையாய்நின்று விசையுடனானந்தநடனஞ்செய்யும்அம்பலவாண மூர்த்தியினது பாதாரவிந்தங்களைத் தரிசிப்பார்களாயின் மோட்சமெய்துவர்கள் இவ்வகை யறியாதவர்களுடைய தீவினைதொடர்ச்சிக்கு இனி யானென்ன செய்யப்போகின்றேனென்று சிந்தைமெலிந்தார்—எ-று (சா)

குழுவுடையகடவுளர்கோன் புகலிமுதலுதவுமலர்க் கோயில்கொ
ண்டோன், மழுவுதிருமறுமார்ப னிவர்செல்வந்தனிற்சிறிதுஞ் சாரா,
துள்ளம்; வழுவையுரிபோர்த்தாடு மன்றுடையான்றில்லையிற்புள் மல

த்திற்றோன்றும், புழுவுறுமப்பெருஞ்செல்வம் பேராசைப்பெருவெள்ளம்புலராதன்றே

இ-ள். முப்பத்துமுக்கோடி தேவர்களுக் கதிபதியான தேவேந்திரன்புமிமுதற் சகலமும்படைத்த கமலாசனனான பிரமதேவன் இலக்குமிதேவியை மார்பிற் குடியாய்வைத்திருக்குங் கேசவன் முதலியவர்கள் வாழுமிடத்திலெ என்பன தெய்வளவேனுஞ் செல்லாது மற்றெங்ஙனஞ் செல்லுமெனில் கரியுரிபோர்த்து நடனஞ்செய்யுங் கனகசபாபதிவாழுஞ் சிதம்பரதலத்தில் உற்பவிக்கப் பாக்கியத்தைப்படைத்த ஜீவராசிகளுக் குள்ளாக ஈனமான மலத்திலுதிக்கும் புழுவுக்குக்கிடைக்கும் பெரிதான வாழ்விலே மிகுந்த ஆசையால் கடற்பெருக்கினின்று தணியாது விருப்புற்றிருக்கிறதென்று வாதராயணருரைத்தார்—எ-று. (௭)

தருமமிகுமொழுங்குபொறை தவத்தானங்குணஞ்சீலஞ் சவுசங்கூர்மை, யருள்விரதங்கல்விதன மாசாரம்விச்சைதுறை யாடற்சாதிப், பெருமைமகபூசைமிகப் படைத்தோர்களானாலும் பெண்ணோர்பாகக், கருணைநெடுங்கடலாடல் காணாரேற்பயன வற்றுற்கான்மதென்னே,

இ-ள், மிகுந்த புண்ணியம் வணக்கம் பொறுமை தவம் மகாதானங்கள நன்மையாகியகுணம் நன்னடத்தை பரிசுத்தமாயிருத்தல் மிகுந்தபுத்தி இரக்கம் விரதங்கள் வித்தை செல்வம் ஆசாரம் சகலகலைஞானம் தீர்த்தயாத்திரை மேலானஜாதி அதிதி தேவபூசைகள் இவைமுதலிய நன்மார்க்கமுடையவராயினும் சிவகாமசவுந்தரி வாமபாகத்தில் விளங்குங் கருணைநிறைந்த கடலான அம்பலவாணமூர்த்தியினது ஆனந்தநடனத்தைத் தரிசனஞ்செய்யப் பாக்கியம்படையாதவர்கள் முன்புகன்ற எத்தனை நன்மைகளிருந்தாலும் என்னபலன் பெறுவார்களென்று வியாசமகாமுநிவர் துயரமுற்றார்—எ-று. (அ)

பண்டிதருங் கவிஞர்களும் பாக்கியரு முனிவர்களும் பாரின்மேன்மை,கொண்டவரும் பரமனரு ளுடையோரு மகிலாண்டக்குழுவைப்பெற்ற, துண்டமதிநுதல்காண வனவரதநிருத்தமிடுந் துணைத்தாடன்னைக், கண்டவரேகாணுதோர் யாராயென்யாதாயென் கருதுங்காலே.

இ-ள். சகல சாத்திரங்களுணர்ந்தவர்களும் புலவர்களும் செல்வமுடையவர்களும் முனிவர்களும் பூமண்டலத்தின்மேல் மகாமகிமையைப்பெற்றவர்களும் சகல பிரமாண்டங்களையு மீன்ற பிறைபோன்ற நெற்றியையுடைய சிவகாமசவுந்தரி கண்டுமகிழ வெப்போதும் ஆனந்தநடனஞ்செய்யும் அம்பலவாணமூர்த்தியினுடைய பாதாரவிந்தங்க

னைக் தரிசனஞ்செய்யப் பாக்கியஞ்செய்தவர்களே பரமசிவனுடைய
அநுக்கிரகமடைந்தவர்களாவார்கள் அம்பலவாணமூர்த்தியின் சரண
கமலங்களைத் தரிசனஞ்செய்யாதவர்கள் மேற்சொல்லியவர்களில யா
வராயிருந் தென்னென்னமேன்மைபெற்றாலு மென்னபலன் நினைத்தா
லோசனை பண்ணுமிடத்தில்—எ-று. (௯)

மோகமுறுவிடயமிகப் பொல்லாதென்றறிந்துமதின் முயல்குமா
போ, லாகமவேதங்களுடன் புராணமிருதிகளபுகழ்ந்து மறுவானமிக்
கோர், மாகநெடுங்கடவுளர்கள் வந்துபூசனைபுரிந்தும் வயங்குமிந்து,
சேகரன்றன்பொற்பொதுவி லியல்பறிந்துமடைந்துய்யா சிறியோர
ந்தோ

இ-ள். ஆசையைத்தரும் வஸ்துக்களின்மீது இச்சைவைப்பது
மிகப்பொல்லாங்கென்றுணர்ந்தும் அவற்றில் விருப்பங்கொண்டுழல்
வதுபோல வேதாகமபுராண ஸ்மிருதிகள சொல்லக்கேட்டு அதிகஞா
னமுடையவர்களும் தெய்வலோகத்திலுள்ள தேவர்களும்வந்து பூசித்
து மேன்மைபெறப் பிரகாசிக்குஞ் சந்திரமவுலி நடனஞ்செய்யுந் தி
ருச்சிற்றம்பலத்தின் மகிமாதிசயத்தைப் படித்துங் கேட்டும் வந்து த
ரிசித்துங் கடைத்தேறாதவர்களை நான் என்னென்று சொல்லப்போகி
ன்றேன் அறிவிலோர் ஐயோ—எ-று. (௧௦)

தலங்களிலுத்தமமுந் தீர்த்தத்திலுத்தமமுந் தகைமைசா
மிலங்குகடவுளர்தமக்கு ளுத்தமமுமோரிடத்தி லிசைதல்கண்டே
கலங்குமறிவினராய்மெய்க் கதிவிரும்பிவேறுதலங் கருதியாபவார்
புலன்களைவென்றசயி மினிவரரஞ் ஞானம் புகலப்பாற்றே.

இ-ள். புண்ணியதலங்களிலுத்தமமும் தீர்த்தங்களிலுத்தமமும்
எப்போதும் மேன்மைபெற்றுவிளங்கும் தெய்வங்களில் உத்தமமும்
ஓரிடத்திற் பொருந்தியிருக்கின்றதைப்பார்த்தும் அறிவுமயங்கி மேலா
கிய மோட்சம்பெறலாமென்று ஆசைகொண்டு சிதம்பரதலத்தைத்த
விர மற்றொருதலத்தை நினைத்துப்போய் அவதிப்படுகின்றவர்களது
புத்தியீனத்தைச் சொல்லிமுடியாதென்று ஐம்புலன்களையும்வென்ற ச
யிமினிபகவானைப்பார்த்து வாதராயணர் திருவாய்மலர்ந்தார்—எ-று.

பொன்னிவளந்தருநாடே நாடிந்தப்புவனத்துட் புகலுநாடு
தன்னிலருந்தவந்தானம் யாகமிகவும்பயின்ற திருவவேதச்
சென்னியுறைபரானந்தத் திருவுருவத்தொருகடவுடன்பாலுங்கி
மின்னனையகன்னியுடன் பொன்னவையினின்றாடல்விளங்கலாலே

இ-ள், காவிரிநதி அனந்தமுகமாய்ப்பெருகிச் சகல வளங்க
ளு முண்டாக்குகின்றபடியினால் சோழதேசமே உத்தமதேசம்

மண்டலத்தி மேன்மைபெற்ற அச்சோழமண்டலத்தில் மிகுதியும் அரிதாகிய தலமும் மகாதானம் யாகமுதலிய அதிக பலனைக்கொடுக்க வேதமுடியினில் விளங்கும் பரமானந்தமே திருவுருக்கொண்டு பொன்னம்பலத்தில் மின்னற்கொடிபோன்ற சிவகாமசவுந்தரியுடனே தென்முகமாய்நடனஞ்செய்யும் சபாபதியினுடைய கருணாகடாக்ஷம் பொருந்திவிளங்கியிருத்தலாலே—எ-று, (௪௨)

எங்குநிறைபரசிவனைப் புகலுமிடத்தவனையொழிந் தியாவுங்கூறிப்
பொங்குமறையவற்குள்ள படிபகரவறியாது பொலியுமுண்மை
தங்குபரானந்தவறி வாயின்பச்சலதியாய்த் தயங்குஞான
மங்கலருட்டிருவடிவந் தலமதனைச்சுருதிகளால் வழுத்தலாமோ.

இ-ள், எங்கும் பரிபூரணமாயிருக்கும் பரமசிவனைச் சொல்லுமிடத்து அச்சிவனையன்றி மற்றதெய்வங்களை வளர்ச்சிபெற்ற வேதவிதிப்படிசொல்ல வறியாமை மிகுதியும் வேதியர்க்குள்ள முறைமை இஃதுநிச்சயம் நித்தியானந்தவறிவாய் சுகக்கடலாய் விளங்கும் ஞானமே ஏகமானபரமசிவனது கருணையின்வடிவாகிய இச்சிதம்பரதலத்தின் மகிமாதிசயத்தை வேதங்களினாலும் துதித்துமுடியுமோ—எ-று.()

தருவாதிபசுவாதி மானிடர்களத்தலத்திற் றங்கிவாழ்வோர், பெரு
வாழ்வையென்னென்கேனப்பெரியகற்றலத்திற் பிரியாதோர்கள், ம
ருவார்த்தமகமலவாவிபடிகின்றோர்கள் வானோர்க்கெய்தாத, திருவா
ளன்மன்றினடங் காண்போர் தாட்டுணைத்துகளென் சிரத்தின்மீதால்

இ-ள், மரங்கள்முதலிய தாபரங்கம் ஜீவான்மாக்கண் முதலிய மானிடர்களும் அச்சிதம்பரதலத்தில் வாசமாயிருக்கப் பேறுபெற்றவர்களின் பெரிதானசெல்வத்தை யென்னென்றுசொல்லப்போகின்றேன் அம்மகாநன்மைபொருந்திய தலத்தின்கணீங்காமலிருப்பவர்கள் கந்தமுலாவி மேன்மையுற்ற தாமரைகள்விளங்குஞ் சிவகங்கையில் மூழ்கித் தேவர்களுக்குங் கிடைப்பதற்கரிய அம்பலவாணமூர்த்தி திருச்சிற்றம்பலத்தில் நடிக்கும் பாதகமலங்களைத் தரிசனஞ்செய்துகொண்டிருக்கும் புண்ணியசாலிகளின் உபய பாதாம்புயங்களின் தூளி என் சிரத்தின்மீ திருக்கக்கடவதென்று வியாசமகாமுனிவர் புகழ்ந்தார்—எ-று. (௪௪)

கண்படைத்தும்படைத்திலர்கள் கனகசபைக்கடவுட்பதங் காணா
தோர்கள், மண்படைத்தவொருபாக னருள்படைத்தகற்கணங்கள் ப
டைத்தோனிப்பார், விண்படைத்தமலரடனைத் திருமாலைப்படைத்த
ருளால் விளங்காநின்ற, பெண்படைத்தவொருபாக னருள்படைத்த
டங்கண்டு பேணலாமே.

இ-ள், பொன்னம்பல மூர்த்தியினுடைய சரணாரவிந்தங்களைத் தரிசனஞ் செய்யாதவர்கள்முகத்தில் இரண்டு கண்களுண்டாயிருந்தும் கண்ணில்லாதவர்களுக் கொப்பாவர் பூமி ஆகாசம் பிரமன் நாரணன் முதலிய யாவையும்படைத்துக் கருணைநிறைந்த சிவகாமசவுந்தரியை வாமபாகத்தில விளங்கச்செய்துகொண்டிருக்குஞ் சபாபதியின் திருவருள்பெற்று ஆனந்தநடனத்தை தரிசனஞ்செய்து பூசித்தபடியினால் இராகங்களோடுங்கூடிய வேதவிதியையுணர்ந்த பதஞ்சலிபகவானே கண்மையானகண்களைப் படைத்தவன்—எ-று. (கரு)

கைப்படைத்தோர்தாங்கமெழி கருங்கடனோர்பெரும்பிறப்பிற் கணக்கில்லாத, மெய்படைத்தோரென்னபயன் பெற்றனரந்தோமன்றின் மின்போனின்ற, பொய்படைத்தமருங்குமைமுன் னடித்தபதந்தொழும் பணியப் புணர்தலாலே, பைபடைத்தபொற்சுடிகைப் பதஞ்சலிகை மெய்படைத்த பயன்பெற்றனே.

இ-ள். அலைகளைவீசாநின்ற நீலநிறச்சமுத்திரம்போன்ற எண்ணிறந்த ஜனனமரணங்களிலே சுழன்றலையும் மாநிடதேகம்படைத்து உலகத்தார் என்னபலன்பெற்றார்கள் அய்யோ வீணாய்ப்போகின்றார்களே என்சொல்லுகேன் மின்னற்கொடிபோற்றோன்றும் இடையினையுடைய சிவகாமசவுந்தரி இடதுபாகத்தில்விளங்க முன்னர் நடனஞ்செய்துகொண்டிருக்குஞ் சபாபதியினுடைய சரணகமலங்களைப்பூசித்து வணங்கும் பாக்கியம்படைத்தவனுதலால் பொறிகள்வயங்கும்படத்தையுடைய பதஞ்சலிபகவானே கைகளையு மெய்யையும்பெற்றவைக்குப் பலனுற்றவன்—எ-று. (கசு)

சிறந்தவுலகங்களுக்குட் சிறந்தோரிற்சிறந்தோனுந் திரைநீர்வைப்பிற், பிறந்தபிறப்புதவுபயன் பெற்றோனும்பதஞ்சலியெம் பெருமானன்றே, யறந்தருவாளொருபாணின் றகமகிழமன்றுள் நடல்காண, மறந்தவர்புன்பிறப்பனைத்துங் களர்நிலத்துவித்தின்முளை மாறுமன்றே

இ-ள், புகழோங்கிய உலகங்களுக்குள் மேன்மையுற்றவர்களினும் மிகுதியானவர்கள் கடற்சூழ்புவியுள் பெற்றதேகத்தினால் கடைத்தேறும்பலன் வாய்ந்தவர்கள் எம்முடையகர்த்தாவாகிய பதஞ்சலிபகவானே தருமங்களைவளர்க்குஞ் சிவகாமசவுந்தரி இடதுபாகத்திலிருந்து தரிசனஞ்செய்து மனங்களிக்கத் திருச்சிற்றம்பலத்தில் ஆனந்த நடனம்புரியும் விநோதத்தைத் தரிசனஞ்செய்து கடைத்தேற எண்ணமுற்றவர்கள் வீணே ஜனித்திறப்பது களர்நிலத்தில் விதைத்தவித்தை முளைத்துப் பலன்கொடாததுபோலாம—எ-று, (கஎ)

வேதமுதனூற்றலங்கள் வேதநூலோராயும் விளக்கமோங்கப்,பரவுமன் படைத்தோறு மறைவழிநின்றவப்பொருளின் பரிசோர்ந்தோர்...

ரமருவுதிருவருளான் மெஞ்ஞானமுற்றோனா முண்மைநல்கும், வரமிலகுகுருபரன்ற னருளோனா முன்னின்ற மாசிலாதோன்.

இ-ள். விரதங்களுடனே தவங்கள் யாகங்கள்செய்து வேதாகமங்களை ஆராய்ந்த தெளிவைப்பெற்று மென்மேலும் அதிகபலனை அடைந்தவனும் வேதத்தின் முறைமையாய்நடந்து அவ்வேதாந்தப்பொருளினது அநுபவமறிந்து சிவாநுக்கிரகத்தினால் மெய்மையான சிவஞானம் பொருந்தினவனும் மெய்ப்பொருளுபதேசிக்கு மேன்மை விளங்கும் பரம்பர னநுக்கிரகம் பெற்றவனும் யாரொணின் முற்கூறிய குற்றமற்ற பதஞ்சலிபகவானே—எ-று. (௧௮)

மறைபளும்பரனருளு முமையருளும் பெருநலனும் வரம்புகாணா, நிறையருளு முடையவனப் பதஞ்சலியேயென்னென்று நினைந்தாயாகி, லிறைவன்மணிமன்றாட லெவ்வுலகத்தெவ்வுயிரு மெய்திக்கண்டு, குறைவகலமுத்திபெற வரங்கொண்டா னவன்பெருமை குறிக்கற்பாற்றோ.

இ-ள். வேதத்தின் அநுக்கிரகமும் பரமசிவனதுகருணையும் சிவகாம சவுந்தரியின் கிருபையும் பெரிதான நன்மையும் அளவிலலாப் பரிபூரணமான திருவருளும் உடையவ னப்பதஞ்சலிபகவானை அஃதெப்படியென் றுன்னுவாயாகில் சயிமினியே சொல்லுகிறோம் இரத்தினமணிமயமான திருச்சிற்றம்பலத்திலே சபாபதி ஞானாகாசசொரூபமாய் ஆனந்த நடனஞ்செய்யும் இரகசியத்தை எங்குற்ற ஜீவகோடிகளும்வந்து தரிசனஞ்செய்து குறைவில்லாத பேரின்பம் பெற்றுய்யச் சிவபெருமானிடத்தில் வரம்பெற்றவன் அவனுடையமகிமையை யெண்ணி முடியுமோவென்று வேதவியாசர் கொண்டாடினார்—எ-று

தொடர்வரிய தவம்புரிந்து கடவுளர்களுடனிதயந் தொறும்புணர்ந்து, விடலரிய பரன்பொதுவி னின்றாடல்கண்டுகந்த விளக்கமன்றிப், படருநெறிதருமந்தத்தலமதனிற்பதஞ்சலியெம்பகவன்முன்னாள், வடமொழியினிலக்கணமாம்வியாகரணம்விரித்தறிஞர்மன்னனானான்.

இ-ள். மற்றொருவரால் கிட்டப்படாத மாதவங்களைச் செய்த தேவர்களுடைய இதயகமலங்களிலும் ஜீவகோடிகளின் இதயாரவிந்தங்களிலும் நீங்காமல் வாசமாயிருக்கும் பரமசிவன் திருச்சிற்றம்பலத்தில் நின்று நடனஞ்செய்யும் அதிசயத்தைத் தரிசனஞ்செய்து மகிழ்ந்து பிரகாசிக்கின்றதுமல்லாமல் சிவபதவியைத்தரும் அச்சிதம்பரதலத்தில் வடநூற்கிலக்கணமான வியாகரணங்களைச் சிவாநுக்கிரகத்தினால் முன்னர் விரிவாகச்செய்த புலவர்களுக்கெல்லாம் அரசனாயினான் பதஞ்சலிபகவான்—எ-று. (௨௦)

என்னென்றிங் குரைசெய்கேன் சயிமினிவந்தோவெவ் வுலகத்துள்ளுஞ், சொன்னின்ற பேரிவற்குட் புலிப்பதனே மிகப்பெரியோன் சுருதியேத்தும்,பொன்னின்ற சிதம்பரமன் னவன்பெயராற் பெரும்பற்றப்புலியூரென்று,மன்னின்றதென்றாலங் கவனெனது தேசிகனும் வாழ்வுமாவான.

இ-ள். இப்புதுமையை என்னென்று சொல்லுவேன் சயிமினியே ஐயோ எந்தலோகங்களினும் மகாமகிமையைப்பெற்ற மேலோர்களில் வியாக்கிரம மகாமுநியே மிகுந்த மகிமையைப் பெற்றவன் அதெப்படியென்றால வேதங்களெல்லாம்புகழும் மேன்மையும் இலட்சுமீகாரமும் பொருந்திய சிதம்பரம் அவன்பெயர்பெற்றுப் பெரும்பற்றப் புலியூரென்று எந்நாளும் விளங்கச் செய்ததனாலே அவ்வியாக்கிரமபாதமுநியே என்குருவும் என்செல்வமும் ஆவான்—எ-று. ()

மற்றையமைந்தர்ப்பேறு மொருபேறாமீங்கிவனை வயிற்றின் வாய்த்த, பொற்றொடி யாடானன்றே நற்புதல்வர்ப்பேறுற்றாள் புகல்வதென்யா, னற்றவமாதவன்பாதத் துகளெனதுதலைமீதே நயநதுநேசந்,துற்றவடன் றிருத்தாளென் கருத்தாலுங் கரத்தாலுந் தொழுகின்றேனால்.

இ-ள். அன்னவனையன்றி இதரமான பிள்ளைகளினுடைய பெருமையை ஒருபெருமையென்று சொல்லலாமோ இங்ஙனமிவனை வயிற்றிலிடங்கொடுத்த புண்ணியவதியாகிய மத்யந்தமகாரிஷியின் பாரியாளாகிய பாக்கியவதியல்லவோ சுபுத்திரபாக்கியப் பேறடைந்தவள் அந்த அம்மனுடைய தவப்பலனை என் சொல்லுவேன்யான் ஆதலால் அவ் வியாக்கிரமபாதா பிதாவாகிய மாதவத்தோனது சரணாரவிந்தத்தூளி என் சிரமிசையணிந்து நனிகாதலோடு அவ்வன்னையினுடைய பாததாமரைகளை என்மனதினாலும் கரங்களினாலும் பணிதல் செய்வேன்—எ-று. (௨௨)

பிள்ளையாவதுமவனே யாமவனைப்பெறுதற்குப் பெருகுகாதல், வள்ளைவார்குழையன்னை யெத்துணைமாதவஞ்செய்து வருந்தினாளோ, கொள்ளைமாதவப்பேற்றி லெந்தமாதவப்பேறுகோத்ததோவான்,வெள்ளைவாண்மதிவேணி யமலனுயர்திருவருளோ விரிக்கற்பாற்றே.

இ-ள். பிள்ளையென்றால் அந்த வியாக்கிரமபாதரேபிள்ளை அந்தப்பிள்ளையைப்பெறுதற்கு மிகுந்தவாசைகொண்டு வள்ளைத்தண்டுக்கிணையாகிய காதில் குண்டலங்களை யணிந்ததாய் எவ்வெவ்விதங்களாகிய பெரியவிரதங்கள் தவங்கள்செய்து வருத்த முற்றாளோ செய்த அநேகங்கோடி மகாதவங்களில் எம்மாதவத்தின்பலன் இவரைப் பிள்ளையாய்க்கொடுத்ததோ ஆகாசத்தில்விளங்கும் வெண்மையாகிய சந்திரனைச் சடாமகுடத்திலணிந்த பரமசிவனுடைய அநுக்கிரகமோ

யாதோ இன்னவென்று சொல்லிமுடியுமோ வென்று வாதராயணர் அதிசயித்தனர்—எ-று. (உ௩)

இருவருணர்ந்தறிவரிய பரமசிவனணிமன்றி னிடத்து வெற்பின்,
றிருமகிழ்நடிக்குநட முன்கண்ணாற் கண்டருளின் செல்வத்தோங்கி
ப், பொருவரிய பயனடைந்த வியாக்கிரபாதன்றன்னைப் போலவண்
டத், தொருவருள ரென்றுரைக்க வெவருளரோ மாதவத்தா லுயர்
வுபெற்றோய்.

இ-ள். அரிபிரமர்களாலும் தெரிதற்கரிதாகிய மகாதேவனது சகலஅலங்காரமும்பெற்ற கனகசபையில் மலையரையன்மகளாகிய சிவகாமசவுந்தரிகண்டு ஆனந்தம்பெற நடனஞ்செய்யும் விநோதத்தைப் பிரசன்னமாக ஞானக்கண்ணினாலும் இரண்டு நயனங்களினாலுந் தரிசனஞ்செய்து சிவாநுக்கிரகமென்னு மேலானவாழ்வுபெற்றுத் தன்னேரில்லாத பலனைப்பெற்ற வியாக்கிரமபாத மகா முனிவனைப்போல மகிமைபெற்றவர் பிரமாண்டத்துக் குள்ளாக வேறொருவ ருண்டென்று சொல்லக்கிடையாதென்று மகாதவங்களினால் மேன்மைபெற்ற சயிமினியைப்பார்த்து வியாசர்புகழ்ந்தார்—எ-று. (உ௪)

ஆற்றரியதவம்புரிந்தத் தலந்தன்னிற்புலிப்பாதத் தனகன்மன்றிற்
றோற்றருநாடகங்கண்டு வாழ்ந்துதனதொல்குலத்தைத் தூயமுத்தி
யேற்றின்னங்கதுவன்றித் திருமூலத்தானதனு லிமையோர்நாதன்
போற்றரியதிருவருளாலொருபுதல்வன் றனையுலகம்புகழப்பெற்றான்

இ-ள். அந்தச் சிதம்பரதலத்தில் எவர்களாலும் செய்தற்கரிய மகாதவங்கள்செய்த புண்ணியமூர்த்தியாகிய வியாக்கிரமபாத மகா முனிவன் திருச்சிற்றம்பலத்தில் எவர்களாலுங் காணுதற்கரிய ஞானானந்த நடனத்தைத் தரிசனஞ்செய்து மேன்மைபொருந்திய செல்வத்தையுற்றுத் தன்குலத்தி லுண்டானவர்களை யெல்லாம்பரிசுத்தமான சிவபதவியிற் சேர்த்ததுமல்லாமல் திருமூலஸ்தானத்தில் தேவர்களுக்கு நாயகனான மகாலிங்கத்தை அரிய பூசைசெய்து அவர் கருணையினால் உலகங்களெல்லாந் துதிக்கும்படியாகிய ஒருபிள்ளையைப் பெற்றான்—எ-று. (உ௫)

அங்கெறியின்வருபுதல்வன் பெயருபமன்னியனென்ன வறைகோ
மன்னே, னின்னமுதநிகர்சுவைப்பால் வேண்டியெதிர் நின்றழுதுமி
லங்குஞ்செய்ய, பின்னல்புறமசையமணி மன்றிலிடையென்றுநடம்
பேணுமீசன், பன்னரியதிருவருளாற் பாற்கடலங் கவன்மகிழ்ச்சி ப
டைக்கவீந்தான்.

இ-ள். அந் நிலையிலவதரித்த பிள்ளைக்கு உபமன்னிய னென்று பெயரிட அப்பிள்ளையானவன் தேவாமிர்தத்துக்குச் சமானமான இ

ளியபால்வேண்டி எதிர்நின் றழுதபோது பிரகாசம்பொருந்தியமேன்மையான சடைகள் முழ்துகினிலசைய இரத்தினமணிமயமானதிருச்சிற்றம்பலத்தில் எப்போதும் ஆனந்த நடனஞ்செய்யும் அம்பலவாணமூர்த்தி சொல்லற்கரிய கருணையால் திருப்பாற்கடலைவரவழைத்துஉபமன்னியபகவான் பானஞ்செய்து மகிட்சிபெறக்கொடுத்தார்-எ-று

வந்ததிருப்பாற்கடலை யுண்டுகளித்தானந்த மகிழ்ச்சியெய்தி,விந்து
விலன்றிங்கிவன்பாற் றோற்றியதாமெனவறிஞர் வியப்படுமெய்த,வ
ந்தமிலாவாகமங்க ளளவிலாவேதங்க ளனைத்துந்தூய, சிந்தைதெளி
வுறவாய்ந்து பெருங்கல்விக் கடலென்னுஞ் சிறப்பான்மிக்கான்.

இ ள். சிவகடாக்ஷத்தினால் வந்த திரும்பாற்கடலைப் பானஞ்செய்து சிவானந்த மகிட்சிபெற்றுப் பரமசிவனது சடாமகுடத்தொளிரும் மூன்றாம்பிறையாகிய சந்திரனிடத்திலல்ல இந்தஉபமன்னியமுனிவனிடத்தில் வேதாகமங்கள் பிறந்ததென்று பெரியோர்கள் அதிசயிக்க முடிவில்லா வாகமங்களையும் வேதங்களையும்பரிசுத்தமாய்மனந்தெளியச்சோதித்து நெடிய கல்விச்சமுத்திரமென்று அதிக புகழ்படைத்தான்—எ-று. (உஎ)

எதுமரபிலுதித்துலக குருவாகித்துவரைநகர்க் கிறைவனாகு
மதுவிரியும்பசுந்துளவ வாசிதேவன்கண்ணன் வணங்கியேத்தப்
பதுமமலரடிச்சிரத்து வைத்தவற்குச்சைவநெறிப் பரிசுநல்கி
விதுமவுலியிறையருளாற் புவனதேசிகனென்ன விளங்காநின்றான்.

இ-ள். எதுகுலத்தில் தேவகிதேவிக்கும் வசுதேவனுக்கும் பிள்ளையாக வவதரித்துச் சகலதருமங்களையு முணர்ந்து தருமராஜனுக்கு அறநிலையையுபதேசித்து உலகத்தை இரட்சிக்குமேன்மையை அடைந்து துவாரகாபுரிக்கரசனாகித் தேனவிழும் பசுமைதங்கியதுளவமாலையணிந்த செந்தாமரைக் கண்ணனாகிய கிருட்டினன் பணிந்துபோற்ற அவன்சிரத்தின்மீது தாமரைக்கமலம்போன்ற பாதாரவிந்தங்களைவைத்து அவனுக்கு சிவதீட்சையருளிப் பஞ்சாட்சரத்தை யுபதேசித்துச் சந்திரசடாதர மூர்த்தியினருளால் உலகங்களுக் கெல்லாங் காரணகுருவாகி உபமன்னியபகவான் பிரகாசித்தான்—எ-று ()

பத்திகந்தபரம்பரனைப் பற்றுமுபமன்னியன்றன் பரிசையெம்மா
ற், சொற்றிடவென்றாலெளிதோ வீங்கிதுபோன்முன்னைவினைத் தொ
டரையெல்லா, முற்றியபுண்டரிகபத முனிகுலத்துளியாவோருமுனி
வரானார், மற்றவர்தங் குலதெய்வ மாயினன்பொற் பொதுவுறையுமங்கைபாகன்.

இ-ள். மாயைகளுக்கதீதனாகிய சிவபெருமானைப் பக்தியினாலேவசப்படுத்திக் கொண்ட உபமன்னியபகவானுடைய மகிமாதிசய

த்தை நம்மாற் சொல்லவெளிதோ அன்றியும் இங்ஙன மிவரைப்போல் பிராரத்வுத்தொடக்கையகற்றி வியாக்ரமபாத மகாமுநிவன் குலத்திலுள்ளவர்களெல்லாம் மகா தபோதனர்களானார்கள் தங்கமயமான திருசசிற்றம்பலத்தில் சிவகாமசவுந்தரி வாமபாகத்தில்விளங்க நடனஞ்செய்யும் அம்பலவாணமூர்த்தி அவர் தெய்வமாகிவிளங்கினர்.()

புவனங்கடமக்குளிரு வோரழிபத்திருவரூளோர் புகலுமன்னோர்,
தவமொன்றுபதஞ்சலியுந் நிகழ்வேங்கைத்தாளுடைய தலைமையோனு, மிவர்கின்றதமனியல்பே ரம்பலத்துளிறைபார்வை யெய்தப்பெற்று, ரவரன்றேலப்பார்வை யார்பெற்றாரவர்க்குவமை யவரோயம்மா.

இ-ள். உலகங்களுக்கெல்லாம் மேன்மைபெற்ற மகாதவங்கள் செய்து பிரகாசிக்கும் பதஞ்சலி வியாக்கிரமபாதர் இவ் விருவர்களன்றி மற்றெவர்கணீங்காமற் சிவனருள்பெற்றவர்கள் இஃதன்றியும் அவ்விருவரும் பொன்மயமாய்விளங்குந் திருசசிற்றம்பலத்தில் ஆனந்தநடனஞ்செய்யும் அம்பலவாணமூர்த்தியினது திருநோக்கி னருட்பார்வைபெற்ற பாக்கியமுற்றவர்களாதலால் இவ்விருவர்களுக்கும் இணையானவர்கள் ஒருவருமில்லை—எ-று. (௫0)

இருவர்தவப்பெருமையினை யாருரைக்கவல்லார்க ளிவரேயன்றி
யருமறைதேர்நான்முகனுங் கலைமகளுமடலாழி யங்கையோனுந
திருமகளுந்தில்லைமூ வாயிரமாமுனிவோருந் தேவர்தம்முட்
பெருகுதவமுடையோருமன்றினடங்கண்டுயர்ந்தபெருமையோர்கள்

இ-ள். இவ்விருவருடைய தபோபலப்பெருமையை எவர்களாலுஞ் சொல்லமுடியாது இவர்களுமேயல்லாமல் அரிய வேதங்களையுணர்ந்த பிரமதேவனும் சரஸ்வதிதேவியும் வெற்றிபெற்ற சக்ராயுதபாணியுஞ் சிதேவியுந் தில்லை மூவாயிரமகாமுநிவர்களும் தேவர்களுண் மகாதவங்களைச்செய்து பெருமைவாயத்தவர்களும் ஆகிய இவர்களே திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தநடனத்தைத் தரிசனஞ்செய்து மகிமையைப்பெற்றவர்கள—எ-று. (௫௧)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முன்னவன்றிகழ் சிதம்பரமடைகின்ற முயற்சியுமவ்வெல்லை
தன்னினேசமும் பெற்றனையொப்பிலாச் சயிமினிமுனிவாநீ
யென்னைமுதவ முன்னரேசெய்தனை யீரெழுபுவனத்து
நின்னையொப்பவர்யாவரோநின்செய னிகழ்த்தலாம்படித்தன்றால்.

இ-ள். முதல்வனும் உலகநாதன் பிரகாசிக்குஞ் சிதம்பரதலத்துக்குப்போகின்ற நியமமும் அத் தலவாசஞ்செய்யு முறைமையும் முன்னமே கேள்வியுற்ற இணையில்லாத சயிமினிபகவானே பண்டி

என்னமாதவஞ்செய்தனையோ பதினான்கு உலகங்களிலும உனகமகாப்பாகிய மகிமையைப்பெற்றவர்கள் எவர்கள் ஆகையினால் உன் பெருமையைச்சொல்லி முடியாதென்று வாதராயணர்கூறினார்—எ-று.

என்றுகிட்டுமோ சிவகங்கைமூழ்கியு மீசனையங்நீராற்
றன்றுமஞ்சனஞ் செய்துமூலத்தலச் சுடரினைத்தொழுதுய்ந்துஞ்
சென்றுகண்டவா னவர்முதற்பல்லுயிர் திகழ்ந்தமுத்தியிலெய்த
மன்றினின்றசெஞ்சரோருகந்தொழுதுள மகிழ்ச்சிகூர்தருமந்நாள்

இ-ள். என்றைக்குக்கிடைக்குமோ சிவகங்கையில்மூழ்கவும் அத்தீர்த்தத்தினாற் சிவனுக்கு திருமஞ்சனமாட்டவும் பக்தியாகப் பூசைசெய்து பிரகாசிக்கும் மூலஸ்தான மகாலிங்கத்தைப்பணிந்து கடைத்தேறவும் வந்து தரிசனஞ்செய்யுந் தேவர்கண்முதற் சகலஜீவராசிகளும் ஒப்புவமையில்லாமல் விளங்கும் சிவபதமடையும்பொருட்டுத் திருச்சிற்றம்பலத்தில் எப்போதும் ஆனந்தநடனம்புரியுஞ் செந்தாமரைப்பாதங்களைப்பணிந்து மனக்களிப்போடானந்திக்கின்ற அந்தநாள்—எ-று. (௩௩)

ஒருபரம்பொருண் மன்றிடைத்தோன்றிய வுருவமுமொருபாலிற்
கருவிழிக்கலை மதிமுகக்கடியனாள் வடிவமுங்காண்பேனோ
இருவர்செய்கையுஞ் செவ்வியுங்கண்டினா னிறைஞ்சினேனுமாகின்
மருவுபாசம்விட் டகலமெய்ப்பரானந்த வாரிதியாவேனால்.

இ-ள். ஒரு பராபரவஸ்துவாகிய பரமசிவன் திருச்சிற்றம்பலத்தில் ஞானசொரூபமாய்விளங்கும் உருவத்தையும் அவ்வுருவத்தின் இடப்பாகத்திலுற்ற நீலோற்பலம்போன்ற கண்களும் பூரணசந்திரோதயம்போன்ற வதனமும்படைத்துவிளங்கும் வல்லிக்கொடியை நிகர்த்த சிவகாமசவுந்தரியையும் தரிசனஞ்செய்வேனோ அவ்விருவர்களினது நடனத்தையையுந் திருவழகையுங்கண்டு தரிசித்தால் என்னைப்பற்றிய பசுபாசங்கணீங்கி மெய்ம்மையாகிய ஞானானந்தக்கடலாவேனென்று வியாசமகாமுனிவர்நினைத்தார்—எ-று. (௩௪)

ஒருவராலுமுற் றரும்பிறப்பிறப்பெனு முரகவாய்ப்படத்தந்தோ
வெருவுகாமவெவ் விடத்தழலான்மிக வெந்தவேதனைதீரக்
கருணையாரமு தம்பொழிதிருக்கடைக் கண்களாற்பார்த்தன்பு
தருவனேயரு ளம்பலமேவிய சங்கரனெனக்கன்பால்.

இ-ள். எவர்களாலு மாற்றப்படாத ஜனனமரணமென்னும் பாம்பின்வாயிலகப்பட்டு ஐயோ பயங்கரமாகிய காமநோயென்னுங் கொடிய விஷாக்கினியிற்சிக்கி மிகவும்வெந்து அவதிப்பட்ட வேதனைநீங்க அம்பலவாணமூர்த்தியினது அருளென்னும் அமிர்ததாரையைப்

பொழியும் அழகிய கடைக்கண்பார்வையினால் குளிர்ச்சிபெறப்பார்த்து விருப்பத்துடன் எனக்கு அருளென்னும் திருச்சிற்றம்பலத்தில் வாழுஞ் சங்கரன் பக்தி என்னுமருந்தை அன்பினால்கொடுப்பானோ என்று வியாசர்நினைந்து மகிழ்வடைந்தார்—எ-று. (௩௫)

கோடிசூரியர் காலைவந்துதித்தெனக் குலவியபெருஞ்சோதி
நீடியெய்தினர் வெம்பிறப்பிறப்பெனு நீங்கருந்தாபங்கள்
சாடியிந்துவின் குழுவெழுநிலவெனத் தட்பமிக்கொண்மன்று [ள்.
ளாடியூன்றிநின் றெடுத்தசெஞ்சரணநா னணைந்துகாண்குவதெந்நா

இ-ள். கோடி-சூரியர்களொருமித்து ஏககாலத்தி லுதயமானது போல் விளங்கும் பரஞ்சோதியான அம்பலவாணமூர்த்தியைத்தேடி வந்து தரிசனஞ்செய்தவர்களது சனனமரணமென்னுந் தீராத தாபத்ரயங்களின் வெப்பத்தைப்போக்க அனேகங்கோடி பூரணச்சந்திரர்கள்கூடி ஒருமித்து உதயமாகி எறிக்கும் நிலவைப்போற் குளிர்ச்சி பெருகத் திருச்சிற்றம்பலத்தில் முயலகன் முதுகிலூன்றித்தூக்கி விளங்குகின்ற திருவடிகளாகிய செந்தாமரைகளை நான்சேர்ந்து தரிசிப்பது எந்நாளோவென்று வேதவியாசர் மனமுருகினார்—எ-று. ()

முடிவிலாதவன் புலியதள்சாத்திமேல் முளைப்பிறையெயிற்றுலச்
சுடிகைவாளர வணிந்துவெம்பவக்கட லம்பிபோற்சுவர்வானும்
படியுமீன்றவண் மனத்தெழுமகிழ்ச்சிபாய்ப்படியிலாவழகெல்லாங்
குடிபுகுந்தன கடிதடங்கண்டுநான் குலவுநாளெந்நாளோ.

இ-ள். ஆதியந்தமிலானுகி கொடுமைபொருந்திய வேங்கையின் தோலையுடுத்தி மூன்றும் பிறையைநிகர்த்த விடம்பொருந்திய பற்களும் பிரகாசம்பெற்ற சிரோரத்தினங்களையுமுடைய பாம்பை இடையில் கச்சாகவணிந்து பொல்லாங்கைவிளைக்குஞ் சனனமரணமென்னுஞ் சமுத்திரத்துக்குத் தோணிபோற் பிரகாசித்துக்கொண்டிருக்கிற அம்பலவாணமூர்த்தியையும் ஆகாச பூமிமுதலான உலகங்களைப் பெற்றுச் சித்தத்தில் ஆனந்தம்பெருகக் குவலயத்திலில்லாச் சவுந்தரியங்களெல்லாம் வாசமாயிருப்பதுபோல் விளங்குஞ் சிவகாமசவுந்தரியையுங்கண்டு தரிசித்துமகிழும் நாளெந்நாளோவென்று வியாசர்நினைத்தார்—எ-று. (௩௭)

தக்கநீற்றணி நிலவெழவெம்பணித் தலைவராபரணத்திற்
செக்கர்மாமணி வெயிலெழச்சிறந்தமர் சோதிமாலிகையோங்கத்
தொக்கவெண்புரி நூலுமாரங்களுந் துதைவுபெற்றெவருக்கு
மிக்கநாயகன்விளங்கியமார்பமென்விழிகள்காண்டருங்கொல்லோ

இ-ள். மேன்மைபெற்ற விபூதிரேகைகள் வெண்ணிலவெறிக்க ஆபரணங்களாய்விளங்கும் கொடுவிடம்பொருந்திய ஆதிசேடன்மு

தலிய நாகராஜாக்களின் சிரோமணிகள் சூரியருதித்தனபோற் பிரகாசிக்கச் சிவனுக்குத் தாங்கள் நிகரல்லவென்று காணபிக்கும் நாரசிங்கன்-பிரமன் இவர்களது சிரமாலிகையும் வெண்மையாகிய பூணுநூலும் ஆரங்களும் ஒன்றோடொன்றுரைந்து பிரகாசிக்கத் தேவர்களுக்கெல்லா மேலான கர்த்தாவினுடைய ஒளிபெற்றமார்பை என் கண்களினாற் றரிசனஞ்செயயப் பாக்கியங் கிட்டுமோ கிட்டாதோவென்று வியாசர் மனமெலிந்தார்—எ-று. (௩௮)

ஒருகரந்துடி யொலியெழவெரியய லொருகரமுறயாரும்
வருதவென்போ லொருகரம்வீசிய வனப்புறமாறுத
வருள்சுரந்தொரு கரம்பையநதர வணித்திரட்புயமோங்கக்
கருணையங்கட னின்றவக்கிலையையான் காணவென்றுளதாமோ.

இ-ள். ஒருகையில் அட்சரமயமான சகலகலைகளையும் ஒலியினுலறிவிக்கும் தமருகமும் ஒருகையில் அக்கினிசசோதிவிளங்கயாவரும் வாருங்களென்று வழைப்பதுபோல்ஒருகைவீசி யழகுபெறநீங்காக்கருணையுண்டாகி இனி உலகங்களுக்குச சனனமரண மில்லையென்று ஒருகையால் பக்தஜனங்களுக்குத் துணிபுகாட்ட ஆபரணங்களணிந்து நான்குபுயங்களு மோங்குந்தயாசமுத்திரமான அம்பலவாணமூர்த்திநின்றுநடிக்குந்திருக்கோலத்தைநான்எனறைக்குத்தரிசனஞ்செயயப் பாக்கியங்கிடைக்குமோ வென்று வாதராயணா இரக்கமுற்றார் ()

ஆளகண்டசங் கரபுரமெரிதர வாடகச்சிலைதாங்குந்
தோளகண்டனி வேடனைமாயத்திடத் தொடர்ந்தகா லனைச்சாடுந்
தாளகண்டரு டிபரெனவிமையவர் சரணெனக்கறுப்பேறுங்
காளகண்டமுந் தரளமாலிகைகளுங் கண்டுநான்களிப்பேனோ.

இ-ள். தேவர்கள்முதலிய யாவர்களையும் அடிமைகொண்டாளுகம் பரிபூரணனே சங்கரா முப்பரத்தைஎரிக்கப் பொன்மலையை வில்லாகப்புடைத்தபுயனே ஒப்பற்ற வெற்றியையுடைய மன்மதனையெரித்த நெற்றிக்கண்ணனே அடிமையாகிய மார்க்கண்டனைப்பற்றவந்த அந்தகனையுதைத்துக்கொன்ற அரவிந்தபாதனே யாவரையுந் தகிக்கவெழுந்த ஆலகாலவிடத்துக்கஞ்சிய தேவர்கள் சரணஞ்சரண மென்றபோது அவர்களை இரட்சிக்கும்பொருட்டு அவ்விடத்தைப் பானஞ்செய்ததினாலே நீலகண்டத்தையும் அதிலணிந்திருக்கு முத்துமாலைகளையுந் தரிசனஞ்செய்து நான் ஆனந்தமடைவேனோவென்று வியாசர் உன்னினார்—எ-று. (௪0)

அண்டமீன்றவன் மேல்வைத்தபார்வையு மணிபணிக் குழைக்காதுந், துண்டமுங்குனி புருவமுநுதற்கணுந் தொடர்ந்துளன்றணிடக்

[illegible]றெந், சுண்டசெங்கனி வாயும்வெண்முறுவலு முத்தமனுமை யா[illegible]கண், [illegible]டுசேருண் மதுமுகவனசமு மகிழ்ந்துகாண்குவதெ ன்[illegible].

இ-ள். சகல பிரமாண்டங்களையும்பெற்ற சிவகாமசவுந்தரியின து திருவழகைநோக்கும் இருகண்களையும், கம்பளன் சுவதரனென்னும் இரண்டு நாகராஜாக்களைக குண்டலமாகவணிந்த விரண்டுசெவிகளையுஞ், சண்பகமலர்போன்ற திருமூக்கையும், இந்திரதனுசைப்போன்ற புருவங்களையுஞ், சிந்தூரத்திலதந் தீட்டியதுபோல் விளங்கும் நெற்றிக்கண்ணையும், அபையபையமென்றோடிவருந் தேவர்களைத்தொடர்ந்துவந்த ஆலகாலவிடத்தைப் பானஞ்செய்த கொவ்வைக்கனிபோன்ற திருவாயையும், வெண்ணிலவெறிக்குஞ் சிறுநகையையும், உமையவளது கண்களாகிய வண்டுகள்விழுகின்ற அழகிய வதனமாகிய செந்தாமரையையும், யான்மகிழ்ந்து காண்ப தெந்தாளென்று வியாசர்விரும்பினார்—எ-று. (௪௧)

செழுந்தடப்பவ ளக்கிரிமேனியிற் சிறப்புறுஞ்செஞ்சோதிக்
கொழுந்தெழுந்துசாய்ந் ததுவெனப்புறந்திகழ் குளிர்சடைமுடிமீதே
விழுந்தெழுந்திரை கங்கைவெண்பிறையணி விளக்கமுங்கண்டங்கே
யழு[illegible]துநேசமோ டுருகிநான்மகிழுதர வணையுநாளணையாவோ.

இ-ள். செழுமைபொருந்திய பவளமலைபோன்ற திருமேனியில் சிவந்த சோதிப்பிரகாசக்கொழுந்தெழுந்து பின்புறஞ்சாய்ந்து விளங்குவதுபோல் முதுகிற்சரிந்த குளிர்ச்சியையுடைய சடாமகுடத்தில் அலைவீசுங் கங்காநதியையும், அமுதமயமான மூன்றாம்பிறையையும், அலங்கரித்திருக்கும் பிரகாசத்தைத் தரிசனஞ்செய்து அழுந்திய ஆசையோடு யான் ஆனந்தம்பெறச் சேருகிறநாள கிட்டாதோவென்றார்—என்றவாறு. (௪௨)

ஆ[illegible]த்துட னிப்படிபன்முறை யறைந்தறைநதழியாத
சே[illegible]காடக வுண்மையினறிவுபோய்த் தோயவுமாயத்தற்
பே[illegible]மற்றொளிர் சிற்சிவபோதமாய்ப் பொலிவுகூரானந்தச்
சி[illegible]ர மூழ்கிவேறறிந்திலன் [illegible]தேசிகனம்மா.

[illegible] அன்புடனே இவ்விதமாகப் பலதரம்புகழ்ந்து அழிவில்லாத [illegible]சாதிமயன் ஆனந்தநடன ரகசியப்பொ[illegible]ர் நிச்சயத்தின்[illegible]வகமூழ்கியவுடன் மாயாசம்பந்தமான [illegible]விகாரநீங்கப் பி[illegible]கும் ஞானத்தின் பரிபாகமான சிவக்கியானமாய் வளர்ச்சிபொ[illegible]சிவானந்தமென்னுங் குளிர்ச்சிபொருந்திய கடலிலேபடிந்து [illegible]றுகி மற்றொன்றுந்தெரியாமற் றேகாதி பிரபஞ்சங்க[illegible] [illegible]து [illegible]ருவாகிய வேதவியாசர் நிட்டையி லெழுந்தருளியிரு[illegible]

தார் அதிசயமாகவென்று புராணிகர் சவுனகாதிமுனிவர்களுக் குரைத் தார்—எ-று. (௩)

கலாதிநீங்கின குணங்களுமிரிந்தன கரணங்கடனிச்சாய்ந்த
புலாதிமாறின மொழிமுதலாயின புறங்கொடுத்தனவப்பா
னிலாவுகேவல மொருவியதிருவரு ணெறிதரப்பரமாகிக்
குலாவுபூரணத் தொன்றியொன்றுதகோர் குறிக்கருங்லையானன்.

இ-ள். கலாதிமுதலிய தத்துவங்களும் நீங்கிற்று முக்குணங்க ளுந்தொலைந்தன அந்த கரணங்களைச்சார்ந்த ஞானேந்திரியங்களைத் தும் புறப்பட்டது வசனாதி கர்மேந்திரியங்களைந்தும் முதுகிட்டோ டியது பின்புவிளங்கும் கேவலாவத்தையொழிந்தது சிவானுக்கிரகிலை யைப் பெற்றதினாலே மேன்மைபொருந்திய பரிபூரணவஸ்துவில்சே ர்ந்து ஒன்றினும் ஸ்திரப்படாத கற்பகப்பொருளைக் கலந்துநின்றார் வேதவியாசர்—எ-று. (௪௪)

பொறிபுலாதிய தத்துவக்குறும்புகள் புறங்கொடுத்திரிந்தோட
நெறிதருஞ்சிவ ஞானகேயத்திடை நேயமொடணைந்தென்றுங்
குறிகுணம்பெறு வளவிலாவானந்தக் கோயில்கொண்டலைவின்றி
யறிவுவிற்றிருக் திடவிருந்தான்றனை யதிசயத்தொடுங்கண்டான்.

இ-ள். பஞ்சேந்திரியங்கள் சத்தாதிவிடயங்களென்னும் தத்து வச்சத்துருக்கள முதுகுகாட்டி முறிந்தோடச் சன்மார்க்கத்தைக் கொடுக்கும் ஞானமாகிய நேயத்தில் விருப்பத்துடன்சேர்ந்து எப் போதும் அடையாளமாகிய செயலைப்பொருந்தி அளவற்ற சிவானந் தமென்னும் ஆலயத்தைப்பெற்று அசைவில்லாமற் சிவஞான மெழு ந்தருளியிருக்கத் தக்கதாக அற்புதமாகத் தன்னையுணர்ந்த வேதவி யாசமகாமுனிவரான் றலைவனைக்கலந்து பரமசுகத்தி லெழுந்தருளியிரு க்கின்ற நிச்சயத்தைச் சயிமினிபகவான் தரிசனஞ்செய்தார்—எ-று.

கண்டகண்களு நெஞ்சமுங்களித்திடக் கைகுவித்தெதிர்நின்
கொண்டுதேசிகன்மொழிபெறுமாசையாற்குறித்தொருமெ கூறு
தெண்டாத்தகு முகூர்த்தமொன்றகன்றபி னெழிற்சிவம ன
தண்டவில்குர வன்றனைப் றினன் சயிமினியெனு ான்.

இ-ள். வ்வகையாய் சிவயோகநிட்டையிலிருக்கும் வியா சமகாமுனிவ தரிசனஞ்செய்த இரண்டுகண்களும் சி சந் தோஷித்து காங்களையுங்குவித்து அஞ்சலிசெய்து ஞான தேசிகரின் திருவருட்பெறவேண்டுமென் றாசைகொண் திரு ப்மலர்த்தலைக் கேட்கவேண்டுமென்னும் விருப்பத் ட ிருக்கும் கோலத்தைப்பார்த்து மவுனமாயிருந் கை ிய த்தெ முதான இரண்டொழிகைசென்றபின்பு ய பதிவு

சொரூபமாகி மாயையினாற் றடைபடாத சிவஞானாசாரியனை உத்தம [illegible]ரிபக்வான் தோத்திரஞ்செய்தார்—எ-று. (சசு)

எழுதுசித்திரத் தீபமொத்திருந்தவ னிலகுமாமுனிபோற்றும்
வழுவிலோசையால் விழித்துலகச்செயல் வநதுறமுணர்வோடுக்
தழுதழுத்தெழு மொழியினாற்புளகமுந் தாழ்தடங்கண்ணீருந்
தொழுதியற்றியகையுமெய்க்கம்பமுந்தோன்றமுன்னுரைசெய்வான்

இ-ள். சித்திரத்திலெழுதிய விளக்கைப்போ லசைவற்றுச் சிவ யோகசமாதியிலிருந்த பராசரியர் முன்னின்றுவிளங்குஞ் சயிமினிப கவான் வழுவுதலில்லாமற் றுதிக்குஞ் சத்தத்தினால் கண்மலர்ந்து உலகவிகாரங்களிற்சேர்ந்த நினைவுடன் தடைபட்டெழுந்து குழறுஞ் சொல்லினால் மயிர்க்குச்செறிதலும் ஆனந்தாசங்களபொழியவும் இரண்டு கரகமலங்களையுஞ் சிரமேற்குவித்துக்கொண்டு தேகநடுக்கமுண்டாகி சயிமினியைப்பார்த்துத் திருவுளம்பற்றுகின்றார்—எ-று.()

கற்குநூனெறி மாதவவுணர்வருங் கலைமறைப்பொருணின்பா
னிறகவேர்தினஞ் சிதம்பரங்கணடவர் முத்தியினெறியோரற்
சிற்கனந்திக ழம்பலவாணனைச் சிறநநேயங்கூர
முற்கடுந்துயர் கடிநதுகண்டிலகிமெய்ம் முத்திபெற்றினிதுய்வாய்

இ-ள். வேதாகமங்களைப் படித்துணர்ந்து அவ்விதியின்படி நடக்குஞ் சயிமினியே அறிதற்கரிதான வேதாந்த சித்தாந்த முடிவின் பொருளை உன்மனதிற் றரிக்கத்தக்கதாக நின்னிடத்தில் விருபங்கொண்டுசொன்னோம் ஞானாகாசமாகிய சிதம்பரதரிசனஞ்செய்தவர்கள் மோட்சமார்க்கம் பெற்றவர்களாகையினால் கருணாரசங்கொண்டு ஞானவிவேக சொரூபமாகப் பிரகாசிக்குஞ் சபாபதியைத்தியானஞ் செய்து அன்புபொருந்தி இனிமேல்வருங் கொடிய துன்பங்களைப் போக்கித் றரிசனஞ்செய்து நித்தியமான மோட்சத்தைச்சோகது பேரின்[illegible]ற்று வாழ்வாயென்று வேதவியாசர் திருவாய்மலர்ந்தருளினார்—எ-று. (சஅ)

சுருதிநாயக னிடத்தெனதன்பிவண் டோற்றுமிச்சருக்கத்தைக்
கருதியோதினர் சிதம்பரத்துறைபவர் கருதரும்பயன்சேர்வர்
பொருவிலம்பலங் காண்குறுமாதரம் புணர்ப்பவர்க்கிடையூறு
மொருவிமாநடங் கண்டுகண்களித்தநன் குறுவரிவ்வுரையுணமை.

இ-ள். வேதநாயகனான அம்பலவாணமூர்த்தியினுடைய பாதாரவிந்தங்களிலே எனக்குப பக்தியையுண்டாக்கு மிச்சருக்கத்தை விருப்பமாகநினைத்துப் படித்தவர்களும் சிதம்பரதலவாசஞ் செய்தவர்களு[illegible] மேன்மையாகிய பேறுபெறுவார்கள் ஒப்புவமையில்லாத திரு[illegible]ம்பலத்தைத் தரிசனஞ்செய்யவேண்டுமென்று பரிவுகொண்ட[illegible] குற்றமும் வருத்தமும நீங்கி மகாமகிமைபெற்ற ஆனந்தநட

னத்தைத் தரிசனஞ்செய்து ஆனந்தத்தையடைந்து நன்மைபெறுவா
ர்கள் இவ்வுரைநிச்சயம்—எ-று. (௪௰௯)

நின்னைவேண்டின னாதலினிவையெலா நிகழ்த்தினன்வேறொன்று
முன்னலாதுகொள் பொன்னவைச்சிதம்பரத்தாடுசென்றடைவாயே
றின்னநன்னெறி யினிதுறவுரைத்தன னிறைவனைத்தருடன்றான்[ன்
முன்னருள்ளனபன்முறைவிளக்கிய முதன்மைகூர்முனிவேந்தன்.

இ-ள். சயிமினியே உன்னிடத்தில் யான் விருப்பங்கொண்டிருப்பதினால் இம் மகிமாதிசயங்களையெல்லாம் விரிவாகச்சொன்னேன் இவற்றில் நீ மற்றொருசந்தேகமுமெண்ணாமல் மனதைத் திடப்படுத்திக்கொண்டுபோய கனகமயமான திருச்சிற்றம்பலத்தில் ஞானாகாச சொரூபமாக ஆனந்தநடனம்புரியும் விநோதத்தைத் தரிசனஞ்செய்யென்று மிவ்வித நன்மார்க்கங்களையெல்லாம் இனிமைபெறத்தக்கதாகச் சிவானுக்கிரகத்தினால் ஆதிவேதங்களையுணர்ந்து அவற்றின் பொருளையும் புராணங்களையும் உலகினருணரத்தக்கதாகப் பிரகாசிக்கச்செய்த மேன்மைபெற்ற தபோதனர்களுக்கு அரசனான வேதவியாசமுனிவருபதேசித்தாரென்று சூதபுராணிகர் நைமிசாரண்ய வாசிகளான சவுனகாதிமுனிவர்களுக்குரைத்தார்—எ-று. (௫௰)

சமாதிசருக்கம் - முற்றிற்று.

---

பாயிரம் உட்பட சருக்கம் ஒன்பதுக்குந் திருவிருத்தம்-௭௬௫.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்பதாவது

# துற்றெரிசனச்சருக்கம்.

———0✱0———

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருமறைபிறழுவெண வதுவெனவலைவுற வயலொளிபரககனை
திருநடவடிவினை நினைதரமருவிய திருமுனிபரவசமுன்
கருகருநிலைசிறி துரைசெய்துமிருகொலை களவுறுமொருப
பெருவினைபெறியவர் மருவியசிவகதி யிடையுடைநெறிபுகலும்.

இ-ள். அரிய நான்குவேதங்களும் இதுவென்றும் அதுவென்றும் பரமசிவத்தினது நிலைமையை அறியாமல மயங்கித்திரிய வேதமுடியில்விளங்குஞ் சிதாகாசமயமாய ஆனந்தநடனம்புரியும் அம்பலவாணமூர்த்தியைச் சிந்தைசெய்து பரவசமாகிய வேதவியாசர் சிவயோகசமாதியி லிருந்தவிதத்தை வகைபெறச்சொன்னோம் இனிமேல் ஜீவவதைகளினுமிகுத்துச் சோரகுணமுமுடைய ஒருவேடனானவன் இருவினைகளையுங்கடந்த தபோதனர்கள் சேருகின்ற மேன்மையான சிவபதவியைசார்ந்த துற்றெரிசன சரித்திரத்தைச் சொல்லுகிறோமென்று வாதராயணர் சயிமினிக்குரைத்த முறைமையாகச் சூதபுராணிகர் சவுனகாதிமுனிவர்களுக்குச் சொல்லத்தொடங்கினார்—எ-று.

பொருபுலன்விலகிய வறிவுடனிலகிய புகழ்முனிபுகலுகலும், வருமிருவினைபெறி நெறிநிகழுதிருவருண் மருவியசயிமினியுங், குருபரவருள்வடி வுடனுலகினிலெழு குணநெடுவரையனையா, பொருமைகொடுனதுரை யமுதுகொடறிவினி லுறுகுறை பொருவினனால்.

இ-ள். மாறுபாடாகப் போராடும் ஐம்புலன்களையுந் தீவினைகளிற்செலலாமல் சிவசம்பந்த மாக்கிக்கொண்டு சிவஞானத்துடன் பிரகாசிக்கும் மகிமையையுடைய வாதராயணர் திருவாய மலர்ந்தவுடன் வரும் நல்வினை தீவினைகளைவென்று நன்மார்க்கத்துடன் விளங்கச் சிவாநுக்கிரகம்பெற்ற சயிமினிபகவான் பராசரியனைப்பார்த்து உத்தமஞான தேசிகனே கருணையுருவாகி ஜகத்தில் ஓங்குநற்குணங்களால் உயர்வுபெற்ற மலையைப் போன்றவனே தேவரீர் நிச்சயமாகத் திருவாய்மலர்ந்த தேவாமிர்தமதைச் செவியென்னும் வாயினாற் பானஞ்செய்ததினால் என்மனத்திற் சகலசந்தேகங்களுந் தீர்ந்தனவென்றார்()

மதுவிரியிதழிய மதியமுநதியமும் வளர்சடை முதன்முதல்வன்
முதுமுயலகனுடன முரிதரநடமிடு முடிவறுமுயர்கனகப்
பொதுவினினிலகிய பெருமைகளளவில புகலவுமெனதிதைய
மதிசயமுடனமை கிலதினமருளென வருண்முனியருள்புரிவான்.

இ-ள். தேன்சொரியுங் கொன்றைமாலையையும் அமுதமபொழியுஞ் சந்திரனையுந் திவலைகள்தூவுங் கங்காநதியையுமணிந்து வளருஞ் சடாமகுடத்தினையுடைய ஆதிகர்த்தன் நெடியமுயலகன் உடல்நெரியும்படி ஆனந்தநடனம்புரியும் அந்தமில்லாத உயர்வுபெற்ற ஞானாகாச ரூபமான திருச்சிற்றம்பலத்திற் பிரகாசிக்குஞ் சொற்கெட்டாத மகிமாதிசயங்களைத் தேவரீர் திருவுளம்பற்றியும் அவ் வற்புதங்களை இன்னங் கேட்கவேண்டுமென்னும் ஆசையகலவில்லை ஆகலால் அருள்சுரந்து இன்னும் அப்பெருமையைத் திருவுளம் பற்றவேண்டுமென்று சயிமினிகேட்டபோது வியாசர்கருணையுடனே சொல்லத்தொடங்கினார்—எ-று. (௯)

மறுபுவிமருவினர் மபவுறைபவர்மல மிருவினையிருளறவே
தெறுதருதமனிய மிலகியபொதுமலி திருநகரிகட் டுறைபே
ரறுபகைகடிதவ முனிவரருறைகர வணிமனைமடம்வனையா
வுறுகுறைசிறிதற வுதவினர்சிவபத முவகைபொடுறுவர்களால்.

இ-ள். அன்னியதேசத்திலிருப்பவர்களும் சமீபகிராமங்கள் அல்லது நகரங்களிலிருப்பவர்களும் ஆணவாதி மும்மலங்களையும் நல்வினை தீவினையென்னும் இருள்களையும் ஓட்டித் தங்கமயமாய்ப் பிரகாசிக்குந் திருச்சிற்றம்பல முடைய சிதம்பரபுரத்தில் வைதிகப்பிராமணர்களுக்கு அழகுடைய அக்கிராரங்களுங் காமாதி உட்பகையை வென்ற தபோதனர்களுக்கு மடங்களுங்கட்டியவற்றில் தனதாநியாதி சகல வளப்பங்களையுங் குறைவில்லாம னிறைத்துவைத்துக்கொடுக்கும் புண்ணியசாலிகளும் சிதம்பரதலத்திலே யிருக்கும் பெரியோர்களுக்குதவிசெய்தவர்களும் மேலான சிவபதவியடைந்து ஆனந்தத்தை அநுபவிப்பார்கள்—எ-று. (௪)

வித்தகமுனிவர சத்தியமிதிலொரு மெய்க்கதைபுகறுதுகேண்
மைத்திரைவிடமென விப்புவியிடைவரு மற்றொருவிடமனையான்
சித்திரவதையி லளப்பிலவுயிர்பல செற்றதில்வருபொருளே
துய்த்துழலறிவிலி பற்றருளிலிபெயர் துற்றெரிசனனவனே.

இ-ள். பக்தி ஞானவைராக்கியத்திற் சிறந்த உத்தமமான சயிமினியே சிதம்பரதலவாசிகளாகிய பெரியோர்களுக்கு உதவிசெய்தவர்கள் மேன்மையாகிய சிவகதியைப் பெறுவார்களென்று முன்சொன்ன வாக்கியம் நிச்சயம் இங்ஙனம் ஓர் உண்மையாகிய சரித்திரம்உண்டு அவற்றைச் சொல்லுகின்றேன் கேளும் சமுத்திரத்தி லுற்பவித்த கரிய நிறம்போன்ற ஆலகாலவிடத்தினு மதிகமாகி புவியிற்பிறந்த விடம்போன்றவன் அநேகவித கபடவிசித்திரமாக மானிடவர் முதற்சீவராசிகளை வதஞ்செய்து அபகரித்த திரவியங்களைச் சாப்பிட்டும் கிஞ்சித்தேனு மிரக்கமில்லாத மனத்தனும் பெருமுடனுமிய துற்றெரிசன னென்னுமோர் துஷ்டனிருந்தான—எ-று. (௫)

வனசரர்தங்குல னிடைவருவஞ்சகன் வடவனலுங்கதிரிற்
றினகரனும்பய முறமிகுசெந்தழல் சினவியவிந்தயனத்
தனவரதங்கொலை வழிபறிவன்கள வவையின்மகிழ்ந்துயர்வோன்
றனைநிகருங்கொடு வினைவடிவங்கொடு தலனிடைநதனையோன்.

இ-ள். வேடர் குலத்திற்றோன்றி வஞ்சமனத்தையுடையவனும் வடவைத்தீயும் ஆயிரங்கிரணங்களையுடைய சூரியனும் அஞ்சத்தக்கதாகத் தீக்கொண்டெரியும்விந்தாரணியத்தில் எப்போதுஞ்சீவவதைகளைச்செய்வதிலும் வருத்துபவர்போக்கா யிருக்கின்றவர்களைக் கொன்

று அவர்களது சொத்துக்களை யபகரிப்பதிலும் ஆகிய கொலைத்தொழிலினும் திருட்டுத்தொழிலினும வல்லமையாகச் சந்தோஷங் கொண்டு வளருகின்றவன் இணையில்லாக் கொடுவினையே யோருருவங் கொண்டு பூமண்டலத்திற் றிரிவதுபோலத் திரிந்து கொண்டிருந்தான் — எ-று. (௬)

இடைநெறிவந்திவ னெதிர்பவருண்டுகொலெனவிவனின் றனன்மு
குடையுமிருந்திரை நரையுமுயங்கிய குனிவெரினுளகிதரு [ன்
முடையுமவிந்தலை சிகையுமவிந்திட ருறுமிகனென்றலையு
நடையுமடைந்திடும் வயதினோர்ந்தண னடவைநடந்தனனால்.

இ-ள். அவ்வேடன் இம்மார்க்கத்தில் யாவரேனும் வரமாட்டார்களோவென்று தேடித்திரியும்வேளையில் அவன்முன் குடையைக் கையிற்பிடித்துக்கொண்டு நரைத்தமயிர்களும் தளர்ந்த தேகமுங் கூன்வளர்ந்தமுதுகும் உடையவனும் நடப்பதற்குச் சக்தியற்று உடுத்திக்கொண்டிருக்குஞ் சோமனுமநூல குடுமியின்முடி நெகிழ்ந்தலைய நெட்டியினாற்செய்த பாவையைப்போல் காற்றுக்கசைந்து தளர்ந்த நடையினனும் வயதின்முதிர்ந்த ஓர் பிராமணன் அநதககாட்டு வழியிலே தள்ளாடிக் கொண்டுவந்தான் — எ-று. (௭)

வட்டையெதிர்ந்த விருத்திகவந்தணன் மங்டிலகங்கதுவச்
கட்டழல்சிந்த வெருட்டுகொடுங்கர கட்கமிலங்கியெழத்
தொட்டகதங்கது வக்கதவந்தண சொற்கொடெதிர்ந்துடனே
வெட்டுவனென்றெதிர் கிட்டினன்வெந்திறன்மிக்ககொடுஞ்சவரன்.

இ-ள். மார்க்கத்தி லெதிர்ப்பட்ட வக்கிழப்பிராமணன் பெருநடுக்கங்கொள்ளத் தக்கதாகக் கொடியபார்வையினாற் றீப்பறக்க விழித்துப்பார்த்து உருவியகத்தியைக் கையிற்பிடித்துப் பளபளவென்று பிரகாசிக்கும்படியா யசைத்து மிகுந்த கோபாக்கினிமூள இரக்கமில்லாத கொடிய வசனங்களைசசொல்லி இவ்வாளினால்வெட்டுகிறேனென்று சமீபத்தில்வந்தான் வெற்றியின்மிகுந்த கொடும்பாவியாகிய துற்றெரிசனன் — எ-று. (௮)

அந்தணனிங்கிவன் வந்ததுகண்டன னஞ்சினன்விந்தவனம்
வந்தனனந்தக னந்தமதந்தமும் வந்ததுவந்ததென
நொந்திருகண்புனல் சிந்திடவெங்கடு துங்கினனென்றிடவோர்
சிந்தவுடம்பு நடுங்கிவிழுந்துயர் சிந்தைகலங்கினனால்.

இ-ள். பிராமணன் வேடன்வருவதைப் பார்த்துப் பயந்துஇவ்வனத்தில் யமன்வந்தான் நமக்கும் முடிவுகாலம் நேரிட்டதென்றுமனநொந்து இரண்டுகண்களினுங் கண்ணீர்சொரிய வெவ்விய விடத்தையுண்டவன்போல் வியர்வைசிந்த உடலம்நடுக்குற்று மண்மிசைவீழ்ந்து உயர்நிலைதடுமாறிச் சித்தங்கலங்கினான் — எ-று. (௯)

தேவர்கடேவ விமாசலமேல்வரு தேனொருபாலுடையாய்
மூவருமாய்முத லாய்முடிவாய்முடி யாமுதலாமுதல்வா
காவுதியோர்வெள வாய்வெருவாவிறு காலமுமீதுகொலோ
வாவவெனவுனை யாவுலையாவெழு மாருலமூழ்கினனால்.

இ-ள். தேவர்களுக்கெல்லாந் தேவனே இமாசலவரையிற்பிறந்ததேனாகிய பார்வதிதேவியை வாமபாகத்திலணிந்தவனே அரியயனுருத்திரசொரூபங்களாகியும் ஆதிகாரணனாகியும வேதங்களின் முடிவான பொருளாகியும் ஒருகாலத்திலும் அழிவில்லாதமுதல்வனே என்னைக்காத்து இரட்சிக் கருளுவையோவென்று வாய்குழறிக்கொண்டு முடிவுகால மிஃதோவென்றும் ஆஆவென்று வாயதிறந்து அதிகபயத்தினால் மகாதுயரக்கடலி லழுந்தினான்—எ-று. (க0)

ஆருமிலெனினி வேடர்குலாதிப வாவியைநீதருவா
யோர்வறவாள்கொடு மோதுதல்காதுதலோகொடிதோகொடிதாற்
பாரிதுகாசிது தூர்ச்சைவபேயொரு பாரமிலேனருளக்
கூரிலைநீகொடு போதமியேனையொர் கோளினையாதொழிவாய்.

இ-ள். ஓ வேடர்குலத்தரசனே வேறேயொருதுணையுமில்லாதவனாதலால் என்பிராணனை நீ எனக்குத் தானமாகத்தருவாய் அன்றியும் பிரமஹத்தி மகாபாதகம் வருமென்று நிதானியாமல் நினது கரத்திலொளிருங் கத்தியினால்வெட்டுதல் கோபித்தல்முதலிய குற்றங்களாகிய வருத்தஞ் செய்யவேண்டாம் என்னிடத்திலிருக்கு மிககாசும் சோமன முதலியவைகளைக் கைக்கொள்ளும் வேறே யாதுமொளிக்கவில்லை நான் எளியவன் என்னிடத்திற்கருணைவைத்து யாதுஞ்செய்யாமல் விட்டுப்போவாயென்று பிராமணன் பரதவித்துச் சொல்லுவதைக்கேட்டான் துற்றெரிசனன்—எ-று. (கக)

பழியிதுநன்றல வருளருளென்றிரு பதமிசைசென்றுவிழா
விழிபுனல்சிந்திட மொழிகளடர்ந்திட வெயர்வுமிகுந்திடநொந்
தழிதருநெஞ்சமொ டுலைதருமந்தண னயர்வதுகண்டுவிடா
திழிபுபெருங்கொலை வனசரர்தம்பதி யிடர்கள்புரிந்திலனால்

இ-ள். பிரமஹத்தி தோஷஞ்செய்கின்றது உனக்கு நன்மையல்லவென்பேரில் தயவுவை யென்றுசொல்லி வேடன்காலிலவிழுந்து கண்ணீர்சோரவிடுத்து வாய்குழறி தேகமெல்லாம்வியர்த்து மிகுதியுமனநொந்துருகி அலைந்துகொண்டு திரியும்பிராமணன் துயரத்தைப்பார்த்துக்கொல்லு மெண்ணத்தைவிடுத்து வேறேகுற்றங்களுஞ்செய்யாமல் வேடுவர்க்கரசனாகிய துற்றெரிசனன் மனமிரக்கங்கொண்டிருந்தான்—எ-று. (கஉ)

முன்னரியற்றிய நன்னர்வினைத்தொகை முன்னரடுத்திட லுந்
தன்னிடையுற்றருண் மன்னிவனசரர் தம்மரபிற்கொடியோ
னுன்னைவருத்தில னுன்னைமுடித்திட வுன்னிலனச்சமொழிந்
தின்னமிர்த்திட நின்னதுகைப்பொரு ளெவ்வயினுய்த்தியெனு.

இ-ள். முற்சனனத்திற்செய்த நன்மையான புண்ணியங்கள் இச்சனனத்திலவந் துதவியதுபோற் குற்றமிகுந்த வேடர்களினுங் கொடிய துற்றெரிசனன் கருணைகூர்ந்து பரதவித்துக்கொண்டிருக்கும் பிராமணனைப்பார்த்து யான் உன்னைக்கொல்லவுமில்லை வேறே துன்பப்படுத்தவுமில்லை விட்டுவிடுகின்றேன் நீ பயப்படாமல் உன்வசத்திலிருக்கிறபொருளை யென்முன்வைத்து விடென்றுசொன்னான்—எ-று. (௪௩)

வேடனிசைத்தசொ லாமுதநத்துயிர் வீடுதலற்றுடனே
யாடைமுதற்பொருள் யாவையுமப்றவ னைந்தனித்தருள்வான்
கோடியெனப்பரி வோடுகொடுத்தொரு கோவணமுற்புனையா
நாடுமகிழ்ச்சியி னனவனுக்கெதிர் நாகுழறிப்புகல்வான்.

இ-ள். வேடுவனாகிய துற்றெரிசனன்சொல்லியதை தேவாமிர்தபானம் பண்ணியதுபோற் செவியிற்கேட்டவுடனே தேகநடுக்கந்தீர்ந்த பிராமணன் உடுத்திக்கொண்டிருக்கும் சோமன்முதலிய பொருளெல்லாம் முன்னே வைத்துக் கட்டினகோவணத்துடன் வேடுவனெதிர்நின்று நாயேனு தரித்திரன் உனது இச்சையைத்தணிக்கவென்னிடத்தில் இதையன்றி வேறே யாதுமில்லை என்றுங் கொடுக்கப்பட்டவையைச் சந்தோஷமா யெடுத்துக்கொள்ளென்று விருப்பத்துடன் நாவுகுழறும் படியாய்ப் பிராமணன் உபசாரவார்த்தையாகச்சொன்னான்—எ-று. (௪௪)

மாதிரமுற்றிய பூதலனிற்றவ வாழ்வுபெறத்திரிவே
னாதவன்விட்டொளிர் காயகிரபட்டென தாகமிளைத்தலவா
வேதனைமிக்குழ லாவகைவெற்றிகொள் வேடர்குலத்தலைவா
காதலணிக்குடை யீதியெனப்பல காலும்வழுத்தினனால்.

இ-ள். எண்டிசையுஞ்சூழ்ந்த பூமண்டலத்திலுள்ள புண்ணியதலங்களைச் சேவைசெய்துகொண்டுவரும் நியமமுடையபிராமணன் சூரியகிரணத்தின் வெப்பத்தினுற் தேகமெலிந்து பூமியை வலமாகச் சஞ்சரித்துக் கொண்டுவரும் யான் மிகுதியும் வாதனைப்படாமல் ஆசையுடனே நிழலுக்குப் பிடித்துக்கொண்டுதிரியும் இக்கொடையை எனக்குநீ தானமாகக்கொடுவென்று வெற்றிப்பிரதாபம் பொருந்திய வனசரர் குலநாயகனேயென்று பூசிதமாக அநேகந்தரம் மறையவன் துதித்தான்—எ-று. (௪௫)

வேதியனின்றுரை யாடிவணங்கிட வேடர்கடந்தலைவ
னாதபமும்பெரி தோர்துணைகண்டில மாகமெலிந்தனையும

பேதுறவஞ்சிய பூசுரனென்றருள் பேணியருங்குடைதன்
போதநெகிழ்ந்துத வாநகைதந்திடர் போலவகன்ற[illegible].

இ-ள். பிராமணன்சின்று உபசாரவார்த்தைகள் சொல்லிப்பணிந்தபோது வேடுவர்கோனான துற்றெரிசனன் மனமிரங்கி வெய்யில் கொடிதாக விருப்பதால் இப் பிராமணனுக்கு வேறேதுணையுமில்லை தேகமெல்லாந்தளர்ந்து மெலிந்திருக்கின்றது இத் திட்சண்ணியம் பொருதென்றெண்ணியும் ஏழைப்பிராமணனென்றும் பூததயவுகொண்டு குடையைப்பெற்றுக் கொள்ளாமல் அவ் வந்தணனைப் போகச் சொல்லி விலகிப்போனான்—எ-று (௧௬)

போனவரும்பொருண் மீளவும்வந்தது போலநினைந்துலையுந்
தீநரகம்பயில் வோர்களிந்துயர் தேவர்பதம்புகுவா
ஞனசிறந்தவி மானமணைந்தன ராமெனநெஞ்சமகிழ்ந்
தூனமிலந்தணன் வாரிநெடும்புவி யூடுதிரிந்தனனால்.

இ-ள். காணுமற்போன அரும்பொருளைக் கண்டெடுத்தவன் போலவும் நினைந்து மஹா ரவுரவாதி நரகங்களின்மூழ்கி அவதிப்படுகின்றவர்களுக்குத் தெய்வாதீனமாய் விண்ணுலகிலிருந்து தெய்வகணிகையர்களாடல்பாடலுடன் விமானத்தி லேறிப் போகின்றவர்களைப்போலவுங் குற்றமற்ற வைதீகப்பிராமணன் மனதில்மகிழ்வுகொண்டு கடல்சூழ்ந்த விசாலமான புவனத்திற் றீர்த்தயாத்திரை செய்தான்—எ-று. (௧௭)

அள்ளல்வயங்கிய வெள்ளநெடுங்கட லல்கியவம்புவிமே
லெள்ளன்மிகுந்துயர் வெல்லவுடன்றிரி யெவ்வமிலந்தணனுந
தள்ளருமிந்திய வல்வினைவென்றருள் சைவநெடுந்தவர்தம்
முள்ளமிலங்கிய தில்லைவனந்தனை யொல்லையடைந்தனனால்.

இ-ள். சேறுநிரம்பிய நதிகளின்பெருக்கெல்லாம் வந்துசேருஞ் சமுத்திரஞ்சூழ்ந்த பூமண்டலத்திலே நிந்தனைக்குரிய துயர்களைமாற்றும்பொருட்டுப் புண்ணியநதிகளிலும் அத்தலங்களிலும் தீர்த்தங்களிலும் மூழ்கிச் சிவஸ்தலங்களைச் சேவித்துக்கொண்டு பிராமணர்களுள் உத்தமன்நீத்தற்கரிய பஞ்சேந்திரியங்களையுந் தீவினையையும்வென்ற சிவபக்தர்களான சிவயோகிகளது இதயாரவிந்தங்களிற் பிரகாசிக்குஞ் சிதம்பரதலத்தெல்லைக்குட் சீக்கிரமாய்ச் சேர்ந்தான்—எ-று

ஐஞ்சீரடியாசிரியவிருத்தம்.

வந்தவேலையின் முன்னரேவயங்குகண்டிகைசேர்
சந்தமாலைய னிற்றணிதழைத்தொளிர்மெய்ய
னிந்தியங்களை வென்றவனிறைவனுக்கன்பு
தந்தசிந்தையன் சைவகற்றயோகியொருவன்.

...ம்பரதலத் தெல்லைக்குள்ளாக விருத்தைப்பிராமண
... அவனுக்குமுன்னர் உருத்திராட்ச மாலிகாபரண
...காசத்தினலவிளங்கும் தேகமும் ஐம்புலாதிகளை
... செலுத்தியும் பரமசிவபக்திநிறைந்த மனமும்
...னசைவதபோதனன் ஒருவன்வந்தான—எ-று

...தும் வருபவன்செங்கதிர்க்கடவுள்
...தி காயமும்பசியுமேற் கதுவப்
போயசெவ்விகொளானனமபுலர்ச்சிசுடாநெஞ்ச
மாயநன்னிழ றேடிவெவ்வேடைகொண்டணைந்தான்

இ-ள். தூரதேசத்திலிருந்து அச் சிவபக்தன் வருகின்றபோது செஞ்சுடரக்கிரணனாகிய சூரியனது வெப்பத்தால் தேகம்வியர்த்துவருத்தமுற்று மிகுதியுந் தாகமும்பசியு மேற்கொள்ள முகம்வாடி நெஞ்சமும நாவும வறட்சிகொண்டு எங்கு நிழல் கிடைக்குமோவென்றுதேடிக்கொண்டு கோடைகாலம வெப்பததினுற் றுன்புற்று வந்து சேர்ந்தான்—எ-று (உ0)

திருநகர்க்கெலாந தலைமையாந்தில்லையெல்லையினில்
வருதபோதனன் வருந்தமுன்கண்டருமறையோன்
சருநிவநதெதிர் வணங்கினன்கானவன்கொடுத்த
விருமைவன்குடை யெடுத்தவனிழல்பெறவிட்டான்.

இ-ள். அழகிய தலங்களுக்கெல்லா முதன்மையாகிய சிதம்பரதலந் தெல்லைக்குள்ளாகவருஞ்சிவபக்திநையுடைய தபோதனன்வெய்யிலினல் இளைப்புற்று வருகின்றதைபபார்த துணாந்துபிராமணன்முன்சென்று பணிந்து வேடுவனுற் கொடுக்கப்பட்ட அதாதுவிருப்பமாகியகுடையை அச சிவபக்தனுக்குப் பிடித்துக்கொள்ளக் கொடுத்தான்—எ-று. (உக)

வேதவேதிய னிட்டகைக்குடை நிழல்விளங்...
மாதம்பெரி யோன்மனமகிழ்ந்து சென்றெளியாயப
பாதகங்கெட மூழ்கினர்மகேசாதம்பதஞ்சேர்
சிதசிகரம் பயிலசிவகங்கையைசசேர்ந்தான்.

இ-ள். நான்கு வேதங்களையுமுணர்ந்த அந்தணன்கொடுத்த குடையைக் கையிற்பிடித்துக்கொண்டு வெய்யலினல் உற்றவருத்தம் நீங்கத்தபோதனன் மனமகிட்சிகொண்டு சிவாலயத்துட் சென்று ...னவர்களது தொலையாக்கன்மங்களைப் போக்கி சிவபதவியைக் ...க்குங்குளிர்ச்சிபொருந்தியதிவலைகள்தெறிக்கு மலைகளையுடைய ...கையைச்சேர்ந்தான்—எ-று. (உஉ)

சிறிதுநாட்செல வகைசரன்முடிந்துதில்லையி[illegible]
லறிவினுயர் மாதவற்கந்தணன்றன்பாற்
பெறுமருங்குடை நிழற்றியநல்வினைப்[illegible]
லுறுமருந்துய ரறச்சிவபதத்துடனுற்[illegible]

இ-ள். சிறிதுகாலஞ் சென்றபின்பு பிராம[illegible]ருக்கின்
றகுடையைப் பிடுங்கிக்கொண்டு மறுபடியும்[illegible] அவ்வேடனு
க்கு முடிவுகாலநேரிட் டிறந்தவுடனே சிவபதவி[illegible]ன் எப்
புண்ணியத்தா லப்பதகனுக்கு முத்திகிடைத்ததெனவென்றால் முனந்த
வேடன் கொடுத்தகுடையைப் பிராமணன் சிதம்பரதலத்தில அரிய
தபோதனனுக்கு நல்கினமையால் அப் புண்ணியபலனானது வேட
னாற் செய்யப்பட்ட கொடியபாதகங்க ளெல்லாமகன்று சிவகதிய
டைந்தான்—எ-று (உங)

பொன்னின்வாசடைப் புனிதனைபொருளெனககருதித்
தன்னிலாநெறி யறிவுடைச்சயிமினிமுனிவ
வன்னவேடுவன் சிவபதத்தானெனவுறைந்த
வின்னவாசக முண்மையாமுண்மையாமென்று.

இ-ள். தங்கக்கம்பியைப்போல் நீண்ட சடாமகுடத்தினையுடை
ய பரமசிவனே வேதாகமங்களின் முடிவில்விளங்கும் பொருளென்
று மனதி லுறுதிகொண்டு தன்னையுந் தலைவனையுமறிந்த நன்மார்க்க
முடைய சயிமினியே முற்சொன்னவேடன் சிவபதவியையடைந்து
பரிசுத்தனானானென்று யானுரைத்தமொழிநிச்சியம்நிச்சியமென்றுவே
தவியாசர் திருவுளம்பற்றினார்—எ-று. (உச)

சவனாமகாமகள் முன்கொடுஞ்சலதியேயனைய
[illegible]மையொன்றறத் தீவினைபுரியுமாலுடையோன்
சி[illegible]ரும்புக ழுறமொழிசெவித்துணைபுகாதோ
[illegible]டர்ப் பாவங்களகிலத்திலுளவோ

இ-ள். வேடர்குலாதிபனால் முன்செய்த ஜீவவதைமுதலியகொ
டியபாதகங்களையெல்லாம் எண்ணிப்பார்க்கிற் சமுத்திரம்போல் இ
ணையில்லாத மகா பாதகங்களைச்செய்ய மிகுதியுங்காதல்கொண்டவ
ன் அன்றியும் சிவத்தின்மகிமைகளையும் சிவதருமங்களையும் காதினா
லுங்கேட்டறியாதவன் அவனாற்செய்யப்படாத துன்பங்களும் பாத
கங்களும் இப்புவனத்திலுமுண்டோ—எ-று. (உரு)

கவர்ந்தநன்குடை மனன்றியா துவகைகொடுப்ப
வுவந்தவந்தணன் றில்லையம்பதியினிலுண்மை
நிலந்தமாதவ னொருவற்குநிழற்றியபயனாற்
புலந்தணந்திட வவன்சிவபதத்தினையடைந்தான்.

[illegible] அபகரித்துக்கொண்ட குடையை மறுபடியும் பி[illegible] கொடுத்தமையால் அவ்வேதியன மனமகிழ்ச்சிகொ[illegible]த்தில் மெய்மையுடைய சிவபக்தியுடனே தவத[illegible]க்கு நிழலைக்கொடுக்க உதவினமையால் அப[illegible]ன் றனது பாவங்களையெல்லாந் தொலைத[illegible]சேர்ந்தான—எ-று. (உசு)

[illegible] வம்பலத்தினைத்திலன் குறித்தோ
[illegible]துமாறுகேட் டுவந்திலனுரைத்திலன் றன்
மாநுகனைகளி கொண்டிடமன்றினின் றிம
போதுகண்டில னென்றநீபுகலவேண்டாவால்.

இ-ள். சகல தீவினைகளையுந்தீர்க்கும் திருச்சிற்றம்பலத்தை மன[illegible]தினையாதவன சிதம்பரதலமகிமையைப பெரியோர்களால் சொல்ல[illegible]சந்தோஷமாகக் கேட்டுமறியாதவன் நாவினாலுஞ்சொல்லாதவன் [illegible]னும் சிவகாமசவுந்தரி கண்களிக்கக் கனகசபையில நடனஞ்செ[illegible]ம் விநோதத்தை ஒருகாலத்திலுந தரிசனஞ்செய்யாதவனென்று நீ [illegible]ன் வாக்கினாற்சொல்லவேண்டாம—எ-று. (உஎ)

நந்தபேரருட் சிதம்பரத்தலவிசேடத்தா
லந்தமில்பத மன்னதுற்றெரிசனனடைந்தான்
சிந்தைசெய்வதும் புகழுவதுஞ்சிரத்தினாலென்றும்
வந்திசெய்வது மநகரன்றிமற்றுளவோ.

இ-ள். தரிசனஞ்செய்தாலும் அத்தலத்திற் பிறப்பிறப்புற்றாலு[illegible]ம்[illegible]வண வசிப்பவர்களுக்கிடமானது துற்றெரிசனன்[illegible]குடை[illegible]யை மறுபடியுங்கொடுத்த புண்ணியவசத்தினால் எக்க[illegible] மழி[illegible]லாத சிவபதவியைபபெற்றான ஆதலால் [illegible]த்தக[illegible]துதிக்கத்தக்கதுஞ் சிரத்தினால் வண[illegible] சிதம்பர[illegible]மயல்லாமல் மற்றொருதலங்க ளிவ்வ[illegible] பெற்ற[illegible]—எ-று. (உஅ)

அறந்தயங்குமத் தலத்துமண்செங்கல்களவற்றாற்
சிறந்தவேதியாக் கெழின்மனைசிவனெழிநதெவையுந
துறந்தாற்றவர்க் குறைமடந்தொடாந்தவனபதனு
னிறம்பெறச்செயது ளோர்பயனிகழத்துதற்கரிதால்.

[illegible]-ள். தருமங்கள்விளங்கும் அந்தச் சிதம்பரதலத்தில் மண்ண[illegible]லுஞ் செங்கல்லினாலாயினும் சிறப்புடைய வைதீகபிராமண[illegible] அழகுபெறவமைத்த வீடும் சிவனையன்றி மற்றதெய்வங்களை [illegible]ாதவர்களிக்க நிஷ்டாபரரான உத்தமதபோதனர்களுக்கு மட

மடங்கட்டிவைத்து நிறைந்த பக்தியுடனே சகலவஸ
த்துக்கொடுப்பவர்களது புண்ணியத்தை அளவிட்
யாது—எ-று.

அப்பெரும்பயன் மாலயாறிவ
ரொப்பிகந்தருள் பரம்பரனுமைகரிவ
செப்புறுந்திறல வேளிவரறிவரோதெ
தெப்பயன்களு மிதுதனக்கெயுமோவே

இ-ள். அப் பெருமைபொருந்திய புண்ணியத்தின்மகிமை
கமலக்கண்ணனாகிய விஷ்ணுவும், கமலாசனனாகிய பிரமனும், அறிவ
ரோ அறியமாட்டார்கள் அனறியும் இணையில்லாத வநுக்ரகஞ்செய்
யும் பரமசிவன் பார்வதிதேவி ஆனைமுகவிநாயகன் சொல்லுதற்கரிய
வேலைத்தாங்கிய அறுமுகக்கடவுளும அறிவார்களோ அறியமாட்டார்
களாதலால் எத்தவங்களும் எவ்விதகானங்களும் அத்தலத்திலே
மனைமடங்கட்டிக்கொடுக்கும் புண்ணியத்துக்குச சமானமாகா.()

சூலபாணியா லன்புடைச்சுருதிபோர்தமக்கும்
ஞாலமாயையை நீக்கியநற்றவர்தமக்கும
கோலமாமனை மடமன்புகூடலரேனுஞ்
சாலுமத்தலத தமைத்தவர்பெறுமபயன்சாற்றில.

இ-ள். சூலாயுதத்தையுடைய பரமசிவன்மீது மிருந்த பக்தியை
யுடைய வேதபிராமணருக்கு ஆகிய வீடுகளையும பூமண்டலத்தின்
கண் மாயையின்சம்பந்தமான தேகாதி பிரபஞ்சமனைத்தும் பொய்
யென்றுணர்ந்த நன்மைபெறுஞ் சிவனடியார்களுக்கு மடங்களையும்
பக்தியு ர்களிலும் பக்தியில்லாமலாயினும் கட்டிக்கொடுத்தவர்
ள் லனைச சொல்லின்முடியுமோ—எ-று. (௬௧)

யல்லைபுணமனை றுகளொன்றுக்
வபகத்தாயிரங்கற்ப
பாற்றிட வீற்றினிதிருப்பரிம்முறையே
யினைநற்பய னேற்றுவவிசைக்குமாறென்னே.

இ-ள். அன்னவர்க்களித்த மனைகள் மடங்கள் இவை
ளாக இருக்கும் மணற்கள் தூளிகள் ஒவவொன்றுக்கு ஓரா
ற்காலங்கணக்காகத் தருமங்களைச்செய்தவர்களைத் தபோத
துதிக்கத்தக்கதாக வெண்ணியவெண்ணம்போற் கயிலாசத்தி
தருளியிருப்பார்கள் இவ்வகைப்பட்ட மகாநன்மையான பல
த்துச் சொல்லுகின்ற சமர்த்துண்டானவனெவனே தெரியவ

தேனலம்புதார்ச் செஞ்சடைத்தேவர்தேவுறைந்த
கானமானில மாகியசிதம்பரநகர்க்க

னவன்பினு மன்பிலா தாயினுமன்ன
தானஞ்செய்பவர் சிதம்பரஞ்சார்தல்சத்தியமால்.

இ-ள். தேனவிழுங் கொன்றைமாலையைச்சூடிச் சிவந்த சடாமகுடத்தினையுடைய தேவதேவனை மகாதேவன வாசமாய நடனம்புரிந்துகொண்டிருக்கும் ஞானாகாசரூபமான சிதம்பரதலத்தில் இகபரத்துக்கேதுவான பக்தியுடனாயினும் பக்தியில்லாமலாயினும் முறக்கூறிய பிராமணர்களுக்கு வீடும் சிவனடியார்களுக்கு மடமுங் கட்டிக்கொடுக்கின்றவர்கள் சிவபதவியையடைவது நிச்சயம் இது சத்தியம்.-

அங்கிதங்கிய செங்கைச்சேவடியிணைமலர்மேற்
பொங்குமன்புடைத் தவநெறிப்பூசுரனொருவ
னுத்தமானிலத் திருந்தசிவத்தலந் தீர்த்தங்க
ளெங்குநாடியு மிறைஞ்சியும்படிந்துமின்புறுவோன்.

இ-ள். அழல்வாசமாயிருக்குஞ் சிவந்த கரங்களையுடைய சிவபெருமானது பாதாரவிந்தங்களின்மேல பக்திவளரும் தவநிலையையுடைய ஓர் பிராமணன் உத்தமபூமியிலேயிருக்குஞ் சிவஸ்தலங்களைத் தரிசனஞ்செய்தும் பணிந்தும் புண்ணிய தீர்த்தங்களின்மூழ்கியும் ஆனந்தமுற்றவன்—என்று. (௩௪)

வேதநாயகன் வெளியினின்றுநடஞ்செய்தலக்கட்
காதலகூரவந் தடைந்தனன்கனகமாமறுகிற்
பாதைவந்ததோ ரிளைப்பினாற்பளிங்கினாலிழைத்த
சோதிவேதிகை யணைந்துதன்வசமறந்துயின்றான்.

இ-ள். வேதங்களுக்கிறைவனாகிய பரசிவன் ஞானாகாசமான சபையிலே நடனம்புரியுஞ் சிதம்பரதலத்தில பக்திவிருப்பத்தோடு சேர்ந்து தங்கமயமான மாடமாளிகைகள் நெருங்கியவீதியில் வழிநடந்து வந்த வருத்தந்தீரப் பிரகாசம்பொருந்திய பளிங்குக்கற்களினாலமைத்த ஓர் திண்ணையிற்படுத்துக்கொள்ள அக்கல்லில் குளிர்ச்சிதங்கியிருப்பதாற் பூசுரன் தன்னைமறந்து நித்திரைசெய்தான்—எ-று.()

தோகைமாமயி னடமிடுஞ்சுடர்மனையொன்றிற்
காகமொன்றுசென் றன்னத்தைக்கவர்ந்துடன்விரைந்து
போகுமெல்லையின் மிகுந்துயிற்பூசுரனுவிற்
பாகமுற்றுமோ ரோதனப்பருக்கைவீழ்ந்ததுவால்.

இ-ள். மேகங்கள் தவழுவதைக்கண்டு தோகையைவிரித்து மயில்கள் நடனம் புரிந்துகொண்டிருக்கும் பிரகாசம்பொருந்திய வீட்டில் ஒரு காக்கையானதுபுகுந்து அங்குற்ற அன்னத்தைக்கவர்ந்துகொண்டு விரைவுடனெழும்பிவருகையில் அதிக நித்

திரையினால் வாயைத்திறந்துகொண்டு துயிலும் பூசுரனது நாவில் நனி பாகத்தோடுங்கூடிய வச்சாதத்தில் ஓர் பருக்கைவிழுந்தது—எ-று. ([illegible])

அன்னம்விழ்தலு மருந்துயில்வசத்தினாலறியான்
மின்னுநூனெறி வேதியன்விழுங்கினனம்ம
வென்னசொல்லுகோ மீதறியாதுசெய்காகம்
பன்னுமிப்பய னாற்சிவபதமடைந்ததுமால்.

இ-ள். அவ்வகையாய்விழுந்த அன்னத்தை மிகுதியும் நித்திரையினாலறியாமல் பிரகாசம்பொருந்திய நான்முறையாவுமுணர்ந்த வேதபோதனாகிய வேதியன் விழுங்கினமையால் யாம் என்சொல்லப்போகின்றோம் இவை இன்னதென்றறியாத காகமானது இப் புண்ணியபலத்தினால் துதிக்கத்தக்க சிவபதவியைச்சேர்ந்தது இந்த ஆச்சரியத்தை என்னென்றுசொல்லுவோம்—எ-று. ([illegible])

முடிவிலாமறை முதல்வனையுணர்ந்துகொண்டவனுக்
கடிமையெய்திய தவத்தினர்க்கறுசுவையடிசிற்
படியில்வாசநீர் மகிழ்ச்சியாற்பரிவினாலயந்தோர்
நெடியநற்பய னறிவனோவறிகிலானிமலன்.

இ-ள். முடிவில்லாத வேதமுதல்வனாகிய பரமசிவத்தினது பெருமையையுணர்ந்தவர்களுக்கு அடிமைத்தொழில்செய்யுந் தவப்பலனைப்பெற்றவர்கள் மகிழும்படியாய் அறுசுவைபதார்த்தங்களுடனே அன்னமும் அளவில்லாத பரிமளத்தைக்கொடுக்குங் குளிர்ச்சிபொருந்திய நீரும் மனமகிழ்வோடு அளித்தவர்கள் அடையும் பெரிதாகிய புண்ணியங்களைப் பரமசிவனும்அறியத்தக்கவனோ அறியமாட்டான்.

ஆயிரம்பெயர்க் கறுசுவையடிசிலங்களித்த
நேயச்செல்வர்தம் பயனிலுமிடியுடையொருத்த
னேயவாறொரு பிடியவிழ்தரும்பயனெய்தூ
தாயதெப்பதி யினுமுளதிதுவென்பர்தூயோர்.

இ-ள். எத்தலங்களிலாயினும் ஆயிரம்பெரியோர்களுக்கு அறுசுவைபதார்த்த வகைகளோடும் அன்னமளித்தநிறைந்த செல்வத்தினையுடைய ஒருவன் அடைந்தபலனிலும் ஓர்தரித்திரன் பக்தியுடனே பொருக்கவள மன்னங்கொடுத்தலே உத்தமம் இஃது எத்தலத்திலும் உண்டென்று சொல்லுவார்கள் பரிசுத்தர்கள்—எ-று. ([illegible])

ஞானமங்குநின் றுடியதில்லைமாநகர்க்க
ணூனசெல்வனோர் பிடியவிழளித்தற்குமற்றைத்
தானமீதொரு மிடியனெண்ணிலபலதான
மூனமொன்றறக் கொடுத்தலங்கொக்குமோவொவ்வா

இ-ள். சிவஞானவருள்பொழியும் ஏகநாயகனான அம்பலவாண மூர்த்தி ஆனந்தநடனம்புரியுந் தில்லைமாநகரத்தில் அதிக அயிஸ்வரிய முடையவன் ஒருகவள வன்னங் கொடுத்த பலனுக்கு வேறொருதல ங்களில் ஓர் தரித்திரன் தேகத்தைவருத்தி நியமத்தோடுஞ் சமபாதி த்த பொருளைக்கொண்டு எண்ணில்லாத மகாதானங்கள் குறைவில் லாமற்கொடுத்த புண்ணியஞ் சமனாமோ—எ-று. (சு0)

மாடைவெள்ளிகன் னிகைநிலமாங்கரிபரிதே
ராடைபெள்ளுநெல் லகம்பசுக்குடைசெருப்பாதி
யோடைசூழ்புலி யூரிடகதுக்கமற்கருது
வேடையந்தணர்க் குதவினோர்வியன்சிவபதத்தோர்.

இ-ள். தாமரை-நீலோற்பலஞ்-செங்கழுநீர்விளங்கும் ஓடைகள் சூழ்ந்த சிதம்பரதலத்திலே புண்ணியசொரூபரான தபோதனர்களு க்கும், வைதீகப் பிராமணர்களுக்கும், அவர்கள் விரும்பியபோது பொன்-வெள்ளி-கன்னிகை-பூமி-தோட்டம்-யானை-குதிரை-இரதம்- வஸ்திரம்-எள்-நெல்-வீடு-பசு குடை-பாதரட்சை இவைமுதலிய தானங்களை விருப்பத்துடனேகொடுத்தவர்கள் பிரகாசம்பொருந்திய சிவபதவியைச்சார்வார்கள்—எ-று. (சுக)

புவியளித்தலும் போனகநீதலுங்காத்து
நவியினேற்கெழு மகிழ்ச்சியானற்றலநன்னிற்
கவினிலங்கநல் லடிசிலைக்கண்ணுதற்கருத்தி
யவியுமிந்தியக் களிப்புவரவாசிவமாவார்.

இ-ள். பூதானம்-அன்னதானமுதலியவைகளைச் செய்வதிலுங் காத்திற கண்டகோடாலியைப்பிடித்திருக்கும் பரமசிவன் மகிழ்வெ ய்துஞ் சிதம்பரதலத்தில் அழகுநிறைந்த செஞ்சாலியன்னத்தை நெ ற்றிக்கண்ணையுடைய சபாபதியைத் தியானஞ்செய்து ஞானேந்திரிய கர்மேந்திரியங்களின் வழியில் மனதைச்செலுத்தாமல் சிவசம்பந்த மாகச் சித்தத்தைச்செலுத்துஞ் சிவனடியார்களுக்குக்கொடுக்கும் புண்ணியசாலிகள் சிவசொரூபமாவார்கள்—எ-று. (சுஉ)

தண்டுகுண்டிகை யாடைநீர்சந்தனமலர்கள்
கண்டிகைத்தொடைகுடைசெருப்பணைக்குநாண்கலைத்தோல்
விண்டலத்துமா றுறந்தருண்மெய்த்தவர்கள்பு
கொண்டிவற்றினென் றருள்பயன்சிவபதங்கொடுக்கும்.

இ-ள். பரமசிவ னனுக்கிரகம்பெற்ற மெய்மையான தபோதன ர்களுக்கு தண்டு-கமண்டலம்-வஸ்திரம்-உதகம்-கந்தபுட்பங்கள்,உரு த்திராக்கமாலைகள், குடைகள், பாதரட்சைகள், அணைகள்,மான

ரூல்கள் இவை முதலியவைகளிலொன்றேனும் பக்தியுடனே கொடுப்பார்களாயின் இவற்றில் ஒருதானத்தின்பயன் சிவபதவியைத்தரும்—எ-று. (சந)

மோதகங்களும் பூவமுமுதலியசுவைப்பா
லோதனத்துடன விரும்பியவுண்டியுந்தந்தக்
கோதுநீக்கிட மண்ணுறக்கொம்பொடுமெணனு
மீதன்மேயினர் சிவபதமெய்திவிற்றிருப்பார்.

இ-ள். சிவனடியார்களுக்கு மோதகங்களையும், பணியாரவகைகளையும், அறுசுவைபதார்த்தங்களையும், ருசிகரம்பொருந்திய பசுவின் பால்-நெய்-தயிர்களுடனே அவர் களிப்படையும்படியாய் சாப்பாடு கொடுத்தவர்களும், குற்றமற்ற கன்னிகாதானம், பூமிதான முதலியவைகளையும், மனவிருப்பத்துடன்கொடுக்கும் புண்ணியவான்களும், மகாவைபவத்துடன் கயிலாசத்திலெழுந்தருளியிருப்பார்கள்—எ-று.

சரதகல்கிய புனிதனீற்றருளுடைச்சைவ
விரதமெய்த்தவர்க் கன்பினலுதவியமேலோர்
பிரமகத்தியே முதலியவினையெலாம்பெயர்ந்து
சுரர்பணிதரு முத்திதஞ்சூழ்லாகுவரால்.

இ-ள். சரதமென்னு மேகங்கள்பொழியுஞ் சுத்தஜலத்தை இரக்கத்துடன் சிவசம்பந்தமான சிவார்ச்சனைகள்செய்யும் சிவனடியார்களுக்கும், பூசனைமுதலிய விரதங்களுள்ள மெய்மையான தபோதனர்களுக்கும் பக்தியுடனுதவி மேன்மைபெற்றவர்கள் முன்பின் பிரமஹத்தியாதி மகாபாதகங்கள் செய்திருந்தாலும் அப்பாதகங்களெல்லாந் தீர்ந்து பரிசுத்தராய் தேவர்கள தொழத்தக்க மோக்ஷவீடடைவார்கள்—எ-று. (சரு)

சைவநூன்முறை யெழுதினர்தக்கவாதிரைநாட்
டெய்வநாயகர்க் கன்புசெய்தெய்வமாதவர்தங்
கைவழங்கினர் கான்முடியிருவருங்காணு
மெய்யர்வான்சிவ பூரணமேவனிச்சயமால்.

இ-ள். சிவசம்பந்தமான சாஸ்திரங்களையும், புராணங்களையும், எல்லாநாள்களிலும், உத்தமமான திருவாதிரைநட்சத்திரத்தில் எழுதினவர்களும், அம்பலவாணமூர்த்தியினுடைய பாதாரவிந்தங்களுக்குப் பக்திசெய்யுஞ் சிவயோகிகளுக்குக் கொடுத்தவர்களும், அரியாதிகளாலுங் காணுதற்கரிய ஞானரூபமான திருமேனியையுடைய பரமசிவனது பரிபூரணத்திற்கலந்து பேரின்பத்தைப்பெறுவர்கள் நிச்சயம்—எ-று. (சசு)

ஆறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருளுருவன்சைவநூ லெழுதுமாறலேகமினி தளித்தனன்று
டுருதலெழுத்தாணியெழு தினர்க்குநிதியுகவுதலஞ்சனந்தான்பெய்த
திருமுறைபங்கலைவைத்துக்கொடுத்தல்கலகந்தளக்குச்சேமத்தீதல்
பொருவருமிங்கிவற்றொன்றுபுரிபவர்கள்சிவபதத்துப்புகுவான்றே.

இ-ள். கருணைவடிவாய் சிவசம்பந்தமான புராணசாத்திரங்கள் எழுதிக்கொள்ளும்படி ஏட்டுப்புத்தகங்களை விருப்பமாய்க்கொடுத்தவர்களுந் திருமுறைக்கு நன்மையானகயிறு திரித்துக்கொடுத்தவர்களும், அவற்றை எழுத எழுத்தாணிகொடுத்தவர்களும், எழுதுபவர்களுக்குப் பொருளுதவினவர்களும், அவைகளுக்கு மைக்காப்புச்சாத்தினவர்களும், புத்தகத்தைப் பதனமாகவைத்திருந்து கொடுத்தவர்களும், கலகங்களினும், பத்திரப்படுத்திக் காப்பாற்றிக்கொடுத்தவர்களும், இவ்வினையிலாத் தருமங்களி லொன்றேனுஞ் செய்வார்களாயின் கயிலாசபதவியைச்சேர்ந்து சுகமாயிருப்பார்கள்—எ-று. (சுஎ)

சிவசிந்தைமறையவர்பாற் சிவலிங்கமாதானஞ் செலுத்தினோர்க
ணவமுந்துபரசிவத்தை நண்ணுவர்கள்சிவார்ச்சனையெந்நாளும்பேணு
தவமன்புபெறுமன்பர்க் கங்கதற்குவேண்டுவன தருககாலீந்தோ [ந
ரவரன்றேயிமையவரு மடைவரியசிவபதத்துக் கதிபராவார்.

இ-ள். சிவத்தியானமுள்ள வேதியர்களுக்குச் சிவலிங்கமுகாதானங்கொடுத்தவர்கள் குற்றமற்ற பரசிவ ஐக்கியம் பெறுவார்கள் சதாகாலஞ் சிவபூசைசெய்யும் விரதமும் பக்தியுமுடைய சிவனடியார்களுக்கு சிவ்பணிக்குவேண்டிய பண்டபதார்த்தங்கள் மனமகிழ்வோடுங் கொடுத்தவர்கள் தேவர்களுக்குங் கிடைப்பதற்கரிய சிவபதவிக்குரியராவர்—எ-று. (சுஅ)

கருதியவர்பெறுமாறு துவாரகாசக்கிரமுந் தூயசெம்பொற்
றுருமலியுந்திகழ்சாளக் கிராமமிவையன்பினுற் கொடுத்துளோர்கண்
மருவிரியுந்துழாயலங்கற் செந்திருமால்பதமனுகி வாழ்ந்துஞானத்
திருவளரும்பொருவரிய சிவலோகமடைவினிற்போய்ச்சேர்வான்றே

இ-ள். சிதம்பரதலவாசிகளாகிய வேதியர்கள் பெற்றுக்கொள்ளும்படியாய் துவாரகாசக்கரத்தையும் மாற்றுயர்ந்த செம்பொன்னிறம்போன்ற மச்சங்கள் பிரகாசிக்குஞ் சாளக்கிராமங்களையும் விருப்பத்தோடுங் கொடுப்பவர்கள் வாசனைகமழுந் துளவமாலையணிந்து இலக்குமிதேவியை மார்பில்விளங்கச் செய்துகொண்டிருக்கும் நெடுமால் பதவியான வைகுந்தத்திலே போகபாக்கியங்களை அநுபவித்துக்கொண்டிருந்து பின்பு சிவானுக்கிரகம்பெற்று வரிசையாக நிகரில்லாத கயிலாசபதவியையும் பொருந்துவார்கள்—எ-று. (சுகூ)

எம்பரமன்றனக்கன்பா மறையவர்க்குச்சிவரூபி யீய்ந்துளோர்க
ளம்பிகைதன்பதம்பெறுவரேதேனும்பரனடியார்க்கணுமட்டீய்ந்தோ
ரம்பரிசிலுரைக்குமதென் னதனிலொருபரமாணு நலத்துக்காவிச் [ர்
செம்பதுமன்கற்பத்தி லொருகற்பஞ்சிவபதத்திற் சிறந்துவாழ்வார்.

இ-ள். எமது கர்த்தாவாகிய சிவனிடத்தில் பக்தியுண்டாகி வைதீகப்பிராமணர்களுக்குச் சாளக்கிராமநதியிலே பிறந்த சிவரூபமான சிவநாபத்தைக்கொடுத்தவர்கள் சிவகாமசவுந்தரியினுடைய பாதாரவிந்தம்பெறுவார்கள் சிவபக்தர்களுக் குதவியாகத்தக்க எப்பொருள்களாயினும் அணுவளவேனுங் கொடுத்தவர்கள்பெறும் மகாபலனைச் சொல்லவேண்டுமாயின் அவர்களுக்குக்கொடுத்த பதார்த்தங்களில் ஒரு அணுவளவிற் பதினாறுபங்கி லோர்பங்காகிய பரமாணுவின்நன்மைக்குச் செந்தாமரையில் உற்பவித்த முதல்வனான பிரமனது கற்பகாலங்களில் ஒரு கற்பகாலவரையில் கயிலாசத்திலே போகபாக்கியங்களை யநுபவித்துக்கொண்டு பிரகாசிப்பார்கள்—எ-று. (௫0)

பொங்கியவன்பிலரேனு முளரேனும்புண்ணியகன் மங்கட்கேற்ற
வங்கமுளதேனுமில தேனுமியற்றுவராகி லந்தக்கன்மந
தங்குறைநைமிகந்துநிறை பூரணமாமவைமற்றைத் தலத்துண்டாகா
துங்கமலிதவமுனிவ வெத்தலமுமிதற்கொவவா சொல்லுஙகாலே.

இ-ள். பெருகிய அன்பில்லாதவராயினும், அன்புடையவராயினும், கருமஞ்செய்வதற்குத் தக்க இலட்சணம்பொருந்தியிருநதாலும், தன்னுள் இயன்றமாத்திரம் புண்ணியங்களைச்செய்தால் அவை குறைவில்லாமல பரிபூரணமாகநிறைவேறும் இம் மகிமையைப்போல வேறொரு தலங்களிலேயும், பூரணமாகநிறைவேறாது ஆதலால் உயர் தவத்தின் மிகுந் சயிமினியே சொல்லுமிடத்து எத்தலங்களையுமித ற்கிணையாகச் சொல்லப்படாது—எ-று. (௫க)

நன்றொளிர்த்தலந்தன்னி லோமங்கள்விரதங்கண் மந்திரங்க
ளின்றிறிச்சிவார்ச்சனைகண் முதலானவியற்றிவருந் தூயமாந்தாக்
கொன்றனந்தமையமிலை தென்புலர்க்காயறவோருக் குண்டியீந்தான்
மூன்றலகையமூவலகையிற்சுற்றமும்போய்ச்சிவபதத்தின்முதல்வராவா

இ-ள். திருச்சிற்றம்பலம் பிரகாசிக்கும் அச் சிதம்பர தலத்தில் ஓமங்கள், யாகங்கள், விரதங்கள், மந்திரங்கள், வேதாகமவிதியின்படி சிவபூசைகள்முதலான சிவபுண்ணியங்கள் செய்துவரும் புண்ணியர்களுக்கு அளவிறந்த பலனைக்கொடுக்கும்இம்மகிமைக்குச் சந்தேகமில்லை பிதிர்தேவதைகளுக்குத் திருப்தியாகத்தருமபுருடரானபிராமணர்களுக்கும், சிவயோகிகளுக்கும், அன்னங்கொடுத்தால் தாய்வயிச

த்தார், தந்தையின்வமிசத்தார், பெண்சாதியின்வமிசத்தார் இம்மூ
வகையுளோரும் கயிலாச பதவியைச்சார்ந்து ஆநிக்கமாகயிருப்பார்
கள—எ-று. (௫௨)

மற்றொருதேயந்தன்னின் மரணமடைந் தோர்தமக்கும் மன்றுரு
மப், பெற்றதலத் திடையடைந்து பிண்டவுதகக்கிரியை பேணினோத
ப், பொற்றலத்தி லிறந்தவர்தம் பயனுளதன்னிய தலத்துப் பொன்
றினோரோன், புற்றருள்கொண் டத்தலத்திற் புதைக்கில்வினை கெடமு
த்தி யறுவாரன்றே.

இ-ள். மற்றொருதேசங்களில் இறந்தவர்களுக்கு இக்கனகசபை
யைச்சூழ்ந்து மகிமைபெற்ற புண்டரீகபுரத்தில்வநதுதிலகற்பணமு
தலிய கிரியைகளைச் செய்வாராயின் அழகுபொருந்திய அசசிதம்பர
தலத்தில் இறந்தவர்கள் பெறும்பேறு சித்திக்கும் அன்றியும் அன்னி
யதலங்களில் இறந்தவர்களது என்பை விருப்பமாகக் கொண்டுவந்து
இத்தலத் தெல்லைக்குள்ளாகப் புதைத்தால் அவர்களிழைத்த பாதக
ங்க ளெல்லாமகன்று மோட்சத்துக் கேதுவான சிவபதவியைச்சேரு
வார்கள—எ-று. (௫௩)

எத்தலத்திலிறந்தாலு மிறந்தவர்க்சாயனவீட்டி யினைந்தவாகொண்
டத்தலத்திற்புரிந்தக்கா லவர்கள்பரமுத்தியினை யடைவர்முத்த
நத்துலவுஞ்சிவகங்கை மூழ்குங்கான்மந்திரங்க ணவிற்றுங்கான்மன்
றுத்தமனைக்காணுங்கா லெவரையினைந்தாலுமவ ருறுவர்முத்தி.

இ-ள். எந்தத்தலங்களி லிறந்தாலும் இறந்தவர்களுக்குக்கருமக்
கிரியை முதலியவைகளை யெவர்களைக் கொண்டேனும் அச் சிதம்பர
தலத்தில்செய்தால் அவர்கள் மேலான சிவகதியைப்பெற்றுமுத்தரா
வார்கள் சந்நிதானங்களுலவுஞ் சிவகங்கையில் ஸ்நானஞ் செய்கின்றவே
ளையிலும் பஞ்சாக்ஷரமந்திரங்களை ஜெபிக்கின்றவேளையினும் கனகச
பையில் சபாபதியைத் தரிசிக்கின்ற வேளையினும் யாவரையேனும் நி
னைத்தா லந்தவரும் சிவபதவியைச் சேர்வார்கள்—எ-று. (௫௪)

பற்பலநன்றுக்கொண்டு பலகாலும்புகலினுமப் பதியினுள்ள, ...
பெருமைதொலையுமோ வானாலுஞ்சுருக்கமா நவிற்றுகின்றேம்,பொற்
பொதுவிற்செங்கமலப்பொற்பாதங்கண்டோரப் புரியின்மாயந்தோ,
ரற்புதமுத்திக்குரியர் மற்றொருநற்றலத்தில்லை யறிவான்மிக்கோய்.

இ-ள். பற்பல நல்லாவுகளைக்கொண்டு அநேகந்தரஞ்சொன்ன
லும் அந்தச்சிதம்பரதலத்திலுண்டாகிய நன்மையைத்தரும்அதிசயத்
தைச் சொல்லிமுடியாது ஆயினுஞ் சுருக்கமாகச் சொல்லுகின்றோம்
பொன்னம்பலத்தின்கண் ஆனந்த நடனம்புரியும் அம்பலவாணரூர்

த்தியினது அழகிய செந்தாமரைப் பாதங்களைத் தரிசனஞ்செய்தவர்களும் அத்தலத்திலிறந்தவர்களும் மோட்சம்பெறுகின்ற புதுமையைப்போல மற்ற எத்தலங்களினுமகிட்டாது ஞானத்தினுன் மிருக்தச யிமினியேயென்று வேதவியாசர் திருவாய்மலர்ந்தார்—எ-று. (ருரு)

ஒருவருக்கு முரைத்ததில்லை யத்தலத்திற் பெருமைவே றுணர்ந்தோரில்லை, யருமறையின்முடிவினுள தகமறைமொழியறியு மகனை ஞானத், திருவுருவிலொருபாகம் பெண்ணுருவம் படைத்துடைய தேவதேவ, னருளபுரிய வறிந்துபர்ந்தேன் வேறொன்றுன் முனிவர யானறிந்தே னல்லேன்.

இ-ள். அத்தலத்தின் மகிமையை யாம் ஒருவருக்குஞ்சொன்ன தில்லை அன்றியும் என்னைத்தவிர மற்றொருவருக்குந் தெரியமாட்டாது அரியவேதங்களின் சிரமான உபநிடத மகாவாக்கியங்களில் சொல்லும்பொருள்களை ஞானசொரூபத்தினுல் பார்வதியை இடப்பாகத்திற் படைத்த தேவாதிதேவன் என்னிடத்திற் கருணைவைந்து உபதேசஞ் செய்த பாக்கியவசத்தினுல் தெரிந்து கடைத்தேறினன் மற்றொரு விதத்தாலறிந்தல்ல முனிவரனேயென்று வாதராயணர் வதத துரைத்தார்—எ-று. (ருசா)

போதநெறிதரு சுருதிப்புராணநெறி வல்லவர்க்குட் பொலிவுமிக்கோன், சூதமுனிவரமெனக்கு மிறைவனுக்கு மன்புடைய தூயமை கொண்டோ, னுதலினு லவறகுரைத்தோ முள்ளபடியாங்கவன்போலறியாரில்லை, நீதவறுவன்புடையை யாதலினு னினக்குமிது நிகழ்த்தினேமால்.

இ-ள். ஞானமார்க்கத்தைக் கொடுக்கும் வேதபுராணங்களின்விதியையுணர்ந்த வல்லவர்களுள் அதிகமேன்மைபெற்ற சூதபுராணிகனை இத்தபோதனன் நமக்கும் பரமசிவத்துக்கும் விருப்பங்கொளளத்தக்க புரிசுத்தனுதலால் அச்சூதபுராணிகனும் அறியசொன்னேம் அன்றியும் அவனைப்போல் கியமத்தின்படி அறியத்தக்கவர்கள் மற்றொருவ[illegible]ல்லை சயிமினியே என்னிடத்திலுஞ் சிவனிடத்திலும் தவற[illegible]லாத பக்தியையுடையவனுதலின் அந்தரகசியப்பொருளைத்தெ[illegible]கொளளச் சொன்னேமென்று பராசரியர் திருவுளம் பற்றி[illegible]—எ-று. (ருஎ)

ஆதாரமாறினுக்கு மேனின்றபொருண்மன்னு ளாடாநின்ற, பாதாரவிந்தமலர் கண்டவர்கண் முத்தரியான் பகர்ந்தவெல்லா, நாதாதிகடந்தபா னருளிலோர்க்குறுதத்னு னண்ணியன்றோர்க், கோதநிமுதல்வன்மேலன்புடையோர் தமக்கென்று மோதச்செய்வாய.

இ-ள். ஆறுதாரமுதலிய கமலங்களுக்கு மேலாயிருக்கும் பராபரவஸ்துவாய் திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தநடனம்புரியுஞ் சபாபதி

யினுடைய சரணகமலங்களைத் தரிசனஞ்செய்தவர்கள் முத்தியைப் பெற்றவர்கள் நான்முறைத்தவையெல்லாம் நாதவிந்துகளாதிகளான பரமசிவன் றிருவருள் பெறாதவர்களுக்குத் தரிசனங்கிட்டாது சிவமகிமையைக் கேட்கவும் யோக்கியமல்லாதவ ராகையால் அன்னவர்களுக் குபதேசஞ் செய்யவேண்டுவதில்லை சிவனிடத்தில் பக்தியையுடையவர்களுக்கு எப்போதும் இந்தச் சிவமகிமையைசசொல்லக்கடவை யென்று வாதராயணர் உபதேசித்தருளினார்—எ-று. (௫௮)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஈட்டும்வல்வினைத் தொகுதிபாலந்தரா யெழிற்சிதம்பரத்துண்மை
காட்டுமாமறை யாகமபுராணங்கள் கண்டுமனாதுகாணாற்
கேட்டுமங்கது கேட்கிலர்மாயையின் வளர்பெருவசத்தானன்
ஞட்டமற்றவர் மயக்குறுமயக்கையா னவிற்றலாம்படித்தன்றால்.

இ-ள். பூர்வஜனனங்களிற்செய்த மகாபாதகக்கூட்டங்களின்வறுமையினால் கொடுமை பொருந்திய மதிகொண்டிருக்கும் பாதகருக்கு அழகியஞானாகாசசொரூபமான சிதம்பர ரகசியப்பொருளின்நிலைமையை வேதாகமபுராணங்களி லெடுத்துச் சொன்னாலுங்கேளாதவர்போலிருப்பார்கள் அஃது யாதுகாரணமெனில் மகாமாயையினது பெருக்கத்தின் கொள்கையினாலே நன்மையாகிய ஞானக்கண்ணில்லாமையான் அவர்களை மயக்கச்செய்யும் அம்மாயையின் மயக்கத்தின் வறுமையை நம்மாற்சொல்லி முடியத்தக்கதல்ல—எ-று. (௫௯)

மக்கடந்தையர் தாய்தமர்மனைவிபொன் மனைதரையிடைச் சிந்தை
புக்கழுந்தின ரென்னுரைகொள்வரோ புகன்றபல்பவந்தன்னிற்
றக்கமாமறை மிருதியாகமநெறி சரித்திரையிருதாண்மேன்
மிக்கவன்பின ரிருசெவிக்கிவ்வுரை விளம்பருமமிர்தாமால்.

இ-ள். மாதா-பிதா-மனைவி-மக்கள்-பந்துஜனங்கள்-பூமி-வீடு-பொன் இவைகளி லாசைகொண்டு அஞ்ஞானத்தில் மூழ்கினவர்கள் என்வசமாகிய வேதாகமபுராணத்தி னுண்மையை அங்கீகரியார்கள் மற்ற எவர்கள் அங்கீகரிப்பரெனின்நவிலத்தக்க நன்மையைச்சார்ந்து அநேகஜனனங்களில் மேன்மையான மகிமையையுடைய வேதபுராணங்களின் விதிப்படிக்கு ஆசாரமாகநடந்து சிவனுடைய உபயபதாம்புயங்களில் மிகுந்தபக்தியையுடையவர்கள் இருசெவியினும் இம்மகிமாதிசயத்தைத் தேவாமிர்தமாகக்கொண்டு ஆனந்தமடைவார்கள்()

சொல்லுமாறினி யென்னைகொலெண்ணிலாச் சுருதிகட்கணியான
தில்லையம்பலப் பெருமையையம்பலவர் தெளிவுறவுரைத்தோம்யா
மில்லையாயினு மறைமொழியுணர்ந்தவ ரிறைதிருவருடன்னா
லல்லவாறெனவின்றினிலறிந்தரு ளண்ணுவராமன்றே.

இ-ள். இனிமேற் சொல்லவேண்டிய முறைமையென்கொல்கேட்கவேண்டிய துண்டானுற் சொல்லும் எண்ணிறந்தவேதங்களுக்கும் ஆபரணரூபமாய் வயங்குந் திருச்சிற்றம்பலத்தில் பரமசிவனனுக்கிரகத்தினுற் சிதம்பரதலமகிமையைச் சமர்த்துள்ளவனாயிற் றெளிவாகச்சொன்னேம் யாம்சொல்லிய வசனங்களில் நன்மையில்லாமலிருந்தாலும் வேதமொழியை யுணர்ந்தவர்கள் பரமசிவனனுக்கிரகத்தினல் நன்மையுள்ளதென்று இனிமையாகக்கேட்டுச் சிவனருட் பெறுவார்களென்று வாதராயணர் மொழிந்தார்—எ-று. (௬௧)

யானுநான்முகத் தொருவனுந்திருவினுக்கிறைவனுமிமையோர்தங்
கோனுந்தெய்வமா முனிவருமுலகருள் கொடியிடையொருபாகன்
முனும்வாதெதிர் சாற்றினுமுணர்வரோ தகவிலார்மணமுஞ்செந்
தேனும் வீசியபொழின்மலிதில்லையிற் றிகழ்பெருமையையம்மா.

இ-ள். சுகந்த பரிமளத்தையுந் தேனையுஞ் சொரிந்துகொண்டிருக்குந் தோப்புகள்சூழ்ந்த அலங்காரத்தையுடைய சிதம்பரதலத்தின மகிமாதிசயத்தை வேதவியாசனென்னும் யானும், நான்முகத்தோனுகிய பிரமதேவனும், செந்திருவின் நாயகனுகிய மகாவிஷ்ணுவும், தேவர்களுக் கிறைவனை தேவேந்திரனும், கடவுட்டன்மைபெற்ற மகாமுனிவர்களும், உலகங்களனைத்தையுமீன்ற சிவகாமசவுந்தரியைவாமபாகத்திலணிந்த பரமசிவனும் பிரசன்னமாக எதிரேநின்று உபதேசஞ்செய்தாலும் அவிவேகிக ளறியமாட்டார்கள்—எ-று. (௬௨

தேடருங்கதி ரம்பலத்தின்பமெய்ச் சின்மயவிமோமத்தி
னுடல்கண்டவர் முத்தரேயென்றியா னறைந்ததுமிறைவேதப்
பாடன்மாதவ மறைமுடிவுளதுவெம் பாசம்வீசினர்வாசத்
தாடரும்பர மன்றிருவாக்கினுற் சாற்றியதாமன்றே.

இ-ள். வேதங்களைப் பூரணமாயுணர்ந்த சயிமினியே அளவிடப்படாத கீர்த்தியையுடைய பொன்னம்பலத்தில் ஆனந்தரூபமாய் ஞானமயமாய் பரமசிவத்தின் நடனவிநோதத்தைத் தரிசனஞ்செய்தவர்கள் முத்தியைப்பெறுவார்களென்று நாமசொல்லியது வேதமுடிவிலுண்டானபொருளாம் இதன்படி பாசபந்தங்களையறுத்த பக்தஜனங்கள் சுகம்பெறுவதற்குப் பாதாரவிந்தங்களைக் கொடுக்கும் பராபரவஸ்துவான பரமசிவன் தமது திருவாக்கினல் மொழிந்ததென்றுவேதவியாசர் திருவாய்மலர்ந்தார்—எ-று. (௬௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முன்னவனைக்கிரதயுகந் சிந்தித்தியாக்கண் முயன்றும்வேதஞ்
சொன்னெறிதிரேதயுகத் தரிசென்றுமகத்தவங்க ளருளாற்செய்து

மின்னெறிமுடியாமற் றுவாபரத்திலருச்சனைக ளிசைந்துமுன்னந்
துன்னுமருவினையொழிந்து வீடடைவரெனச்சிருதிசொல்லுமன்றே.

இ-ள். ஆதிகாரணனாகிய பரமசிவனைக் கிரேதாயுகத்திலேவேத விதியின்படி தியானித்தும் யாகங்கள்முடித்தும் திரேதாயுகத்திலே முன்சொல்லிய நிலைபோன் முடிப்பதரிதென்று யாகங்களுந்தவங்களுஞ்செய்தும இவ்வகை நடப்பது பிரையாசையென்று அதினும் எளிதாகத் துவாபரயுகத்திலே அருச்சனைமுதலிய சோடசவுபசாரங்கள் செய்து பிராரத்வ வினைகளைத்தொலைத்து மோட்சவீடாகிய சிவபதவியைச் சேர்வார்களென்று வேதங்களிற் சொல்லுகிறதென்று வாதராயணர் திருவாய்மலர்ந்தார்—எ-று.

(௬௪)

மலினவினையாவுக்கு முறைவிடமாய்நெறிமீதி மாயத்தோற்றுங்,க
லியுகமாகியகாலத் தியாவோருங்காமாதிக் கடலின்வீழ்ந்து, மெலியு
முணர்வினராகிப் பொல்லாதவாழ்க்கையினை விட்டுநீங்கி,யொலிகொ
ணமறைபுகன்முத்தி யுறுதலரிதெனவுரைப்ப ருயர்ந்துளோர்கள்.

இ-ள். அஞ்ஞானமயமான வினைகளெல்லாமிருக்குந் தானமாய் நன்மார்க்கமும் நீதியுங்கெடத்தக்கதாகிய கலியுகத்திலே காமாதி அந்தரங்க சத்துருக்களென்னுங் கடலுட்டோய்ந்து அறிவழிந்தவர்களாய் ஒருகாலமும நீங்காதகொடுமையைத் தொலைத்தகன்றுசப்திக்கும் வேதங்களிற்புகலும் முத்தியைச்சாருவ தருமையென்று பெரியோருரைப்பார்கள்—எ-று.

(௬௫)

இயம்புநெறியெவ்வுகத்து மியற்றினோரியற்றாதோர் யாவரேனு
மயங்குகொடும் பிறப்பிகந்து மாமுத்திபெறுமாறு மன்றுணின்ற
பூங்கடவடிவமுமத் தலவடிவுமாய்நின்றான் புகர்மாமாய்ந்த
பயம்புனரிந்திங்கண்முடிச்சங்கரன்பொங்கரவணியும்மாயோர்நாதன்

இ-ள். கிரேதாயுகமுதலிய யுகங்களிலே நடக்குமுறைமையை முற்சொல்லிய நியமப்படிக்கு நடந்தவர்களாயினும் நடவாதவர்களாயினும் மாயாவிகாரத்தினால் மதிமயங்கிக் குற்றமாகிய ஜனனங்களில் உழல்வதைநீங்கி மேன்மைபொருந்திய மோக்ஷத்தைப் பெறும்விதமெப்படியென்றால் புள்ளிபொருந்திய மத்தகத்தையுடையமதயானையையுரித்துப் போர்த்துக்கொண்டும் வெற்றியினாற் சந்திரனைச்சிரோமணியாகவணிந்து அடியார்களுக்கு நன்மையைத் தருபவனாகியும் கோபத்தினாற் கொதித்தெழும் நாகங்களை ஆபரணமாகஅலங்கரித்துக்கொண்டும் விளங்கும் தெய்வபிரானாகிய பரமசிவன் திருச்சிற்றம்பலத்தில் நன்றாகும் படம்விரித்தாடுவதுபோன் மெல்ல வசைந்தாடும்

அந்த நடராஜமூர்த்தி சொரூபமாகவும் சிதம்பரதலசொரூபமாகவும் இவ்விரு திருமேனிகொண்டு எழுந்தருளியிருக்கிறார்—எ-று. (௬௬)

முத்தொழிலுமுயன்றிடுவான் முக்குணத்தான் மூவடிவமுயங்கி
யோங்கி,யத்தகையதொழிற்கபலாய் ஞானானந்தத்திரட்சியாயெவர்க்
கு, மெத்தகையபதியாகி யருள்கூடவிளங்கிறைவ விமலன்கண்டோ
ர்,சத்தியமுத்தியினடையமன்றிடம்புரிந்தென்றுந்தயங்காநின்றான்

இ-ள். சிருட்டி-திதி-சங்காரமென்னு மூன்று அதிகாரமுஞ்செய்து உலகங்களை இரட்சிக்கும் பொருட்டாக இராசதகுணத்தி னியற்கையாற் பிரமதேவனாகியும் அந்தரங்கத்திற் றாமதமுஞ் சத்துவமுங்கொண்ட நாராயணனாகவும் சத்துவத்தின்மேற் றாமதங்கொண்ட உருத்திரமூர்த்தியாகவும் இம்மூன்று திருமேனியான் முத்தொழினடாத்தி வளரும் அம்மேன்மையுற்று மூன்றதிகாரங்களுக்கும் புறம்பாய ஞானானந்தவுருக்கொண்டு விட்டுணுவாதியாவரும் பசுவாகவுந்தானபதியாகவும் அநுக்கிரகசத்தியானசிவகாமசவுந்தரியுடனே பரஞ்சோதிமயமாய் எழுந்தருளியிருக்கும் அம்பலவாண மூர்த்தியாகித் தம்மைத் தரிசனஞ்செய்தவர்கள் மெய்மையான மோக்ஷத்தைப்பெறும் பொருட்டாகத் திருச்சிற்றம்பலத்தில் எப்போதும் ஆனந்தநடனஞ் செய்துகொண்டு விளங்குகின்றார்—எ-று. (௬௭)

ஆருயிரின்பொருட்டன்றித் தொழிலுளவோ வாதிதனக்கருளான
ந்தப், பேருருவம் படைத்துடைய பேராட்டி பொலிபாலிற் பிரிபா
தோங்கப், பாருருவாத்தனதுருவாம் பதியிலதிசயங்கொண்டுபழநூ
ல்வேத, மோருருவமெனப்புகல வொளிபெற்றகளி நடங்கண் டியா
வாயன்றே.

இ-ள். ஜீவாத்மாக்களைக் கடைத்தேற்றும் பொருட்டேயன்றி ஆதிநாயகனுக்கு வேறு தொழிலுளவோ பேரின்பவநுக்கிரகத் திருமேனிகொண்டு லோகநாயகி வாமபாகத்தைவிட்டு நீங்காமல் வயங்க புண்ணியதலங்களுக்கெல்லாம் உத்தமமான சிதம்பரதலமே தன்னுடைய தேகமாயவிளங்குந் தில்லைநகரிலே புதுமைபூண்டு ஆதிவேதபராபரவஸ்துவான ஏகமூர்த்தியென்று மொழியத்தக்கபிரகாசங்கொண்ட ஆனந்தத்தாண்டவத்தைத் தரிசித்துக் கடைத்தேறுவாய் சமிமினியே யென்றுவாதராயணர் திருவாய்மலர்ந்தார்—எ-று. (௬௮)

செஞ்சடையும்பிறையுமிள முறுவல்வதனமுங்குறியுந் திகழ்கண்
மூன்று, கஞ்சணிகண்டமுந்தோளு மார்புமெரியகரமுடிக்கை நலனும

விசி, யஞ்சல்புரிகரமுமறை யும்புலியினதளுமெடுத் தாண்டதாளுங்,
குஞ்சிதமுமுயலகன்மேற் றிருத்தாளுமுழைநீறுங் குலவியோங்க

இ-ள். சிவந்த சடாமகுடமும், இளம்பிறையும், குறுநகையால் அலங்காரம்பெற்றமுகமும், நாககுண்டலமும், பிரகாசிக்குஞ்சோதி மயமான மூன்றுநேத்திரங்களும், ஆலகாலவிடத்தினால் விளங்குநீலகண்டமும், நான்குபுயங்களும், சிரமாலிகாபரணமும்,முப்புரிநூல் விளக்கமும், ஒருகரத்தில் மழுவும், ஒருகரத்தில் தமருகமும்,இடையிற் இபுலித்தோலும், டதுபாதத்தைத்தூக்கி வலதுபாதப்பெருவிரலை முயலகன்முதுகிலூன்றி நிற்குங்கோலமும், விபூதிதூளனமும், திரிபுண்டரமாக வணிந்திருக்கும் அழகு ஓங்கவும்—எ-று. (௬௯)

எப்போதும்யாவர்க்கு மெவ்வரமுமீந்திடுவா னிறைவனின்ற, வெ
ப்போதவரிநாமத் திருவுருவங்கண்டுளமு முயிருமூனு,மப்போதே
யுருகுபர வசப்பேரானந்தத்தி லமிழ்ந்தோமுத்தி,கைப்போதுங்கட்போ
றுங் திகழவிறைஞ்சிக்கண்டு களிப்பாயன்றே.

இ-ள். எந்தவேளையிலும் அவரவர்கள் நினைத்த வரங்களைக்கொடுக்கும்பொருட்டாக நமது கர்த்தனாகிய பரசிவனெழுந்தருளியிருக்கு மகிமையையும் ஒப்புவமை சொல்வதற்கரிய ஞானசொரூபத்தைத் தரிசனஞ்செய்து சித்தஞ்சடமுஞ் சீவனு மொருங்குபட்டுருகித் தன்னைமறந்து பேரின்பம் பெறுவதைவிட்டு மோட்சம்பெருமையைப்பெற்றதல்ல ஆகையினால் கரங்களாகிய தாமரையினால் விளங்கப்பூசித்துத்தொழுது கண்களாகியகமலங்களினாற்றரிசித்து ஆனந்திப்பாயசைமினியேயென்று வேதவியாசர் திருவுளம்பற்றினார்—எ-று. ()

எந்தயுகமானாலு மெவ்வினையோரானாலும் யாவரேனுந்
தந்தமதுவினைநீங்கிச் சிதம்பரங்கண்டவர்முத்திக் கலைவராவர்
வந்தவருவினைமாற்றி மற்றுள்ளயுகங்களிலெவ் வழியினாலு
மந்தமிலாவிடைதற் கெளிதரிதுகலியுகத்தி னறிவாய்மிக்கோய்.

இ-ள். எந்தயுகத்திலாயினும் எத்தீவினை யுடையோராயினும் யாவராயினும ஞானாகாசசொரூபனான அம்பலவாணமூர்த்தியைத் தரிசிப்பவர்களாயின தத்தம்வினை யாவுமகன்று மோட்சத்துக்கதிகாரிகளாவார்கள் மற்றயுகங்களிலே மனவாக்காயங்களை பொருந்தப்படுத்தி உறுதியாய் நிறுத்தித் தீவினைகளைப்போக்கி நன்மார்க்கத்திலொருகாலுமழிவில்லாத முத்தியைப்பெற எளிதாயிருக்கும் அதமமாகிய கலியுகத்தில் மனமாதி உறுதிப்படுத்தாதசெய்கையினால் முத்தியைப்பெற

றுதல் அருமையாகவிருக்கும் புத்தியின்மிகுந்த சயிமினியேயென்று வாதராயணர் அருளிச்செய்தார்—எ-று. (௭௧)

கொடியவினைக்கிருப்பிடமாய் மிக்கபயங்கரமாகிக்கூறற்கொண்ணுக்
கடியகலியுகத்துதிப்போ ருய்யுநெறிவேறுளவோ கணக்கிலாத
நெடியவினைகடந்திடவு மரிதுசிதம்பரந்தன்னை நீங்காதாதி
முடிவொருவுபதங்கண்டான் முடியாதவினைமுடித்துமுத்திசேர்வா

இ-ள். பொல்லாங்காகிய மகாபாதகங்கள் உறையுங்கனமாய்மி குதியும் அச்சத்தைக்கொடுக்குங் காமாதிஅந்தரங்க சத்துருக்களின விகாரச்செயலினுல் நன்மார்க்கநீங்கிக் கடையாகிய கலியுகத்திற்பிறப் பவர்கள் ஈடேறும்விதம் வேறேயுண்டோ அளவிறந்தமகாபாதகங்க ளையகற்றல் அருமையாதலால்ஞானாகாசமயமான சிதம்பரதலத்தை விட்டு நீங்காமல் ஆதியந்தங்கடந்த அம்பலவாண மூர்த்தியினதுபா தாரவிந்தங்களைத் தரிசனஞ்செய்துகொண்டிருந்தால் ஒருகாலத்திலு ங்கெடாத வினைகளைப்போக்கி மோக்ஷத்தைபபெறுவார்கள்—எ-று

சதுமறைகளிலகலை தெரிந்தமறையவன்மற்றைத் தலங்கடன்னிற்
புதுமைபெறப்பரிமேதம் புரிபயனும்புண்டரிக புரமென்றோதப்
படுமிடத்துப்பிறந்தணிய தொருபாலன்றுயில்பயனும் பார்க்கிலீதி
லதிகமுறுபயன்பாலன் றுயில்பயனேயததலமே யடைதனன்றால்.

இ-ள். நான்குவேதம் ஆறுசாஸ்திரம் பதினெண் புராணமுதலி யசகலகலைகளையும் படித்துணர்ந்த ஓர்வைதிகப்பிராமணன் இதரமா கிய தலங்களில் அதிசயமாக அசுவமேதயாகஞ் செய்யும்பலனையும் இ ந்தப்பாதலத்தில் அக்கணமே பிறந்தஒரு சிறுகுழவி நித்திரைசெயயும் பலனையும் யோசிக்குமிடத்து இவ்விரண்டினுள் சிறுகுழவி அப் புண் டரீகபுரத்தில் ஓர் கணநித்திரைசெய்த புண்ணியமே உத்தமமாகையி னும் அப்பெரும்பற்றப் புலியூரைப்போய்ச் சேருவதே மிகுதியு ம் நன்மை—எ-று. (௭௨)

[illegible]லையொருபாகன் றிருவுருவாம்புண்டரிக புரத்துள்ளவுநி,
[illegible]றந்தீவினைக ளறியாதுபுரிந்தாலு மன்றிநற்க, ஞானமறிபட்ட
[illegible]மப்புநிகின்றதென்ன முறைவேயோர்களில், வளர்கொடியவினை
ப்பயனையடையார்கள் சிவந்தனடைவர் மதியான்மிக்கோய்.

இ-ள். பூமியிலருக்[illegible]ளையுடைய வேகாமசவுந்தரி [illegible]பாகத்தில் [illegible]பிருந்து [illegible]மில்லாத பாதகங்களைப [illegible] செய்திருந்[illegible]த்தன்மைமறிந்த செய்[illegible] அப்புண்டரீக[illegible]யேபோ[illegible] நீங்காமல்வாசமாய்

ருந்ததேயாகில் மகாபாதகங்களினுல் வரும் அவதிகள்பொருந்தாமற் பரசிவ ஆயிக்கியம்பெறுவார்கள் புதநியிலுயர்ந்த சயிமினியேயென்று புகன்றா—எ-று. (எச)

ஆனந்தத்திருவுருவா யக்கங்கைதனைப்பார்த்தங் கமர்ந்துமிக்க
ஞானங்கொள்பதஞ்சலிமுன் வியாகரணமபுகலவரு ளல்கிகொன்
றனநதுசடையணண லானநதடங்கண்டு சிவத்திற்பேதம் [றை
ரனன்றிவிளங்குபறை யுறைதிலலைவனம்பிரியார் தகுதிமேலோர்.

இ-ள். சச்சிதானந்தரூபமாகித் தீர்த்தங்களுக்கெல்லாம் அரசா சிவகங்கையைநோக்கி மேற்றிசையிலெழுந்தருளியிருந்து மிகு சிவஞானம்பெற்ற பதஞ்சலிபகவான் ஆதிகாலத்தில வியாகரணஞ்சொலலத்தக்கதாகஅநுக்கிரகஞ்செய துங கொன்றைமாலையைச்சூடி சடாடவியினையுடைய சபாபதியின் ஆனந்தநடனத்தைச சாட்சியாகத் தரிசித்துப் பரசிவத்திடத்திற்றன் வேற்றுமையில்லாமல் ஏகரூபமா பிரகாசிக்கும் சிவகாமசவுநதரி நிலைமையாக எழுந்தருளியிருக்கும் சிதம்பரதலத்தை உத்தமராகி மேன்மையைப்பெற்றவர்கள் விட்டு நீங்கார்கள்—எ-று. (ஓரு)

மந்திரமும்புகல்சகல வித்தைகளுந்தனதுதிரு வடிவமான
வந்தமிலாவஙகவடா னிறைவுபெறவிடைவிடா தமாந்துஞானந்
தந்தருளியுறைகின்ற வப்பதியிலப்பதிசூழ் தக்கதேயத்
தெந்தவழியாலுமவருநதியுமடைநதோர்முத்திதனக்கிறைவராவோர்.

இ-ள். மந்திரங்களும் யாவராலும் துதிக்கப்படுகின்ற சகலகலைகளுந் தம்முடைய திருமேனியாகப்படைத்து ஒருகாலத்திலுமழிவில்லாத அச சிவகாமசவுநதரியே பரிபூரணகலையோடுஞ் சற்றுகிலும் நீங்காம லெழுந்தருளி அடியார்களுக் கெப்போதும் சிவஞானமளித்துக்கொண்டிருக்கும் அச் சிதம்பரதலத்திலேயாகிலும் அதைசசூழ்ந்த தேசத்திலாகிலும் அல்லது தூரதேயத்திலிருப்பவர்கள் எத்தொழினிமித்தமாயினும் எக்காயங்களைப் பூண்டாயினும் பிரவேசிப்பட்டு அத்தலமடைநதவர்கள் மோட்சத்துக்குடையராவா—எ-று. (எசு)

ஆதிமெறிமந்திரமே தனதுவடிவாய்மனறத் தமர்ந்துஞானச்
சோதிதிகழரிவையோடலவரதத்தாண்டவஞ்செய் துணைத்தாடன்னை
யோதுறமெவ்வுயிரேனுங் கண்டபெரழூதேமுத்தி யுறுவதென்று
னீதிமறைத்திரு முனிவ வேறுதவம்புரிவதற்கு நினைவதென்னே.

இ-ள். முதன்மையாய் நன்மூலாக்கமாகிய மந்திரங்களைத் தமது திருவடிவாகப படைத்துத் திருச்சிற்றம்பலத்தில் ஞானப்பிரகாசரூப

மாயெழுந்தருளி அநுக்கிரகவடிவாய் விளங்குஞ் சிவகாமசவுந்தரியுடன் எப்போதும் பரமானந்த நடனஞ்செய்யும் உபயசரண கமலங்களை எண்பத்துநான்குலட்சம் பேதமாகச் சொல்லாநின்ற எந்த ஜீவராசிகளாயினும் தரிசனஞ்செய்தவுடன் மேலானமோட்சத்தைப் பொருந்துமென்றால் வேதவிதியாய் நடக்கும் உயர் தபோதனனாகிய சயிமினியே இவ்வகை எளிதாக முத்திகிடைக்கும் ஏதுவிருக்கையில் நானாவித வருத்தமடைந்து தவங்கள்செய்து திரிபவர்க்குள்ளமதியேதோ வறியேனென்று வாதராயணருரைத்தார்—எ-று. ([illegible])

கலிவிருத்தம்.

மிக்கநற்பய னின்னவிளம்பலு
மக்கணத்தி லடிதொழுதன்பினாற்
செக்கர்ஞ்சடைத் தேசிகன்றன்னெதிர்
தக்கஞானச் சயிமினிகூறுவான்.

இ-ள். மிகுநன்மையாகிய பலனைத்தரும் மகிமாதிசயம் இன்னதென்று வேதவியாசமகாமுனிவர் உபதேசிக்க அக்கணமே ஞானாசிரியரது பாததாமரைகளிற் பணிந்து அனிபக்தியோடும் செக்கர்வானம் போன்ற சடாமகுடத்தினையுடைய குருவின் சந்நிதானத்தின் முன்னர்நின்று ஒப்பற்ற ஞானத்தினையுடைய சயிமினிபகவான் விண்ணப்பஞ்செயகின்றான்—எ-று. (எஅ)

அடிகளேமுடி வாதியறிவரும்
படியிலாத பராபரமானவெண்
பொடிநிலாவிய புண்ணியமூர்த்திதன்
வடிவமந்திர மென்றனைவாக்கினால்

இ-ள். ஆதியந்தம் அறிதற்கரிதாகி நிலையில்லாது எங்கும் வியாபகனை பராபரவஸ்துவாகிய வெண்ணீற்றின் நிலவுலாவும் புண்ணிய சொரூபனான பரமசிவன் திருமேனியே மந்திரமென்று திருவாய்மலர்ந்தீரென்று சயிமினிகூறுவான்—எ-று. (எகூ)

மந்திரந்தனு வானவழிநந
மந்தமந்திரமு மந்தமந்திர
பந்தமெய்திப் பரன்பொலிகின்றது
மெந்தைபேயரு ளாலின்றியம்புவாய

இ-ள். மந்திரங்கள் திருமேனியைச்சார்ந்தமார்க்கமும் அவற்றின்வயனைகளும் அம்மந்திரங்களை எழுதிச்சோபநவிதிகளால் அவையவங்களைப் அம்பலவாணரைர்ந்தி யரிதருந்தொண்டு [illegible]

கயே அடியேனிடத்திற் கிருபைவைத்து இக்கணமே உபதேசிப் ரயென்று கூறுவான்—எ-று. (அ0)

ஏற்றபக்குவ மேயதினனுகினீ
சாற்றுவாயெனத் தாழ்ந்தவன்சாற்றிய
கூற்றைநோக்கிக் குறிக்கருமாதவத்
தாற்றல்சான்முனி யங்ஙனறைகுவான்.

இ-ள்.—அப்படியே சிதம்பர ரகசியப்பொருளைக் கேட்கத்தக்க குவனென்று தேவரீர்சித்தத்திற் றேர்ந்தகனல் அந்தரகசியத்தை அருள்செய்யவேண்டுமென்று சயிமினிபணிந்து அஞ்சலிசெய்துகொ ண்டிருக்கும் வணக்கத்தைக்கண்டு அளவிடப்படாத தபத்தினையு டைய வேதவியாசர் சொல்லுகின்றர்—எ-று. (அக)

எந்தைபாற்பெற் றிறைவிமுன்னரிந்தனள்
கந்தனுக்கவன் கட்டுரைத்தானெறி
தந்தவாய்மைச் சனற்குமரற்கெனக்
கந்தமில்லவ னன்பாலருளினன்.

இ-ள். எந்தையாகிய பரமசிவனிடத்திற் பார்வதிதேவி உபதே சம்பெற்று முன்னஞ் சுப்பிரமணியனுக் குபதேசித்தாள் அவற்றை ஆறுமுகக்கடவுள் சனற்குமாரனுக் குபதேசஞ்செய்தார் அம்முனிவ ரர் அடியேனிடத்திலே அன்புவைத்து உபதேசஞ்செய்தாரென்று வாதராயனர் சயிமினிக்கருளினர்—எ-று. (அஉ)

நாட்டுமந்திர மேனியுநன்குறக்
கோட்டியந்திரக் கொள்கையுங்கொள்கையைக்
காட்டுமங்கதிற் காட்சியுமாட்சியால்
வாட்டமொன்றிலா மந்தணமாகுமால்.

இ-ள். எழுதப்பட்ட மந்திரசொரூபமும் நன்மைபெற்ற அவ் வீடுகளின்யந்திரத்தின் லட்சணமும் அந்தந்த வீடுகளைப்படுத்து பீஜாட்சரங்களை எழுதிக்காட்டும் அழகார்ந்த அப்பிரகாசத்தின் தரி சனமகிமையினல் ஒரு குறைவில்லாமலோங்குமென்று சயிமினிக் குரைத்தார்—எ-று. (அங)

ஈந்ததேசிக னிங்கிதுசேவைசெய்
தாய்ந்தநூல்க ளறைந்தகுணத்தாய்
வாய்ந்தமாணவர் கற்கன்றிமாசிடைத்
தோய்ந்தயோர்க்கென்றுஞ் சொல்லலையன்றியும்.

இ-ள். இப்படி சிதம்பர ரகசியப்பொருளை யுபதேசஞ்செய் ஞானகுருவாகிய வேதவியாசர் சயிமினிக்கு புத்தி கட்டளையிட்டபடி பணிசெய்துகொண்டு சகலசாஸ்திரங்களுமுணர்ந்த வைதிகப்பிராமணராய் பூதகரமவும் இரக்கமுமுடைய ஞானமார்க்கமபொருந்தி ஜீவருக்கேயலலாமல் ஆணவாதி மும்மலங்கொண்டிருக்கும் ஜீவனுக் கெப்போது மிதனை உபதேசஞ்செய்யவேண்டாமென்று பின்னரும் கூறுவார்—எ-று. (௨…)

அறைந்ததிப்பொருண் மாசறவாகம
மறைந்தவீசன தாணைபதாமிது
சிறந்தநூபர் கடவார்திகழ்வுறப்
பிறந்தநற்பயன பெற்றுடையோர்கடாம்

இ-ள். யாவருக்கும் காட்டப்படாமற் றிரைமறைவாக விருக்கும் மந்திரரகசியப்பொருளை இருபத்தெட்டாகமங்களையுங் கருணைமறத் திருவாயமலர்ந்த பரமசிவனுடைய ஆக்ஞையே இப்போதுரைத்த விதனை அரிதான மானிடஜனனமெடுத்தவர்கள், அதிலு மகாபாக்கியம் பெற்றவர்கள எவர்களாலு மீறி நடக்கககூடாமற் பிரகாசிக்கும் இப் பரமசிவனுடைய ஆக்ஞையைத் தள்ளிடவாரகள்—எ-று.

உற்றபக்குவற் கோதாதுபக்குவ
மற்றவற்கரு ளன்பாலுணர்ச்சியைச்
சொற்றதேசிகர் தோயுங்கலைமதி
முற்றுமாய முடிவதுதிணணமால்.

இ-ள நான் என்னதவஞ்செய்தேனோ என்னாசிரியராகிய ஒப்பற்ற சனற்குமாரமகாமுனிவர் என்னை யருட்கண்ணாற்பார்த்து நல்லபக்குவ ஆத்மாவாகிய உன்னிமித்தம் உபதேசஞ்செயத் திசைகின்றுமுன் விருப்பத்துடனே கட்டளையிட்ட மொழியின்வண்ணமம—எ-று

என்னநன்னலத் தென்றன்குரவனுந்
தன்னிகர்க்குஞ் சனற்குமரன்பரிந
துன்னைவேண்டி யுரைத்ததிதுவென
முன்னாளாயின் மொழிந்தமொழியினால்.

இ-ள். என்ன நன்மையினாலேயோ என்குருவாகிய இணையில்லாச் சனற்குமாரமகாமுனிவர் பிரியத்தோடும் உன்னிமித்தம் இம் மகாவாக்கியத்தை உபதேசித்தோமென்று விருப்பத்துடன் கட்டளையுரைத்த மொழியினால்—எ-று. (அ௭)

ஆக்ஞாமகோபாத்யாய, டாக்டர்.